உ

# திருக்குறட் குமரேச வெண்பா

(மூலமும்—உரையும்)

## பொருட்பால்

மூன்றும் பாகம்

ஆசிரியர்

ஜெகவீர பாண்டியனார்

மூன்றும் பதிப்பு.

மதுரை

வாசுகி அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றன.

பராபவ ௵ கார்த்திகை ௴

1966.

*All Rights Reserved.*

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

❖❖❖

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

❖❖❖

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

## இதில் அடங்கியுள்ளவை.


| அதிகாரம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 54. | பொச்சாவாமை | .... | 2812 |
| 55. | செங்கோன்மை | .... | 2863 |
| 56. | கொடுங்கோன்மை | .... | 2914 |
| 57. | வெருவந்த செய்யாமை | .... | 2967 |
| 58. | கண்ணோட்டம் | .... | 3012 |
| 59. | ஒற்றுடல் | .... | 3071 |
| 60. | ஊக்கம் உடைமை | .... | 3117 |
| 61. | மடியின்மை | .... | 3165 |

தமர் = தம்மவர்; என்றது சுற்றத்தாரை.

தம்முடைய சுகதுக்கங்களில் பக்கம் நின்று பங்கு கொள்ளும் பான்மையாளர் மக்களுள் தமர் என வந்தார்.

தன் என்றது ஈண்டு அரசனைக் குறித்து நின்றது.

அமராமை = தங்கி யிராமை.

அமர்தல் = விரும்பியிருத்தல்; அங்ஙனம் இராமல் வெறுத்து நீங்கினமை அமராமை என வந்தது. நான்காம் வேற்றுமை உருபு இதில் தொகையாய் நின்றது. தமர் அமரும்படி தழுவி ஒழுகல் அரசன் கடமையாம்.

அமர்தல் மேவல். (தொல்காப்பியம், உரி : 83)

அகன் அமர்ந்து செய்யாள் உறையும். (குறள் 84)

இவை ஈண்டு எண்ணி உணர வுரியன.

உள்ளம் உவந்து உரிமையுடன் தன்பால் அமர்ந்திருந்த உறவினர் மாறுபாடு மண்டி வேறு பிரிந்து அயலே போனால் வேந்தன் அவரை மீண்டும் அடைய வேண்டின் என்ன செய்ய வேண்டும்? இந்த வினவுக்கு உரிய விடை இங்கே தெரிய வந்துள்ளது.

அரசன் தலைமையானவன்; அதிகார ஆற்றல்கள் அமைந்தவன்; அக்கொற்றவனிடம் முற்றிய அன்புடைய சுற்றத்தார் அவனை விட்டு எளிதில் விலக நேரார்; நேர்ந்தால், அதற்கு ஆர்ந்த காரணம் மன்னனிடமே மன்னியிருக்கும். அவன் நீதிமுறை பிறழ்தல்; நெறிகெட ஒழுகல்; வெறியனாய் விபரீதம் புரிதல்; வரிசை அறிந்து பேணாமல் தம்மைச் சிறுமையா நடத்தல்; இன்னவாறான பிழைகளுள் ஏதேனும் ஒன்று அவன்பால் ஒன்றி நிற்க நேரின் நேர்மையான தமர் அவனோடு அமர்ந்திருக்க மாட்டார்; அவனை விட்டு விலகி வெளியே போய்விடுவர். அமராமல் போன அந்தத் தமரை அரசன் மறுபடியும் அடைய விரும்பின் தன்னிடமுள்ள குறைகளை நீக்கிவிட வேண்டும்; அக்குற்றம் நீங்கிய அளவே தன் சுற்றம் ஆவலோடு வந்து தன்னைச் சூழ்ந்து நிற்கும். அமரா

மைக்கு உரிய காரணம் நீங்கியவுடனே தமர் பாங்காய் வந்து பரிவுடன் உவந்து அமர்ந்திருப்பர்.

இயல்பாகவே உள்ளன்பு வாய்ந்தவர்; உதிர சம் பந்தம் தோய்ந்தவர் ஆதலால் உறவினர் உறவு செய லால் சிறிது திரியினும் விரைவில் திருந்திப் பொருந்தி விடும்.

நெருப்பு நேரவும் தண்ணீர் வெந்நீராகிறது; அது தீரவே தானாகவே அது குளிர்ந்து கொள்ளுகிறது. அது போல உறவினரும் மாறுபாடு நீங்கியவுடனே வேறு பாடு நீங்கிப் பழமையும் கிழமையும் வளமையாய்ப் பதிந்து கொள்ளுகின்றனர்.

இயல்பான உரிமையாளர் சில சமையம் மயலாய் மாறுபடினும் விரைவில் உறவினரா யுறுவர்; அவரை அயல் அகல விடாமல் நயமாய்த் தழுவிக் கொள்ள வேண்டும்.

தமர்என்று தாம்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமர்அன்மை தாம் அறிந்தார் ஆயின், அவரைத்
தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை
தம்முள் அடக்கிக் கொளல். (நாலடி 229)

**தமர்** என்று கிழமையாய்த் தாம் தழுவிக் கொண்ட வரிடம் தமரன்மை காணப்படினும் அவரை நன்கு மதித் துப் பேணி வருக; அவர் தாமாகவே திருந்தி நல்ல வழிக்கு வருவர் என இது நயமா உணர்த்தியுளது.

சுற்றத்தைத் தழுவிக்கொள்ளும் வகையில் ஆண வரையும் குற்றத்தை மறந்து குணங்களையே கருதி வரு வது நலமாம். பொறுமை மருவிவரும் அளவு உரிமை யாளர் உவகையாளராய்ப் பெருகி வருகின்றனர்.

மெய்யா வுணரின் பிறர்பிறர்க்குச் செயவதென் ?
பையா ரகலல்குற் பைந்தொடி--எக்காலும்
செய்யார் எனினும் தமர்செய்வர்; பெய்யுமாம்
பெய்யா தெனினும் மழை. (பழமொழி, 109)

உதவி செய்யாதவர்போல் ஒதுங்கி யிருந்தாலும் **தமர்** செய்வது போல் பிறர் செய்யார். மழை பருவத்

தில் பெய்யா திருந்தாலும் பின்பு எப்படியும் பெய் தருளும். சுற்றத்தாரை மழையோடு ஒப்பவைத்து மூன் றுறையரையர் இங்ஙனம் உரைத்திருக்கிறார்.

செய்யார் எனினும் தமர்செய்வர் என்னும்சொல்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்!—கையார்
வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியம்பக் கேட்டு. (முத்தொள்ளாயிரம்)

பாண்டிய மன்னனைப் பிரிந்து தலைவி வருந்தி யிருந்தாள். உடல் மெலிந்தது. அந்த மெலிவால் கையில் அணிந்திருந்த சங்க வளையல்கள் கழல நேர்ந் தன; அவ்வேந்தன் வருகின்றான் என்று சங்கு முழங்கி யது; அவ்வொலியைக் கேட்டு உள்ளம் உவந்தது; உடல் பூரித்தது; கழல நேர்ந்த வளையல்கள் கழலாமல் நின்றன. சங்கின் ஓசை கேட்டு சங்கவளை தங்கியது; சமையம் நேர்ந்தபோது இனம் இனத்துக்கு உதவி செய் யும் என்பதை இன்று நன்கு தெளிந்து கொண்டேன் தோழி! என்று ஒரு தலைவி பாங்கியிடம் மொழிந்துள் ளதை இதில் உணர்ந்து உவந்து கொள்கின்றோம்.

தமரை எவ்வழியும் தழுவி ஒழுகுக!

தன் குற்றத்தைக் கண்டு வெறுத்துப்போன சுற் றத்தை அரசன் சீர்மையாய்த் திருந்தி நேர்மையோடு அணைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வுண்மை குலேசபாண்டியன் பால் உணர வந்தது.

## சரிதம்.

இம்மன்னன் மதிகுல திலகன். மதுரையிலிருந்து அரசுபுரிந்த சூடாமணிப் பாண்டியனுடைய அருமைத் திருமகன். அரிய பல கலைகளையும் பயின்று தெளிந்த வன். பெரிய மதியூகி. இறைவன்பால் பேரன்புடைய வன். இவனுடைய நிலைமை நீர்மைகளை வியந்து மகிழ்ந்து இடைக்காடர் என்னும் புலவர் பெருமான் சில பாடல்களை இயற்றி வந்து இவன் எதிரே பாடினார். அந்த இனிய கவிகளைக் கேட்டும் இவன் உள்ளம்

உவந்து கொள்ளாமல் எள்ளலாய்ச் செருக்கியிருந்தான். புலவரது உள்ளம் கொதித்தது; "முன்னரே உறவாய்ப் பழகியிருந்தும் இன்று என் விழுமிய செய்யுள்களின் அருமையை அறிந்தும் யாதும் மகிழாமல் ஏதும் மதியாமல் செல்வச் செருக்கால் திமிர் கொண்டிருந்தானே!'' என்று சீற்றம் மீக்கொண்டு ஆலயம் புகுந்து சிவபெருமான் சந்நிதியில் நின்று கண்ணீர் சொரிந்து முறையிட்டார்: "ஆண்டவா! அரசன் இன்று என் கவிகளை அவமதித்தான்; தமிழின் நாதப் பிரமமாயுள்ள உன்னையே அவன் எண்ணி இகழ்ந்ததாக என் உள்ளம் கொதிக்கிறது; தாய்மொழியை மதியாதவன் பேய் வழியினன் என்று நான் மதிக்கிறேன்; இனி ஈண்டு நில்லேன்; இதோ போகிறேன்'' என்று வடதிசை நோக்கிச் சென்றார்; இறைவனும் இறைவியுடன் புலவர் பின்னே போனார்; சங்கப் புலவர்களும் பின் தொடர்ந்தனர். கோவிலுள் சிவலிங்கம் காணாமையால் மறையவர் யாவரும் மறுகிப் புலம்பி அரசனிடம் போய் அழுது மொழிந்தார். மன்னன் பதறி இன்னலுழந்து துடித்தான்; வைகை நதியின் தென்பால் ஐயன் உருவம் அமர்ந்திருப்பதை அறிந்து விரைந்து வந்து தரையில் விழுந்து பணிந்து தொழுது அழுது துதித்தான்.

மன்னன் துதித்தது.

படர்ந்துபணிந் தன்புருக்கும் கண்ணீர் சோர்ந்து
ஆனந்தப் பெளவத்து ஆழ்ந்து
கிடந்தெழுந்து நாக்குழறித் தடுமாறி
நின்றிதனைக் கிளக்கும்: வேதம்
தொடர்ந்தறியா அடிசிவப்ப நகர் புலம்ப
உலகீன்ற தோகையோடு இங்கு
அடைந்தருளும் காரணம் என்? அடியேனால்
பிழையுளதோ? ஐயா! ஐயா!

அல்லதைஎன் தமரால்என் பகைஞரால்
கள்வரால் அரிய கானத்து
எல்லைவிலங் காதிகளால் இடையூறின்
தமிழ்நாட்டில் எய்திற்றுலோ?

தொல்லைமறை யவர்ஒழுக்கம் குன்றினரோ ?
தவம்தருமம் சுருங்கிற் றுலோ ?
இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ ?
யான் அறியேன் எந்தாய் ! எந்தாய் ! (2)
(திருவிளையாடல் 56)

மன்னன் இன்னவாறு மறுகி உருகி அழுது துதிக்கவே பரமன் அருளால் ஓர் ஒலி வானிலிருந்து நேரே எழுந்தது: "பாண்டியா ! ஈண்டு யான் வந்திருப்பது இடைக்காடனுக்காக; அவன் என்பால் அன்பன்; பெரிய புலவன்; அவனுடைய கவிகளை நீ செவி ஏற்றும் மதியாதிருந்தது பெரிய பிழை; ஒரு நாட்டு மன்னன் அந்நாட்டுக்கு உரிய மொழியைப் பெற்ற தாயைப்போல் பேண வேண்டும். மொழி நாத வடிவம்; உணர்வின் ஒலி; உயிரின் ஒளி; அதைப் பயின்று தெளிந்த புலவர்களைப் போற்றுவதே மொழியைப் போற்றுவதாம்; மொழி மதிப்பாய் உயர்ந்தால் மக்கள் மதியால் உயர்வர்; மக்கள் உயர, நாடு உயரும்; நாடு உயர, மன்னன் உயர்வான். இந்த உண்மைகளை நீ தெளிந்து கொள்ள வேண்டும்" என்று வானொலி மொழிந்து நின்றது. கேட்ட வேந்தன் வியந்தான். மீண்டும் கீழே விழுந்து பணிந்தான்; புலவரையும் தொழுது போற்றினான். இறைவன் பழையபடியே கோயில்கொண்டருளினான். தான் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும் என்று இடைக்காடர் முதலாகச் சங்கப் புலவர் எல்லாரையும் வேந்தன் விழைந்து பணிந்து வேண்டினான். யாவரும் மன்னனது பெருந்தகைமையை வியந்து புகழ்ந்தார்; உறவுரிமையுடன் பழைமைபோல் சூழ்ந்து வாழ்ந்து வந்தனர். தன்னைத் துறந்துபோன தமர் அமராமைக்கு உரிய காரணம் நீங்கவே பூரண வுரிமையுடன் அவர் ஆர்வமாய் உறவு பூண்டு நிற்பர் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து நின்றது.

**பிரிந்த உறவினர் பின்பு திருந்தப்
பரிந்து வருவர் பசந்து.**

உறவின் பிரிவு பரிவா யுறும்.

530 கண்டிருந்தும் வீடணன்சேர் காரணத்தை ஏன் எண்ணிக்
கொண்டான் இராமன் குமரேசா—அண்டி
உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல். (ம)

இ-ள்.

குமரேசா! வீடணன் பிரிந்துவந்த காரணத்தை ஆராய்ந்து இராமன் ஏன் அவனைத் தழுவிக்கொண்டான்? எனின், உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை இழைத்து இருந்து வேந்தன் எண்ணிக் கொளல் என்க.

பக்கத்தே இருந்து நீங்கி ஏது படிந்து வந்தவனை அரசன் கூர்ந்து ஆராய்ந்து ஓர்ந்து உணர்ந்து தழுவிக் கொள்ள வேண்டும்.

பிரிதலும் வருதலும் வினையாளன் செயல்கள்; எண்ணலும் கொள்ளலும் மன்னவன் வினைகள்.

உழை = பக்கம்; இடம்.

காரணம் = காரியக் குறிப்பு.

இழைத்து = கூர்ந்து ஆராயந்து.

இழைத்தல் = அழுத்தமாச் செய்தல்; ஆய்ந்து அறிதல். நூலுக்கு இழை என்று பெயர். நுண்ணிதாய்ச் செய்யப்பட்டது என்பது குறிப்பு. கருமம் சிதையாமல் கருதியுணர்வதைஇங்கே உறுதியாக் கருதவந்தது.

இழைத்து உணர்ந்து ஈண்டிய கேள்வியவர். (குறள் 417)

இழைத்துக்கொளற் பாலர் புலமை மிக்கோர். (சிந்தாமணி 4)

இவற்றுள் இழைத்தல் உணர்த்தி நிற்றல் அறிக.

பிழைப்பு நேராதபடி பாதுகாத்தருள இழைப்பு ஈண்டு இனமாய் இயைந்தது. உழைத்து ஓதுவதும் இழைத்து உணர்வதும் எண்ணித் தேர்வதும் அறிவுக்குத் தெளிவை அருளுகின்றன.

தன் உழை இருந்தோ, பிறர் உழை இருந்தோ பிரிந்து வந்தவனை விரைந்து சேர்த்துக்கொள்ளக்கூடாது

**இருந்து எண்ணி** ஆராய வேண்டும்: "ஏன் பிரிந்தான்? எதற்காக அகன்று போனான்? மீண்டு ஈண்டு ஏன் வந்தான்? வந்த நோக்கம் என்ன?" என இன்னவாறு பலவகையிலும் ஆய்ந்து அறிய வேண்டும். பிரிவிலும் வரவிலும் அறிய வுரிய மருமங்கள் பல வுள.

தன்பால் பழகியிருந்த ஒருவன் பிரிந்து போனால் அந்த உறவு அறுந்து போனதாம். மீண்டு அவன் வந்து சேர்ந்தாலும் அது மெலிந்தே நிற்கும்.

நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர் பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். (நன்னெறி 5)

நெல்லின் உமி சிறிது பிரிந்து மருவினும் பின்பு அது முளைக்கும் திண்மை இழந்துபோம்; அதுபோல் பழகி யிருந்தவர் பிரிந்து கூடினாலும் அவருள் உரிமை ஒழிந்து போம் என இது உணர்த்தியுளது. இந்த உவமை நயத்தை உய்த்து உணர்ந்து பொருள் நிலையை ஓர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும். பிரியாத உறவே எவ்வழியும் மரியாதையுடன் பிரியமாய்ப் பெருகி வருகிறது.

உறவினர் நண்பினர் என்பவர் மனிதனுடைய வாழ்வில் இனிய துணைகளாய் அமைந்துள்ளனர்.

மனை வாழ்க்கைக்கு மனைவிபோல் புறவாழ்க்கைக்கு உறவினர் உரம் பயந்து வருகின்றனர். அந்த உறவினர் உவந்துவரத் தழுவிவரின் அவ்வாழ்வு வளமாய் உயர்ந்துவரும். உரம் தோய்ந்த நிலம் போல் உறவு தோய்ந்த அரசு திறமாய்ச் சிறந்து திகழ்கின்றது.

உறவினரிடம் உள்ளப்பாசம் இயல்பாய்த் தோய்ந்துள்ளமையால் அவர் அயலே ஒதுங்கியிருந்தாலும் அருகே மருவியிருக்கும் அயலாரினும் உயர்வானவரே. சிலநாள் மாறுபாடாய் வேறுபட்டு நின்றாலும் மனம் தெளிந்து விழைந்துவரின் அவரை உவந்து தழுவிக் கொள்வதே வேந்தர்க்கு நலமாம்.

பலநாளும் பக்கத்தார் ஆயினும் நெஞ்சில்
சிலநாளும் ஒட்டாரோடு ஒட்டார்—பலநாளும்
நீத்தார் எனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்து
யாத்தாரோடு யாத்த தொடர்பு. (நாலடி 214)

தம் பக்கத்தே நெருங்கி யிருந்தாலும் உள்ளன்பில்லாதவர் உறவினராகார்; தூரத்தே விலகி யிருந்தாலும் உள்ளத்தே பாசம் உள்ளவரை எவரும் கைவிடார் என்னும் இது ஈண்டு எண்ணி உணர வுரியது.

பழமையானகிழமை சுற்றத்தாரிடம் வளமையாய்ப் பதிந்திருத்தலால் அவர் எவ்வழியும் இதமே கருதுவர். அயலார் அவ்வாறு கருதார். கேண்மை தோய்ந்துள்ளவரே கேளிர் ஆதலால் அவரை யாண்டும் நம்பலாம். மற்றவர் இனியவர்போல் தோன்றினும் உள்ளத்தே உரிமையான பாசம் இல்லாமையால் சமையம் வாய்த்த போது யாதும் உதவாமல் தழுவி விடுவர்.

வாள்வகுத்த படையிரும்பு வேர்சாயக்
கிளைத்துழுது வளர்க்கும் சாலி;
ஆள்வகுத்த கூனிரும்பு தாள்பணிதல்
போலடியூ டரிந்த வாற்றல்
கேள்படைத்த மனத்தூயோர் பகைமைபா
ராட்டுகினும் கேண்மை நீங்கார்;
தாள்பிடித்து முடிவணங்கித் தனதுபா
ராட்டுகினும் தடிவார் தெவ்வர்.
(திருக்குற்றால; நாடு 15)

கேளிரின் நிலையையும், பகைவரின் புலையையும் இது நயமா விளக்கியுளது. கலப்பை பயிர்களை வேர் சாய உழுதாலும் அவை பணைத்து வளர வேண்டும் என்னும் கருத்துடனேயே அதைச் செய்யும்; அரிவாள் பயிர்களின் காலில் விழுந்து தொழுவதுபோல் தழுவினும் முழுவதும் அடியோடு அரிந்து சாய்த்துவிடும். ஏரின் கொழுவைப்போல் கிளைஞர்; கொடுவாள் போல் பகைவர்; வணக்கமாய்ப் பணிந்து பேசினாலும் பகைவரை நம்பாதே: கடுமையாய் நடந்து கொண்டாலும்

உறவினரை நம்புக என இது உணர்த்தியிருக்கிறது. சுற்றத்தாரின் இயல்பான இனிய நீர்மைகளைக் கவிகள் சுவையாக இவ்வாறு விளக்கி யுள்ளனர்.

தன்னை உரிமையாக நம்பி நாடி வந்தவனை அரசன் வெறுத்து ஐயுற்று விலக்கலாகாது; விரும்பி ஆராய்ந்து தேர்ந்து தெளிந்து தழுவிக் கொள்வதே நல்லது.

தன்னை மதித்துத் தமர்என்று கொண்டக்கால்
என்ன படினும் அவர்செய்வ செய்வதே:
இன்ஒலி வெற்ப! இடர் என்னை? துன்னூசி
போம்வழி போகும் இழை. (பழமொழி 358)

தன்னை உண்மையாக மதித்து வந்த உரிமை யாளனை உறவினன் ஆக உவந்து கொண்டு உதவிபுரிய வேண்டும்; அதுவே பேராண்மையும் பெருந்தகைமை யும் ஆம் என இம்முதுமொழி மதிதெளிய மொழிந் துள்ளது. தன்பால் அன்பால் நாடி வந்தவனை ஆராய்ந்து தேர்ந்து தெளிந்து உறவுரிமையுடன் மேலோர் சால்பா அணைத்துக் கொள்ளுவர்.

இவ்வுண்மை இராமன்பால் தெரிய வந்தது.

## சரிதம்.

நீதி நெறிகள் பல ஓதியுணர்த்தியும் இராவணன் தெளிந்து கொள்ளாமல் வீடணனை இகழ்ந்து பழித்தான். உடன் பிறந்த தம்பி என்றும் ஓராமல் அந்த அண்ணன் நிட்டூரமாய் நிந்தனை செய்து விலக்கினமையால் அவனை விட்டு வீடணன் விலகினன். இராமனுடைய அருந்திற லாண்மைகளையும் பெருதகைமைகளையும் அறிந்து இவ் வீரனிடம் அவன் விரும்பி வந்தான். இலங்கைமேல் படை எடுத்து வந்து இடையே தங்கியுள்ள இந்த நம்பி பால் அத்தம்பி அடைக்கலம் புக அடைந்துள்ளதை அறிந்ததும் உடனிருந்த சுக்கிரீவன் அனுமான் முத லானவர்களோடு கலந்து ஆலோசித்தான். எல்லாரும் தங்கள் எண்ணங்களைத் தெளிவாக உரைத்தார். மாருதி மாத்திரம் அவனைச் சேர்க்கலாம் என்று குறித்தான்;

மற்றவ ரனைவரும் மறுத்தார். மதியூகி யான அனுமா னுடைய குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து இக்கோமகன் அவனைச் சேர்த்துக் கொள்ளக் கருதினன்; ஆகவே தன் கருத்தைத் திருத்தமாக வெளியிட்டான்.

### அனுமான் குறித்தது.

பகைப்புலத்தோர் துணை அல்லர் என்றுஇவனைப்
 பற்றேமேல் அறிஞர் பார்க்கின்,
நகைப்புலத்த தாம்அன்றே? நல்தாயம்
 உளதாய பற்றல் மிக்க
தகைப்புலத்தோர் தந்தையர்கள் தம்பியர்கள்
 தமையர்இவர் தாமே அன்றோ?
மிகைப்புலத்து விளைகின்றது ஒருபொருளைக்
 காதலிக்கின் விளிஞர் ஆவர்.

### இராமன் உரைத்தது

கருத்துற நோக்கிப் போந்த காலமும் நன்று; காதல்
அருத்தியும் அரசின் மேற்றே; அறிவினுக்கு அவதி யில்லை;
பெருத்துயர் தவத்தி னனும் பிழைப்பிலன் என்னும் பெற்றி
திருத்திய தாகு மன்றே? நம்வயின் சேர்ந்த செய்கை! (2)

இன்றுவந் தான்என் றுண்டோ? எந்தையை ஆயை முன்னைக்
கொன்றுவந் தான்என் றுண்டோ? புகலது கூறு கின்றான்;
தொன்றுவந் தன்பு பேணும் துணைவனும் அவனே; பின்னைப்
பின்றுமென் றலும் நம்பால் புகழன்றிப் பிரிதுண்டாமோ? (2)

(இராமா: வீடணன்)

தன்பால் உள்ளன்போடு உரிமை தோய்ந்து வந்துள்ளவனைக் குறித்து இராமன் ஆராய்ந்து தெளிந்துள்ள நிலைமைகளை இங்கே தெரிந்து கொள்ளுகிறோம். இவ்வாறு துணிந்தபின் அவனை அழைத்துவரச் செய்தான். அவன் உழுவலன்புடன் அழுத கண்ணனாய் வந்து இவன் அடியில் விழுந்து உள்ளம் உருகி நின்றான். பருகு காதலோடு வந்துள்ள அவனது பத்திப் பரவச நிலையை நோக்கி இவ்வுத்தமன் அவனை உறவுரிமையோடு தழுவி உவந்து பாராட்டிச் சீராட்டியருளினன்.

குகனொடும் ஐவர்ஆனேம் முன்பு;பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல்ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகலரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தானுந்தை.

இந்தக் கவியில் கனிந்துள்ள சுவைகளையும் அன்புரிமைகளையும் பண்பாடுகளையும் கருதியுணருங்கள். தன்னை உறவாகக் கருதி வந்தவனை இராமன் இவ்வாறு பரிவோடு தழுவியுள்ளான். எம் உழை வந்த ஐய! என்ற இந்த வாசகம் சிந்தனைக்கு உரியது. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை இழைத்திருந்து எண்ணிக்கொளல் என்பதை இவ்வேந்தர்பிரான் மாந்தர் யாவரும் தேர்ந்து தெளிய நன்கு விளக்கிக் காட்டினன்.

**சுற்றமென வந்தவனைச் சூழ்ந்து தெளிந்துபின்**
**உற்றவனைக் கொள்க உவந்து.**

அன்பாய் வந்தவனை ஆதரித்துக்கொள்க.

---

இந்த அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

1 சுற்றத்தார் என்றும் உரிமை பாராட்டுவர்.
2 அன்புநிறைந்த சுற்றம் ஆக்கம் நிறைந்ததாம்.
3 சுற்றம் சூழாத வாழ்வு தாழ்வாம்.
4 சுற்றம் சூழ வாழ்தலே செல்வம் பெற்ற பயன்.
5 கொடையும் இன்சொல்லும் கிளைகளைப் பெருக்கும்
6 அமைதி ஆதரவால் சுற்றம் அதிகமாய் வரும்.
7 உறவினர் உண்டு வரின் திரு மண்டி வரும்.
8 தகுதிநோக்கு மிகுதியான உறவை ஆக்கும்.
9 தமர் தழைத்துவர உழைத்து வருக.
10 உறவை ஓர்ந்து உவந்து கொள்ளுக.

**53-வது சுற்றந் தழால் முற்றிற்று.**

---

# ஐம்பத்துநான்காவது அதிகாரம்

## பொச்சாவாமை.

அஃதாவது மறதி சோர்வுகளை மருவியிராமை. தன் காரியங்களை எவ்வழியும் கவனமாய்ச் செய்து வருகிற அரசனே சீர்மை யுடையனாய்ச் சிறந்து திகழுவான். மறந்து சோர்ந்து நின்றால் இழிந்து கழிந்துபட நேர்வான். அவ்வாறு நேராமல் சீரோடு செவ்வையாய் அவன் வாழும் வகையை இதில் உணர்த்துகின்றார். குற்றத்தைத் தழுவி ஒழுகுக! என்று முன்னம் குறித்தார்; குற்றத்தைத் தழுவி இழியாதே! என்று இங்கே தெளிவுறுத்தியுள்ளார். மதி ஒளி மருவி வர மறதி இருள் ஒழியும். அதிகார அமைதியும் இதனால் அறியலாகும்.

531. கண்ட களிப்பால் கதிரோனும் இந்திரனும்
கொண்டார்முன் தீதேன் குமரேசா—மண்டி
இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு. (க)

இ-ள்.

குமரேசா! தாம் கொண்ட உவகைக் களிப்பால் இரவியும் இந்திரனும் ஏன் துயர் அடைந்தார்? எனின், சிறந்த உவகை மகிழ்ச்சியின் சோர்வு இறந்த வெகுளியின் தீதே என்க.

களித்தலை ஒழித்து ஒழுகுக என்கிறது.

மிகுந்த மகிழ்ச்சிக் களிப்பினால் உண்டாகின்ற மறதி கொடிய கோபத்தினும் தீயதே.

உவகை=உள்ளத்தில் பொங்கும் இன்பவுணர்ச்சி.

மகிழ்ச்சி=மனக்களிப்பு.

சோர்வு=மறதி; அசதி.

இறந்த வெகுளி=எல்லை மீறிய கோபம்.

சிறந்த உவகை=மிகுந்த மகிழ்ச்சி.

சோர்வு தீதே=மறதி தீமையே.

ஏகாரம் தேற்றம்; தீமையைத் தெளிவாக வலி யுறுத்தி நின்றது. தீயதைத் தோய லாகாது.

சோர்வின்மையே நன்மையாம்; அந்த நல்ல தன்மை யை எவ்வழியும் தழுவி ஒழுகுக என்பது குறிப்பு.

சோர்வு பலவகையில் வரும்: வேலை மிகுதியால், கவலையால், முதுமையால், கால வேற்றுமையால் உண் டாகும் சோர்வு தீமை யாகாது. இயல்பான அச்சோர் வினும் வேறுபாடு தெரிய **மகிழ்ச்சியின் சோர்வு** என மயலான திமிரை இங்ஙனம் இங்கே குறித்தருளினர்.

இன் உருபு இரண்டனுள் முன்னது எல்லைப் பொருளது; பின்னது ஏதுப் பொருளது.

உள்ளக் களிப்பால் உண்டாகும் சோம்பல் கள்ளின் களிப்புப்போல் மனிதனது மனத்தை மயக்கி மதியைக் கெடுத்துக் கொடிய கேடுகளை விளைத்துவிடும். அந்த அழிவு நிலைகள் தெளிவாய்த் தெரிய இறந்த வெகுளியை இணையா எடுத்துக் காட்டினர்.

இறந்த சினத்தார் இறந்தார். (குறள் 310)

இன்னவாறு முன்னரும் கூறி யுள்ளார்.

தன்னை அடுத்த எதையும் கடுத்து எரித்து ஒழிக்கும் தீயைப் போல் தன்னைத் தழுவினவர் எவராயினும் அவரைப் பழி பாதகர்களாக்கி அடியோடு அழித்து ஒழிக்கும் கொடியது ஆதலால் இறந்த வெகுளியும், இழிந்த களிப்பும் இனமாய் ஈண்டு எண்ண நேர்ந்தன.

அது கொடுந் தீ.
இது கடுங் குளிர்.
அது பதைத்துத் துடிக்கக் கொல்லும்.
இது பதையாதபடி படிந்து கொல்லும்.

இரண்டும் அகத்திலிருந்து எழுவன; அழி துயர்கள் தருவன. பழி இழிவுகளை எவ்வழியும் விளைப்பன.

சினத்தி னுல்வரும் தீமை;அத் தீமைதீப் பிறப்பு
மனத்தி னீடிய மருட்கையும் வறுமையும் நரகும்
அனைத்தும் நல்கிடும்; ஆதலால் ஒருபொழு தயர்த்தும்
தனக்கு நல்லவன் வளர்ப்பனே? சீற்றமாம் தழலை.

(சேது புராணம்)

வெகுளியே உயிர்க்கெலாம் விளைக்கும் தீவினை;
வெகுளியே குணம்தவம் விரதம் மாய்க்குமால்;
வெகுளியே அறிவினைச் சிதைக்கும்; வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறென்று இல்லையால்.

(காஞ்சிப் புராணம்)

வெகுளியால் விளையும் அழிகேடுகளையும், பழி துயர்களையும் இவை தெளிவா விளக்கி யுள்ளன. பொருள் நிலைகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். (குறள் 315)

தன்னையே கொல்லுகின்ற பொல்லாத கொலையாளியை இதில் தெரிந்து கொள்கின்றோம்.

தன்னைக் கொண்டவனை மாத்திரம் வெகுளி கொல்லும்; மறதியோ, ஒருவனுடைய பொருள் புகழ் கிளை அரசு முதலிய யாவும் அழிக்கும்; ஆகவே அதனினும் இது எவ்வளவு தீயது? என்பது செவ்வையாய்த் தெரிய நின்றது. உள்ளக் கொதிப்பால் விளைவது வெகுளி; உள்ளக் களிப்பால் உறுவது மறதி. இந்த இரண்டும் தீயன; கொடியன; நெடிய துயர்களை விளைப்பன.

உவகையும் மகிழ்ச்சியும் ஒரே வகையான உள்ளக் கிளர்ச்சிகளே ஆயினும் முன்னது, பொருள் வழியில் மருளாய் வளர்ந்தது; பின்னது காமச் சுவையில் கடுமையாய் விளைந்தது.

செல்வம் அதிகாரம் ஆற்றல் யோகம் போகம் முதலிய நிலைகளில் தலை சிறந்துள்ள அரசர் தம்முடைய

மேலான நிலைமைகளை நினைந்து நெடுஞ் செருக்குடன் நெஞ்சம் களிக்க நேர்வர்; அந்தக் களிப்பால் மதி மயங்கும்; அது மயங்கவே செயல் முறைகளை மறந்து விடுவர்; விடவே காப்பிழந்த பயிர்போல் அரசு கடைப்பட்டு நிலை குலைந்து அழியும் ஆதலால் **சோர்வு தீதே!** என்று பரிதாபமாய் உணர்த்தி யருளினர்.

சில்சொற் பெருந்தோள் மகளிரும், பல்வகையும்
தாளினல் தந்த விழுநிதியும், நாள்தோறும்
நாத்தளிர்ப்ப ஆக்கிய உண்டியும், இம்மூன்றும்
காப்பிகழ்தல் ஆகாப் பொருள். (திரிகடுகம் 47)

அழகிய மகளிரும், அரசதிருவும், இனிய உணவும் உரிமையுடன் ஓர்ந்து காக்க வுரியன; சோர்வினல் காவாது ஒழியின் அவை நவையா யிழியும்; அவமானமும் வறுமையும் துயரமுமாம் என இது குறித்துளது.

இறந்த வெகுளியும் இழிந்த களிப்பும் தீமையுடையன; அவை நேராமல் நேர்ந்து ஒழுகுவது யாண்டும் நலமாம் என்பதை ஈண்டு உணர்ந்து கொள்கிறோம்.

தனது வாழ்வு இனிமையும் பெருமையும் தோய்ந்து வரவேண்டுமாயின் அந்த மனிதன் இன்னுத சிறுமைகள் யாண்டும் அணுகாமல் தன்னை நன்கு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொல் **பொச்சாப்பு** மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை
என்றிவை இன்மை என்மனர் புலவர்.

(தொல்காப்பியம், பொருள் 274)

உயர்ந்த தலைமகனது நிலைமையை இஃது உணர்த்தியுளது. பொருமை கொடுமை புறங்கூறல் **பொச்சாப்பு** தற்புகழ்ச்சி முதலிய பொல்லாப்புலைகள் இல்லாதவனே நல்ல குலமகன் ஆவான் என ஆசிரியர் இவ்வாறு குறித்திருக்கிறர். ஆகவே மேலோருடைய

மேன்மையான விழுமிய பான்மைகளை இவற்றால் தெளிவா இங்கே தெரிந்து கொள்கின்றோம்.

புகவும் போக்கும் பொச்சாப்பு இன்றிப்
பகைவெல் சித்திரம் பலதிறம் பயிற்றி.
(பெருங்கதை 1-37)

வெற்றித்திறம் காணும் வேந்தர் **பொச்சாப்பு இன்றி** யாண்டும் உச்சாகமாய் உறுதி பூண்டு விழிப்போடு இருப்பர் என இது விளக்கி யுளது.

உள்ளக் களிப்பால் மருண்டு மயங்கி மறவி யுறுபவர் எள்ளலடைந்து வருந்துவர். இவ் வுண்மையை இரவியும் இந்திரனும் நன்கு விளக்கி நின்றனர்.

**சரிதம்.**

இறைவன் கலையாய் நின்று உலகம் முழுவதையும் விளக்கி விளங்கும் சோதி யுருவினன் சூரியன் எனப் பேர் பெற்றுள்ளான். பரிதி இரவி பானு பகலோன் மேலோன் எனப் பல காரணப் பெயர்களுடையவன். கால தத்துவத்துக்கு இவன் அதி தேவதை. எல்லா உயிரினங்களும் இனிது வாழ்ந்துவர இவன் ஒளி வீசி உலாவி நிற்கிறான். இவனது உதயம் உலக வுயிர் களுக்கு உவகை புரிந்து வருதலால் கவிகள் அதனை வியந்து மகிழ்ந்து புகழ்ந்து வந்துள்ளனர்.

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு. (முருகு)

நக்கீரர் இவ்வாறு சூரியனைத் துதித்திருக்கிறார்.

எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரம்குவிப்ப வேலை என்னும்
மண்ணுமணி முழவதிர வான்அரங்கின்
நடம்புரிவாள் இரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தால்
எனவிரிந்த கதிர்கள் எல்லாம்.
(இராமா: 1-10-153)

உதய காலத்தை வருணித்து வந்துள்ள இந்தக் கவியின் நயங்களையும் சுவைகளையும் கருதியுணர்ந்து கொள்ளவேண்டும். கண்ணுதற் கடவுள்போல் கதிரவன் விளங்கி நின்ருன் என்று விளக்கி யிருக்கிருர். உலகம் உவந்துவர இவ்வாறு ஒளி புரிந்து வருகிற சூரியன் ஒரு நாள் தன்னைக் குறித்து வீரியமாய் எண்ண நேர்ந்தான்: "தன்னுலேயே யாவும் நடந்து வருகின்றன; தான் இல்லையானுல் உலகம் ஒளி யிழந்துபோம்; இருள் மூடி மருள்மண்டி உயிரினங்கள் எல்லாம் துயருழந்துபடும்" என இன்னவாறு எண்ணிச் செருக்கினுன். அந்த மகிழ்ச்சிக் களிப்பால் தன்னை மறந்து இறுமாந்திருந் தான். இந்த நிலையை அறிந்து நகைத்து இறைவன் நெற்றிக் கண்ணைத் திறந்து இவனை நேரே பார்த்தான். அந்தப் பரஞ்சோதியின் பெருஞ் சோதியுள் இவன் ஒரு சிறு தூசியாய் மறைந்தான். பின்பு மதி தெளிந்தான். பரமபதியைப் பணிந்து தொழுதான். தன் மனக் களிப் பால் நேர்ந்த இளிவினை எண்ணியிரங்கிப் பழமைபோல் வளமையாய் ஒழுகி எவ்வழியும் செவ்வையா ஒளி புரிந்து வந்தான். விரிவைப் பார்க்கவத்தில் பார்க்க.

மனத்தெழு களிப்பினுல் மதி மறந்துதன்
கனத்தெழு கடமையைக் கழிந்தி ழிந்தனன்;
இனத்தெழு கதிரவன் என்னின் ஏவரே
தனத்தெழு தருக்கினுல் தாழ்ந்து வீழ்ந்திலார்?

உள்ளக் களிப்பு கள்ளின் களிப்புப்போல் எவரை யும் இளிப்புறச்செய்யும்; அதனை ஒழித்தவரே உயர்வர் என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்ருன்.

இந்திரன்.

பொன்னுலக வேந்தனை இந்திரன் வெள்ளையானை மீது அமர்ந்து அதிசய ஆடம்பரங்களோடு அமராவதி யில் பவனி வந்தான். தேவர் யாவரும் துதி செய்துவர அரிய பெரிய தெய்வக் காட்சிகள் எம்மருங்கும் செம் மையாய் விளங்கிவர அமரர்கோன் உலா வருங்கால்

அங்கே துருவாச முனிவர் வந்தார். இறைவனைப் பூசித்துக் கையில் கொண்டு வந்திருந்த அழகிய செந்தாமரை மலரைமரியாதையுடன் வாழ்த்திஇவனிடம்கொடுத்தார். தனது பெருமித நிலையில் அவரைச் சிறிதும் மதியாமல் அம்மலரை வாங்கி யானைமேல் வைத்தான். அது துதிக்கையால் இழுத்து அதைக் கீழே வீழ்த்தி மிதித்தது. அதைக் கண்ட முனிவர் கடுங்கோபம் கொண்டார்: " ஏ இந்திரா! உன் செல்வச் செருக்கால் உள்ளம் குருடுபட்டு ஒன்றும் தெரியாமல் உணர்விழந் துள்ளாய்! ஈசன் அருளை நாடும் மேலோர்கள் நீசம் என்று எள்ளித் தள்ளிய இழிந்த பொருள்களையே நீ மருளாகக் கொண்டிருக்கிறாய! உன் மகிழ்ச்சிக்களிப்பு இகழ்ச்சி யிளிப்பாய் இடரையே தந்தது; யானையும் படருழந்து படு துயரடைந்தது'' என அம் முனிவர் முனிந்து சபித்தார். அவர் எள்ளி இகழ்ந்தது, உள்ளக் கொதிப்பால் துள்ளி வந்தது. உணர்வு நலன்களும் அதனுள் ஓங்கி வந்தன.

புள்ளியதோல் ஆடை புனைந்தரவப் பூணணிந்த
வெள்ளிய செங்கண் விடையான் அடிக்கமலம்
உள்ளிய மெய்அன் புடையார் அருவருத்துத்
தள்ளிய செல்வத் தருக்கினாய்! என் செய்தாய்? (1)

கதித்தார் முடியரசர் கையுறையே நன்கு
மதித்தாய்; எம்ஈசன் மதிமுடிமேல் சாத்தும்
பொதித்தா தவிழ்மலரைப் போற்றாது வாங்கி
மிதித்தானை சிந்த அதன் மேல்வைத்தாய் பேதாய்! (2)

வண்டுளரும் தண்டுழாய் மாயோன் இறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் இறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால். (3)

சேட்டானை வானவ! நின் சென்னி செழியரில்ஓர்
ஒட்டானை வீரன் வளையால் சிதறுக; நின்
கோட்டான நாற்கோட்ட வெண்ணிறத்த குஞ்சரமும்
காட்டானை யாகஎன இட்டான் கடுஞ்சாபம். (4)

(திருவிளையாடல் 2-12-15)

இவற்றைக் கேட்டவுடனே இந்திரன் வாட்டமுற்று வருந்தினான். மனக்களிப்பால் நேர்ந்த மடமையை நினைந்து மறுகினான். மாதவரை வணங்கி மன்னித்தருள வேண்டினான். அவரும் அருள் புரிந்து அகன்றார். மிக்க உவகை மகிழ்ச்சி எவரையும் மதியைக் கெடுத்து மருளுறச் செய்யும்; அது கொடிய வெகுளியினும் நெடிய தீமையாம்; அதனைக் கடிந்து ஒழுகுவதே நலமாம் என்பதை உலகம் அறிய இவன் உணர்த்தி நின்றான்.

**உள்ளக் களிப்பால் உறுமறதி அல்லலெனும்**
**வெள்ளக் கலிப்பாம் விரிந்து.**

களிப்பு கடுங் கேடு.

---

532. வென்றி இளன்நீகன் வேய்ந்தபுகழ் பொச்சாப்பால்
குன்றிநின்ற தென்னே குமரேசா—என்றுமே
பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. (உ)

இ-ள்.

குமரேசா! இளன் நீகன் என்னும் இருவரும் ஏன் பொச்சாப்பால் தம் புகழை இழந்து நொந்தார்? எனின், நிச்ச நிரப்பு அறிவினைக் கொன்றாங்கு பொச்சாப்பு புகழைக் கொல்லும் என்க.

மறப்பு இறப்பாம் என்கின்றது.

இனிய அறிவைக் கொடிய வறுமை கொல்லுதல் போல் நல்ல புகழைப் பொல்லாத மறதி கொல்லும்.

பொச்சாப்பு=சோர்வு; மறதி.

நிரப்பு=வறுமை. இப்படி ஒரு பெயர் வறுமைக்கு வந்துளது. வருந்தி இரந்து வயிற்றை நிரப்பிவரும் துயரமுடையது; கொடிய துன்பங்கள் நெடிது நிரம்பியிருப்பது என்னும் குறிப்பை இப்பேர் குறித்துளது.

நிச்ச நிரப்பு என்றது நாள்தோறும் தேள்போல் நைய வருத்தி வரும் தரித்திரத்தை. நிச்சம்=நித்தம். ஒரு நாளைக்கு உழைத்து இருநாள் இருந்துண்ணும் வறுமையினும் வேறுபாடு தெரிய நிச்ச நிரப்பு இங்கு உச்சமாய் வந்தது. நித்திய தரித்திரம்; அட்ட தரித்திரம் எனக் கொடிய வறுமையைக் குறித்து இங்ஙனம் சுட்டி வருவது வழக்கமா யுளது.

நிச்சமும் நிரப்பல் ஓம்பு. (புறம் 360)

அல்லலான வறுமையை இது குறித்துள்ளமை அறிக.

இறந்த வெகுளியினும் பொச்சாப்பு தீயது என முன் குறித்தரர். இதில், நிச்ச நிரப்பினும் அது கொடியது என்கின்றார்.

உள்ளச் சோர்வால் நேரும் தீமைகளை உணர்த்தி வருவதில் உரிய மருமங்கள் உவமைகளால் உணர வந்தன. கோபம் வறுமை மறவி மிகவும் கொடியன.

அறிவு உறுதி நலன்களை யுடையது; அரிய பல நன்மைகளை மனிதனுக்கு அருளுவது. அத்தகைய அறிவையும் வறுமை சித்திரவதை செய்து சிதைத்து விடும். கொல்லும் என்றது, புலையான அக் கொலையின் நிலை தெரிய வந்தது. அந்தக் கொலைகாரனைக் கூட விடாதே.

பேய்வாய்ப் பிள்ளை; நாய்வாய்க் கிள்ளை; நோய்வாய் உயிர்; மிடிவாய் அறிவு; இடிவாய் அரவு எனப் படிவாய் எண்ணி வருதலால் வறுமையால் அறிவு வதையுண்டு படுதலை உணர்ந்து கொள்ளலாம்.

அறிவும் ஆண்மையும் அமைதியும் மேன்மையும்
நெறியும் நீர்மையும் நேர்மையும் சீர்மையும்
குடிமையும் கூர்மையும் குலமும் குணமும்
மிடியெனும் படுதீ மேவின்
அடியொடும் அழியும் அவையெலாம் சிதைந்தே.

நிரப்பு எனும் நெருப்பால் நேரும் அழிவுகளையும் இழிதுயர்களையும் தெளிவாக இஃது உணர்த்தியுளது.

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்
யாதுஒன்றும் கண்பாடு அரிது. (குறள் 1049)

நிரப்பு நெருப்பினும் கொடியது; உயிரை எரிக்கும் துயரத் தீ என்பதை இதில் அறிந்து கொள்கிறோம்.

பொச்சாப்பின் புலையை விளக்குதற்கு நிச்ச நிரப்பை நேர் எடுத்துக் காட்டியது ஏன்? எனின், அதன் நிலையை உணர்ந்துதெளிந்து நிலைதவறாமல் வாழஎன்க.

அறிவும் புகழும் நல்ல மாட்சிகள் உள்ளன.
பொச்சாப்பும் நிரப்பும் பொல்லாத புலையின.

இந்தப் புலைகள் நேராதபடி நிதானமாய் உணர்ந்தும் நெறியே முயன்றும் உயர்ந்து கொள்ளவேண்டும்.

தன் புகழினைக் கொல்லவந்த கொலையாளியாகவே மறவியைக் கருதுக. தன்னை அது மருவாதபடி மதியுடன் வாழுக. அவ் வாழ்வே மதிப்பும் சுகமும் உடையதாம்.

உயிருணர்வு ஒளி மிகுந்தது; விழிப்பு அமைந்தது; அதனால் வாழ்வு நலமாய் வரும். மறதி யுறின் அந்த உணர்வு மங்கி மறையும்; மறையவே மனித வாழ்வு மருளாய் இழிந்து படும். மதம், அகந்தை, இறுமாப்பு, மறப்பு என்பன எவரையும் இழிமக்களாக்கி விடும். புலைப் புன்மைகள் உள்ளே புகுந்த பொழுது எவரும் புல்லராய் வெளியே நிமிர்ந்து வருகின்றனர்,

நெடிய செல்வ முடைமை கொண்டு நெஞ்சிடைக் களிப்பதே
வடிவ மாகும் யானும்,அம் மயக்கையே வளர்ப்பதாம்
கடிய தேவி மறதியும், கலந்த போதில் யாவரே
படியில் வானில் வெற்றியம் பதாகை நாட்ட வல்லரே? (1)

ஆசுறாத செல்வமோடு அடுத்த வச்சி ராயுதன
வாசம் நாறுஅலங்கலைத் துர்வாசன் நல்க வாங்கிமுன்
வீசுறு எறிந்தது ஏறும் வேழமா மதங்கொலோ
ஏசுறாத தன்மதம்கொல்? எம்மதங்கொல்? என்பதே. (2)

அஞ்சு சென்னி யுண்மையால் அரற்கு யானும் ஒப்பென
நெஞ்சில் உன்னி மெய்மதத்த நீர்மையைக்கொ டல்லவோ

கஞ்சம் அன்ன கண்ணன் நாபி யுட்பிறந்த கடவுள்தான்
நஞ்சம் உண்ட கண்டனால் ஓர் நான்முகத்தன் ஆனதே. (3)

நிகரில் அற்பர் சிந்தை யூடு நின்று தூயர் நெறியையும்
இகழு விப்பன்; என்னொடே இறந்துபோம்இவ் வுலகெனப்
புகலுவிப்பன்; எவரொடும் புகுந்துபோர் செய்விப்பன்; இவ்
அகலிடத்தை மேருவோடு ஓர் அணுவும் ஆக்குவிப்பனே (4)
(மெய்ஞ்ஞான விளக்கம் 26)

அஞ்ஞான அரசனை மோகன் எதிரே நின்று மதன் என்பவன் இவ்வாறு இறுமாந்து பேசியுள்ளான். உருவக நிலைகளைக் கருதி யுணருங்கள். மதத்தனுடைய மனைவி பெயர் மறதி. "எங்கள் இருவரால் வையமும் வானமும் வரிசை குலைந்து வசை படிந்துள்ளன. தேவ ராசன் ஆன இந்திரன் எம்மால் இழிந்தான்; பிரமா ஒரு தலையை இழந்தான்; தீய கீழ் மக்கள் உள்ளத்திலே புகுந்து நின்று தூய மேன்மக்களை இகழச் செய்வோம்; எத்தகைய மேலோரையும் எதிர்ப்போம்; பித்தர் எனப் பழிப்போம்; உலகை நிலை குலைத்து வருவோம்" என மதன் மதங்கொண்டு கூறியுள்ளதைக் கூர்ந்துணர்பவர் பொச்சாப்பின் மூலநிலையை ஓர்ந்து தேர்ந்து கொள்வர்.

பொச்சாப்பு உடையவர் புகழ் இழந்து இழிவர்.

இவ்வுண்மை இளன் கண்ணும், நீகன் பாலும் நேரே விவேகமாய்த் தெரிய வந்தது.

### சரிதம்.

இளன் என்பவன் சூரியகுல முதல்வனான மனுவின் புதல்வன். மதிநல முடையவன். சிறந்த அழகன். அறிவும் ஆண்மையும் அரிய பல குணநலன்களும் அமையப் பெற்றவன். உருவிலும் திருவிலும் சிறந்து உயர் புகழுடையவனாய் இவன் அரசு புரிந்து வருங்கால் மலை வளம் காண விழைந்தான். இமயமலைச் சாரலில் தவள கிரி என்னும் பகுதியை அடைந்தான். அங்கே அதிசய எழிலோடு விளங்கிய ஒரு பூம்பொழிலைக் கண்டான். அது உமாதேவியார் அமர்ந்து தவம் புரிந்த இடம்: ஆடவர் எவரும் உள்ளே புகுதலாகாது; புகுந்தால் பெண்

உருவமாய் மாறி விடுவர் என்று மாதவர் சிலரால் முன்னரே அறிந்திருந்தும் தன் செல்வக் களிப்பால் மறந்து அச் சோலையுள் புகுந்தான். மங்கைப் பருவத்த ளாய் மாறினன். தன் உடலுறுப்புக்களை நோக்கினன்; உள்ளம் நாணினன். இளன், இளையாய் நின்றான். இளமை நலம் கனிந்த அழகிய மங்கையாய்த் தனியே வருங்கால் இனிய ஒரு சோலையில் உலாவி நின்ற புதன் கண்டான். மையல் கொண்டான். இத்தையலும் இசைந் தாள். இருவரும் கலந்து இன்பம் நுகர்ந்தார். கரு வடைந்தாள்; ஒரு புதல்வனைப் பயந்தாள். புரூரவன் என்னும் பெயரோடு அவன் பொலிந்து விளங்கினன். விளைந்துள்ள விளைவுகள் விநோத விசித்திரங்களாய் விரிந்து வளர்ந்துள்ளன.

வளைநெடுஞ்சிலைக் கரத்தினன் மநுவருள் மைந்தன்
உளையெழும்பரித் தேரினன் உறுவதொன் றுணரான்
விளையருந்தவ விபினமுற்று அம்பிகை விதியால்
இளை எனும் பெயர் மடவரல் ஆயினன் என்ப. (1)

மார காகளம் எழுவதோர் மதுமலர்க் காவில்
தார காபதி புதல்வன்அத் தையலைக் காணு
வீர காமபா ணங்களால் மெலிவுற மயங்கித்
தீர காமமும் செவ்வியும் மிகும்படி திளைத்தான். (2)

புதனும் அந்தமென் பூவையும் புரூரவா வினைத்தம்
சுதன் எனும்படி தோற்றுவித் தனர்; அவன் தோன்றி
இதநலம்பெறும் அழகினும் திறலினும் இலங்கி
மதன னுங்கலை முருகனும் எனும்படி வளர்ந்தான். (3)

(பாரதம்)

நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை இவை வரைந்து காட்டி யுள்ளன. யாவும் விழைந்து நோக்கி வியந்து கொள் கிறோம். ஒரு சிறு மறதியால் அரச திருவையும் அரிய புகழையும் இழந்து இவன் பரிபவம் உழந்துள்ளான். **பொச்சாப்புக் கொல்லும் புகழை** என்னும் உண்மையை உலகம் காண இவன் உச்சமாய் உணர்த்தி நின்றான்.

## நீ க ன்.

இவன் சந்திரகுல வேந்தன் ஆகிய சுகுணனுடைய புதல்வன். பல நூல்களிலும் நல்ல பயிற்சியுடையவன். எல்லா வுயிர்களிடத்தும் இரக்கம் உள்ளவன். நெறி முறையே இவன் அரசு புரிந்து வந்தான். வருங்கால் சோமநாதன் என்னும் மறையவன் தீர்த்த யாத்திரை செய்ய விரும்பினான். இந்த அரசன்பால் அந்த வேதியன் பேரன்புடையவன் ஆதலால் தனது மனைவியையும் மூன்று வயது மகளையும் இவனிடம் அடைக்கலமாக வைத்து விட்டுக் காசியம்பதியை நோக்கி அவன் போயினான். தாயையும் சேயையும் இவன் நன்கு பாதுகாத்தருளினான். தனியான ஒரு பெரிய வீட்டில் அவர் இனிது வாழ்ந்து வந்தார். மூன்று மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எல்லாம் உரிமையுடன் உதவி அவர் யாதும் வெளியே வராதபடி பாதுகாப்புச் செய்து அன்போடு ஆதரித்து வந்தான். பின்பு தனது காரிய மிகுதியால் அவரை இவன் மறந்து போனான். போகவே காலம் கடந்தமையால் அவர் இறந்து போனார். பதி பெயர்ந்து போன அவ் வேதியன் வந்தான், அதன் பின்பே இவன் நினைந்து விரைந்து அங்கே போய்ப் பார்த்தான்; அவர் மடிந்து கிடந்தார்; அந்த அவல நிலையைக்கண்டு மறையவன் அழுதான்; இவன் பரிந்து பதைத்தான். பழியும் பாவமும் படிந்தனவே! என்று அழுது துடித்தான்; அரசை வெறுத்தான்; யாவும் துறந்துபோய் அருந்தவம் புரிந்தான். நல்ல நீதிமான்; பெரிய கீர்த்திமான்; பொல்லாத ஒரு மறதியால் எல்லாம் இழந்து அல்லலுழந்தான். ஆதிபகவனை நினைந்து தீது தீர நோற்றான். **பொச்சாப்பு புகழைக் கொல்லும்** என்னும் பொய்யா மொழியை வையம் இவன்பால் மெய்யாய்த் தெளிந்து வியந்தது. வேங்கடமான்மியம் இவனுடைய வரலாற்றை நிரலே விளக்கி யுள்ளது.

**மறையவன் சோம நாதன் மனைவியை மகவை மாண்பார்**
**இறையவன் பாது காப்பில் இருத்தினன் அயலே போனான்;**

பொறையுடன் அரசும் பேணிப் புரந்தனன்; புரந்தும் அந்தோ
மறதியோன் றுறவே அன்னுர் மாய்ந்தனர் மாயம் என்னே!

நேர்ந்துள்ளதை இதில் ஓர்ந்து கொள்ளுகிறேம்.

**மனக்களிப்பால் நேரும் மறதி; அதுபின்**
**கனத்த பழியாம் கடுத்து.**

மறதி மதிகேடு.

---

533. சூடியசீர்த் துய்மன் துடியந்தன் பொச்சாப்பால்
கோடினர்சீர் என்னே குமரேசா—கூடிநின்று
பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை; அதுவுலகத்
தெப்பால் நூலோர்க்கும் துணிவு. (ங)

இ-ள்.

குமரேசா! இந்திரத்துய்மனும் துடியந்தனும் பொச்சாப்பால் ஏன் புகழ் இழந்தார்? எனின், பொச்சாப்பார்க்கு புகழ்மை இல்லை; உலகத்து எப்பால் நூலோர்க்கும் அது துணிவு என்க.

புகழைப் போக்கும் புலை அறிய வந்தது.

மறதி யுடையார்க்குப் புகழுடைமை இல்லை; அஃது உலகத்தில் எத்தகைய நூலோர்க்கும் ஒப்ப முடிந்த முடிவு.

துணிவு = எல்லாரும் துணிந்து தெளிந்த உறுதி.

பொச்சாப்பு புகழைக் கொல்லும் என்றார் முன்பு; இதில், பொச்சாப்பார்க்குப் புகழ் உடைமை இல்லை என்று மேலும் நினைவுறுத்தி வலியுறுத்துகின்றார்.

புகழை இவ்வாறு வியந்து புகழ்ந்து வலியுறுத்திக் கூறுவது ஏன்? மனித வாழ்வுக்கு உரிய பெரிய பயன் புகழே. இதனை ஈட்டிக்கொண்டதே இனிய புனித வாழ்வாம்; ஈட்டாத வாழ்வு பயன் அற்றது; பழியுற்றது; இழிவாய்ப் பாழ்பட்டது.

புகழ் இல்லாத மனிதன் மணம் இல்லாத மலர்; ஒளியில்லாத விழி; உணர்வில்லாத உயிர். புகழ் அடையாதவன் எவ்வழியும் இகழ்வே அடைகின்றான்.

ஈகை முதலிய இனிய செயல்களாலும் நல்ல குண நீர்மைகளாலும் புகழ் விளைந்து வருகிறது. இந்த அரிய புகழைப் பொச்சாப்புடையவன் அடைய முடியாமல் அவமே இழிந்து கழிந்து போகிறான்.

மறதி சோர்வு மமதை இகழ்ச்சி மனக்களிப்பு என்பன பொச்சாப்பின் உருவங்கள். பொல்லாத இந்தப் புலைகள் புகுந்த பொழுது நல்ல நிலைகள் இல்லாமல் போகின்றன. அல்லல்கள் நேர்கின்றன.

வழுக்கொடு மறவி புன்மை
மறலொடு பொல்லாங்கே கீழ்
இழுக்கொடு சோர்வு பொச்சாப்பு
இகழ்ச்சியும் மறத்த லின்பேர். (நிகண்டு)

மறதிக்கு உரிய பெயர்கள் இதில் இங்ஙனம் வந்துள்ளன. காரணக் குறிப்புகளைக் கருதி உணர்க.

இந்த அதிகாரத்துக்கு **மறவாமை** என்று பேர் வையாமல் **பொச்சாவாமை** என்று வைத்தது, ஏன்? எனின், பல பொத்தல்களை உய்த்து உணர என்க.

செய்ய வுரிய காரியத்தை மறந்து விடுதல், சோர்ந்திருத்தல், இறுமாந்து இழிதல், இகழ்ச்சியாய் ஒழிதல், எண்ணாது கழிதல் முதலிய பிழைகள் **பொச்சாப்பின்** விளைவுகளாம். கொச்சையான இதனை யுடையவன் உச்சமான எதையும் அடையான்.

புகழ்மை = புகழுடைமை. மை விகுதி தன்மைப் பொருளையும் உடைமைப் பொருளையும் உணர்த்திவரும். ஈண்டு உடைமைமேல் ஊன்றி நின்றது.

அது என்றது புகழ் இல்லை என்னும் அந்த உண்மையை. உடலுக்கு அணிபோல் உயிர்க்குப் புகழ். எல்லா அழகுகளையும் நல்கி எங்கும் மதிப்பும் மாண்பும் அருளி வருதலால் புகழ் உடைமை என வந்தது.

கல்வி செல்வம் முதலிய வேறு உடைமைகளினும் புகழுடைமை உயர்நலம் உடையது. வியனான மேன்மை தருவது; உயிர்க்கு ஒளி புரிந்து வருவது.

இந்த அரிய ஒளியை மறவியாளர் இழந்து விடுதலால் அவரது வாழ்வு வறியதா யிழிந்து வசைபடிந்து ஒழிகிறது. மறப்பு எவனை மருவி வருகிறதோ, மதிப்பு அவனை ஒருவி விடுகிறது.

எப்பால் நூலோர்க்கும் = எவ்வகையான நூல்களை உடையார்க்கும். நூல்கள் பலவகை நிலையின; கொள்கைகளும் பலவகையின. மாறுபாடுகள் உடையன.

அறநூல், பொருள் நூல், இன்பநூல், வீட்டு நூல் என இவ்வாறு பல பிரிவுகள் உள. இத்தகைய வேறுபாடுகளுடைய நூல்கள் யாவும் பொச்சாப்பார்க்கு புகழ் இல்லை என்பதை ஒரு முகமாய்த் துணிந்து தெளிந்து உறுதியா முடிவு செய்துள்ளன.

மேலான அறிவுடைய நூலோர் யாவரும் மறவியால் நேரும் பழி யிழிவுகளைத் தெளிவாக வுணர்ந்துள்ளனர்; அந்த உண்மை இங்ஙனம் வெளியாய் நின்றது.

உயிர்க்கு உரிய உறுதி நலனை ஓர்ந்து செய்யும் உணர்வு, மறதியால் ஒழிந்து போகிறது; போகவே புகழ் அறம் முதலிய உயர் நலங்களை அந்த மறதியாளன் இழந்து விடுகிறான்.

அறிவு கற்ற கல்வி வாய்மை அன்புமுன் படுத்தநல்
உறவுநட்பு ஒழுக்கம் மேன்மை ஒருவர்செய்த உதவிசீர்
பிறவும் இன்ன செய்கைமற்ற தெவையும் நெஞ்சு பேர்வென
மறதி யுற்ற போது யாவர் மனிதர் தேவர் மதியுளார்? (1)

பிரகலாதன் மாயனோடு பின்பு போர் புரிந்ததும்,
சரத வாழ்வு சுக்கி ரீவர் தாமியைந்து இராமர்பால்
வரவு தாமதித்ததும், துரோணர் நட்பும் வாய்மையும்
துருபதேயன் மாற்றிவந்த போதிகழ்ந்து சொன்னதும்: (2)

மகிழ்ந்தணைத்துநானை நின்கண் வருதும்என்ற வாய்மையைச்
சகுந்தலைக்கு மகிணனோர் தவிர்ந்தயர்த்த தன்மையும்
புகுந்தது எத்திறத்தில்? என்னோர் பூவையால் உளம்திகைத்து
இகந்த புத்தியோரை யின்னம் எண்ணில் எண்ணி
லோர்களால். (3)

மதுவி னுள்ளும் அபினி யாதி யானபல் மருந்தினும்
கதுவு புல்லர் வாழ்வினும் கலந்து வைகி யுலகெலாம்
பொதுவில்நின் வசத்தினிற் பொருத்தும் எம்மை யாவரே
எதிர்புகுந்து வெல்ல வல்லர்? என்றிவ்வாறு இயம்பினன்.(4)
(மெய்ஞ்ஞான விளக்கம்)

மமதை என்னும் தீயவன் இவ்வாறு தனது வீரப் பிரதாபங்களை விரித்துப் பேசி யிருக்கிறான். மதமும் மறதியும் கணவனும் மனைவியும் எனக் கலந்துள்ளன. அறிவு அன்பு ஆண்மை முதலிய மேன்மைகள் யாவும் மாய்ந்து ஒழியும்படி மறவி மருமமாய்ப் புரிந்துவரும்: அதனால் புகழ் இழந்து பழி படிந்து அழிந்தவர் பலர் என்பதை இதில் அறிந்து கொள்கின்றோம்.

செய்த நன்றியை மறப்பது பெரிய பாவம்; உய்தி யில்லாத அந்தப் பாதகத்தை மறதி உறுதியாய்ச் செய்து விடுகிறது. மறந்தவன் இறந்தவன் ஆகிறான்.

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிர்கள் மனத்தள வுறைந்து
பிறப்பிறப்பு ஒன்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே. (சீரு)

அறிவுள்ள மனிதப் பிறவியை அருளியிருக்கும் இறைவனை நன்றியறிவுடன் நினைந்து உய்யாமல் மறந்தவர் இருமையும் இழந்து அறிவிலிகளாயிழிந்து அவமே அழிந்து போகின்றனர் என இது குறித்துளது.

வாழ்வின் நிலைமையை உணர்ந்து, வருவதை ஓர்ந்து மதிநலமுடன் செயல் புரிபவரே உயர்வுறுகின்றனர். மறப்புடையவர் பிறப்பின் பயனை அடையாமல் பேதையராய்ப் பீழை படிந்து ஏதம் உறுகின்றனர்.

இறப்பெனும் உண்மையை எண்ணி யுணர்ந்து
சிறப்புயிர்க் காவது செய்யார்—மறப்பென்னும்

பாவிவசப் பட்டுப் பழிதுயராய்ப் பாழ்படிந்து
நாவிவசப் பட்டார் நலிந்து.

பிறந்த பயனை விரைந்து பெருமல் மறந்திருப்பவர் மதிகேடர் என இது இகழ்ந்துள்ளது மறவி கொடியது; இசையைக் கெடுக்கும்; வசையைக் கொடுக்கும். அது நேராதபடி நினைந்து தெளிந்து சீராய் வாழ்க.

பொச்சாப்பு உடையவர் புகழினை அடையார். இகழ்வினை யடைந்து வருந்துவர். இவ் வுண்மையை இந்திரத்துய்மனும் துடியந்தனும் விளக்கி நின்றனர்.

### சரிதம்.

இந்திரத்துய்மன் என்பவன் சந்திரகுல வேந்தன். சுந்தர வடிவினன். கலைகள் பலவும் கற்றுத் தெளிந்தவன். அரிய பல உயர் குணங்கள் இவனிடம் உரிமையாய் அமைந்திருந்தன. நீதி முறையுடன் இவன் அரசு புரிந்து வந்தான். இவனுடைய ஆட்சி யாண்டும் மாட்சி தோய்ந்து வந்தது. மகத்துவம் மிகுந்த அகத்திய முனிவரும் இவனுடைய நிலைமை நீர்மைகளை அறிந்து வியந்தார். இவனை நேரே கண்டு மகிழ வேண்டும் என்று கருதினர். தாம் காண வருவதாக ஒரு தேதியைக் குறித்து இவனுக்கு முன்னதாகவே அறிவித்திருந்தார். அம் மாதவன் வரவை இம்மன்னனும் எதிர்பார்த்திருந்தான். பின்பு அதனை மறந்து போனன். குறித்தபடியே குறித்த காலத்தில் அவர் வந்தார். அதுபொழுது இவன் பூசை புரிந்திருந்தான். நாம் வலிய வந்து அரண்மனை வாசலில் நின்றும் நம்மை இவன் உவந்து வரவேற்று உபசரிக்கவில்லையே! என்று குறுமுனிவர் பெருமுனிவு கொண்டார்: "மதம் மண்டியிருந்தமையால் இவன் மதயானையாய்த் திரிக" என்று அவர் சபித்துவிட்டுச் சென்றார். அவ்வாறே இவன் ஆயினன். நரேந்திரனாய் இருந்தவன் கசேந்திரனாய்த் திரிந்தான். சிறிய ஒரு மறதியால் பெரிய அரச பதவியை இழந்து பெரும் பழியடைந்தான். பொச்சாப்பு உடையார்க்குப் புகழுடைமையில்லை; இகழுடையராய் இழிந்து படுவர் என்பதை உலகம் காண இவன் நேரே உணர்த்தி நின்றான்.

பைந்தமிழ் நாடு காக்கும் பாண்டியன் பரிதி வைவேல்
இந்திரத் துய்மன் என்போன் இணர்ப்பொலஞ்சுண்ணம்
தோய்ந்த
மந்தமா ருதநின் றுடு மாலைவெள் ளருவிச் சாரல்
சந்தனப் பொருப்பில் மாயன் தாளிணை வழிபட் டானால். (1)

குடங்கையில் நிவந்த அண்ட கோளமூ டுருவு விந்த
நெடுங்கிரி யடக்கி நெஞ்சு நெருப்புறழ் அவுணர் மாளத்
தடந்திரைச் சலதி யுண்டசதுர்மறை முனிவந் தெய்த
அடங்கலர்ச் செகுத்த கூர்வாள் அரசனுங் கெழுந்திலானால்.

இமிழிருள் சுவற்றும் வேலான் எழுந்திலன் இருந்தான்
என்னைத்
தமிழ்விளை தண்ணஞ் சாரல் தடவரை முனி சபிப்பக்
கமழ்கடாக் கலுழி தூங்கும் கருங்கவுள் வேழம் ஆகி
உமிழ்கனல் திகிரி மாயன் உலைவில்வீ டுற்று னன்றே. (3)
(பாகவதம் 8-2)

நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளை இதில் ஓர்ந்து கொள்கிறோம்.

துடியந்தன்.

இவன் மதிகுல வேந்தன். சிறந்த மதிமான். அழகு ஆண்மை வண்மை வீரம் முதலிய நிலைகளில் இவன் தலைமையாய் நிலவி நின்றான். நெறி நியமங்களுடன் அரசு புரிந்து வந்தான். வருங்கால் ஒருநாள் உரிய பரிவாரங்களோடு வேட்டைக்குச் சென்றான். வனத்தின் இடையே ஒரு பூம்பொழிலைக் கண்டான். அங்கே கண்ணுவ முனிவர் ஆச்சிரமம் இருத்தலை அறிந்தான்; அவரைக் காண விரும்பினான்; தனியே போனான். முனிவர் அயலே போயிருந்தார். பூஞ்செடிகளுக்கு அருகே சகுந்தலை நின்றாள். இளமை நலம் கனிந்து எழில் சுரந்திருந்த அந்தப் பருவ மங்கையைக் கண்டதும் இவன் காதல் மீக் கொண்டான். அவளும் ஆர்வம் மீதூர்ந்தாள். இருவரும் கலந்து இன்பம் துய்த்தார். விரைந்து வந்து மணந்து கொள்வதாக அவளிடம் வாக்குறுதி யளித்து விட்டுத் தேர் ஏறி இவன் ஊருக்கு மீண்டான். மாதவர் வந்தார்; வந்து போனவன் மன்னவன் என்று தெரிந்து மகிழ்ந்தார். மருவிய அன்றே அவள் கருவுற்றாள். பத்து

மாதம் கழிந்தது; ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. பரதன் என்று அவனுக்குப் பெயரிட்டார். பாலன் நலமாய் வளர்ந்து வந்தான். உரிய பருவம் வரவும் முனிவரைத் தொழுதுவிட்டு மகனை அழைத்துக் கொண்டு சகுந்தலை அரசனிடம் வந்தாள். அரண்மனையுள் புகுந்து பதியைக் கண்டு வணங்கி நின்றாள். அரியணையிலிருந்த இவன் மதி மறந்து போய் "நீ யார்? ஏன் இங்கு வந்தாய்?" என்றான். அந்தச் சொல்லைக் கேட்டதும் அவள் உள்ளம் பதைத்துப் பிள்ளையை அணைத்துக் கண்ணீர் சொரிந்து மறுகி நின்றாள். அயலிருந்த யாவரும் பரிந்து வருந்தினர். மறந்துபோய்ப் பிழை புரிந்தேன் என்று பின்பு இவன் தெளிந்து பேணினன் மறதி மனிதனுக்கு இழிவை விளைத்துப் புகழைக் கெடுக்கும் என்று இவன் புலம்பித் தேறினன். **சாகுந்தலம்** என்னும் வடமொழி நாடகத்தில் இவன் சரிதம் விரிவா விளக்கப்பட்டுளது. பாகவதத்திலும் இவன் மறந்து செய்தசெயலைப் பரிந்து கூறி அருந்தவர்கள் வருந்தி யுள்ளனர்.

சகுந்தலை தன்னலம் தழுவித் துய்த்தவன்
புகுந்தவள் சேயொடும் போந்த போதினில்
மிகுந்தலை மறதியால் வேறு கூறினன்;
தகுந்தவன் இலையெனத் தருமம் ஏங்கவே.

**அசதி மறதி அறம்புகழ் யாவும்**
**வசையுறக் கொன்று விடும்.**

பொச்சாப்பு ஒழி.

---

534. திண்டோள் விரோசனன் சீரெல்லாம் ஏனிழந்தான்
கொண்டஒரு சோர்வால் குமரேசா—உண்டான
அச்சம் உடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. (ச)

இ-ள்.

குமரேசா! தனது ஒரு மறதியால் எல்லா நலங்களையும் இழந்து விரோசனன் ஏன் அழிந்தான்? எனின்,

அச்சம் உடையார்க்கு அரண் இல்லை; ஆங்கு பொச்சாப்பு உடையார்க்கு நன்கு இல்லை என்க.

உள்ளத்தில் பயம் உள்ளவர்க்கு வெளியே யாதும் பாதுகாப்பு இல்லை; அதுபோல் மறதி யுடையவர்க்கு யாண்டும் நன்மை யில்லை.

உவமைக் குறிப்பு உய்த்துணர வுற்றது.

அச்சமும் பொச்சாப்பும் உறவாய் ஈண்டு அறிய வந்தன. இந்த இரண்டும் குற்றம் உடையன. அச்சம் மனிதனைப் பேடி யாக்கிப் பிழை மிகச் செய்யும்; பொச்சாப்பு மடைய னாக்கிப் பழியிடை வீழ்த்தும்; மதிப்பு மாண்புகளைக் கெடுக்கின்ற மதிகேடுகளை ஒழித்து ஒழுகுவோரே உயர்ந்தோராய் ஒளிமிகுந்து வருகின்றார்.

அரண் = பாதுகாப்பான நிலை. மதில் அகழ் கோட்டை முதலியன தம்மை அடுத்தவர்க்கு ஆதரவாய் நின்று உறுதி தருமாயினும் உள்ளத்தே அச்சம் உடையவனுக்கு இவை பயன்படா. கூரிய வடிவாளே ஆயினும் பேடி கையில் அது பிழைபடும்; சீரிய அரணும் அச்சமுள்ள கோழைக்கு ஆதரவாகாது.

பயந்தவனைப் பயந்தவளும் பழித்து இகழுவாள்.

செல்வம் கல்வி முதலிய நன்மைகள் பல நன்கு அமைந்திருந்தாலும் மையலான மறவியுடையவர்க்கு அவை நலமாய்ப் பயன்படா. களிப்பாளர் இளிப்பாளராய் எவ்வழியும் இழிவுறுகின்றனர்.

அச்சமும் பொச்சாப்பும் அகத்தே மருவியுள்ளவர்க்குப் புறத்தே எவ்வளவு நன்மைகள் பெருகியிருந்தாலும் அவ்வளவும் புன்மையாம். புல்லிய இந்தப் புலைகள் நீங்கிய அளவே நல்ல தலைமைகள் ஓங்கி விளங்கும்.

அச்சம் = இழிவு. பொச்சாப்பு = புலை.

அஞ்சாமை அரசர்க்கு அடலாண்மையாய் யாண்டும் அதிசய மேன்மைகளை விளைத்து வரும்.

பொச்சாவாமை அறிவாண்மையாய்ப் பெருமை அருளும்.

பொச்சாப்பு அறிவைக் கொல்லும்; புகழைக் கொல்லும்; பொருளைக் கொல்லும்; நன்மைகள் எல்லாவற்றையும் கொல்லும்; அந்தக் கொலையாளியைக் கொன்றவனே தலையாளியாய் வென்றிவீரேடு விளங்கி நிற்பன்.

மருளும் மயக்கமும் மையலும் கலந்த மறவியே பொச்சாப்பு ஆதலால் தன்னை அது தீண்டாமல் யாண்டும் எச்சரிக்கையாய் நின்று வரும் மன்னவனே நிலைத்த புகழுடன் எவ்வழியும் தழைத்து வருகிருன்.

> அலைபுனலுள் நிற்பினும் தாமரை ஈன்ற
> இலையின்கண் நீர்நிலா தாகும்—நிலையில்
> புலங்களுள் நிற்பினும் பொச்சாப்பு இலரேல்
> மலங்கடி வாள ரவர். (அறநெறிச்சாரம் 214)

நீர் நிலையில் நின்ருலும் தாமரை இலை தண்ணீரில் தோயாது; புலங்களிடையே இருந்தாலும் பொச்சாப்பு இல்லாதவர் புலை படியாமல் தலைமையுடன் புனிதராயிருப்பர் என இது குறித்துள்ளது.

அறிவொளி மங்காமல் எவ்வழியும் தெளிவாயிருப்பதே பொச்சாவாமை யாம்; ஆகவே அதனையுடையவர் யாண்டும் மேன்மையாய் நீண்டு திகழ்கின்ருர்.

நலங்கள் பல உச்சநிலையில் ஓங்கி யிருந்தாலும் பொச்சாப்புடையவன் கொச்சையா யிழிந்து படுவான்.

இவ்வுண்மை விரோசனன்பால் தெரிய வந்தது.

### சரிதம்.

இவன் இரணியாக்கனுடைய தலைமைப் புதல்வன். தரணியைப் பேர்த்துத் தந்தை மரணமடைந்து ஒழிந்ததும் இவன் மனமுடைந்து ஒதுங்கி வனம் புகுந்து ஆதவனை நோக்கி மாதவம் புரிந்தான். அந்த அரிய தவத்துக்கு இரங்கி அதிசயமான ஒரு மணி முடியைக் கதிரவன் அருளினன். அந்த மணி மகுடத்தைத் தலையில் உடையவன் எல்லா நலங்களும் உடையவனு யாண்டும் ஆட்சி புரிவன்; அதன் மாட்சியை இவன் காட்சியால் அறிந்தான். வானவரும் வணங்கிவரத் தானவர் வேந்

தனைத் தழைத்து நின்றான். இவனுடைய இராச தானிக்குப் **பாகுலிகம்** என்று பேர். அதிலிருந்து மாட்சியாய் ஆட்சி புரிந்தான். அழகிய ஒரு நாக கன்னியை மணந்தான். அவள் பெயர் வசுமதி. அந்தப் பேரழகியோடமர்ந்து அரிய போகங்களை நுகர்ந்து மகிழ்ந்து எங்கும் ஆணைசெலுத்தி இறுமாந்து வந்தான். அசுரர் இனங்கள் பொங்கி வந்தன; வரவே அமரர் இனங்களுக்கு யாண்டும் இடர்கள் புரிந்தனர். எவ்வழியும் வெவ்விய துயரங்கள் விரிந்தன. நீதிமுறை யாதுமின்றிக் கொடுங்கோலனாயிவன் விளைத்துவந்த துன்பங்களை நெடுங்காலமாய் அனுபவித்து நொந்த தேவர்கள் முடிவில் திருமாலிடம் போய் முறையிட்டனர். அப்பெருமான் அவர்களுக்கு ஆதரவுகூறி விடுத்தார். இவனை வென்று தொலைக்கும் வகையை நன்கு ஆராய்ந்தார். சூரியன் அருளியுள்ள அச்சிரிய மணிமுடியை நீக்கினால் அன்றி இவனைப் போக்க முடியாது என்று தெளிந்தார். சமையம் நோக்கி நின்றார். ஒருநாள் மாலையில் அழகிய பூஞ்சோலையுள் இவன் உலாவி வந்தான். அப்பொழுது அதிசய எழிலுடைய ஒரு மோகினி வடிவம் கொண்டு எதிரே போனார். மாயவன் மாய மோகினியாய் வரவே இப் பேயன் பேராவலோடு பெருங் காதல் கொண்டு அருகே நெருங்கி உருகி நின்றான். பருவம் அறிந்து பருவமங்கை போல் வந்த அந்த மோகினிமேல் மோகம் மண்டித் தன் முடியை அயல் அகற்றிவிட்டு மயலுடன் இவன் தழுவ விரைந்தான். மாயமோகினி இவன் மாய வேண்டும் என்று கருதித் தலையைத் தடவினாள். தலை வெடித்தது; உடல் பொடித்து வீழ்ந்தது. அரிய மணிமுடியை மறதியால் அகற்றினமையால் இவன் அழிந்து ஒழிந்தான். **பொச்சாப்பு உடையார்க்கு நன்கு இல்லை** என்பதை இவனது அழிவு நன்கு காட்டி நின்றது. விரிவை விரோசனீயத்தில் காண்க.

மாயவன் மாய மோகினி யாகி
மருவிய பொழுதுளம் உருகி
ஆயதன் வரமும் அதிசய வலியும்
யாவையும் விரோசனன் மறந்து

தீயிடை வீழ்ந்த சருகெனக் கருகித்
தீய்ந்துடன் மாய்ந்தனன்; தேவர்
நேயமீ தூர்ந்து தொழுதனர் துதித்தார்
நெடியவன் செயலினை வியந்தே.

**மையல் மறதி யுடையான் மடிந்துபடும்**
**ஐயம் இலாமல் அழிந்து.**

பொச்சாப்பு புலை யழிவு.

---

**535.** என்னேமுன் காவா திழுக்கிக் கயன்கூடன்
கொன்னேபின் நொந்தார் குமரேசா—உன்னியே
முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை
பின்னூ றிரங்கி விடும். (ரு)

இ-ள்.

குமரேசா! முன் அறிந்து காவாத கயனும் சங்க கூடனும் ஏன் பின் வருந்தி நொந்தார்? எனின், முன் உறக் காவாது இழுக்கியான் தன் பிழை பின் ஊறு இரங்கி விடும் என்க.

முன் அறிந்து பாதுகாவாமல் மறந்திருந்தவன் பின்பு துயர் உற்றபோது தனது பிழையை நினைந்து பரிந்து வருந்துவான்.

இழுக்கியான் என்றது உரிய காலத்தே ஓர்ந்து வினை செய்யாமல் சோர்ந்து தாழ்ந்திருந்த சோம்பனை. இழுக்குதல்=வழுவுதல்; தவறுதல்.

ஊறு=இடையூறு; துன்பம்.

இரங்குதல்=பரிதாபமாய் வருந்துதல்.

எதையும் கவனமாய் முன் எச்சரிக்கையுடன் கருதி வினை செய்பவனே கரும வீரனாய் உயர்கிறான். கருதாமல் மறந்து நின்றவன் காரியக் கேடனாய் இழிகின்றான்.

வெள்ளம் வருமுன் அணைசெய்யான் வந்தபின்
உள்வம் மறுகி உளைந்தயர்வான்—உள்ளம்
கருதி யுணர்ந்து கருமம் புரியான்
பருவர லூர்ந்து படும்.

முன்னதாக உணர்ந்து வினை செய்யாதவன் பின் இழிந்து வருந்துவதை இதில் உணர்ந்து கொள்கிறோம்.

பருவம் தவறாமல் செம்மையாகச் செய்துவரும் செயல்வழியே எல்லா நன்மைகளும் உளவாகின்றன. செயல் பழுதானால் துயர் பெரிதாம்.

**அயர்ந்து விட்ட கருமம் அழுது முட்டினாலும் மீளாது.** இந்த முதுமொழி இங்கே மதி தெளிய வுரியது.

மறதியுடையவன் ஒரு நலமும் அடையான் என்றார் முன்பு. இதில், அல்லல் பலவும் அவன் அடைந்து வருந்துவான் என்கின்றார்.

> வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும். (குறள் 435)

முன்னுறக் காவாமல் இழுக்கி நின்றவனது அழி நிலையை முன்னரும் இவ்வாறு உணர்த்தியிருக்கிறார். சிறிய மறதி பெரிய துயரமாய்ப் பேரழிவு செய்யும் ஆதலால் அது நேராவகை நேர்ந்து செய்வதே ஆர்ந்த ஆண்மையாம். பிழை புரிந்து விட்டுப் பின்பு பேதையா யிருந்து அழுவது கழி விரக்கமா யிழிவுறுத்தும்.

யாதும் தீது நேராமல் யாண்டும் விழிப்புடன் பாது காத்து வருவது அரசனுக்குப் பிறப்புரிமையான கடமை யாம். காப்பு நிலை பொச்சாப்பால் பிழைபடின் அது பெரிய பழியாய் எவ்வழியும் இழிவே தரும்.

> தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கென்று
> உன்னித்து வைத்த பொருளோடு இவைநான்கும்
> பொன்னினைப் போல்போற்றிக் காத்துய்க்க காவாக்கால்
> மன்னிய ஏதம் தரும். (ஆசாரக் கோவை, 95)

பொன்னைப்போல் போற்றிக் காக்கவேண்டிய உரிமைப் பொருள்களைப் **பெருவாயின் முள்ளியார்** இங்ஙனம் நன்கு உணர்த்தி யுள்ளார்.

முன் அறிந்து காவாமல் மறந்தவர் பின் வருந்துவர். இது கயன் கண்ணும் சங்க சூடனிடமும் அறிய வந்தது.

## சரிதம்.

கயன் என்பவன் சதமன் என்னும் மன்னன் மகன். அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவன். நிறைந்த செல்வ வளங்களோடு சீர்மையும் சிறப்புமா இவன் அரசுபுரிந்து வந்தான். இவனது ஆட்சி யாண்டும் மாட்சியா நடந்து வந்தது. மறுபுல மன்னர் சிலர் இவன்மேல் பொருமை பூண்டு பகைமை நீண்டு நின்றனர். இவனுடைய அதி கார ஆற்றல்களைச் சிதைத்து அரசை நிலை குலைக்க மூண்டனர். இவனோடு உறவாய் ஒட்டியிருந்தவர்களை நயமாய் வேறு பிரித்தனர். நயவஞ்சகமான சூழ்ச்சிகளை நெஞ்சம் துணிந்து செய்தனர். பகைவர் செய்துவருகிற மிகைகளை இவன் யாதும் கருதாமல் செல்வச் செருக்கிலும் இன்பக் களிப்பிலும் மூழ்கிச் செயல் மறந்திருந்தான். முடிவில் மூண்டுவந்து பொருது இவனது அரசைக் கவர்ந்து கொண்டனர். யாவும் இழந்து பரிதாபமாய் இவன் படுதுயருழந்து மாண்டான். ஆக்கினேய புராணத்தில் இவன் சரிதம் விரிவாய் வந்துள்ளது. முன் அறிந்து காவாதவன் பின் இருந்து பெரிதும் வருந்துவான் என்பதை வையம் இவன்பால் தெரிந்து நின்றது.

### சங்க சூடன்.

இவன் தானவர் வேந்தனை சுதாமனுடைய மகன். அரிய வரபலங்களும் அதிசய ஆற்றல்களும் அமைந்தவன். தபனன் எனும் விஞ்சையனிடமிருந்து ஒரு மணிமாலையை இவன் பெற்றிருந்தான். அது தெய்வீகமான மந்திரசித்தி யுடையது. அதனைக் கழுத்தில் அணிந்து கொண்டவனை எவரும் வெல்ல முடியாது. செல்வம் வலிமை முதலிய எல்லா நிலைகளிலும் தலை சிறந்து இவன் வாழ்ந்து வந்தான். அரிய பெரிய ஆற்றல்கள் மருவியிருந்தமையால் எவரையும் மதியாமல் இறுமாந்து நின்றவன் பின்பு பலர்க்கும் இடர்செய்ய நேர்ந்தான். அல்லல்கள் புரிந்து வருகிற இவனை ஒல்லையில் அடக்க வேண்டும் என்று அரசர்கள் திரண்டனர். வஞ்சச் சூழ்ச்சிகள் புரிந்து இவனிடமிருந்த மணிமாலையைக் கா

வாக் கவர்ந்து போயினர். பின்பு போராட மூண்டு நேரே வந்து வளைந்தனர். விரைந்து பொருதனர். அப்போரில் இவன் இறந்து போனான். எதிரிகள் புரிந்து வருவதை எதிரறிந்து காவாமல் மதி மறந்திருந்தமையால் இவன் பதி யிழந்து பாழா யழிந்தான். முன்னுறக் காவாமல் மடமையாய் இருந்தவன் பின் ஊறுபட்டுப் பேதை யாய் இழிந்து அழிந்து படுவான் என்பதை உலகம் இவன் பால் உணர்ந்து தெளிந்து கொண்டது.

மந்தம் மறதி மடிகளி என்பன
எந்த வழியும் இழிதுயராய்—வந்து
மனிதன் உயர்வை மடித்துக் கெடுக்கும்
துனியவை யாண்டும் தொடல்.

**எண்ணிமுன் காவா திகழ்ந்திருந்தான் பின்பவன்**
**எண்ணி யழிவான் இழிந்து**

முன் அறிந்து கா.

---

536. ஏதும் இழுக்காமல் எண்ணிஏன் கேகயன்முன்
கோதின்றி நின்றான் குமரேசா—தீதில்
இழுக்காமை யார்மாட்டும் என்றும்வழுக்காமை
வாயின் அதுவொப்ப தில். (சு)

இ-ள்.

குமரேசா! தனது மனைவி மாட்டும் கேகயன் ஏன் மறவி யின்றி மதியுடன் மாண்புற்றிருந்தான்? எனின், இழுக்காமை யார் மாட்டும் என்றும் வழுக்காமை வாயின் அது ஒப்பது இல் என்க.

அரிய நன்மை அறிய வந்தது.

மறதி யுறாமை எவரிடத்தும் எக்காலத்தும் வழுவா மல் வாய்க்குமாயின் அவ்வாய்ப்பு ஒப்பற்ற பெரிய நன்மையாம்.

இழுக்குதல்=தவறுதல்; பிறழ்தல்; மறத்தல்.

வழுக்குதல்=வழுவுதல்; நழுவுதல்; ஒழிதல்.

இழுக்காமை என்றது ஈண்டு மறவாமையை, அதிகாரத்தால் இவ்வாறு இது தெரிய வந்தது. பிழையான மறதி தன்னிடத்தில் நேராமல் எவ்வழியும் கவனமாய் ஒருவன் காரியத்தை நடத்திவரின் அவன் சீரிய வாழ்வில் சிறந்து வீரியவானாய் விளங்கி வருகிறான். விழிப்பான எச்சரிக்கை யார்க்கும் விழுப்பமாய் வெற்றி தரும்.

வாயின் = வாய்ப்பாய் அமையின்.

அது = மறவாமை வழுவாமல் வாய்த்துள்ளமை.

வழுவுறாத நிலைமை யாண்டும் அமைவது அருமை ஆதலால் **வாயின்** என்றார். வாய்த்தல் என்பது, இயற்கையாய் அமைகின்ற வியப்பினை விளக்கி நின்றது.

மறவாமை எங்கும் உறவாக நன்கு அமையின் அந்த மன்னனுடைய ஆட்சி யாண்டும் மாட்சி மிகுந்து வளம் சுரந்து வரும்.

அரிய பெரிய வரவுகள் எல்லாம் ஒரு சிறு மறதியால் அழிய நேரும்; ஆதலால் அந்த மறத்தல் எந்த வகையிலும் அரசுக்குக் கொடிய இழிவாம்.

அறிவு ஊக்கம் அஞ்சாமை ஆண்மை முதலிய எவற்றினும் மறவாமையையே எவ்வழியும் அரசன் உரிமையாய் ஓர்ந்து பேணி வரவேண்டும். இழுக்காமை என்னும் குறிப்பினால் மறதி என்பது பெரிய இழுக்காய்ப் பிழைகளைப் பெருக்கும் என்று தெரிய வந்தது. இழுக்கு அடையலாமா?

வினையாளர் வேற்றாளர் மாற்றாளர் முதலாகப் பல வகையான நிலையினரிடமும் வேந்தன் நினைவாற்றலுடன் வினைய விவேகமாய் ஓர்ந்து வரவேண்டும்.

விழுமணி மாசு மூழ்கிக் கிடந்ததில் வுலகம் விற்பக்
கழுவினீர் பொதிந்து சிக்கக் கதிரொளி மறையக் காப்பின்
தழுவினீர் உலகம் எல்லாம்; தாமரை யுறையும் செய்யாள்
வழுவினார் தம்மைப் புல்லாள்; வாழ்கநும் கண்ணி மாதோ.

வண்ணப்பூ மாலை சாந்தம் வாலணி கலன்கள் ஆடை
கண்முகத் துறுத்தித் தூய்மைகண்டலால்கொள்ளவேண்டா
அண்ணலம் புள்ளோ டல்லா ஆயிரம் பேடைச்சேவல்
உண்ணுநீர் அமுதம் காக்க யூகமோடு ஆய்க என்றான்.

(சீவக சிந்தாமணி)

அரிய மாணிக்க மணியைப் பாதுகாத்து வருதல் போல் தன்னைச் சீவக மன்னன் பேணி வரவேண்டும் என இவை சுவையாய்க் காட்டி யுள்ளன. சோர்ந்து காவாமல் வழுவினரைத் திருமகள் மேவாமல் விலகி விடுவாள். **இழுக்காமை வழுக்காமை** வாய்ந்தவரே செல்வத் திருவுடன் விழுப்பமாய் விளங்குவர்.

மறவாமல் மதியுடன் ஆராயும் திறங்களையும் பொருளின் குறிப்புகளையும் இவற்றுள் ஊன்றி யுணர்ந்து கொள்ள வேண்டும்.

இழுக்கு உறுமல் விழிப்புடன் இருப்பவர் விழுப்பமாய் வாழ்வர். அவரது மேன்மை செழிப்புடன் சிறந்து விளங்கும். இவ்வுண்மை கேகயன்பால் தெரிய வந்தது.

## சரிதம்.

இவன் கேகய தேசத்து அரசன். அசுவபதி என்னும் பேரினன். அரிய பல கலைகளை ஆய்ந்து தெளிந்தவன். அதிசய மதியூகி. விலங்கு பறவை ஊர்வன முதலிய பிராணிகளின் இயல்புகளையும் ஒலிக் குறிப்புகளையும் ஓர்ந்து உணர்ந்தவன். எதையும் முன்னறிந்து நன்னயமா முடித்துக் கொள்பவன். தனது அருமைத் திருமகளான கைகேசியைத் தசரத மன்னனுக்கு மணம் புரிந்து தரும்பொழுது அரசுரிமையை அவள் மகனுக்கு வரிசையா வரும்படி பெற்றவன். ஆட்சி முறையில் சதுரன். சுரவதி என்னும் தன் மனைவியுடன் அந்தப்புரத்தில் ஒருநாள் இவன் அமர்ந்திருந்தான், அப்பொழுது அங்கே சில எறும்புகள் ஒன்றோடு ஒன்று ஒன்றி ஊர்ந்து சென்றன. அவற்றின் காதல் இயற்கைகளைக் கண்டு இவன் சிரித்தான்; அருகே யிருந்த மனைவி ஏன் நகைத்தீர்கள்? என்றாள். "அது அதிக மருமமானது; அயலே சொல்லக் கூடாது; சொன்னால் என் உயிர் போய் விடும்" என்றான். என்னிடம் கூறாத அவ்வளவு பெரிய இரகசியமா? அதைச் சொல்லித் தான் ஆகவேண்டும் என்று அவள் வற்புறுத்தினாள். சீவராசிகளுடைய செயல் இயல் ஒலிகளின் பொருள்

களை ஒரு யோகசித்தர் மூலம் நான் தெரிந்துள்ளேன்; அரிய மந்திரமான அதைப் பிறரிடம் கூறக் கூடாது; கூற நேர்ந்தால் இறந்து போவேன்'' என்று உண்மையை உரிமையுடன் உணர்த்தினன். உணர்த்தியும் கேளாமல் அவள் வலிந்து சினந்து வற்புறுத்திக் கேட்டாள். இவன் அவளை இகழ்ந்து வெறுத்தான். தையலார் உள்ளம் அந்தோ தள்ளரும் கொடிய நஞ்சம் என்று நெஞ்சம் கனன்று நெடிது விலகி நின்றான்.

மற்றடந் தோளான் மனைவியோடு இனிதின்
வைகிய மலரணைப் புறத்தில்
சிற்றெறும்பு ஒழுங்கிற் சேறலும் அரசன்
சேவடி கடக்கரிது என்ன
உற்றயல் மேவும் எறும்பு மற்று அயலோர்
எறும்புடன் வெகுண்டுரைத் திடுதல்
கொற்றவேல் மன்னன் உணர்ந்தனன் நகைப்பக்
கோற்றொடி நகைத்தது என்? என்றாள்: (1)

ஈங்கிது நுவலின் முடியும்என் ஆவி;
இயம்பலன்; என்னவும் மறுத்துக்
கோங்கிள முலையாள் கூறுகென் றுரைத்து
முனிதலும் கோவடு வேலான்
தீங்குறும் உள்ளத்து அரிவைதோள் நலத்தின்
தீதுவே றின்றெண விடுத்தான்;
ஆங்கவள் குலத்தில் தோன்றிய உனக்கும்
அருளுறுமோ? என அறைந்தான். (2)
(கூர்மபுராணம் 22)

இராமனை வனத்துக்கு அனுப்பித் தசரதன் இறந்து படும்படி செய்த கைகேசியை நோக்கிச் சுமந்திரன் இவ்வாறு கூறி யிருக்கிறான். "தன் கணவன் செத்தாலும் சரி என்று மடமையும் கொடுமையும் மண்டி நின்ற அந்தக் கொடியவள் வயிற்றில் பிறந்த உனக்கு அருளும் இரக்கமும் எங்கிருந்து வரும்?'' என்று இங்ஙனம் உள்ளம் நொந்து அந்த மதிமான் பேசி யிருக்கிறான்.

தன் காதலியிடமும் காம மயக்கத்தால் யாதும் மயங்காமல் இம்மன்னன் தீது நீங்கி நின்றுள்ளான்.

இழுக்காமை யார் மாட்டும் என்றும் வழுக்காமல் வாய்க்கப்பெற்றவன் மாண்புடன் வாழ்வன் என்பதை வையம் இவனிடம் ஐயமின்றி அறிந்து நின்றது.

**பொல்லா மறதி புகாதொழியின் அவ்வாழ்வே**
**எல்லா வழியும் இனிது.**

வழுவுறுமல் வாழுக.

---

537. அன்றரிய தென்னுமல் ஆர்வமுடன் சேகரனேன்
குன்றுமல் செய்தான் குமரேசா—ஒன்றும்
அரியவென் றுகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின். (எ)

இ-ள்.

குமரேசா! அரியன என்று தளராமல் எதையும் இராச சேகரன் ஏன் மறவாமல் செய்தான்? எனின், பொச்சாவாக் கருவியால் போற்றிச் செயின் அரிய என்று ஆகாத இல்லை என்க.

எதையும் எய்த வுரிய வழி தெரிய வந்தது.

மறவாமை மருவிய உள்ளத்தால் உறுதியுடன் ஊக்கிச் செயதால் முடியாத காரியம் யாதும் இல்லை.

அரிய என்றது செய்தற்கு அரியன; எய்தற்கு அரியன என்று பேர் பெற்றுள்ளவைகளை எண்ணி வந்தது.

மறதியுறுமல் கருதியதையே கருதி உறுதியுடன் செய்தால் எதையும் முடிக்கலாம்; எப்பொருளையும் அடையலாம்.

செயின் என்றது அவ்வாறு செய்பவர் அரியர் என்பது தெரியநின்றது. போற்றி = உரிமையுடன் பேணி.

மறவாத மனம் உடையனுயினும் எடுத்த காரியத்தை முடித்தற்குரிய உறுதியும் பொறுதியும் ஊக்கமும் இலனுயின் ஆக்கங்களை அடைய முடியா. இடையறுத நினைவும் தடையுறுத சூழ்ச்சியும் சலியாத முயற்

யும் அரசன் உடையனுயின் எல்லாச் செல்வங்களும் எல்லா மேன்மைகளும் அவனிடம் எளிதே வந்து அடையும்.

பொச்சாவாக் கருவி = சோர்வில்லாத சார்பு.

கூர்மையான கருவி காரியங்களைச் சீர்மையாச் செய்து முடிக்கும். அதுபோல் கூரிய நினைவும் எதையும் விரியமாய்ச் செய்தருளும். நினைந்ததையே நினைந்து முனைந்து முயன்றுவரின் அரியனவெல்லாம் அங்கே உரியனவாய் விரைந்து வரும்.

மறவாமையை மனதில் உடைய மன்னனுக்கு அரிய பெரிய செல்வங்கள் எல்லாம் உறவுரிமைகளா யுறும்.

“ அரவுமிழ் மணியும் அலைகடல் அமுதும்
சிங்கப் பாலும் திங்கட் குழவியும்
முதிரை வாலும் குதிரை மருப்பும்
ஆமை மயிரும் அன்னத்தின் பேடும்
ஈகென இரப்பினும் இல்என அறியான்;
சடையனை அயன்றைத் தலைவனை
உடையது கேண்மின் உறுதியா ராய்ந்தே.”

சடைய வள்ளலது கொடையின் பெருமையை இது குறித்துள்ளது. அரியன என்று உலகம் கருதியுள்ள பொருள்களையும் இரவலர்க்கு அவன் உதவ வல்லவன் என்பதை இதனுல் உணர்ந்து கொள்கிறோம். இதில் குறித்துள்ள அரிய இனங்களைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

பொச்சாப்பு மிகவும் பொல்லாதது; அந்தப் புலை உங்கள் பால் புகாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; பொச்சாவாக் கருவியைப் போற்றி வாருங்கள்; அதனுல் அரிய வளங்களையும் பெரிய நலங்களையும் நீங்கள் அடைந்து கொள்ளலாம்.

பிறந்த இடம்நினைப்பில் பேர்த்துள்ள லாகா;
மறந்தேயும் மாண்பொழியும் நெஞ்சே!—சிறந்த
ஒழுக்கத்தோ டொன்றி உயப்போதி யன்றே
புழுக்கூட்டுப் பொச்சாப் புடைத்து. (அறநெறி 182)

நெஞ்சே! பெண்மையை விழையாதே; ஒழுக்கம் பேணி உய்க; அன்றுதான் பிறவித்துயர் நீங்கும் என இது குறித்துளது. பொச்சாப்பு இதில் உணர்த்தி நிற்கும் பொருளை உணர்க.

மறதி யில்லாதவன் அரிய பேறுகளை அடைந்து பெரிய மகிமைகளோடு பெருகித் திகழ்வான்.

இவ்வுண்மை இராசசேகரன் பால் தெரிய வந்தது.

சரிதம்.

இவன் சந்திரகுல வேந்தன். விக்கிரம பாண்டியனுடைய அருமைத் திருமகன். உக்கிரவீர பராக்கிரமங்கள் உடையவன், அதிசய மதிமான். பல மொழிகளையும் பயின்று தெளிந்தவன். கலைகள் பலவும் கற்க விழைந்தான். அந்த அந்தக் கலையில் தேர்ந்த புலமையாளரைக் கொண்டு ஓர்ந்து கற்றுத் தேர்ந்தான். வேதம் ஆகமம் இதிகாசம் புராணம் இலக்கணம் தருக்கம் தரும நூல் நீதிநூல் வானநூல் உளநூல் உருவநூல் யோகம் மந்திரம் சோதிடம் மருத்துவம் சிற்பம் வீணை வேணு முழவம் தாளம் வில் வேல் மல் அசுவம் கசம் கனகம் மோகனம் தாதுவாதம் முதலிய அறுபத்துமூன்று கலைகளையும் நிலைகண்டுணர்ந்து தலைமை எய்தி நின்றான். பரதம் ஒன்று மாத்திரம் பயிலவில்லை. பரமன் ஆடுகின்ற அந்த நடனத்தைத் தான் ஆடலாகாது என்று பத்திப் பரவசத்தில் நிறுத்திவிட்டு மற்ற எல்லாக் கலைகளிலும் வல்லவனாய் இவன் விளங்கினான். இவனது கலை ஞானத்தை அறிந்து தத்துவ ஞானிகளும் வியந்தனர். இவனுடைய ஆட்சித் திறமும் அறிவின் காட்சியும் அதிசய மாட்சிகளாய் யாண்டும் துதி கொண்டு நின்றன.

கண்ணகன்புவி இராசசே கரன்பொதுக்
 கடிந்துசெங் கோலோச்சி
வண்ண வெண்குடை நிழற்றுவான் ஆனந்த
 வடிவமாய்த் தனிமன்றுள்
அண்ணல் ஆடிய திருநடத் தன்பினால்
 ஆடல்நூல் ஒழித்து ஏனை

எண்ணு மூவிரு பத்துமுக் கலையும்கற்று
இறைமுறை செயுநாளில். (திருவிளையாடல் 24)

இம் மன்னனுடைய அரசு முறைகளையும் கலைஞான நிலைகளையும் இதில் கண்டு மகிழ்கின்றோம். யாரும் அடைய முடியாத அரிய நிலைகளை இவன் அடைந்திருக்கிறான். சோர்வின்றி முயன்று வந்தமையால் யாவும் இவனிடம் மேவியுள்ளன. பொச்சாவாக் கருவியால் போற்றிச் செயின் அரிய என்று ஆகாதது ஒன்று இல்லை என்பதை உலகம் தெளிய இவன் உணர்த்தி நின்றான்.

**கருதி ஒருவன் கருத்தூன்றிச் செய்யின்**
**அரியதொன் றில்லை யவற்கு.**

நினைவுடன் நிலைத்து நில்.

---

538 வில்விசயன் போர்வெறுத்து மீளலுற்றான் கண்ணனேன்
கொல்லென்று சொன்னான் குமரேசா—நல்லோர்
புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையும் இல். (அ)

இ-ள்.

குமரேசா! இசையாது இகழ்ந்த விசயனைக் கண்ணன் ஏன் போர் செய்ய இசைத்தான்? எனின், புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்; செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் என்க.

உயர்ந்தோர் புகழ்ந்துள்ள செயல்களை உரிமையாய் உவந்து செய்க; செய்யாமல் மறந்தவர்க்கு எழுமையிலும் நலம் இல்லை.

செயல் இழந்தால் துயருழந்தாய்! என்கிறது.

புகழ்ந்தவை என்றது நீதிநூல்கள் வகுத்து வரன்முறையே விதித்துள்ள கருமங்களை.

போற்றி = உரிமையுடன் பேணி.
இகழ்ந்தார்க்கு = மறந்து விட்டவர்க்கு.
எழுமையும் = ஏழு பிறவிகளிலும்.

தமக்கு உரிய கடமைகளை அறிந்து முறையே செய்து வருபவரே சிறந்த மனிதராய் உயர்ந்து சீருடன் வருகின்றார். செய்யாமல் ஒழிந்துவிடின் அவர் சிறுமையாய்த் தாழ்ந்து படுகின்றார்.

அரசர் அந்தணர் வணிகர் முதலிய வகைமைகள் மனித சமுதாயத்தில் தகைமைகளாய் அமைந்துள்ளன. அவரவர் செய்யவுரிய கருமங்கள் விதிநியமங்களாய் வந்துள்ளன. அவை தரும நூல்களாய்ப் பெருமை பெற்றிருக்கின்றன. அவை விதித்துள்ள கடமைகளை உரிமையுடன் கருதிச் செய்பவர் உறுதி நலன்களை அடைந்து உயர்ந்து திகழ்கின்றார்.

அரசனுக்கு உரிய கடமை என்ன?

நாட்டை எங்கும் வளப்படுத்தி நன்கு பாதுகாத்தல்.
குடிசனங்களை எவ்வழியும் செவ்வையாக ஆதரித்தல்.
நல்லோரை நாடி யறிந்து நயமுடன் போற்றுதல்.
தீயோரை மாயநூறி யாண்டும் சேராமல் நீக்குதல்.
கள்வர் முதலிய புல்லினங்களை ஒல்லையில் ஒழித்தல்.
பகைவரை மிகைபுரியாமல் அடக்கி ஒடுக்குதல்.
மறப்பின்றி எதையும் சிறப்பாச் செய்தல்.

இன்னவாறான செயல்களை மன்னன் என்ன வகையிலும் மறவாமல் யாண்டும் மதித்துச்செய்யவுரியவன்.

**புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்** என்று இவ்வாறு உறுதியாய் வலியுறுத்தி யுள்ளார். செய்யாவழி வெய்யபழி விளையும் ஆதலால் அது விளையா வகை அருள்புரிந்து மொழிந்தார். இந்த அருளுரையை அறிந்து தொழில் புரியாமல் மருளராய் மறந்து ஒழியின் கொடிய துன்பங்கள் நெடிது விளையும் என இறுதியில் அச்சுறுத்தி யிருக்கிறார். விதித்த விதியை விலகி மதி கேடனாய் மடிந்திருந்தால் பின்பு வழிவழியே அவன் அதி கேடனாகிறான். கேடு நேராமல் நாடிச் செய்க.

மனிதன் செயகிற நன்மை தீமைகளின் பலன்கள் ஏழு பிறப்புகளிலும் தொடர்ந்து படர்ந்து வரும் ஆத

லால் கடமையைக் கருதிச் செய்யாதவனுக்கு எழுமையும் இன்பம் இல்லை என்றார்.

கண்ணைக் காக்கும் இமைபோல் மண்ணைக் காக்க வுரிய மன்னன் யாண்டும் தன் கடமையை உரிமையுடன் கருதிச் செய்யவேண்டும். மையல் மயக்கம் மறதிகளை மருவி வினையாண்மையை அவன் ஒருவினால் வெய்ய துயரங்களே எவ்வழியும் விரிந்து விரைந்து வரும்.

அவரவருடைய தகுதிக்கும் நிலைமைக்கும் தக்க படியே வாழ்க்கையில் கருமங்கள் வாய்த்திருக்கின்றன. அவற்றைச் செய்வதே அவர்க்குத் தருமமாம்.

சஞ்சயன் என்னும் வேதியரைத் திருதராட்டிரன் வஞ்சகமாய்த் தருமரிடம் அனுப்பினான். "அரச பதவி நிலையற்றது; பொருளாசை பொல்லாதது; உலக பாசங் களை ஒருவிப் பரம்பொருளையே கருதி மறுமை நோக் குடன் இருப்பதே இருமையும் பெருமையாம்; எழுமை யும் நன்மையாம்" என இன்னவாறு அவர் பேதமாய்ப் போதித்தார். இந்தப் போதனையால் பாண்டவர் மனம் திருந்தி அமைதியாயிருந்தால் தன்மக்கள் பகைவரின் பயமின்றிச் சுகமாய் வாழ்வார் என்று அந்தக் குருட்டு மன்னன் சூழ்ச்சியோடு குறித்து விட்டதை அவர் மருட்டி வந்து உரைத்து நின்றார். அந்த உரைகளைக் கேட்டதும் வீமன் நகைத்தான்; வீறோடு கூறினான்:

வீமன் விளம்பியது.

இடக்கண் ஆக வலக்கண் ஆக
இரண்டும் ஒக்கும் எனுமலே
பிடர்க்க ணேமதி யான கண்ணிலி
பெற்றி அல்லன பேசினான்;
கடற் பெரும்படை கூடி நாளை
அணிந்த வெய்ய களத்தில் நான்
அடற் கடுங்கதை யால்அடித்திடும்
அதிசயந்தனை ஐய கேள்! (1)

உவந்து நீமொழி தவம் அருந்தவம்
அல்ல; ஒன்னலர் உடல்உகும்

சிவந்த சோரியின் மூழ்கி மாழ்கு
சிரங்கள்போய் நடமாடும் அக்
கவந்த கானகம் மேவி யூடுறு
தீய வெவ்வினை களைவதே
தவந்தனில் தலையான வீடுறு
தவம் எமக்கிது சாலுமே. (2)

போர தாகிய பூமி சாலையின் லேலை சூழ்தரு பூமியின்
பார மான சுயோத னதியர் என்னும் நூறு பசுப்படுத்து .
ஊர மான தயாமனத்தொடு இராச சூய மகம்செயும்
வீர மாமுனி தன்னை வெங்களவேள்வி யும்புரி விப்பனே. (3)
(பாரதம், சஞ்சயன்)

இந்தக் கவிகளில் பொதிந்துள்ள கருத்துக்களைக் கண்ணூன்றிக் கவனியுங்கள். வீரவுணர்ச்சிகள் விவேக ஒளிகளோடு வீறுகொண்டு விளங்கி நிற்கின்றன. "கண்ணில்லான் கையாளாய் வந்து நீர் இங்கே ஞான உபதேசம் செய்கின்றீர்; நாங்கள் மானமும் ஞானமும் மதிப்பும் வீரமும் உடையவர்கள்; வேந்தர்க்கு உரியன என்று மேலோரும் நூலோரும் புகழ்ந்து போற்றி யுள்ள வைகளை நான் உறுதியாய் உவந்து போற்றிச் செய்வேன்; அந்தக் கருமமே எனக்குத் தருமம் தவம் தானம் வேள்வி. இந்த உண்மையை நீர் உணர்ந்து கொண்டு போய் அந்த அந்தகனுக்குச் சிந்தை தெளியச் சொல்லும்'' என்று சஞ்சயனிடம் வீமன் இங்ஙனம் வீர தீரமாய்ச் சொல்லி விடுத்துள்ளான்.

தாம் புகழ்ந்து போற்றி விழைந்து செய்யவேண்டிய கருமங்களை மாந்தராயினும் வேந்தராயினும் விரைந்து செய்துகொள்ள வேண்டும்; செய்யாது மறந்து விடின் வெய்ய துயரங்கள் விரிந்து நிறைந்துவிடும்.

உரிய கடமைகளைக் கருதிச் செய்பவரே யாண்டும் பெரிய திருவினராய் உயர்ந்து வருகின்றனர்; செய்யாமல் அயர்ந்தோ மறந்தோ நிற்பவர் இழிந்து தாழ்கின்றார். ஒருமுறை நழுவவிடின் அது எழுமையும் இழிவாம் என்று குறித்திருத்தலால் அந்தப் பிழையின் பீழைகள் இங்கே நன்கு தெரிய நின்றன.

பல உயிர்களையும் நலமாகப் பாதுகாக்கும் பொறுப்பு அரசனது கடமையாயுள்ளமையால் அவன் யாண்டும் நீண்ட எச்சரிக்கையுடன் கருமங்களைக் கருதி வரவேண்டும். மடி மறதி முதலிய குற்றங்கள் சிறிது படியினும் பெரிய கேடுகள் பெருகிவிடும் ஆதலால் பிழை யாதும் நுழையாமல் எவ்வழியும் நுழைபுலனாய் நோக்கிக் காப்பது அவனது கடன் என நேர்ந்தது. காவலன் என்னும் பெயர் அரசனுக்குச் சிறப்பாக மேவியுளது. பாதுகாப்பதில் வல்லவன் எவனோ அவனே நல்ல காவலன் ஆகின்றான். குற்றம் குறைகள் நேராமல் அற்றம் தீர்ப்பவனே சிறந்த கொற்றவன் ஆவான்.

செயிர்க்கண் நிகழாது செங்கோல் உயரி
மயிர்க்கண் முரசு முழங்க—உயிர்க்கெல்லாம்
நாவல் அகலிடத்து ஞாயி றனையனாய்க்
காவலன் சேறல் கடன். (புறப்பொருள் 8–17)

உலகிற்கு ஒளி செய்து வரும் சூரியனைப் போல் காலம் தவறாமல் கருதி நடப்பது அரசன் கடமையாம் என இது குறித்[illegible]து. கடன் என்று சுட்டிக் காட்டியது கருதியுணர [illegible]. புகழ்ந்தவை போற்றிச் செய்பவனே ஏற்ற கடன் தீர்ந்தவனாய் இசை மிகப் பெறுகிறான்.

செய்யவுரிய கருமத்தைச் செம்மையாய்ச் செய்பவனே சீர்மையாளனாய்ச் சிறந்து தேசுமிகுந்து வெற்றியும் புகழும் பெற்று விளங்குகின்றான்.

இவ்வுண்மையை விசயன் விளக்கி நின்றான்.

**சரிதம்.**

அரிய பெரிய போர் வீரனான விசயன் பாரதப்போர் மூண்டபொழுது போராட மூண்டு எழுந்தான். உயர்ந்த வெள்ளைக்குதிரைகள் நான்கு பூண்ட சிறந்த தேரில் வில்லோடு வீர கம்பீரமாய் ஏறினான். சாரதியாய் நேர்ந்த கண்ணன் தேரை வேகமா நடத்திப் போர் முகத்தில் நிறுத்தினான். எதிரே கடல்போல் பொங்கி நிற்கின்ற நால்வகைச் சேனைகளையும் பார்த்தன் நேரே பார்த்தான். முன் அணியில் முனைந்துள்ள உறவினர்

களைக் கண்டதும் உள்ளம் இரங்கினான். அந்தோ! இந்தக் கிளைஞர்களைக் கொல்லலாமா? இவரைக் கொன்று அரசை ஆள்வதைவிடத் துறவியாய்ப் போவதே நன்று என்று துணிந்தான். கையில் இருந்த வில்லைக் கீழே போட்டான்; தேர்த்தட்டில் சோர்ந்து அமர்ந்தான்.

உற்றாரை எல்லாம் உடன்கொன்று அரசாளப்
பெற்றாலும் வேண்டேன் பெருஞ்செல்வம்—சுற்றுழ்ந்த
வாட்டடக்கை வில்நெகிழ வாளா இருந்திட்டான்
தேர்த்தட்டின் மீதே திகைத்து. (பாரத வெண்பா)

போர் புரிய மூண்டு வந்தவன் நேர்மாறாய் இவ்வாறு இருந்ததைக் கண்டதும் கண்ணன் கடுத்து அறிவுறுத்தினான். "சமர்செய்ய நேர்ந்தவர் சுற்றத்தார் என்று கருதி நீ சோர்வுற்றது பெரிய குற்றம்; அரச தருமங்களின் மருமங்களை மறந்தாய்; பகைவரை அடுதலும் உரிமையை அடைதலும் மானவீரர்களின் கடமைகளாம்; கடமையைக் கருதாமை மடமையாம்; போர் புரியாமல் புறம் பெயர்ந்தால் பேடி பேதை கோழை என வையம் உன்னை வையும். பொருது வென்றால் பெரிய அரசனாய் இவ்வுலகில் நீ ஒளிமிகுந்து விளங்குவாய்; போரில் மாண்டால் வீர சுவர்க்கத்தை அடைந்து ஆண்டு வியனான இன்பங்களைப் பெறுவாய்; இருவகையிலும் பெருமையே; விரைந்து போர் செய்!" என்று போதித்தான். போர்முகத்தில் அருச்சுனனுக்குக் கண்ணன் போதித்த அரச தருமங்களும் ஆத்தும தத்துவங்களுமே பகவற் கீதை என்னும் நூலாய் வந்துள்ளன.

ஆவ தான அமர்தொடங் காய்எனில்
போவ தான புகழும் தருமமும்;
பாவம் ஆம்;பழி யாம்;இப் பழியினிற்
சாவ தானது வேதலை யல்லவோ? (1)

அன்றி யும்உனை அஞ்சினர் என்பரால்
நின்று இயைந்து நிலத்துமுன் நீசெய்த
வென்றி யும்பழி யாய்நிற்கும்; மேவலர்
ஒன்று இயம்பில்இன் னாங்கிதன் மேலுண்டோ? (2)

இன்று வாளமர் தன்னில் எதிர்ந்து நீ
பொன்றில் வானவர் போற்றவிண் காக்குவை;
வென்றி சேரிலிவ் வேந்தர் எலாந்தொழ
நின்று ஞாலம் அளிக்குவை நீயரோ. (3)

துற்ற இன்பமும் துன்பமும் தோல்வியும்
வெற்றி யும்மிழ வும்மிகு பேறுமென்று
உற்ற இன்னவைக்கு ஒத்த மனத்தனுய்க்
கொற்றவா! சமர் செய்! குற்றம் இல்லையால். (கீதை)

இன்னவாறு உறுதி நலன்களை உணர்த்திக் கண்ணன் தூண்டவே விசயன் மூண்டு போர் செய்தான். வெற்றியும் திருவும் பெற்ருன். பிறந்த குடி சிறந்த அரச திருவுடன் உயர்ந்து விளங்கியது. புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்; இகழ்ந்தார்க்கு இழிவாம் என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்ருன்.

**உற்ற கடமையை ஓர்ந்துசெய்; செய்யாயேல்**
**எற்றும் மடமை யிழிவு.**

ரியதை ஊக்கிச் செய்.

---

539. உள்ளி இரணியன் உய்ந்தகன்ருன் பின்புதுன்பம்
கொள்ளவில்லை என்னே குமரேசா—துள்ளி
இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. (கூ)

இ-ள்.

குமரேசா! இகழ்ந்து இழிந்தவர்களை எண்ணி ஏன் இரணியன் உய்ந்தான்? எனின், தம் மகிழ்ச்சியின் தாம் மைந்து உறும் போழ்து இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக என்க.

மமதை ஒழியும் வழி மதி தெளிய வந்தது.

தம் உவகைக் களிப்பில் தாம் வலிமிகும் பொழுது அதனல் முன்பு சோர்ந்து அழிந்தவர்களை அரசன் ஓர்ந்து உணர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும்.

தாம் என்றது ஈண்டு அரசரை.

இகழ்ச்சி = சோர்வு; மறதி.
உள்ளுக = உள்ளத்தே ஊன்றி உணருக.
மகிழ்ச்சி = மிக்க மனக்களிப்பு.
மைந்து = மயக்கம்; வன்மை,
போழ்து = உரிய சமையம்.

பொழுது என்பது இவ்வாறு நீண்டு வந்துள்ளது. இந்த நீட்டம் அவரது களிப்பின் நீட்சியைக் காட்டியுளது. கருமங்களைக் கருதிச் செய்பவரே எவ்வழியும் பெருமை யுறுகின்றனர். கருதாதவர் சிறுமை யடைந்து சீரழிகின்றனர்.

மடி, சோம்பல், மந்தம், தாமதம், மறதி, சோர்வு, மயக்கம் களிப்பு என்பன காரியக் கேடான தீமைகள். இவை அறிவு நலம் குன்றிய கீழ்மக்களிடம் தோன்றின் அவ்வளவு கேடுகள் உளவாகா; பெரிய நிலைகளில் தலைமையா யுள்ள அரசர்களிடம் நேரின் பெருங் கேடுகளாம். பிழையான பழிகளாம்.

மன்னனது உயர்வான நினைவு நாட்டுக்கு நன்மையாம்; அயர்வான மறதி யாண்டும் நீண்ட கேடாய் நெடிய துயர்களை விளைத்துவிடும். செய்யவுரிய கடமையைச் செய்யாது இகழ்ந்தவர்க்கு எழுமையும் இன்பம் இல்லை என்று முன்பு கூறினர்; அவ்வாறு இகழ்ச்சியால் கெட்டவர்களை எண்ணி உணர்ந்தாவது விரைந்து உய்ய வேண்டும் என இதில் உணர்த்தி யுள்ளார்.

இகழ்ச்சி யிற்கெடு வார்களை எண்ணுக !
மகிழ்ச்சி யின்மனம் மைந்துறும் போழ்துளனப்
புகழ்ச்சி நூலுட் புகன்றனர்: பூவினுள்
திகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மன்னனே !

(சூளாமணி; சீய: 56)

இந்தக் குறள் முழுவதையும் தழுவித் தோலா மொழித் தேவர் இவ்வாறு அரசனுக்கு நீதி கூறியிருக்கிறார். **புகழ்ச்சி நூலுள் புகன்றனர்** என்று பொய்யாமொழியையும், திருவள்ளுவ தேவரையும் அவர் இதில் குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்கவுரியது.

பெருமிதம் பெரிய செல்வம்
பேரெழில் பெரிய இன்பம்
தருமிகு களிப்பின் மூழ்கித்
தங்குறின் ஏம கண்டா!
வருமிகு பொச்சாப்பு; அந்த
மறவிபால் நின்னைக் காத்துப்
பொருமிகு பகையை வெல்லும்
பொருள்எலாம் இழப்ப தாகும். (1)

உற்றிடும் ஆற்றல் மூன்றும்,
உபாயங்கள் நான்கும், நன்மை
பற்றிய தொழில்கள் ஐந்தும்,
பண்புறு குணங்கள் ஆறும்,
மற்றைய அனைத்தும் கேடாம்;
வளர்பிறப்பு ஏழன் காறும்
பற்றிடு நன்மை யின்றாம்
பாழ்த்த பொச் சாப்புச் சாரின். (2)

நெகிழ்ச்சியொன் றின்றிச் செய்ய
நி[illegible] காரியத்தில் சென்று
புகழ்ச்[illegible] முயற்சி செய்யின்
பொருள்பய வாமை யில்லை;
இகழ்ச்சியில் கெட்டார் தம்மை
எண்ணுதல் செய்வை யாயின்
மகிழ்ச்சியின் மைந்து றுத
வண்மைவந் தடுக்கும் மைந்தா! (3)

(விநாயக புராணம்)

**பொச்சாவாமை** என்னும் இந்த அதிகாரத்தின் கருத்துக்களைத் தொகுத்துக் கச்சியப்ப முனிவர் இவ்வாறு பாடியிருக்கிறார். தன் மகனுக்கு ஒரு மன்னன் அரசநீதி போதிக்கும் முறையில் இவை சுவையாயீண்டு வந்துள்ளன. பொருள் நிலைகளைக் கருதிக் கொள்ளுக.

செல்வக் களிப்பால் மதிமயங்கித் தம் செயல் மறந்து கெட்டவர்களை ஒருவன் எண்ணினால் அந்தக் கேடு தனக்கும் வந்து விடுமே! என்று அச்சம் தோன்றும்; அது தோன்ற வீண் மகிழ்ச்சி நீங்கும்; அது நீங்க அமைதி ஓங்கும்; அறிவு தெளிவாம்; மறவி மருவாது;

தன் கடமைகளை யாண்டும் கவனமாய்க் கருதிச்செய்ய நேர்வன். மறதி நேராமல் மதியுடன் உயர்தற்கு நல்ல உபாயத்தை இதில் நயமாக் காட்டி யிருக்கிருர்.

வழி நடப்பவர் பராமுகமாயினல் விழியிருந்தாலும் குழியில் வீழ்வர்; அதுபோல் அரசை நடாத்துபவர் மறதியாளராயின் மதியிருந்தாலும் அழி துயரில்ஆழ்வர்.

முன்னே ஒருவன் நடந்து சென்ருன்; பிழையாய்த் தவறி விழுந்தான்; பின்னே வந்தவன் அதைக் கண்டான்; கருதி யுணர்ந்தான்; அந்தக் கேடு நேராமல் தெளிந்து ஒதுங்கிப் போனுன். இந்த நிகழ்ச்சியும் காட்சியும் இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக என்பதில் உணர வந்தன.

மமதைக் களிப்பால் மனிதன் மதிகேடன் ஆகிருன்; ஆகவே அக்கேடுகள் அதிவேகமாய் வந்து அவனை அடைகின்றன. அல்லல் உறுகின்ருன்.

வந்தடர்த்தொர் சேதி ராசன் மாலை யன்று வைததும்
அந்தவத் துவைச்சுயோதன் ஆதியோர் இகழ்ந்ததும்
நந்தியைப் பழித்திலங்கை நாயகன் நவின்றதும்
முந்துசத்த முனிவர் தம்மை நகுடனன்றுதைந்ததும். (1)

அன்று வேலை எற்றிமாலை அடுசமர்க்கு அழைத்து நேர்
கன்றுபோர் இரந்துகாவ கண்டன்வெற் பலைத்துமேல்
சென்று வாலி தன்னொடும் செருத்திறம் புரிந்து சீர்
துன்றுகாயம் அன்றுமாய்தல் துந்துமிக்கு வந்ததும். (2)

பின்னு மின்ன தன்மை செய்த பேரனந்த கோடியால்
மன்னு மிந்த மண்ணகத்தும் வானகத்தும் அவையெலாம்
என்னையன்றி யாவரே இயற்றினேர்? இதன்றிஎன்
பன்னி என்னும் மறதிமேன்மை எவருணர்ந்து பகர்வரே.

(மெய்ஞ்ஞான விளக்கம்)

மமதையாலும் மறதியாலும் கெட்டவர்களை இவை சுட்டிக் காட்டியுள்ளன. சிசுபாலன் நகுடன் மது கைடவர் துந்துமி வலன் முதலானவர் இகழ்ச்சியாலும் இளி களிப்பாலும் இழிந்து கழிந்து அழிந்துள்ளனர்.

ஆற்றலின் களிப்பால் இரணியன் கெட்டான்.
வீரக் களிப்பால் சூரபன்மன் கெட்டான்.
காமக் களிப்பால் இராவணன் கெட்டான்.
மமதைக் களிப்பால் துரியோதனன் கெட்டான்.

இன்னவாறு மகிழ்ச்சியில் மைந்துற்று இகழ்ச்சியில் கெட்டவர் பலர். செருக்கும் களிப்பும் எவரையும் சீரழித்து இழித்துக் கெடுத்து விடுகின்றன.

இக்காலத்து இவ்வுடம்பு செல்லும் வகையினல்
பொச்சாவாப் போற்றித்தாம் நோற்பாரை—மெச்சாது
அலந்துதம் வாய்வந்த கூறும் அவரின்
விலங்குகள் நல்ல மிக. (அறநெறி 122)

உடல் வாழ்வு துயரம் என்று உணர்ந்து உயிர் உயர்கதியுறும்படி மறவாமல் தவம் புரிபவர் மகான்கள்; அவருடைய அருமை பெருமைகளை அறிந்து போற்ருமல் இகழ்ந்து தூற்றுபவர் இழிந்த மிருகங்களே என இது குறித்துளது. பொச்சாவா என்னும் சொல் இதில் குறித்திருக்கும் பொருளைக் கூர்ந்து அறிக.

களித்தவர் கெடுவர் என்பதை உள்ளி உணர்ந்து உள்ளம் தெளிந்தவர் எள்ளல் புரியாது இனிதுவாழ்வர்.

இவ்வுண்மை இரணியன்பால் தெரிய வந்தது.

## சரிதம்.

இவன் சூரபன்பனுடைய இளைய புதல்வன். பானுகோபனுக்கும், அக்கினிமுகனுக்கும் பின்பு பிறந்த தம்பி. அன்பு அறிவு அமைதி முதலிய உயர் நலன்கள் இவனிடம் இயல்பாய் அமைந்திருந்தன. தனது சிறிய தந்தையாகிய தாரகன் முருகவேளால் மாண்டு மடிந்ததை அறிந்ததும் இவனுக்கு நீண்ட தெளிவு பிறந்தது. செருக்கும் தீமையும் எவரையும் அழித்து விடும் என்று தெளிந்துகொண்டபின் யாண்டும் இவன் பணிவுடையனய் அடங்கி யிருந்தான். தந்தை முருகப்பெருமானேடு போர்புரிய மூண்டபோது தடுத்து அவனுக்கு உறுதி நலன்களை உரிமையுடன் உரைத்தான். இவனுடைய

உரைகள் அறிவு நலன்கள் சுரந்து அரிய பல உண்மைகள் நிறைந்து உறுதி நலன்களை உணர்த்தி வந்தன.

இரணியன் இயம்பியது.

நேரலர் புரமூன் றட்ட நிருமலக் கடவுள் மைந்தன்
ஆரினும் வலியோன் என்கை அறைந்திட வேண்டுங் கொல்லோ?
பாரினை அளந்தோன் உய்த்த பரிதியை அணியாக் கொண்ட
தாரகன் தன்னை வெற்பைத் தடிந்தது சான்றே யன்றோ? (1)

அறுமுகத்து ஒருவன் ஆகும் அமலனை அரன்பால் வந்த
சிறுவன் என்று இகழல் மன்னு! செய்கையால் பெரியன் கண்டாய்.
இறுதிசேர் கற்பம் ஒன்றின் ஈறிலா தவன்பால் தோன்றும்
முறுவலின் அழலும் அன்றோ உலகெலாம் முடிப்ப தம்மா! (2)

வாசவன் குறையும் அந்தண் மலரயன் குறையும் மற்றைக்
கேசவன் குறையும் நீக்கிக் கேடிலா வெறுக்கை நல்க
ஆசிலோர் குழவி போலாய் அறுமுகம் கொண்டான் எண்தோள்
ஈசனே என்ப தல்லால் பிறிதொன்றை இசைக்க லாமோ? (3)

கங்கைதன் புதல்வன் என்றும் கார்த்திகை மைந்தன் என்றும்
செங்கண்மால் மருகன் என்றும் சேனையின் செல்வன் என்றும்
பங்கயன் முதலோர் தேருப் பரஞ்சுடர் முதல்வன் தன்னை
இங்கிவை பலவும் சொல்வது ஏழைமைப் பால தன்றோ? (4)

பன்னிரு தடந்தோள் வள்ளல் பரிதியம் பகைவன் சூழ்வால்
தன்னுறு படைஞர் மாய்ந்த தன்மையை வினவித் தாழாது
அன்னவர் மீளும் ஆற்றல் அளக்கர்மேல் விடுத்த வேலை
இந்நகர் தன்னில் தூண்டின் யாரிவண் இருத்தற் பாலர்? (5)

தாரகற் செற்ற தென்றால் தடவரை பொடித்தது என்றால்
வார்புனல் கடலுள் உய்த்த வலியரை மீட்டது என்றால்
கூருடைத் தனிவேல் போற்றிக் குமரன்தாள் பணிவதல்லால்
போரினைப் புரிதும் என்கை புலமையோர் கடன தாமோ? ()

பணிந்துழி அமல மூர்த்தி பலவும்நாம் புரிந்த தீமை
தணிந்தருள் செய்து தானும் தணப்பிலா வரங்கள் நல்கி
அணிந்ததன் தானை யோடும் அகலுமால் உய்தும் யாமும்
துணிந்திது புகன்றேன் ஈதே துணிவென மதலை சொற்றான்.
(கந்த புராணம், இரணியன்)

இந்தக் கவிகளில் மருவியுள்ள கருத்துக்களையும் குறிப்புகளையும் கருதி உணர்ந்து கொள்ளவேண்டும். இவற்ருல் இவனுடைய மனநலமும் மதிநிலையும் தெரிய வந்துள்ளன. செல்வச் செருக்கால் களித்து இகழ்ச்சி புரிய நேரின் இழிவாய் அழியவே நேரும் எனத் தன் தந்தை சிந்தை தெளிந்து உய்ய இவன் உணர்த்தியுள்ளான். மகிழ்ச்சியில் மைந்துருமல் மனத் தெளிவுடன் இவன் வாழ்ந்திருந்ததை இதில் அறிந்து கொள்கிருேம்.

**கள்ளின் மயல்போல் களிப்பும் பழிதுயராம்;**
**உள்ளி ஒழிக வுடன்.**

மகிழ்ச்சியில் மயங்காதே.

---

**540.** உள்ளியவான் கங்கையையே உள்ளிப் பகீரதன்முன்
கொள்ளநின்ருன் என்னே குமரேசா—தள்ளாமல்
உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின். (ம)

இ-ள்.

குமரேசா! தான் பெற விரும்பிய கங்கையையே கருதி ஏன் பகீரதன் உறுதியாய் நின்ருன்? எனின், தான் உள்ளியது மற்றும் உள்ளப்பெறின் உள்ளியது எய்தல் எளிது மன் என்க.

எண்ணியதை எளிதே எய்தும் வழி தெரிய வந்தது.

தான் கருதிய பொருளை ஓயாது கருதி வரப்பெறின் அந்தப் பொருளை அவன் எளிதே உறுதியாப் பெறலாம்.

பெறின் என்றது, அவ்வாறு உள்ளுதல் அரிது என்பது தெரிய நின்றது. விரும்பியதை எண்ணி வரின் யாதும் எளிதே நண்ணிவரும்.

உள்ளியது=உள்ளே எண்ணியது.

எய்தல்=வெளியே அடைவது.

மற்றும்=மறுபடியும். முதலில் உள்ளியதுபோல் பின்னரும் இடையருது அதைக் கருதிவருவோரே உரி

மையாய் அடைய நேர்வர். கருதாதவர் எதையும் எளிதே அடைய முடியாது என்பது மன் என்னும் சொல்லால் உணர வந்தது. வெளியே தெளிவாய்த் தெரியாமல் ஒழிந்துள்ள பொருளை உணர்த்தியுள்ளமையால் இதனை ஒழியிசை என்பது இலக்கண வழக்கு.

கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவிஎன்று
அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே. (தொல்காப்பியம்)

மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபே றாகும். (நன்னூல்)

இந்த இயல் விதிகள் ஈண்டு எண்ண உரியன.

மறவியால் கேடுவரும் என்றார் முன்பு; இதில், மறவாதவர் அரிய பல ஆக்கங்களைப் பெறுவர் என்கின்றார்.

பொச்சாவாமையால் விளைந்துவரும் ஊதியங்களை உச்சமாக நன்கு உணர்த்தியுள்ளார். தாம் விரும்பியதை விரும்பியபடியே அடைதல் யார்க்கும் அரிது; அந்த அரிய பொருள் எளிதாய் விரும்பி வருதற்குரிய அதிசய மந்திரம் இங்கே சிந்தை தெளிய வந்துள்ளது. அந்த மந்திரம் என்ன? மறதியுறாது நினைந்ததையே நினைந்து முனைந்து முயன்று வருதல்.

தன் உள்ளத்தில் **பொச்சாப்பு** ஒழியின் உலகத்தில் அவன் பெரிய பாக்கியவான்; அரிய சித்தன். எண்ணியதை எண்ணியபடியே எய்துகின்ற புண்ணிய யோகி.

கருதியதை யாதும் மறவாமல் கருதி முயன்று வரின் அந்தப் பொருள் அவனை உரிமையாக நாடி ஓடிவரும். மறவாதவனே இறவாதவனாயின்புறுகிறான்.

யாரும் காண முடியாத அரிய பரம் பொருளும், உள்ளியபடியே ஓயாமல் உள்ளி உள்ளி உள்ளம் உருகி வரின் எளிதே விரைந்து நேரே வந்து அளிபுரிந்தருளும்.

வலப்பாகம் செழும்பவளச் சோதி என்ன
வாணீலச் சோதிஎன்ன மற்றைப் பாகம்
கலப்பான திருமேனி அணிந்த நீற்றால்
கதிர்முத்தின் சோதி என மேனை யீன்ற

குலப்பாவை யுடன்கயிலைக் குன்றில் வாழ்விற்
குன்றுடையோன் திருக்கோலம் குறிப்பால் உன்னிப்
புலப்பாடு புறம்பொசிய மார்பும் தோளும்
பூரித்தான் உடல்புளகம் பாரித் தானே. (பாரதம்)

இவ்வாறு ஈசனையே எண்ணி எண்ணி உருகி நின்ற விசயன் இறைவனை எளிதே எய்தி இன்பம் மிகப் பெற்றான். நினைவின் நிலைமை நெடிய மகிமையது.

உள்ளம் ஒருமையாய் அமைதியடைந்த பொழுது ஆன்ம சத்தி ஒளி வீசி வருகிறது. வரவே அதிசய ஆற்றல் பெருகி எழுகிறது; அற்புத நிலை கெழுமி மிளிர்கிறது; கருதிய எதுவும் கைவரப் பெறுகிறது.

உள்ளிய எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (குறள் 309)

உள்ளத்தின் நலனை முன்னம் இவ்வாறு குறித்திருக்கிறார். குறிப்பைக் கூர்ந்து சிந்திக்க வேண்டும்.

**உள்ளியது எய்தல் எளிது** என இங்கே உரைத்துள்ளார். வெகுளியும் பொச்சாப்பும் தீயன. அவை ஒழியின் உள்ளம் தூய்மையாய் ஒளி மிகப் பெறும். பெறவே எல்லா நன்மைகளும் எளிதே உளவாம் என்பது இவற்றால் தெளிய வந்தது.

**சோர்வு வெகுளியின் தீதே** என இந்த அதிகாரத்தைத் தொடங்கியிருத்தலையும் ஊன்று ஓர்ந்து சிந்திக்க வேண்டும். உள்ளப் புலைகளை ஒழித்து ஒழுகுக.

வெய்ய கோபமும் மையல் மறதியும் இன்றி வேந்தன் சாந்த நீர்மை தோய்ந்து வினையாண்மைகளில் யாண்டும் உறுதி பூண்டு ஓங்கிவரின் அந்த ஆட்சி எவ்வழியும் மாட்சியாய் நீண்டு வளம் சுரந்து வரும்.

மாந்தர் அடைகிற எல்லா மேன்மைகளுக்கும் மனமே மூலகாரணமாயுள்ளது. அது மறதியின்றிக் கருதியதையே கருதிவரின் அரிய பெரிய ஞானயோகமாகிறது. ஆகவே அதிசய நலன்களை எல்லாம் அஃது எளிதே எய்தி இன்ப மிகப் பெறுகிறது.

அசைவிலா உட்போதத்தால் அனைத்தினும் உளத்தைவாங்கி
இசைவெசெய் திச்சை யின்றி யிளைப்பறப் புந்தி யாறி
விசையிலா நெஞ்சால் நெஞ்சை விண்என விமலம் ஆக்கி
வசையறு மவுனி ஏகன் சாந்தமே வடிவ மாகி. (1)

சமனுமாய் இதயம் விண்போல் சாலவும் தெளிந்து நிற்பாய்
நிமலமாம் புந்தி திண்மை நிறைவுற்று மூடம் இன்றி
அமரவந் தனபின் செல்லும் அரசனும் பகீர தன்போல்
குமரனே! அரிய தேனும் குறைவறப் பெறலாம் என்றான்.
(ஞானவாசிட்டம்)

உள்ளத்தைப் புனிதமாக்கி ஒரு முகப்படுத்தி உள்ளியதையே உள்ளி ஊக்கி நின்றதால் அரிய ஆகாய கங்கையும் வெள்ளமாய்ப் பெருகி விரைந்து பகீரதன் எதிரே நேரே வந்து பாய்ந்தது; மனம் தெளிந்து நேர்மையானல் அரியதையும் எளிதே பெறலாம் என்று வசிட்ட முனிவர் இராமபிரானுக்கு இவ்வாறு கூறியிருக்கிறார்.

மறப்பெனும் பகைவனை மதியின் ஆற்றலால்
இறப்புறச் செய்தவன் எய்த எண்ணிய
சிறப்புயர் பொருளுடன் தேசும் இன்பமும்
அறப்பெருந் திருவையும் அடைந்து வாழ்வனால்.

உள்ளம் திருந்தியபோது உளவாகும் பலன்களையும் நலன்களையும் இதில் உணர்ந்து கொள்கின்றோம்.

எண்ணியதையே எண்ணி முயல்பவன் அரிய பெரிய பொருளையும் நேரே உரிமையாய் அடைகிறான்.

இவ்வுண்மை பகீரதன்பால் தெரிய வந்தது.

**சரிதம்.**

சூரியகுல மன்னனாகிய இவன் தன் முன்னோராகிய சகரரை உய்விக்கும் பொருட்டுத் தெய்வ கங்கையை எய்த விரும்பினான். அரசை அமைச்சரிடம் ஒப்பித்து விட்டு இமயச்சாரலை யடைந்து கங்கையை எண்ணிக் கடுந்தவம் புரிந்தான். ஆண்டுகள் பல கழிந்தும் யாதும் அயராமல் ஏதும் தளராமல் கருதியதையே கருதி உறுதியுடன் இவன் ஊக்கி நின்றான். முடிவில் கங்கா தேவி தோன்றினாள். கண்ணுதல் கடவுளை முன்னமே

வேண்டியிருந்தபடியால் அப்பெருமான் கங்கைப்பெருக்கைத் தன் சடையில் அடக்கிக்கொண்டு இவ்வேந்தனுக்கு வேண்டிய அளவே வெளியே விட்டான். அவ்வெள்ளம் துள்ளிப் பாய்ந்து வியனுலகில் வந்தது; அதனுல் சகரர் யாவரும் உயர்கதி யடைந்தனர். தீது தீர்ந்து தனது மூதாதையர் உய்திபெற இவன் செய்த அருஞ்செயலையும் அதிசயப் பேற்றையும் அறிந்து வையமும் வானமும் வியந்து நோக்கி உவந்து புகழ்ந்தன.

நிரயம் முற்றிய சகரர்கள் நெடுங்கதி செல்ல
விரைமலர்ப் பொழிந்து ஆர்த்தன விண்ணவர் குழாங்கள்;
முரசம் முற்றிய பல்லியம் முறை முறை முழங்க
அரசன் அப்பொழுதணிமதில் அயோத்தி மீண்டடைந்தான்.
(இராமா-1-9-59.)

இந்த மன்னனுடைய மனவுறுதியும் மதிமாண்பும் வினையாண்மையும் மனித சமுதாயத்துக்குப் புனித போதனைகளாய்ப் பொங்கி வந்துள்ளன. எண்ணியதையே எண்ணி மறதியின்றி ஏக நோக்குடன் முயன்று நின்றமையால் விண்ணுறு கங்கையையும் கண்ணெதிரே உரிமையுடன் கைவரப் பெற்றான். **உள்ளியது உள்ளப் பெறின் உள்ளியது எய்தல் எளிது** என்பதை உலகம் அறிய இவன் தெளிவாக்கி நின்றான்.

பொய்யாத மொழியுமயல் செய்யாத செயலும்வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமும்உட் பிரியாத சாந்தமும்
புந்திதளராத நிலையும்
எய்யாத வாழ்வும்வே றெண்ணாத நிறைவும்நினை
என்றும் மறவாத நெறியும்
இறவாத தகவுமேற் பிறவாத கதியும் இவ்
ஏழையேற் கருள்செய் கண்டாய்!
கொய்யாது குவியாது குமையாது மணம்வீசும்
கோமளத் தெய்வ மலரே!
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணிவிளக்கே!

ஐயா னனங்கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே! (அருட்பா)

இறைவியை நோக்கி இராமலிங்க அடிகள் இவ்வாறு வாய்மை முதலிய தூய்மைகளை வேண்டியிருக்கிருர். **நின்னை மறவாத நெறியை அருள்** என்று துதித்துள்ளார்: அதனுல் பிறவாத பேரின்பம் வருதல் கருதி.

தன்உயிர் தன்னை முன்னுற அறிந்தான்
தத்துவ ஞானியாய் இங்கே
மன்னிய உயிர்கள் எங்கணும் பரமன்
மருவியுள் இருப்பதைத் தெளிந்தான்;
பின்னிய பிறவித் துயர்எலாம் தீர்ந்து
பேரின்ப நிலையினைப் பெற்ருன்;
பன்னிய இந்த உணர்வொளி இழந்தான்
படுதுயர் இருளிலே படிந்தான்.

மறந்து விடாமல் இதன் பொருளை நினைந்து தெளிக.

**நெஞ்சம் கருதியதை நேரே பெறலாகும்**
**நெஞ்சம் மறவா தெனின்.**

எண்ணியதை எய்தி உயர்க.

---

இந்த அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

1 கொடிய கோபத்தினும் மறவி கொடியது.
2 பொச்சாப்பு புகழைக் கொல்லும்.
3 அது பழியை விளைக்கும்.
4 நன்மையை நாசப் படுத்தும்.
5 புன்மையாய்ப் புலம்பச் செய்யும்.
6 இழுக்காமை எவ்வழியும் நல்லது.
7 அதனுல் அரிய பலன்கள் உளவாம்.
8 எழுமையும இனிமை யாம்.
9 எவ்வழியும் மேன்மை யாம்.
10 உள்ளியதையே உள்ளிவரின் உரியதை எய்தலாம்.

**54-வது பொச்சாவாமை முற்றிற்று.**

# ஐம்பத்தைந்தாவது அதிகாரம்

## செங்கோன்மை.

அஃதாவது அரசன் செம்மையாய் நீதி புரியும் நீர்மை. ஒத்த பொருள்களை யாதும் வழுவாமல் சரியாக நிறுத்துக் காட்டுவது துலாக்கோல் என வந்தது. யாதும் கோடாமல் எவ்வழியும் மாருமல் யாரிடமும் நேர்மையாய் நீதிமுறை செய்யும் சீர்மை **செங்கோல்** என நேர்ந்தது. செம்மையும் செவ்வியும் கோனின் நீர்மைகள்.

இவ்வாறு யாண்டும் செவ்வையாய் முறை செய்து அருளுவேன் என்பதற்கு அடையாளமாகச் செவ்விய கோல் ஒன்றை வேந்தர் ஏந்தி நிற்பது மரபாய் மருவியுள்ளது. மறவி யின்றிக் கண்ணும் கருத்துமாய்க் கடமையைக் கருதி வருகிற காவலனுக்கே செங்கோல் முறைமை உரிமையாக இனிது அமையும் ஆதலால் பொச்சாவாமையின் பின் இது வைக்கப்பட்டது. அதிகார அமைதியை அதி நுட்பமாய் ஆய்ந்து கொள்ளுக.

**இறையின் முறை.**

541 காதற் புதல்வரெனக் கண்ணேடா தேன்ககந்தன்
கோதறமுன் கொன்ருன் குமரேசா—தீதறவே
ஓர்ந்துகண் ணேடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. (க)

இ-ள்.

குமரேசா! தன் புதல்வரிடத்தும் கண்ணேடாமல் ககந்தன் ஏன் அவரைக் கடிந்து நீதிமுறை புரிந்தான்? எனின், ஓர்ந்து கண் ஓடாது இறை புரிந்து யார் மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை என்க.

இறையும் முறையும் தெரிய வந்தன.

எதையும் ஆராய்ந்து யாதும் வழுவாமல் உறுதியுடன் நீதிமுறையை எவரிடத்தும் தவருமல் தெளிந்து செய்வதே அரசனது கடமையாம்.

செங்கோல் வேந்தன் மாந்தரிடம் தேர்ந்து தெளிந்து செய்யவுரிய சீர்மை நீர்மைகளை இதில் கூர்மையாய்

ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். உரிமைகளைச் செய்து வரும் அளவே பெருமைகள் பெருகி வருகின்றன.

ஓர்தல், கண்ணோடாமை, இறைபுரிதல், தேர்தல், செய்தல்கள் அரச காரியங்களாய்த் தெரிய வந்தன.

ஓர்ந்து = கூர்ந்து ஆராய்ந்து.

உள்ளம் ஒரு முகமாய்க் குவிந்து நுனித்து நோக்கி உண்மைகளைத் தெளிவாக உணர்ந்து கொள்வது ஓர்ந்து என வந்தது. எல்லா மேன்மைகளுக்கும் மூலகாரணமா யுள்ளமையால் இது முதன்மையாய் நின்றது.

நாட்டில் நிகழுகின்ற நன்மை தீமைகளையும், குற்றம் குறைகளையும் நாளும் நாடி ஆராய்ந்து வருவது மன்னனது தலைமையான கடமை ஆதலால் அந் நிலைமை தெரிய அதனை முதலில் நிறுத்தினர். ஓர்ந்து வரும் அளவே அரசன் உயர்ந்து ஒளிமிகுந்து வருகிறான்.

கண்ணோடாது = இரக்கம் காட்டாமல்.

பிறருடைய துயரங்களைக் கண்டபோது உள்ளம் இரங்கி அருளுவது **கண்ணோட்டம்** என வந்தது. கண் ஓடிய வழியே பெருகி வருகிற அரிய கருணை இவ்வாறு செவ்விய பெயரைப் பெற்றது. இந்த அருள் நீர்மை பெரு மேன்மை யுடையது. ஆட்சி புரியும் அரசர்க்கு இது மாட்சிமையாய் மருவி யுள்ளது.

மண்ணோ டியைந்த மரத்தனையர்; கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர். (குறள் 576)

அரசன் கண்ணோடி யருள வேண்டும்; அவ்வாறு அருளான் ஆயின் அவன் மண்ணோடு மருவிய ஒரு மரமே என இன்னவாறு இகழ்ந்துள்ளார். இங்கே கண்ணோடாதே என்று குறித்திருக்கிறார். காரணம் என்ன? குறிப்புகள் கூர்ந்து ஓர்ந்து சிந்திக்க வுரியன.

களவு கொலை முதலிய கொடிய தீமைகளைச் செய்தவரை அரசன் கடுமையாய்த் தண்டிக்க வேண்டும். அவரிடம் இரக்கம் காட்டலாகாது; காட்டினால் தீயவர் செருக்கி வளர நேர்வர்; நாடு நைந்து கேடுறும். நீதி

முறைக்குத் தீது நேராதபடி கண்ணேடி அருளுவதே கண்ணியமான கண்ணேட்டமாம்.

கருமம் சிதையாமல் கண்ணேட வல்லார்க்கு
உரிமை யுடைத்திவ் வுலகு. (குறள், 578)

காரியக் கேடு நேராமல் கண்ணேடி வருபவர் சீரிய ஆட்சியாளராய்ச் சிறந்து வருகிருர். மக்கள் யாண்டும் தக்கபடி வாழ்ந்துவரச் செம்மையாய்ச் சூழ்ந்து எங்கும் நன்மை செய்வதே செங்கோன்மையாம்.

இறை புரிந்து=அரசுக்கு உரிய நீதியைச் செய்து.

முறை=நெறி; ஒழுங்கு; கடமை.

எய்திய குற்றத் தோர்கள் யாவரா யினும்கண் ணேடாது
ஐதென நாடி நீதி அறந்தலை பிழையாத் தண்டம்
செய்தலே செங்கோலாகும்;செய்யகோல்இன் றேல்என்னும்?
உய்திசெய் மழையால் மக்கள் உறுபயன் உற்ற போதும்.
(விநாயகபுராணம்)

இந்தக் குறளுக்கு ஒரு விரிவுரைபோல் இது பெருகி வந்துளது. கண்ணேடாது யார் மாட்டும் நேர்மையாய் நீதி செய்தலே சீர்மையான செங்கோலாகும் என்னும் இது இங்கே சிந்திக்க வுரியது.

எங்கண் அணையர் எனக்கருதின் ஏதமால்;
தங்கண்ணர் ஏனும் தகவில கண்டக்கால்
வன்கண்ணன் ஆகி ஒறுக்க; ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான் அரசு. (பழமொழி 322)

கண் அணையர் ஏனும் பிழை செய்தால் அவரைக் கடுத்து ஒறுத்து அடக்க வேண்டும்; அவர் பால் கண் ணேட்டம் காட்ட லாகாது; மென்கண்ணனுய் இரங்க நேரின் அவன் அரசாளத் தகுதி யற்றவன் என்று முன்துறையரையர் இங்ஙனம் குறித்திருக்கிருர்.

நல்லவரை நன்கு ஆதரிப்பதும், தீயவரை எங்கும் ஒறுத்து அடக்குவதும் செங்கோல் வேந்தன் செயல்களாம். அல்லவை நீக்கி நல்லவை ஆக்கி வரும் அளவே அரசுரிமை சிறந்ததாய் அமைந்து வருகிறது.

எரியும் ஆணையால், குளிரும் ஈகையால்,
பெரியன் மாண்பினால்; சிறியன் அன்பினால்;
அரியன் வேந்தர்கட்கு, எளியன் மாந்தர்கட்கு,
உரியன் ஓங்குதற்கு, ஓடை யானையான். (சூளாமணி)

சிறந்த அரசனுடைய நீர்மை சீர்மைகளை இது வரைந்து காட்டியுள்ளது. பொருள் நிலைகளைக் கூர்ந்து நோக்கி வேந்தனை ஓர்ந்து உணர்ந்து கொள்ளுக.

மன்னுயிர் அனைத்தும் தன்னுயிர் என்ன
மகிழ்வொடு தாங்கி, யாரேனும்
இன்னலுற் றயர்ந்தோம் எனக்கலுழ்ந் திடில்தன்
இருவிழி நீரினை யுகுப்பான்;
அன்னவெந் துயரை நீக்குமுன் தான்ஒன்று
அயின்றிடான்; துயின்றிடான்; எவரும்
நன்னகர் எங்கும் உளன்எனப் பகர
நாடொறும் இயங்குவோன் கோனே. (1)

காதுஇறை வனுக்குக் கண்என லால்மெய்
காண்குறுன் எனுமொழி மாற்றி
வாதிகள் சாட்சி சாதகம் எல்லாம்
வகைவகை இனிதுகேட்டு அமைந்த
மேதினிக் கிழமை நீக்கிடும் தன்மை
விளையினும் நடுவின் நீங்காது
பாதியா அணுவும் பகுந்துதீர்ப் பதுவே
பார்த்திபன் கடமையா மன்றே. (நீதிநூல்)

செங்கோல் மன்னனுடைய சிறந்த சீர்மைகளையும் உயர்ந்த நீர்மைகளையும் செயல் இயல்களையும் இவை தெளிவா விளக்கியுள்ளன. பொருள் நிலைகளையும் குறிப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும்.

யாதோர் இடையூறுமின்றி எவ்வழியும் குடிகள் இனிது வாழ்ந்து வர ஓர்ந்து முறை புரிந்து வருபவனே முடியுடை வேந்தனாய் முதன்மை பெற்று விளங்குவான். தரும நீதிகளைத் தவறுமல் செய்பவன் இருமையும் இசைபெற்று நிற்கின்றான்.

செய்வஃதே=செய்கின்ற அந்த நீதி முறையே. ஏகாரம் செங்கோல் முறையை வலியுறுத்தி நின்றது.

செய்குவதே எனவும் பாடம். முறை தவறாமல் நீதி செய்து வருபவனே நிறைவான இறைவன் ஆவான்.

“சினனே காமம் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக வுடைமை
தெறல்கடு மையொடு பிறவுமிவ் வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்;
தீதுசேண் இகந்து நன்றுமிகப் புரிந்து,
கடலும் கானமும் பலபயம் உதவப்
பிறர்பிறர் நலியாது, வேற்றுப்பொருள் வெஃகாது,
மையில் அறிவினர் செவ்விதின் நடந்துதம்
அமர் துணைப் பிரியாது பாத்துண்டு மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய
ஊழி யுய்த்த உரவோர் உம்பல்” (பதிற்றுப்பத்து 22)

காமம் கோபம் **கழிகண்ணோட்டம்** அச்சம் பொய் பேராசை முதலியன செங்கோன்மையைச் சிதைக்கும் தீமைகள்; இக்குறைகள் யாதும்இன்றிக் குணநீர்மைகள் தோய்ந்து நெறிமுறையே நீதி புரிந்து வருகிற வேந்தன் நாட்டில் மாந்தர் யாண்டும் இன்பமாய் இனிது வாழ்ந்து வருவர் எனப் **பாலைக் கௌதமனார்** என்னும் சங்கப் புலவர் சேர மன்னனுக்கு அரசு முறைமையை இங்ஙனம் தெளிவுறுத்தி யிருக்கிறார்.

தான்பெற்ற மகனே எனினும் குற்றம் புரிவனாயின் அவனைத் தண்டித்து அடக்குபவனே கொற்றவன் ஆவன். இவ்வுண்மை ககந்தனிடம் காண வந்தது.

### சரிதம்.

இவன் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து அரசு புரிந்தவன். சிறந்த நீதிமான். அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் முதலிய குணநலன்கள் இவனிடம் நிறைந்திருந்தன. குடிசனங்கள் யாண்டும் இனிது வாழ்ந்து வர ஆட்சியை இவன் மாட்சியாய் நடத்தி வந்தான். விழுமிய நிலையில் விவேகமாய் இவன் ஆண்டு வந்தமையால் **காகந்தி** என அந்நகரம் இவன் பெயரியல்பால் பேர் பெற்று நின்றது. யாதொரு தீதும் நேராமல்

யாண்டும் ஓர்ந்து பாதுகாத்து வந்தமையால் செங்கோல் வேந்தன் என்று எங்கும் புகழ இவன் இசை பெற்று வந்தான். அவ்வாறு வருங்கால் இவனுடைய புதல்வர் இருவருள் ஒருவன் **மருதி** என்னும் பார்ப்பன மங்கையைக் காதலித்துத் தீது புரிய நேர்ந்தான். அதனை அறிந்து வருந்திய இவன் அவனுக்கு உடனே மரண தண்டனை விதித்தான். மீண்டும் ஓராண்டு கழிந்தபின் மூத்த மகன் **விசாகை** என்னும் வணிக மடந்தையை விழைந்து பிழைபுரிய மூண்டான். அவனையும் இவன் கடிந்து ஒழித்தான். உயிரினும் சிறந்த கற்பினை அழிக்க முயன்றமையால் மக்கள் இருவரையும் மன்னன் தக்கபடி ஓர்ந்து கொன்று தொலைத்தான்.

கொடிமிசை விதியின் வருவோள் குழல்மேல்
மருதி பொருட்டால் மடிந்தோன் தம்முன்
கருகிய நெஞ்சினன்; காமம் காழ்கொளச்
சுரியிரும் பித்தை சூழ்ந்துபுறம் தாழ்ந்த
விரிபூ மாலை விரும்பினன் வாங்கித்
தொல்லோர் கூறிய மணம்ஈ தாமென
எல்லவிழ் தாரோன் இடுவான் வேண்டி
மாலை வாங்க ஏறிய செங்கை
நீலக் குஞ்சி நீங்காது ஆகலின்
ஏறிய செங்கை யிழிந்திலது இந்தக்
காரிகை பொருட்டெனக் ககந்தன் கேட்டுக்
கடும்சினம் திருகி மகன்துயர் நோக்கான்,
மைந்தன் தன்னை வாளால் எறிந்தனன்;
ஊழிதோ றூழி உலகம் காத்து
வாழிய எங்கோ மன்னவ! என்று
மாதவர் தம்முள்ஓர் மாதவன் கூறலும்.

(மணிமேகலை 22)

நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை இதில் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம். **ககந்தன் கேட்டு மகன் துயர் நோக்கான் வாளால் எறிந்தனன்** என்றதனால் யாதும் கோடாமல் ஏதும் இரங்காமல் இவன் புரிந்துள்ள தண்டனையை அறிந்து கொள்கிறோம். ஓர்ந்து கண்ணோடாது இறை

புரிந்து யார் மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை என் பதை உலகம் இவன்பால் நேரே உணர்ந்து நின்றது.

**தீது மகன்செயினும் தேர்ந்தவனைத் தண்டித்தல்**
**நீதி யரசின் நெறி.**

செம்மையாளனே செங்கோலனும்.

---

### கோனும் குடியும்.

542. மண்டுபுகழ் அய்யோத்தி மாண்குடிகள் மன்னன்பின்
கொண்டெழுந்தேன் போன குமரேசா—தண்டாது
வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. (௨)

இ-ள்.

குமரேசா! அயோத்தியில் வாழ்ந்த குடிகள் அரசன் அகன்றபோது ஏன் அவன் பின்னே சென்றன? எனின், உலகு எல்லாம் வான் நோக்கி வாழும்; குடி மன்னவன் கோல் நோக்கி வாழும் என்க.

செங்கோலின் சீர்மை தெரிய வந்தது.

உயிரினங்கள் யாவும் மழையால் வாழுகின்றன; குடிசனங்கள் எல்லாரும் அரசனுடைய நீதிமுறையால் வாழ்ந்து வருகின்றனர்.

வான் என்றது மழையை. வானில் உள்ள மேகம் பொழிகிற நீரை இங்ஙனம் இது குறித்துள்ளது. **வான் சிறப்பு** என்னும் அதிகாரத்தில் மழையின் மகிமை மாண்புகளை முன்னர் நன்கு அறிந்துள்ளோம்.

மழை பொழிய வில்லையானால் இவ்வுலகில் உயிர்கள் வாழ முடியாது. அரசன் நீதியாய் ஆளவில்லையானால் அந்த நாட்டு மக்கள் சுகமாயிருக்க முடியாது.

வான் கோனுக்கும், மழை செங்கோல் நீதிக்கும், உலகம் நாட்டுக்கும், உயிர்கள் குடிமக்களுக்கும் ஒப்பாம்.

வான்நோக்கி நிற்கும் உலகென்னவும் மன்னவன்செங்
கோல்நோக்கி நிற்கும் குடிஎன்னவும் கோதில் உம்பர்

ஆனோர்க்கும் நாக ருலகோர்க்கும் அவனி யோர்க்கும்
ஏனோர்க்கும் நாடு நகராகி யிருந்த தவ்வூர்
(கந்த, நகர 62)

இந்த அருமைத் திருக்குறளை மருவிக் **கந்த புராண ஆசிரியர்** இவ்வாறு நகரின் பெருமையை விளக்கியிருக்கிறார்.

பொன்னையே நோக்கி நிற்பர் பொதுவிலை மகளிர்; மாரி
தன்னையே நோக்கி நிற்கும் தரணியில் பைங்கூழ்; தந்த
அன்னையே நோக்கி நிற்கும் அரும்பெறற் குழவி; அன்ன
நின்னையே நோக்கிநிற்கும் நீணிலத்து உயிர்கள் எல்லாம்.
(இராமா : 7 : 15 : 6)

இராமனை நோக்கி உயிர்கள் நின்றதைஇதுகுறித்துளது.

கோல்நோக்கி வாழும் குடியெல்லாம்; தாய்முலைப்
பால்நோக்கி வாழும் குழவிகள்;—வானத்
துளிநோக்கி வாழும் உலகம்; உலகின்
விளிநோக்கி இன்புறூஉம் கூற்று. (நான்மணி 29)

**விளம்பிநாகனார்** என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் விளம்பியுள்ளார். தேவர் வாய்மொழி தெய்வ ஒளியாய்க் கவிகளுக்குத் தெளிவா வழிகாட்டி வருகிறது.

நீரால் உயிர் வாழ்ந்து வருகிற மாந்தர்க்கு அந்த நீரின் பேராதரவு நன்கு தெரியும் ஆதலால் அதனை நேரே எடுத்துக் காட்டி வேந்தனது நீதியின் நீர்மையை இவ்வாறு செவ்வையாய் விளக்கி யருளினார்.

வான் இருந்தாலும் மழை பெய்ய வில்லையானால் வெய்ய துயரமே; கோன் இருந்தாலும் நீர்மையாய் நீதி செய்யவில்லையானால் குடிமக்களுக்குக் கொடிய துன்பமே. கரிய பைம்புயல் நீரைச் சொரிந்து உலகைப் பேணும்; அரிய செங்கோல் தரும நீதியைப் புரிந்து உயிரினங்களை ஓம்பி வரும். பிள்ளைக்குப் பெற்ற தாய் போல், பேருலகுக்கு மழைபோல், மாந்தருக்கு வேந்தன் உற்ற துணையாய் நின்று உறுதி புரிந்து வருகிறான்.

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் விற்றுவக்கோட் டம்மா! என்
பால்நோக்கா யாகிலும் உன் பற்றலல்லால் பற்றில்லேன்;
தான்நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே.
(பெருமாள் திருமொழி)

கோல் நோக்கி வாழும் குடிபோல நான் உன்னையே நோக்கி நிற்கிறேன் என்று குலசேகராழ்வார் திருமாலை நோக்கி இவ்வாறு முறையிட்டிருக்கிறார். மழையும் மழை வண்ணனும் இங்கே ஒத்து எண்ண வந்தனர்.

வானம் மழை பெய்து பயிர்களை வளர்த்து உயிர்களுக்கு உணவூட்டி உதவி புரிந்து வந்தாலும் அரசனது செங்கோல் ஆட்சி அங்கே இல்லையானால் எல்லாம் நிலை குலைந்து போம். எவ்வழியும் அல்லல்களே யாம்.

வானம் பெயல்புரிந்து வையம் வளம்சுரந்து
தானம் செழித்துத் தழைத்திடினும்—கோனங்கே
இல்லையெனில், இன்பவாழ் வில்லையே; எவ்வழியும்
அல்லலே யாகும் அடர்ந்து.

வான் இருந்தாலும், கோன் இல்லையானால் குடிகளுக்கு நல்ல வாழ்வில்லை என இது குறித்துள்ளது. விளைபயிர்க்கு வேலி போலவும் குளநீர்க்குக் கரைபோலவும் குடிசனங்களுக்கு மன்னவன் கோல் மன்னிய பாது காப்பாயுளது. செங்கோல் வேந்தன் எங்கே இல்லையோ அங்கே மாந்தர் சுகமாய்த் தங்கி வாழ முடியாது.

வேந்தனே இல்லா விடினுல கத்து
மேலது கீழதாம்; மணம்செய்
காந்தனுக்கு அடங்கிக் களத்திரம் நடவாள்;
காதலர் தந்தைசொற் கேளார்;
மாந்தர்வே ளாண்மை முதல்தமக் குரிய
வளமைகூர் தொழில்களில் முயலார்;
சாந்தரும் தீயர் ஆவரேல், தீயர்
தன்மையைச் சாற்றுமா றெவனோ? [1]

நம்மனை மைந்தர் கிரகவாழ் வெல்லாம்
நரபதி யால்;அவன் இலனேல்,
அம்மனை தீயர் கைவசம் ஆவள்;
அருநிதி கொள்ளையாம்; நாளும்
வெம்மையோடு ஒருவர் ஒருவரை யுண்பார்;
மேலவர் அசடரால் மெலிவார்;
அம்மா தெல்லாம் உணர்ந்து அரசாணைக்கு
அமைதல்நற் குடிகளின் இயல்பே. [2]
(நீதிநூல்)

வேந்தனது தகவையும் அவனுடைய குடைக் கீழ் வாழும் குடிகளின் இயல்பையும் அவன் இல்லையானல் அவரடையும் அவல நிலைகளையும் இவை சுவையா விளக்கியுள்ளன. கவிகளில் மருவியுள்ள கருத்துக்களைக் கருதி யுணர்ந்து கொள்ள வேண்டும்.

**கோல் நோக்கி** என்றது கூர்ந்து நோக்க வந்தது.

செங்கோலை யுடையவனே மன்னவன்; அன்னவனே மன்னுயிரை இனிது காக்க வல்லவன். இடர் யாதும் நேராமல் யாண்டும் இன்பம் நேர்ந்துவரச் செம்மை யாகச் செய்ய வுரியவன் என்பதை வானும் வையமும் தெரியவே செங்கோலை அவன் கையில் ஏந்தியுள்ளான்.

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே. (குறுந்தொகை 1)

அசுரரைத் தொலைத்து அமரர்க்கு அருள் புரிந்த குமரக் கடவுள் கையிலிருந்த அம்புக்குச் **செங்கோல்** இங்கே உவமையாய் வந்துள்ளது. தீயவரை மாய நூறி நல்லவரை எங்கும் காத்தருளும் நயனுடையது ஆதலால் அதனை இங்ஙனம் வியனு விளக்கி யருளினர். திப்புத்தோளார் என்னும் சங்கப் புலவர் இப்படிச் செப்பமாப் பாடியிருக்கிறார்.

மன்பதை இன்பமாய் மகிழ்ந்து வாழ்ந்துவர ஆய்ந்து ஆதரித்து ஆண்டு வருவதே வேந்தன் கடமையாம்; ஆகவே அவனை யாவரும் தாயாத் தந்தையாத் தெய்வ மாக் கருதி உரிமை தோய்ந்து உவந்து வருகின்றனர்.

வயிரவான் பூண்அணி மடங்கல் மொய்ம்பினன்
உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிரிலா உலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்.
(இராமாயணம்)

தசரத மன்னன் உயிர்களைப் பாதுகாத்து வந்துள்ள நிலைமையை இது வரைந்து காட்டியுளது. **உயிர் எலாம்**

தன் உயிர் ஒப்ப ஓம்பலால், உயிரெலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான் என்னும் இது உன்னி உன்னி உணர்ந்து வருந்தோறும் உவகை சுரந்து வருகிறது.

வையம் இன்புறின், தானும் இன்புறும்;
வெய்ய தொன்றுறின், தானும் வெய்துறும்;
செய்ய கோலினாய்! செப்ப லாவதன்று
ஐய தாரினான் அருளின் வண்ணமே. (சூளாமணி)

தருமன் தண்ணளியால்; தனது ஈகையால்
வருணன்; கூற்றுயிர் மாற்றலின்; வாமனே
அருமை யால்;அழ கிற்கணை ஐந்துடைத்
திருமகன்;திரு மாநில மன்னனே. (சீவகசிந்தாமணி)

இறந்த நற்குணம் எய்தற் கரியவாய்
உறைந்த தம்மையெல் லாமுட னாக்குவான்
பிறந்த மூர்த்தி ஒத் தான்திங்கள் வெண்குடை
அறங்கொள் கோலண்ணல் மும்மத யானையான்.
(குண்டலகேசி)

வல்லென்ற சொல்லும் புகழ்வாய்மை வழீஇய சொல்லும்
இல்லென்ற சொல்லும் இலங்கலின் யாவர் மாட்டும்
சொல்லும் குறையின்மையின் சோரரும் இன்மை யாலே
கொல்என்ற சொல்லும் உரைகற்றிலன் கொற்றவேலான்.
(நாரத சரிதை)

ஒள்வாள் அமருள் உயிர்ஓம்பான்; தான்ஈயக்
கொள்வார் நடுவண் கொடைஓம்பான்;—வெள்வாள்
கழியாமே மன்னர் கதம்காற்றும் வேலான்
ஒழியாமே ஓம்பும் உலகு. (வெண்பாமாலை)

செங்கோல் வேந்தருடைய சீர்மை நீர்மைகளை இவை குறித்துள்ளன. மாந்தரை இவர் பேணிவந்துள்ள மாண்புகளை இவற்றுள் கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம். உயிரினங்கள் இன்புற்று வாழ்ந்து வருவதையே தங்கள் ஆட்சியின் மாட்சியாகச் சூழ்ந்து வந்துள்ளனர். **செய்ய கோல், அறங்கொள் கோல்** என்று செங்கோலைக் குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்க வுரியது. தரும தேவதைகள் போல் தங்கள் கருமங்களை எவ்வழியும் செவ்வையாய்ச் செய்து நின்றுள்ளமையால் செங்கோல் மன்னர்கள் திவ்விய மகிமைகளை எய்திச் சிறந்து விளங்கியுள்ளனர்.

கோனை நோக்கியே குடிகள் இனிது வாழ்ந்து வருவர். இவ் வுண்மையைக் கோசல தேசத்து மக்கள் எத் தேச மக்களும் எதிரே கண்டு தெளிய உணர்த்தி நின்றனர்.

## சரிதம்.

சத்திய சீலனான அரிச்சந்திரன் திருவயோத்தியி லிருந்து அரசு புரிந்து வந்தான். தரும நீதிகள் தழுவி வந்த அவனது ஆட்சியில் எல்லாரும் இன்பமாய் இனிது வாழ்ந்து வந்தனர். வருங்கால் இடையே விசுவாமித்திர முனிவர் வந்து வஞ்சனை புரிந்து அரசைக் கவர்ந்து கொண்டார். யாவும் துறந்து அரசன் அயல் அகல நேர்ந்தான். அதனை அறிந்ததும் தேசம் முழுவதும் கொதித்து எழுந்தது. குறுநில மன்னரும் பெருநில வேந்தரும் குடிசனங்களும் ஒருங்கே திரண்டு வந்து அரசனை வணங்கிப் பரிவு மீதூர்ந்து உரிமை கூர்ந்து உளைந்து மொழிந்தனர். அவருடைய உரைகள் உள்ளப் பாசங்களை வெளிப்படுத்தி உணர்ச்சி தோய்ந்து வந்தன.

முன்செய்த தீவினையோ? முனிசெய்த
உபகாரம் முன்னுண் டாகப்
பின்செய்த கைம்மாறோ? பேரரசு
கொடுத்தகன்று பெருங்காடு எய்தல்?
மின்செய்த நெடுவேலாய்! மெய்த்தவனை
யாம்துரந்து விட்டோம் ஆகில்
என்செய்வான்? எனவுரைப்பார்; யாம்போதும்
அவன்போருக்கு எதிர்க்க என்பார். (1)

தோல்ஏந்து மார்பமலர்த் தொடைஏந்தத்
தருப்பைமுடிச் சுருக்கத் தோடே
கோல்ஏந்தும் குறுங்கைகதிர் வேல்ஏந்தக்
கனகமுடிக் கோடீ ரத்தின்
மேல்ஏந்தி இருடியிருந் துலகாள
அவன்குடைக்கீழ் வீணே அன்னான்
கால்ஏந்தி வாழ்வதின்யாம் கனல்மூழ்கல்
அமையுமெனக் கட்டு ரைப்பார். (2)

சடைபிடித்தும் கரம்பிடித்தும் தாள்பிடித்தும்
மரவுரியால் தகைந் துடுத்த

உடைபிடித்தும் ஈர்த்தவனை உயர்வனத்தில்
இப்பொழுதே ஓட்டுகின்றோம்;
மடைபிடித்த வயல்சூழும் வளநாடு
நீபுரக்க வருவாய்! என்று
படைபிடித்த மலர்க்கரத்தால் பதம்பிடித்து
விறல்வேந்தர் பணிந்து வீழ்ந்தார். (3)
(அரிச்சந்திரம்)

நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளை ஓர்ந்து உணர்ந்துகொள்கிறோம். எல்லாச் செல்வங்களும் நிறைந்திருந்தும் அரசனைப் பிரிந்திருக்க முடியாமல் யாவரும் வருந்தியுள்ளனர். அவன் மீளவில்லையானால் அங்கே சுகமாய் வாழ மாட்டோம் என்று அவர் மறுகியிருக்கின்றார். வான் நோக்கி வையம் வாழும்; மன்னவன் கோல் நோக்கிக் குடிகள் வாழும் என்பதை முடிவாக இவர் உணர்த்தி நின்றார். உணர்ச்சி நிலைகள் ஓர்ந்து சிந்திக்க வுரியன.

**பயிர்க்குரிய நீர்உயிர்; பாரிலுறு மாந்தர்**
**உயிர்க்குரிய வேந்தன் உயிர்.**

மன்னுயிர்க்கு மன்னன் உயிர்.

---

**கோலும் அறமும்.**

543 வேதமுயர் நீதி விரதன்கோல் கொண்டபின்பேன்
கோதறமுன் நின்ற குமரேசா—தீதறுசீர்
அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். (ந)

இ-ள்.

குமரேசா! பிரிய விரதன் செங்கோல் ஏந்திய பின் வேதமும் அறங்களும் ஏன் விளங்கி நின்றன? எனின், அந்தணர் நூற்கும் அறத்திற்கும் மன்னவன்கோல் ஆதியாய் நின்றது என்க.

அறத்தின் ஆதரவு அறிய வந்தது.

அந்தணர் நூல் ஆகிய வேதத்திற்கும், தரும நீதிகளுக்கும் அரசனது செங்கோல் தலைமையான ஆதரவாய் நிலவி யுள்ளது.

மன்னவன் கோல் நோக்கி மக்கள் வாழ்வர் என்று முன்னம் கூறினர்; இதில், வேதமும் அறமும் அதனால் விளங்கி வரும் என்கின்றார்.

வேதத்தை **அந்தணர் நூல்** என்றது, வழிமுறையே உரிமையுடன் அவர் அதனை ஓதி வருதல் கருதி. அந்தணர் என்ற பதம் அழகிய தண்ணளியுடையவர் என்னும் பொருளினது ஆதலால் அக்காரணத்தைக் கருதிய பொழுது அந்த இயல்புடையார்க்கெல்லாம் அஃது உரிமையாய் நிற்கும்; கருதாதபோது காரண இடுகுறியாய் நின்று பார்ப்பனரைக் குறித்து வரும்.

அரிய மாதவரும் பெரிய முனிவர்களும் வேதம் ஓதுதலை உரிமையாக வுடையவர். சிறந்த அறிவு நலன்கள் நிறைந்திருப்பது ஆதலால் வேதம் பாடி வருவதால் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை கூடி வரும். அரசன் நீதியாய் ஆட்சி புரிந்து வருங்கால் அவரவர் கடமையை உரிமையுடன் ஆற்றி வருவர். அந்த வழியில் அந்தணர் தொழில் முந்துற ஈண்டு நன்கு தெரிய வந்தது.

ஓதல் அந்தணர் வேதம் பாட. (மதுரைக்காஞ்சி)

பாண்டிய மன்னர் ஆட்சியில் மதுரைமா நகரில் வேத கீதம் ஓங்கியிருந்ததை இதில் உணர்ந்து கொள்கிறோம். தூய அறிவுடையது நேயமா அறிய வந்தது.

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்;
தாதின் அனையர் தண்தமிழ்க் குடிகள்;
தாதுண் பறவை யனையர் பரிசில் வாழ்நர்;
பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதுஎம் பேரூர் துயிலே. (பரிபாடல்)

மதுரையம்பதியின் மகிமையை இப்பாடல் வரைந்து காட்டியுள்ளது. காட்சிகளைக் கருதிக் காண்பவர் மாட்சிகளை உணர்ந்து மகிழ்ந்து கொள்வர். வேதஒலி கேட்டே மக்கள் கோழி கூவு முன் எழுந்திருப்பர். பழைய கால விழுமிய நிலைமை இங்கே தெளிவாய் வெளியாயுளது.

கோதி லாதசெஞ் சூட்டுடை வாரணம் கூவ
ஓத ஞாலத்து மற்றைய தலத்துளார் விழிப்பர்;
ஈதல் ஏற்றலோ டறுதொழில் இருபிறப் பாளர்
வேத நாதத்தின் விழிப்பதவ் வியனகர் மாக்கள்.
(திருவாப்பனூர்ப் புராணம்)

புனிதமான உணர்வு நலன்கள் பொதிந்துள்ளமையால் வேதத்தை ஓதுவதாலும் கேட்பதாலும் மனிதர் மதிநலம் தோய்ந்து இனியராய் வருகின்றனர். பண்பு படிந்து மக்கள் உயர்ந்துவரின் அந்நாடு எவ்வழியும் சிறந்து யாண்டும் செவ்வையாய் விளங்கி வரும்.

அரசன் நெறியோடு நின்று முறை செய்துவரின், அந்தணர் நிறையோடு நின்று மறை ஓதி வருவர். பிறரும் நிலை தவருமல் தரும வழிகளில் நலமாய் ஒழுகி வருவர். எல்லா நலன்களும் மாட்சியாய் நடந்து வருதற்கு மூலகாரணம் அரசனது செங்கோல் ஆட்சியேயாம்; ஆகவே **கோல் ஆதியாய் நின்றது** என்ருர். அரசன் முறை செய்யவில்லையானல் நிறையும் நீதியும் மறையும் அறமும் மாதவமும் நிலைகுலைந்து போம்.

அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது.
[சிலப்பதிகாரம் 28)

மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்ருல்.
(மணிமேகலை 22)

அரச நீதியின் அருமைகளை இளங்கோவடிகளும் சாத்தனுரும் இவ்வாறு விளக்கி யுள்ளனர். தருமம் கற்பு தவம் சீலம் முதலியன இருபாலார்க்கும் இருமையும் இன்பம் தருவன. இவை யாண்டும் செழித்து வர வேண்டின், மன்னவன் செங்கோல் செலுத்தி வர வேண்டும்.

இறப்பப் பெருகி இசைபடுவ தல்லால்
சிறப்பிற் சிறுகுவ துண்டோ? அறக்கோலால்
ஆர்வமும் செற்றமும் நீக்கிமற் றியார்கண்ணும்
இன்னாத வேண்டா இகல்வேல் மறமன்னர்
ஒன்னார்க்கு உயர்த்த படை. (தகடூர்)

கோதை நித்திலம் சூழ்குளிர் வெண்குடை
ஓத நீருல கொப்ப நிழற்றலால்
தாதை யேயவன் தாணிழல் தங்கிய
காத லால்களிக் கின்றதிவ் வையமே.
(சீவகசிந்தாமணி)

நாமவேல் நரபதி உலகம் காக்குநாள்
காமவேள் கவர்கணை கலத்தல் அல்லது
தாமவேல் வயவர்தம் தழலங் கொல்படை
ஏமநீர் வரைப்பகத் தியைந்த தில்லையே. (சூளாமணி)

கோல்வரும் செம்மையும் குடைவரும் தண்மையும்
சால்வரும் செல்வமென் றுணர்பெருந் தாதைபோல்
மேல்வரும் தகைமையால் மிகவிளங் கினர்கள்தாம்
நால்வரும் பொருவில்நால் மறைஎனும் நடையினர்.
[இராமாயணம்]

நீதி மன்னருடைய நீர்மை சீர்மைகளையும் பாதுகாப்பு முறைமைகளையும் இவை வியனு விளக்கி யுள்ளன. பொருள் நயங்களை நுனித்து உணர்ந்து கொள்ளுக.

செங்கோலே சிறந்த அரச செல்வம்; அதனை எவ்வழியும் இனிது பேணி யாண்டும் அறநலன்களை வளர்த்து மாந்தரைப் பாதுகாத்து வருபவரே உண்மையான வேந்தராவர் என்பதை ஈண்டு ஓர்ந்து உணர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்கின்றோம்.

செங்கோல் மன்னன் ஆட்சியில் அரிய கலைகளும் பெரிய நிலைகளும் அறிவு அறங்களும் பெருகி வளரும்.
இது பிரியவிரதனிடம் தெரிய வந்தது.

## சரிதம்.

இவன் சுவாயம்பு மனுவின் புதல்வன். தாய் பெயர் சதரூபை. பேரறிவும் பேராண்மையும் இளமையிலேயே

இவனிடம் பெருகி யிருந்தன. உலக வாழ்வு எவ்வளவு வளமுடையதாயினும் நிலையில்லாதது என்று தெளிந்து யாவும் துறந்து தவம் புரிய நேர்ந்தான். அரச திருவை யும் வேண்டாமல் அரிய தவ விரதத்தை வேண்டி நின்ற மையால் **பிரியவிரதன்** என்று பெற்றோர் இட்ட பெயர் ஏதுப் பேரா யிசைந்து நின்றது. அருந்தவ நெறியில் உயர்ந்திருந்த இவனை உலகத்தைக் காத்தருளும்படி முனிவரும் அமரரும் வேண்டினர். அயனும் அறிவு கூறி நயமாய் ஊக்கி யருளினன்.

எண்ணுறு காமம் முதற்பகை யடக்கார்
இருள்படு கானகத்து ஏகி
நண்ணினும் மாயை வலையினைக் கடவார்;
நவிற்றுவெம் பகைநலிந் தறிந்தோர்
மண்ணகம் புரந்து மகவொடு மகிழ்ந்து
வைகினும் மாயையை மருவார்;
பண்ணுறு கருமம் கனவெனப் பார்த்துப்
பார்புரந் தருள்! எனப் பணித்தான். (1)

மோட்டுநீர் உலகம் முழுவதும் பூத்த
முழுமுதல் பணிக்கஉள் மகிழ்கூர்ந்து
ஊட்டரக் கெறிசெந் தாமரை யனைய
ஒண்மலர்க் கரத்தினால் தந்தை
சூட்டிய பசும்பொற் சுடர்முடி புனைந்து
சூட்டராச் சுமந்தபார் ஏழும்
பாட்டுவண் டிமிரும் நறுமலர்த் தெரியற்
பனிமதிக் குடைகவித் தளித்தான். (2)

ஒருதனி யாழி வெஞ்சுடர் மறைந்த
ஓர்புறத் திருட்குறும் பெறிவான்
விரைசெல மான்தேர்ப் பரிதியிற் கடாவி
மேருவை வலங்கொளத் தடந்தேர்
எரிமணி யாழி இருநிலம் கிழித்த
எல்லையே ஏழெனக் கிடந்த
பொருதிரை யாழி யாயமற் றவன்றன்
புகழினை எங்ஙனம் புகல்கேன்? (பாகவதம் 5-1)

இம் மன்னன் ஆட்சி புரிந்த மாட்சிகளை இவை காட்சிப்படுத்தி யுள்ளன. எங்கும் இருளை நீக்கிச் சூரியன் உலகில் ஒளிசெய்து வருதல்போல் யாண்டும் மருள்களை நீக்கி அறிவு அறங்களாகிய தெளிவுகளை உளவாக்கி மாந்தரை இவன் இனிது பேணி வந்துள் ளான். வேதம் முதலிய கலைகளும் தரும நீதிகளும் இவனது ஆட்சியில் நாடெங்கணும் நன்கு பரவியிருந்தன. அந்தணர் நூலுக்கும் ஆன்ற அறங்களுக்கும் அரசன் செங்கோல் ஆதாரமான ஊன்றுகோல் என்பதை உலகம் காண இவன் நன்கு உணர்த்தி நின்ருன்.

செம்மையாய் நீதி புரிவதே செங்கோலாய்
எம்மையும் எய்தும் இசைஎன்று—மும்மையும்
கண்டார் மொழிந்தார்;கருதியதைக் கைக்கொண்டார்
கண்டார் உயர்ந்த கதி.

மன்பதை இன்பமாய் வாழவழி செய்வதே
இன்ப அரசின் இயல்.

நல்ல ஆட்சி நலம் பல நல்கும்.

---

### செங்கோலின் சீர்மை.

544 சேர லிரும்பொறையைச் சேர்ந்தன் றுலகமன்பு
கூர நின்ற தென்னே குமரேசா—சாரும்
குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (சு)

இ-ள்.

குமரேசா! சேரலிரும்பொறை என்னும் மன்னனைத் தழுவி வந்து கெழுமிய அன்புடன் ஏன் உலகோர் உவந்து ஒழுகினர்? எனின், குடிதழீஇக் கோல் ஓச்சும் மாநில மன்னன் அடிதழீஇ உலகு நிற்கும் என்க.

நாட்டு மக்களைத் தழுவி அரசுமுறை செலுத்துகிற பேரரசனுடைய அடிகளை மருவி உரிமை மீக்கூர்ந்து உலகோர் உவந்து நிற்பர்.

குடி என்றது பொது மக்களை. ஒரு அரசனுடைய ஆட்சிக்குட்பட்ட நாட்டுள் பல ஊர்களிலும் பரவி வாழ்ந்து வருகிற மாந்தர் குடிகள் என நேர்ந்தனர். சிறிய கூரை வீடுகள் குடில்கள் எனப்படும்.

கோ மக்கள் ஆள்பவர்; குடிமக்கள் ஆளப்படுபவர்.

தழீஇ=தழுவி; ஆதரவாய் அணைத்து.

சொல்லிசை அளபெடைகள் ஈரிடமும் தோய்ந்து நின்றன. பாவின் ஓசை பழமை படிந்து வருகிறது.

கோல்=செங்கோல்; நீதிமுறை.
ஓச்சும்=செலுத்துகிற; நடத்துகிற
மாநிலம்=பெரிய நில மண்டலம்.

குறுநில மன்னர்கள் பலரை அடக்கி ஆளுகிற சக்கரவர்த்தி மாநில மன்னன் என நின்றான். சிறந்த தலைமையான நிலைமையில் உயர்ந்துள்ள வேந்தன் மாந்தரை ஆதரவோடு கலந்து நலமாய் ஆட்சி புரிந்து வரின் யாண்டும் அது பலமாய் மாட்சி மிகுந்து வரும்.

குடிகளை அன்போடு தழுவிக் கோமுறை பண்போடு செய்துவரின் அந்த முடியரசு குடியரசினும் சிறந்து எல்லாருடைய உள்ளங்களிலும் உவகை பொங்கிவர ஒளிமிகுந்து திகழும்; திகழவே உலகம் முழுவதும் அவனுடைய குடைநிழலில் தங்கி வாழ விழைந்து விரைந்து வரும் ஆதலால் அம் மன்னன் **அடிதழீஇ உலகு நிற்கும்** என்றார். உலக மக்கள் நிலை ஈண்டு உணர வந்தது.

அரசன் குடிகளைத் தழுவிவரின் உலகம் அவன் அடிகளைத் தழுவி வரும். இதில் மருவியுள்ள மானச மருமங்கள் கருதியுணர வுரியன. அடி=தாள்கள்; பாதங்கள். யாவும் அவன் சரணமடைந்து உவந்து நிற்கும் என உலக நிலையை உணர்த்தியருளினர்.

செங்கோல் மன்னன் எல்லா உயிர்களையும் தன் உயிர்என உன்னி ஓம்புவன்; ஆகவே உயிரினங்களெல்லாம் அவனை உயிர் எனக் கருதியுருகி உவந்து வரும் என்பதை இங்கே ஓர்ந்து உணர்ந்து கொள்கின்றோம்.

இராமபிரான் அரசனாய் முடிசூட நேர்ந்தான் என்று அறிந்தபோது உலக உள்ளங்களில் உவகை வெள்ளங்கள் பொங்கி எழுந்தன. யாவரும் அதிசய பரவசராய் அக் கோமகனைத் துதி செய்து தொழுது புகழ்ந்தனர்.

பாவமும் அருந்துயரும் வேர்பறியும் என்பார்;
பூவலயம் இன்றுதனி யன்றுபொது என்பார்;
தேவர்பகை யுள்ளன இவ் வள்ளல்தெறும் என்பார்;
ஏவல்செயும் மன்னர்தவம் யாவதுகொல்? என்பார்.

சித்தம்ஒத் தனன்என் றேதும் திருநகர்ச் செல்வம் என்ன
உத்தமத்து ஒருவன் சென்னி விளங்கிய வுயர்பொன் மௌலி
ஒத்துமெய்க் குவமைகூர ஓங்குமூ வுலகத் தோர்க்கும்
தத்தம் உச்சியின்மேல் வைத்தது ஒத்தெனத் தளர்வு தீர்ந் [தார்.

(இராமாயணம்)

அரசியல் முறைகளையும் துறைகளையும் கருதியுணர்பவர் இந்த இரண்டு பாசுரங்களில் மருவியுள்ள பொருளுணர்வுகளை ஊன்றி ஓர்ந்து சிந்திக்க வேண்டும். மன்னன் சென்னியில் மன்னிய மகுடம் மக்கள் ஒவ்வொருவர் தலையிலும் வைத்ததாக உள்ளம் களித்துள்ளனர். அவ்வுண்மையை இங்கே ஓர்ந்துகொள்ளுகிறோம். குடிகள் இவ்வாறு உவந்து வரவேண்டுமானால் கோன் எவ்வாறு புரந்து வந்திருக்க வேண்டும்! குடி மகிழ்ச்சியே கோன் உயர்ச்சி என்று கருதி வருகிற முடிமன்னன் ஆட்சி உலகில் எவ்வழியும் நெடிது நிலவி நிற்கின்றது.

நாட்டுக்கு நான் தனி முதல் தலைவன்; எவரையும் கேட்டு நடவேன்; யாரையும் தழுவி ஒழுகேன் என்று அரசன் செருக்கி இழிவுற நேரின் அன்றே அவன் அழிவுற நேர்ந்தான்.

நாட்டு மக்களுடைய நிலைமைகளை நாடி யறிந்து அவர்க்கு வேண்டிய இதங்களை விழைந்து புரிந்துவரின் அந்த அரசன் யாண்டும் மேன்மையாளனாய்ச் சிறந்து என்றும் உயர்ந்து வருவான்.

குடிமிசை வெய்ய கோலும் கூற்றமும் பிணியும் நீர்சூழ்
படிமிசை யில்லை யாயின், வானுள்யார் பயிறும் என்பார்?

முடிமிசை திவள வேந்தர் முறைமுறை பணிய விம்மி
அடிமிசை அறையும் செம்பொன் அதிர்கழல் அரசர்ஏறே!
(சூளாமணி)

செங்கோலனாய்க் குடிகளுக்கு இதம் செய்துவரின் அந்த மன்னவன் நாடு வானவர் நாட்டினும் மேலான மகிமை யுடையதாம் என இது கூறி யுளது.

வெய்யகோல் வையத்தை நையச் செய்யும்; செய்ய கோல் இதனை எவ்வழியும் உய்யச் செய்யும்.

கோலஞ்சி வாழும் குடியும்; குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்,—வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்பும்,இம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். [திரிகடுகம் 38]

செங்கோலுக்கு அடங்கி வாழும் குடியும், குடிகளைத் தழுவி ஆதரவு புரியும் அமைச்சனும், அடலமைந்த வீரனும் வேந்தனால் விழைந்து போற்றிவர வுரிய அரிய பொருள்கள் என நல்லாதனார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் குறித்திருக்கிறார். குடிதழீஇ என்பது இதிலும் குடிபுகுந்து முடி அரசியல்பை விளக்கி யுளது.

வெண்குடைக்கீழ் வாழும் குடிகட்கு வேந்தனும்
செங்கோலன் அல்லக்கால் செய்வதென்?—பொங்கு
படுதிரைச் சேர்ப்பமற் றில்லையே யானை
தொடுவுண்ணின் மூடும் கலம். (பழமொழி 391)

தன் குடைக்கீழ் தங்கி வாழும் குடிகளிடம் அன்பும் ஆதரவும் புரிந்து செங்கோலனாய் அரசன் சிறந்துவர வேண்டும் என முன்றுறையரையர் இவ்வாறு வேண்டி யிருக்கிறார்.

குடிகளை உரிமையுடன் தழுவிக் கோமுறை புரிந்து வரும் வேந்தனை மாந்தர் யாவரும் மகிழ்ந்து போற்றி வருவர். அவனது ஆட்சி மாட்சி அடைந்து வரும். இவ் வுண்மை சேரலிரும்பொறை பால் தெரிய வந்தது.

சரிதம்.

இவன் சேர மன்னர் மரபினன். சிறந்த நீதிமான். அருந்திறலாண்மையும் பெருந்தகைமையும் நிறைந்த

வன். அரிய பல கலைகளை ஆய்ந்தறிந்தவன். புலவர்கள் பால் பேரன்புடையவன். இவனது ஆட்சி யாண்டும் மாட்சிமை தோய்ந்து வந்தது. குடிகள் உவந்து வாழ்ந்து வருவதே தன் கோலின் பயன் என்று குறிக்கொண்டு எவ்வழியும் செவ்வையாய்ப் பேணி வந்தான். பெற்ற பிள்ளைகளை உற்ற தந்தை உசாவி அறிதல் போல் நாட்டு மக்களை நாடி ஆராய்ந்து நலம் புரிந்து வந்தமையால் எல்லாரும் இவனைத் திசை நோக்கித் தொழுது பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்தி வந்தனர். இவனுடைய நீர்மை சீர்மைகளையும் நெறிமுறைகளையும் வியந்து குறுங்கோழியூர் கிழார் என்னும் சங்கப் புலவர் உவந்து பாடியுள்ளார். ஒரு பாடல் அயலே வருகிறது.

இருமுந்நீர்க் குட்டமும்,
வியன்ஞாலத்து அகலமும்,
வளிவழங்கு திசையும்,
வறிதுநிலை இய காயமும், என்றாங்கு
அவையளந்து அறியினும் அளத்தற்கு அரியை;
அறிவும் ஈரமும் பெருங்கண் ணோட்டமும்,
சோறு படுக்கும் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறல் அல்லது,
பிறிதுதெறல் அறியார்நின் நிழல்வாழ் வோரே;
திருவில் அல்லது, கொலைவில் அறியார்;
நாஞ்சில் அல்லது, படையும் அறியார்;
திறனறி வயவரொடு தெவ்வர் தேயஅப்
பிறர்மண் உண்ணும் செம்மல்! நின்னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது
பகைவர் உண்ணா அருமண் ணினையே;
அம்பு துஞ்சும் கடியரணால்
அறம்துஞ்சும் செங்கோலையே;
புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்
விதுப்புற வறியா ஏமக் காப்பினை;
அனையை யாகன் மாறே
மன்னுயிர் எல்லாம் நின்னஞ் சும்மே. (புறம், 20)

இம்மன்னனுடைய குணநலன்களையும் அரசுமுறைகளையும் இவன் ஆட்சியில் குடிகள் உவந்து வாழ்ந்

துள்ள மாட்சிகளையும் இப்பாட்டு வரைந்து காட்டியுளது. பொருள் நயங்களையும் குறிப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்க. திருவில்=வானவில். நாஞ்சில்=கலப்பை. **அறம் குடிகொண்ட செங்கோலன்** என்றதனால் இவனது செயலில் தருமங்கள் தழைத்து வந்துள்ளமையை அறிந்து கொள்ளுகிறோம். குடிகளை ஆதரவோடு தழுவிக் கோமுறை புரிந்துவரின் அந்த மாநில மன்னனை ஞாலம் முழுவதும் நயந்து புகழ்ந்து வரும் என்பதை யாவரும் இவன்பால் அறிந்து தெளிந்தனர்.

**மாந்தர் மகிழ்ந்துவர வாய்ந்துவரு செங்கோலால்**
**வேந்தன் விளங்கி வரும்.**

*உயிர்கள் உவந்துவர அரசு புரிந்து வருக.*

---

**மழையும் விளைவும்**

545 வானும் நிலனும் வளஞ்சுரந்த வண்கரிகால்
கோனிருந்த நாட்டேன் குமரேசா—ஆன
இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு. (ரு)

இ-ள்.

குமரேசா! நெறிமுறையே அரசு புரிந்து வந்த கரிகால்வளவனது நாட்டில் மழையும் விளைவுகளும் ஏன் மலிந்திருந்தன? எனின், இயல்புளிக்கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட பெயலும் விளையுளும் தொக்கு என்க.

வானம் பொழிவது மன்னன் வழியது என்கிறது.

நீதி முறையே செங்கோல் ஓச்சி ஆட்சி புரியும் அரசனது நாட்டின்கண் தக்க மழையும் மிக்க விளைவுகளும் ஒக்க நிறைந்திருக்கும்.

கோல் ஓச்சல்=செங்கோலைச் செலுத்தல்.

பெயல்=மழை. பெய்தலுடையது என்பதாம்.

விளையுள் என்றது நிலத்தில் விளைகின்ற நெல் புல் துவரை கடலை பயறு முதலிய உணவுப் பொருள்களை-

இவை வளமாய் விளைந்து வருதல் மழையாலே யாம்; ஆகவே அந்த மூலகாரணம் தெரிய அது முதலில் நின்றது. வானம் வழங்கிவர வையம் விளங்கி வருகிறது.

இயல்புளி = அரச முறைக்கு உரிய இயல்போடு. உளி என்னும் சொல் இதில் மூன்றும் வேற்றுமை உருபாய் நின்றது.

இயல்புளி எதிர்கொண்டு. (பெருங்கதை 2-13-37)

இயல்புளி மரபின் எண்ணி. (இராமா: 4-8-37)

இவற்றுள் **இயல்புளி** உணர்த்தி நிற்றல் அறிக.

இயல்பை உள்ளி என்று கொண்டு இறைமாட்சிக்குரிய தன்மையை எண்ணி எனினும் அமையும். மன்பதை இன்பமாய் வாழ்ந்துவர ஆய்ந்து முறை செய்து வருவதே அரசனது கடமையாம்.

நீதி வழுவாமல் நெறிமுறையே மன்னன் செங்கோல் செலுத்திவரின் அங்கே தருமங்கள் பொங்கி வரும்; வரவே உரிய பருவம் தோறும் மழை உரிமையுடன் பெய்யும்; பெய்யவே நிலங்கள் வளமாய் எவ்வழியும் விளைவுகளை மிகுதியா விளைத்தருளும் ஆதலால் பெயலும் விளையுளும் வியனுன நல்ல ஆட்சியின் பயனை ஈண்டு எண்ண வந்தன.

தொக்கு என்றது பலவகையான தானியங்கள் தொகுதி தொகுதியாய் யாண்டும் நீண்டு குவிந்து கிடத்தலை. விளைவின் தொகைகள் உயிர்வாழ்வின் வகைகளாய் வளர்ந்துள்ளன.

உண்ண உணவு உடுக்க உடை இருக்க மனை முதலிய எல்லாப் பொருள்களையும் எங்கும் வளமாய்ப் பெற்றுப் பொங்கிய செல்வ வளங்களோடு எல்லாரும் எவ்வழியும் சுகமாய் வாழ்ந்து வருவது அரசனது நேர்மையான செங்கோல் முறைமையாலே யாம்.

வத்தவ தேசத்து மன்னனை உதயணன் ஆட்சி புரிந்து வந்தபோது அவன் நாடு பலவகை நிலைகளிலும்

தலைசிறந்திருந்தது. எல்லாரும் எல்லாச் செல்வங்களும் எய்தி எங்கும் இன்பமாய் இனிது வாழ்ந்து வந்தனர்.

''போரின் வாழ்நரும், புலத்தின் வாழ்நரும்,
தாரின் வாழ்நரும், தவாஅப் பண்டத்துப்
பயத்தின் வாழ்நரும், படியிற் றிரியா
ஓத்தின் வாழ்நரும், ஒழுக்கின் வாழ்நரும்,
யாத்த சிறப்பக் கயிற்றின் வாழ்நரும்,
உயர்ந்தோர் தலையா இழிந்தோர் ஈறு
யாவர்க் காயினும் தீதொன்று இன்றி
மறனி னெருங்கி நெறிமையின் ஓரீஇக்
கூற்றுயிர் கோடலும் ஆற்று தாகி
உட்குறு செங்கோல் ஊறின்று நடப்ப
யாறும் தொட்டவும் ஊறுவன ஒழுகக்
காடும் புறவும் கவின்றுவளம் சிறப்பப்
பொய்யா மாரித் தாகி வைகலும்
தண்டா இன்பம் தலைத்தலை சிறப்ப
களவும் அரம்பும் கனவினும் இன்றி
விளைதல் ஓவா வியன் பெருநாட்டு.''

(பெருங்கதை: 4 - 2)

அந்த நாட்டு மக்களின் இனிய வாழ்வு நிலைகளை இது காட்டியுளது. காட்சிகளைக் கருதிக் கண்டுகொள்க. **செங்கோல் ஊறின்று நடப்ப, இன்பம் தலைத்தலை சிறப்ப** என்றதனால் அவ்வேந்தனது நீதிமுறையான ஆட்சியே இவ்வாறு நாடு வளங்கள் சுரந்துவர மாந்தர் யாண்டும் மகிழ்ந்து வாழ்ந்துவரக் காரணமாய் நின்றது என்பதை ஓர்ந்து உணர்ந்து உவந்து கொள்கின்றோம்.

மலர்தலை உலகம் மன்னனை உயிராக உடையது ஆதலால் அவன் நல்ல நீர்மையுடையனாய்ச் சீர்மையோடு ஆண்டுவரின் அந்த நாடு அல்லல் யாதுமின்றி எல்லா வகையிலும் இனிமையாய்ச் சிறந்து திகழும்.

கோள்வல் உளியமும் கொடும்புற்று அகழா;
வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா;
அரவும் சூரும் இரைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா;

செங்கோல் தென்னவர் காக்கும் நாடு என
எங்கணும் போகிய இசையோ பெரிதே.
(சிலப்பதிகாரம் 13)

பாண்டிய மன்னர் ஆட்சி புரிந்து வந்த காலத்தில் இந்த நாடு இருந்த மாட்சியை இது காட்டியுளது. காட்டில் வாழுகின்ற கரடி புலி முதலிய கொடிய பிராணிகளும் யார்க்கும் இடர் செய்யாமல் இனியனவாயிருந்துள்ளன. **செங்கோல் தென்னவர் காக்கும் நாடு** ஆதலால் இன்னவாறு எங்கும் நன்மையாய் யாண்டும் இசைபெற்று நின்றது என இளங்கோவடிகள் உளங்கனிந்து வியந்து புகழ்ந்துள்ளார்.

நீதியான சிறந்த ஆட்சிக்கு அடையாளம் அந்த நாடு பீடை யாதும் இன்றிப் பெருமையாயிருத்தலும், மக்கள் எல்லாச் செல்வ வளங்களும் வாய்ந்து நல்ல அறிவு நலன்கள் தோய்ந்து யாண்டும் மாண்புடன் மகிழ்ந்து வாழ்ந்து வருதலுமே யாம்.

தெள்வார் மழையும் திரையாழியும் உட்க நாளும்
வன்வார் முரசம் அதிர்மாநகர் வாழும் மாக்கள்
கள்வார் இலாமைப் பொருள்காவலும் இல்லை;யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லைமாதோ!

கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லரல்லாரும் இல்லை;
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ!;
(இராமாயணம்)

தசரத மன்னன் ஆட்சியில் கோசல தேசத்து மக்கள் மருவியிருந்த நிலைமைகளை இவை சுவையா விளக்கியுள்ளன். கவிகளுள் பொதிந்துள்ள நயங்களைக் கருதியுணர்பவர் உள்ளம் பெரிதும் வியந்து மகிழ்வர்.

கடல்படும் அமுதும், மல்லற் கான்படும் அமுதும், ஓங்கும்
தடவரை அமுதும்,ஒன்றித் தலைமயக் குற்ற வாற்றால்
உடைதிரை அமுதம்ஒன்றே உடையவிண் ணுடு கொல்லோ
நிடதநா டதற்கு நேரா நிகழ்த்தலாம் தகைமைத் தம்மா!
(நைடதம்)

நளமன்னன் செங்கோல் ஓச்சிய போது நிடத நாடு செழித்திருந்த நிலைமையை இது தெளித்துள்ளது.

நல்ல பருவ மழையும் நயமான விளைபொருள்களும் செல்வவளங்களும் சேரவேண்டுமானால் அரசன் அங்கே செங்கோல் செலுத்த வேண்டும் என்பதை இங்கே தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம்.

சிறந்த நீதி மன்னன் நாட்டில் எல்லா வளங்களும் நிறைந்திருக்கும்; யாவரும் உவந்து வாழ்ந்து வருவர்.

இவ்வுண்மையைக் கரிகால்வளவன் காட்டி நின்றான்.

சரிதம்.

இவன் சோழமன்னர் மரபினன். இளஞ்சேட் சென்னி என்னும் அரசனுடைய அருமைப் புதல்வன். அதிசய மதிமான். அரிய பல கலைகளை ஆய்ந்து தெளிந்தவன். தந்தை இறந்துபோனமையால் இளமையிலேயே இவன் அரச பதவியை அடைய நேர்ந்தான். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து இவன் அரசு புரிந்து வந்தான். மாறுபட்ட இருவர் தம் வழக்கை அரசன்பால் சென்று தீர்த்துக் கொள்வோம் என்று முடிவு செய்து வந்தார். இவனைக் கண்டார். இளவயதினன் ஆதலால் மிகவும் சிக்கலான தம் வாதத்தைச் சரியாக ஓர்ந்து செவ்வையாக நீதி செய்ய முடியாது என்று அம் முதியவர் திகைத்து நின்றார். அவர் கருத்தைக் குறிப்பால் அறிந்த இவன் அவரை மறுநாள் வரும்படி பணித்து விடுத்தான். ஒரு முதியவன்போல் வடிவம் பூண்டு உரிய நேரத்தில் அரியணையில் இவன் அமர்ந்திருந்தான். வழக்காளர் இருவரும் வந்தனர். யாவும் நேரே விசாரித்தான். உடனே தீர்ப்புக் கூறினான். நீண்ட காலமாகத் தீராமல் வாதாடிப் பகைமை மண்டி நின்ற அவர் தகைமையோடு இவன் தீர்த்த நீதிமுறையை அறிந்ததும் அதிசய பரவசராய் இவனைத் துதிசெய்து தொழுதனர்.

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்

சொல்லால் முறைசெய்தான் சோழன்; குலவிச்சை
கல்லாமல் பாகம் படும். (பழமொழி 21)

இளமை நாணி முதுமை எய்தி
உரைமுடிவு காட்டிய உரவோன்.
(மணிமேகலை 4 : 107)

இக் கோமகன் நீதிமுறை செய்துள்ள சீர்மையை இவற்றால் உணர்ந்துகொள்கிறோம். இவனது அரசாட்சியில் நாடு பலவகையிலும் தலைசிறந்திருந்தது. பல்வகை வளங்களும் எங்கணும் பெருகியிருந்தமையால் எல்லா மக்களும் செல்வங்களில் சிறந்து கல்வி அறிவுகள் நிறைந்து நல்வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்
அன்னோன் வாழி வெல்வேற் குரிசில்;
நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
சூடு கோடாகப் பிறக்கி நாடொறும்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே.
(பொருநராற்றுப்படை)

ஏரியும் ஏற்றத்தி னானும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளன்எல்லாம்—தேரின்
அரிகாலின் கீழ்கூஉம் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு. (தொல் - புறத்திணை 31)

அறநெறி மருவிய செங்கோலன் ஆன இவனுடைய நாட்டில் நிறைந்திருந்த வளங்களை இது காட்டியுளது. இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவன் நாட்டகத்தே பெயலும் விளையுள்களும் எங்கணும் பெருகியிருக்கும் என்பதை உலகம் இவன் ஆட்சியில் கண்டு நின்றது.

**மன்னவன் செங்கோல் மனுநீதி தோய்ந்துவரின்**
**பொன்னு டவனுடே யாம்.**

அரசநீதி அரிய தெய்வ நிதி.

---

## செங்கோலே சிறந்த வெற்றி.

546 வேல்கொண்ட யாரையும் வென்றான் இடபன்செங்
கோல்கொண்ட தாலேன் குமரேசா—மால்கொண்ட
வேலன்று வென்றி தருவது; மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின். (கூ)

இ-ள்.

குமரேசா! செங்கோலை யுடைய இடபன் வேலாளர் எவரையும் எங்கும் ஏன் வென்று விளங்கினான்? எனின், வென்றி தருவது வேல் அன்று; மன்னவன் கோல் அதூஉம் கோடாது எனின் என்க.

கோலும் வேலும் கூர்ந்து உணர வந்தன.

வேந்தனுக்கு வெற்றி யருள்வது வேல் அன்று; அவனது செம்மையான செங்கோல் நீதியே.

வென்றி தருவது வேல் என்று எங்கும் வெளிப் படையாக விளங்கி யுள்ளமையால் அன்று என்று அதனை இங்ஙனம் விலக்கி உரிமையைத் துலக்கினார். உண்மையான வெற்றி நுண்மையா யுணர வந்தது.

வேல்=கூரிய நெடிய ஆயுதம். எவரையும் வெல்ல வல்லது என்னும் ஏதுவால் வேல் என வந்தது.

வேலாயுதத்துக்கு மேலாயுதம் இல்லை என்பது முதுமொழி. இதனால் அதன் வெற்றித் திறலை அறியலாம்.

வீரத்திற்கும் நீதிக்கும் அறிகுறியாக வேலும் கோலும் வேந்தர்க்கு வாய்ந்துள்ளன. இந்த இரண்டனுள் கோலின் மேன்மை சாலவும் சீர்மையாய் இங்கே கூர்ந்து தேர்ந்து தெளிய நேர்ந்தது.

செங்கோலால் வானமும் வையமும் வளம் சுரந் தருளும் என்பதை முன்பு அறிந்தோம்; அரிய வெற்றித் திருவும் பெரிய மாட்சியும் அதனால் எளிதே விளைந்து வரும் என்பதை இதில் அறிந்து கொள்கிறோம்.

அரசுக்கு உரிய தருமம் யாதும் குறையாமல் ஏதும் கோடாமல் எவ்வழியும் செம்மையாய்ச் சிறந்திருப்பதே செங்கோலாம். அதில் தெய்வீக ஆற்றல் மேவியுள்ளமையால் அதுவே யாண்டும் வெற்றியுடன் விளங்கி வரும். தருமமே செயம் என்பது பழமொழியாய் வந்துள்ளது.

கடுஞ்சினத்த கொல்களிறும், கதழ்பரிய கலிமாவும்,
நெடுங்கொடிய நிமிர்தேரும்,
நெஞ்சுடைய புகன்மறவரும், என
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம். (புறம் 55)

யானை தேர் முதலிய நால்வகைச் சேனைகள் நன்கு நிறைந்திருந்தாலும் அறமே அரசனுக்கு வெற்றி தரும் என மருதனிளநாகனார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் பாண்டிய மன்னனிடம் கூறியிருக்கிறார். செங்கோல் ஆட்சியே தென்னவர் மாட்சியாய்ச் செழித்து வந்துள்ளது. அவ் வுண்மையை உணர்ந்து வருகிறோம்.

செங்கோல் வளைய உயிர்வா ழாமைத்
தென்புலம் காவல் மன்னவற் களித்து.
(சிலப்பதிகாரம் 28 - 212)

செங்கோல் வளைய நேரின் பாண்டிய மன்னர் உயிர் வாழ மாட்டார்; அது கோடாத அளவே கூடி வாழ்வார் எனச் சேர மன்னன் இவ்வாறு கூறி யுள்ளான்.

அரச தருமத்தை உயிரினும் பெரிதாகக் கருதி யாண்டும் உரிமையுடன் ஓம்பி வருதலால் அம்மன்னரின் ஆட்சியின் மாட்சியை அறிந்து வியந்து கொள்கிறோம்.

உருளும் நேமியும் ஒண்கவர் எஃகமும்
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்கும்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
அருளும் நீத்தபின் ஆவதுண் டாகுமோ?
(இராமா 2 : 2-11)

அரி அரன் அயன் என்னும் மூவரும் யாவரையும் எளிதே வெல்ல வல்ல அதிசய ஆயுதங்களுடையராயி

னும் அறநீதிகள் இலராயின் வெற்றியாளராய் அவர் விளங்க முடியாது என்று வசிட்ட முனிவர் இராமனுக்கு இவ்வாறு போதித்திருக்கிறார். இந்தப் போதனையை நன்கு சாதனை செய்து வந்துள்ளமையால் **தருமமூர்த்தி** என இக்கோமகன் பெருமை மிகப் பெற்றான். அறத்தை யாண்டும் எல்லாருக்கும் வலியுறுத்தி வந்துள்ளான்.

இறத்தலும் பிறத்தல்தானும் என்பன இரண்டும் யாண்டும்
திறத்துளி நோக்கின் செய்த வினைதரத் தெரிந்த வன்றே!
புறத்தினி உரைப்பது என்னே? பூவின்மேல் புனிதற் கேனும்
அறத்தினது இறுதி வாழ்நாட்கு இறுதிஅஃது உறுதி என்ப.
(இராமா 5 - 8 : 35)

அரசனைக நேர்ந்த சுக்கிரீவனை நோக்கி இராமன் இங்ஙனம் உணர்த்தி யருளினான். படைப்புக் கடவுள் ஆகிய பிரமாவேயானாலும் அறத்தைக் கைவிடின் அழிவே யாம். **அறத்தினது இறுதி வாழ்நாட்கு இறுதி; அஃது உறுதி** என்னும் இந்த வாசகத்தின் வேகத்தை விவேகத்தோடு யோசித்துச் சிந்திக்க வேண்டும்.

அறத்தினால் அன்றி அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்
மறத்தினால் அரிது என்பதை மனத்திடை வலித்தி.

பல்லாயிரம் படைகளுடன் மூண்டு வந்து தன்னோடு போராடி யாவும் இழந்து அபலையாய் அலமந்து நின்ற இராவணனை நோக்கி இராமன் இவ்வண்ணம் உண்மையை உரிமையுடன் இரங்கி உணர்த்தி யுள்ளான்.

எவ்வளவு வலிமைகளை யுடையனாயினும் அறத்தை இழந்தவன் இழிந்தே போவான். உலகுக்கு அரசன் உயிர்; அரசனுக்கு அறம் உயிர்; அதைத் தழுவியுள்ள அளவே அரசன்; நழுவின் விரசன்.

அறந்தலை நீங்கக் காக்கும் அரசன் யான் ஆக.
(சிந்தாமணி 2067)

சீவகன் இவ்வாறு சபதம் கூறியிருக்கிறான். அறத்தை நழுவுவது அரசர்க்கு எவ்வளவு பழி! எத்துணை யிழிவு! என்பதை இதனால் அறிகின்றோம்.

அரசன் செங்கோலனுயின் யாவரும் அவன் பால் அன்புடையராய் அடங்கி நிற்பர்; அறமும் பெருகும்; தருமமே இருமையும் இன்பம் தரும் ஆதலால் யாண்டும் மேன்மையாய் என்றும் வென்றியுடையனுய் எவ்வழியும் புகழோடு அவன் விளங்கி நிற்பன்.

மன்னவன் வலிசெங் கோலினு லன்றி
 வாளினுல் சேனையால் இல்லை;
நன்னெறி வழுவா மன்னவன் தனக்கு
 நாடெலாம் பேரரண்; உலகில்
மன்னுயி ரெல்லாம் அவன்படை; அன்னோர்
 மனமெலாம் அவனுறை பீடம்
இன்னதன் மையனுய் அரசளிப் பவனை
 இகல்செயும் செறுநரும் உளரோ? (நீதிநூல்)

செங்கோலே மன்னவனுக்கு வலிமை; வாள் வேல் சேனைகள் அல்ல; என இது குறித்துளது. குறிப்புகள் யாவும் கூர்ந்துணர வுரியன. கோல் செம்மை தோய்ந்து வரின், கோன் யாண்டும் மேன்மையாய் நன்மை தோய்ந்து நன்கு விளங்குகிறுன்.

**கோல்** என்றது ஈண்டு அரச நீதியை. அது யாதும் கோடாமல் அமைந்துவரும் அளவே அதிசய வெற்றிகள் நிறைந்து வரும். கோடினுல் கேடுகள் கிளைத்து வரும். நீதி ஒளிபெற்று வரும் வரையும் அரசு தெளிவுற்றுச் சிறந்து எவ்வழியும் செழித்துத் திகழ்ந்து வருகிறது.

அதூஉம் என்றது இன்னிசை அளபெடை.

"கோலது கோடான் எனின்" எனவும் பாடம்.

செங்கோல் மன்னன் எங்கும் வெற்றியுடையனுய் யாண்டும் இசைபெற்று உயர்ந்து விளங்குவன்.

இவ் வுண்மை இடபன் பால் அறிய வந்தது.

சரிதம்.

இந்த மன்னன் மனு மரபினன், நாபி என்னும் அரசனுடைய அருமைத் திருமகன். தாய் பெயர் மேருத் தேவி. இவன் தெய்வத் திருவருள் பெற்றவன். திருமா

லின் அருள் ஒளி இவனிடம் தெளிவாய் மருவியிருந்தது. இளமையிலேயே பெரிய கலைஞானியாய் விளங்கியிருந் தான். சிறந்த மதியூகியான இவன் சயந்தி என்னும் தெய்வ மங்கையை மணந்து அரிய போகங்களை நுகர்ந்து மாந்தர் யாவரும் யாண்டும் மகிழ்ந்து வாழ்ந்து வரச் செங்கோல் செலுத்தி வந்தான். இவனது அரச நீதி தெய்வ நீதியாய்ச் சிறந்து எவ்வழியும் இசை மிகுந்து வந்தது. அரிய தவமுனிவர்களும் இவனுடைய தரும நீர்மைகளைக் கண்டு பெரிதும் வியந்து புகழ்ந்து வந்தனர். மாறுபட்ட பகைவர் யாரும் இல்லாமையால் போர் என்பதை இவன் யாதும் அறியாமல் நின்றான். இவனுடைய அறவுரைகளைக் கேட்டு அனைவரும் இனிய ராய் ஒழுகி இருமையும் பெருமை மிகப் பெற்றார். அயலே வருகிற இவன் சரித்திரக் குறிப்புகள் ஈங்கு நன்கு ஆய்ந்து அறிய வுரியன.

பயந்தநன் மகவென்று ஓதும்
  பசுந்துழாய் இடபன் என்போன்
சயந்திஎன்று உரைக்கு மாதைச்
  சதமகன் அளிப்ப வேட்டு
வயந்தரு வளம் செறிந்த
  மாநிலம் மகிழ்ந்து காப்ப
நயந்துநற் றவஞ்செய் வான்கான்
  நண்ணினன் நாபி மாதோ! (1)

மழைவளம் சிறப்ப முந்நீர்
  மாநில வளாகம் காத்து
விழை வெறிந்து உலக மெல்லாம்
  மெய்ந்நெறி படரும் வண்ணம்
பழமறை முடிவு கூறும்
  பாடல்சால் இடபற்கு ஆங்கு
நுழைபுலன் வாய்ந்த மைந்தர்
  நூற்றுவர் தோற்றம் செய்தார். (2)

மருவருந் துறவு பூண்டு
  மைந்தர்ஒன் பதின்மர் செல்ல

உரைசெய் வேதியராய் எண்பத்
தொருதிறற் குமரர் செல்லப்
பரதன்என் றுலகம் ஏத்தும்
பரிதிவேல் மைந்தன் ஏனை
அரசிளம் குமரர் தம்மோடு
அகனிலம் புரவு பூண்டான்.

மன்னிய துறவ றங்கள் வழங்கியும் வங்க மாதி
உன்னிய தேயத் தூம ருணர்விலாப் பெயரே போலத்
துன்னியும் உலகுளோர்க்குத் தொலைவில்பேர் வீடுசேரும்
நன்னெறி தெரித்தும் முத்தி நண்ணினன் இடபன்மாதோ!
(பாகவதம் 5.1)

இவ் வேந்தன் மாநிலம் புரந்து மேல்நிலை யடைந்துள்ள உண்மைகளை இவற்ருல் உணர்ந்துகொள்கிறேம். நீதிமுறையோடு செங்கோல் செலுத்தி வந்தமையால் எங்கும் வெற்றியாளனுய் விளங்கி நின்ருன். வெற்றி தருவது வேல் அன்று; மன்னவன் செங்கோலே என்பதை உலகம் இவன் பால் உணர்ந்து தெளிந்தது.

**செங்கோல் அரசு செலுத்திவரின் எவ்வழியும்
பொங்கிவரும் வெற்றி பொலிந்து.**

*அறநெறியே அதிசய வெற்றி.*

---

**இறையை முறை காக்கும்.**

547. ஆவினிளங் கன்றும் அமைச்சும் உயிர்த்தெழுந்த
கோமுறையால் என்னே குமரேசா—மேவும்
இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். (எ)

இ-ள்.

குமரேசா! உயிர் துறந்த அமைச்சையும் கன்றையும் முறை புரிந்த மன்னன் ஏன் எழுந்துவரப் பெற்ருன்? எனின், வையகம் எல்லாம் இறை காக்கும்; அவனை முறை காக்கும் முட்டாச் செயின் என்க.

காவலனைக் காக்கும் காவலனை இது காட்டியுளது.

உலகத்தை எல்லாம் அரசன் காத்தருளுவன்; அவனை நீதி முறை காத்து வரும்: அதனை அவன் எவ்வழியும் வழுவாது உறுதியாச் செய்துவரின்.

செயின், காக்கும் என்றது செய்யாவழி அவனை அது காவாது என்பது தெரிய நின்றது. உரிய செயல் செய்து வருபவனே அரிய பயனை அடைகிருன். வினையின் அளவே விளைவு விளைந்து வருகிறது.

இறை= அரசன். எங்கும் நிகழ்வதைக் கூர்ந்து ஓர்ந்து அங்கங்கே தக்கவாறு இறைவன்போல் நீதி புரிபவன் என்பதை இந்த அரிய பேர் தெரிய விளக்கியது.

வையத்தைக் காப்பவனுக்குத் தெய்வத்தின் பெயரை வைத்தமையால், அவனுடைய சிறப்பையும் பொறுப்பையும் சீர்மை நீர்மைகளையும் கூர்மையாய் அறிந்து உண்மையைத் தெளிந்து கொள்கின்ரேம்.

முறை=அரச நீதி. கடமையாய்க் கருதி எவ்வழியும் செவ்வையாச் செய்ய வுரியது என்னும் குறிப்பு இவ் வுரையுள் உறைந்துள்ளது.

முட்டா= தடையுருமல். முட்டு= தடை; குறை.

நீதிமுறையை நேர்மையாய்ச் செய்ய முடியாதபடி இடையே நெடிய தடைகள் நேரினும் தளர்ந்து விடாமல் துணிந்து அதனைச் செவ்வையாச் செய்து முடிப்பவனே செங்கோல் வேந்தன் ஆவான். அவனே சிறந்த மேன்மைகளை அடைந்து விளங்குவான். சோதனைகள் மூண்டு முட்டினும் நீண்டு தட்டி நீதி வழுவாது ஒழுகின் அவன் அதிசய நிலையில் துதிசெய்யப் பெறுவான்.

தனது கடமையைச் சரியாகச் செய்யும் அரசனைக் கடவுள் காப்பார் என்னுமல் அவன் முறையே காக்கும் என்ருர்: அதுவே அவருக்கு வடிவமாகலின். முறை புரியும் இறையை இறைவன் இனிது பேணி வருகிருன்.

முறைமைமுட் டாது செய்து
  முழுநிலம் காப்பின் அந்த
இறைவனைச் செங்கோல் காக்கும்;
  எளியசெவ் வியனும் ஆகான்;

குறைவளர் குற்றம் ஓரான்;
குணத்தொடு முறைசெய் யாணை
நிறைதரு பாவம் தேய்க்கும்;
நெடும்பகை இன்றும் ஏனும். (விநாயக புராணம்)

தோன்றிமாய்ந் துலக மூன்றில்
துயர்எய்தும் உயிர்கள் தம்மை
ஈன்றதாய் போல ஓம்பி
இன்பத்துள் இருத்தி நாதன்
மூன்றுல கிற்கும் ஆக்கி
முடிவிலாத் தன்மை நல்கும்
ஆன்றநல் அறத்தைப் போலும்
அரியதொன் றில்லை என்றான்.
[மேருமந்தர புராணம்]

தன்புகழ் கருதி மருவல ரோடும்
சமர்புரிந் துயிர்களை மாய்த்துத்
துன்பமே செய்ய இயைந்திடான்; முற்போர்
தொடுத்திடான்; தன்னுயி ரனைய
மன்பதைக் கிடுக்கண் யாவரே செயினும்
வாளமர் இயற்றிநீக் கிடுவான்;
இன்பதுன் பங்கள் தனக்கும் மற்றவர்க்கும்
ஏகம்என் றெண்ணுவோன் வேந்தே. (நீதிநூல்)

இவை ஈண்டு எண்ணி உணர வுரியன. செங்கோல் வேந்தனுடைய நிலைமை தலைமைகளையும், தருமமும் நீதியும் அவனைப் பாதுகாத்து வரும் பான்மைகளையும் இவற்றால் மேன்மையா உணர்ந்து கொள்கிறோம்.

நீதி மன்னனை அந்த நீதியே பாதுகாத்து அருளும்.

இது மனுநீதி கண்ட சோழன் பால் தெரிய வந்தது.

## சரிதம்.

திருவாரூரில் இருந்து அரசு புரிந்து வந்த இந்த வேந்தனிடம் அரிய பல குணநலன்கள் அமைந்திருந்தன. எல்லா உயிரினங்களையும் தன் உயிர்போல் எண்ணி இனிது ஆதரித்து வந்தமையால் புண்ணிய மூர்த்தி என்று யாவரும் இவனைப் போற்றி வந்தனர்.

ஒருநாள் தனது அருமைத் திருமகன் தேர் ஏறிச் செல்லுங்கால் அதனிடையே பசுவின் கன்று ஒன்று பாய்ந்து சிக்கி மாய்ந்து போயது. அதனை அறிந்ததும் அரசன் உள்ளம் பதைத்தான். கொடிய கொலைக் குற்றம் என்று வருந்தி மகனுக்கு மரண தண்டனை விதித்தான். மந்திரிகள் மறுகித் தடுத்தார். அறியாமல் செய்த கொலைக்கு மனு நீதியில் கூறியுள்ளபடி வேள்விகள் செய்தால் தீர்ந்து போம் என்று உரைத்தார். அந்த அமைச்சர்களை இவன் மறுத்து வெறுத்தான்.

மன்னன் உரைத்தது.

என்மகன்செய பாதகத்துக்கு இருந்தவங்கள் செய இசைந் [தே
அன்னியன்ஓர் உயிர்கொன்ருல் அவனைக்கொல் வேன் [ஆனுல்
தொல்மனுநூல் தொடைமனுவால் துடைப்புண்ட தெனும் [வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர்! மந்திரிகள் வழக்கு என்ருன்.

இந்தவாறு மொழிந்துவிட்டு மரண தண்டனையை நிறைவேற்றும்படி முதல் மந்திரிக்கு ஆணையிட்டான். இளவரசனைக் கொல்லக் கூசி தன் உயிரை அவன் மாய்த்துக் கொண்டான். முடிவில் இவனே அதனைச் செய்ய மூண்டான். எந்த இடத்தில் ஆவின் கன்று இறந்துபட்டதோ அந்த இடத்தில் தன் மகனைக் கிடத்தினுன். தேரில் ஏறினுன்; ஊரும் நாடும் ஓலமிட்டு அழுதன. எதையும் கவனியாமல் நேரே தேரைச் செலுத்தினுன். “இறைவா நில்!” என்று வானிலிருந்து ஒலி எழுந்தது; இறந்துபோன கன்று எழுந்து துள்ளியது; மடிந்த மந்திரியும் விரைந்து எழுந்தான்; மகனும் சுகமாய்த் தந்தையின் அடிபணிந்து நின்ருன். இந்த அதிசய அற்புதங்களைக் கண்டதும் வேந்தன் வியந்து ஆண்டவன் அருள் புரிந்துள்ளதைக் கருதி யுருகினுன். மாந்தர் எல்லாரும் இம் மன்னனது நீதி முறையைப் புகழ்ந்து போற்றினுர். மறுபுல மன்னரும் அரச குல திலகம் என இக் கோமகனைக் கொண்டாடி வாழ்த்தினுர். முறையை

முட்டாமல் செய்யின் அந்த இறையை அது காத்தருளும் என்பதை இந்தச் செங்கோல் வேந்தனிடம் எல்லாரும் தெளிவாய்த் தெரிந்து மகிழ்ந்தனர்.

**நீதி வழுவாமல் நேர்ந்து வரும்அரசை**
**ஆதியருள் காத்து வரும்.**

*எவ்வழியும் நீதியைச் செவ்வையாய்ச் செய்.*

---

**முறை ஒழியின் இறை அழியும்.**

548 திண்டோட் சுதயனன்முன் தேர்ந்துமுறை செய்யாமல்
கொண்டான்கே டென்னே குமரேசா—தண்டாமல்
எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும். (அ)

இ-ள்.

குமரேசா! ஓர்ந்து முறை செய்யாத சுதயனன் ஏன் விரைந்து கெட்டான்? எனின், எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன் தண்பதத்தான் தானே கெடும் என்க.

அரசு கெடுவது அறிய வந்தது.

எளிய செவ்வியனாய் ஓர்ந்து நீதிமுறை செய்யாத அரசன் தாழ்ந்த நிலையிலே இழிந்து தானே அழிவான்.

எண்பதம்=எளிமையாய் அளி புரிவது.

முறை வேண்டியும் குறை வேண்டியும் தன்னை நாடி வருகிற குடிகளுக்கு எளிதே காட்சி தந்து அவர்க்கு வேண்டிய இதங்களை விரைந்து செய்தருளுபவனே சிறந்த செங்கோல் வேந்தனாய் உயர்ந்து விளங்குவான். அரிய நிலையிலுள்ள அரசன் பொதுமக்களுக்கு எவ்வழியும் எளியனாய் நேர்ந்து அளி புரிந்து ஆதரித்துவரின் ஆட்சிக்கு அது பெரிய ஒரு மாட்சியாகும் ஆதலால் எண்பதத்தான் ஆதலை முன்புற வைத்தார்.

எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (குறள்: 991)

என்பது இங்கே சிந்திக்க வுரியது.

எண்பதத்தை யாகுமதி பெரும! (புறம், 40)

**ஆவூர்மூலங்கிழார்** என்னும் சங்கப் புலவர் ஒரு மன்னனுக்கு இன்னவாறு அறிவு கூறியிருக்கிறார். எண்பதத்தன் ஆனால் அந்த அரசபதவியில் எண்ணரிய பலன்கள் இனிது பதிந்து வருகின்றன.

ஓரா=ஓர்ந்து ஆராய்ந்து.

எண்பதம், ஓர்தல், முறை செய்தல், ஆகிய இவை செங்கோல் ஆட்சியின் சீர்மைகள் ஆதலால் அந்த மாட்சிகள் ஈண்டு முறையே தெரிய வந்தன.

தண்பதம்=தாழ்ந்த தரம்; இழிந்த நிலை.

எண்பதம் இன்றி அருஞ் செவ்வி இன்னாமுகத்தனா யிருக்கும் அரசன் தானாகவே இழிந்து அழிந்துபோவான் என்பார் **தானே கெடும்** என்றார். கெட்டவனை யாரும் கெடுக்க வேண்டியதில்லை; அக்கேடே அவனைக் கடுமை யாய்க் கெடுத்து விடும்.

கேடு நேராமல் யாண்டும் சீரும் சிறப்பும் நிறைந்து அரசன் சிறந்து வர வேண்டுமானால் நாட்டு மக்களுக்கு நல்ல காட்சி நல்கி யாவும் நாடி ஆராய்ந்து எவ்வழியும் நெறிமுறையே உதவி புரிந்து வர வேண்டும்.

ஒற்றின் தெரியாச் சிறைப்புறத்து ஓர்துமெனப்
பொற்றோள் துணையாத் தெரிதந்தும்—குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை; சென்று
முறையிடினும் கேளாமை யன்று. [நீதிநெறி 32]

**செங்கோன்மையின்** பான்மையை இது விளக்கியுளது.

கூர்ந்து ஓர்ந்து மாந்தருக்கு முறைசெய்வதே வேந்தன் கடமையாம். பிறரிடம் குற்றம் குறைகள் நேராமல் காக்க வுரியவன் ஆதலால் தன்னிடம் அவை யாதும் இல்லாமல் நெறியே இருப்பவனே நீதி மன்னனாகிறான்.

கைப்புரை ஏற்றுப் பொய்ப்புகழ் ஏலாக்
காதினன்; அருள்பொழி கண்ணன்;
தப்புரை வழங்கா நாவினன்; புவியோர்
தாசன்தான் எனவுணர் மனத்தன்;

செப்பயல் மடவார் காணரும் உரத்தன்;
திருந்தலர் காணரும் புறத்தன்;
எப்பொழு தினும்சென்று யாரும்காண் முகத்தன்;
ஈசன் அன்புடையவன் இறையே. (நீதிநூல்)

உண்மையான செங்கோல் மன்னன் எப்படியிருப்பான்? என்பதை இது செப்பமா வரைந்து காட்டியுளது. கருத்துக்களைக் கருத்தூன்றிக் கவனியுங்கள். கண் காது நாக்கு முகம் மார்பு முதுகு மனங்களைக் குறித்திருக்கும் குறிப்புகள் கூர்ந்து ஓர்ந்து சிந்திக்க வுரியன.

ஓர்ந்து முறை புரியாத அரசன் தாழ்ந்து கெடுவான்.

இது சுதயனன் பால் தெரிய வந்தது.

## சரிதம்.

இவன் சந்திர குல வேந்தன். சயதீபன் என்னும் மன்னன் புதல்வன். பருவம் அடைந்தவுடன் இவன் அரசு உரிமையை அடைந்து ஆட்சி புரிய நேர்ந்தான். இவனுடைய மனைவி பெயர் சுதமதி. பேரழகுடையவள். அவளது போக நுகர்விலேயே மோகம் மீதூர்ந்து ஏகமாயிழிந்து இவன் விவேகம் இழந்திருந்தான்.

தவளைக் கிண்கிணித் தாமரைச் சீறடிக்
குவளை யேயளை வுள்ள கொழுங்கணுள்
அவளை யேயுயிர் தாகஅவ் அண்ணலும்
உவள கம்தன தாக ஒடுங்கினன்.

அந்தப்புரத்திலேயே இன்னவாறு இவன் அடங்கிக் கிடந்தமையால் எந்தப்புறத்தையும் பாராமல் யாதொரு காரியத்தையும் நேரே கவனியாமல் இருந்தான். அரசு முறை சரியாக நடவாமையால் யாண்டும் அல்லல்கள் நீண்டன. கள்வர் முதலிய புல்லர்கள் பெருகி எங்கணும் பொல்லாங்குகள் புரிந்தனர். நாட்டு மக்கள் பல திசைகளிலுமிருந்து நாளும் இவனை நாடி வந்தனர். அவர்களுடைய குறைபாடுகளைக் கேட்டு யாதொரு ஆதரவும் புரியாமையால் இவனை வெறுத்து வைது அவர் விலகிப் போனர். வரி முதலியன செலுத்தாமல் யாவரும்

வயிரம் பூண்டு நின்றனர். நிதி குறைந்தது; வறுமை நிறைந்தது; அரசும் நிலைகுலைந்தது; இவனும் இழிவாய் அழிவுற நேர்ந்தான்.

மதமிகு சுதயனன் மதியி ழந்ததால்
இதமுடன் இருந்தவர் எவரும் நீங்கினர்;
நிதமும்வெந் துயரங்கள் நெடிது நீண்டன;
பதவியை யிழந்தனன் பழிப டிந்துமே.

செவ்வையாய் அரசு செய்யாமையால் இவ்வாறு இவன் இழிந்து அழிந்தான். எண்பதத்தனாய் ஓர்ந்து முறை செய்யாத மன்னவன் தாழ்ந்து தானே கெடுவான் என்பதை இவன் கேடு நாடறிய விளக்கி நின்றது.

**நாடு மகிழ நலம்புரியா மன்னவன்**
**கேடு மருவிக் கெடும்.**

*நீதி புரியா அரசு நிலைகுலைந்து போம்.*

---

### கோனின் குலத் தொழில்.

549. உற்ற குடிகளை ஓம்பியேன் வச்சந்தன்
குற்றம் கடிந்தான் குமரேசா—முற்றும்
குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடிவன்று வேந்தன் தொழில். (கூ)

இ-ள்.

குமரேசா! குடிகளை இனிது பேணிக் குற்றங்களை ஏன் கடுமையாக வச்சந்தன் நீக்கினான்? எனின், குடிபுறங்காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் வடு அன்று; வேந்தன் தொழில் என்க.

குடிமக்களை நன்கு பாதுகாத்து ஆதரித்துக் குற்றங்களைக் கடிந்து நீக்குதல் பிழை அன்று; அரசனுடைய உரிமையான கடமையாம்.

காத்தல் ஓம்பல் கடிதல் ஆகிய மூன்று தொழில்களும் அரசன் பிறப்புரிமையாக் கருதி யாண்டும் மூண்டு முனைந்து முறையே செய்ய வுரியன.

புறம் காத்தல்=பிறர் நலியாமல் எவ்வழியும் தன் குடிகளைச் செவ்வையாகப் பேணுதல்.

ஓம்பல்=வாழ்க்கை நலமாய் நடந்துவர ஆதரித்தல்.

கடிதல்=களவு முதலிய குற்றங்களைக் கடிந்து நீக்குதல். அல்லல்களை ஒழிப்பதே நல்ல ஆட்சியாம்.

வடு=வழு; பழி. பிழைகளைப் பேர்த்து எறியும் வழியில் கடுமையா யிருப்பது வடுவாகாது.

ஓர்ந்து முறை செய்து வருங்கால் குற்றமுடையா ரைத் தண்டிக்க நேர்ந்தால் அதற்காக அரசன் வருந்த லாகாது. குற்றங்களை ஒழித்து நீக்கிய அளவுதான் குணங்கள் நாட்டில் தழைத்து ஓங்கி வரும்.

தண்ணளியோடு எல்லா உயிர்களையும் தாங்கிப் பேணுதற்குரிய அரசன் சிலரைத் தாக்கி நீக்குகிறான். சிறையில் இடுதல்; உடைமையைக் கவர்தல்; ஒறுத்து அடக்கல்; நாட்டை விட்டு அகற்றல் முதலிய துயர் களைச் செய்கிறான். இவ்வாறு செய்வது அவனுக்கு வசை யன்று; இசையே யாம்.

கள்வர் புல்லர் வஞ்சர் பகைவர் முதலாயினோரால் குடிகளுக்கு இடையூறு நேராமல் காத்தலும், மிகுதி யான வரியைத் தான் விழைந்து கொள்ளாமலும், தளர்ந்தபொழுது உதவுதல் முதலிய இதங்களை உவந்து செய்தலும், பிழைகளைக் கண்ட இடத்துக் கடுமை யாய்க் கண்டித்து ஒழித்தலும் காவலனுக்குரிய கருமங் களாம். உரிய கருமம் புரிவது அரிய தருமமாம்.

வேந்தன் தொழில் என்றது அரச குல தருமம் என்பதாம். அதனைச் செய்து வருவதே சிறப்பாம்.

மாநிலம்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த்து அறம்காப்பான் அல்லனோ?

(பெரிய புராணம்)

பரிசனம் பகைவர் கள்வர் படர்தரும் உயிர்கள் தாம் என்று
உரைசெய் ஐந்திடத்தி னும் உலகிடை யிடையூறு எய்தா
வரிசையில் காத்து நீதி வழுக்கினுர் தம்மை மொத்திக்
கரிசறப் பொருளும் கோடல் காவலர் தருமம் மைந்தா!

(விநாயக புராணம்)

வேந்தன் உரிமையோடு செய்ய வுரிய தொழில்களை இவை குறித்துள்ளன. பொருள் நிலைகளை உணர்ந்து கொள்ள வேண்டும். முடி மன்னனுடைய பெருமை யெல்லாம் குடிமக்கள் வாழ்வின் வகையிலேயே தொகை யாய் மருவியுள்ளது. அந்த உண்மையை இடங்கள் தோறும் அறிந்து வருகிறேம். எந்த நாட்டில் மக்கள் அல்லலின்றிச் சுகமாய் வாழ்ந்து வருகிறுர்களோ அந்த நாடே நல்ல அரசனையுடைய நயமான நாடாம்.

எண்ணினர் எண்ணகப் படாத செய்கையன்;
அண்ணினர் அகன்றவர் திறத்தும் ஆணையான்;
நண்ணினர் பகைவர்என் றிவர்க்கு நாளினும்
தண்ணியன் வெய்யன்நம் தானை வேந்தனே.

(சூளாமணி)

தன் செங்கோல் ஆணையை எங்கும் கோணமல் செலுத்துபவன்; குடிகளுக்கு இனியவன்; பகைவர்க்குக் கொடியவன் என ஒரு மன்னனுடைய நிலைமை தலைமை தகைமைகளை இதில் தெளிவா உணர்ந்து கொள்கிறேம்.

நல்லவரை நன்கு பாதுகாத்துத் தீயவரை யாண்டும் வெறுத்து ஒழித்து நீதிமுறை புரிந்து வருவதே அரச தருமமாம். இது வச்சந்தன்பால் தெரிய வந்தது.

### சரிதம்.

இவன் சந்திர குல வேந்தன். பனந்தன் என்னும் அரசனுடைய அருமைத் திருமகன். அருந்திறலாண்மை யும் பெருந்தகைமையும் பேரறிவும் உடையவன். மக்கள் சுகமாய் வாழ்ந்து வரும் வழிகளையே ஓர்ந்து புரிந்தவன். நெறி நியமங்களையும் நீதி நிலைகளையும் நன்கு ஓதி யுணர்ந்தவன். இவனது ஆட்சி யாண்டும் மாட்சியாய் நடந்து வந்தமையால் யாவரும் மகிழ்ந்து வந்தனர். குறு

நில மன்னர் பலர் இவனுக்குத் திறை செலுத்தி வந்த னர். அவருள் **விடூரதன்** என்னும் பேருடைய ஒருவன் இவனிடம் பேரன்புடையவன். அவனுடைய எல்லையில் வந்து மலைநாட்டுக் கள்ளர்கள் இடையிடையே அல்லல் களை விளைத்தனர். அந்தக் கொள்ளைக் கூட்டத்துக்குத் தலைவன் மிகவும் பொல்லாதவன். **குசாம்பன்** என்னும் பேரினன். மல்லமரிலும் வாளமரிலும் வல்லவன். தன்னை யாரும் வெல்ல முடியாது என்ற வீறோடு செருக்கி யாரையும் மதியாமல் எங்கும் படைகளோடு சென்று இடர்கள் விளைத்து வந்தான். நண்பனும் குடி களும் வந்து இவனிடம் முறையிட்டனர். இவன் சேனை களோடு சென்று போராடி அவனைக் கொன்று தொலைத் தான். அந்தத் தீய கூட்டத்தாரை அடியோடு அழித்து ஒழித்தான். கொடிய கேடுகள் நீங்கின என்று நாடு எங்கணும் நெடிய மகிழ்ச்சி பொங்கி எழுந்தது. **வச்சந் தன் வாழ்க** என்று நாட்டு மக்கள் யாவரும் இவனை வாழ்த்தி வணங்கி வெற்றி விழாக் கொண்டாடினர். களவு சூது கபட வஞ்சனைகள் முதலிய தீமைகள் தன் நாட்டில் யாண்டும் தலை நீட்டாதபடி இவன் நிலைநாட்டி வந்தான். குடிகள் உள்ளம் உவந்து வாழ்ந்து வரவே இவன் புகழ் வெள்ளமாய் விரிந்து வந்தது. குடி புறங் காத்து ஓம்பிக் குற்றம் கடிபவனே குலவேந்தன் ஆவான் என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்றான். விரிவை மார்க்கண்டேய புராணத்தில் காண்க.

குடிகள் இன்பமாய் வாழ்வதே கோமுடி மன்னன்
படிபு ரந்தருள் பான்மையின் மேன்மையா மென்ன
வடிகொள் வேலுடை வச்சந்தன் செய்யகோல் ஓச்சி
நெடிய நீள்கடல் நெடுநிலம் நேர்நின்று காத்தான்.

**மாந்தர் மகிழ்ந்து வளமாய் வளர்ந்துவரின்**
**வேந்தன் விளங்கி வரும்.**

குற்றங்களை நீக்கிக் குணங்களை ஆக்குக.

———

**550. அரச தண்டனையின் அமைதி.**

**கொற்ற அரக்கரைமுன் கொன்றழித்தும் சீராமன்
குற்றமற்ற தென்னே குமரேசா—முற்றும்
கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். (ய)**

இ—ள்.

குமரேசா! அரக்கர் குலத்தைக் கொன்றழித்தும் இராமன் ஏன் கொலைக் குற்றமின்றி நின்றான்? எனின், கொலையின் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களைகட்டதனொடு நேர் என்க.

மரண தண்டனையை இது குறித்துள்ளது.

கொல்லுதலில் கொடியரான தீயரை அரசன் கொன்று ஒழித்தல் பயிர்க்கு உழவன் களையைக் களைந்து எறிதல் போலாம்.

கொலையின் கொடியாரைக் கொலையின் ஒறுத்தல் என்று கூட்டி நோக்குக. செய்த தீமைக்குத் தக்கபடியே தண்டனையும் கொடிய தீமையாய் மண்டி வரும். கரும விளைவுகளின் வழியே அரச தருமங்கள் நெறிமுறையே தெரிய வருகின்றன.

களவு, வழிப்பறி, பிறனில் விழைதல் முதலிய பிழைகளைச் செய்பவரைக் கொல்லுதல் இல்லை. ஆடு கோழி முதலிய பிராணிகளைக் கொன்று தின்பவரும் கொலைக் குற்றத்துக்கு ஆளாகார்.

ஒரு மனிதனுடைய உயிரை அந்த உடலில் இருந்து கொன்று நீக்கிய கொலைகாரனுக்கே கொலைத் தண்டம் உரிமையாகிறது. மரண தண்டனை என்பது மரணம் கொண்டவனையே மண்டிக் கொள்கின்றது.

மனித சமுதாயம் இனிது வாழவே மன்னவன் நீதி மன்னி வந்துள்ளது. அயலே நேர்கிற அல்லல்களை நீக்கி நல்லது செய்யவே செங்கோல் ஆட்சி சேர்ந்திருத்தலால் வெய்ய தண்டனையும் விதி நியமமாய் விரவி நின்றது.

வேந்து=அரசன். மாந்தருள் மேலாய் மேவியுள்ள வன் என்னும் பொருள் இதில் மருவியுளது. காரணக் குறிப்பைக் கருதி உணர்ந்து கொள்ளுக.

பைங்கூழ்=பசிய பயிர். கூழ் என்னும் உணவின் பெயர் அதற்கு மூலமாயுள்ள விளை பயிர்மேல் நின்றது.

களை என்றது நல்ல பயிர்களிடையே தடையாகக் கிளைத்து நிற்கின்ற இழிந்த புல் பூண்டுகளை. களைந்து அயலே எறிய வுரியது களை என நேர்ந்தது.

கட்டது=கடிந்து நீக்கியது. இளங் களைகளைக் கையால் அகழ்ந்து எடுப்பர். முதிர்ந்தவற்றை வெட்டி எறிவர். கொடிய தீயரை இதனோடு ஒட்டி யுணர்க.

கொடியாரைக் களையோடு நேர் நிறுத்தியது ஏன்? எனின், அவரால் உலகிற்குப் பயனில்லாமையும் இடையூறுகள் நெடிது நீண்டுள்ளமையும் தெரிய என்க. பாழான அவர் பாழாய் ஒழிவது ஊழ்முறையாயுளது.

மேல், குற்றம் கடிதல் வேந்தன் தொழில் என்றார்; இதில், கொலைத் தண்டம் புரிதலும் அவனது குல தருமம் என்கின்றார்.

உழவன் களையைக் களைந்து ஒதுக்கிப் பயிர்களை வளர்க்கிறான்; அரசன் கொடியரைக் கடிந்து ஒழித்துக் குடிகளைப் பேணுகிறான். பொருளின் குறிப்புகள் தெளிவாய் விளங்க உவமை வந்தது.

உழவன் அரசனுக்கும்,
நிலம் நாட்டுக்கும்,
பயிர் குடிகளுக்கும்,
களை கொடியருக்கும்,

களையைக் கல்லுதல் கொடியரைக் கொல்லுதலுக்கும் ஒப்பாம். ஒப்பின் நுட்பங்கள் உய்த்துணர வுரியன.

ஏர் உழவன் தார்க்கோலை யுடையவன்;

வேல் உழவன் செங்கோலை யுடையவன். அவன் பயிர்களைப் பாதுகாக்கிறான்; இவன் உயிர்களைக் காக்கிறான்.

தன் உயிர்போல் மன்னுயிர்களைக் காக்க உரிய மன்னவன் கொடுமையைக் கண்டவிடத்து எவரையும் கடுமையாய்த் தண்டிக்கிருன். அந்த ஒறுத்தல் குற்றங்களை நீக்கிக் குணங்களை ஆக்கி வருகிறது; வரவே இராச தருமமாய் அது பெருமை பெற்றுளது.

நாயகன் நல்லன் நம்மை நனிபயந் தெடுத்து நல்கும்
தாய்என இனிது பேணித் தாங்குதி! தாங்கு வாரை;
ஆயது தன்மை யேனும், அறவரம் பிகவா வண்ணம்
தீயன வந்த போது சுடுதியால் தீமை யோரை.
[இராமா, 4-8:34]

பெற்ற தாய் பிள்ளைகளைப் பேணுதல் போல் குடிகளைப் பேணுக; யாரேனும் தீமை செய்யக் கண்டால் அவரைச் சுட்டு ஒழி என்று சுக்கிரீவனுக்கு இவ்வாறு இராச நீதியை இராமர் கூறியிருக்கிருர். நல்லவர்க்குத் தாய். அல்லவர்க்குத் தீ என்றது சிந்திக்க வுரியது. அறநெறியில் முறை செய்பவன் தெறல் தெரிய வந்தது. கொடியரைக் கடிதலே கோவின் நிலையாம்.

தத்தம் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமுஞ்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வதவ் வேந்தன் கடனே.
(திருமந்திரம்)

கருவிநஞ் சாதி தம்மால் காமரார் உயிரைக் கொல்வோர்
வெருவரச் சூறை கொள்வோர் மேவிஆ றலைப்போர் கள்வர்
உருவளர் பிறனில் வேட்போர் உவர்முத லோரைக் கோறல்
பருவரு பாவம் அன்று; பயிர்க்களை களைதல் போலாம்.
(விநாயக புராணம்)

காலைதொறும் உழையரொடு நூலாய்ந்து,
குடிமுதலாம் காப்புப் போற்றி,
மேலைநூற் பாவலர்க்கும் வேதியர்க்கும்
ஈந்துபல வேள்வி வேட்டுச்
சாலைதனில் சிவபெருமான் தமர்களொடும்
தமர்களொடும் தகவா யுண்டு

மாலைதொறும் ஒற்றுய்ந்து துயிலிடத்தும்
பார்காப்பார் மனுநூற் செல்வர்.
(திருக்குற்றாலப் புராணம்)

உலகாக்கும் அரசருடைய இயல்புகளையும் செயல் முறைகளையும் இவை நயமா வுணர்த்தியுள்ளன. பொருள் நிலைகளையும் குறிப்புகளையும் ஒறுக்கும் திறங் களையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும்.

''தண்டோ தமயதாம் அஸ்மி'' (கீதை: 10-38)

"கொடியாரை ஒறுத்து அடக்கும் அரசர்பால் நான் செங்கோலாயிருக்கின்றேன்'' என்று **கண்ணன்** இன்ன வாறு தன்னைக் குறித்துக் கூறியிருக்கிறார்.

செங்கோல் அரசன் முறைத்தொழில் போல
அமுதமும், கடுவும், வாளும், படைத்த
மதர்விழித் தாமரை. (கல்லாடம் 46)

நல்லவர்க்கு அமுதம்போல் இனியன்; கொடிய வர்க்கு விடம்போல் அடல் புரிவோன் எனச் **செங்கோல் வேந்தனை** இவ்வாறு **கல்லாடர்** குறித்துள்ளார். குறிப்பு களைக் கூர்ந்து சிந்தித்து வேந்தனது **செங்கோல் முறை மையை** ஓர்ந்து தேர்ந்து கொள்ள வேண்டும்.

கொலையில் கொடியாரை அரசன் கொன்று ஒழிக் காமல் நின்றால் நாட்டுள் கொலையாளிகள் தலை எடுத்து நிற்பர்; அவரால் குடிசனங்கள் நிலைகுலைந்து வருந்துவர். மாந்தரை நீதியோடு பாதுகாக்க வுரிய வேந்தன் தீயரை மாய நூறி வரும் அளவே யாவரையும் இனிது காத்த வன் ஆகிறான்.

கொலை கொடியது; அதனைச் செய்தவன் கொடிய தண்டனையை அடைகிறான். அந்த வினையின் நியதி அரசனது விதியாய் வந்துளது.

He that killeth any man shall surely be put to death.
(Bible: Levi: 24-17)

"கொலை செய்தவன் கொல்லப்பட வேண்டும்.''

கொலைசெய் தவனைக் கொலைசெய் தொழித்தல்
நிலையான நீதி நிலை.

அரசநீதி எந்த நாட்டிலும் இந்த வகையில் நீண்டு வந்துள்ளதை இதனல் ஈண்டு அறிந்து கொள்ளலாம்.

பயிர்களுக்கு இடர் விளேக்கும் கடிய பூண்டுகள் போல் உயிர்களுக்குத் துயர் இழைக்கும் கொடிய தீயர் களே அடியோடு அழித்து ஒழிக்கவேண்டும். பாதுகாப்பு முறையில் தீது தீர்த்தருளுவதே திறல்வேந்தன் கடமை யாய்ச் சிறந்துள்ளது.

நல்லவரை நாடிக் காத்துப் பொல்லாதவரைப் பொன்ற ஒழிப்பவன் வென்றி வேந்தனுய் விளங்கி வரு கிருன். அவன் கீர்த்தி உலகெங்கும் ஓங்கி உலாவுகிறது.

இந்த வுண்மையை இராமன் விளக்கி நின்ருன்.

## சரிதம்.

அரசு முடி துறந்து கானகம் போன பின்னரும் இராமன் அங்கே செங்கோல் நீதி செலுத்தி வந்தான். நல்லவர்களுக்கு அல்லல் நேராதபடி நாடிக் காத்தான். புனித முனிவர்களுக்கு இடையூறுகள் செய்து வந்த கொடியவர்களே ஒறுத்து அடக்கினுன். மாதவர்களுக்கு ஆதரவு செய்ய வாய்த்தமையால் வனம் புகுந்தது தனது வாழ்க்கையில் சிறந்த ஓர் உயர்ந்த பகுதி என்று உள்ளம் உவந்து கொண்டான். அந்த உவகை வழியே பொங்கி வந்த மொழிகள் வீர ஒளிகளாய் விளங்கி வேந்தின் நிலேயை விளக்கி நின்றன.

வேந்தன் வீயவும் யாய்வரம் மேவவும்
ஏந்தல் எம்பி வருந்தவும் என்நகர்
மாந்தர் வன்துயர் கூரவும் யான்வனம்
போந்தது என்னுடைப் புண்ணியத்தால் என்ருன்.

அறந்தவாநெறி அந்தணர் தன்மையை
மறந்த புல்லர் வலிதொலே யேன்எனின்
இறந்து போகினும் நன்றிது வல்லது
பிறந்து யான்பெறும் பேறென்ப தியாவதோ? (2)

(இராமா, 3:3)

இந்தப் பாசுரங்களை ஊன்றி யுணர்பவர் இக்கோமகனுடைய உள்ளக் கிடக்கைகளையும் உயர் பெருந்தகைமைகளையும் ஓர்ந்து தெளிந்து உள்ளம் உவந்து கொள்வர். உலகில் தீமைகளை ஒழித்து நன்மைகளை வளர்ப்பதே தான் பிறந்த பிறவியின் பயன் என்று கருதி யிருக்கிருன். அதற்குக் கோசல நாட்டில் இடமில்லை; இந்தக் காட்டில்தான் அஃது அமைந்துளது: ஆதலால் கானகம் வந்தது பெரிய பாக்கியம் என்று இம்மான வீரன் எண்ணியுள்ளான். **யான் வனம் போந்தது என்னுடைப் புண்ணியத்தால்** என்று குறித்திருத்தலால் இவனது உண்மை நிலையை உணர்ந்து கொள்கிறேம். இன்னவாறு எண்ணி யிருந்தவன் பின்பு இலங்கை மன்னன் வஞ்சமாய் வந்து செய்துபோன தீமையைக் கண்டதும் அரக்கர் குலத்தின்மீது மிகுந்த வெறுப்பு மூண்டது. சேனைகளோடு திரண்டுசென்று இலங்கையை வளைந்து கொண்டான்; உடனே போர் தொடுக்கவில்லை; நீதி முறையாக அனுமானைத் தூது அனுப்பினுன்; அம் மதிமான் சென்று இராவணன் எதிரே நின்று இந்த வேந்தர் பிரானுடைய வீரப்பிரதாபங்களை விளக்கி யுரைத்தான். வீணே குலத்தோடு அவன் அழிந்துபோகாமல் தெளிந்து உய்ய வேண்டும் என்று மாருதி மொழிந்த உரைகள் மதிநலம் சுரந்து வந்தன. அயலே வருகிற ஒன்று ஈண்டு அறிய வுரியது.

அறந்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந்து அறைந்த நீதித்
திறந்தெரிந்து உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத்துஏக ஈண்டு
பிறந்தனன் தன்பொற் பாதம் ஏத்துவார் பிறப்பறுப்பான்.

(இராமா, 5: 13, 81)

இராமன் இங்கே வந்து அவதரித்துள்ள நிலைமையை இங்ஙனம் தலைமையாத் துலக்கியுள்ளான். **தீயோர் இறந்துக நூறித் தக்கோர் இடர் துடைத்து ஏக ஈண்டு பிறந்தனன்** என்றது இவனது கோக்குடிப் பிறப்பைச் சிறப்பாக விளக்கியுளது. அத்தீயவன் திருந்தி வராமல்

அடியோடு அழிந்தான். பொல்லாத அரக்கர் குலத்தை வேரறுத்து ஒழித்து நல்லோரை இவன் நன்கு காத்து அருளினுன். களைகளைக் கடிந்து நீக்கிப் பயிர்களை வளர்ப்பதுபோல் கொடியவரை அழித்து ஒழித்துக் குடிகளை வேந்தன் பாதுகாப்பான் என்பதை உலகம் அறிய இந்த அரசர் பெருமான் உணர்த்தி நின்ருன்.

ஆழி யுலகத்தில் அந்தணரே ஆதியாய்
வாழும் ஒருநான்கு வருணத்தோர் தம்மைஎலாம்
ஊழி முதல்வன் உருவெடுத்துச் செங்கோலால்
சூழி மதயானைத் தொல்வேந்தாய்க் காக்குமே.
(பிரமோத்தரகாண்டம் 11)

ஊழி முதல்வனை இறைவன் செங்கோல் வேந்தனாய் உருவம் மருவி உலக உயிர்களை நலமாப் பாது காத்தருளுவன் என இது குறித்துள்ளது. வேந்தனது செங்கோலை ஆண்டவனது அருளாற்றலாகக் கருதிக் கொள்ள வேண்டும் என்னும் உறுதி உண்மையை ஈண்டு நன்கு உணர்ந்து கொள்கின்ருேம்.

**புல்லரைப் போக்கிப் புனிதரைப் போற்றிவரின்**
**நல்ல அரசாம் அது.**

நல்லவரை நயந்து கா.

இந்த அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

1 செம்மையாய் நீதி புரிவதே செங்கோன்மை.
2 கோலை நோக்கியே குடிகள் வாழும்.
3 வேதமும் அறமும் அதனல் விளங்கும்.
4 கோல் குடி தழுவிவரின் உலகம் அடி தழுவி வரும்.
5 பருவ மழையும் விளைவும் பெருகும்.
6 வெற்றியும் புகழும் விரிந்து வரும்.
7 நீதி முறையே இறையை நெறியே காக்கும்.
8 முறை கெடின் இறை கெடும்.
9 குற்றம் கடிந்து குடிகளைப் பேணுக.
10 பொல்லாதவரை ஒழித்து நல்லவரைக் காத்தருள்

55-வது செங்கோன்மை முற்றிற்று.

# ஐம்பத்தாருவது அதிகாரம்

## கொடுங்கோன்மை.

அ∴தாவது கொடிய அரசனது நிலைமை. கோனின் கொடுமை கோல்மேல் நின்றது. இறைமாட்சிக்கு நிறை சாட்சியாக நேரே காட்சி புரிந்து நிற்பது செங்கோல். அது நிலை குலைந்து புலை யாய பொழுது கொடுங்கோல் ஆகிறது. மாந்தரை எவ்வழியும் செவ்வையாக் காத்து வருகிற வேந்தன் செங்கோலன் எனச் சிறந்தான். அவ்வாறு காவாமல் கொடுமையாய்ப் புலை புரிகின்றவன் கொடுங்கோலன் என இழிந்தான். செங்கோன்மைக்கு மாருயது ஆதலால் **கொடுங்கோன்மை** அதன்பின் நின்றது. நீதியின் இனிய நிலைமைகளை முன்னம் அறிந்தோம்; அநீதியின் கொடிய புலைகளையும் கடிய துயர்களையும் இதில் நேரே அறிய வந்துள்ளோம்.

**கொடுங்கோலன் கடுங் காலன்.**

551. கொற்ற மகிடன் கொடியனென ஏனுலகோர்
குற்றமுறச் சொன்ஞர் குமரேசா—உற்ற
கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலை
[மேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து. (க)

இ-ள்.

குமரேசா! மகிடன் என்னும் வேந்தனைக் கொடியவன் என்று ஏன் உலகம் வைதது? எனின், அலை மேல் கொண்டு அல்லவை செய்து ஒழுகும் வேந்து, கொலை மேல் கொண்டாரின் கொடிதே என்க.

கொடிய கொலையாளி நிலையை இது குறித்துளது.

இடர் புரியும் இயல்பினனுய் எங்கும் தீமைகளே செய்து வருகிற அரசன் கொலை புரிபவரினும் மிகவும் கொடியவனே.

வேந்து கொடிதே என்று அ∴றிணை வாய்பாட்டால் குறித்தது ஏன்? எனின், அது புலையான ஒரு கொலை

மிருகமே என நிலைமையை நினைந்து தெளிய என்க. ஏகாரம் கொடுமையைக் கடுமையாக் காட்டி நின்றது.

இன் உருபு எல்லைப் பொருளது.

அலை = அல்லலான துயரங்கள்.

நிலைகுலைய வருத்துகிற வருத்தம் அலை என வந்தது.

கொலை = கொல் என்னும் வினையடியாப் பிறந்தது.

அல்லவை = தீமைகள். நல்லவைக்கு மாறானவை.

கள்வர் முதலிய தீயவர்களால் அல்லல்கள் நேராதபடி பாதுகாத்து யாண்டும் குடிகட்கு நல்லதே புரியவுரிய அரசன் அல்லவை செய்யநேரின் அது பொல்லாத புலைத் தீமையாம்.

உடம்பிலிருந்து உயிரை நீக்குவது கொலை. அவ்வளவோடு கொலைஞன் தொழில் முடிந்து போம். கொடுங்கோலன் புரிந்து வருகிற அல்லல்களோ, உயிரோடு நாளும் சித்திரவதை செய்வனவே யாம். ஆகவே கொலைஞரினும் இவன் கொடிய பாதகன் என நேர்ந்தான்.

பொருள் அழிவு புகழ் அழிவு வாழ்வு அழிவு கற்பு அழிவு முதலாகப் பல அழிவுகள் கொடுங்கோன்மையால் விளைந்து விடுகின்றன. நாட்டை ஆள நேர்ந்தவன் உள்ளம் கெட்டுப் பாழானல் எங்கும் பழி பாதகங்களே பொங்கி எழும்.

கொலையில் கொடியாரை ஒறுத்து ஒழிக்க வேண்டியது வேந்தன் கடமை; அவனே அவ்வாறு கொடியன் ஆயின் மக்கள் நிலைமை என்னும்! எவ்வழியும் நிலைகுலைந்து யாவரும் துக்கமே அடைவர்.

அடைய அடைந்தாரை அல்லவை செய்து
கோடைவேந்தன் கோல்கொடியன் ஆகிக்—குடிகள்மேல்
கூட்டிறப்பக் கொண்டு தலையளிப்பின் அஃதன்றே
கூட்டறுத்து வாயில் இடல். (பழமொழி, 329)

கொடுங்கோலனாய் அல்லவை செய்பவனை இது எள்ளி இகழ்ந்துள்ளது. பொய்யா மொழியைக் கருதி

யே இந்தப் பழமொழி இவ்வாறு உருவாகி வந்துள்ளது. அவ்வுண்மையை உரைகளால் உணர்ந்து கொள்கிறோம்.

கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே. (நறுந்தொகை)

கொடுங்கோல் அரசனது நாட்டில் வாழ்வதினும் கொடிய புலிகள் வாழும் காட்டில் வாழ்வது நல்லது என ஒரு மன்னன் இன்னவாறு குறித்திருக்கிறான். நீதிமுறை இல்லையானால் மக்கள் அங்கே மிக்க துயரம் அடைவர் என்பதை இதனால் அறிந்து கொள்கிறோம்.

நெஞ்சம் திரிந்து நெறிகேடனையபோது வேந்தன் நஞ்சினும் கொடியனாகிறான். ஆகவே குடிகள் எவ்வழியும் யாண்டும் அஞ்சி அலமந்து உழல நேர்கின்றனர்.

கூற்றம் என்னக் கனல்என்னக்
கொதிக்கும் ஆலம் எனக்கொடியோர்
சீற்றம் என்ன அறிவில்லோர்
செல்வம் என்னத் திகழ்அறத்தின்
ஆற்றின் நிற்றல் அதுநீக்கி
ஆறில் ஒன்று கொள்ளாதே
ஏற்ற மான இறைகொள்ளும்
இறைவன் பாவம் எனவளர்ந்தார்.
(இராமா உத்தர; 3)

நெறிமுறை தவறிப் பொருளாசை மண்டிப் புலை புரிகின்ற கொடிய வேந்தன் நெடிய பாவியாய் நிலை குலைந்தழிவன் என்று இது குறித்திருக்கிறது. குறிப்புகள் கூர்ந்து ஓர்ந்து கொள்ள உரியன.

இன்று கொளற்பால நாளைக் கொளப்பொருன்;
நின்று குறையிரப்ப நேர்படான்;—சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான்; ஆறலைக்கும்
வேடலன் வேந்தும் அலன். (நீதிநெறி, 30)

கொடுங்கோலனுடைய கொடிய இயல்புகளை இதில் உணர்ந்து உள்ளம் வருந்துகிறோம். அரச வேடம் தரித்திருந்தும் அருள் இன்றி மருள் மண்டி நிற்றலால் கொலை வேடனோடு இந்த அலைவேடன் நிலை ஒத்து நின்றான்.

நிலை கெட்டவன் நிலைமையைக் கூற நேர்ந்தபோது கொலைஞரும் கூட நேர்ந்தார். உவமான உபமேயங் களில் திணையும் பாலும் இணையாமல் வந்தன.

கொலைரின் வேந்து கொடிது.

இதில் பால் மயங்கி யுள்ள பான்மை காண்க.

முதலும் சினையுமென் றுயிரு பொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய. (தொல்காப்பியம்)

உருவக உவமையில் திணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே. (நன்னூல்)

மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும்
பால்மாறு படுதலும் பாகுபா டுடைய.
(தண்டியலங்காரம்)

இந்த இயல் விதிகள் ஈண்டு எண்ணி உணர வுரியன. இலக்கணக் குறிப்புகள் துலக்கம் உடையன.

நாட்டைப் பாதுகாக்க வந்த வேந்தன் நல்லவன் ஆனால் அங்கே மாந்தரும் நல்லவராய் மகிழ்ந்து வாழ்ந்து வருவர்; அவன் தீயவனாயின் யாவரும் தீயராய் யாண்டும் நோய் உழந்து நொந்து வருந்துவர்.

வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாநிற்பர்;
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாம்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே. (திருமந்திரம் 245)

உலகை இனிது பேணி வரும் அளவே வேந்தன்; பேணாமல் பிழை புரிய நேரின் அவன் கொலை புரிகின்ற புலையான ஒரு கொடிய காட்டு மிருகமே எனத் திருமூலர் இவ்வாறு எள்ளி இகழ்ந்து காட்டியிருக்கிறார்.

உரிய நீர்மையை இழந்தபோது சீர்மை யாவும் இழந்து அரசன் தீயவனா யிழிந்து கழிந்து ஒழிகின்றான்.

கொடுங்கோலன் கடுங்கொலைஞன் ஆகின்றான்.

இவ்வுண்மை மகிடன் பால் காண வந்தது.

## சரிதம்.

இவன் அசுரகுல வேந்தன். அருந்திறல்கள் நிறைந்தவன். மாகிசம் என்னும் நகரிலிருந்து இவன் அரசு புரிந்து வந்தான். பொருளாசையும் காமவெறியும் இவனிடம் நெடிய தீமைகளாய் நீண்டு நின்றன. இரக்கம் யாதும் இன்றி எவ்வழியும் வலிந்து கவர்ந்து செல்வவளங்களைப் பெருக்கி வந்தான். இவனுடைய அடலாண்மைகளைக் கண்டு யாண்டும் யாவரும் அடங்கி ஒடுங்கினர். தேவர்களும் அஞ்சி நின்றனர். முன் பிறப்பில் ஓதியுணர்ந்து அறத்தில் உயர்ந்திருந்தாலும், கல்விச் செருக்கோடு களித்து மாதவர்களையும் மதியாமல் மமதை மண்டி நின்றமையால் அகத்தியர் முதலிய மகத்துவமுடைய முனிவர்கள் இவனைக் கடுத்துச் சபித்தனர். அந்தச் சாபத்தால் தானவர் தலைவனாய்த் தோன்றி மாநிலத்தை இவன் ஆள நேர்ந்தான். நேர்ந்தாலும் அசுர வாசனையால் அவகேடுகளையே செய்து வந்தான். இவனுடைய கொடுமைகளைச் சகிக்க முடியாமல் வானவர் ஈசனைத் துதித்து வேண்டினர். பரமனது ஆணையால் பராசத்தி இவனை அழித்து ஒழித்தாள். இவன் அழிந்து ஒழியவே மானவரும் வானவரும் மனம் மகிழ்ந்து வாழ்ந்தனர். கொலை மேற்கொண்டாரினும் அலைமேல் கொண்டு அல்லவை செய்து ஒழுகும் வேந்தன் பொல்லாத புலைத் தீயன் என்பதை உலகம் இவன் பால் உணர்ந்து தெளிந்தது. விரிவைத் தேவி பாகவதத்தில் தெரிக.

அருந்தவர்ஐம் பதின்மரும்அன்று உரைத்தமொழிக்
    கொடுமையைக் கண்டு அச்சம் ஆகி
இருந்தவனும் எழுந்துபணிந்து எனதுபிழை
    பொறுத்தருள்வீர் என்றான் அந்தப்
பெருந்தவரன் புடனுரைப்பார் மகிடமுகத்து
    அவுணன்எனப் பிறந்து பின்னர்த்
திருந்தஅரன் இடம்வேண்டித் தவம்புரியும்
    உமைகணத்தில் தீர்ப்பாள் என்றார். (1)

ஆங்கவர்சொற் படியிலவன் அசுரர்பெருங்
குலத்தில் உதித்து அரசன் ஆகி
ஓங்கியபேர் மகிடன்எனக் கொடுங்கோன்மை
புரிகுதலும் ஒருநாள் வேட்டைத்
தீங்குசெய வனத்திலடைந்து அழற்பசியால்
இளைத்தோடித் திரிந்தான்; ஆங்கே
நீங்கரிய அருச்சனைசெய் மன்னதன்என்று
ஒருமுனிவன் நேர்ப்பட் டானே. (2)

(அருணாசல புராணம்)

கொடுங்கோன்மையனாய் இவன் இருந்துள்ள நிலைமையை இதன் கண்ணும் அறிந்து கொள்கின்றோம்.

**அல்லல் புரியும் அரசன் அவனிக்குப்**
**பொல்லாத நோயே புலை.**

*நல்லது ஒழியின் நாசம் விளையும்.*

---

**கோடிய கோல் நீடிய வேல்.**

552. வென்றிமிகு சம்பரன் வேண்டியபோ தேனுலகோர்
குன்றிமிக நொந்தார் குமரேசா—கொன்றியலும்
வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. (உ)

இ-ள்.

குமரேசா! பொருளைக் கொடு என்று சம்பரன் கேட்டபோது ஏன் அனைவரும் மறுகினர்? எனின், கோலொடு நின்றான் இரவு வேலொடு நின்றான் இடு என்றது போலும் என்க.

அரசன் யாசித்தல் அவகேடாம் என்கிறது.

செங்கோலைக் கொண்டுள்ள அரசன் பொருளை இரந்து வேண்டுதல் வேலைக் கைக்கொண்டு நிற்கும் கள்வன் வழிப்பறி செய்வது போலாம்.

கொடுங்கோலன் கொலைஞரினும் கொடியன் என்பதை முன்னர் அறிந்தோம்; இதில், ஆறலைக்கும் கள்வரினும் அவன் கோரமான தீயன் என அறிகின்றோம்.

கொலையும் களவும் நாட்டில் புகாமல் பாதுகாக்க வுரியவன் அரசன்; அவன் கொடியனாய்ப் புலை படிய நேரின் மக்கட்குப் பெரிய துயரமாம்.

நேர்மையும் நீதி நெறியும் நடுவு நிலைமையும் உடையவன் என்பதற்கு அடையாளமாகவே செங்கோலை வேந்தன் ஏந்த நேர்ந்தான். அவனது மனச் செம்மை கோல்மேல் நின்றது. எவ்வழியும் கோடாமல் எங்கும் செவ்வியனாய் ஆட்சிபுரிய வுரியவன் என்பதை அறிவிப்பதற்காகவே **கோல் ஒடு நின்றான்** என்று குறித்தார்.

நீதிக்கு உரிய கோல் அநீதியாய் மாறவே மோதுகின்ற கொடிய தடியாக் கருத நின்றது. அரசுக்கு உரிய வரி ஆகிய ஆறில் ஒரு பங்கை இதமாய் வாங்குபவன் செங்கோலன். அதற்கு மேல் பேராசையால் பொருளை அதிகம் விரும்புகின்றவன் வெங்கோலன். பிறர் வெருவச் செய்யும் கொடுமை யுடையவன் கடுமையான கொடுங்கோலன் ஆயினான்.

வேல் = கூரிய வலிய ஆயுதம்.

வெல்லும் திறலுடையது வேல் என வந்தது.

இங்கே **வேலொடு நின்றான்** என்றது கொள்ளையடிக்க நேர்ந்த கள்ளனை. வழிப்போக்கர்களை இடைமறுத்து வேலைக் காட்டி அச்சுறுத்திப் பொருள்களைப் பறித்துக் கொண்டு போவது திருடர் தொழில்.

உன்னிடம் உள்ள பொருள்களைக் கொடுத்து விடு: தடுத்தாயேல் உன் உயிரை எடுத்துவிடுவேன் என்று கடுத்து நிற்பன். அந்த நிலை **இடு** என்றதனால் தெரிய வந்தது. ஈ தா கொடு என்னும் இரப்புரைகளுள் யாதும் கூறாமல் இடு என்று அதட்டியது அவனுடைய கடுமை கொடுமைகளைக் காட்டி நின்றது.

கேட்டதைக் கொடுக்கவில்லையானால் ஏதேனும் கேட்டை விளைத்து விடுவானே! என்று குடிகள் அஞ்சிக் கொடுக்க நேர்வர் ஆதலால் அரசன் இரப்புநிலை கள்ளன் பறிப்போடு ஈண்டு ஒப்பாய்க் காண வந்தது.

இன் சொல்லும் ஈகையும் செங்கோலன் தன்மைகள்.
வன் சொல்லும் இரப்பும் கொடுங்கோலன் புன்மைகள்.

புரவு பூண வுரியவன் இரவு பூண மூண்டது நீண்ட இழிவே. நிலை மாறவே புலை மீறி நின்றது.

புரவு, பகல் போல் ஒளி: இரவு, இருள்போல் பழி.

இழிந்து நின்று யாசிப்பது இரவு என நேர்ந்தது.

உறையில் வாளொடு மாவழங் குறுவனத் துஓடி
மறவன் ஓர்பொருள் தருகென இரத்தலை மானும்
இறைவன் வாழ்குடி தன்னில்ஒன்று ஒருபொருள் இரத்தல்
அறவன் ஆகிய நீயிதை அறிந்திலை அந்தோ!
(பிரபுலிங்கலீலை 10-22)

ஒரு மங்கையை மணந்து கொள்ள ஓர் அரசன் விழைந்து கேட்டபொழுது அவனை நோக்கி இங்ஙனம் பதில் மொழிந்துள்ளனர். இந்தத் திருக்குறளுக்கு ஒரு விருத்தி யுரைபோல் இது விரிந்து வந்துள்ளது. அந்த உண்மையை உரைகளால் உணர்ந்து கொள்கின்றோம்.

தரும நீதிகள் தழுவி வரும் அளவே அரசு பெருமை பெறுகிறது; வழுவின் சிறுமையாய் அழிவுறுகிறது.

கொடையும், அளியும், செங்கோலும், குடி ஓம்பலும் வேந்தர்க்குப் புகழ் புண்ணியங்களை அருளுகின்றன. இரப்பும், வன்கண்மையும், கொடுங்கோன்மையும் குடி ஓம்பாமையும் முடி மன்னர்க்குப் பழி பாவங்கள் ஆகின்றன. ஆகவே அவர் இழிவாய்க் கழிந்து அழிவுற நேர்கின்றனர்.

மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழவிறல் தாயம்
எய்தினம் ஆயின் எய்தினம் சிறப்புஎனக்
குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறின்அது சிறந்தன்று; மன்னே!
மண்டமர்ப் பரிக்கும் மதனுடை நோன்தாள்
விழுமியோன் பெறுகுவன் ஆயின் ஆழ்நீர்
அறுகய மருங்கில் சிறுகோல் வெண்கிடை

என்றூழ் வாடுவறல் போல நன்று
நொய்தால் அம்ம தானே மைஅற்று
விசும்புற ஓங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே. (புறம், 75)

அரச பதவி வழி முறையே பரம்பரையாய்த் தொடர்ந்து வருகிறது. அந்த அரிய ஆட்சி விழுமியோன் கைவசம் வரின் எவ்வழியும் செவ்வையாய் மாட்சி யடைந்து திகழும். சிறியவன் இடம் சேரின் வீணை செருக்கிக் குடிகளை வருத்திப் பொருள்களை யாசித்து அதனைப் புலைப்படுத்தி விடுவான்; தானும் நிலைகுலைந்து இழிவான் என **நலங்கிள்ளி** என்னும் சோழ மன்னன் இன்னவாறு கூறியிருக்கின்றான்.

குடிபுரவு இரக்கும் கூர்இல் ஆண்மைச் சிறியோன்.

கோல் ஒடு நின்று குடிகளிடம் இரவு புரியும் கொடுமையாளனை அவ்வேந்தன் இவ்வாறு கடுமையா யிகழ்ந்திருக்கிறான். இதனால் அவனது நெறியும் நீதியும் அறிவும் செங்கோல் முறையும் தெரிய வந்தன.

நடுவிகந்து ஒரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினம் தெறுதலின்
உறலூறு கமழ்கடாஅத்து ஒல்கிய எழில்வேழம்
வறனுழு நாஞ்சில்போல் மருப்பூன்றி நிலம்சேர
விறல்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம். (கலி, 8)

நடுவு நிலைமை நீங்கிக் குடிகளிடம் கொடுமை செய்கின்ற மன்னவன் கொடுங்கோல் போலச் சுடுவெயில் தோய்ந்த பாலைவனம் யாரும் அடியிட முடியாத படி கொடியதாய் நீண்டு கிடந்தது என இது குறித்துளது.

கொடுங்கோலன் நாடு கொடிய பாலைவனம்போல் யாண்டும் நெடிய துயரங்களே நீண்டு கடுமையா யிருக்கும் என்பதை இதனால் அறிந்து கொள்கிறோம்.

National injustice is the surest road to national downfall. (Gladstone)

தேசம் அநீதியுறின் சீரழிந்து நீசமாய்
நாசம் அடைந்து விடும்.

Corrupted freemen are the worst of slaves.
(Garrick David)

ஆளும் தலைவர் அவமேல் அடியரினும்
நாளும் கொடியர் நவை. (உலக உள்ளங்கள்)

இவை ஈண்டு ஓர்ந்து உணர வுரியன.

நாட்டை ஆள நேர்ந்தவர் முதலில் தம் மனத்தை ஆள வேண்டும். பேராசை முதலிய நீசப் புலைகள் தம் உள்ளத்தில் புகாமல் பாதுகாத்து கொள்ளின் அவர் நல்ல அரசராகின்றார். அல்லரேல் பொல்லாத புல்லரே. குடிசனங்களை வருந்தச் செய்பவன் கொடுங்கோலனாய் முடிவான். இவ்வுண்மை சம்பரன்பால் அறிய வந்தது.

## சரிதம்.

இவன் அரிய பெரிய வர பலங்களை யுடையவன். அருந்திறலாளன். சிறந்த போர் வீரன். வைசயந்தி என்னும் இராசதானியில் அமர்ந்து இவன் அரசு புரிந்து வந்தான். இவனுடைய மனைவி பெயர் காமகலை. பேரழகு வாய்ந்த அவளோடு அமர்ந்து இனிய போகங்களை நுகர்ந்து எங்கும் தன் ஆட்சி தனி முதல் தலைமையாய் மாட்சி மிகுந்து வர இவன் காட்சி புரிந்து வந்தான். பூமியிலுள்ள சிறந்த பொருள்கள் எல்லாம் பூமி பாலகனை வேந்தனுக்கே உரிமையுடையன என்று பெருமையுடன் கூறி யாவும் கவர்ந்து அடலாண்மையுடன் விளங்கி நின்றான். போராற்றலில் சிறந்த பெரிய சேனைகள் இவனிடம் பெருகியிருந்தன. மண்ணுலகை அடிப்படுத்தியதோடு அமையாமல் விண்ணுலகையும் வென்றுகொள்ள விழைந்து வீறு கொண்டு எழுந்தான். பெரும் படைகளுடன் மூண்டு வந்த இவன் எதிரே போராட முடியாமல் அமரர் யாவரும் இரிந்து போயினர். அரசை இழந்து அமரர் கோன் மறுகியிருந்தான். வையகமும் வானகமும் தனக்கே யுரிமை என மனக்களிப்புடன் இவன் வாழ்ந்து

வந்தான். தாழ்ந்துபோன இந்திரன் ஆழ்ந்த ஆலோசனையுடன் காலம் கருதி நின்றான். முடிவில் தசரத மன்னனிடம் வந்து தனது இன்னலை மொழிந்து இதம் புரிய வேண்டினான். வேண்டவே அந்த ஆண்டகை அடலுடன் சென்று அமராடி இவனை அடியோடு வென்று தொலைத்து அரசைக் கவர்ந்து இந்திரனுக்குத் தந்து இசை பெற்று வந்தான். வென்றி வீறுடன் அவ்வீரன் புரிந்த உதவியை என்றும் மறவாமல் எவ்வழியும் வியந்து புகழ்ந்து விண்ணவர்கோன் இவன்பால் நன்றி பாராட்டி நின்றான்.

இன்தளிர்க்கற் பகநறுந்தேன் இடைதுளிக்கும்
நிழலிருக்கை இழந்து போந்து
நின்தளிர்க்கும் தனிக்குடைக்கீ ழதின்ஒதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்கும் குலமணித்தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீகொண்டு
அன்றளித்த அரசன்றோ? புரந்தரன்இன்று
ஆள்கின்றது அரச! என்றான்.

[இராமா: கையடை, 8)

சம்பரனை வென்று உம்பர் உலகை இந்திரனுக்குத் தசரதன் வழங்கியுள்ளதை விசுவாமித்திர முனிவர் அவன் எதிரே இவ்வாறு வியந்து புகழ்ந்திருக்கிறார். குன்று அளிக்கும் குலமணித்தோள் சம்பரன் என்று குறித்திருத்தலால் இவனது அதிசய ஆற்றலை அறிந்து கொள்கிறோம். இவ்வாறு சிறந்த நிலையில் உயர்ந்திருந்தும் கொடுங்கோலனாய்த் திரிய நேர்ந்தமையால் குலத்தோடு அழியநேர்ந்தான். கோலொடு நின்றவன் குடிகளை வருத்த நேர்ந்தால் வேலொடு நின்ற கள்ளன்போல் எள்ளி இகழப்படுவான்; இழிந்து அழிந்து போவான் என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்றான்.

**பொருளாசை பூண்டு புரப்பான் இரப்பின்
இருளாம் உலகுக் கிடர்.**

இரவு அரசுக்கு இளிவாம்.

---

**நாடாதான் நாடு கெடும்.**

553. நேடிமுறை செய்யா நிருகனுயர் நாடிழந்து
கூடினன்கே டென்னே குமரேசா—கோடாமல்
நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும். (௩)

இ-ள்.

குமரேசா! நாடி முறை செய்யாமையால் நிருகன் ஏன் நாடு இழந்து கெட்டான்? எனின், நாள்தொறும் நாடி முறை செய்யா மன்னவன் நாள்தொறும் நாடு கெடும் என்க.

நாட்டின் கேடு நாட வந்தது.

நாள்தோறும் நன்கு ஆராய்ந்து நீதி முறை செய்யாத அரசனது நாடு நாளும் கேடாய் நைந்து படும்.

தொறும் என்னும் இடைச்சொல் இடைவிடாத தொடர்பு தோன்ற நின்றது. நாளும் நாளும் கண்ணூன்றிக் கவனித்துவரின் அந்தக் காரியம் நலமாய்க் கூடி வரும்; நாடாது ஒழியின் அது பீழையாய்ப் பிழைபடும். நாடிவரும் அளவே நாடு என்றதனுல் அந்த நாட்டம் இழந்துபடின் அரசு குருடாய் ஆட்சி அவமாய்க் கேட்டையே அடையும் என்பது தெரிய வந்தது.

நாடி = கூர்ந்து ஆராய்ந்து.

நாட்டம் தோய்ந்து கவனிப்பது நாடி என வந்தது.

முறை = நீதி நெறி; நியாய ஒழுங்கு.

தன் நாட்டில் நிகழுகின்ற நிகழ்ச்சிகளைத் தினம் தோறும் மனம் கூர்ந்து ஓர்ந்து ஆராய்ந்து தேர்ந்து முறை செய்வது செங்கோல் மன்னவன் கடமையாம். இவ்வாறு செய்யாதவன் கொடுங்கோலனாய் இழிந்து கடுங்கேடுகளை விரைந்து அடைந்து அழிகின்றான்.

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு. (குறள், 520)

உலகம் செம்மையாய்ச் சிறந்து வரவேண்டுமானால்

வினையாளரை அரசன் நாள்தோறும் கவனமாய் நாடி வரவேண்டும் என முன்னரும் இன்னவாறு கூறியுள்ளார். மன்னன் நாட்டமே மன்னிய தேட்டமாம்.

உரிய கடமையைச் செய்துவரின் அரிய பெருமைகள் மருவி வரும்; செய்யாவிடின் வெய்ய இழிவுகள் விளைந்து விடும். இழிவு நேராமல் விழியூன்றி வருக.

அலைபுரிந்து அல்லவை செய்தல், குடிகளை வருத்திப் பொருளை வாங்கல், நாடி முறை செய்யாமல் மூடமாய் இருத்தல் கேடான கொடுங்கோன்மைகளாம்.

**நாடு கெடும்** என்றது நாட்டை யுடையவன் கேடும் உடன் தெரிய வந்தது. அரச திருவை இழந்து ஆட்சி அதிகாரம் முதலிய மாட்சிகள் ஒழிந்து இன்னலுழந்து மன்னன் இழிந்துபடுவன் என்பது இங்கே தெளிந்து கொள்ள நேர்ந்தது. கோல் கோடின் கொடிய கேடே.

தன் விளை நிலத்தில் தோன்றும் களைகளைக் கடிந்து எறிந்து வேலி கோலி வைத்து நாள்தோறும் சென்று உழவன் போற்றுவிடின் அது பாழாம்; அதுபோல் தன் நாட்டின் நிலைமைகளை நாள்தோறும் நாடி ஆராய்ந்து குற்றம் குறைகளை நீக்கிக் குடிகளை இனிது பேணான் ஆயின் அந்த அரசன் இழிந்து அவகேடுகளை அடைந்து அழிந்து போவான்.

நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறும் நாடி அவன்நெறி நாடானேல்
நாடோறும் நாடு கெடும்;மூடம் நண்ணுமால்;
நாடோறும் செல்வம் நரபதி குன்றுமே. (திருமந்திரம்)

**திருமூலர்** இவ்வாறு பாடியிருக்கிறார். இந்தப் பாட்டை நாடி உரை செய்பவர், **நாடி முறைசெய்யா மன்னவனைக்** குறித்து அந்த முனிவர் கருதியிருப்பதை இனிது தெரிந்து வியந்து கொள்வர். தேவர் வாக்கை முழுதும் அடியொற்றி இது வந்துள்ளது. காலமூலங்களைக் கருதி நோக்கி உறுதி யுண்மைகளை ஓர்ந்து தேர்ந்து கொள்க.

நிறைகடல் அவனி பாரம் நீக்கிய நெடும்பொற் றிண்டோள்
இறையவன் இராமன் அன்போடு இளவலை எய்த நோக்கி
அறைகழல் தாரோய்! நாட்டில்அன்புநாள் தோறும் நாடி
முறைசெய்கை இராச தன்மம் அதனில்நாம் முயறும்
[என்றான்.
(இராமா: உத்தர: 13-1)

இராச தருமத்தைக் குறித்து இராமர் இவ்வாறு தம்பிக்குப் போதித்திருக்கிறார். நாட்டில் அன்பு பூண்டு நாள்தோறும் நாடி அரசன் முறைசெய்ய வேண்டும் என்று இதில் காட்டி யிருப்பது கண்டு மகிழ வுரியது.

அரசன் நீதிமுறை புரிந்துவரும் அளவே அந்த நாடு சிறந்து பல வளங்களும் சுரந்து வரும்; முறை செய்யாது ஒழியின் எவ்வழியும் இழிந்து வெவ்விய காடாய் அது விளிந்து கெடும்.

கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியன்நிலம் போல
வேனிற் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதுஓர் படிவம் கொள்ளும்.
(சிலப்பதிகாரம் 11-60)

நாள்தோறும் நாடி முறை செய்யாமல் நெஞ்சம் கோடி நிற்கும் கொடுங்கோலனுடைய நாடு போல நடுங்கு துயர் மிகுந்து பாலைவனமான காடு படு வெப்பமா யிருக்கும் என இது குறித்துள்ளது.

வேந்து புரந்து வரும் நிலம் மாந்தர் மகிழ்ந்து வாழ முல்லையும் குறிஞ்சியும் மருதமும் போல யாண்டும் வளங்கள் பெருகி இன்பங்கள் நிறைந்திருக்கும்; அரசு முறை இழந்த நாடு அவலத் துயரங்கள் படர்ந்து அவ கேடுகளாயிருக்கும் என ஈண்டு அறிந்து கொள்கிறோம்.

பார்த்திபன் நீதியோடு பார்த்துவரின் நாடு கீர்த்தி மிகுந்து வரும்; பாராது ஒழியின் அது பாழாய் அழியும்.

நாளும் உசாவி நலம்புரியா மன்னனர
சாளும் தலைமை அழியுமெனக்—கேளுயர்ந்த
மேலோர் மொழிந்த விதியை மதியோர்ந்து
கோலோர் ஒழுகல் குணம்

அரசுக்கு உரிய விதிமுறை வழியே நடந்துவரின் அந்த வேந்தன் செங்கோல் செலுத்தும் சீரியன் எனச் சிறந்து வருவான். நீதி வழுவித் தீது புரிய நேரினும், கடமையை மறந்து மடமையா யிருப்பினும் அவன் கொடியவன் என்றும் கொடுங்கோலன் என்றும் நெடிய பழிகளை அடைந்து கெடுவான்.

குடிகளை இனிது பாதுகாத்து நாட்டை நன்கு பேணி வருதலே நரபதியின் கடமையாம். இந்த இனிய நிலை மாறின் கொடிய புலையாய் அவன் இழிந்துபடுவான்.

தனி மனிதனது மடியும் மடமையும் அவன் குடி அளவில் நின்று பழிகளை விளைத்துப் போம்: ஒரு தேச அதிபதி மதியூகமாய் யோசனைகள் புரிந்து நாளும் கவனத்துடன் நாடிக்காவான் ஆயின் அந்நாடு கேடுகளுக்கே இடமாம்.

செத்தபிணம் இடுகாடு சுடுகாடே; செங்கோலால்
ஒத்தகுணம் உணர்ந்துதினம் உறுதிநலம் புரியானேல்
பித்தனவன் உறைநாடு பிழையான பழிநாடே;
எத்தகைய வளமுறினும் இழிதுயரே அழிகேடே.

நாட்டை ஆள நேர்ந்தவன் சரியாயில்லையானல் அந்த நாடு அடையும் கேடுகளை இது காட்டியுள்ளது.

ஏடவிழ்பைந் தாரோய்! இமையோர் பதம்பெறினும்
நாடு நடுங்க நன்கல்லன புரியார்;
வேடர் பரிவேட்டம் செய்யார்; வினைதருஞ்சூது
ஆட நினையார்மட் டுண்ணூர் அரசரே.
(பிரமோத்தர காண்டம் 11)

மாந்தரைக் காக்க நேர்ந்த நல்ல வேந்தருடைய நீர்மை சீர்மைகளை இது விளக்கியுளது. **நாடு நடுங்க நன்கு அல்லன புரியார்** என்றது இங்கே கருதியுணரவுரியது. நாடு நலமுறச் செய்வது செங்கோன்மை; அவ்வாறு செய்யாதது வெய்ய கொடுங்கோன்மையாம்.

நாடி முறை செய்யா அரசன் கேடு அடைவான்.
இந்த வுண்மை நிருகன் பால் தெரிய வந்தது.

சரிதம்.

இந்த அரசன் சூரியகுலத் தோன்றல். வசுதரன் என்னும் மன்னனுடைய அருமைத் திருமகன். பல கலைகளையும் பயின்று தெளிந்தவன். சிறந்த மதிமான்; பெருங் கொடையாளன். இவனுடைய மனைவி பெயர் சயமதி. பேரழகுடைய அவளோடு அமர்ந்து அரிய போகங்களை நுகர்ந்து பெருங் களிப்பில் மூழ்கியிருந்தான். வேதியர் இருவர் இவனிடம் முறையிட வந்தனர். அவரை யாதும் விசாரியாமல் இவன் அவமதித்திருந்தான். அவர் உள்ளம் வருந்தினர்; இவனை எள்ளி இகழ்ந்தனர்; "உயர்ந்த வேந்தனாயிருந்தும் மாந்தருக்கு இதம் செய்யாமல் முறை மறந்துள்ள நீ ஓந்தியாய் ஒழிக!" என்று அவர் உருத்துச் சபித்து வெறுத்துப் போனார். அவ்வாறே இவன் உருமாறிப் பரிதாபமாய்ப் பழிபடிந்து கிடந்தான். பெரிய அரச திருவோடு நல்லவனாயிருந்தும் காட்டு நிலையைக் கருதி முறை செய்யாத குறையால் கேட்டை அடைந்தான் என்று யாவரும் வாட்டம் உழந்து மொழிந்தார். நாள்தோறும் நாடி முறை செய்யாத மன்னவன் நாடிழந்து கேடுறுவான் என்பதை இவன் கெட்டு உணர்த்தினான். இவனது வாழ்க்கை வரலாறு மற்ற அரசருக்கு ஒரு படிப்பினையாய்ப் படிந்து நின்றது.

அடர்ப்பெரும் களிறு திண்தேர் அடுபரி காலாள் துன்று
கடற்படை யுடையோன் மிக்க கருணையோன் காதலோடும்
இடர்க்கடல் வறியோர் ஏற இருநிதி ஈவோன் நாட்டில்
நடப்பறி யாது கெட்ட நரபதி யுளன்கொல்? என்றான். (1)

தாங்கரும் துயரம் மிக்கார் கூபத்தில் தலைகீ ழாகத்
தூங்கிஈ ருகங்கள் சென்ற துவாபரம் தன்னில் தோன்றும்
சார்ங்கபா ணியன்தன் செய்ய தாமரைக் கண்ணால் பார்க்க
நீங்கிடும் சாபம் என்னா நெடுந்தவ முனிவர் போனார். (2)

போயிரு வரும்அக் கோவைப் புரையறு தவத்தின் மிக்க
தூயமா முனிவற்கு ஈந்து தொன்றுகா ரியத்தில் போனார்;

ஆயமன் னவனும் கோம்பிஆகியாழ் கிணற்றில் வீழ்ந்தான்
தேயம்நாள்தோறும் நாடாத்திறல்மன்னன்கேடிது என்றான்.
(இராமா: உத்தர; 13)

தன் நாட்டை நாள்தோறும் நாடிக் காவாத அரசன் பீடையாய்க் கேடு அடைவான் என்பதற்கு இவனை இவ்வாறு ஆட்சியாளர் காட்சியாக் காட்டி யுள்ளனர்.

**நாளும் குடிகளை நாடியிறை பேணுனேல்**
**நீளும் மிடிகள் நெடிது.**

*நாடி முறை செய்யான் நாடு இழந்தான்.*

---

**கோல் இழியின் குடி ஒழியும்.**

554. அன்றேன் அவிச்சித் தரசிழந்து தன்செயலால்
குன்றி இழிந்தான் குமரேசா—நின்றிருந்த
கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. (சு)

இ-ள்.

குமரேசா! ஆயாமல் ஆற்றிய தீய செயலால் அவிச்சித்து ஏன் அரச திருவை இழந்தான்? எனின், கோல் கோடிச் சூழாது செய்யும் அரசு கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் என்க.

*அரசனது இழவு அறிய வந்தது.*

*நீதிமுறை மாறி யாதும் ஆராயாமல் செய்யும் அரசன் செல்வங்களையும் குடிகளையும் ஒருங்கே இழந்து பெருங்கேடு அடைவான்.*

*கோல்=செங்கோல்: என்றது அரச நீதியை.*
*கோடி=கோணலாய் மாறி: என்றது அநீதியை.*
**சூழ்தல்=ஆராய்தல்; யூகித்து ஆலோசித்தல்.**

**மதிமந்திரிகளோடு கூடி ஆராய்தலும், தானாக இருந்து நாடித் தேர்தலும் நாடாள்வாரின் கடமைகளாம். சூழ்தல் இல்லையேல் அந்த ஆட்சி தாழ்தல் அடையும். சூழ்ந்து வரும் அளவே அரசு வாழ்ந்து வருகின்றது.**

கோல் கோட்டம் அடைய நேரின் கோன் தன் நாட்டை இழக்க நேர்வான். கோடாத செங்கோலே வாடாத ஆட்சியாய் வளர்ந்து வருகிறது. தன்மை தோய்ந்து வரும் அளவே எவ்வழியும் நன்மை வாய்ந்து ஒளிமிகுந்து வருகிறது; புன்மை புகின் அது புலையாயிழிந்து ஒழிந்து போகிறது.

கூழ் என்னும் சொல் இக்காலத்தில் எளிய உணவைக் குறித்துளது. கேப்பைக் கூழ், வரகுக் கூழ், கம்பங் கூழ், என்பன ஏழைகளின் உணவுகளாய் எண்ணப்பட்டுள்ளன. இந்தக் கூழுக்கு மூல முதலாயுள்ள சிறு தானியங்களைப் பயிர்கள் விளைத்து வருகின்றன. அவையே எல்லாச் செல்வங்களுக்கும் மூலகாரணமாயுள்ளன. அந்த உண்மை நுண்மையாஈண்டு உணர்ந்து கொள்ள வந்தது. கூழ் என்னும் எளிய உணவின் பெயர் ஆகுபெயராய் மேவி அரிய பெரிய அரச செல்வங்களை இங்கே நன்கு குறித்து நின்றது.

படை குடி கூழ் என முன்னம் இறைமாட்சியில் ஆட்சியின் மாட்சிக்கு உரிமையாக வந்துள்ளதும் ஈங்கு அறிய வுரியது. செல்வமும் செல்வக் குடிகளும் நல்ல அரசுக்கு நலமான உடைமைகளாம்.

அரசன் கொடியவன் ஆயின் குடிசனங்கள் அவனை அடியோடு வெறுத்துவிடுவர் ஆதலால் குடியும் இழக்கும் என்றார்.

கொடியமன் னவர்க்குக் குடிகளே ஒன்னார்;
  கோட்டையே அமர்க்களம்; அவர்தம்
அடிகள்தோய் நிலம்எங் கணும்படு குழியாம்;
  அயின்றிடும் அன்னமும் விடமாம்;
நெடியஆ சனமே காசன மேடை;
  நிமிர்உழை யோர்நமன் தூதர்;
கடிமனை மயானக் காடு;எனின் கொடுங்கோல்
  காவலர் உய்யுமாறு உளதோ? (நீதிநூல்)

கொடுங்கோல் அரசனுக்கு நேர்கிற அழிகேடுகளை இது தெளிவாக விளக்கியுளது. பாட்டைக் கூர்ந்து நோக்கிப் படுதுயர்களை ஓர்ந்து கொள்ள வேண்டும்.

காசனம்=கொலை. மயானம்=சுடுகாடு.

*நீதிநெறியுடன் நின்று மாந்தரை நன்கு காக்க நேர்ந்தவர் வேந்தர். அவர் நிலைமாறிப் புலை புரிய நேரின் அரச திருவை இழந்து விரைந்து அழிந்து ஒழிகின்றனர்.*

கொடுங்கோல் கடுங்கேடுகளைக் கடிது விளைக்கிறது.

Boundless intemperance
In nature is a tyranny; it hath been
The untimely emptying of the happy throne
And fall of many kings. Macbeth: 4; 3)

*"செம்மையில் மாறித் தீமையில் மீறுவதே கொடுங்கோன்மை; அதனால் அநேக அரசர்கள் தம் இனிய அரியணையிலிருந்து விரைந்து இழிந்து அழிந்து போயுள்ளனர்" என இது குறித்திருக்கிறது. இந்த ஆங்கிலக் கவி ஈங்கு ஊன்றி ஓர்ந்து உணர வுரியது.*

*உலக மக்களுக்கு நன்மை புரிய வுரிய அரசர் உள்ளம் கோடி அல்லல் புரியலுறின் அவர் எள்ளலையிழிந்து இழி பழி படிந்து அழிந்து போகின்றார்.*

### கொடுங்கோல் விளைவுகள்

அரியபெருந் திருவுடையன்; அடலாண்மை
அமைவுடையன்; அவனி பாலர்
பிரியமுடன் தொழுதேத்தும் பெருமிதமும்
பெரிதுடையன்; பெற்றும் தீதாய்க்
கரியமனத் திருள்படிந்து கடுங்கேடும்
கொடுங்கோலும் களித்துக் கொண்டான்:
உரியவெலாம் ஒருங்கிழந்து சுயோதனன்தன்
குடியடியோ டொழிந்தான் அந்தோ! (1)

பெண்மைக்கும் கற்புக்கும் குடிப்பிறப்பின்
பெருமைக்கும் பேரா நீர்மை
உண்மைக்கும் உயிரொளியாய் உதித்தவுயர்
சீதையுளம் உளையச் செய்தான்:
எண்மைக்கும் எண்மையனாய் இழிவுக்கும்
இழிமகனாய் இலங்கை வேந்தன்
வெண்மைக்கும் வெண்மையனாய் விளிந்ததுவெங்
கொடுங்கோலின் விளைவே அன்றோ? (2)

எவ்வளவு பெரிய அரசாட்சிகளை எய்தி யிருந்தாலும், எத்தகைய மாட்சிகளைப் பெற்றிருந்தாலும், கொடுங்கோலராய்க் கொடுமை செய்ய நேரின் அவர் யாவும் இழந்து அடியோடு அழிந்து ஒழிந்து போவர் என்பது இவரால் எவரும் தெளிந்து கொள்ள வந்தது.

கொடுமை கடுமையானமையால் துரியோதனனும், இராவணனும் குடிகேடராய் அழிவடைய நேர்ந்தனர்.

கோல்கோடின் அரசன் குடி கெடும்.

இவ்வுண்மை அவிச்சித்துபால் அறிய வந்தது.

சரிதம்.

இவன் சந்திரகுலத்து அரசன். காந்தமன் என்னும் வேந்தன் மைந்தன். திண்ணிய திறலுடையனுயினும் நுண்ணிய அறிவில்லாதவன். அரச பதவியை அடைந்ததும் அகம் மிகச் செருக்கி எவரையும் மதியாமல் இறுமாந்து நின்ருன். இவனுக்கு மனைவியர் இருவர்; கௌரி, சுபத்திரை என்னும் பேரினர். அழகிய மங்கையரான அவர்களோடு அமர்ந்து இனிய போகங்களை நுகர்ந்து கழிபெருங்காமியாய்க் களித்திருந்தான். உரிய மந்திரிகளுடைய அரிய அறிவுரைகளை யாதும் கேளாமல் தீதே புரிந்தான். குடிசனங்களின் குறைபாடுகளையும் முறையீடுகளையும் ஒரு சிறிதும் கருதாமல் உளம் திரிந்திருந்தமையால் யாவரும் வருந்தி எவ்வழியும் மதியாமல் இவனை இகழ்ந்து வந்தனர். தையலார் மையலிலேயே தாழ்ந்து கிடந்தமையால் வையம் வைவதை இவன் யாதும் ஓர்ந்து கொள்ளவில்லை. ஆட்சிமுறை அவலக்காட்சியா யிருந்தது. அமைச்சரும் வெறுத்து விலகினர். அரச செல்வங்கள் எல்லாம் பரிசு குலைந்து சிதைந்து போயின. நல்ல அறிவுரைகளைக் கேட்டு நயமான வழியில் வாழாமல் அல்லல் புரிந்து வந்த இவன் அவலமாயிழிவுற நேர்ந்தான். இவனது நிலைமையை அறிந்து பலரும் இகழ்ந்தனர்.

“அரசெனத் தோன்றியும் அவிச்சித்து என்பவன்
விரசனய் வெந்தொழில் விழைந்து நின்றதால்

பரசுறு திருவுடன் பதவி மேன்மையும்
முரசொலி யாமென முழுதும் போயின.''

இவனுக்கு நேர்ந்த இழவுகளைக் குறித்து இவ்வாறு பலரும் பரிந்து கூற இவன் வருந்தி நொந்தான். கோல் கோடிச் சூழாது செய்யும் அரசன் கூழும் குடியும் ஒருங்கே இழந்து இழிந்து ஒழிந்து போவான் என்பதை உலகம் இவனிடம் உணர்ந்து நின்றது.

**நீதிமுறை இல்லா நிருபன் திருவிழந்து**
**தீதாய் அழிந்து விடும்.**

*கோல் வளையின் கோன் அழியும்.*

---

அயல் அழுதால் அரசு பாழாம்.

555. நீலி துயரால் நெடுஞ்செல்வம் தேய்ந்துவசு
கோலிழந்தான் என்னே குமரேசா-ஞாலமிசை
அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. (ரு)

இ-ள்.

குமரேசா! *நீலியை அழச் செய்த வசு ஏன் திரு இழந்து அழிந்தான்? எனின்,* அல்லல்பட்டு ஆற்ருது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை என்க.

அல்லல் புரிவது அழிவே தரும் என்கிறது.

துன்பம் அடைந்து பொறுக்க முடியாமல் மக்கள் அழுத கண்ணீர் மன்னனது செல்வத்தை ஒல்லையில் அழிக்கும் பொல்லாத வாள்.

படை=கொலைக் கருவி. படுத்தலைச் செய்வது படை என வந்தது. அழிவு நிலை தெளிவாத் தெரிய நின்றது.

தேய்த்தல்=உருவற மாய்த்தல்.

அன்றே? என்னும் வினு தெளிவு தோன்ற நின்றது.

கொடிய பகைவராலும் நெடிய படைகளாலும் செய்ய முடியாத அழிகேடுகளை அழுகண்ணீர் செய்து

விடும் என அரசனை அச்சுறுத்தி யிருப்பது ஈண்டு உய்த்து உணர வுரியது.

மன்னுயிர் மகிழச் செய்வது மன்னவன் கடமை; அவ்வாறு செய்யாமையோடு அமையாமல் அழுது புலம்பும்படி செய்தால் அது கொடிய மடமையாம்; நெடிய தீமையாம்; நீசக் கேடுகளாம்.

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாள் ஒக்கும்.

என்பது பழமொழி. கண்ணீர் படை என்று சுட்டி யுள்ள தேவர் வாக்கை ஒட்டி இது வந்துள்ளது.

இயல்பாகவே நல்ல ஆதரவில்லாமல் உள்ளம் வருந்தி உளைந்துள்ள ஏழைகளை வருத்துவது கொடிய பாவமாம்.

தோற்றத்தால் பொல்லார் துணையில்லார் நல்கூர்ந்தார்
மாற்றத்தால் செற்ருர் எனவலியார் ஆட்டியக்கால்
ஆற்ரு தவரழுத கண்ணீர் அவரவர்க்குக்
கூற்றமாய் வீழ்ந்து விடும். (பழமொழி, 166)

எளியவர் அழுது மறுகுமாறு செய்தால் அவ்வாறு செய்தவர்க்கு அக்கண்ணீர் கூற்றமாய் மூண்டு கொடிய அழிவுகளை ஆற்றிவிடும் என இது சாற்றி யுள்ளது.

ஆற்ருது அழுத கண்ணீர் என்னும் இது குறளை அடியொற்றி வந்துள்ளது. முதுமொழிகளுக்கும், பழமொழிகளுக்கும் பொய்யாமொழி மூல மொழியாயுள்ளமையை நூல்களில் சாலவும் அறிந்து வருகிருேம்.

தன் செல்வம் செழித்துத் தனது அரசு எவ்வழியும் தழைத்து வரவேண்டின், அரசன் எல்லார்க்கும் நல்லது செய்துவர வேண்டும்; அல்லல் செய்ய நேரின் யாவும் அழிந்துபட நேரும். அவனும் இழிந்து படுவான்.

அல்லலடைந்து ஆற்ருமல் அன்றழுத
பாஞ்சாலி அருவிக் கண்ணீர்
மல்லல்வளம் பெரிதுடைய சுயோதனன்தன்
அரசசெல்வம் யாவும் தீவாய்ப்
புல்லெரிந்த தாமென்னப் புலன்தெரியாது
அடியோடு புகைந்த தந்தோ!

நல்லசெயல் ஒருவிஅரசு அல்லல்செயின்
நாசமெலாம் நண்ணு மன்றே.

துரோபதை அழுத கண்ணீரே துரியோதனன் குடியை அடியோடு அழித்து ஒழித்தது; அந்த உண்மையை இதில் உணர்ந்து தெளிந்து கொள்கின்றோம்.

செல்வமும் இன்பமும் புகழும் புண்ணியத்தால் பொலிந்து வருகின்றன. வறுமையும் துன்பமும் பழியும் பாவத்தால் தோன்றுகின்றன. உயிர்களுக்குத் துயர் இழைப்பது பொல்லாத பாவம் ஆதலால் அது செல்வத்தைத் தேய்த்துச் சீரைமாய்த்துத் தீராத நோய்களைச் சேர்த்து அரசைப் பேர்த்து எறிந்து விடுகிறது.

இடர்களை நீக்கிக் குடிகளுக்கு எவ்வழியும் இதமே செய்யவுரிய அரசன் கொடுமை செய்ய நேரின் அவன் கொடுங்கோலனாய் நெடும் பழிகளை அடைகிறான். அவன் நாட்டில் வாழுகின்ற மக்கள் அஞ்சி அலமந்து அல்லலுழந்து வருந்துகின்றனர்.

தீயினம் படர்ந்து வேந்தன் செறுவதே புரியு மாயின்
போயினம் படர்ந்து வாழும் புகலிடம் இன்மை யாலே
வேயினம் படர்ந்த சாரல் வேங்கையை வெருவிப் புல்வாய்
மாயினம் படர்வ தெல்லாம் வையகம் படரு மன்றே.
(சூளாமணி, மந்திர 27)

வேந்தன் அல்லல் செய்ய நேரின் அந்த நாட்டில் வாழுகின்ற மாந்தர் படுகிற பாட்டை இது காட்டியுள்ளது. பொருள் நிலைகளையும் குறிப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும்.

பிறர் அல்லலுற்று அழச் செய்தவன் செல்வம் இழந்து அல்லல் உழந்து அலமந்து அழிவான்.

இது வசுவின்பால் அறிய வந்தது.

**சரிதம்.**

இவன் கலிங்க தேசத்திலிருந்த ஒரு குறுநில மன்னன். சிங்கபுரம் என்னும் நகரிலிருந்து அரசு புரிந்தவன். அஞ்சா நெஞ்சினன். எதையும் துணிந்து செய்

யும் துடுக்குமிக வுடையவன். செருக்கும் களிப்பும் இவனிடம் செழித்திருந்தன. அறிவு ஒழுக்கங்களில் சிறந்த பெரியோர்களைத் தமராகப் பேணிக்கொள்ளாமல் சிறியவர்களையே உரிய துணையாக உவந்து வந்தான். அவருள் பாதன் என்பவன் ஒருவன். வஞ்ச நெஞ்சன். அவன் இவனுக்குக் கருமத் துணைவனாய் மருவியிருந்தான். அவன் கூறியபடியே காரியங்களை இவன் கருதி வந்தமையால் குடிசனங்கள் மறுகி நொந்தனர். அக்காலத்தில் கபிலபுரம் என்னும் நகரிலிருந்து சங்கமன் என்னும் வணிகன் தனது மனைவியுடன் வந்து சிங்கபுரத்தில்தங்கி வாணிகம் செய்து வந்தான். பொருளை வளமாக ஈட்டி வந்தமையால் பாதன் அவன் மேல் பொறாமை கொண்டான். தன் பகைவன் நாட்டிலிருந்து வகையாய் வந்து அங்கே களவாக உளவுகள் அறியும் ஒற்றன் என்று இக்கொற்றவனிடம் அப் பாழ்வாயன் கோள் மூட்டினான். மூட்டவே யாதும் ஆராயாமல் அவ்வணிகனை இவன் கொன்று தொலைத்தான்.

**தீயன்எனும் பாம்பு செவியில் ஒருவற்கவ்வ**
**மாயுமே மற்றை யவன்** என்றபடி அவன் மாய்ந்து போனான். போகவே அவனுடைய மனைவி நீலமாலை என்பவள் உள்ளம் கொதித்துத் தலைவிரிகோலமாய் அழுது புரண்டு துன்பம் பொறுக்க முடியாமல் மாண்டு போனாள். அவளது பரிதாப நிலையைக் கண்டு யாவரும் பரிந்து வருந்தினர். அதனால் இவனும் பெருந்திருவிழந்து பேதையாய் இழிந்தான். அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அரசனது செல்வத்தைத் தேய்த்துச் சீரழித்து விடும் என்பதைப் பாரிலுள்ள யாவரும் இவனிடம் அறிந்து கொண்டனர்.

கொலைக்களப் பட்ட சங்கமன் மனைவி
நிலைக்களம் காணாள் நீலி என்போள்
அரசர் முறையோ! பரதர் முறையோ!
ஊரீர் முறையோ! சேரியீர் முறையோ! என
மன்றினும் மறுகினும் சென்றனள் பூசலிட்டு.
(சிலப்பதிகாரம் 23)

பார்த்திபன் தொழில் செயும் பரதன் என்னும்
தீத்தொழி லாளன் தெற்றெனப் பற்றி
ஒற்றன் இவன்என உரைத்துமன் னற்குக்
குற்றமி லோனைக் கொலைபுரிந் திட்டனன்;
ஆங்கவன் மனைவி அழுதனள் அரற்றி
ஏங்கிமெய் பெயர்ப்போள் இறுவரை ஏறி
இட்டசாபம் கட்டியது. (மணிமேகலை 26)

வசுமன்னனது கொடுங்கோன்மையில் நிகழ்ந்துள்ள கடுங் கேடுகளை இவை இவ்வாறு வரைந்து காட்டியுள்ளன. அழுதனள் அரற்றி என்றது அவளது அல்லலையும் ஆற்றாமையையும் அழுத கண்ணீரையும் அயலறியச் செய்துளது.

அல்லலை யுடையவர் அழுத கண்ணினீர
செல்வமன் னவர்கெடத் தேய்க்கும் வாள்எனச்
சொல்லிய மொழிசெவித் தொளைக்கு ளேபுக
இல்லையோ? உடற்பயன் இழந்த மன்னனே!
(செவ்வந்திப் புராணம் 10-33)

அல்லல் செய்து வந்த ஒரு சோழ மன்னனை நோக்கிச் சாரமா முனிவர் என்னும் பெரியவர் இவ்வாறு கூறியுள்ளார். தேவர் வாக்கை இது முழுதும் தழுவி வந்துளது.

**குடிகள் அழநேரின் கோவின் குடிபின்**
**அடியோ டழிந்து விடும்.**

அழச் செய்யின் அழிவு விளையும்.

---

556. **மன்னரின் ஒளி.**

**தென்னவன்முன் செங்கோலால் சீருற்றான் பின்ஏனோ**
**கொன்னே இழிந்தான் குமரேசா—மன்னியசீர்**
**மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்**
**மன்னாவாம் மன்னர்க் கொளி.** (௬)

**இ-ள்.**

குமரேசா! செங்கோலால் ஒளி பெற்று நின்ற நெடுஞ்செழியன் பின்பு வழுவியதால் ஏன் பழியுற்

ளுன்? எனின், மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃது இன்றேல் மன்னர்க்கு ஒளி மன்ஞ என்க.

அரிய ஒளி நிலே தெரிய வந்தது.

அரசர்க்கு நிலேத்த புகழ் நெறியான நீதி முறையே; அது மாறினுல் அரிய கீர்த்திகள் அவர்க்கு நிலேயா.

செங்கோன்மை=செம்மையான நீதி முறைமை.

அரசனது நேர்மையான நீர்மை கோல் மேல் நின்றது.

ஒளி என்றது புகழை. தன்ஃனயுடையாஃன எங்கும் தலேமையா விளக்கி நிற்பது இங்ஙனம் விளம்ப வந்தது.

மன்னுதல்=நிலேத்து நிற்றல்.

தரும நீதியான ஆட்சி முறையால் புகழ் திரு பெருமை முதலிய மாட்சிகள் எல்லாம் மன்னனுக்கு நிலேத்து வரும்; அந்த நீதி நிலேயில் அவன் ஏதமாய்க் குலேந்தால் மேன்மைகள் யாவும் சிதைந்துபோம்.

மன்ஞ=நிலேத்து நில்லா. பன்மையில் குறித்தது, ஒளி பல வகை நிலேகளில் வெளி வருதல் தெரிய.

புகழ் ஓங்கி வர வாழ்ந்து வருவதே மன்னனுக்குப் புண்ணியமான கண்ணிய வாழ்வாம். ஈகை இரக்கம் ஒழுக்கம் நேர்மை நீர்மை முதலிய சீர்மைகளே சீர்த்தியை விளேத்து வருகின்றன.

நிலேயில்லாத இவ்வுலகில் நிலேயாய் நிலேத்து நிற்பது புகழே. அதஃனயுடையவனே மன்னிய மன்னவஞய் மாண்புற்று வருகிருன். தன் பேர் மன்னி வரவேண்டு மாஞல் கொடை அளி செங்கோல் குடி ஓம்பல் முதலிய முடி மன்னர் நீர்மைகஃள உன்னி உணர்ந்து யாண்டும் வழுவாமல் அவன் ஒழுகி வர வேண்டும்.

மன்னுதல் வேண்டின் இசை நடுக. (நான்மணி 17)

மன்னிய நாள் மீன். (முத்தொள்ளாயிரம்)

மன்ஞ உலகத்து மன்னிய சீர்த்தஞ்சை வாணன்.
(தஞ்சைவாணன் கோவை, 21)

இவற்றுள் மன்னுதல் குறித்து நிற்றல் அறிக.

மன்ற உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே;
துன்னரும் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க்கு ஈயா மையின்
தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே;
தாள்தாழ் படுமணி இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனெனென் ஆகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்
நாடுஇழந் ததனினும் நனியின் னாதென
வாள்தந் தனனே தலைஎனக்கு ஈயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின்
ஆடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.

(புறம், 165)

ஒன்றும் நிலையாத இந்த உலகில் என்றும் நிலைத்து நிற்பது புகழே; ஈகை யுடையவரே புகழ் ஒளியால் யாண்டும் விளங்கி நிற்கின்றனர்; ஈயாத உலோபிகள் இருந்த இடமும் தடம் தெரியாமல் வீணே மாய்ந்து ஒழிகின்றனர்: கையில் யாதொரு பொருளும் இல்லாதிருந்தும் தன் தலையைக் கொடுக்க நேர்ந்தமையால் குமண வள்ளலின் புகழ் உலகம் எங்கும் பரவி ஒளி புரிந்து வருகிறது எனப் பெருந்தலைச் சாத்தனார் என்னும் சங்கப் புலவர் அந்த மன்னனை இன்னவாறு வியந்து நன்னயமாப் புகழ்ந்து போற்றி யிருக்கின்றார்.

மன்னுதல் மன்றமை இரண்டும் இதில் மன்னி வந்துள்ளன. உண்மை நிலைகளை உன்னி உணர்ந்து பொருள் நயங்களை ஓர்ந்து தேர்ந்து கொள்ளுக.

செங்கோலே அரசர்க்குச் சிறந்த புகழை அருளும்; அது கோடுமாயின் அவர்க்குக் கொடிய நெடிய பழியே.

இவ்வுண்மை செழியன் பால் தெளிய நின்றது.

## சரிதம்.

இந்த மன்னன் சிறந்த நீதிமான். மதுரைமா நகரிலிருந்து அரசு புரிந்தான். தன் ஆட்சியில் யாதொரு தீதும் நேராமல் காட்சியோடு கருதிக் காத்து வந்தான். வருங்கால் **பராசரன்** என்னும் வேதியன் சேர மன்னனிடம் சென்று பரிசில் பெற்று மீண்டு பாண்டி நாட்டை அடைந்து **தங்கால்** என்னும் ஊரில் தங்கினான். அங்கே **தக்கிணன்** என்னும் வேதியச் சிறுவன் வேதம் ஓதியதைக் கேட்டு மகிழ்ந்து தான் கொண்டு வந்த பொருள்களை எல்லாம் அவனுக்கே கொடுத்தான். அந்த மைந்தன் தந்தை பெயர் **வார்த்திகன்.** தாய் **கார்த்திகை.** தான் பெற்ற அரிய பொருள்களை தன் பெற்றோரிடம் அவன் தந்தான். அவர் வியந்து மகிழ்ந்தார். அரிய விலையுடைய பெரிய பொருள்கள் அந்த வறிய மறையவனிடம் இருப்பதைக் கண்டு சிலர் பொறாமை கொண்டு அரசாங்க அதிகாரிகளிடம் வந்து களவுப் பொருள் என்று கோள் கூறினர். காவலர் வந்து அவ் வேதியனை ஈர்த்துச் சென்று சிறையில் இட்டனர். அவன் மனைவி மறுகி அழுது அரசனிடம் வந்து முறையிட்டு நடந்ததை உரைத்தாள். இவ்வேந்தன் விசாரித்து உண்மை தெரிந்து உள்ளம் வருந்திச் சிறையை நீக்கி அம் மறையவனை அழைத்துச் செய்த பிழையைப் பொறுத்தருளும்படி வணங்கி அரிய பல பொருள்களைக் கொடுத்துத் தொழுது விடுத்தான். இவனது நீதிமுறையை யாவரும் வியந்து தரும மூர்த்தி எனப் புகழ்ந்து போற்றினர்.

சீர்த்தகு சிறப்பின் வார்த்திகன் புதல்வன்
ஆலமர் செல்வன் பெயர்கொண்டு வளர்ந்தோன்;
பால்நாறு செவ்வாய்ப் படியோர் முன்னர்த்
தளர்நா வாயினும் மறைவிளி வழாஅது
உளமலி உவகையோடு ஒப்ப ஓதத்
தக்கிணன் தன்னை மிக்கோன் வியந்து
முத்தப் பூணூல் அத்தகு புனைகலம்
கடகம் தோட்டொடு கையுறை ஈத்துத்
தன்பதிப் பெயர்ந்தனன் ஆக நன்கலன்

புணைபவும் பூண்பவும் பொருஅர் ஆகி
வார்த்திகன் தன்னைக் காத்தனர் ஓம்பிக்
கோத்தொழில் இளையவர் கோமுறை அன்றிப்
படுபொருள் வௌவிய பார்ப்பான் இவன்என
இடுசிறைக் கோட்டத்து இட்டனர்ஆக;
வார்த்திகன் மனைவி கார்த்திகை என்போள்
அலந்தனள் ஏங்கி அழுதனள் நிலத்தில்
புரண்டனள் புலந்தனள் பொங்கினள் அதுகண்டு
மையறு சிறப்பின் ஐயை கோயில்
செய்வினைக் கதவம் திறவாது ஆகலின்,
திறவாது அடைத்த திண்ணிலைக் கதவம்
மறவேல் மன்னவன் கேட்டனன் மயங்கிக்
கொடுங்கோல் உண்டுகொல்? கொற்றவைக்கு உற்ற
இடும்பை யாவதும் அறிந்தீ மின்!என
ஏவல் இளையவர் காவலற் றொழுது
வார்த்திகற் கொணர்ந்த வாய்மொழி யுரைப்ப
நீர்த்தன் றிதுவென நெடுமொழி கூறி
அறியா மாக்களின் முறைநிலை திரிந்தஎன்
இறைமுறை பிழைத்தது பொறுத்தல்நும் கடன்எனத்
தடம்புனல் கழனித் தங்கால் தன்னுடன்
மடங்கா விளையுள் வயலூர் நல்கிக்
கார்த்திகை கணவன் வார்த்திகன் முன்னர்
இருநில மடந்தைக்குத் திருமார்பு நல்கிஅவள்
தணியா வேட்கையும் சிறிதுதணித் தனனே;
நிலைகெழு கூடல் நீள்நெடு மறுகின்
மலைபுரை மாடம் எங்கணும் கேட்பக்
கலையமர் செல்வி கதவம் திறந்தது;
சிறைப்படு கோட்டம் சீமின் யாவதும்
கறைப்படு மாக்கள் கறைவீடு செய்ம்மின்!
இடுபொருள் ஆயினும் படுபொருள் ஆயினும்
உற்றவர்க்கு உறுதி பெற்றவர்க்கு ஆமென
யானை எருத்தத்து அணிமுரசு இரீஇக்
கோமுறை அறைந்த கொற்ற வேந்தன்.

(சிலப்பதிகாரம், 23)

நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை இதில் கூர்ந்து ஓர்ந்து கொள்பவர் இம்மன்னனுடைய செங்கோல் மாட்சியைத்

தேர்ந்து தெளிந்து கொள்ளுவர். நீதி முறையால் இவ்வாறு ஒளி பெற்றிருந்தவன் பின்பு கோவலனை ஆராயாமல் கொல்வித்தமையால் கொடும் பழி அடைந்தான். செங்கோன்மையே மன்னர்க்கு மன்னிய புகழைத்தரும்; அஃது இல்லையேல் ஒளி மன்னுது என்பதை உலகம் இக்குல மகன்பால் நன்கு உணர்ந்து தெளிந்தது,

**நீதிமுறை வேந்துக்கு நீள்புகழ்; தீதாளுல்**
**கோது பழியே கொடிது.**

*புகழ் பெறு; பழி படியாதே.*

---

**கொடிய கோன் நெடிய துயர்.**

557 அன்றேனோ வேனன் அளியின்மை யாலுலகோர்
குன்றி யுளைந்தார் குமரேசா—என்றும்
துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. (எ)

இ-ள்.

குமரேசா! வேனனது இரக்கம் இன்மையால் குடிகள் ஏன் மறுகி நின்றூர்? எனின், துளி இன்மை ஞாலத்திற்கு எற்று வேந்தன் அளி இன்மை வாழும் உயிர்க்கு அற்றே என்க.

அளி இல்லையேல் துளி இல்லை என்கிறது.

மழை இல்லையானுல் உலகிற்கு எவ்வாறு துன்பமோ அவ்வாறே அரசன் அருள் இல்லையாயின் குடிகட்குத் துன்பமாம்.

துளி=நீர்த்திவலை: இங்கே மழையைக் குறித்தது.

மேலிருந்து துள்ளி விழுவது துளி என வந்தது.

ஞாலம் என்றது அதில் வாழும் உயிரினங்களை. புல் பூடு முதலாக எல்லா உயிரினங்களையும் ஒருங்கே உணர்த்தி நின்றது. விரிந்து பரந்துள்ள உலகம் உயிர்த்து வருவது மழை சொரிந்து வருவதாலேயாம். ஆகவே அஃது ஈங்கு உவமையாய் வந்தது.

எற்று=எத்தன்மைத்து. அற்று=அத்தன்மைத்து.

இவை வினை வழியாகவும் சுட்டு அடியாகவும் பிறந்த குறிப்பு முற்றுக்கள். ஏகாரம் தேற்றம்.

வானம் துளியாது ஒழியின் வையம் எவ்வழியும் யாதும் தழையாது ஒழியும்; அது துளித்துவரின் வளம் செழித்து யாண்டும் யாவும் களித்து வரும்.

துளிபதன் அறிந்து பொழிய
வேலி ஆயிரம் விளைகநின் வயலே. (புறம், 391)

வானம் துளிபொழிய வயல்கள் விளைவுகள் பொழி கின்றன. வானின் துளியால் வையம் வாழ்கிறது.

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. (குறள், 16)

விண்ணிலிருந்து துளி வீழவில்லையாயின் இம் மண் உலகில் பசிய புல்லின் நுனியும் காணமுடியாது என இது காட்டியுளது. ஓரறிவுயிரும் தோன்றாது எனவே ஆறறிவுயிர்களின் அழிவு நிலைகள் தெளிவாய் நின்றன.

துளி அளிக்கும், வான் கோனுக்கும், ஞாலம் நாட்டுக்கும், உயிர்கள் நாட்டில் வாழும் குடிகளுக்கும் ஒப்பாம். ஒப்பின் நுட்பங்கள் உய்த்துணர வுரியன.

வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. (குறள், 542)

முன்னம் குறித்துள்ள இதை ஈண்டு இணைத்து எண்ணிக்கொள்ள வேண்டும். நீதி மன்னன் இந்த நிலத்துக்கு நேர்ந்துள்ள நிலைமையையும், தலைமையையும் பலவகையிலும் தெளிவுற விளக்கி யருள்கின்றார்.

வானோக்கி நிற்கும்பைங் கூழ்போலவும்ஒரு மன்னவன்செங்
கோல்நோக்கி நிற்கும் குடிபோல வும்தடங் கோட்டிமையத்
தேனோக்கி நிற்கும் எழிலுடையான்வெங்கைச் செல்வியுனைத்
தான்நோக்கி நிற்கும்நல் லாயத்துளேசென்று சார்ந்தருளே.
(திருவெங்கைக் கோவை 41)

மன்னவன் செங்கோல் நோக்கி நிற்கும் குடி என்னும் இது தேவர் வாய்மொழியை அடி ஒற்றி வந்துள்ளது.

நெல்லுயிர் மாந்தர்க்கு எல்லாம்
நீருயிர்; இரண்டும் செப்பின்
புல்லுயிர்; புகைந்து பொங்கும்
முழங்கழல் இலங்கு வாட்கை
மல்லலங் களிற்று மாலை
வெண்குடை மன்னர் கண்டாய்!
நல்லுயிர் ஞாலம் தன்னுள்
நாமவேல் நம்பி என்ருன்.

(சீவகசிந்தாமணி 2908)

சோறும் நீரும் உயிர்களுக்கு உறுதி ஆகா; மன்னனே உயிர்களுக்கு நல்ல உயிர் ஆதாரமாய் நண்ணியுள்ளான் என்னும் இது ஈண்டு எண்ணியுணர வுரியது.

சேய்களுக்குத் தாய் போல் குடிகளுக்கு அரசன். அவன் தண்ணளியுடையனுயின் மக்கள் எவ்வழியும் இன்பம் மீதூர்ந்து வாழ்வர்; அவன் கொடியன் ஆனல் யாண்டும் நெடிய துயரமாய் நிலை குலைந்து நிற்பர்.

நிறந்தலை மயங்க வெம்பி நெடுங்கடல் சுடுவ தாயின்
இறந்தலை மயங்கு நீர்வாழ் உயிர்க்கிடர் எல்லை யுண்டே?
மறந்தலை மயங்கு செவ்வேல் மன்னவன் வெய்யன் ஆயின்
அறந்தலை மயங்கி வையம் அரும்படர் உழக்கும் அன்றே.

(சூளாமணி, மந்திர 25)

குளிர்ந்த கடல் நீர் சுட நேரின் அங்கே வாழ்கின்ற உயிரினங்கள் துயருழந்து மடியும்; அதுபோல் தண்ணளி புரிய உரிய மன்னவன் கொடியவன் ஆனல் அவன் குடைக்கீழ் வாழுகின்ற குடிகள் கொடுந்துயர் உடையராய் நெடுந்திகிலுடன் வருந்தி யாண்டும் மறுகி யுழலுவர் என இது குறித்துள்ளது.

யாம்நிற் கூறுவது எவன்உண்டு? எம்மினும்
நீ நற்கு அறிந்தனை நெடுந்தகை: வானம்
துளிமாறு பொழுதின் இவ் வுலகம் போலும்நின்
அளிமாறு பொழுதின்இவ் ஆயிழை கவினே.

(கலி, 25)

காதலன் அளி புரிந்துவரின் காதலி ஒளி மிகுந்து வருவள்; அவன் அளிமாறின் இவள் எழில் மாறி இன்னலுறுவள் என ஒரு தோழி இவ்வாறு கூறியுள்ளாள்.

பெருங்கடுங்கோ என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் பாடியிருக்கிறார். குறளின் சொல்லும் பொருளும் இதில் உறழ்ந்து வந்துள்ளன. குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து பொருளைத் தேர்ந்து கொள்ள வேண்டும்.

வள்ளுறு வயிரவாள் அரசில் வையகம்
நள்ளுறு கதிரிலாப் பகலும், நாளொடும்
தெள்ளுறு மதியிலா இரவும், தேர்தரின்
உள்ளுறை உயிர் இலா உடலும் ஒக்குமே.

(இராமா: 2, 10-7)

கதிர் இல்லாத பகல், மதி இல்லாத இரவு, உயிர் இல்லாத உடல்போல் நல்ல அரசு இல்லாத நாடு அல்லலடையும் என இஃது உணர்த்தியுளது. இதன் பொருளை ஊன்றி உணர்ந்து கொள்பவர் அரசின் மகிமை மாண்புகளைத் தேர்ந்து தெளிந்து கொள்வர்.

மன்னுயிர்க்கு இன்னுயிராய் மருவியுள்ள மன்னன் தண்ணளி தழுவிவரின் புண்ணியமூர்த்தி என யாவரும் எண்ணிப் போற்றுவர். அவன் அருள் இலனேல் இருள் படிந்த உலகமாய் யாவரும் இன்னலுறுவர்.

மழைபொழியா தாயின் மகிதலம்பாழ்; மன்னன்
உழையருள் இன்றேல் உயிர்பாழ்;—பிழையிலா
நீதி யிலேயேல் நிலைமைபாழ்; பாழேநூல்
ஓதல் இலேயேல் உடல்.

அருளும் நீதியும் கல்வியும் ஆட்சிக்கு மாட்சி புரிகின்றன; அவை இல்லையேல் அரசன் உயிரும் உயர்வும் பிறப்பும் இழந்தவனாய் இழிந்துபடுகிறான் என்பதை இதில் தெளிந்து கொள்கிறோம். குடிகளுக்கு இதம் புரிந்து வரும் அளவே முடிமன்னர் உயர்ந்து வருகின்றனர். இதம் ஒழியின் அவர் அதமாய் அழிகின்றார்.

Justice is the bread of the nation; it is always hungry for it. (Chateau briand)

நாட்டுக்கு உயிராதாரமாயுள்ளது அரச நீதியே; அதனையே ஆவலோடு யாவரும் எதிர்பார்த்துள்ளனர்.

Justice consists in doing no injury to men; decency in giving them no offense. (Cicero)

மாந்தருக்குத் தீங்கு மருவாமல் நன்மைசெயும்
வேந்தரியல் நீதி விதி.

இவை ஈங்கு ஆய்ந்து அறிய வுரியன.

இரக்கம் அற்ற அரசனை அரக்கன் என அஞ்சுவர்.

இது வேனன்பால் விளங்கி நின்றது.

## சரிதம்.

இவன் சூரிய குல வேந்தன். துருவன் மரபில் வந்தவன். தந்தை பெயர் அங்கன்; தாய் சுநீதை. நெடுங் காலமாகப் பிள்ளைப் பேறின்றி உள்ளம் வருந்தி அருந் தவம் புரிந்து பெற்றனர் ஆதலால் பெற்றோர் இவனைப் பெருங்காதலோடு போற்றி வந்தனர். இளமையிலேயே பல கலைகளையும் இவன் பயின்று வந்தான். பருவம் எய்தி இளவரசனாயிருந்தும் உளநிலை திரிந்து பழி வழிகளில் திரிந்தான். இவனது நிலைமையை அறிந்து நெஞ்சம் கவன்று வந்த தந்தை அரச பதவியைத் துறந்து விட்டுத் துறவியாய்ப் போனான் போகவே ஏகபோகமா ஆட்சியை இவன் கைக்கொண்டான். இரக்கமின்றி எவ்வழியும் செருக்கி வெய்ய வினைகளே புரிந்து வந்தான். வரவே வையம் இவனை வைது வெறுத்தது.

காதல் மைந்தன் வளர்ந்து கலைபல
ஓத ஓத உணர்வு குறைந்தனன்;
வேத நீதி ஒழுக்கம் விடுத்தனன்
ஆதி யாய அறம்பிழைத் தானரோ. (1)

அன்னை கூற்றின் மடமகள் ஆதலால்
இன்ன தன்மையன் ஆயினன்; ஏழ்புவி
துன்னு கீர்த்தித் துருவன் எனப்படும்
மன்னர் மன்னன் மரபினில் தோன்றினன். (2)

மழகளிற்று மருவலர் போர்கடந்து
அழலும் வேற்படை அங்கன் அறநெறி
ஒழுகு சேயை உயிர்த்திலம் என்றிரும்
பொழில் இரங்கப் புகுந்தனன் கானகம். (3)

வரிச்சுரும்பு வழிமது மாந்தவாய்
விரிக்கும் பூந்தொடை வேந்தர் திறையிடக்
குரைக்கும் வேலைமண் கொண்டு கொழுநிதிச்
செருக்கு மிக்கனன் செஞ்சிலை வேனனே. (4)

(பாகவதம், 4 : 4)

இவனுடைய செருக்கு சிறுமை மடமை கொடுமை முதலிய நிலைகளை இவற்றால் அறிந்து கொள்கிறோம். பெற்ற தந்தையும் உள்ளம் வெறுத்து உருத்து விலகும் படி குற்றங்கள் மண்டி வந்த இவனை எல்லாரும் எள்ளி இகழ்ந்தார். இவன் ஆளுவதைவிட மாளுவதே நல்லது என்று நல்லோர் வருந்தி வந்தமையால் விரைந்து இவன் இறந்து ஒழிந்தான். இரக்கம் இல்லாத அரசன் ஆட்சியி லுள்ள குடிகள் மழையில்லாத பயிர்கள்போல் துயர் களால் வாடி நிற்பர் என்பது இவனிடம் கூடி நின்றது.

**வானம் பொழியாத வையமென மன்னுயிர்கள்**
**கோனின்றேல் குன்றும் குலைந்து.**

அளி அரசுக்கு ஒளி.

---

**உடைமை உடையும்.**

558. உள்ளவரே துன்புற் றுளைந்தார் நரகன்கோல்
கொள்ள நின்ற போதேன் குமரேசா—என்னலுறும்
இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். (அ)

இ-ள்.

குமரேசா! நரகாசுரன் ஆட்சியில் செல்வர்கள் ஏன் அல்லல் உழந்து அலமந்து நொந்தார்? எனின், முறை செய்யா மன்னவன் கோல் கீழ்ப்படின் உடைமை இன்மையின் இன்னாது என்க.

செல்வர் அல்லலுறுவது தெரிய வந்தது.

நீதி புரியாத அரசனது கொடுங்கோலின் கீழ் வாழ நேரின் செல்வரே வறியரினும் அல்லல் மிக உறுவர்.

முறை=அரச நீதி. குலமுறையாய்ச் செய்து வருகிற தரும நிலை குலைய நேரின் அது கொடிய புலையாம்.

இன்மை=பொருள் இல்லாத நிலைமை. என்றது வறுமையை. சிறுமையும் துயரும் தருவது.

உடைமை=பொருள் நிறைந்துள்ள தலைமை. என்றது செல்வத்தை. இன் உருபு எல்லைப் பொருளது. இல்லாதவரினும் பொருள் உள்ளவரே அல்லல் அடைவர் என்றது பொல்லாத ஆட்சியின் புலை அறிய வந்தது.

படின் இன்னது என்றது அவ்வாறு படாவழி உடைமை எவ்வழியும் இனிமையாய் இன்பம் தரும் என்பது தெரிய நின்றது. இனியது இன்னது ஆயது.

இன்னது=துன்பமாம்.

கொடுங்கோலன் ஆள நேரின் அங்கே கடுங் கேடுகளே நீள நேரும். அங்ஙனம் மூளும் கேடுகளுள் ஒன்றை இங்கே மாதிரிக்கு எடுத்துக் காட்டினர். உடைமையைக் குறித்தது அதன் தலைமையைக் கருதி.

பொருள் இல்லார்க்கு இவ்வுலகில் நல்ல சுகம் இல்லை; அதனை யுடையவர்க்கே எல்லா இன்பங்களும் உளவாம். அத்தகைய உடைமையாளர் கொடுமையாளனுடைய ஆட்சியில் கடுமையாகத் துன்பம் அடைவர்.

தொழில் வரி, நிலவரி, தலை வரி, வருமான வரி, வீட்டு வரி, சொத்து வரி என இன்னவாறன தொத்து வரிகளோடு அமையாமல் விரும்பிய போதெல்லாம் பெரும் பொருளைத் தரும்படி செல்வரை அல்லலுறுத்திக் கொடுங்கோல் அரசன் வருத்துவன்; வறியவருக்கு இவ்வகையான துயரம் யாதும் இல்லை ஆதலால் இன்மையின் உடைமை இன்னது என்று இங்ஙனம் விளக்கினர்.

இனியது, இனியது என யாண்டும் யாரும் விரும்பி வருகிற செல்வம் அநீதியான ஆட்சியில் கொடிய துயர மாகிறது, முறை மாறியபோது புலையான துன்பங்களுக் கே நிலையான நிலயமாய அந்நாடு நீடி நிற்கிறது.

சீறிய மனத்தன் ஆகிச்
 சிறந்தசெங் கோலை விட்டுக்
கூறுவெம் பழியை நாடிக்
 குலைந்திடக் கொடுங்கோல் ஓச்சி
ஆறில் ஒன்று இறைகொள் கின்றது
 அல்லவை அகற்றி டாதே
ஏறிறை கொள்வோன் நாட்டில்
 இருப்பவர் மூடர் என்றான்.

(உத்தரகாண்டம், 13-2)

செங்கோலை விட்டுக் கொடுங்கோலைக் கொண்டவன் கடுங்காலன் போல் அஞ்சத் தக்கவன்; அவன் நாட்டில் நல்ல சுகமாய்ச் செல்வர் வாழ முடியாது; உடைமை யாளர் அங்கே இருப்பது மடமையாம் என இது குறித் துள்ளது. ஒரு நாடு செழிப்பாய்ச் சிறந்து விளங்குவது செல்வக் குடிகளாலேயாம். அத்தகைய குடிகளை எத் தகைய நிலையிலும் இனிது பேணி வர வுரியவன் அரச னே; அவன் கொடியனாயின் மிடியரினும் அவர் இடியுறு வர். கொடுங்கோலன் நாட்டில் வாழ்வது கடுங்கேடாம்.

இது நரகன் ஆட்சியில் தெரிய வந்தது.

சரிதம்.

இவன் அருந்திறலாளன். தானவர் குலத்துக்கெல் லாம் தனி முதல் தலைவனாகி வானவர் குலத்தை வாட்டி வாகையே சூடி வந்தான். காம வெறியும் பொருளாசை யும் இவனிடம் கரை கடந்து நின்றன. அயக்கிரீவன் நிகம்பன் பஞ்சரன் பிராபணன் முதலியோர் இவனுக்கு மந்திரிகளாய் மருவி யிருந்தனர். அல்லலான வழிகளி லேயே பழகி எவ்வழியும் இடர்களே புரிந்து இவன் அட லாண்மைகள் ஆற்றி வந்தான். மண்ணுலகில் கொள்ளை அடித்ததோடு அமையாமல் விண்ணுலகிலும் புகுந்து எண்ணரிய பொருள்களை வாரி வந்து வீரியம் விளைத்து

நின்றான். இவனுடைய கொடுமைகளைச் சகிக்க முடியாமல் வானவர் கோன் திருமாலிடம் முறையிட்டான்.

அழிவெம்மதம் பொழிஒங்கலின் அயிராவதப் பாகன்
மழைவண்ணனை அடைந்து அன்னைதன் வார்காதணிமகரக்
குழைதன்னெடு பனிமாலைவெண்குடையும்செழுங் கொடியும்
கழிவெஞ்சின நரகாசுரன் கவர்ந்தேகினன் என்றான்.
(பாகவதம்: 10-32-3)

இந்திரன் வந்து இவ்வாறு கூறவே காப்புக் கடவுளான திருமால் காலம் கருதி வந்து இவனைப் பொருது தொலைத்து உறுதி நலன்களை உளவாக்கி யருளினான். பகதத்தன் என்பவன் இவனுடைய மகன். அவனுக்கு நீதிமுறைகளின் நெறிகளைக் கூறி அரச பதவி யருளினான். நரகனுடைய ஆட்சியில் கொடிய துயரங்களை அடைந்து வந்த குடிகள் மகன் காலத்தில் சுகமாய் வாழ்ந்தனர். அரசன் நெறியே முறை செய்யவில்லையானால் அங்கே பொருளுடையவர் மருளுடையராய் மறுகி அயர்வர் என்பதை எவரும் இவன் ஆட்சியில் காட்சியாய்க் கண்டு கொண்டனர்.

பொருளுடையார் இன்பமெல்லாம் பூவுலகில் உடையரென
அருளுடைய மேலோர்முன் அருளியது மெய்எனினும்
மருளுடைய கொடுங்கோலன் வாழ்நாட்டில் உடையவரே
இருளுடைய துயரமெலாம் எதிரடைவர்; இலர் இலரே.

**நீதி புரியா நிருபன் நிலமுறைதல்**
**தீது துயரம் தினம்.**

அநீதி ஆட்சி அவலக் காட்சி.

---

## 559. முறை கோடின் உறை கோடும்.

**கோடாதபூடணன்முன்கோடியதால்வான்பெயல்பின்**
**கோடிநின்றதென்னே குமரேசா—கூடும்**
**முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
**ஒல்லாது வானம் பெயல். (கூ)**

இ-ள்.

குமரேசா! குலபூடணன் நிலைமாறியபோது என்

மழை மாறியது? எனின், மன்னவன் முறைகோடிச் செய்யின் வானம் உறைகோடி பெயல் ஒல்லாது என்க.

மழை பெய்யாத பிழை தெரிய வந்தது.

அரசன் நீதி மாறித் தீது புரியின் அங்கே மேகம் மாறி மழை பொழியாது ஒழியும் என்க.

முறை=நீதி; ஒழுங்கு.

செங்கோலின் இயல்பான செயல் முறை புரிதலே ஆதலால் அது கோடியது கொடுங்கோலாய் நீடியது.

அறநெறி வழாமல் முறை புரிந்து வரும் அளவுதான் அரசன் திறனும் தேசும் உடையனுய்ச் சிறந்து வருகிறுன். நீதி வழுவினுல் அங்கே தீது விளைந்து விடும்.

தன் கடமையை முற்றும் ஓர்ந்து இறைவன் செய்வது முறை என வந்தது. முறைமை குன்ருமல் வரும் அளவே இறைமை என்றும் நிலைத்து வருகிறது.

இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். (குறள், 547)

உலகத்தைக் காத்து வருகிற அரசனைக் காத்து வருவது எது? அவனது நீதி முறையே. இதனுல் முறையின் அருமை பெருமைகள் அறியலாம். இத்தகைய முறை குறையுற நேரின் அஃது எத்தகைய கேடாம்! எத்துணைத் தீதாம்! உய்த்து உணர வேண்டும்.

முறைகோடிய நாட்டில் மழை சரியாகப் பெய்யாது என்பார் உறைகோடும் என்ருர். கோடுதல்=உரிய காலத்தில் மழை செவ்வையாகப் பெய்யாமல் மாறுதல்.

உறை=மழை. பயிர் முதலிய உயிரினங்கள் இவ்வுலகில் உறைந்து வாழுதற்கு உரிமையாய் உறுதி புரிந்து வருவது ஆதலால் மழைக்கு உறை என்று ஒரு பெயர் முறையே வந்தது.

உறைகால் மாறிய ஓங்குயர் நனந்தலை.
(பெரும்பாண், 291)

உறைவீழ் ஆலி. (ஐங்குறுநூறு 213)

உறையே பொழிதலும். (புறப்பொருள்)

மாரிப்பேர் உறை. (புறம் 333)

இவற்றுள் உறை உணர்த்தி நிற்றல் அறிக.

கோன் முறை வழங்கிவரின் வான் உறை வழங்கி வரும். வையமும் நிறைய விளைந்து வரும்.

இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு. (குறள், 544)

அரசன் நீதிமுறை செய்துவரின் அங்கே பருவ மழையும் விளைபொருள்களும் வளமாய்ப் பெருகி வரும்; அவ்வாறு செய்யாதவன் நாட்டில் மழை சரியாப் பெய் யாது; விளைவுகள் குன்றும்; வெய்ய துயரங்களே விரிந்து எவ்வழியும் உயிர்கள் நிலைகுலைந்து நிற்கும்.

கொடுங்கோலால் பெருங்கேடுகள் விளையும் என்பார் மன்னவன் முறை கோடின் வானம் உறை கோடும் என்றார். அரசு நிலை திரியின் யாவும் புலையுறுகின்றன.

கோன்நிலை திரிந்திடின், கோள்நிலை திரியும்;
கோள்நிலை திரிந்திடின், மாரிவறம் கூரும்;
மாரிவறம் கூரின், மன்னுயிர் இல்லை;
மன்னுயிர் எல்லாம் மண்ஆள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதிஇன் றாகும். (மணிமேகலை 7)

கோன்நிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கள் மிஞ்சி
நீள்நிலம் மாரி யின்றி விளைவுஅஃகிப் பசியும் நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந்து அறங்கள் மாறி
ஆணையிவ் வுலகுகேடாம் அரசுகோல் கோடின் என்றான்.
(சீவகசிந்தாமணி 255)

தற்பாடு பறவை பசிப்பப் பசையற
நீர்சூல் கொள்ளாது மாறிக் கால்பொரச்
சீரை வெண்டலைச் சிறுபுன் கொண்மூ
மழைகால் ஊன்று; வளவயல் விளையா;
வாய்மையும் சேட்சென்று கரக்கும்; தீதுதரப்
பிறவும் எல்லாம் நெறிமாறு படுமே;
கடுஞ்சினம் கவைஇய காட்சிக்
கொடுங்கோல் வேந்தன் காக்கும் நாடே.
(ஆசிரியமாலை)

வேந்தன் முறை திறம்பின், வேத விதி திறம்பும்;
ஏந்திழையார் தம்கற்பும் இல்லறமும் நில்லாவாம்;
மாந்தர் பசியால் உணங்க மழைவறந்து
பாந்தள்முடிகிடந்த பாரின்விளைவு அஃகுமால்.
(பிரமோத்தரகாண்டம், 11)

அரசன் நீதிமுறை தவறினல் அவன் நாட்டில் தோன்றும் அவலக்கேடுகளை இவை தெளிவாக் காட்டியுள்ளன. பாட்டுகளில் பொதிந்துள்ள பொருள் நிலைகளைக் கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும்.

சுழிபடு கங்கையந் தொங்கல் மௌலியான்
விழிபட வெந்ததோ? வேறு தான் உண்டோ?
பழிபடர் மன்னவன் படைத்த நாட்டினூங்கு
அழிவதென் காரணர்? அறிஞ! கூறு என்ருன்.
(இராமா: 1; 7-20)

முறைகோடிப் பழிபடிந்த கொடுங்கோல் அரசன் நாடு கடுங்கோடையால் காய்ந்த பாலைவனத்தினும் கொடியதாய்க் குலைந்துபடும் என இது குறித்துள்ளது.

நீதிமுறை கோடின் நிருபன் நாடு தீது பல படியும்.

இது குலபூடணன் பால் தெரிய வந்தது.

## சரிதம்.

இக்கோமகன் மதுரைமா நகரிலிருந்து அரசு புரிந்தவன். அநந்தகுணபாண்டியனுடைய அருமைத் திருமகன். கலைகள் பல பயின்று தெளிந்தவன். நெறி நியமங்களுடையவன். எதையும் கூர்மையாக ஓர்ந்துணரும் நீர்மையாளன். யாகம் செய்தல் வேதம் ஓதல் முதலிய கருமங்களில் பிரியமும் நம்பிக்கையும் இந் நம்பியிடம் இல்லாமல் இருந்தமையால் அவற்றைப் பரம்பரையாகச் செய்து வருகிற வேதியர்களை ஆதரியாமல் பராமுகமா யிருந்தான். இறை முறை நின்றமையால் மறையவர் மறுகி நொந்தனர். பருவ மழையும் ஒருவி நின்றது. அதனல் பருவரல்கள் எவ்வழியும் பெருகி வந்தன. நேர்ந்துள்ள நிலைமைகளை ஓர்ந்து இவ்வேந்தன் உள்ளம் வருந்தினன். உறுவதை நினைந்து இனைந்து உளைந்தான்.

வள்ளல் குலபூடணன் திங்கள்
வாரம் தொடுத்துச் சிவதருமம்
உள்ள வெல்லாம் வழாது நோற்று
ஒழுகும் வலியால் தன்நாட்டில்
என்னல் இல்லா வேதியரை
இகழ்ந்தான்; அதனால் மழைமறுத்து
வெள்ளம் அருக வளம்குன்றி
விளைவுஅஃகியது நாடெல்லாம். (1)

அறவோர் எல்லாம் நிரப்பெய்தி
ஆகம் கிடந்த நூலன்றி
மறைநூல் இழந்து முனிவேள்வி
வானோர் வேள்வி தென்புலத்தின்
உறைவோர் வேள்வி இழந்து இழிந்த
தொழில் செய்து ஆற்றாது உயிர்வளர்ப்பான்
புறநாடு அணைந்தார் பசியாலே
புழுங்கி ஒழிந்த குடிஎல்லாம்.

(திருவிளையாடல், 31)

நிகழ்ந்துள்ள நிலைகளை இவை வரைந்து காட்டியுள்ளன. காட்சிகளைக் கருதிக் காண்பவர் இம் மன்னன் ஆட்சியுள் புகுந்துள்ள அவல நிலைகளை அறிந்து கொள்வர். நேர்ந்திருக்கும் துயரங்களை நேரே கண்டு நெஞ்சம் உளைந்து நெடிது மறுகி நின்ற பாண்டியன் ஆண்டவனை அன்புரிமையுடன் நினைந்து அழுது வேண்டி அயர்ந்து உறங்கினான். கனவில் வந்து சில கருத்துக்கள் இனமாய் ஒலித்தன: ஒலிக்குறிப்புகள் உணர்வுகளை அருளின.

“ஏடார் அலங்கல் வரைமார்ப!
எம்பால் என்றும் அன்புடைமை
வாடா விரத விழுச்செல்வம்
உடையாய்! வையம் மறம்கடிந்து
கோடா தளிக்கும் செங்கோன்மை
உடையாய்! உனக்குஓர் குறையுளதுன்
வீடா வளஞ்சேர் நாட்டிந்நாள்
வேள்விச் செல்வம் அருகியதால் (1)

மறையே நமது பீடிகையாம்;
மறையே நமது பாதுகையாம்;
மறையே நமது வாகனமாம்;
மறையே நமது நூபுரமாம்;
மறையே நமது கோவணமாம்;
மறையே நமது விழியாகும்;
மறையே நமது மொழியாகும்;
மறையே நமது வடிவாகும். (2)

வேதம் தானே நமதாணைச்
சத்தி வடிவாய் விதிவிலக்காய்
போதம் கொளுத்தி நிலைநிறுத்திப்
போகம் கொடுத்துப் பல்உயிர்க்கும்
பேதம் செய்யும் பிணியவிழத்துளம்
பிரியா வீடு தருவது; தேன்
நாதம் செய்யும் தார்வேந்தே!
நமது செங்கோல் அதுவாகும். (3)

அந்த மறைகள் தமக்குறுதி
யாவார் அந்நூல் வழிகலிநோய்
சிந்த மகத்தீ வளர்த்தெம்பால்
சிந்தை செலுத்தும் அந்தணரால்;
இந்த மறையோர் வேள்விமழைக்கு
ஏதுவாகும்; இவர்தம்மை
மைந்த! இகழ்ந்து கைவிட்டாய்!
அதனால் மாரி மறுத்தன்றால்.” (திருவிளையாடல்)

இந்தவாறு வேத முதல்வன் கனவில் ஓதி மறையவே வேந்தன் விழித்தான்; வியந்தான்; மகிழ்ந்தான்; புகழ்ந்தான். இறைவனை நினைந்து உருகித் தொழுது துதித்தான். உழுவலன்போடு வழிபாடுகள் செய்து பிழைகளை நீக்கி நீதிமுறை புரிந்தான். புரியவே மழை பொழிந்தது: நாடு வளங்கள் சுரந்து எங்கணும் சிறந்து விளங்கியது. செங்கோன்மையுடையனுய்ச் சீர்மை தோய்ந்து வந்தவன் சிறிது முறை மாறியதால் மிறைகள் மீறி நின்றன. மன்னவன் முறை கோடின் வானம் உறை கோடி நிற்கும் என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்றுன்.

**கோன்மாறி நின்று கொடுமை புரியினே**
**வான்மாறி நிற்கும் வறந்து.**

இறை முறை மாறலாகாது.

---

560. **காவல் கழியின் யாவும் ஒழியும்.**

வேதியரேன் நூல்மறந்தார் வேந்தொருவன் காவாத
கோதுடைமை யான்முன் குமரேசா—தீதிலா
ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின். (ம)

இ-ள்.

குமரேசா! அரசன் முறையே காவாமையால் பாண்டி நாடு ஏன் ஒருமுறை அவலமாய் அல்லல் அடைந்தது? எனின், காவலன் காவான் எனின் ஆ பயன் குன்றும்; அறுதொழிலோர் நூல் மறப்பர் என்க.

காவலன் காப்பு நிலை கருத வந்தது.

மன்னன் மா நிலத்தைக் காவாது ஒழியின் பசுக்கள் பால் குறையும்; வேதியர் வேதங்களை மறந்து விடுவர்.

காவலன் = அரசன். குடிகளைக் காக்க வுரியன்; பாதுகாப்பதில் வல்லவன் என்னும் காரணக் குறிப்புகள் இப் பெயரில் மருவி யுள்ளன. கா என்னும் வினை அடியாகவும், காவல் என்னும் பெயரடியாகவும் வந்துள்ள இதன் பொருளைக் கருதிக் குறிப்பை உணர்ந்து கொள்க.

வீட்டுக்காவல் ஊர்க்காவல் காட்டுக்காவல் மாட்டுக் காவல் எனச் சிறு காவல்களும் உள ஆதலால் பெரிய நாட்டுக் காவல் யாதோர் அடைமொழியுமின்றி இங்கே உயர்வா நன்கு காண வந்தது. பிறருடைய ஏவல்களை மேற்கொண்ட காவலரும் உளர்; அவர் ஊழியர் என்னும் நிலையினர்.

உலக காவலன் ஆன அரசன் எவ்வழியும் தலைமை யாளன்; காவலன் என்பது அவனுக்கு நேமமான பேராய் நின்று நெடிய சீரை நேரே விளக்கி யுள்ளது.

காவல் உழவர் களத்தகத்துப் போர்ஏறி
நாவலோஓ என்றழைக்கும் நாளோதை—காவலன்தன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தால் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு. (முத்தொள்ளாயிரம்)

காவல் உழவர், காவலன் என அரசரை இது குறித்துளது. குறிப்புப் பெயர் சிறப்பு மிக வுடையது.

காவலனை ஆக வழிபட்டார் மற்றவன்
ஏவல் வினைசெய் திருந்தார்க் குதவடுத்தல்
ஆவணைய நின்றதன் கன்று முலையிருப்பத்
தாயணல் தான்சுவைத் தற்று. (பழமொழி, 20)

அரசனை நண்பன் ஆகப் பெற்றவர் அவனது ஏவலாளரிடம் உதவிபெற விரும்புதல், பசுவின் கன்று தன் தாயின் மடியில் பாலைக் குடியாமல் அலைதாடியைச் சுவைக்க நேர்ந்தது போலாம் என இது உரைத்துளது.

ஆ பயன்=பசுக்கள் தருகிற பால்

குன்றும்=குறைந்து போம்.

எவ்வளவோ நல்ல பிராணிகள் உலகில் உள்ளன; இருந்தும் அவற்றை எல்லாம் விடுத்து ஆவை மாத்திரம் ஈண்டு விதந்து எடுத்து முதன்மையாக் குறித்தது ஏன்? அதன் நிலைமை தலைமைகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள.

உலக உயிர்களுக்கு இனிய பயன் சுரந்து வருவது தனியே வியந்து காண வந்தது. பசுவின் பால் உயிர்ச் சத்து உடையது; பருக இனியது; அமுதம் அனையது.

ஆவின் பயன் ஆவிக்கு உரிய நல்ல பயன்.

நிலம் வளமாய்ப் புல் முதலியன செழித்துத் தழைத்துவரின் அவற்றை உண்டு பசுக்கள் மிக்க பாலைத் தரும். மக்கள் நுகர்ந்து மகிழ்ந்து வருவர்.

அரசன் நெறியே முறை புரியாது ஒழியின் அங்கே பருவ மழை சரியாய்ப் பெய்யாது; பெயல் மாறினல் நிலம் இயல் மாறும்; வயிறு ஆர மேய்ந்து வருதற்கு உரிய பசிய புல்லுகள் இல்லையேல் பசுக்கள் மெலிந்து போம்; பால் வறந்து விடும். பார் பரிந்து வருந்தும்.

பாரில் புல் இல்லையேல் பசுவில் பால் இல்லையாம்.

கோவின் பரிபாலனம் குன்றினால் ஆவின் பாலும் குன்றும்; குன்றவே நல்லவை எல்லாம் குறையும் என்பதை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம்.

ஆவையும் பாவையும் மற்றுஅற வோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன்; காவாது ஒழிவனேல்,
மேவும் மறுமைக்கு மீளா நரகமே. (திருமந்திரம் 243)

பசுக்களும் பத்தினிகளும் தருமங்களும் சாதுக்களும் ஞானிகளும் ஒரு நாட்டில் நலமாய் விளங்கி வருதல் அரசனது நீதியான பாதுகாப்பினாலேயாம். **காவலன் காவாது ஒழிவனேல்** அவை யாவும் அவலமாம். ஆகவே அந்தப் பாவத்தால் அவன் மீளா நரகத்தை அடைவன் எனத் திருமூலர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

தேவர் வாய்மொழியை முழுவதும் மேவி அதிவேகமாய் அரசுக்கு இஃது அறிவுறுத்தியுள்ளது அவ்வுண்மையை நுண்மையா ஓர்ந்து உணர்ந்து கொள்ளுக.

அறு தொழிலோர் என்றது அந்தணரை.

ஆறு கருமங்கள் அவர்க்கு உரிய தருமங்களாய் அமைந்துள்ளன. அவை எவை? ஓதல் ஓதுவித்தல் ஈதல் ஏற்றல் வேட்டல் வேட்பித்தல் என்க.

ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றல்என்று ஆறுபுரிந்து ஒழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி.
(பதிற்றுப்பத்து 24)

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது.
(முருகு, 176)

அறுதொழில முத்தீ அருந்துறை போகிய
மறைநவில் நாவின் மரபியல் அந்தணன்.
(பெருங்கதை 2 : 3)

ஆறுஅறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து. (கலி 1)

ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர் பெறுமுறை வகுத்த.
(சிலப்பதிகாரம், 23)

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்.
(தொல்காப்பியம்)

அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து எடுத்த.
(புறம் 397)

ஓதல் அந்தணர் வேதம் பாட. (மதுரைக்காஞ்சி 656)

ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல்
ஈதல் ஏற்றல் என்றிவை ஆறும்
ஆதிக் காலத்து அந்தணர் தொழிலே. (பிங்கலந்தை)

ஓதலே ஓதுவித்தல் உடன்வேட்டல் வேட்பித்திட்டல்
ஈதலே ஏற்றல் ஆறும் ஏற்கும் அந்தணர் தொழிற்பேர்.
(நிகண்டு)

திருவருள் பெற்ற இருபிறப் பாளன்
முத்தீ வேள்வி நான்மறை வளர
ஐவேள் வுயர்த்த அறுதொழி லாளன். (நம்பி-மும்மணி)

செம்மை வெண்ணீற்று ஒருமையினோர்;
இரண்டு பிறப்பின் சிறப்பினார்;
மும்மைத் தழல்ஓம்பிய நெறியார்;
நான்கு வேதம் முறை பயின்றார்;
தம்மை ஐந்து புலனும்பின்
செல்லும் தகையார்; அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும்
போற்றும் மறையோர் விளங்குவது.
[பெரிய புராணம் 26-2]

உன்னல் அரன்கழலே ஓங்கியசீர் அங்கிஅயன்
என்னஉவ மித்தல் இவரென்றே—நன்மறைகள்
ஓதலே ஓதுவித்தல் வேட்டலே வேட்பித்தல்
ஈதல் இரத்தலென் றேத்து. [வெண்பாப் பாட்டியல்]

அறுதொழிலோரைக் குறித்து வந்துள்ள இவை கண்டு அறிய வுரியன. ஒன்று புரிவோர்; இரு பிறப்பாளர்; முத்தீச் செல்வர்; நான்மறை பயில்வோர்; ஐவகை வேள்வியர்; அறுதொழிலாளர் என இவ்வண்ணம் எண்ணலங்காரமாக இவரை எண்ணி வருவது கவிகளின் மரபாய் நண்ணி வந்துள்ளது.

அறுதொழிலோர் நூல் என்றது வேதத்தை.

வேதம் என்பது அறிவைப் போதிப்பது; தருமங்களைத் தெரிவிப்பது; உயிர் துயர்நீங்கிப் பரமனை அடையும் மருமத்தை உறுதியாக உணர்த்துவது.

இதனை ஓதி வருபவர் வேதியர் என நேர்ந்தார்.

வேறு தொழில் புரியாது ஒழுக்கம் தழுவி வேதம் ஓதி வருகிற அவர்க்கு உண்டி உடை உறையுள் முதலியன உதவி வருவது அரசன் கடமையாயது.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். (குறள், 543)

முன்னம் வந்துள்ள இது இங்கே சிந்திக்க வுரியது.

வேதமும் தருமங்களும் நாட்டில் விளங்கி வருவது செங்கோல் மன்னனது ஆட்சி முறையாலேயாம் என்பதை இதனால் இங்கே நன்கு அறிந்து கொள்கின்றோம்.

இந்த நீதி நெறி வழுவித் தீது புரிய நேரின் அது கொடுங்கோன்மையாம். கொடுங்கோலன் நல்லதை நாடிச் செய்யான்; அல்லவையே யாண்டும் செய்ய நேர்வான். நேரவே வேதியர் அங்கே வேதம் ஓதார்; வேறு தொழில்கள் செய்யப் போவார்; போகவே வேதம் மறந்து போம். ஆதலால் அறுதொழிலோர் நூல் மறப்பர் என்றார். பாலையும் நூலையும் இவ்வாறு குறித்துக்காட்டியதால் அவற்றின் பான்மை மேன்மைகளை உய்த்து உணர்ந்து உண்மைகளைத் தேர்ந்து கொள்கின்றோம்.

பால் உடலுக்கு உரம் தரும்.

வேதம் உயிருக்கு உறுதி புரியும்.

பாலைப் பசுக்கள் தருகின்றன; வேதத்தை வேதியர் ஓதி யருள்கின்றனர். உலக வுயிர்களுக்கு இதமான இந்த இருவகை இனமும் கொடுங்கோலன் நாட்டில் குன்றி மறைந்துபோம்.

ஆவின்பாலும் அந்தணர் நூலும் கோவின் செங்கோலால் குலாவி வருகின்றன. கொடுங்கோலால்குன்றி மறைகின்றன. கடுங்கேடுகள் நின்று நிறைகின்றன.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும். (புறம், 9)

ஆவுக்கு ஆயினும்,
அந்தணர்க்கு ஆயினும். (இராமாயணம்)

வாழ்க அந்தணர்;
வானவர் ஆன் இனம். (தேவாரம்)

ஆவையும் அந்தணரையும் இவ்வாறு இனமாச் சேர்த்து எண்ணிப் போற்றியுள்ளனர். நீதியான பாதுகாப்பிலேயே நல்ல நீர்மைகள் நாட்டில் தழைத்து வருகின்றன. அந்தக் காவல் இல்லையேல் யாவும் அவலமாய் எங்கும் இடர்களே தொடர்ந்து படர்ந்து வரும்.

அந்தணர் அருளைச் சாரார்; அரும்பயம் அருக்கும் சேதா;
மந்திரம் மறப்பர் நூலோர்; ஆதலால் மகம் உண் டாகா;
இந்திரன் முதலா உள்ள இமையவர் அவிழூண் கொள்ளார்;
கந்தரம் சிறிதும் நல்கா; காவலன் கொடுமை யாலே.
(செவ்வந்திப் புராணம், 10)

காவலன் இனிது காவாமல் கொடுமையாயிருந்தால், அந்தணர் அருள் உறார்; மந்திரம் மறப்பர்; நூல் ஓதார்; பசுக்கள் பால் குன்றும்; இந்திரன் முதலானோர் சிந்தை வருந்துவர்; மேகம் மழை பொழியாது என ஒரு முனிவர் துனி மிகுந்து இவ்வாறு கூறியுள்ளார். சேதா=பசு; பயம்=பால். அருக்கும்=குறையும்; கந்தரம்=மேகம். கம்=நீர். அதனைத் தரித்திருப்பது **கந்தரம்** என வந்தது.

நீதிமுறையோடு பாதுகாத்து வரும் அளவே அந்த அரசன் நாட்டில் உயர்ந்தோர் உவந்து வாழுவர்; காப்பு நிலை பழுதாயின் அங்கே நல்லோர் நலமாய் வாழார். அல்லல்களே யாண்டும் நீண்டு நிற்கும்.

மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறுஇழைப்ப
உண்பதுஓர் வினைகாணுஇதுஎன உரையாரோ?
பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டு கொல்?
கொண்டகொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டு கொல்?

சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?

தெய்வமும் உண்டுகொல்? தெயவமும் உண்டுகொல்?
வைவாளின் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?
(சிலப்பதிகாரம் 19)

வழுதி வேந்தன் பாதுகாவல் பழுது ஆனமையால் அவனது இராசதானி ஆகிய மதுரையில் தெய்வம் இருக்குமா? அறிவுடைய சான்றோர் இருப்பரா? நிறையுடைய பெண்டிரும் உண்டா? என்று கண்ணகி இன்னவாறு கண்ணீர் சொரிந்து கதறிப் புலம்பி யிருக்கிருள்.

அறுதொழி லாளர் நூல்கள்
அயர்ப்பர்; ஆன்பயன் இன்ருகும்;
உறைபெயல் ஒழியும்; கூழும்
குடிகளும் ஒருங்கு நீங்கும்;
பெறுபயன் நாட்டில் குன்றும்;
பிறங்கொளி நிலைபெ ருது;
கறையின்மேல் பொருள்கைக் கொண்டு
காவலை விடுப்பின் மைந்தா! (விநாயக புராணம்)

நாட்டைக் காக்கும் நரபதி தீயனேல்
வீட்டைக் காக்கும் மனைவியும் வெய்யளாம்;
காட்டைக் காக்கும் கடுவிலங் கென்னவே
கேட்டைக் காக்கக் கிளர்வர் எவருமே.

வேந்தன் நீதிமுறை புரிந்து மாந்தரைப் பாதுகாவானயின் அந்த நாடு பலவகையிலும் கேடுகள் படிந்து இழிந்துபோம்; அவனும் பீடை அடைந்து அழிந்து போவன் என்பதை இவற்ருல் அறிந்து கொள்கிருேம்.

ஆவின் பயனை அந்தணர் நூலினும் முந்துற வைத்தது ஏன்? எனின், அதன் இயல்பு உயர்வுகளைக் கருதி உணர்ந்து உறுதி யுண்மைகள் தெரிய என்க.

ஆவாகி ஆவினில் ஐந்தும் ஆகி
அறிவாகி அழலாகி அவியும் ஆகி
நாவாகி நாவுக்குஓர் உரையும் ஆகி
நாதனாய் வேதத்தின் உள்ளோன் ஆகிப்
பூவாகிப் பூவுக்குஓர் நாற்றம் ஆகி
புக்குளால் வாசமாய் நின்றான் ஆகித்
தேவாகித் தேவர் முதலும் ஆகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்றவாறே.
(தேவாரம்)

ஆவாகி, ஆவின் பயன் ஆகி, வேதத்தின் உள்ளோன் ஆகித் தேவதேவன் மேவியுள்ள நிலைமையைத் திருநாவுக்கரசர் இவ்வாறு கூறியிருக்கிறார். ஆவை இதில் முதன்மையாக் குறித்துப் பொறித்துள்ளார்.

நல்லவை நாட்டில் தழைத்து வரவேண்டுமானால் அரசன் யாண்டும் யாவும் நாடிப் பாதுகாக்க வேண்டும்.

அறம்புரிந்தன்று அம்ம! அரசில் பிறத்தல்;
துறந்த தொடர்பொடு துன்னிய கேண்மை
சிறந்தார்க்கும் பாடு செயல்ஈயார் தத்தம்
பிறந்தவேல் வென்றிப் பொருட்டு. (நாகடூர்)

அரசின் பொறுப்பை இது குறித்துள்ளது.

உற்ற அரசன் உரிமையோடு ஓர்ந்து காவல் புரியானாயின் அங்கேயாவரும் வருந்த ஊறுகள் மிகுந்து விடும்.

இவ்வுண்மை வெற்றிவேல் செழியனால் விளங்கி யாண்டும் வேந்தின் மேன்மை துலங்கி நின்றது.

## சரிதம்.

இக்கொற்றவன் பாண்டிய மன்னர் குலத்தோன்றல். கொற்கை என்னும் நகரிலிருந்து அரசு புரிந்தான். சிறந்த மதியும் உயர்ந்த வீரமும் இவனிடம் நிறைந்திருந்தன. எவ்வழியும் வெல்லும் திறலுடையனாய்

விளங்கி நின்றமையால் வெற்றிவேல் செழியன் என வியன் பெயர் பெற்று யாண்டும் உயர்ந்து நின்றான்.

மதுரையம்பதியில் கோவலன் கொலையுண்டு இறந்ததை அறிந்ததும் தனது நீதியான ஆட்சியில் அநீதி நேர்ந்து விட்டதே! என்று உள்ளம் பதைத்து நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் மாண்டு போனான். போகவே அந்த நாடு பாதுகாப்பின்றிப் பரிதாபநிலையில் படர் படர்ந்திருந்தது. இறைவன் இல்லாமையால் துறைகள்தோறும் துயர்கள் தொடர்ந்தன; மறை ஒலிகள் மறைந்தன; கறவைகள் குறைந்தன; மிறைகள் மிடைந்தன. அந்த அவல நிலைகளை அறிந்து இந்த வேந்தன் தன் ஆட்சியை அமைச்சரிடம் ஒப்பித்து விட்டு நேரே மதுரைக்கு வந்தான். நேர்ந்திருந்த குறைகளை எல்லாம் விரைந்து நீக்கினான். எவ்வழியும் செவ்வையாகக் கூர்ந்து ஓர்ந்து சீர் திருத்தங்களைச்செய்தான்; செய்யவே யாவும் சிறந்து விளங்கின. யாவரும் உவந்து வந்தனர். எங்கும் வளங்கள் பொங்கிப் பொலிந்தன.

> தண்தமிழ் வேலித் தமிழ்நாட் டகம்எல்லாம்
> நின்று நிலைஇப் புகழ்பூத்தல் அல்லது
> குன்றுதல் உண்டோ மதுரை? கொடித்தேரான்
> குன்றமுண் டாகும் அளவு.
>
> செய்யாட்கு இழைத்த திலகம்போல் சீர்க்கொப்ப
> வையம் விளங்கிப் புகழ்பூத்தல் அல்லது
> பொய்யாதல் உண்டோ? மதுரை; புனைதேரான்
> வையையுண் டாகும் அளவு. (பரிபாடல்)

இவ்வாறு நகரமும் நாடும் புகழ்பொலிந்துவர இவன் முறை புரிந்து வந்தான். காப்பை இழந்தபோது பூத்து நின்ற குறைகளை எல்லாம் இவன் போக்கியருளினான். காவலன் காவான் எனின் ஆ பயன் குன்றும்; அறு தொழிலோர் நூல் மறப்பர் என்பதை இவன் அறிந்து வியந்தான். குறைகளை நீக்கித் தன் கோக்குடி முறையை உயர்வா ஆக்கியருளினான். அந்தப் பரிபாலன முறைகளை நோக்கி யாவரும் இவனைப் போற்றி வந்தனர்.

கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்
பொற்றொழில் கொல்லர் ஈரைஞ் ஞூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினுக்கு
ஒருபகல் எல்லை உயிர்ப்பலி ஊட்டி
உரைசெல வெறுத்த மதுரை மூதூர்
அரசுகெடுத்து அலம்வரும் அல்லற்காலைத்
தென்புல மருங்கின் தீதுதீர் சிறப்பின்
மன்பதை காக்கும் முறைமுதற் கட்டிலின்
நிரைமணிப் புரவி ஓரேழ் பூண்ட
ஒருதனி ஆழிக் கடவுள் தேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுள் ஏறினன்என
மாலைத் திங்கள் வழியோன் ஏறினன்.

(சிலப்பதிகாரம், 27)

அரியணையில் அமர்ந்து இவன் அரசு புரிந்துள்ள நிலைமையை இளங்கோவடிகள் இவ்வாறு விளக்கியிருக்கிறார். இளங்கதிர்போல் விளங்கியிருந்தமையால் இளஞ்செழியன் என இவன் இசைமிகப் பெற்றான். பாட்டில் பொதிந்துள்ள குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

மன்னன் நீதி மருவின்இம் மாநிலம்
இன்னல் இன்றி இனியபொன் னாடதாம்;
அன்ன வன்கொடி யான்எனில் அல்லலே
துன்னி நிற்கும்; துறைதொறும் துன்பமே.

வேலி யிழந்த பயிர்போல் உயிரினங்கள்
கோலிழந்த போது படும்.

நீதி இலையேல் தீது மிகும்.

### இந்த அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

1 கொடுங் கோலன் கொலை யாளன்.
2 கொடிய கொள்ளைக்காரன்.
3 அவன் நாடு கேடாம்.
4 அரசு அழிந்து போம்.
5 அவலத் துயர்களாம்.
6 கொடுங்கோல் கொடிய இருள்.
7 அதனால் மாந்தர் மறுகுவர்.
8 செல்வர் சிதறுவர்.
9 அங்கே மழை பெய்யாது.
10 நல்லவை எல்லாம் நாசமாம்.

ருசு-வது கொடுங்கோன்மை முற்றிற்று.

# ஐம்பத்தேழாவது அதிகாரம்

## வெருவந்த செய்யாமை

அஃதாவது குடிகள் அஞ்சி வருந்தும் படியான வெய்ய செயல்களை வேந்தன் செய்யாதிருக்கும் சீர்மை. கொடுங்கோலனுய்க் கொடுமை புரிவது நாட்டுக்கும் அர சுக்கும் நெடுங்கேடாம் என முன்பு குறித்தார்; பிறர் வெருவுமாறு கடுமையான தண்டனைகளைப் புரியலா காது என்று இதில் உணர்த்துகின்றூர். கொடுமையும் கடுமையும் கோனுக்குக் கூடாது என்று குறிக்கின்றமை யால் அதன்பின் இனமாய் இது தொடர்ந்து நின்றது.

ஒறுப்பின் பொறுப்பு.

561 நாடிப் புருகுச்சன் நாகர்மேல் செல்லாதேன்
கூடி ஒறுத்தான் குமரேசா—நேடியே
தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து. (க)

இ-ள்.

குமரேசா! வசமா நாடி இதமாய் ஏன் புருகுச்சன் ஒறுத்தான்? எனின், தக்காங்கு நாடித் தலைச் செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து என்க.

இது, தண்டம் புரியும் தகவு கூறுகிறது.

குற்றம் செய்தவரைத் தக்கபடி ஆராய்ந்து மீண்டும் நேராதவாறு தகவாய்த் தண்டிப்பவனே நல்ல அரசன்.

தலைச்செல்லா வண்ணம்=பின்பு தீமை புரியாவகை.

எல்லா உலகங்களையும் பாதுகாத்து வருபவர் கடவு ளே; அவரது அருள் சிறிது அடைந்துள்ள அரசர் தமக்கு உரிமையாய் அமைந்த நாட்டை நன்கு பாதுகாத்து வரு கின்றனர். அந்தக் காப்புமுறையில் அவர் செய்ய வுரிய கடமைகளுள் ஒன்றை இங்கே காண வந்துள்ளோம்.

நன்மைகள் புரிகின்ற நல்லோரை நயந்து பேணுவ தும், தீமைகள் செய்ய நேர்ந்த தீயோரை விரைந்து

தண்டித்து அடக்குவதும் வேந்தனுடைய கடமைகளாம். அவ்வாறு தண்டிக்குங்கால் அந்தத் தண்டனை தகுதி யோடு இதமாயும் இணைந்திருக்க வேண்டும்; கொடுமை மண்டி நிற்கலாகாது. தண்டிக்கப் பட்டவன் தனக்கு நேர்ந்த தண்டம் தக்கதே என்று எண்ணவும், மீண்டும் தகாத வழியில் செல்லாமல் உள்ளம் திருந்தி அவன் நல்லவனாய் உயரவும் அச்செயல் உதவி புரிய வேண்டும்.

ஆற்றிய தண்டத்தாலே அறிவு அவன் அடைந்தான் அன்றே என்றபடி ஒறுப்பு சிறப்புற வேண்டும்.

ஒறுத்தல்=வருத்துதல்; தண்டித்தல்.
பொறுப்பதற்கு நேரே மாறுபட்டது ஒறுப்பது.

குற்றம் செய்தவனை ஒற்றி உருத்து வருத்துவது ஒறுப்பது என உற்றது. அரசன் புரிகின்ற இந்த ஒறுப்பு நாட்டில் குற்றங்கள் நீங்கிக் குணங்கள் ஓங்கிவரச் செய் வதால் இராச நீதியாய் இசை பெற்றுள்ளது.

ஒறுத்தாரை ஒன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. (குறள், 155)

இந்த நீதி பொதுமக்களை நோக்கி வந்தது. தனக் குத் துயர் இழைப்பவரை ஒருவன் பொறுத்தால் அவ னுக்குப் புகழும் புண்ணியமும் உளவாம்.

பிறர்க்கு இடராய்த் தன் நாட்டில் தீமை செய்ப வரை அரசன் உடனே தண்டித்து அடக்க வேண்டும். அவ்வாறு ஒறுக்காமல் பொறுக்க நேரின், தீமைகள் வளரும்: நன்மைகள் தளரும்; மக்கள் மறுகி வருந்துவர்; இறைமுறை புரியாப் பேதை என அரசை யாவரும் இகழ்ந்து பழிப்பர். அவ்வாறு பழிபடியாமல் ஒளி புரிக.

களைகளைக் கடிந்து நீக்கி உழவன் பயிர்களை வளர்ப் பதுபோல் பிழைகளை ஒறுத்து ஒழித்து உயிர்களைக் காப்பவனே உத்தம வேந்தனாய் ஒளிபெற்று வருகிறான். தீமை தீர்ந்து ஒழிந்து நன்மை ஓங்கி நாடு நலமாய் வரவே நாடன் யாண்டும் நன்கு நாடி வருகின்றான்.

நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தகவு ஒறுத்தி. (புறம், 10)

இளஞ்சேட் சென்னி என்னும் ஒரு சோழ மன்னன் செய்து வந்த நீதிமுறையை ஊன்பொதி பசுங்குடையார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் வியந்து புகழ்ந்து பாடியிருக்கிறார்.

இக்குறளின் கருத்தை இது தெளிவா விளக்கி வந்துளது. ஒறுக்கும் திறம் ஓர்ந்து உணர வுற்றது.

யாரை ஒறுப்பது? தீமையாளரை.

எப்படி ஒறுப்பது? தக்கபடி நாடி.

எத்தகைய வகையில்? ஒத்த வகை ஓர்ந்து.

**ஒப்ப நாடி அத்தகவு ஒறுத்தி** என்னும் இது தேவர் வாய்மொழியை ஒத்து வந்துள்ளது. உண்மை நிலைகளை உய்த்து உணர்ந்து கொள்ளுக. மானச தத்துவங்கள் இங்கே நன்கு மருவி யிருக்கின்றன.

தக்காங்கு நாடாமலும், ஒத்தாங்கு ஒறுக்காமலும் தன் மனம் போனபடியே மதத்துச் செய்யின் அது வெருவந்த செய்கை யாம்; ஆகவே மக்கள் அச்சம் அடைந்து அயர்வர்: அரசுக்கும் உச்சமான பழியாம்.

உயிர்கள் அல்வழியில் செல்லாமல் அடங்கி நல்வழியில் ஒழுகி வருமாறே அரசன் ஒறுப்பு உருப்பட வேண்டும். அவ் வகையில் வருவதே செவ்வியதாம்.

தண்ணளி புரிய வுரியவன் தண்டம் புரிய நேரின் இன்னவாறு புரிக என இது நயமா உணர்த்தி யுளது.

விடமும் தூயதெள் அமுதமும் மின்னனார்
விழிகளின் இடைத்தோன்றும்;
கடவு தண்டமும் கருணையும் மனுநெறிக்
காவலர் இடைத் தோன்றும்;
சுடரில் காய்வதும் குளிர் துளி பொழிவதும்
சூரியர் இடைத்தோன்றும்;
அடைவு சேர்பெருந் தவத்தர்பால் சாபமும்
அநுக்கிர கமும்தோன்றும்.

(திருக்குற்றாலப் புராணம்)

இந்தக் கவியின் பொருள்களைக் கருதி நோக்கிச் சுவைகளை உணர்ந்து கொள்ள வேண்டும். கருணையும் தண்டமும் வேந்தர் இயல்புகளாய் விளங்கியுள்ளன.

உயிர்களை இதமாக் காத்துவர நேர்ந்த அரசர் மாந்தர் வெருவி மறுகும் படியான வெய்ய செயல் களைச் செய்ய லாகாது.

கருவந்த போதிருந்து மன்னுயிரைக்
காத்துவரும் கடமை தாங்கி
உருவந்தான் மனிதன்என உலகறிய
நின்றாலும் உயர்ந்த நீதித்
திருவந்த அரசுரிமைச் செங்கோலர்
தெய்வம்எனச் சிறந்து நிற்பர்;
வெருவந்த செயல்செய்யார்; வேதவிதி
முறைசெய்வார்; விநயம் ஊர்ந்தே.

அரசருடைய இயல்புகளையும் பரிபாலன முறைமை களையும் இது தெளிவாக இனிது விளக்கியுளது.

புலையான காரியங்களில் யாரும் யாதும் யாண்டும் தலையிடாமல் நலமான நெறியிலேயே மாந்தர் வாழ்ந்து வர வேந்தன் வினைகளை ஓர்ந்து புரிந்து வருகிறான். அவனது கடமையான பொறுப்பை உணர்ந்து நேர்மையாய் ஒழுகி வருபவரே சீர்மை யுறுகின்றார்.

வழி விலகி நெறி கேடு புரிய நேரின் அந்தப் பிழை யே அவனுக்குப் பீழை யாகின்றது. எவர் மீதும் அரச னுக்கு வெறுப்பு இல்லை; வெறுப்பன செய்பவரே ஒறுப்பினை அடைகின்றனர். தீது தீரத் தண்டம் புரியி னும் நீதி மன்னர் தயை மண்டியே இதமாயிருப்பர்.

இது புருகுச்சன்பால் அறிய வந்தது.

## சரிதம்.

சூரியகுலத் தோன்றல் ஆகிய இவ்வேந்தன் அதிசய மதிமான். விதிமுறை வழாமல் முதுநிலம் புரந்த அதிபதி எனத் துதிமிகப் பெற்றவன். உருவ எழிலும் விழுமிய நீர்மைகளும் இவனிடம் ஒளி செய்திருந்தன. இவனு டைய மனைவி பெயர் நருமதை. பேரழகும் பெருங்

குணங்களும் அமையப் பெற்றவள். அக்குலமகளோடு அமர்ந்து இனிய சுகபோகங்களை நுகர்ந்து இசை திசை பரவி வர எவ்வழியும் செவ்வையாய்ப் பாதுகாத்து இவன் அரசு புரிந்து வந்தான். இன்னல் இடர்கள் தன் நாட்டில் யாண்டும் நேராமல் மிக்க கவனமாய் இவன் பேணி வந்தமையால் குடிசனங்கள் யாவரும் இவனை உரிமையுடன் போற்றி உழுவலன்பு பூண்டு வந்தனர். குற்றம் குறைகளைக் காண நேர்ந்த இடத்தும் அவரைக் கொடுமையாத் தண்டிக்காமல் மீண்டும் அவ்வாறு செய்யாதபடி அறிவு நலன் கூறி ஆற்றி விடுத்தான்.

பெற்றதந்தை பிள்ளைகளைப் பேணிவரும்
  பெற்றினனப் பெருநீர் வையத்து
உற்றவுயர் மக்களெல்லாம் உரிமையுடன்
  எவ்வழியும் உவந்து வாழப்
பற்றியவெண் குடைகவித்து முடிசூடிப்
  பரிவோடு பேணி யாரும்
கொற்றவன்என்று ஏத்திவரக் கோமுறைகள்
  ஆற்றிவந்தான் குணங்கள் கூர்ந்தே. (1)

காட்சியினில் எளியவனாய்க் கலைநிலையில்
  ஒளியவனாய்க் கருமம் காணும்
நீட்சியினில் நெடியவனாய் நேரலர்முன்
  நேரலனாய் நீதி நேர்மை
ஆட்சியினில் அதிசயனாய் ஆய்வுரையில்
  அரியவனாய் அமர்ந்து செங்கோல்
ஓட்சியதால் இவன்மாட்சி உலகமெலாம்
  ஒளிவீசி உலாய தன்றே. (2)

இவ்வாறு எங்கும் இதமாச் செங்கோல் செலுத்தி வந்த இவனுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அவனுக்கு வசுதன் என்று பெயர். பருவம் அடையவும் அம் மகனுக்கு அரசு முறைகளைப் போதித்து ஆட்சியை அருளினான். எவரும் வெருவாதவாறு இதமாய்த் தண்டித்துப் பதமா ஆட்சி புரியின் அவ்வேந்தன் மாட்சியனாய் விளங்கி நிற்கும் என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்றான். விரிவை மனுமரபில் அறிக.

மாந்தர் வெருவி மறுகாமல் மாறடக்கும்
வேந்தன்சீர் ஓங்கும் விரிந்து.

தீயரையும் நேயமா அடக்குக.

---

**கடுமையுள் இனிமை.**

562\. திண்டோள் வழுதி சினந்தெழுந்தும் ஏனிரக்கம்
கொண்டே புரிந்தான் குமரேசா—மண்டிக்
கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். (௨)

இ—ள்.

குமரேசா! வழுதி மன்னன் வெகுண்டு எழுந்தும் ஏன் இனியனாய் இரங்கி யருளினான்? எனின், ஆக்கம் நெடிது நீங்காமை வேண்டுபவர் கடிது ஓச்சி மெல்ல எறிக என்க.

சாதுரிய தண்டனை தெரிய வந்தது.

தம் செல்வம் நெடுங்காலம் நிலைத்திருக்க விரும்புகின்றவர் கடுமையா ஓங்கி இதமா வீசுக.

குற்றம் செய்தவரை அரசன் தண்டிக்க நேர்ந்த போது செய்ய உரிய திறனை இது நயமா விளக்கியுளது.

தக்காங்கு நாடி ஒத்தாங்கு ஒறுக்க என முன்னம் குறித்தார்; ஒறுக்குங்கால் உஞற்ற வுரிய ஒரு முறையை இதில் உணர்த்துகிறார்.

காரிய சாதனைகள் சீரிய பண்பாடுகளோடு சிறந்து வர வரைந்து காட்டியிருக்கிறார். இக்காட்சி இறைமாட்சியின் இனமாய் எண்ண வந்துள்ளது. கோதான தீதுகளை நீக்கிக் குடிகளைப் பாதுகாப்பது அரச தருமம் ஆதலால் குற்றம் கடிதல் இங்கே குணமுடன் அறிய வந்தது.

கடிது நெடிது என்பன கடுமை நெடுமை என்னும் பண்படிகளாய்ப் பிறந்துள்ள குறிப்புரைகள்.

ஓச்சி = ஓங்கி; உயரத் தூக்கி.

முழவுத்தோள் ஓச்சி. (புறம், 50)

வீறுபெற ஓச்சி. (குறிஞ்சி: 150)

பெருந்தோள் ஓச்சி. (பெருங்கதை: 1-37)

இவற்றுள் ஓச்சி உணர்த்தி நிற்றல் அறிக.

செங்கோல் ஓச்சி ஆட்சி புரியும் அரசர் தீது செய்தோரை நீதி முறையில் தண்டம் ஆற்றுங்கால் "இன்றோடு இவர் தொலைந்தார்" என்று பிறர் கருதும்படி கடுமையாகத் தோன்றி மென்மையாக முடிக்க வேண்டும் என்பார் கடிது ஓச்சி மெல்ல எறிக என்றார்.

வெளித் தோற்றத்தில் கடுமையும் உள்ளே பயனில் நயனும் வியனுற விரவி வரக் கருமம் செய்துவரின் அதில் தருமம் மருமமாய் மருவி வரும்.

அடிதாக்கக் கையேற்பார் ஏனும்அவர்
குற்றம் உணர்ந்து அதற்குத் தக்க
படியாய்ச்செய் துறுகருமம் பழுதுபடாது
இயற்றுவதே பலமாய்க் கொண்டு
கடிதுஓச்சி மெல்லெனப்பூப் போல்எறியும்
தன்மையர்க்கு எக்காலும் குன்றா
நெடிதுஆக்கம் தரும்இஃதுயாம் நிகழ்த்தியதுஉம்
மிடத்தில் வைத்த நேயத்து என்றார்.

(மெய்ஞ்ஞான விளக்கம்)

இக் குறளை உள்ளே தழுவிப் பொருளைத் தெளிவாக விரித்து எளிதே இனிது விளக்கி இவ்வாறு இது வந்துள்ளது. குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து கோமுறைகளைத் தேர்ந்து தெளிந்து கொள்ளுக.

பெற்ற பிள்ளைகள் குற்றம் செய்தால் பிதா அவரைக் கண்டித்து அடக்குவன்; அவ்வாறு தண்டிப்பது உள்ளம் திருந்தி நல்லவராய் அவர் உயர்ந்து கொள்ளவே யாம். அதுபோல் தன் நாட்டில் வாழுகின்ற குடிமக்கள் ஏதேனும் பிழை செய்யின் அரசன் அவரைத் தண்டித்து அடக்குகிறான். அந்தத் தண்டனையுள் அன்பும் ஆதரவும் கலந்திருந்தால் அவர் துன்பம் உறார்; உள்ளம் உணர்ந்து உரிமை தெரிந்து திருந்துவர்; உரிய மன்னனிடம் மாறாத பிரியம் மருவி வருவர்; வரவே

செல்வ வளங்கள் பெருகிவரும்; அந்தப் பெருக்கத்தால் நிறை பெருந் திருவாளனாய் நெடிய புகழுடன் அவன் நிலைத்து வாழுவன். அந்த நிலைமை தலைமைகள் இங்கே உரிமையோடு உணர வந்தன.

கொடிய தண்டம் செய்யின் ஆக்கம் நெடிது நில்லாது; இந்த உண்மையை உணர்ந்து அதனை மென்மையாக ஆற்றி அரசர் நன்மை அடைய வேண்டும்.

எந்த வகையிலும் மாந்தரிடம் ஆதரவு புரிந்து வருகிற வேந்தன் யாண்டும் மேன்மை யடைந்து விளங்குவன். அவனது ஆட்சி மாட்சி மிகுந்து வரும்.

இவ்வுண்மை பெருவழுதிபால் தெரிய வந்தது.

**சரிதம்.**

சந்திரகுல திலகன் ஆன இந்தப் பாண்டிய மன்னன் பல கலைகளையும் நன்கு பயின்று தெளிந்தவன். அதிசய ஆற்றல்கள் உடையவன். அரசியல் முறைகள் யாவும் துறைகள்தோறும் இவனிடம் நிறைவெய்தியிருந்தன. நெறிமுறையே ஒழுகி எவரும் இனிது வாழ்ந்து வரும்படி இவனது ஆட்சி யாண்டும் நீட்சியாய் மாட்சி புரிந்து வந்தது. இம் மன்னனுடைய செங்கோல் முறைகளை வியந்து **காரிகிழார்** என்னும் சங்கப் புலவர் உவந்து பாடியிருக்கிறார். அந்தப் பாட்டு அயலே வருகிறது.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்,
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்,
கீழது, முப்புணர் அடுக்கிய முறைமுதற் கட்டி
நீர்நிலை நிவப்பின் கீழு மேலது
ஆனிலை உலகத் தானும் ஆனாது
உருவும் புகழும் ஆகி விரிசீர்த்
தெரிகோல் ஞமன்ன்போல ஒருதிறம்
பற்றல் இலியரோ நிற்றிறம் சிறக்க
செய்வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி அடர்ப்புகர்ச்

சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்து
அவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசில் மாக்கட்கு வரிசையின் நல்கிப்
பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி; சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே
வாடுக இறைவநின் கண்ணி ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த லானே
செலியர் அத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத்து எதிரே
ஆங்க, வென்றி எல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா ஈகைத் தகைமாண் குடுமி!
தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே. (புறம், 6)

வழுதி வழியை ஒளி செய்து வந்துள்ள அரசர் பெரும! இமயம் முதல் குமரிவரை உன் ஆணை செல்லுகின்றது; சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் உன் செங்கோல் எங்கும் நீதி புரிகின்றது; இருளை நீக்கி உலகுக்கு ஒளிசெய்து வருகிற சூரியன்போலவும் சந்திரன்போலவும் உயிர்கள் துயர் உறாமல் பாதுகாத்தருளுகிற பெரும! நீ என்றும் தலைமையுடன் நிலமிசை நிலைத்து வாழுக! என இவ் வேந்தர் பெருமானைப் புலவர் பெருமான் இவ்வாறு வாழ்த்தியிருக்கிறார். கவியில் உள்ள பொருள் நயங்களைக் கருதி யுணர்ந்து கொள்ள வேண்டும். நெறி நியமங்களுடன் ஒழுகி எவ்வழியும் செவ்வியனாய்க் குடிகளை இக் குரிசில் பாதுகாத்து வந்தான். தவறு எவர் செய்யினும் அவரைத் தண்டித்து அடக்கினான். இந்த மன்னனது தண்டனையுள் அறிவும் ஆதரவும் மருவி யிருந்தமையால் தரும மூர்த்தி என்று யாவரும் இக் கோமகனைப் போற்றி வந்தனர். கடிது ஓச்சி மெல்ல எறிபவன் நெடிது ஆக்கம் உடையனாய் நிலைத்து வாழ்வன் என்பதை உலகம் இக் குல வேந்தன் பால் நலமாக உணர்ந்து தெளிந்து மகிழ்ந்து வந்தது.

நெறிகேடராய்க் கொடுமை மண்டி நின்ற பகைவரை ஒருமுறை இவ்வீரன் அடக்கச் சென்ருன். இவனுடைய சேனைகள் எதிரியின் நகரை வளைத்துக் கொண்டன. போர் மூண்டால் பலர் மாண்டுபட நேர்வரே என்று இவ் வள்ளல் உள்ளம் இரங்கினன். நல்லவர்கள் சாதுக்கள் அந்தணர்கள் பசுக்கள் பெண்கள் முதலியோரை அயலே வெளியேற்றிப் பாதுகாப்புச் செய்த பின்னரே அமராற்ற நேர்ந்தான். இவனது அருள் ஆண்மைகளையும் நீதி முறைமைகளையும் அறிந்து வியந்து பகைவரும் இவன் அடிவணங்கிப் பணிவுடையராய் இணங்கி நின்றனர். அந்த நிலைமையை யாவரும் புகழ்ந்து போற்றினர். பாவலரும் உவந்து பாடினர். அவருள் நெட்டிமையார் என்னும் சங்கப் புலவர் பாடியது அயலே வருகிறது.

ஆவும், ஆன் இயல் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடை யீரும், பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெருஅ தீரும்,
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்! என
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி; தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே. (புறம், 9)

நீதியும் கருணையும் நிறைந்த எம்பெருமான் ஆகிய இப் பாண்டிய வேந்தன் ப∴றுளி ஆற்று மணலினும் பல்லாண்டு வாழவேண்டும் என்று புலவர் இவ்வாறு வேண்டியுள்ளார். தண்டம் புரிவதிலும் தண்ணளி தழுவி வந்த விழுமிய இப் பெருவழுதி பெருந்திருவும் பெரும் புகழும் பெருகி வர இனிது வாழ்ந்து வந்தான்.

**குற்றம் புரிந்தார்பால் கோன்தண்டம் செய்வதுதான்**
**உற்றமக்கட் காற்றும் உறவு.**

தண்டம் தயவுடன் புரிக.

———

**வெருவரலின் விளைவு.**

563. குன்றுமல் நன்னன் கொடுமைசெய்தான் ஏனுடனே
குன்றி யழிந்தான் குமரேசா—கன்றி
வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். (ங)

இ-ள்.

குமரேசா! கொடுமை செய்த நன்னன் ஏன் கடுமையாய் மாய்ந்தான்? எனின், வெருவந்த செய்து ஒழுகும் வெங்கோலன் ஆயின் ஒருவந்தம் ஒல்லைக் கெடும் என்க.

வெங்கோலன் ஆகாதே என்கிறது.

பிறர் அஞ்சி நடுங்கக் கொடுமை புரிந்துவரும் கொடுங்கோலன் தப்பாமல் விரைந்து அழிந்து ஒழிவான்.

செங்கோலன் சிறந்து உயர்ந்து வாழ்கிறான்; வெங்கோலன் விரைந்து இழிந்து அழிந்து ஒழிகின்றான்.

வெருவந்த=வெருவி நடுங்க வுரிய கொடிய செயல்கள். சித்திரவதை முதலியன தெரிய வந்தது.

வெருவுதல்=அஞ்சுதல். வெருவு என்னும் வினையடியாக வெருவல், வெருவரல், வெருவி, வெரீஇ, வெரூஉ, வெருவந்த, வெருவினன், வெருவான் என இன்னவாறு தோன்றியுள்ளன. வினைத்தோற்றங்கள் வியந்து உணர வுரியன.

வெருவரு பறந்தலை. (புறம், 19)
வெரு வரு புனற்றார். (பதிற்றுப்பத்து: 50)
வெருவந்த வாறு. (கலி, 150)
வெருவந்த துன்பம். (வளையாபதி)
வெருவந்து வெற்பின். (இராமா: ஒற்று, 32)
வெருவர வுரப்பி. (மாயா சீதை, 9)
வெரூஉப்பகை அஞ்சி வெய்துயிர்த்து.
(மணிமேகலை, 13)
வெரூஉப் பறை. (பொருநர்: 171)

இவற்றுள் வெருவரல் குறித்து நிற்றல் அறிக.

அஞ்சுதலுக்கும் வெருவுதலுக்கும் வேறுபாடு உண்டு. அதனினும் இது பரிதாபமுடையது. இடர்களைக் கண்டபோது கலங்குதல் அச்சம்: துயர்களைச் சகிக்கமுடியாமல் திகில்கொண்டு நிலைகுலைந்து நெஞ்சம் பதைத்துத் துடித்தல் வெருவலாம்.

நையப் புடைத்தல், கை கால்களை ஒடித்தல், கண்களைப் பறித்தல் முதலிய சித்திரவதைகளே வெருவந்த செயல்களாம்.

வெருவந்த செய்யாமை என அதிகாரத்தில் குறித்துள்ள வாசகம் இதில் மருவி வந்துள்ளது. பிறர் குலை நடுங்கி வருந்தும்படியான புலைச்செயல்களை அரசன் செய்யலாகாது, அதிகார மமதையால் செய்ய நேரின், அவன் அடியோடு விரைந்து அழிந்துபோவான் என்று இதில் அச்சுறுத்தி யிருப்பது உய்த்து உணர வுரியது.

ஒருவந்தம் = உறுதியாக; நிச்சயமாக.

ஒருவுதல் = நீங்குதல்; விலகுதல்; தப்புதல்.

ஒருவு என்னும் வினையடியாக ஒரீஇ, ஒருவி, ஒருவல், ஒருதலை, ஒருவந்தம் என இன்னவாறு மொழிகள் வந்துள்ளன.

ஒருவந்தம் உள்ளத்து உவத்தல். (வளையாபதி)

வெருவந்தன செய்யின் கேடு ஒருவந்தமா யுறும்.

நெடிய செல்வங்களும் பெரிய அதிகாரங்களும் பெருகி யிருந்தாலும் கொடிய செயல்களை அரசன் செய்ய நேரின் கொடுங்கோலன் என்று அவன் எள்ளி இகழப்படுகிறான். பழியும்பாவமும் பெருகி வருகின்றன; வரவே விரைவில் அவனுக்கு அழிவுகள் நேர்கின்றன.

ஒருவந்தம் கெடும்; ஒல்லைக் கெடும்.

என்றது அழிவின் தெளிவான உறுதியையும், விரைவையும் விளக்கி நின்றது. பிறவுயிர்களை வெருவுறச் செய்தவன் தன் உயிரும் வெருவித் துடிக்கத் தப்பாமல்

அழிந்தே போவான் என்பதை இதில் இவ்வாறு திட்பமாக வலியுறுத்தி யிருக்கிறார்.

எல்லாரையும் இனிது பாதுகாப்பவன் செங்கோலனாய்ச் சிறந்து திகழ்கிறான். அல்லல் புரிபவன் கொடுங்கோலனாய் நெடும் பழி படிந்து கடுங் கேடுகளை அடைகிறான்.

அலகில் மறையோர் அறிவின் உயர்வோர்
உலைய, உலகம் உலைய, நலம்அகலச்
செங்கோல் ஒழித்து எவர்க்கும் தீங்கு புரி வேந்தர்
வெங்கோ லினும்கொடிய வேற்கண்ணாள்.
(மதுரைச் சொக்கநாதர் உலா)

பெரியோர்களுடைய உள்ளங்கள் உலைந்து குலையச் செய்பவன் கொடுங்கோலன் என இது குறித்துள்ளது.

நீதிமுறை மாறித் தீது புரிபவன் அரசுரிமையை இழந்து அதிவிரைவில் அழிந்து ஒழிந்து போவான் என்பதை இங்கே தெளிந்து கொள்கின்றோம்.

குடிகள் வருந்தக் கொடுமை புரிகோன்
கொடியும் முடியும் குடையும்—அடியோடு
இழந்து பழியுள் இழிந்து துயரம்
உழந்து கழிவன் உடன்.

வெருவந்த செயலால் விளைவதை இது விளக்கியுளது. கேடு படியாதபடி நாடி வாழுக.

கொடுமையாளன் கடுமையாய் அழிவான்.

இது நன்னன்பால் தெரிய வந்தது.

## சரிதம்.

இவன் குறுநில மன்னன். வேளிர் மரபினன். பூழி என்னும் நாட்டை இவன் ஆண்டு வந்தான். நல்ல செல்வ வளங்கள் நிறைந்திருந்தும் பொல்லாத புலை நிலைகளில் இவன் பொங்கி நின்றான். எல்லார்க்கும் எவ்வழியும் அல்லல்களே விளைத்து வந்தமையால் புலியைக் கண்ட புல்வாய்கள்போல் யாவரும் இவனைக் கண்டு அஞ்சி வந்தனர். இவனுடைய தோட்டங்களில் நல்ல மாமரங்

கள் நிறைந்திருந்தன. மதுரமான ஒரு மாங்காய் உதிர்ந்து அருகே மருவி ஓடிய வாய்க்கால் நீரில் மிதந்து வந்தது. அங்கே நீராட வந்திருந்த ஒரு பருவ மங்கை அதனைக் கண்டாள்; எடுத்து உண்டாள். அதனை இவன் அறிந்தான்; அரசனுக்கு உரியதை ஒரு அரிவை தின்றது பெரிய பிழைஎன்று சினந்து அவளுக்கு இவன் கொலைத் தண்டனை விதித்தான். அந்தப் பெண்ணைப் பெற்றவர் பெருஞ் செல்வர்கள். உற்றதை யுணர்ந்து உள்ளம் துடித்து வந்து இக் கொற்றவனை வணங்கி "அந்தப் பெண்ணின் நிறை அளவு பொன்னைத் தருகிறோம்; பொறுத்தருள வேண்டும்" என்றுதொழுதுவேண்டினர். அவர் மறுகி வேண்டியும் இக்கொடியவன் யாதும் இரங்காமல் அவளைக்கொன்றே தொலைத்தான். ஊரும் நாடும் உள்ளம் கொதித்துப் பதைத்து அழுதன.

நதிவழி வந்த நறியமாங் கனியை
நங்கைகண்டு எடுத்ததை உண்டாள்;
பதியுறு நன்னன் படுசினத் துடன்அப்
பாவையைக் கொலைசெயப் பணித்தான்;
விதியறிந் துள்ளம் வெருவினர் பெற்றோர்
விரைந்துவந் தவள்நிறை அளவு
நிதியுறு பொருளைத் தருதும்என்று இரந்தும்
தீயவன் இரங்கிடான் கொன்றான்.

இவனுடைய கொடிய கொலைபாதக நிலைகள் நெடிய பழிகளாய் யாண்டும் நீண்டு நின்றன.

"பெண்கொலை புரிந்த நன்னன் போல
எண்தொலை வறியா இழிநரகு அடைவீர்"

இவ்வாறு பழிபட்ட இவனைப் பலரும் பழித்து அழித்து ஒழித்தார். வெருவந்த செய்து ஒழுகும் வெங் கோலன் ஒருவந்தம் ஒல்லைக் கெடும் என்பதை உலகம் இவன் கேட்டால் உணர்ந்து கொண்டது.

"நன்னன் நறுமா கொன்று
நாட்டில் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டும்" (குறுந்தொகை, 73)

கோசர் என்னும் வீரர் இவனைப் பலவகையிலும் நிலைகுலைத்துப் பழித்து அலைக்கழித்து அழித்து ஒழித்திருப்பதை இதனால் அறிந்து கொள்கின்றோம்.

அழிதுயர் செய்யும் அரசன் விரைவில்
அழிவன் துயரால் அலைந்து.

வெருவரல் செய்யாதே.

---

564. கடுமையின் அழிவு.

பொன்றாமல் தந்தைநிற்பப் பொல்லாச் சுயோதனன்ஏன்
குன்றிமுன்னே மாய்ந்தான் குமரேசா—என்றும்
இறைகடியன் என்றுரைக்கு மின்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். (சு)

இ-ள்.

குமரேசா! தந்தை இறக்குமுன்னே துரியோதனன் விரைந்து ஏன் இறந்தான்? எனின், இறை கடியன் என்று உரைக்கும் இன்னாச்சொல் வேந்தன் உறை கடுகி ஒல்லைக் கெடும் என்க.

கொடுமை கடுமையாக் கொல்லும் என்கிறது.

அரசன் கொடியவன் என்று மாந்தர் நொந்துகூறும் பழிபடிந்த வேந்தன் ஆயுள் குறுகி விரைவில் அழிவான்.

இறை என்னும் தெய்வப் பெயரை வேந்தன் ஏந்தி வந்துள்ளான். மாந்தரை இனிது பாதுகாத்து யாண்டும் நெறிநியமங்களுடன் இனியனாய் ஒழுகி வரும் அளவே இப் பெயர்க்கு அவன் உரியனாகின்றான். இயல்பு மாறுபடின் அயலாய் அவன் வேறுபடுகிறான்.

கடியன் = கடுமையான கொடுமை யுடையவன்.

இனியனாயிருக்க வுரிய அரசன் கொடியன் ஆனால் யாவரும் அவனை வெறுத்து இகழ்வர்: "இந்தப் பாதகன் செத்துத் தொலையானா?" என்று எல்லாரும் உள்ளம்

கொதித்து உருத்து வைவர் ஆதலால் அந்தப் பழிமொழி **இன்னுச் சொல்** என நேர்ந்தது.

இனிய சுக வாழ்வையே எவ்வழியும் இயல்பாக விரும்பி வருகிற மக்கள் கொடிய துயரங்களை அடைய நேர்ந்தபோது ஆட்சியை வெறுக்கின்ருர்; அரசனைப் பழிக்கின்ருர்; அவன் அழிந்து ஒழிந்து போவதையே விழைந்து நிற்கின்ருர்.

அங்கோல் அவிர்தொடியாய்! ஆழியான் ஆயினும்,
செங்கோலன் அல்லாக்கால் சேர்ந்தாரும் எள்ளுவர்;
வெங்கோன்மை வேந்தர்கண் வேண்டும் சிறிதுஎனினும்
தண்கோலே ஓம்புமா மொய். (பழமொழி 248)

சக்கரபாணியான திருமாலே ஆனுலும் செங்கோலனுயச் சேர்ந்து வரும் அளவே மதிப்பு. அந்த நிலையை வழுவிக் கொடுங்கோலனுயினே எல்லாரும் அவனை எள்ளி இகழுவர்; தண்ணளி தழுவிய கோலே யாண்டும் வலிமிகவுடையதாம் என இது குறித்துளது. பொருளின் குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும்.

குடிகள் அஞ்சுகின்ற செயல்களை அரசன் செய்ய நேரின் கொடியவனு யிழிவுகிருன். நஞ்செனவெறுத்து நெஞ்சம் நொந்து யாவரும் அவனை வைது பழிக்கின்றனர். அந்தப் பழிச்சொல் அவனைப் பாழாக்கி விடுகிறது.

முடிபுனைந்தும் முறைதெரியான்;
முதியவரின் உரைகருதான்;
கொடியரையே கூடுகின்ருன்;
கொடியனவே நாடுகின்ருன்;
படியுணர்ந்து குடிபேணுன்;
பழிநாணுன்; படுபாவி
இடிவிழுந்த மரம்போல
இவன் இடிந்து போகானு!

குடிசனங்கள் இவ்வாறு எவ்வழியும் வயிறெரிந்து வைது வருதலால் அவன் கடிதில் முடிவடைய நேர்கின்ருன். மாந்தர் வருந்த நேரின் வேந்தன் அழிந்தான்.

**பலர்வாய்த் திட்டு பாடையைக் கட்டும்** என்பது பழமொழியா வந்துளது. அழிவு நேராமல் ஆய்ந்து தெளிக.

உறை என்றது ஈண்டு ஆயுளைக் குறித்து நின்றது.

உறைதல்=தங்குதல். இந்த உலகில் இவ்வளவு காலம் தங்கி வாழவுரியவன் என்று வரையறைவாய்ந்து வந்துள்ள வாழ்நாள் குறுகி விரைவில் மாள்கின்றான். அகால மரணமான அந்த அழி சாவு இங்கே தெளிவுற வந்தது.

இறை முறைகளுக்கு எதுகையாய் வந்துள்ள உறை மழையையும் வாழ்நாளையும் குறித்துளது.

முறைகோடின் உறை கோடும் என முன் அறிந்தோம்.

இறை கடியன் ஆயின் உறை கடுகிக் கெடும் என இதில் அறிந்துகொள்கிறோம். கடுகி=குறுகி; குறைந்து. மிகவும் குறுகியது கடுகு என வந்தது.

நீர்த்துளி முதலாம் துளியும் நீள்நோய்
போக்கு மருந்தும் பொருளும் போர்வையும்
வெண்கலப் பெயரும் விழுமமும் பெருமையும்
எண்குறிப் பெண்ணிப் பொலிந்துழி இடுவதும்
பாலுறு பிரையும் காரமும் உணவும்
குறையுவர் நீரும் படையின் கூடும்
ஓரிடைச் சொல்லும் வாழ்நாளும் உறைஎனல்.
(பிங்கலந்தை)

உறைபொருள் மருந்து வாழ்நாள்
உணவுவெண் கலமே காரம்
எறிபடைக் கலத்தின் கூடே எண்குறித்திறுதி பெய்தல்
நறியபால் பிரை இடைச்சொல் நகரம்நீர்த்துளி ஈராறும்.
(நிகண்டு)

உறை என்னும் சொல் உணர்த்தி நிற்கும் பொருள்களை இவை குறித்துள்ளன. தீய செயல் ஆயுளைத் தேய்த்து மாயச் செய்கிறது.

குடிகள் நொந்து கூறும் கடுங்கூற்றே கொடுங்கோல் மன்னனுக்குக் கொடுங் கூற்றும்.

வெருவந்த செயல்களை வேந்தன் செய்வனாயின் அவன் எதிர்வந்து மாந்தர் யாதும் செய்ய இயலா.

"இவ் வெய்யவன் விளிந்து ஒழியானா!" என்று தமக்குள்ளேயே வருந்தி மொழிவர். பலர் பரிந்து சபித்தலால் பெரிய முடியரசும் கடிதில் மடிந்துபோம்.

நீசச் செயல்கள் நாசத்தை விளைக்கும்.

இது துரியோதனன் பால் தெரிய வந்தது.

சரிதம்.

குருகுல வேந்தன் ஆன இவன் கடிய செயல்களுக்கும் கொடிய தீமைகளுக்கும் நெடிய நிலைக்களமாய் நிலவி நின்றான். பஞ்சபாண்டவர்களுக்குப் பலவகையினும் படுதுயரங்களை விளைத்து வந்தான். அவரை அடியோடு கொன்று தொலைக்கச் சதி புரிந்து குடியிருந்த மாளிகையுள் தீயை வைப்பித்தான்; அவர் தப்பிப் பிழைத்தார். அல்லல் பல இழைத்து வந்த இவன் பஞ்சவரின் பத்தினியான பாஞ்சாலியைப் பற்றி இழுத்து வந்து அவையில் நிறுத்தித் துகில் உரியச் செய்தான். அந்தத் தீமையைக் கண்டு யாவரும் பரிந்து நொந்து கொடுமை! கொடுமை! என்று குலைதுடித்து வைதார்.

சூழும் கனல்வாய் உருமன்றித்
துளிவாய் முகிலும் மகிதலத்து
வீழும் கொல்லோ? உற்பாதம்
விரவிற்று என்றே வெருஉக் கொள்ளத்
தாழும் பெரிய கரியகுழல் தாரோடு
அலையத் தழீஇக் கொண்டு
வாழும் சுரும்பு சுழன்றரற்ற
மண்மேல் இழுத்து வருகின்றான். (1)

தழலோ என்னும் கற்புடைய
தனிநாயகிதன் தாமநறும்
குழலோ? உரகக் கொடிவேந்தன்
குலமோ குலைந்த திவண் என்பார்;
நிழலோ புவிக்கு நெருப்பன்றோ
நெறிஒன் றில்லா நீடுபொலங்
கழலோன் மதிவெண் குடைஎன்பார்;
கையால் கண்ட கண்புடைப்பார். (2)

காட்டும் திறல்வெஞ் சிலைவிசயன்
　　கையால் வகிர்ந்து கடிகொள்மலர்
சூட்டும் பனிச்சை இவண்புழுதித்
　　துகள்ஏ றியதென்று அழுது நைவார்;
மீட்டும் தடாமல் ஏகென்று
　　விட்டாள் மைந்தர் இட்டவினை
கேட்டும் கொடியள் காந்தாரி
　　கிளையோடு இன்றே கெடும் என்பார். (3)

என்னே குடியில் பிறந்தாருக்கு
　　இருப்பன் றிவ்வூர் இனிஎன்பார்;
முன்னே ஓடி முறையிட்டால்
　　முனியும் கொல்லோ எமைஎன்பார்;
பின்னே இரங்கி அழுதழுது
　　பேதுற் றின்னல் பெரிதுழப்பார்;
அன்னே துன்பம் களைந்தின்பம்
　　ஆவாய் என்றே அருள்புரிவார். (4)

(பாரதம்: சூதுபோர்)

அரவக் கொடியோன் ஆற்றியுள்ள பழி பாதகமான கொடுமைகளை இவை தெளிவா விளக்கி யுள்ளன. குடி சனங்கள் பரிதாபமாய் அழுது புலம்பி யுள்ளனர்: "நெறி கேடனை இவன் இப்புவிக்கு நெருப்பு; இத் தீயவன் நாட்டில் நல்லவர்கள் வாழமுடியா; கிளையோடு இன்றே இவன் குடி கெடும்; அடியோடு அழிவான்" என்று இன்னவாறு நெஞ்சம் கலங்கி அஞ்சி அலமந்து யாவரும் கண்ணீர் சொரிந்து கதறி அழுதுள்ளதை இங்கே கண்டு கலுழ்கின்றோம். கவிகளின் பொருள்களையும் குறிப்பு களையும் கூர்ந்து உணர்பவர் உள்ளம் உளைந்து வருந்துவர். கொடிய தீயனை் உலகம் வைதுவர வெய்ய தீமை களைச் செய்து வந்த இவன் ஆயுள் குறுகித் தாயும் தந்தையும் இருப்ப நொய்தில் மாய்ந்து ஒழிந்தான். இறை கடியன் என்று உரைக்கும் இன்னாச்சொல் அம்மன்னனை விரைந்து கொன்று விடும் என்பதை உலகம் இவன் பால் நேரே நன்கு உணர்ந்து தெளிந்தது.

மருத்தின்மகன் எனும்சண்ட மருத்தனைய
புயவலியோன் வன்கைத் தண்டால்
உருத்தமரின் உடன்றும்பர் ஊர்புகுந்தான்
வாளரவம் உயர்த்தோன் என்று
வருத்தமுடன் உயங்கிமிக மயங்கிநில
மிசைவீழ்ந்து வயிர மான
கருத்தினுடன் அலமந்தான் அழுதுபெரும்
புனல்சொரியக் கண் இலாதான். (பாரதம்)

தன் மகன் இறந்தான் என்று கேட்டுத் திருதராட்டிரன் அழுது புலம்பியிருப்பதை இதனால் அறிந்து கொள்கிறோம். கொடியவன் என்று அரசனை உலகம் வைய நேர்ந்தால் அவன் ஆயுள் தேய்ந்து ஒல்லையில் மாய்ந்து போவான் என்பதைத் துரியோதனனது பரிதாபமரண சாவு யாவரும் தெளிய விளக்கி நின்றது.

**மன்னன் கொடியனென வன்பழி ஏறின்றோ**
**அன்றே அழிவே அது.**

கொடுமை செய்யாதே.

---

565. **பேய்க் காட்சி.**

பெற்ற அமணன் பெருஞ்செல்வம் பின்னிழிந்து
குற்றமுற்ற தென்னே குமரேசா—உற்ற
அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. (ரு)

இ-ள்.

குமரேசா! அமணன் பெற்ற பெரிய செல்வம் ஏன் இழிவுற்றது? எனின், அருஞ்செவ்வி இன்னாமுகத்தான் பெருஞ்செல்வம் பேஎய் கண்டன்னது உடைத்து என்க.

அரிய காட்சியும் கடுத்தமுகமும் உடைய அரசனது பெரிய செல்வம் பேய் வசம் ஆனது போலாம்.

தன்னை விழைந்து காண வருவார்க்கு விரைந்து இரங்கி உவந்து காட்சி கொடாமல் மறைந்திருந்து காலம் கடத்தும் சிறுமை அருஞ் செவ்வி என வந்தது.

செவ்வி=காலம்; சமையம்; நேரம்.

செவ்வி பெற்று. (பெருங்கதை, 3-14)

செவ்வி பெருது ஒழிந்து. (சிந்தாமணி, 2582)

செவ்வித் தாக இராமனும். (விபீடணன் 151)

செவ்விக் கடாக் களிறு. (தகடூர்)

இவற்றுள் செவ்வி குறித்திருத்தல் அறிக.

காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் இன்மையும் அரசுக்கு மிக்க மாட்சிகளை அருளுகின்றன. எண்பதத்தன்; எளிய செவ்வியன்; இனிய நீர்மையன் என்பன வற்றிற்கு நேரே மாருக அருஞ் செவ்வியன்; இன்னு முகத்தான் அமைந்துள்ளமையான் இவனது கொடுங்கோன்மைகளைக் கூர்ந்து உணர்ந்து கொள்கின்ரேம்.

தங்களுடைய குறைபாடுகளையும் முறையீடுகளையும் அரசனிடம் நேரே கூறி நிறைவு பெற விரும்பிக் குடிசனங்கள் ஆவலுடன் வருவர். அவ்வாறு வருவாரை அன்புடன் நோக்கி யாவும் உசாவி அறிந்து ஆதரவு புரிந்துவரின் அந்த வேந்தனைத் தருமவான் நீதிமான் என்று மாந்தர் யாவரும் மகிழ்ந்து போற்றுவர்.

எளிதே காண நேராமலும், ஒருவேளை கண்டாலும் கடுத்த முகமும் வெறுத்த சொல்லும் உடையனுயின் அவனை யாவரும் இகழ்ந்து பழித்து அகன்று போவர். போகவே அவன் வேகமாய் அழிவுற நேர்வன்.

இனியனுய் இதம் புரிந்து வருகிற அரசன் உயர்ந்து திகழ்கிருன்; இன்னு முகத்தனுய்க் கொடுமை செய்பவன் கடுமையா யிழிந்து கழிந்து அழிந்து ஒழிகிருன்.

நொந்தார் துயர்நீக்கி நோகாமல் காத்தருளும்
அந்த அரசே அருளரசாம்;—வந்தவரை
நாடி உசாவி நலம்புரியான் நாடாளல்
கோடி துயரம் கொடிது.

ஒரு தேசத்தை ஆளும் உரிமையைப் பெற்றவன் உரியவர்களைப் பிரியமாய்ப் பேணி வர வேண்டும்.

பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்
அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்
கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயில்அவன் அருங்கடை குறுகி.(சிறுபாண்)

நல்லியக்கோடன் என்னும் மன்னன் எளிய செவ்வியனாய் இனிய முகத்தனாய் யாவர்க்கும் இதம் புரிந்து வந்துள்ளான். அதனால் பெரும் புகழ் அடைந்துள்ளான். அந்த உண்மையை இதில் அறிந்து கொள்கின்றோம்.

மக்கட்கு இதம் புரிந்து வருபவன் யாண்டும் மதிப்படைந்து வருகின்றான். நல்ல குண நீர்மைகள் அவனிடம் நலமாய் அமைந்து வருதலால் யாவரும் அவனைப் புகழ்ந்து போற்றி உவந்து வாழ்த்தி வருகின்றனர்.

அருஞ் செவ்வியும் இன்னா முகமும் வெருவந்த செயல்களின் உறவுகள் ஆதலால் அவற்றை யுடையவன் அஞ்சத் தக்கவன் ஆகின்றான். ஆகவே பேய், பிசாசு, பூதம் என எதமாய் அவன் ஏசப்படுகின்றான்.

அரச திரு பலவகை நிலைகளில் பெருகி யுள்ளமையால் பெருஞ் செல்வம் என வந்தது. கொடியவனுடைய பொருள் பூதம் காத்த புதையல்போல் தனக்கும் பிறர்க்கும் பயன் படாமல் வீணே பாழ்படுதலால் பேய் கண்டது அன்னது என்றார்.

உடைத்து=பழியான தீமை யுடையது.

பேய் என நின்றால் தளை பிழையாம். ஆகவே அது பிழையுறாதவாறு பேஎய் என அளபெடுத்து வந்தது. செய்யுளில் இசை குறைந்த இடத்து அந்தக் குறையை நீக்கியருள இந்த இசைவு இதமாய் நேர்ந்து வருகிறது.

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே.
(தொல்காப்பியம்)

இந்த இயல் விதி இங்கே சிந்திக்க வுரியது.

நாட்டுக்கு அதிபதியாய் நேர்ந்தவன் விதிமுறையே இனியனாய் ஒழுகிவர வேண்டும்; அவ்வாறின்றி இன்னா நிலைகளில் இழிந்துபடின் இழிபழிகள் விளைந்து விடும்.

தீயவனை யாவரும் பேய் என அஞ்சுவர்.

இவ்வுண்மை அமணன்பால் அறிய வந்தது.

சரிதம்.

இவன் குமண மன்னனின் தம்பி. கெடு மதியாளன். கொடிய புன்மைகள் இவனிடம் நெடிது ஓங்கி நின்றன. நல்ல வள்ளலோடு பிறந்தும் பொல்லாத உலோபியாய் இவன் புலைமண்டியிருந்தான். பொருளாசையால் மருண்டு கொண்டிருந்த இவன் அந்த அருளரசனைச் சதி செய்து துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். தீயவன் ஆன இவன் தலைவனாய் நின்று ஆள நேர்ந்த போது யாவரும் மாள நேர்ந்ததுபோல் மறுகி நொந்து யாண்டும் பரிதாபமாய் வெருவி வந்தனர்.

அழும்ஒலி சங்கம் ஆக, அணைத்துமார் அடிக்கும் ஓதை
முழவொலி ஆகக், கண்ணீர் மொய்மணப் பன்னீர் ஆகப்,
புழுதிவீ தியில் சுகந்தப் பொடிஎனப் புரியின் எங்கும்
இழவர சிருப்ப வேந்தாய் இளவரசு எய்தல் உற்றான்.

அறத்தையும் நோக்கான்; செவ்வி
அருளையும் நோக்கான்; அன்புத்
திறத்தையும் நோக்கான்; கொண்ட
சிறப்பையும் நோக்கான்; எய்தும்
மறத்தையும் நோக்கான்; பண்டை
வழக்கையும் நோக்கான்; ஆகிப்
புறத்தொடும் அகத்தும் செல்வப்
பொருளையே நோக்கி வாழ்வான். (குமணம்)

அரசன் ஆகி இவன் வாழ்ந்துள்ள வகையை இவை வடித்துக் காட்டியுள்ளன. யாவும் படித்துப் பார்த்துக் கொள்ளுக. கொடுங்கோலனான இவன் கடுங்கேடுகள் புரிந்து வரவே நாட்டு மக்கள் எல்லாரும் உள்ளம் கொதித்து உருத்து எழுந்து எவ்வழியும் எள்ளி யிகழ்ந்தார். அந்தப் பழிமொழிகள் அழிதுயர்களாய் வந்தன.

குலம்குலையக் குடிகள்அழக்
கொடுங்கோல்கொண் டவனுலகம்
கலங்கும்வெடிக் கர்ச்சனை நம்
கருத்திடிபட் டிடமேவிப்
பலம்குலைய மானம்அறப்
பரிபவமுற்று உயிர் தரிப்பது
அலங்கலணி புயவீரர்க்கு
அடுக்குமோ? என்பர் சிலர்: (1)

தண்டினல் புவிபுரப்பார்
தருமநெறி கைவிடுவார்;
அண்டினல் பிடித்தடைப்பார்;
ஆய்ந்தறிந்து முறைபுரியார்;
வண்டினல் தூண்கெடல்போல்
வரிகளால் குடிகெடவும்
கண்டினுப் பலபுரிவார்;
காவலரோ? காதகரே! (2)

மானிடர்தம் துயர்கருதான்;
வழக்குரைத்தால் எதிர்பகரான்;
தானிடரே நிதம்புரிவான்;
தனக்கென்றுஓர் விதிவகுப்பான்;
தேன்எனவே மொழிபகர்வான்;
சிந்தைசெயல் விடம்அனையான்;
ஈனன்அர சாட்சியினும்
எழுநரகம் இனிதாமே. (குமணம்)

இவனுடைய கொடுமைகளை நினைந்து நினைந்து நெஞ்சம் நொந்து குடிகள் மறுகியுள்ள மறுக்கங்களை இவற்றால் அறிந்து கொள்கிறோம். இனிய செவ்வி இன்றிக் கொடியனாய் வெருவந்த செயல்களைச் செய்து வந்த இவன் விரைந்து பதவியை இழந்தான். பொல்லாத பிசாசு ஒழிந்தது என்று அதுபொழுது எல்லாரும் உள்ளம் உவந்தனர். கொடிய தீயவனை நெடிய பேய் என்று வையம் கடிது வையும் என்பதை உலகம் காண இவ் வெய்யவன் நெடிது உணர்த்தி நின்றான்.

**அருளிரக்கம் அற்ற அரசன் அரக்கன்**
**பொருளிறக்கப் பொன்றும் புகைந்து.**

பேய் எனப் பிழை படாதே.

566. கெடு நிலை.

வென்றிச் சுதாசநன் வெஞ்செயலால் மன்திருவும்
குன்றிஏன் வீந்தான் குமரேசா—என்றும்
கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும். (சு)

இ-ள்.

குமரேசா! தனது கொடிய செயலால் நெடிய செல்வத்தை ஏன் சுதாசநன் இழந்து இழிந்தான்? எனின், கடும் சொல்லன் கண் இலன் ஆயின் நெடும் செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும் என்க.

கடிய சொல்லனாய்க் கண்ணோட்டம் இல்லாத அரசனது நெடிய செல்வம் நீடாமல் விரைவில் அழிந்துபோம்.

கண் என்றது இங்கே தயை தாட்சிணியங்களைக் குறித்து நின்றது. துயர் உறுவோரைக் காண நேர்ந்த போது உள்ளம் பரிந்து இரங்குவது கண்ணோட்டம் என வந்தது. இரங்கி யருளுவது உயர்ந்த மனித நீர்மையாம். இந்த இனிய இயல்பு இல்லாதவன் கொடியவன் ஆகின்றான். கண்ணின் பயன் கருணை புரிவதேயாம்.

வாய் மொழியும் கண் பார்வையும் இனிமையும் இரக்கமும் தோய்ந்துவரின் அந்த மனிதன் பெருந்தகையாளனாய் உயர்ந்து திகழ்கிறான். கடுமையும் கொடுமையும் கதுவி வரின் அவன் கொடியவனாய் இழிந்து நெடிய பழிகளை அடைந்து கடிது அழிந்து ஒழிகின்றான்.

இனிய நீர்மைகள் தோய்ந்து உயிர்களைக் காத்து வர நேர்ந்த வேந்தன் கொடியவனாய் மாறிக் கடுமை புரிய நேரின் மாந்தர் யாவரும் மறுகி வருந்துவர்.

மண்குளிர் கொள்ளக் காக்கும்
 மரபுஒழிந்து அரசர் தங்கள்
விண்குளிர் கொள்ள ஓங்கும்
 வெண்குடை வெதும்பும் ஆயின்,

கண்குளிர் கொள்ளப் பூக்கும்
கடிக்கயத் தடமும் காவும்
தண்குளிர் கொள்ளு மேனும்
தான்மிக வெதும்பு மன்றே. (சூளாமணி)

நாட்டைக் காக்க வந்த அரசர் தருமநீதிகள் தோய்ந்து நல்லவரா யிருப்பின் எல்லாரும் எங்கும் இனியராய் உவந்து வாழ்வர்; அவ்வா றின்றிக் கொடியராயின் யாண்டும் நெடிய துயரங்களேயாம் என இது குறித்துள்ளது. ஆட்சியாளர் தீயரேல் அங்கே விளைகின்ற தீய காட்சிகளை இங்கே கண்டு கொள்கின்றோம்.

இன்சொல்லும் அளியும் உடைய அரசனை யாவரும் தெய்வமாக எண்ணிப் போற்றுவர்; கடுஞ் சொல்லும் கொடுஞ் செயலும் உடையவனைக் கொடிய பேய் நெடிய பிசாசு என்று எள்ளி எல்லாரும் இகழ்ந்து தூற்றுவர்.

நல்ல இயல்பால் நரபதி தெய்வமாம்;
பொல்லாமை தோயின் புலைப்பேயாம்;—அல்லல்
அடையாமல் காப்பான் அரசன்; அவலம்
உடையான் கடையாம் உடன்.

அரசனைத் தெய்வம் என்று உள்ளம் உவந்து தொழுவதும், பேய் என்று எள்ளி இகழ்ந்து தள்ளுவதும் எதனால்? என்பதை இதனால் அறிந்து கொள்ளுகின்றோம்.

உரிய தன்மைகள் குன்றிய பொழுது பெரிய தீமைகள் பொங்கி எழுகின்றன. அரசன் கொடுமை புரியின் அங்கே அவனுக்குக் கேடுகள் கடுமையாய் வருகின்றன.

நெடுஞ் செல்வம் கெடும் என்று அச்சுறுத்தியது கடுஞ்சொல் கொடுஞ்செயல்களைக் கைவிட்டு இன்சொல் இதங்களை எய்தி வாழ. வெண்ணெய்க் குன்று எரியுற்றதுபோல் வெங்கோலால் வேந்தன் திரு ஒருங்கே வெந்து நிலை குலைந்து இழிந்து அழிந்து போம் என்பார் ஆங்கே கெடும் என்றார்.

அரச செல்வம் பெரியது; அரியது. தரும நீர்மையால் பெருகி வருவது. புண்ணியத்தால் பொலிந்து வந்த அது பாவம் படிய நேர்ந்தபோது யாவும் சிதைந்து அதிவிரைவில் அடியோடு அழிய நேர்கிறது.

புண்ணியம் உலர்ந்தபின் பொருளி லார்களைக்
கண்ணிலர் துறந்திடும் கணிகை மார்கள்போல்
எண்ணிலள் இகந்திடும் யாவர் தம்மொடும்
நண்ணிய நண்பிலள் நங்கை வண்ணமே.
(சூளாமணி: முத்தி, 15)

அரச திருவின் நிலைமையைக் குறித்து ஓர் அரசன் இவ்வாறு கூறியுள்ளான். நண்ணிய பெருஞ் செல்வம் புண்ணியத்தால் நிலைத்துள்ளது. அது குலைந்தால் இஃது உலைந்துபோம். கண் இலன் எனக் குறளில் வந்துளது. கண் இலர் என இதன் கண்ணும் வந்துள்ளது. இதில் குறித்திருக்கும் உவமையைக் கூர்ந்து ஓர்ந்து பொருளைத் தேர்ந்து கொள்ள வேண்டும்.

கடுஞ்சொல்லும் வன்கண்மையும் தன் நெடுஞ்செல்வத்தைக் கெடுத்துவிடும்; தன்னையும் கடுமையாக அழித்து ஒழிக்கும் என உணர்ந்து அவற்றை ஒழித்து இன்சொல்லும் இனிய அளியும் உடையனாய் அரசன் ஒழுக வேண்டும் என்பது குறிப்பு.

கொடுமை யுடையவன் கடுமையாய் அழிவான்.

இது சுதாசநன் பால் தெரிய வந்தது.

### சரிதம்.

இவன் சூரிய குல வேந்தன். சுதாமன் என்னும் மன்னன் புதல்வன். தேச அதிபதியாய் அரச பதவியை எய்திய இவன் ஆட்சிமுறைகளை மாட்சியுடன் செய்யாமல் காட்சிக் களிப்புகளை விழைந்து திரிந்தான். குடிகளின் நலன்களைச் சிறிதும் கவனியாமல் பொறி வெறிகளில் உழந்து வந்த இவனை யாவரும் இகழ்ந்து வந்தனர். குலகுருவாகிய வசிட்ட முனிவர் இவனுடைய நிலைமைகளுக்கு இரங்கினர்; அரசர்க்கு உரிய தருமங்களையும் நீதிமுறைகளையும் நெஞ்சம் தெளிய வுரைத்தார். அந்த உறுதி நலன்களை யாதும் உணராமல் உள்ளம் செருக்கி எவரையும் எள்ளி யிகழ்ந்து இறுமாந்து வந்தான். கடுஞ்சொல்லும் கொடுஞ் செயல்களும் உடைய

ணைக் களித்துவந்த இவன் அரச திருவை இழந்து அவல நிலையில் உழந்து வரிசை குலைந்து மாய்ந்தான்.

“ஆர்வலம் சூழ்ந்த ஆழி அலைமணித் தேரை வல்லான்
நேர்நிலத்து ஊரும் ஆயின் நீடுபல் காலம் செல்லும்;
ஊர்நிலம் அறிதல் தேற்றாது ஊருமேல் முறிந்து வீழும்;
தார்நில மார்ப! வேந்தர் தன்மையும் அன்ன தாமே.”

தேரை நடத்துகின்ற சாரதி போல் பாரை நடத்துகின்ற அரசன் அறிவோடு சரியா நடத்தவில்லையானால் அந்த ஆட்சி மாட்சியிழந்து கெடும் என்பதை இவன் காட்சியாய்க் காட்டி நின்றான். அரசன் கொடியனாயின் தன் நெடிய செல்வங்களை இழந்து மிடியும் பழியும் படிந்து அவனும் விரைந்து அழிவான் என்பதற்குத் தெளிவான சான்றாக மேலோர் இவனை விளக்கி வந்தனர். விரிவைக் காஞ்சிமான்மியத்தில் காண்க.

**மக்கள் வெறுத்துவரின் மன்னன் மறுகியே**
**ஒக்க அழியும உடன்.**

தக்கபடி நட.

---

**முரண் அழியும் வழி.**

567. அன்றேன் கொடுந்தண்டம் ஆற்றி நெடுங்கிள்ளி
குன்றினான் ஆற்றல் குமரேசா—என்றும்
**கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்**
**அடுமுரண் தேய்க்கும் அரம்.** (எ)

இ-ள்.

குமரேசா! கடுந்தண்டம் புரிந்த நெடுங்கிள்ளி ஏன் வலி இழந்து பழி மிகுந்து நலிவோடு தாழ்ந்தான்? எனின், **கடுமொழியும் கை இகந்த தண்டமும் வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம்** என்க.

கடுமையான சொல்லும் கொடுமையான தண்டமும் அரசனுடைய அடுந்திறல்களை அழித்துவிடும்.

கடுமொழி = கேட்கின்றவர்கள் உள்ளம் பதைத்து உளைந்து வருந்தும் படியான கொடிய வார்த்தை.

நஞ்சை உண்டவர்போல் கேட்டவர் நெஞ்சம் துடிக்க வருகிற நீசச் சொல் எனவும் ஈண்டு இது எண்ண வந்தது. கடு=விடம். கடுமொழி கொடு விடமாம்.

இன்சொல் வழங்க வுரிய இனியவாய் வன்சொல் வழங்க நேர்ந்தபோது அவன் வசை படிந்து இழிகிருன். மொழி கொடுமையாய் வரவே பழியும் இழிவும் அழிவும் கடுமையாய் வருகின்றன.

கை இகந்த தண்டம்=வரம்பு மீறிய தண்டனை.

கை=ஒழுங்கு; வரிசை. செய்த குற்றத்திற்குத் தக்கபடி தயவுடன் தண்டிப்பதே தக்க அரசின் கடமையாம். தகாத தண்டனை புரிய நேரின், அதுவே அவனைத் தகுதி யற்றவ னுக்கித் தாழ்த்தி விடுகிறது.

அடுமுரண் என்றது பகைவரை வென்று தொலைக்க வல்ல அதிசய ஆற்றல்களை. அடுதல்=கொல்லுதல்; வெல்லுதல். முரண்=மிக்க வன்மை.

உடல்வலி மனவலி படைவலி முதலாக எவ்வளவு வலிகளை யுடையனுயினும், கடுமொழியும் கொடுந்தண்டமும் புரிந்துவரின் அந்த அரசன் அடுமுரண் யாவும் இழந்து இழிந்து ஒழிந்து போவான்.

அரம்=இரும்பைத் தேய்க்கும் ஒருவகைக் கருவி.

மொழியும் தண்டமும் அரம் என்றது அரசன் தேய்ந்து மாய்ந்து போகும் விதம் தெரிய வந்தது.

இனிய சொல்லும் இதமான செயலும் இன்பம் புரிந்து வருகின்றன; கடிய சொல்லும் கொடிய செயலும் துன்பமே தருகின்றன. வெருவந்தன செய்பவரை எவரும் வெறுத்து விரைந்து விலகி விடுவர்.

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னு;
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னு;
கடுமொழி யாளர் தொடர்புஇன்னு; இன்னு
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு. (இன்னு நாற்பது 4)

துன்பமான புலைகளை இது சுட்டிக் காட்டியுள்ளது. கடு மொழியாளரும், கொடுங்கோல் மறவரும் அஞ்சி

ஒழிக்கத் தக்கவர்; அவரை யாரும் யாதும் அணுகலாகாது எனக் கபிலர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடுமொழி கண்ணோ டாமை
கையிகந் திட்ட தண்டம்
நடுநிலை யின்மை செவ்வி
யின்மைநன் முகம் உருமை
உடனுறச் சூழ்ந்து செய்யாது
உறுபிழை அமைச்சர்க்கு ஏற்றல்
படுசமர்ச் சிறைசெய் யாமை
பலவும்தீங் காகும் மைந்தா! (விநாயக புராணம்)

அரசனை அழித்து ஒழிக்க வல்ல பொல்லாத புலைக் கேடுகளை இது நேரே கொழித்துக் கூறியுள்ளது.

பேச்சும் செயலும் இதம் தோய்ந்துவரின் அந்த அரசு உயர்ந்து ஓங்கி வரும். இடர் தோய நேரின் அப்பொழுதே அது படராய்ப் படுதுயர் செய்து விடும்.

கடுந்தண்டம் புரிபவன் கொடுங்கேடுகளை அடைவான்.

இது நெடுங்கிள்ளிபால் தெரிய வந்தது.

சரிதம்.

இவன் சோழ மன்னர் மரபினன். உறையூரிலிருந்து அரசு புரிந்தவன். செல்வ வளங்களும் பல்வகை வலிகளும் இவனிடம் செறிந்திருந்தன. தன் ஆற்றல்களை ஏற்றமாக் கருதி வந்தமையால் எவரையும் மதியாமல் யாண்டு மதம் மீறி இறுமாந்து வந்தான். இவனுடைய உள்ளத் தருக்குகளை அறிந்து கிள்ளி வளவன் என்னும் சோழ மன்னன் இவனை எள்ளி இகழ்ந்து நின்றான். இருவரிடையே பகைமை மூண்டு நீண்டு வந்தது. வருங்கால் இளந் தத்தன் என்னும் புலவன் பரிசில் கருதிப் பல இடங்களுக்கும் சென்று முடிவில் இவன் நகர்க்கு வந்தான். வஞ்சம் யாதும் அறியாத அந்தச் செஞ்சொற் புலவனை இவன் மாறுபாடாக எண்ணினான். தன் பகைவனிடமிருந்து களவாய் உளவறிய வந்த ஒற்றன் என்று குற்றம் கூறிச் சிறையில் அடைத்து வைத்து அவனுக்

குக் கொலைத் தண்டம் விதித்தான். இனிய புலவனைக் கொடிய கொலை செய்ய மூண்டு நிற்கின்ற இவனது புலை நிலையை அறிந்து கோவூர் கிழார் என்னும் புலவர் பெருமான் நேரே விரைந்து வந்து இவனைக் கண்டார். அறிவுரைகள் கூறினார்: "உலகம் நலமுற வாழுகிற புலவர் இயல்புகளை உணராமல் நீ கொல்லத் துணிந்தது பொல்லாத பழி பாதகமாம்; உடனே அவனை விடுதலை செய்தருள்" என்று உறுதி நலன்களை உணர்த்தினார். இவன் உள்ளம் தெளிய அவர் உரைத்த உரைகள் உணர்வொளிகள் வீசி உறுதிநலன்களை விளக்கி வந்தன. அயலே வருவன காணுக.

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி,
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி,
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ? இன்றே; திறப்பட
நண்ணார் நாண அண்ணாந்து ஏகி
ஆங்கினிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே. (புறம், 47)

"புலவர்கள் அறிவு நலமுடையவர்; உலகம் நலமுற உறுதி யுண்மைகளை உரைப்பவர். வள்ளல்களை நாடிச் சென்று உள்ளம் உவப்பப் பாடிப் பரிசில் பெற்று வருபவர்; ஈட்டி வந்த பொருள்களை நாளைக்கு வேண்டுமே என்று பாதுகாத்து வையார்; பிறர்க்கு ஊட்டி உண்பார்; யாதொரு தீதும் அறியாதவர்; வெற்றி வீரரோடு அரசர்களைப்போல் யாண்டும் தலை நிமிர்ந்து நடப்பவர்; அத்தகைய வித்தக மரபினரை நீ கொல்ல மூண்டது மிகவும் அதிசயம்; மதிகேடான இதை மறந்து அவரைச் சிறையிலிருந்து வெளியேற்றித் துதி செய்து போற்றி விடு!" என்று இவ்வாறு அவர் கூறவே உடனே அவ்வாறே இவன் செய்து விடுத்தான். இந்த நிகழ்ச்சியைக் கிள்ளி

வளவன் அறிந்தான். தனது இராசதானியிலிருந்து வந்தவன் என்றதனால் நல்ல ஒரு புலவனைக் கொல்ல மூண்டானே! என்று உள்ளம் கொதித்து உருத்தெழுந்து படைகளோடு வந்து இவனுடைய நகரை வளைந்து கொண்டான். அந்தப் பேரரசனோடு நேரே போராட அஞ்சி அரண்மனைக் குள்ளேயே பதுங்கியிருந்தான். பலரும் பழிகூற மறைந்திருந்தவன் முடிவில் வெளியேறினன். காரியாறு என்னும் இடத்தில் இவன் மாண்டு மடிந்தான். கடுமொழியும் கை இகந்த தண்டமும் உடையவன் அடுமுரண் அழிந்து அவலமாய் ஒழிவான் என்பதை உலகம் இவன்பால் தெளிவா உணர்ந்து நின்றது.

அடுங்கிள்ளி வளவன்என அறிந்தமையால் அகம்வெருவி
நெடுங்கிள்ளி நிலைகுலைந்து நீளரணம் புக்கிருந்தான்;
கடுங்கள்ளி முள்எனவே கடுந்துயர்கள் செய்தமையால்
படுங்கிளையோடு அடலழிந்து பழிபடிந்து பட்டொழிந்தான்.

**அல்லல் புரியும் அரசன் அவலமாய்**
**ஒல்லை அழியும் உடைந்து.**

பொல்லாங்கு புரியாதே.

---

திரு சிறுகும் திறன்.

568. என்னே சததன்வா எண்ணுமல் செய்துபின்
கொன்னே இழிந்தான் குமரேசா—துன்னும்
இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு. (அ)

இ-ள்.

குமரேசா! சினந்து தீது செய்த சததன்வா ஏன் இழிந்து அழிந்தான்? எனின், இனத்து ஆற்றி எண்ணாத வேந்தன் சினத்து ஆற்றிச் சீறின் திரு சிறுகும் என்க.

செல்வம் சிதைவது தெரிய வந்தது.

உற்ற துணைவரோடு உசாவி உணராத அரசன் வெகுண்டு அல்லல் செய்யின் செல்வம் தேய்ந்துபோம்.

இனம் என்றது அரசுக்கு உசாத் துணையாய் அமைந்துள்ள மந்திரிகள் புலவர்கள் முதலாயினேரை. உடன் இருந்து அரசனுக்குத் துணைபுரிபவர் ஆதலால் இனம் என நேர்ந்தார். உறவு முறையான தன் குலத்தவரும் இனம் எனப் படுவர் ஆயினும் மதிநலத்தோடு எண்ணி ஆராய வுரியவரையே ஈண்டு அஃது எண்ண வந்தது.

பிறப்பு முறையில் வந்த இனத்தினும் சிறப்பு நிலையில் அமைந்த இனத்தவரே அரசுக்குச் சிறந்தவராய் யாண்டும் நலம் புரிந்து விளங்கி யுள்ளார்.

ஆற்றி = உற்ற காரியங்களை உரியவர்களோடு கலந்து ஆராய்ந்து. கருமத் திறன்களின் சூழ்ச்சிகளைக் கருதி யுணர ஆற்றி என்றார்.

எண்ணி = ஆலோசனைக் குழுவோடு அமர்ந்து ஆராய்ந்த பின்பு தனியேஇருந்து சிந்தித்துத் தெளிந்து.

இவ்வாறு ஆய்ந்து தெளியின் அந்த வேந்தன் எவ்வழியும் தேர்ந்த மதிமானய்ச் சிறந்து திகழ்வன்.

இனத்து ஆற்றதலும், எண்ணி யுணர்தலும், நீதி மன்னர் செயல்களாம். இவ்வாறு ஆற்றது ஒழியின் அவர் கொடுங்கோலராய் நெடும் பழியடைவர். முன் குறித்த மறைகள் இரண்டும் பின் உரைத்த மிறைகளுக்குக் காரணம் ஆதலைக் கருதி யுணர்க.

அரசன் கொடுந்தண்டம் செய்யின் அடுந்திறல் கெடும்; மதிநலம் குன்றின் நிதி வளம் பொன்றும் என்க.

இனம் சினம் என்பன அத்துச்சாரியை பெற்று வந்தன. சினம் அகத்திலிருந்து கொதித்துஎழும்; சீற்றம் அதன் விளைவாய்ப் புறத்தே புலப்பட்டு வரும்.

சீறுதல் = அதட்டல்; உரற்றல்; உறுமுதல்.

தன்னையுடையானைச் சிறுமைப் படுத்திச் சீரழித்து விடுவது சீற்றம் என நேர்ந்தது. சீற நேர்ந்த போதே மனிதனுடைய இனிய இயல்புகள் யாவும் மாற நேர்கின்றன. நேரவே இன்னத கேடுகள் ஏறுகின்றன.

இனத்தோடு ஆராய்ந்து எண்ணுமல் இருந்தவன் அதனுல் விளைந்த இடையூறுகளைக்கண்டு மனக்கலக்கம் மண்டி வெகுண்டு சீறி வெய்ய துயர்களைச் செய்ய நேர்வன். காரியக் கேடுகள் சீரிய செல்வங்களைச் சிதைக்கும் ஆதலால் **திரு சிறுகும்** என்ருர்.

சினமும் சீற்றமும் மண்டி வெருவந்த செயல்களைச் செய்ய நேர்ந்தவன் வெய்யனுய்த் திருவிழந்து அழிவன்.

இது சததன்வாவின்பால் அறிய வந்தது.

## சரிதம்.

இவன் யதுகுல வேந்தன். இருதிகன் என்னும் மன்னன் புதல்வன். தாய் பெயர் சவுமதி. வடமதுரையின் வடபாலிருந்த பெரிய நிலப் பகுதிக்கு உரியவனுய் இவன் அரசு புரிந்து வந்தான். மிக்க திருவுற்றிருந்தும் தக்க அறிவற்றவனுய்த் தருக்கி நின்ருன். எதையும் ஆராய்ந்து பாராமல் யாண்டும் துடுக்காய் மூண்டுவந்த இவனிடம் பொருளாசையும் பொருமையும் நீண்டு நின்றன. இவன் காலத்தில் உயர்நிலையில் ஒளிபெற்றிருந்தவன் **சத்திராசித்து** என்னும் மன்னன். சிறந்த மதிமான்; நல்ல உத்தமன். அவனிடம் உயர்ந்த மணிமாலை ஒன்று இருந்தது. அது மிகவும் அதிசயமான மகிமை வாய்ந்தது; அதனைக் கவர்ந்து கொள்ள இவன் விழைந்தான். பலவகையிலும் படு சூழ்ச்சிகள் செய்து முடிவில் அவனைக் கொன்று அதனைக் கைகொள்ளத் துணிந்தான். மாறுவேடம் பூண்டான்; கூரிய வாளுடன் யாரும் அறியாதபடி அவனது அரண்மனையுள் புகுந்தான். அமளியில் அயர்ந்து உறங்கிக் கிடந்த அவனை வெட்டி வீழ்த்திஞன்; மணியைக் கவர்ந்து கொண்டு விரைந்து வெளி ஏறித் தன் நகரை அடைந்தான். அந்த அரசனுடைய அருமைத் திருமகளான **சத்தியபாமை** தந்தை இறந்து கிடப்பதைக் கண்டு சிந்தை துடித்தாள்; நொந்து பதைத்தாள்; விரைந்து வந்து கண்ணனிடம் உரைத்துக் கதறி யழுதாள். தனக்குப் பெண்ணைக் கொடுத்த மாமனைக் கொன்ற தீயவன்யார்? என்று அந்த

மாயவன் ஆராய்ந்தான். இவன் என்று தெரிந்தான்: தெரியவே நேரே மூண்டு வந்தான். கண்ணன் கடுத்து வந்துள்ளதைக் கண்டதும் இவன் உள்ளம் கலங்கினன்; ஒருவருக்கும் தெரியாமல் கள்ள வழியாய் வெளி ஏறி அயலே மறைந்து போனன். போனலும் அங்கே கொலை யுண்டு மாண்டு மடிந்தான். அரச செல்வங்கள் யாவும் அழிந்து போயின. இனத்தோடு எண்ணுமல் சினத் தோடு சீறித் தீங்கு புரிபவன் திரு தேய்ந்து போம்; அவனும் மாய்ந்து மடிந்து போவான் என்பதை உலகம் இவன்பால் ஓர்ந்து உணர்ந்து வியந்தது.

அணிபுரை பணைமென் தோளார் அலர்கதிர் ஆரம் தாழ்ந்த
பணைமுலை பொருத தாரான் பள்ளிகொள் களிறு போலத்
துணர்விரி அமளி மீது துஞ்சுழி எருக்கித் துஞ்சா
மணியினைக் கவர்ந்தான் மற்ற மானவேல் தடக்கையானே.

தண்ணறுங் கோதை சோரச் சத்திய பாவை நெஞ்சங்
துண்ணெனச் சோர்ந்துமாழ்கிச் சுடர்செய்வேல் தந்தைதன்னை
எண்ணெய்பெய் தோணியிட்டாங்கு எய்தினள் கொழுநன் [தன்பால்
புண்ணுறு புலவு வாட்கண் புலம்புமுத்து உகுப்ப நின்ருன்.

கேட்டனன் விளைந்த வண்ணம் கிளர்கடல் உலகம் காப்பச்
சூட்டுவாள் அரவப்பள்ளி துயில்சுவைதுறந்த தொல்லோன்
மோட்டுவெண் திங்கள் மேனி முன்னவன்தன்னேடு ஒல்லை
ஓட்டினன் கொடிஞ்சித் திண்டேர் உற்றனன் நகர மாதோ.

உந்துநீர் உலகம் காக்கும் ஒருதனித் திகிரி மாயன்
வந்தனன் என்ன லோடும் வயிறெரி தவழ அஞ்சிக்
கொந்தழல் வேலி ஞனைக் கொன்று எரி மணிகைக் கொண்ட
கந்தடு களிற்றுத் தானைக் காவலன் கலக்க முற்ருன்.

நொறில்வயப் புரவித் திண்டேர் நூக்கலன் கண்ணன்ஓடிக்
குறுகினன் ஊழி வெந்தீக் கொழுந்துவிட்டு எரிந்தா லன்ன
எறிசுடர் அலங்கல் நேமி எறிந்தனன் இரியல் போய
கறையுறு வேலினன்தன் கருந்தலை தடிந்தான் மன்னே!
(பாகவதம், 10-26)

கொலை புரிந்து மணியைக் கவர்ந்த சததன்வா கொலையுண்டு மாண்டுள்ளதை ஈண்டு அறிந்து கொள் கின்றோம். கொடிய தீயவன் கடிது மாய்கின்ருன்.

**சிந்தனை யின்றிச் செருக்கித் துயர்செய்வான்**
**நிந்தனையாய் மாய்வன் நிலத்து.**

சினந்து சீறித் தீமை செய்யாதே.

---

## சிறை செய்யும் முறை.

569. தீதுமிகு தாரகன்முன் தேர்ந்துசிறை செய்யாதேன்
கோதுமிக மாண்டான் குமரேசா—மோதிச்
செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். (க)

இ-ள்.

குமரேசா! போர் நேருமுன் நேர் உணர்ந்து அரண் செய்யாத தாரகன் ஏன் அவலமாய் அழிந்தான்? எனின், செருவந்த போழ்தில் சிறை செய்யா வேந்தன் வெருவந்து வெய்து கெடும் என்க.

அறிந்து காவான் அஞ்சிச் சாவான் என்கிறது.

போர் மூண்டபொழுது முன்னறிந்து அரண் செய்யாத அரசன் பின்னர் அஞ்சி விரைந்து அழிவான்.

செரு=போர்; சண்டை.

செருக்கால் மாறுபட்டு இருதிறத்தாரும் சேர்ந்து போராட நேர்ந்து நிற்கும் நிலை செரு என வந்தது.

செருவில் ஒருவ. (முருகு, 262)
செருமிகு சேஎய். (அகம், 266)
செருமிகு சேஎய். (புறம், 14)
செருக்களம். (பதிற்று, 86)
செருமுனை. (புறப் பொருள், 6)
செருமேம்பட்ட. (பரிபாடல், 1)
செருவார் சேனை. (பெருங்கதை, 1-40)
செருவிளைத்து அனலும் வேல். (சிந்தாமணி 2077)

இவற்றுள் செரு குறித்திருக்கும் பொருளை அறிக.

சிறை=பாதுகாப்பான அரண்.

வெருவந்து=வெருவி; அஞ்சி

வெய்து=விரைந்து. வெம்மை என்னும் பண்படியாய் இது பிறந்து வந்துளது.

வெருவந்து கெடும்; வெய்து கெடும் என்று கூட்டி நோக்குக. வெருவரல் கெடுவான் உள்ளத்திலும், வெய்துறல் கேட்டின் புறத்திலும் விரைந்து வரும்.

தலைமையாய் நின்று ஒரு நாட்டை ஆளும் அரசனுக்குப் பல வகையான எதிர்ப்புகள் இயல்பாய் எழும்: அவற்றுள் ஒத்த வலியுடைய வேந்தர் பகைமை வீறுடையதாம். மாறுபாடான அவர் போராட வருவதை எதிரறிந்து முன்னதாகத் தனக்குத் தக்க பாதுகாப்புகளை மிக்க விரகுடன் அரசன் விரைந்து செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாதிருப்பின் நேரே போர் மூண்டபோது யாதும் செய்ய முடியாமல் சிந்தை கலங்கித் திகிலடைந்து அழிவான் ஆதலால் **வெருவந்து வெய்து கெடும்** என அந்த அழிவு நிலையைத் தெளிவாக விளக்கி யருளினர்.

வெருவரு தானையொடு வெய்துறச் செய்துசென்று
இருபெரு வேந்தரும் விச்சியும் வீழ. (பதிற்றுப்பத்து)

ஒரு சேர மன்னன் செருப்புரிந்துள்ளதை இது குறித்து வந்துளது. வெருவரலும், வெய்துறலும் இதில் விரவி வந்துள்ளன. கருதி உணர்க.

போர் மூண்டபோது யாண்டும் நீண்ட துயரங்கள் நேர்ந்து வரும். பகைவரை வென்று தொலைக்கத் துணிந்த வேந்தன் தனக்கு உறுதியான வலியும் காலமும் இடமும் கருதி நோக்கிப் பொறுதியா யிருப்பன்.

செருநிலத்து அவன்உயிர் செகுத்து மற்றெனக்கு
இருநிலம் இயைவதற்கு எண்ணல் வேண்டுமோ?
திருநிலக் கிழமையும் தேவர் தேயமும்
தருநிலத் தெமக்கெனின் தருகும் தன்மையீர்! (1)

மண்மிசைக் கிடந்தன மலையும் கானமும்
நண்ணுதற்கு அரியன நாடும் பொய்கையும்

கண்மனம் குளிர்ப்பன வாறும் காண்பதற்கு
எண்ணம் ஒன் றுளதெனக்கு இலங்கு பூணினாய்! (2)
(சீவக சிந்தாமணி)

தன் பகைவனை வென்றுகொள்ள விழைந்த சீவகன் காலம் கருதி நின்ற நிலையை இவை காட்டியுள்ளன.

எதிரிகள் நிலைமையை எதிர் உணர்ந்து முன்னதாகத் தன்னைக் காத்துக் கொள்ளாதவன் அரசு முறை அறியாத அறிவிலியாய் இழிக்கப்படுவான். படையே தனக்கே அவன் வெருவந்த செய்தவன் ஆகிறான்.

அருவலி யுடையனாய் ஆண்மை யாளனாய்ப்
பொருவரு திறலொடு பொலிந்து நிற்பினும்
செருவரு முன்னரே சிறைசெய் யாதவன்
வெருவரு துயரொடு விரைந்து மாய்வனே.

எவ்வளவு வலிமைகள் எய்தியிருந்தாலும் முன்னே அறிந்து காவாத மன்னவன் இன்னலுழந்து இழிந்து அழிவான் என்பதை இதில் தெளிந்து கொள்கிறோம்.

ஆவதை ஆயான்; அமரார் அமர்நிலையை
ஓவா துணரான்; உரஞ்செய்யான்—சாவதையே
கண்டு கழிந்து கடையா யிழிந்துபழி
மண்டி அழிவன் மருண்டு.

வீரம் இருந்தாலும் விவேகம் இல்லாதவன் விரைந்து கெடுவான். மாறுபாடான மதிகேடன் மாய்கின்றான்.

இது தாரகன்பால் தெரிய வந்தது.

**சரிதம்.**

இவன் சூரபன்மனுடைய தம்பி. அரிய வர பலங்கள் உடையவன். பெரிய போர் வீரன். கிரவுஞ்ச கிரியின் அருகே பெருமையாய் மருவியிருந்த மாயமாபுரி என்னும் நகரிலிருந்து இவன் அரசு புரிந்து வந்தான். கொடுங்கோலன் ஆன இவனது ஆட்சியில் யாவரும் நடுங்கி ஒடுங்கி அடங்கி நின்றனர். மாய வஞ்சங்களிலும் தீய செயல்களிலும் வல்லவனான இவன் தேவர்களையும் அடக்கி ஏவல் கொண்டு வாழ்ந்தான். அசுர

வேந்தன் ஆன சூரபதுமன் புரிந்து வந்த கொடுமைகளுக்கு ஆற்ருமல் வானவர் முறையிட்டுப் போற்றி வேண்டினமையால் முருகக் கடவுள் சேனைகளோடு அவனை வென்று தொலைக்க வந்தார். வருகிற வழியில் தாரகன் நகரைப் படைகள் வளைந்து கொண்டன. உறுவதை உணராமல் உள்ளம் செருக்கி மடி கொண்டிருந்த இவன் சேனைகள் மூண்டு போராட நேர்ந்ததை அறிந்ததும் நெஞ்சம் திகைத்து நெடுஞ்சினம் கொண்டு அடுந்திறலோடு மூண்டு அமர் செய்ய எழுந்தான்.

சேர்ந்திடும் எல்லை பூதர் சேனைபோய் நகரம் புக்கு
நேர்ந்திடும் அவுணரோடு நின்றமர் விளைத்து நின்ருர்;
ஓர்ந்தனர் அதனைத் தூதர் ஓடித்தம் கோயில் புக்குச்
சார்ந்திடு திருவில் வைகும் தாரகற்கெழுது சொல்வார்:

எந்தைமற் றிதுகேள் நும்முன் இமையவர் தொகையையிட்ட
வெந்துயர்ச் சிறையை நீக்க விரிசடைக் கடவுள் மைந்தன்
கந்தன்என்று ஒருவன் வந்தான் அவுணரைக் கடக்கும் [என்னு
அந்தரநெறிசெல் விண்ணோர் அறைந்திடக் கேட்டுமன்றே:

என்னிவர் மாற்றம் என்னு யாம்தெரி குற்றேம் ஆக
அன்னவர் இயம்பி யாங்கே ஆயிரத்து இரட்டி என்னப்
பன்னறு பூத வெள்ளம் படர்ந்திடக் குமரன் போந்தான்
முன்னுறு தூசி நந்தம் முதுநகர் அலைத்தது என்ருர்.

மூண்டுள்ள போரைக் குறித்து இன்னவாறு இன்னலுழந்து தூதர் கூறவே இவன் உள்ளம் கொதித்து உருத்தெழுந்தான். பூதப் படைகளோடு பொருதான்: முடிவில் முருகப் பெருமான் வேலாயுதத்தால் மாண்டு மடிந்தான்.

தண்டமது இயற்றும் கூர்வேல் தாரக அவுணன் மார்பும்
பண்டுள வரையும் பட்டுப் பறிந்தபேர் ஓசை கேளா
விண்டது ஞாலம் என்பார் வெடித்தது மேரு என்பார்
அண்டமது உடைந்தது என்பார் ஆயினர் அகிலத்துள் [ளோர்.

தண்ணளி சிறிது மில்லாத் தாரகன் கிளர்ந்து வான்போய்
மண்ணிடை மறிந்த தன்மை வன்சிறை இழந்த நாளில்
திண்ணிய மேரு இன்னும் செல்லலாம் கொல்லென் றுன்னி
விண்ணிடை எழுந்து வல்லே வீழ்ந்ததே போலும் அன்றே.
(கந்த-தாரகன் வதை)

தாரகன் மூண்டு போராடி வீரவேலால் மாண்டு மடிந்துள்ளமையை இவற்றால் ஈண்டு அறிந்து கொள்கிறோம். தண்அளி சிறிதும் இல்லாத் தாரகன் என்று குறித்திருத்தலால் இவனுடைய கொலைத் தீமைகளை அறிந்து கொள்கிறோம். செருவரும் என்று தெரிந்திருந்தும் ஒரு பாதுகாப்பும் செய்யாமல் களித்திருந்த இவன் உள்ளம் கலங்கி உருத்து இழிந்து அழிந்து ஒழிந்தான். செருவருமுன் சிறை செய்யாதவன் பருவரலோடு பதைத்து அழிவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து தெளிந்தது. இவனது அழிவு யாவர்க்கும் உவகையா நின்றது.

**வருவ துணரான் மதங்கொண் டிருந்தான்**
**வெருவி அழிவன் விரைந்து.**

உறுவதை ஓர்ந்து செய்.

---

**பூமிக்குச் சுமை.**

570. பாரம் பொறேன்என்று பாரேனே கஞ்சனுயர்
கோரம் புகன்றாள் குமரேசா—ஆரவே
கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை. (ம)

இ-ள்.

குமரேசா! கஞ்சனது கொடுங்கோல் ஆட்சியை வெறுத்து நிலமகள் ஏன் நெஞ்சம் கொதித்தாள்? எனின், கடுங்கோல் கல்லார்ப் பிணிக்கும்; அது அல்லது நிலக்குப் பொறை இல்லை என்க.

கொடுங்கோல் அரசன் கல்லாத புல்லரைத் துணையாக அணைத்துக் கொள்வன்; ஆகவே பொல்லாத அவன் இவ்வுலகிற்குப் பெரிய கொடிய சுமையாம்.

கல்லார் என்றது கல்வியறிவில்லாத புல்லரை.

பிணிக்கும்=நட்பாகப் பற்றிக் கொள்வன்.

கடுங்கோல் என்றது கொடுங்கோல் மன்னனை. கோனின் கடுமை கோல்மேல் நின்றது. நீதி புரிபவன் செங்கோலன்; தீது புரிபவன் கொடுங்கோலன். செயல்களின் வழியே உயர்வு தாழ்வுகள் உளவாகின்றன.

கற்றவரைக் கண்ணாகக் கருதிப் பேணி நாட்டுக்கும் மாந்தர்க்கும் நன்மைசெய்து வருபவன் நல்ல செங்கோல் வேந்தனாய்ச் சிறந்து திகழ்கிறான்; அவ்வாறின்றிக் கல்லாத புல்லரைச் சேர்த்துக் கொண்டு அல்லல் புரிந்து வருபவன் பொல்லாத கொடுங்கோலனாய்ப் புலைப் பழியடைந்து இழிந்து கழிந்து அழிந்து ஒழிகின்றான்.

அது என்றது கடுங்கோலை.

கடுமையான கொடுமைகளை அரசன் செய்து வருதற்கு அவனது அதிகாரக் கோல் ஆதரவாய் நிற்றலால் அதனையே இவ்வாறு நேரே சுட்டி யுரைத்தார்.

அது என்றதற்குக் கல்லார் கூட்டம் என்று பரிமேலழகர் பொருள் கொண்டபடியே கொண்டால் என்னை? எனின், கூட்டம் என்று ஒன்று கூட்ட வேண்டுதலானும், நிலக்குப் பொறை என்றதற்கு அஃது இலக்கு அன்மையானும், இலக்காயின் அது என்னாது அவர் என்றே அடிகள் அருளியிருப்பர்; அங்ஙனம் உரையாமையானும், கொடுங்கோலே ஈண்டு அதிகாரத்தின் குறிக்கோள் ஆதலானும் அவ்வாறு கோடல் கூடுமா? என்பதை நாடி அறிக. நயம் தெரிந்து தெளிக.

வெருவந்த செயல்களைச் செய்து நாட்டுக்கும் தனக்கும் பெருங்கேடுகளை விளைத்துக் கொள்பவன் கொடுங்கோலன் ஆகின்றான். பொல்லாத அவன் கல்லாத மூடர்களைத் துணைக்கொண்டு மேலும் அல்லல்களை ஆற்றிவரின் பூமிதேவி பொறுக்க மாட்டாமல் உள்ளம் நொந்து வருந்துவள் ஆதலால் நிலத்துக்கு அவன் நெடிய கொடிய சுமை எனக் கடிய நேர்ந்தான்.

கல்லார் தனித்தனியே பிரிந்து கிடப்பின் விரைந்து தீமை செய்ய முடியாமல் அடங்கி யிருப்பர். நஞ்சைத் தொகுத்து வைத்ததுபோல் நெஞ்சம் தீய அவரை ஒன்ருகச்சேர்த்து வைத்து அரசனும் ஆதரவாய் நின்றுவிடின் அக் கொடியவர் நெடிய கேடுகளை நேர்ந்தபடி எல்லாம் துணிந்து செய்வர்; செய்யவே புலிகள் எதிர்ப்பட்ட புல்வாய்கள்போல் மக்கள் மறுகி அயர்வர்; வையமும் வெய்ய துயரமாய் வெதும்பி நையும்.

எல்லாவற்றையும் பொறுக்கின்ற பூமிதேவி வெருவந்தன செய்கின்ற வெங்கோலனைப் பொருது மறுகுவள் என்றது, அவளது புனித நிலைமை தனியே இனிது தெரிய வந்தது. புண்ணிய நீர்மையள் ஆதலால் பாவிகளைத் தாங்க மாட்டாமல் தளர்ந்து வருந்துகிருள்.

அரசுருப்புணர் அவுணரால் ஆற்றலள் ஆகிப்
பரவை மாநிலப் பசுங்கொடி மல்லலம் சேதா
உருவெடுத்தனள் உற்றனள் உற்றது கிளர்ந்தாள்
மரைமலர்ப்பொகுட்டுறைதரு மறையவற்கு அன்றே.

அலர்பசுந்துழாய் அணிமுதல் தேவுவந்து அளிக்கும்
மெலியல் நீஎன வெண்திரைக் கருங்கடல் உடுத்த
நிலமடந்தையை விடுத்தனன் நிறையிதழ்க் கமல
மலரின் வந்தவன் மாண்டதன் பேருலகு அடைந்தான்
(பாகவதம்)

ஒரு காலத்தில் அரசர்கள் அசுரர்களாய் யாண்டும் மூண்டு நீண்ட தீமைகளைச் செய்தனர். செய்யவே, நிலமகள் நெஞ்சம் பொருமல் மறுகி மலரவனிடம் போய் முறையிட்டாள். காப்புக் கடவுளாகிய திருமால் நல்ல காவலனுய் வந்து உன்னைக் காத்தருள்வார்! என்று பிரமதேவன் தேற்றிவிடுத்தார். அவள் தேறிவந்தாள். அந்த உண்மையை இதில் உணர்ந்து கொள்கிறோம். பாட்டுள் காட்டியுள்ள காட்சிகளைக் கருதி ஓர்ந்து கொள்ளுக.

அரசன் நிலமகளுக்குத் தலைமகன். அவன் செங்கோலனுய் நீதிமுறை புரிந்து எங்கும் மாந்தரை இனிது பாதுகாத்துவரின் அவள் மகிழ்ந்து எவ்வழியும் வளம்

சரந்து வருவள்; அவ்வாறின்றிக் கொடுங்கோலனாய் அவன் கடுங் கேடுகள் செய்துவரின் அவள் நெடுங் கேடுகள் உடையளாய் நெஞ்சம் பரிந்து வருந்துவள்.

கல்லார்ப் பிணிக்கும் என்றதனால் அந்தக் கடுங் கோலன் பொல்லாத மூடனாய்ப் புலையான கேடனாயிருப் பான் என்பது தெரிய வந்தது. தம் இயல்புக்குத் தக்க படியே எவரும் அயலே துணை சேர்க்க நேர்கின்றனர்.

As we are, so we associate. (Emerson)

எப்படிநாம் உள்ளோம் இசைந்துநாம் சேர்பவரும்
அப்படியே உள்ளார் அமைந்து.

மனித இயல்பை இதனால் அறிந்து கொள்கிறோம்.

நீதி புரிய வுரிய அரசன் அநீதி புரிய நேரின் அந்த அரசும் நாடும் அவலமா யிழிந்து கழிந்து அழிந்துபடும்.

நெஞ்சம் கொடிய வஞ்சமன்னனை நிலமும் பொறாது வருந்தும். அவனும் பழிபாதகனாய் அழிவான்.

இந்த உண்மை கஞ்சன் பால் அறிய வந்தது.

சரிதம்.

இவன் யது மரபினன். வடமதுரையில் இருந்து அரசு புரிந்த உக்கிரசேனன் என்னும் மன்னன் மகன். மிக்க கெடுமதியாளன். நெஞ்சக் கொடுமையும் வஞ்சத் தீமையும் மூர்க்கமும் துணிவும் இவனிடம் மூண்டு நின் றன. தந்தையை வலிந்து நீக்கிவிட்டு இவனே அரசை ஆள நேர்ந்தான். கடுமையான கொடுமைகளை யாண் டும் துணிந்து செய்து வந்தான் ஆதலால் குடிகள் யாவ ரும் நடுங்கி நின்றனர். நல்லவர்கள் எல்லாரும் அல்லல் கள் உழந்து அலமந்து வந்தனர். கண்ணனிடம் கடும் பொறாமையும் கொடும் பகைமையும் கொண்டிருந்தான். ஆதலால் அந்த அண்ணலைப் பெற்ற தாயையும் தந்தை யையும் சிறையில் அடைத்துத் துயர்கள் இழைத்தான். எல்லார்க்கும் இடர் இழைத்துவந்த இவன் கண்ணனைக் கொல்லக் கடுஞ்சூழ்ச்சி செய்தான்.கல்லாத புல்லராய்ப்

பொல்லாத நிலைகளில் புலையாடித் திரிந்த துட்டர்களைத் துணை சேர்த்துக் கொண்டான். சாணூரன், தேனுகன், பாணன், மூகன், முரன், பிரலம்பன், மாகன், நாவர்த்தன், அரிட்டன், துவிதன், பூதன், கேசி முதலிய தீயவர்களை ஆதரவாத் தழுவிக் கொண்டு அவகேடுகளை ஆற்றிவந்த இவன் முடிவில் நேரே கண்ணனைக்கொன்று தொலைக்கக் கடுத்து வந்தான். அந்த மாயவன் இந்தத் தீயவனை மாய்த்து ஒழித்தான். உக்கிரசேனனை அரசன் ஆக்கிப் பெற்றோரைச் சிறையிலிருந்து மீட்டிப் பெரியோர்கள் எல்லாரையும் பேணியருளினான். கொடியவன் அழிந்து ஒழிந்ததை அறிந்ததும் நாடும் நகரமும் பீடை தொலைந்தது என்று பெருமகிழ்ச்சி அடைந்தன. நிலமகளும் நெடிது மகிழ்ந்தாள். கடுங்கோலன் கல்லார்ப் பிணிப்பன்; நிலத்துக்கு அவன் நெடிய பாரம்; கொடிய கோரம்; அவன் ஒழிந்து போவதே நலமாம் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து தெளிந்தது.

வாட்டிறற் செறுநர் ஆவி
வன்திறற் பேழ்வாய்க் கூற்றுக்கு
ஊட்டிய பரிதி வைவேல்
உக்கிர சேனன் தன்னை
நாட்டினன் அரசன் ஆக
நகுமணிச் சுடிகை நெற்றி
சூட்டுவாள் அரவின் ஆடும்
தொடுகழற் காலின் எம்மான். (1)

தடம்தவழ் முதலை வெள்ளவத்
தடக்கைவிண் கீள நீட்டிக்
கடம்தவழ் கடாத்த நால்வாய்க்
கருங்களிறு அழைப்ப வந்தோன்
படம்தவழ் அரவிற் சீறும்
படுகொலைக் கஞ்சற்கு ஓடும்
விடம்தவழ் குடுமி வெள்வேல்
வேந்தரை அழைப்பித் தானல். (2)

மூப்புடை அவரும் பாந்தள்
முடிமிசைக் கிடந்த ஞாலம்

காப்பவந்து உதித்த செங்கட்
கண்ணனைக் கண்டு கண்டு
நீப்பிலா இளமை எய்தி
நிறைந்தபேர் இன்பம் மாந்திப்
பூப்புறு போக பூமி
பொருந்தினர் அனையர் ஆனர். (3)

(பாகவதம் 10-17)

பொல்லாதவன் ஒழிந்து போகவே நல்லவர்கள் விழைந்து வந்து கண்ணனைக் கண்டு களித்திருத்தலை இவை உணர்த்தியுள்ளன. பாம்பிற் சீறும் படுகொலைக் கஞ்சன்என்று குறித்திருத்தலால் இவனுடைய கொடிய தீம்புகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்கின்றோம்.

**எல்லாம் பொறுக்கும் நிலமும் பொருதிகழும்**
**பொல்லா அரசைப் புலந்து.**

கடுங்கோலன் ஆகாதே.

மலர்தலை உலகி னுக்கு மன்னவன் உயிரே; அன்னான்
நலமுயர் நிலையன் ஆயின் நரரெலாம் நலமாய் வாழ்வார்;
புலையுறு புல்லன் ஆனல் பூமியும் பொருது நொந்து
பலமெலாம் கரந்து நிற்பள்: பழிபடிந்து அரசு பாழாம்.

---

இந்த அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

1 தக்கபடி நாடித் தகவுடன் தண்டிக்க.
2 கடிது ஓச்சி மெல்ல எறிக.
3 வெருவந்த செயல்களைச் செய்யாதே.
4 கொடியவன் விரைவில் கெடுவான்.
5 தீயவன் பேய் அனையவன்.
6 கொடுமை புரியாதே.
7 அது குடியைக் கெடுத்துவிடும்.
8 எண்ணுமல் செய்யின் இழிவு நேரும்.
9 எதிர்வதை எண்ணி ஏன்றதைச் செய்.
10 கொடிய செயல் நெடிய பழி.

ருஎ-வது வெருவந்த செய்யாமை முற்றிற்று.

# ஐம்பத்தெட்டாவது அதிகாரம்

## கண்ணோட்டம்.

அ∴தாவது அரசன் கண் ஓடித் தண்ணளியுடையனா யிருக்கும் தன்மை. வெருவந்த செயல்களைச் செய்ய லாகாது என்று முன்னம் உரைத்தார். பரிவுடன் அருள் புரிந்துவர வேண்டும் என இதில் உணர்த்துகின்றார். கொடுமை நீங்கி இனிமை ஓங்கி வர உரைக்கின்றமை யால் அதன்பின் இது தகவாய் அமைந்து நின்றது.

571. **கண்ணின் நீர்மை.**

திண்டோ ளிரும்பொறையென் சீருமல் கண்ணோட்டங்
கொண்டிருந்தான் பண்டு குமரேசா—கண்டுணரும்
கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு. (க)

இ-ள்.

குமரேசா! இரும்பொறை என்னும் மன்னன் ஏன் பெரும் பரிவோடு எங்கும் கண் ஓடி அருளினன்? எனின், கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை உண்மையான் இவ் உலகு உண்டு என்க.

அரிய பேரழகு அறிய வந்தது.

பரிவு என்னும் பெரிய அதிசய அழகு மனிதரிடம் இருந்து வருதலால் இந்த உலகம் நடந்து வருகிறது.

கண் அளி புரிந்துவரும் தண்ணளியாளர் தங்கி வருதலால் உலகு எங்கும் நிலையாய் ஒளி மிகுந்து திகழ் கிறது; உவகை மீதூர்ந்து வருகிறது என்னும் இது இங்கே கூர்ந்து சிந்தித்து ஓர்ந்து உணர வுரியது.

கண்ணோட்டம்=இரக்கம்; தயவு; தாட்சிணியம்.

கண் பார்வை சென்று கண்டபொழுது கனிந்து தோன்றும் உள்ளப் பரிவு கண்ணோட்டம் என வந்தது.

கண்நோக்கு=பார்வை. அதனால் விளைந்து வருகின்ற ஆர்வம் கண்ணோட்டம் ஆயது. கண் ஓட்டம்; கண்கோட்

டம் எனப் பிரித்துப் பகுத்துத் தொகுத்து விரித்துப் பொருள் காணும்படி இம் மொழி படிந்து வந்துளது.

அனுதாபம், பட்சாத்தாபம் என்பன எல்லாம் கண்ணோட்டத்தின் விளைவுகளே. கண் என்பது உயிரின் ஒளியாய் மனிதனுக்கு அமைந்துள்ளது. அதன் காட்சியில் உயிர் இரக்கம் கனிந்து உதவி நலம் சுரந்து வரின் அது மிக்க மாட்சி யடைந்து வருகிறது.

கண்ணிற்கு அமைந்த கடனெறி கூறின்
கண்மை நாகரிகம் பார்வைகண் ணோட்டம். (பிங்கலந்தை)

நவமதாம் கேண்மை கண்ணே நாகரிகம் கண்ணோட்டம்
இவைநயப் புணர்வும் ஆமே. (நிகண்டு)

கண்ணோட்டத்திற்கு இவ்வாறு பெயர்கள் வந்துள்ளன. நீர்மை நிலைமைகள் கூர்மையா அறிய வுரியன.

அல்லல் அடைந்த பிராணிகளைக் காண நேர்ந்த போது நல்லவருடைய உள்ளம் இரங்குகிறது. அந்த உள் இரக்கம் **கண்ணோட்டம்** என நின்றது. இது காரண ஆகுபெயர். காட்சி வழியே தோன்றுகின்ற கருணை அதிசய மாட்சியாய்த் துதி செய்ய வருகிறது.

தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்
மற்றும்கண் ணோடுவர் மேன்மக்கள்;—தெற்ற
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவாது பாம்பு. (பழமொழி, 313)

தமக்கு மிகை செய்கிற பகைவர் இடர் உறினும் மேன்மக்கள் அவர் மேல் கண்ணோடி யருளுவர்; பொல்லாத பாம்பையும் தீம்பு செய்யாமல் சான்றோர் அருளி விடுவர் என இது குறித்துள்ளது. கண்ணோட்டம் தோன்றும் இடத்தை இங்கே கண்டு கொள்கிறோம். ஆன்ற சான்றோர்க்கு உரிய அடையாளம் அருள் இரக்கமே.

**கும்பகருணன்** நேரே மூண்டு நீண்டு போராடினன். படைகள் யாவும் இழந்து முடிவில் மெலிவடைந்து நின்றான். அவனது நிலைமையைக் கண்டு **இராமன்** நெஞ்சம் இரங்கினன். நண்ணரிடமும் கண்ணோடி யருளிய அக்

தக் கருணைக் கண்ணன் அது பொழுது அவனை நோக்கி உரைத்த உரைகள் உள்ளப் பரிவுகளை உணர்த்தி உயர் தகைமைகளை விளக்கி வந்தன.

இழைத்த தீவினை இற்றிலது ஆகலின்
யான்உனை இனையோனுல்
அழைத்த போதினும் வந்திலை! அந்தகன்
ஆணையின் வழி நின்ருய்!
பிழைத்ததால் உனக்கு அருந்திரு நாளொடும்
பெருந்துயில் நெடுங்காலம்
உழைத்து வீடுவ தாயினை என்னுனக்கு
உறுவது? ஒன்று உரை! என்ருன்.
(இராம: கும்பகருணன்; 326)

கண்ணோடாமல் கொல்ல வுரிய போர் முகத்திலும் இந்த வீர வள்ளல் கண்ணோட்டம் செய்துள்ளமையை இங்கே கண்டு நாம் உள்ளம் வியந்து கொள்ளுகிருேம். பாட்டில் படிந்துள்ள பொருள் நயங்களையும் அருள் நலங்களையும் ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

தண்ணளி தோய்ந்த மொழிகள் புண்ணிய ஒளிகளாய்ப் பொலிந்து எண்ணரிய நன்மைகளை அருளி வருகின்றன. கண்ணுல் மனிதர் மாண்புற்று வருகின்றனர்; கண்ணோட்டத்தால் கண் மேன்மையடைந்து திகழ்கிறது. இனிய நீர்மை அரிய சீர்மைகளை அருளுகின்றது. உயர்வு தாழ்வுகள் இயல் செயல்களால் உளவாகின்றன.

கண்ணோட்டம் புண்ணிய நீர்மை ஆதலால் அதனையுடையவனை எல்லாரும் விழைந்து புகழ்ந்து போற்றுவர். தன்னை இயல்பாய் எய்தியிருப்பவனுக்கு எவ்வழியும் மதிப்பும் மாண்பும் பெருகி வருதலால் கண்ணோட்டம் பேரழகு என வந்தது. காரிகை = அழகு. கண்டவர் எவரும் வியந்து நோக்கி உவந்து நிற்கச் செய்யும் உருவப் பொலிவையே அழகு எனப் பழகி வருகிருேம்.

இயற்கை செயற்கை என அழகு இரு வகையாம். ஆடை அணி முதலியவற்ருல் திகழ்வது செயற்கை;

கல்வி கொடை கண்ணோட்டங்களால் விளைவது இயற்கை; அது உடலழகு; இது உயிர் அழகு.

ஒரு பொருளையே குறித்து வருகிற கழி பெரு என்னும் இரண்டும் அழகின் சிறப்பை வியனுற விளக்க வந்தன. கழிபெருங் காரிகை = அரிய பெரிய அழகு.

ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா. (நன்னூல்)

இந்த இயல் விதி இங்கே எண்ணியுணர வுரியது.

கடுஞ்சொல் கடுந்தண்டம் முதலிய கொடுமைகளை அரசன் கொள்ளலாகாது என முன் அதிகாரங்களில் குறித்தார்; இதில், கண்ணோட்டம் உடையனாய்த் தண்ணளி தோய்ந்து மன்னன் வர வேண்டும் என மதிநலனை அதிநயமா உணர்த்தி வருகிறார்.

துயரடைந்த உயிர்களிடம் இரங்கி யருள் புரிவது உயர் தருமம் ஆயினும் நெறிகேடான செயல்களைச் செய்கிற கொடியவர்களைக் கடுமையாகத் தண்டித்து அடக்கி ஒடுக்குவது அரசன் கடமையாம்.

ஓர்ந்து கண்ணோடாது இறை புரிந்து. (குறள், 541)

முறைஎனப் படுவது
கண்ணோடாது உயிர் வௌவல். (கலி 133)

கண்ணோட்டம் காட்டக் கூடாத இடங்களை இவை காட்டியுள்ளன. இறையின் முறைமைகள் யூக விவேகங்களுடையன. யாவும் ஓர்ந்து சிந்திக்கத் தக்கன.

புறம்நட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேருதல் வேண்டும்; கழிபெருங்
கண்ணோட்டம் செய்யார் கருவியிட்டு ஆற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.
(நீதிநெறிவிளக்கம், 56)

கண்ணோட்டம் காட்டாமல் புண்ணை அறுத்து மருந்துவர் திருத்துவதுபோல் உட்பகைவரை இரக்கமின்றி வெளிப்படுத்தி ஒறுத்துக் கடுத்து ஒழித்துவிட வேண்டும் என்று இஃது உணர்த்தியுளது.

**கழிபெரும் கண்ணோட்டம்** என்னும் தொடர் இதில் கலந்து வந்துள்ளது. இந்தக் குறளை நினைந்து இந்நூல் ஆசிரியர் இதனைப் பாடியிருப்பதாகத் தெரிகிறது. நச்சுப் பகை நஞ்சினும் கொடியது; அதனை அஞ்சி விலகுமாறு நேரே அறிவுறுத்தி யிருக்கிறார்.

உயர்ந்த மக்களின் சிறந்த நீர்மையே கண்ணோட்டம். இந்தக் கருணைப் பண்பு இல்லையானால் இரக்கம் அற்ற கொடிய விலங்கு இனங்கள் கூடியுள்ள காடு போல் நாடு பீடையாய்ப் பிழைபடும்; அவ்வாறு பழி பட்டு இழிவுறாதபடி பாதுகாப்பது பரிவான தயவு ஆதலால் கண்ணோட்டம் உண்மையான் உலகு உண்டு என்றார்.

மனமிக உருகுகின்ற மாண்பினன் எவனோ அன்னோற்கு
உனவரு முத்தி கையில் உளதுஎன்ப; காமம் லோபம்
சினவரும் குரோதம் புன்மை நீத்துநல் ஒழுக்கில் நிற்கும்
வினையினர் சரதத் தன்றோ மேதினி நிலைபெற்று ஓங்கும்.
(விண்டு புராணம்)

உள்ளம் உருகி வருகிற உத்தமர்களாலேயே உலகம் நிலை பெற்று வருகிறது என இஃது உணர்த்தி யுளது.

அன்பும் அருளும் அமைந்து வரும் அளவே மனித இனம் மகிமை அடைந்து வருகிறது. அத்தகைய உத்தம நீர்மையாளர் இருந்து வருதலாலேதான் இந்த உலகம் நலமாய்ச் சிறந்து திகழ்கிறது.

கண்ணோடி யருள் பவன் புண்ணியவானாய்ப் பொலிந்து புகழ் மிகுந்து வருகிறான்.

இவ்வுண்மை இரும்பொறை பால் தெரிய வந்தது.

**சரிதம்.**

இவன் வஞ்சி நகரிலிருந்து அரசு புரிந்த சேர மன்னன். செல்வப்பெருங்கோ என்னும் வேந்தன் மைந்தன். தாய் பெயர் பதுமை. இவன் வாய்மையும் வண்மையும் வாய்ந்தவன். பல நூல்களையும் பயின்று தெளிந்தவன். புலவர்கள்பால் பேரன்புடையவன். சிறந்த பல குணங்கள் இவனிடம் நிறைந்திருந்தன. எவ்வுயிரையும் தன் உயிர்போல் எண்ணி இரங்கி வந்தமையால் புண்ணிய

வேந்தன் என்று யாவரும் இவனைப் போற்றி வந்தனர். மோசிகீரனார் என்னும் சங்கப் புலவர் ஒரு சமையம் இவனை நாடி வந்தார். அரண்மனையுள் புகுந்தார். அது பொழுது இம் மன்னன் வெளியே போயிருந்தான். அங்கே அலங்காரமாய் அமைந்திருந்த அரசு கட்டிலில் அவர் அமர்ந்தார். நடந்து வந்த களைப்பால் அதன்மேல் சாய்ந்தார். அயர்ந்து உறங்கினார். மன்னன் வந்து பார்த்தான்; புலவர் என்று தெரிந்தான். அவர் சுகமாய்த் தூங்கும்படி அயலே நின்று இவன் விசிறி கொண்டு வீசினான். சிறிது நேரத்தில் அவர் விழித்தார்; வியந்து பயந்து விரைந்து கீழே இறங்கினார். அவரை இவன் தழுவிக் கொண்டு “ஏன்? சும்மா அமர்ந்திருங்கள்! உங்களைப் போன்ற பேரறிஞர்களுக்கே இந்த அமளி உரியது” என்று பிரியம் மீதூர்ந்து தேற்றினான். மன்னனுடைய மனப்பண்பையும் பெருந்தன்மையையும் கண்ணோட்டத்தையும் புலவர் எண்ணி எண்ணி உருகினார்; கண்ணீர் மல்கி ஒரு கவி பாடினார்.

மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபால் படுக்கும்நின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும்நல் தமிழ்முழுது அறிதல்;
அதனொடும் அமையாது அணுக வந்து நின்று
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்என
வீசி யோயே வியலிடம் கமழ
இவண் இசை யுடையோர்க்கு அல்லது அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசில்! நீ ஈங்கிது செயலே? (புறம், 50)

அரசர் பெரும! யாரும் அணுகாத அரச மஞ்சத்தில் யாதும் அறியாமல் ஏறி உறங்கிய என்னை உன் வாளால் இரு பிளவாக வெட்டி வீழ்த்தி யிருக்க வேண்டும்; அவ்வாறு செய்யவில்லை; அவ்வளவோடு அமையாமல் சாமரை கொண்டு என் அருகில் நின்று வீசி அருளினாய்! இந்த உலகத்தில் அரிய புகழை ஆக்கிக் கொண்டவரே அந்தத் தெய்வ உலகத்தில் தேவராய் வாழ உரிமையுடையவர் என்பதை உன் செயல் இன்று தெளிவுறுத்தியுள்ளது; அருள் நிறைந்த அரசே! என்று மனம் கரைந்து புலவர் பாடியுள்ளார்.

உரவரும் மடவரும் அறிவுதெரிந்து எண்ணி
அறிந்தனை அருளாய் ஆயின்
யார்இவண் நெடுந்தகை வாழுமோரே?
வாழ்கநின் ஊழி! (பதிற்றுப்பத்து, 71)

அறிவும் அறியாமையும் மருவியுள்ள மக்களுடைய நிலைமையை அறிந்து நீ அருள் புரியாயாயின் இவ்வுலகில் இனிது வாழ்பவர் யார்? கருணை வள்ளலான நீ ஊழியும் வாழ்க! என அரிசில்கிழார் என்னும் சங்கப் புலவர் இம் மன்னனை இங்ஙனம் வாழ்த்தியிருக்கிறார். கண்ணோட்டம் செய்து வருகிற கருணையாளராலேயே இவ் வுலகம் நலமாயுள்ளது என்பதைப் பலரும் இவன் பால் உணர்ந்து தெளிந்து உவந்து நின்றனர்.

**உள்ளம் இரங்கும் உரவோரால் இவ்வுலகம்**
**உள்ள தினிதாய் உயர்ந்து.**

இரங்கி யருள்.

---

572. **உலகியல் நிலை.**

வென்றி உதியனன்று மேவிநின்றான் கண்ணோட்டம்
குன்றாமல் என்னே குமரேசா—என்றுமே
கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. (உ)

இ-ள்.

குமரேசா! உதியன் ஏன் என்றும் கண்ணோட்டம் உடையனாய் இருந்தான்? எனின், உலகியல் கண்

ணோட்டத்து உள்ளது; அஃது இலார் உண்மை நிலக்குப் பொறை என்க.

கண்ணோட்டமும் உலகமும் காண வந்தன.

உலக மக்களின் நிலை உயர்ந்தோர் கண்ணோடி யருளுவதால் நலமாய் வருகிறது: அந்த இரக்கம் இல் லாதார் வாழ்வது இந்தப் பூமிக்குப் பெரிய பாரமே.

அஃது இலார்=கண்ணோட்டம் இல்லாதவர்.
உண்மை=உயிர் வாழ்ந்து இருப்பது.
நிலக்கு=நில உலகிற்கு.
பொறை=வருந்திச் சுமைக்கும் சுமை.

கண்ணோட்டம் உயிரின் உயர் பேரழகு என்பதை முன்பு அறிந்தோம்; அதனை இழந்துள்ளவரது இழிந்த பழி நிலையை இதில் உணர்ந்து கொள்கிறோம்.

உலக உயிர்களுள் மனிதன் உயர்ந்தவன்; உணர்வு நலன்க ளுடையவன்; தரும நீதிகளைத் தெரிந்தவன்; ஒத்த மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் செய்ய வுரிய கடமைகளை உணர்ந்தவன். இத்தகைய உத்தம மான உயர்நிலையில் வந்திருந்தும் ஒப்புரவு முதலிய உரிமைகளைப் பரிவுடன் செய்ய வில்லையானல் அவன் உயிரிருந்தும் செத்தவன் ஆகின்றான்; ஆகவே செத்த பிணத்தை அருவருப்போடு சுமப்பதுபோல் பூமிதேவி அவனைத் தாங்கிக் கொண்டிருக்கின்றாள். அந்த இருப்பு நிலக்குப் பொறை என்றதனல் நேரே தெரிய வந்தது.

கண்ணோட்டம் இல்லாதவன் இறந்துபடின் தனக்கு ஒரு பெரிய பாரம் தொலைந்தது என்று நிலமகள் உளம் மிக மகிழ்ந்து கொள்வள். கண்ணுக்கு உரிய இனிய நல்ல நீர்மையை இழந்த அளவு மண்ணுக்கு அவன் ஒரு கொடிய நெடிய பாரமாகின்றான்.

நீண்ட மலைகள் நெடிய மரங்கள் முதலிய பெரிய பாரங்களை எல்லாம் இயல்பாகவே பொறுத்துக்கொண் டிருக்கின்ற நிலத்துக்குக் கண்ணோட்டம் இல்லாத மனி தன் எவ்வாறு பாரம் ஆவன்? எனின், அவை செருக்கு

மமதைகள் யாதும் இன்றி நின்ற இடத்திலேயே நின்று குளிர்ந்த நிழல் இனிய கனிகள் முதலிய அரிய பெரிய உதவிகளை யாவர்க்கும் யாண்டும் செய்து வருகின்றன: இவன் உயிர்க்கு உரிய நல்ல தன்மை இல்லாதிருந்தும் தன்னையும் ஒரு மனிதனாக எண்ணிச் செருக்கி எவ்வழியும் இறுமாந்து திரிந்து தன் வன்கண்மையினால் எங்கும் புன்கண்மைகளை விளைத்துப் புலையே புரிந்து வருவன் ஆதலால் இவனது இருப்பு அருவருப்பும் வெறுப்பும் ஆன ஒரு கொடிய நெருப்பு என நேர்ந்தது.

அல்லல் உற்றவர்களைக் கண்டு உள்ளம் இரங்கி உதவி புரிபவன் கருணையாளன் ஆகின்றான். ஆகவே இருமை இன்பங்களும் அவனுக்கு உரிமையாகின்றன.

> கடைநின்றவர் உறு கண்கண்டு இரங்கி
> உடையதம் ஆற்றலின் உண்டி கொடுத்தோர்
> படைகெழு தானையர் பல்களி யானைக்
> குடைகெழு வேந்தர்கள் ஆகுவர் கோவே! (சூளாமணி)

ஏழைகளுடைய துன்பங்களைக் கண்டு இரங்கி அன்னம் கொடுத்தவர் பின்பு மன்னர் மன்னவராய் இந்த உலகத்தை ஆளும் தலைமையைப் பெறுவர் என இது குறித்துள்ளது.

உறுகண் = துன்பம். அதைக் கண்டு இரங்குவது கண்ணோட்டம். பிற உயிர்கள்பால் பரிவு கொண்டு உதவி புரிபவன் தன் உயிரைப் பொன்உயிராக உயர்த்திக் கொள்ளுகிறான்.

> மின்னும் தமனியமும் வெற்றிரும்பும் ஓர்இனமாப்
> பொன்னின் பெயர் படைத்தால் போலாதே—கொன்னே
> ஒளிப்பாரும் மக்களாய் ஒல்லுவது ஆங்கே
> அளிப்பாரும் மக்களாம் ஆறு. (பெரும் பொருள் விளக்கம்)

உருவத்தால் மக்கள் ஒத்திருந்தாலும் கண்ணோடி இரங்கியருள்பவர் பொன்போல் உயர்ந்து விளங்குகின்றனர்; இரக்கம் அற்றவர் இரும்புபோல் இழிந்துள்ளனர். அவ்வுண்மையை இது ஒண்மையாயுணர்த்தியுளது. சீவ தயை மனிதனைத் தேவனாக்குகிறது.

பிற உயிர்கள் துயருறக் கண்டபோது எந்த மனித னுடைய உளம் உருகி உதவி புரிய விரைகிறதோ அந்த மனிதன் ஒரு பெரிய அருளாளன் ஆகிறான்.

கண்ணோடி யருள்பவன் புண்ணியவானாய்ப் புகழ் மிகப் பெறுகின்றான். இது உதியனிடம் உணர வந்தது.

**சரிதம்.**

இந்த மன்னன் சேரர் குலத் தோன்றல். சிறந்த மதிமான். பலவகையான கலைகளையும் நன்கு பயின்று தெளிந்தவன். ஆட்சி முறையிலும் சூழ்ச்சித் திறத்திலும் தேர்ச்சி மிகப் பெற்றவன். ஆருயிர்கள் பால் பேர் இரக்கம் உள்ளவன். தன் குடைக்கீழ் வாழுகின்ற குடிகள் எவ்வழியும் செவ்வியராய் இனிது வாழ்ந்து வர இவன் முறை புரிந்து வந்தான். வருங்கால் பாண்டவர்கட்கும் துரியோதனாதியர்கட்கும் போர் மூண்டது. அதனை அறிந்ததும் இவன் உள்ளம் வருந்தினான். உயிர்கள் பல மாண்டு போகுமே! என்று இரங்கி மறுகிய இவன் விரைந்து துரியோதனனை அடைந்து அமைதியுறச் சமாதானம் கூறினான். வணங்கா முடியனை அவன் யாதும் இணங்காமல் பிணங்கி நின்றான்: இவன் வருந்தி மீண்டான். போர் மூண்டபின் இருதிறப்படைகளுக்கும் உரிமையோடு உணவும் நீரும் உதவி யருளினான். தண்ணளி நிறைந்த புண்ணியசீலன் என்று அனைவரும் இம் மன்னனை மகிழ்ந்து புகழ்ந்தனர். புலவர்களும் வியந்து இவனது நிலைமையைப் புகழ்ந்து பாடினர்.

மண் திணிந்த நிலனும்,
நிலன் ஏந்திய விசும்பும்,
விசும்பு தைவரு வளியும்,
வளித் தலைஇய தீயும்,
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்,
வலியும் தெறலும் அளியும் உடையோய்!
நின்கடல் பிறந்த ஞாயிறு பெயர்த்து நின்
வெண்டலைப் புணரிக் குடகடல் குளிக்கும்

யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந!
வான வரம்பனை நீயோ பெரும!
அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!
பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்,
நாஅல் வேதம் நெறி திரியினும்,
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ; அத்தை அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கில் துஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே.
(புறம், 2)

தலைச் சங்கத்தில் தலைமை பெற்றிருந்த **முரஞ்சியூர் முடி நாகராயர்** என்னும் புலவர் பெருமான் இந்த அரசர் பெருமானை இவ்வாறு உவந்து பாடியிருக்கிறார். பாடலின் பொருள் நயங்களையும் அருள் நீர்மைகளையும் குறிப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும்.

**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!** என்றதனால் இவனது கொடையும் அளியும் செங்கோன்மையும் குடிஓம்பலும் அருந்திறலும் பெருந்தகைமையும் அரிய கண்ணோட்டமும் தெரிய வந்தன.

ஓர்ஐவர் ஈரைம் பதின்மர் உடன்றுஎழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தான்அளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழல்ஆட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்.
(சிலப்பதிகாரம் 29)

மறப்படைக் குதிரை மாறா மைந்தில்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை. (அகம், 233)

பாரதப் போரில் இருவகைப் படைகளுக்கும் இம் மன்னன் அன்னம் வழங்கியுள்ளமையை இவற்ருலும் அறிந்துகொள்கிருேம். கண்ணேடி இரங்கியருள்பவரை யே இவ்வுலகம் உவந்து புகழ்ந்து வியந்து வரும் என்பதை எவரும் இவன்பால் உணர்ந்து தெளிந்தனர்.

காட்சி நிலையில் கருணை கனிந்துவரின்
மாட்சி உயிர்க்கு வரும்.

அளி புரிக.

---

573. **கண்ணின் பயன்.**

தண்டாமல் தந்தர் தருமரேன் கண்டவுடன்
கொண்டார்கண் ணோட்டம் குமரேசா—உண்டான
பண்என்னும் பாடற் கியைபின்றேல் கண்என்னும்
கண்ணோட்டம் இல்லாத கண். (ங)

இ-ள்.

குமரேசா! புட்பதந்தரும் தருமரும் ஏன் கண்டவுடன் கண்ணோட்டம் கொண்டார்? எனின், பாடற்கு இயைபு இன்றேல் பண் என்னும்? கண்ணோட்டம் இல்லாத கண் என் ஆம் என்க.

கண்ணும் பண்ணும் காண வந்தன.

பாடலுக்கு இசைவு இல்லையானால் பண் பயன் அற்றது; கண்ணேடி இரங்கா இடத்துக் கண் பயன் அற்றது.

கண்ணின் பயன் கண்ணோட்டம் செய்வதே.
பண்ணின் பயன் பாட்டோடு இசைவதே.
உவமானக் குறிப்பு உய்த்து உணர வுற்றது.
பண்=இசையின் பகுதி.

இராகம் தாளம் முதலிய ஓசை வகைகளால் உரு வாகியுள்ளது. உரம் கண்டம் உச்சி மூக்கு அண்ணம் இதழ் பல் நா என்னும் எட்டையும் நிலைக்களனுக் கொண்டு எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் உருட்டு

ஒலி தாக்கு குடிலம் என்னும் எண் வகை நுண் வினைகளால் பண்ணப்படுவது; ஆகவே பண் என வந்தது. காரணப் பெயர் கருதி யுணர வுரியது.

மனிதனுடைய குரலாலும் யாழ் குழல் முதலிய இசைக் கருவிகளாலும் இது இசைக்கப்படும். பாடலோடு படிந்து வரும்பொழுதுதான் கேள்விச் சுவையாய்க் கிளர்ந்து எழுந்து யாவருக்கும் இன்பம் பயந்து இசையமுதம் என இஃது இசைபெற்று நிற்கும்.

பாவோடு அணைதல் இசைஎன்றார்; பண்என்றார்
மேவார் பெருந்தானம் எட்டானும்—பாவாய்
எடுத்தல் முதலா இருநான்கும் பண்ணிப்
படுத்தமையால் பண்என்று பார். (இசைநுணுக்கம்)

பண்ணின் வண்ணத்தை இது வடித்துக் காட்டியுளது. பாட்டோடு இயைந்து வருங்கால் கேட்டவர் இதனை வியந்து விழைந்து உவந்து கொள்கின்றார்.

கண்வனப்புக் கண்ணோட்டம்; கால்வனப்புச் செல்லாமை;
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல்;—பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல்; கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டானன் றென்றல் வனப்பு. (சிறுபஞ்சமூலம், 8)

ஐந்து அழகுகளைச் சிந்தை தெளிய இது விளக்கியுளது. கண் முதலிய நிலைகளைக் கருதி யுணர்க.

**கண்ணுக்கு அழகு கண்ணோட்டம்; பண்ணுக்கு அழகு கேட்டார் நன்று என்றல் எனக் காரியாசான் இவ்வாறு கூறியுள்ளார். இந்தக் குறளைக் கருதி வந்துள்ளது போல் தெரிகிறது. பண்ணுக்கு இதில் விளக்கம் கொடுத்திருப்பது வியந்து சிந்திக்கத் தக்கது.**

உயிர்கள் உவந்துவர இயைந்து வரும் அளவே எவையும் சிறந்து உயர்ந்து ஒளி மிகுந்து வருகின்றன.

கண்ணோட்டம் இல்லையாயின் கண்ணால் பயன் இல்லை என்பதை விளக்குதற்கு இங்கே பண்ணை எதிரே இணைத்துக் காட்டியது என்னை? எனின், அது செவியுணர்வால் திகழ்வது ஆதலால் கண் உணர்வால் நிகழ்வதாய இதனோடு இனமாய் ஈண்டு எண்ண வந்தது.

பாடலுக் காகவே பண் பண்ணப்பட்டு உள்ளது; கண்ணோட்டத்துக் காகவே கண் படைக்கப்பட்டுளது. காட்சியின் அரிய பயனும், கேள்வியின் இனிய சுவையும் கிழமையாய்த் தெரிய நேர்ந்தன.

பண் அமையா யாழின்கீழ்ப்
பாடல் பெரிது இன்னா. (இன்னா நாற்பது 32)

பண்ணும் பாடலும் இதில் கூடி வந்துள்ளன. பண் அமையாதபோது பாடல் இனிமையாய் இராது என்பதை இங்கே நன்கு தெரிந்து கொள்கின்றோம்.

கண்எனக் குவளையும் கட்டல் ஓம்பினார்;
வண்ணவாள் முகம்என மரையி னுட்புகார்;
பண் எழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்;
தண்வயல் உழவர்தம் தன்மை இன்னதே.
(சீவகசிந்தாமணி)

எழுத்து வடிவம் தோன்றப் பண்ணைப் பாடிய உழவர்கள் தம் காதலிகளின் கண்ணும் முகமும் போன்று இருந்த குவளை தாமரைகளைப் பறியாமல் கண்ணோடி நின்றனர் என்னும் இது ஈண்டு எண்ணி யுணரவுரியது. பாட நேர்ந்தபோது தான் பண் இனிய ஓசை உருவமாய் உவகை சுரந்து வருகிறது.

பண்ணினார் பாடலாகிப் பழத்தினில் இரதம் ஆகிக்
கண்ணினார் பார்வை ஆகிக் கருத்தொடு கற்பம் ஆகி
எண்ணினார் எண்ணம் ஆகி ஏழுலகு அனைத்தும் ஆகி
நண்ணினார் வினைகள் தீர்ப்பார் நனிபள்ளி அடிகளாரே.
(தேவாரம்)

பண்ணும் பாடலும், கண்ணும் கண்ணோட்டமும், பழமும் இரசமும் என இன்னவாறு பரமேசுவரன் இனிமை சுரந்துள்ளார் என அப்பர் இப்படிப் பாடியிருக்கிறார். அரிய இனிய பொருள்கள் எல்லாம் பரம்பொருளின் உருவம் என மேலோர் கருதி வருகின்றனர். அவ்வரவு இங்கே இவ்வாறு இனிது தெரிய வந்தது.

பண்ணால்உன் அருட்புகழைப் பாடு கின்றார்;
பணிகின்றார்; நின்அழகைப் பார்த்துப் பார்த்துக்
கண்ணார உளங்குளிரக் களித்தா னந்தக்
கண்ணீர்கொண்டு ஆடுகின்றார்; கருணைவாழ்வை
எண்ணாநின்று உனைஎந்தாய் எந்தாய் எந்தாய்
என்கின்றார்; நின்அன்பர் எல்லாம் என்றன்
அண்ணாநான் ஒருபாவி வஞ்ச நெஞ்சால்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ! அந்தோ!
(அருட்பா)

பண்ணால் பாடி மகிழவும், கண்ணால் கண்டு களிக்கவும் உரியபொருளை இங்கே உணர்ந்து கொள்கின்றோம்.

பாட்டோடு படிந்து வருகிற பண் எவர்க்கும் இன்பத்தை ஊட்டி யருளுகிறது. ஆகவே அதனை எவரும் உவந்து புகழ்ந்து போற்றி வருகின்றனர்.

கண்ணிறை நுதலோன் சாம கண்டத்தின் எழுந்த முல்லைப்
பண்ணிறை தேவகீதம் சராசர உயிரும் பாரும்
விண்ணிறை திசைகள் எட்டும் விழுங்கித்தன் மயமே ஆக்கி
உண்ணிறை உயிரும் மெய்யும் உருக்கியது இசைவல்லானை.
(திருவிளையாடல் 41)

கண்ணுதல் பெருமான் பாணன் உருவம் மருவி வந்து பண் நிறைந்த கீதம் பாடியுள்ளதையும், அதனைக் கேட்டு விண்ணவர் மண்ணவர் முதலாக யாவரும் வியந்து உருகி மகிழ்ந்துள்ளதையும் இதனால் உணர்ந்து கொள்கிறோம். முல்லைப் பண் என்பது பண் வகைகளுள் ஒன்று. குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை முதலிய எண்களில் பண்களும் உள.

அண்ணல்யாழ் நரம்பை ஆய்ந்து மணிவிரல் தவழ்ந்த வாறும்
பண்ணிய இலயம் பற்றிப் பாடிய வனப்பும் நோக்கி
விண்ணவர் வீணை வீழ்த்தார்; விஞ்சையர் கனிந்து சோர்ந்தார்;
மண்ணவர் மருளின் மாய்ந்தார்; சித்தரும் மனத்துள் வைத்தார்.
(சீவக சிந்தாமணி 727)

பண்ணார்ந்த பாடல் செவிமாந்திப் பயன்கொள் ஆடல்
கண்ணான் இனிதுய்க்கவும் கங்குல் கழிந்த அன்றே.
(இராமா: 1-15-77)

பண்ணாரும் இசையினொடு பாடிப் படித்தருள்
பான்மை நெறி நின்று. (தாயுமானவர்)

பண்ணும் தமிழும் தவம் செய்தன; பழ நான்மறையும்
மண்ணும் விசும்பும் தவம்செய் தன; மகிழ் மாறன்செய்யுள்
எண்ணும் தகைமைக்கு உரியமெய். யோகியர் ஞானம்என்னும்
கண்ணும் மனமும் செவியும் தவம்செய்த காலத்திலே.
(சடகோபரந்தாதி 39)

பண்ணார் பாடலின் கவிகள். (திருவாய்மொழி)

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொல் பனுவலும்யான்
எண்ணும் பொழுது எளிது எய்தநல்
காய்எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! (சகலகலாவல்லிமாலை)

பண்ணே! பண் இசையே!பண்மயமே! பண்ணின்
பயனே! மெய்த்தவர் வாழ்த்திப் பரவும் தேவே! (அருட்பா)

பண்ணினைப் பண்ணில் நின்றதோர் பான்மையைப்
பாலுள் நெய்யினை மாலுருவாய் நின்ற
விண்ணினை விளங்கும் சுடர்ச்சோதியை. (பெரிய திருமொழி)

பண்களி கூர்தரு பாடல். (திருவாசகம்)

பண்ணின் பான்மை மேன்மைகளைக் குறித்து வந்துள்ள இவை ஈண்டு எண்ணி உணரவுரியன். பாடல்களில் படிந்துள்ள பொருள்களை நாடி அறிந்துகொள்ள வேண்டும். பாட்டோடு இயைந்து வருகிற பண் அரிய சுவையுடையதாய் இனிமை சுரந்து வருகிறது. பண்ணே! பாட்டே! கண்ணே! ஒளியே! என்று இறைவனைத் துதித்து வருவது கவிகளின் மரபாய் வந்துளது.

கவிப்பா அமுதம் இசையின்
கறியொடு கண்ணன் உண்ணக்
குவிப்பான், குருகைப் பிரான்சட
கோபன், குமரிகொண்கன்,

புவிப்பா வலர்தம் பிரான்திரு
வாய்மொழி பூசுரர்தம்
செவிப்பால் நுழைந்துபுக்கு உள்ளத்து
ளேநின்று தித்திக்குமே. (சடகோபரந்தாதி)

கவி ஆகிய அன்னத்தை இசையின் கறியொடு கலந்து கண்ணனுக்கு நம்மாழ்வார் ஊட்டியுள்ள உண்மையை இது காட்டியுள்ளது. இசை இல்லாத கவி வெறும் சோறுபோல் சுவையிலதாம்; அவியல், கூட்டு, பொரியல், வறுவல், குழம்பு முதலிய கறி வகைகளோடு கலந்து உண்ணும் போதுதான் அன்னம் மிகு சுவையுடையதாய் விளங்கி வருகிறது,

பண்ணும் பாட்டும் ஒன்ருய் இசைந்து வரும்போதுதான் கண்ணும் கண்ணேட்டமும் போல் நன்ருய் உயர்ந்து நலம் புரிந்து திகழ்கின்றது.

கண்ணேட்டம் இல்லாத கண் கண் ஆகாது; அதனையுடையதே உண்மையான நல்ல கண்ணும். ஆகவே உயிர்கள் பால் தண்ணளி புரிந்து கண் ஒளி சிறந்து புண்ணியம் பொலிந்து விண் ஒளியாய் விளங்குக.

துயர் உறுபவர்க்கு இரங்கி உதவி புரிபவர் உயர் கதி பெறுகின்ருர். இந்த உண்மை புட்பதந்தர் கண்ணும், தருமரிடமும், நன்கு தெரிய வந்தது.

## சரிதம்.

புட்பதந்தர் என்பவர் அரிய தவநெறி யாளர். ஆருயிர்கள்பால் பேரருளுடையவர். தமது தவசித்தியால் தெய்வவுருவை மருவி வானுலகு எய்திஞர். பல நிலைகளையும் பார்த்து யமபுரம் சென்ருர். அங்கே நரகத்தில் உயிர்கள் படுகிற துயரங்களைக் கண்டார்; உள்ளம் இரங்கி எமனை யடைந்து அவர்களை விடுதலை செய்யும்படி வேண்டினர். "சீவர்கள் செய்த பாவங்களை இங்கே தீர்க்க நேர்ந்துள்ளனர். இது தெய்வ நியதி; இதில் யாதும் யான் செய்ய இயலாது" என்று நமன் நயமாய்க் கூறினன்.

தீவினைகள் தீயினுமே தீயஎனத்
தெரியாமல் செருக்கிச் செய்த
பாவிகள்போய் அடுநரகில் படுகின்ற
துயர்களைநேர் பார்த்துஇரங்கி
மேவிநொந்த **புட்பதந்தர்** எமனிடம் போய்
அருள்புரிய வேண்டி நின்றார்:
தேவியலின் நியதியினைச் சீவர்களின்
வினையையவன் தெரியச் சொன்னான்.

யமன் இவ்வாறு கூறவே இவர் பரிவு கூரந்து பதில் உரைத்தார்: "நான் இதுவரை செய்துள்ள தருமத்தையும் தவத்தையும் தத்தம் செய்கிறேன்; இவர்கள் துயர் நீங்கி உய்யும்படி செய்ய வேண்டும்" என்று வேண்டினார். இவரது அருள் நீர்மையை அறிந்து அனைவரும் வியந்தார். விரிவைச் சிவ புராணத்தில் அறிக.

சரிதம் 2

தருமத்துக்கும் பொறுமைக்கும் உரிய நிலையமாய் ஒளிபெற்றிருந்த தருமர் முடிவில் விண்ணுலகடைய நேர்ந்தார். நேரே தெய்வ விமானம் வந்து எதிரே நின்றது. அந்த வானவூர்தியில் மானவீரரான இவர் ஏறினார்; அதுபொழுது இவரது அருள் நீர்மையைச் சோதிக்க விரும்பி எமன் ஒரு நாய் உருவங்கொண்டு அயலே வந்து நின்றான். மெலிந்து தளர்ந்து நோய் படிந்து நின்ற அதனைக் கண்டதும் இவர் உள்ளம் இரங்கினார்; கீழே இறங்கினார்.

உணங்கி ஒருகால் முடமாகி ஒருகண் இன்றிச் செவியிழந்து
வணங்கு நெடுவால் அறுப்புண்டு வயிறும் முதுகும் மாறாகி
அணங்கு நலிய மூப்பெய்தி அகல்வாய் நாவில் நீர்வாரச்
சுணங்கன் சுணங்கி நின்றதனைத் தூயோன்கண்டு துயருழந்தான்.

இவ்வாறு பரிந்து இரங்கிய தருமன் அதனையும் விமானத்தில் ஏற்றினார். ஏற்றவே கூற்றுவன் சுயவடிவம்கொண்டு இவரை வாழ்த்திப் போயினான். இவரது தண்ணளியையும் புண்ணிய நீர்மையையும் வியந்து தேவர் யாவரும் புகழ்ந்து போற்றினார். கண் பெற்றது

கண்ணோட்டம் செய்யவே என்பதை விண்ணும் மண்ணும் அறிய அன்று இவர் நன்கு விளக்கி நின்றார். இவரது கருணைக் கண்ணோட்டத்தை இதிகாசங்கள் பல வகையிலும் புகழ்ந்து பாராட்டியுள்ளன.

**கண்ணுக் கழகு கருணை; கருதிவரும்**
**எண்ணுக் கழகோ இதம்.**

தண்ணளி செய்.

---

கண்ணோட்டம் உள்ளதே கண்.

574 நன்றான கண்ணிருந்தும் நாடாமல் சூர்மதனன்
கொன்றார்முன் என்னே குமரேசா—என்றும்
உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண். (சு)

(இ–ள்)

குமரேசா! சூரபன்மனும் மதனனும் கண் இருந்தும் ஏன் கண்ணோட்டமின்றிக் கடிது கொன்றார்? எனின், அளவினால் கண்ணோட்டம் இல்லாத கண் முகத்து உளபோல் எவன் செய்யும் என்க.

நெறியே கண்ணோடி யிரங்காத கண்கள் முகத்தில் அழகாக இருந்தாலும் யாதும் பயன் இல்லை.

உண்மையான கண் ஈண்டு உணர வந்தது.

மனிதருடைய முகங்களில் இரண்டு கண்கள் அழகாக அமைந்துள்ளன; ஒளிகளையுடையன; உலகக் காட்சிகளைக் கண்டு உயிர்கள் உவந்து வருதற்கு இனிய கருவிகளாய் இவை இசைந்திருக்கின்றன.

பொதுவாக வாய்ந்துள்ள இந்த அளவிலேயே கண்கள் நின்றுவிடின் அவற்றையுடைய உயிர்கள் உயர்வுரா. ஆன்ம இரக்கமான தண்ணளி கண்வழியே விளைந்து வந்த போதுதான் அந்த மனிதன் உயர்ந்த கருணையாளனாய்ச் சிறந்து ஒளி மிகுந்து திகழ்கிறான்.

பிறவுயிர்கள் துயர் உறுவதைக் கண்டபோது எவனுடைய உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகி வருகிற

தோ அவன் ஒரு புண்ணியவான் ஆகிறான்; துயர் நீங்கி உய்யவுரிய உயர்நிலையை எய்துகிறான். விழியில் அருள் பெருகிவரும் அளவு உயிர் பரம் பொருளின் ஒளியில் உலாவி வருகிறது.

கண் என்பது காரணப் பெயர். காண்பது என்னும் ஏதுவான் வந்தது. காட்சியளவில் நின்றுவிடின் அது மாட்சியுறாது; கண்ணோடி இரங்கிய அளவே மேலான கதியை அது காண நேர்கிறது. இரங்கா வழி இருந்தும் பயன் அற்றதாய் இழிந்து படுகிறது.

எவன் செய்யும்? என்னும் வினா அருள் இழந்த கண்ணின் இருள் நிலையை எண்ணிவுணர வந்தது. அளிபுரிந்து வருவதே ஒளி நிறைந்த கண். விழி அளி அற்றதேல் அது பழியுற்றதே.

யாவர் வரினும் எதிர்ஏற்கும் தெய்வமடப்
பாவை அகத்திருந்தும் பாழன்றே—மேவினர்மேல்
தண்ணாரும் கண்ணோட்டம் இன்மையாய்த் தாழுமொரு
கண்ணாகி நிற்கின்ற கண். (பாரதம்)

எதிரே கண்ட எதையும் எளிதே ஏற்று வருகிற ஒளி கண்ணின் நடுவே நன்கு அமைந்திருந்தாலும் அளி புரியாது ஒழியின் அது கண் அன்று; உயிர் இருந்தும் ஒத்ததை உணராதவன் செத்த பிணம் ஆகிறான். உள்ளே ஒளி இருந்தும் கண்ணோட்டம் இல்லையாயின் அது செத்த கண்ணே. தெய்வ மடப்பாவை என்றது கண்ணின் கருமணியை இதில் குறித்திருக்கிறார். குறிப்பைக் கூர்ந்து நோக்கி நேர்ந்துள்ள பொருளை ஓர்ந்து தேர்ந்து கொள்ள வேண்டும்.

**பாவை அகத்திருந்தும் கண்ணோட்டம் இல்லாத கண் பாழ்** என்றதனால் தண்ணளி கண்ணின் உயிர் என்பதை ஈண்டு எண்ணி உணர்ந்து கொள்கிறோம்.

கண்ணிருந்தும் வன்குருடே கண்ணோட்டம் இல்லைஎனின்;
எண்ணிருந்தும் மூடம் இதம்இன்றேல்;—பண்இருந்தும்
பாடாது ஒழியினோ பாழே; அரசிருந்தும்
நாடாது ஒழியின் நவை.

கண்ணோட்டம் இல்லாத கண்ணும், இதம் இல்லாத எண்ணமும், பாட்டோடு படியாத பண்ணும், நாட்டின் நலம் கருதாத அரசும் உருவோடு இருந்தாலும் அடியோடு இறந்தபடியாம்.

கண்ணும் எண்ணமும் பண்ணும் அரசும் இன்ன நீர்மையில் சீர்மையாய்ச் சிறந்திருக்க வேண்டும்; அவ்வாறு இல்லையேல் அவை சுவை கேடான நவைகளே என்பதை இதில் தெளிந்து கொள்கிறோம்.

அளவிறந்த கண்ணோட்டம் அரசநீதிக்குத் தகாது ஆதலால் அளவினால் என் அளந்து கூறினர்.

நாட்டு மக்களிடம் குற்றங்கள் குறைந்து குணங்கள் நிறைந்துவரக் குறிக்கோளோடு கண்ணோடி வருபவர் ஆட்சி முறையில் தேர்ச்சியுடையராய் மாட்சியடைந்து வருகிறார்.

கருணைப்பண்பு தோய்ந்துவரும் அளவே கண் பெருமை அடைந்து வருகிறது; தண்ணளி தோயவில்லையானால் கண்ணொளி கடையா யிழிவுறுகிறது.

உயிர்கட்கு இரங்கும் உயர்கண்; ஒழிகண்
உயிர்கட் கிரங்கா திழிந்து—துயர்கட்கே
மூல நிலையமாய் மூண்டு பழிகேடு
சால விளைக்குமே சார்ந்து.

கண் இரக்கம் உடையவன் புண்ணியவானாய் உயர்கிறான்; அவ்வாறு இரங்காதவன் வன்கண்ணனாயிழிந்து பழிகேடுகளைச் செய்து எவ்வழியும் அழிதுயரங்களுக்கே ஆளாகின்றான். அந்த உண்மையை இதில் நுண்மையாய் அறிந்து கொள்கின்றோம்.

அருள் நீர்மை இல்லாதவர் கொடிய மருளராய் மூண்டு உயிர்களுக்கு நெடிய துயர்களைச் செய்கின்றார். இது சூரன் இடமும், மதனன் பாலும் அறிய வந்தது.

## சரிதம்.

சூரபன்மன் தங்கை ஆகிய அசமுகி என்பவள் அடாத செயல் செய்தாள்; அதனால் கையறுப்புண்டாள்;

கடுகி வந்து தமையனிடம் கடுங்கோள் மூட்டினாள். மூட்டவே இவன் கொடுஞ்சினம் மூண்டு அயலே நின்றவரை அடுந்துயர்கள் செய்தான். கண் இரக்கம் இன்றி இவன் செய்த கொடுமைகளைக் கண்டு யாவரும் நடுங்கினர், தேவரும் ஒடுங்கினர்.

ஒலிகெழும் உவரிப் புத்தேள் உள்ளுறை வடவைச் செந்தீத்
தொலைவுழி எழுவ தேபோல் சூரனுட் சினமீக் கொள்ள
மலிகதிர் இருள்புக் கென்ன வாளுரீஇ மருங்கே தானைத்
தலைவர் நின்றாரை ஏவித் தனித்தனி தண்டம் செய்தான்;
சிற்சிலர் தமது நாவைச் செங்கையைச் சேதித் திட்டான்;
சிற்சிலர் துண்டம் தன்னைச் செவிகளைக் களைதல் செய்தான்;
சிற்சிலர் மருமம் தன்னைச் சிறுபுறத் தொடுபோ்ய வித்தான்;
சிற்சிலர் தாளைத் தோளைச் சென்னியைச் சேதிப் பித்தான்.
(கந்த: சூரன்தண்டம்)

இவ்வாறு சித்திரவதைகளை இவன் செய்திருக்கிறான். உய்த்து உணர்பவர் உள்ளம் உருகி மறுகுவர். கண்ணோட்டம் இல்லாதவன் கொடிய பழி பாதகங்களை யாதும் எண்ணாமல் துணிந்து செய்வன் என்பதை இவன் செயல் அன்று தெளிவாய் விளக்கி நின்றது.

சரிதம் 2.

**மதனன்** என்பவன் மிகவும் தீயவன். ஏமாங்கத நாட்டின் அரசுரிமையை வஞ்சித்துக் கவர்ந்து கொண்ட வன்கண்ணன் ஆன **கட்டியங்காரனுக்கு** மைத்துனன். அந்த நாட்டின் இளவரசனான சீவகனைச் சதிபுரிந்து கொல்லும்படி இப்பொல்லாதவனை அக்கொடியவன் ஏவினான். கரவுடன் இவன் கடிது சென்றான். அக்குல மகனைக் கொலை புரிய மூண்டபோது தெய்வத் திருவருளால் அவன் தப்பிப் போனான். போகவே அயலே வயலூடு நின்ற ஒருவனை வலிந்து பற்றி வாளால் வெட்டிச் சிதைத்து விட்டுச் "சீவகனைக் கொன்று விட்டேன்" என்று அந்தப்பாவியிடம் கூறிப் பரிசில் மிகப்பெற்றான்.

படுகொலை செய்தது.

வாழ்வது ஓர் உபாயம் நாடி மதியுடம் பட்டு வல்லே
சூழ்வினை யாளர் ஆங்கண் ஒருவனைத் தொடர்ந்து பற்றிப்

போழ்படப் பிளந்து வாளில் புரட்டியிட்டு அரியக் கண்டே
ஆழ்கல மாந்தர் போல அணிநகர் அழுங்கிற்று அன்றே.

படுபொய் உரைத்தது.

காய்சின வெகுளி வேந்தே! களிற்றெடும் பொருத காளை
மாசனம் பெரிது மொய்த்து மழையினேடு இருளும் காற்றும்
பேசிற்ருல் பெரிதும்தோன்றப் பிழைத்துய்யப் போதல்அஞ்சி
வாசம்கொள் தாரினுளை மார்பு போழ்ந்துருட்டி யிட்டேம் (2)

பரிசில் பெற்றது.

அருள்வலி ஆண்மை கல்வி அழகு அறிவு இளமை யூக்கம்
திருமலி ஈகை போகம் திண்புகழ் நண்பு சுற்றம்
ஒருவர்இவ் வுலகில் யாரே? சீவகன் ஒக்கும் நீரார்!
பெரிதுஅரிது இவனைக் கொன்ருய்! பெறுகெனச் சிறப்புச்
செய்தான். (சீவகசிந்தாமணி)

நிகழ்ந்துள்ள கொடிய நிகழ்ச்சிகளை இவைவரைந்து காட்டியுள்ளன. கண்டவர் எவரும் கலங்கி நடுங்கும் படியான கொலைபாதகத்தை இக்கொடியவன் யாதும் இரங்காமல் செய்திருக்கிருன். இந்தப் பாதகனைப் புகழ்ந்து அத்தீயவன் பரிசில்களும் வழங்கியிருக்கிருன். கண்ணேட்டம் இல்லாதவர் முகங்களில் கண்கள் இருந்தாலும் அவை கண்களாகா; பழிபாதகங்களுக்கு அஞ்சாத அவர் அழிதுயரங்களையே அடைவார் என்பதை உலகம் காண இவன் நேரே உணர்த்தி நின்ருன்.

**கண்ணேட்டம் இல்லார் கடியர் கொடியரென**
**மண்ணு யிழிவர் மடிந்து.**

வன்கண்ணனுய் வன்பழி யடையாதே.

---

கண்ணின் அணிகலம்.

575 கண்டவுடன் பாரியேன் கண்ணேடி முல்லைக்குக்
கொண்டதேர் விட்டான் குமரேசா—உண்டான
கண்ணிற் கணிகலம் கண்ணேட்டம்அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும். (ரு)

இ-ள்.

குமரேசா! முல்லைக் கொடியைக்கண்டு இரங்கிய

பாரி ஏன் அதன் அருகே தேரை நிறுத்திப் போனான்? எனின், கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃது இன்றேல் புண் என்று உணரப்படும் என்க.

கண்ணும் புண்ணும் காண வந்தன.

கண்ணுக்கு நல்ல அணி தண்ணளியே; அந்த அருள் நீர்மை இல்லையேல் அது புண்ணே.

அணிகலம் = ஆபரணம்; பூடணம்.

மனிதருடைய உடல்களை அணுகியிருந்து அழகு செய்து வருவது அணி என வந்தது. பொன் மணி முதலிய அரிய பொருள்களால் நகைகள் பல வகைகளாச் செய்யப்படுகின்றன.

பூண் அணி அணிகலம் பூடணம் வள்ளி
ஆயிழை கலமும் ஆபரணம்மே. (பிங்கலந்தை)

ஆபரணத்திற்கு இவ்வாறு பேர்கள் வந்துள்ளன. யாவும் காரணக் குறிகளைப் பூரணமாக வுடையன.

ஒரு நூலுக்கு முகவுரை அழகாய்த் தெளிவு செய்து வருதலால் அஃது அணிந்துரை என வந்தது.

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்கு அணியும்போல்—நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது. (நன்னூல்)

தான் அடுத்ததை அழகுசெய்வது அணிஎனஅமைந்தது.

காது மூக்கு கழுத்து கை கால் விரல் இடை தோள் தலை முதலிய உறுப்புக்களுக்கு அணிகள் சிறப்பா அமைந்துள்ளன. கண்ணுக்கு மாத்திரம் அணியில்லை. யாதோர் அணிகலமும் வேண்டாமலே இயல்பாகவே எழில் ஒளி வீசி எல்லாவற்றிற்கும் மேலான மகிமைகளோடு அது விளங்கி யுளது. அத்தகைய வித்தகக் கண்ணிற்கு அதிசயமான ஒரு விசித்திர அணிகலனைத் தேவர் இங்கே யாவரும் அறிய அருளியிருக்கிறார்.

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்.

இந்த விழுமிய அணியையுடைய கண் எவ்வழியும் எழில் மிகுந்து திவ்விய ஒளியோடு சிறந்து திகழ்கிறது.

உயிர்களுக்கு இரங்கி யருளுகிற கண் புண்ணியத்தை அடைகிறது; அடையவே அந்தக் கண்ணையுடையவன் புண்ணியவான் ஆகின்றான்; ஆகவே எங்கும் மதிப்பும் மாண்பும் பெறுகிறான்; பெறவே அல்லல் இல்லாத நல்ல சுகத்தை அனுபவிக்கிறான்; மறுமையிலும் உயர் நிலையை எய்துகிறான். ஆன்ம நலனை மேன்மையா அருளுதலால் இனிய அருள் நலத்தை அரிய அணிகலம் என்று அழகு மொழியால் தெளிய உரைத்தார்.

கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்; காமுற்ற
பெண்ணுக்கு அணிகலம் நாணுடைமை;—நண்ணும்
மறுமைக்கு அணிகலம் கல்வி; இம் மூன்றும்
குறியுடையார் கண்ணே யுள. (திரிகடுகம் 52)

கண்ணுக்கும் பெண்ணுக்கும் மறுமைக்கும் உரிய அணிகலங்களை நல்லாதனார் இங்ஙனம் காட்டியுள்ளார். **கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்** என்னும் இது திருக்குறளை எண்ணி வந்துள்ளது போல் தெரிகிறது.

தண்ணீர் நிலநலத்தால், தக்கோர் குணம் கொடையால்,
கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றால் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி. (நல்வழி 16)

தண்ணீரால் நிலமும், கொடையால் மனிதரும், கருணையால் கண்ணும், கற்பால் பெண்ணும், அற்புத மகிமைகளை அடைகின்றனர் என **ஒளவையார்** இவ்வாறு விற்பன விவேகமா விளக்கி யிருக்கிறார்.

கண்ணோட்டம் என்னும் பழம் சொல்லுக்குக் கருணை என்பது பொருள் என இங்கே அறிந்து கொள்கிறோம்.

கற்பு இழந்த பெண்ணும், கண்ணோட்டம் இழந்த கண்ணும், ஈகையில்லாத மனிதனும், நீர் இல்லாத நிலமும், நேரே இருந்தாலும் நீசமான பாழே என்பதை இங்கே கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து கொள்கின்றோம்.

உண்ணும் சுவையுணர்ந்தும் ஓதலிலா நாப்போல
எண்ணில் பொருள்கண்டும் என்கொல்! பயன் இன்றே
புண்ணே எனப்படும் போந்தாருள் நோக்கறிந்து
கண்ணோட்டம் செய்யாத கண். (இன்னிசை 45)

வருந்தி வந்தவரது துயரைக் கண்ணால் அறிந்து பரிந்து உதவாவிடின் அது கண் ஆகாது; புண்ணேயாம் என இது குறித்துள்ளது. இந்தக் குறளை இவ்வாறு செவ்வையா விளக்கியிருக்கிறது. இதில் உரைத்துள்ள உவமை நயத்தை ஓர்ந்து உணர்ந்து கொள்க.

உலகப் பொருள்களைக் கண்டு வருவதால் மட்டும் நல்ல கண் ஆகாது; உயிர்களுக்கு இரங்கி யருளுவதே உண்மையான உயர்ந்த கண். அருள் தோய்ந்து வருகிற கண்ணே அதிசய மகிமைகள் வாய்ந்து வருகிறது.

பண்ணுக்கு வாம்பரித்தேர் ஆதபனும்
பணிந்துபசு பதியை நோக்கி
மண்ணுக்குத் தவம்புரியும் தனஞ்சயற்குக்
கோடையினும் மதியம் போன்ருன்;
எண்ணுக்கு வரும்புவனம் யாவினுக்கும்
கண் ஆவான் இவனே அன்ரோ!
கண்ணுக்குப் புனைமணிப்பூண் கண்ணோட்டம்
என்பதெல்லாம் கருணை அன்ரோ?
(பாரதம்: அருச்சுனன் தவம்)

இமயமலைச் சாரலில் நின்று அருச்சுனன் அருந் தவம் புரிந்தான். வருந்தி முயலுகிற அவனது நிலைமையைக் கண்டு சூரியன் பரிந்து இரங்கினான்; தனது வெப்பத்தைத் தணித்தான்; கோடைக் காலத்திலும் குளிர் மதியம்போல் இதம் புரிந்தான். அவ்வாறு செய்ததற்குக் காரணம் என்ன? உலகம் முழுவதுக்கும் கதிரவன் கண்; உண்மையான கண்ணுக்கு உரிய இயல்பு கருணை; ஆகவே அந்த நீர்மை அவனிடம் அங்கே சீர்மையாய் விளங்கி நின்றது. இப்பாட்டு சுவையாய்க் காட்டியிருக்கும் கருணைக் காட்சி கருதி யுணர வுரியது.

**கண்ணுக்குப் புனைமணிப் பூண் கண்ணோட்டம் என்பது எல்லாம் கருணை அன்றோ?** நாயனார் வாய்மொழியை இவ்வாறு எடுத்துக் காட்டிக் கண்ணோட்டம் என்னும் சொல்லுக்குக் கருணை என்று பொருளை நேரே விளக்கி விரித்துக் கவிஞர் உணர்த்தி யிருக்கும் வித்தகத் திறத்தைஉய்த்துணர்ந்து ஓர்ந்துஉவந்து கொள்கிறோம்.

கண்ணுக்கு அருள் அணியாம்; கைக்கு ஈதலே அணியாம்;
பெண்ணுக்குக் கற்பொன்றே பேரணியாம்—மண்ணுக்கு
நீதி ஒழுக்கம் நிறையறிவோடு அஞ்சாமை
ஆதியுடை வேந்தே அணி. (அணியறுபது)

கருணை கண்ணுக்கு அழகு; ஈகை கைக்கு அழகு; கற்பு பெண்ணுக்கு அழகு; அரசன் பூமிக்கு அழகு; நீதி ஒழுக்கம் நிறை அறிவு அஞ்சாமை முதலிய நீர்மைகள் அரசனுக்கு அழகு என்னும் இது ஈண்டு அறியவுரியது.

உரிய நீர்மைகள் மருவி வருவன பெருமை பெறுகின்றன; மருவாதன சிறுமை யுறுகின்றன.

புண் என்றது புண்ணிய நீர்மையின்றிப் புலை படிந்திருக்கின்ற அதன் புன்மை கருதி. பிறர் புண்பாடு கண்டு இரங்கியருளுவதே நலமான கண்; அவ்வாறு இரங்காதது புலையான புண்ணே.

கண்ணோடி அருள்பவன் விண்ணோடு புகழுடன் விளங்கி நிற்கின்றான். இது பாரிபால் தெரிய வந்தது.

**சரிதம்.**

மாரி அனைய சீரியன் என யாரும் புகழப் பேர்பெற்றிருந்த பாரி வள்ளல் ஒரு நாள் தேரில் ஏறி உல்லாசமா உவவனம் சென்றான்; அங்கே அழகிய பல இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தான்; அவ்வாறு பார்த்து வருங்கால் ஒரு மெல்லிய நல்ல முல்லைக்கொடி காற்றில் கடிது அசைந்தது; அலைந்து குலைந்து ஆடுகிற அதன் நிலையைக் கண்டதும் இவன் நெஞ்சம் இரங்கினான்; தான் ஏறிச்சென்ற மணித்தேரை அதன் அணித்தே நிறுத்தி அமைதியாய் அது படர்ந்து வளரும்

படி புரிந்து விட்டு ஊரைநோக்கி இவன் நடந்து சென்றான். ஓரறிவுடைய செடிக்கும் பேரருள் புரிந்து இவன் பெயர்ந்து போனகருணைக் காட்சியைக் கருதியுணர்ந்து யாவரும் இவனை வியந்து புகழ்ந்து உவந்து வந்தனர்.

நறுவீ யுறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் அருவி வீழும் சாரல்
பறம்பிற் கோமான் பாரி. (சிறுபாண்)

பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடாது ஆயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி. (புறம் 200)

முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும்,
தொல்லை அளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப!
அறிமடமும் சான்றோர்க் கணி. (பழமொழி 361)

ஊர்ந்துசென்ற மணித்தேரை ஒருமுல்லைக்
கொடிக்குதவி உவந்து மீண்டு
சார்ந்துவழி நடந்துவந்தான் தண்பாரி
முன்னாளில்; இந்நாள் இங்கே
ஆர்ந்தவுற வினரேனும் அடுத்துவந்து
தன்காரில் அமர்ந்தி ருக்க
நேர்ந்துவிட மாட்டாத நெடுநிலையர்
படுநிலையில் நிமிர்ந்துள் ளாரே.
(இந்தியத் தாய் நிலை 8)

நீர்மை சுரந்து முல்லைக்கொடிக்கும் உள்ளம் இரங்கி இவ்வள்ளல் உதவியுள்ளதை இவ்வாறு நூலோர் பலரும் வியந்து பாடியுள்ளனர். கொண்கன். மாகன் என இவன் காலத்திலிருந்த குறுநில மன்னர் வன்கண்ணராய் இழிந்து ஒழிந்தனர். கருணைக் கண்ணனை இவன் புண்ணிய சீலனையுயர்ந்து எண்ணரிய மேன்மைகளை எய்தி விளங்கினான். **கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டமே** என்னும் கருணை நிலையை உலகம் அறிய இக்குலமகன் நலமா உணர்த்தி யருளினான்.

**எளியர் மெலியர் எவர்க்கும் இரங்கி**
**அளிசெய் தருளல் அறம்.**

*யார்க்கும் இரங்குக.*

---

576 கண்ணோடார் மண்ணே.

**அன்றறைந்தார் மற்றோர் அரதத்தர் கண்ணோடிக்**
**குன்றுதேன் நின்றார் குமரேசா—என்றுமே**
**மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ**
**டியைந்துகண் ணோடா தவர்.** (சா)

இ—ள்.

குமரேசா! பிறர் இரக்கமின்றி இகழ்ந்தார்; அரதத்தர் ஏன் இரங்கி அருளினார்? எனின், கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர் மண்ணோடு இயைந்த மரத்து அனையர் என்க.

தண்ணளி யுள்ளதே கண் என்கின்றது.

நல்ல கண்கள் அமைந்திருந்தும் கண் ஓடி உள்ளம் இரங்காதவர் மண்ணோடு மருவிய மரம் போல்வர்.

உயிர்க்கு உரிய இனிய நீர்மை தோய்ந்து வரும் அளவே அந்த மனிதப் பிறப்பு சீர்மை வாய்ந்து சிறந்ததாய் உயர்ந்து வருகிறது.

அன்பு அருள் இரக்கம் என்பன எவ்வுயிர்க்கும் எவ்வழியும் இன்பம் சுரந்து வருவன. உள்ளத்தில் தண்ணளியுடையவன் உலகத்தில் புண்ணியவானாய்ப் பொலிந்து திகழ்கிறான், அகத்திலுள்ள கருணை கண்ணின் வழியே புறத்தில் வெளிப்பட்டுச் செயல்கள் ஆற்றுகிறது. அந்த அருட் செயல் அதிசயமாகிறது.

அல்லல் உறுபவர்களை நேரே கண்டும் உள்ளம் இரங்காமல் இருப்பின் நல்ல உயிர் நீர்மை இல்லாதவனாய் அவன் எள்ளப் படுகின்றான். கண்பார்வை ஓடிப்பாய்ந்த இடத்தில் உற்ற இடர்களை யுணர்ந்து உள்ளம் இரங்கி விரைந்து உதவிபுரிய நேர்வதே கண்ணோட்டமாய்க் கனிந்து கதிநலம் அருளுகிறது.

கண் ஓடாதவர் = கண்டு இரங்காதவர்.

கண்ணுக்கு அழகு காட்சி; காட்சிக்கு அழகு கருணை. இடரடைந்த பிராணிகளைக் கண்டபோது இரங்கியருள்பவன் உயர்ந்த மனிதன் ஆகிறான்.

வேள்வியில் பலி யிடுவதற்காக வேதியர் கோதி வைத்திருந்த பசுவை ஒருநாள் ஆபுத்திரன் கண்டான். அதன் நிலைமையை நினைந்து நெஞ்சம் இரங்கினான். யாருக்கும் தெரியாமல் இதமா அதனை அவிழ்த்து வெளியே விடுத்தான். அது தப்பிப் பிழைத்தது; அதன் உய்தியை உணர்ந்து அவன் உவந்து நின்றான். அவனது தண்ணளியை யாவரும் புகழ்ந்து போற்றினர்.

பசுவின் அலமரலைப் பார்த்தான் பரிந்து
நிசியில் நெகிழ்த்து விடுத்தான்;—கசிவுடைய
கண்ணோட்டம் கண்டார் களித்தார்; புகழ்ந்தாரே
விண்ணோட் டவரும் வியந்து.

மண்ணும் விண்ணும் மகிழக் கண்ணோட்டம் புரிந்த அவன் புண்ணிய முதல்வனாய்ப் பொலிந்து விளங்கினான்; பின்பு விண்ணுலகம் எய்தி விழுமிய தேவனானான்.

மலைச்சாரலில் ஒரு மயில் குளிரால் நடுங்கி நின்றது: அதனைப் பேகன் என்னும் வள்ளல் கண்டான். உள்ளம் இரங்கினான். தான் போர்த்திருந்த விலை யுயர்ந்த பட்டுச் சால்வையை அதன் மீது போர்த்தி யருளினான்.

மயில்அயர்வைக் கண்டு மனமுருகிப் பேகன்
உயர்போர்வை போர்த்தி உவந்தான்--இயல்பான
கண்ணோட்டம் உள்ளார் கருணையுயர் தாயர்போல்
எண்ணோடிக் காப்பர் எதிர்.

எல்லா உயிர்களையும் தன் உயிர்போல் மனிதன் எண்ணி ஒழுகும் புண்ணிய நீர்மையே **கண்ணோட்டம்** எனக் காண வந்துள்ளது. அந்த உண்மையை இங்கே கண்டு நன்கு தெளிந்து கொள்கிறோம்.

**கண்ணோடு இயைந்து** என்றது கண்ணின் இயல்பும் உயர்வும் ஓர்ந்துணர வந்தது. மனிதனுடைய வாழ்

வெல்லாம் கண்ணால் நடந்து வருகின்றன. அந்த வாழ்க்கை கண்ணியம் உடையதாய்ப் புண்ணியம் அடைவது எதனால்? நண்ணிய கண்ணோட்டத்தாலேயாம்.

உயிர்களுக்கு இரங்குகிற கண்களையுடையவன் உயர்கதி யடைகிறான்; உய்தி பெறுகிறான். மன்னு யிர்க்கு இரங்கி வரத் தன் உயிர் பொன்னுயிராய்ப் பொலிந்து வருகிறது.

குருடராயுள்ளவர் கண்ணோட்டம் இலராயின் அவர் குருட்டுத் தன்மையால் அது கூடவில்லை என்று பொறுத்துக் கொள்ளலாம். கண்ணிருந்தும் அதனைக் கொள்ளாதிருப்பவர் எண்ணவும் கூடாத ஓர் இழிவினரே யாவர்.

ஆறறிவுடையனாய்ச் சிறந்த மனிதப் பிறப்பில் பிறந்திருந்தாலும் கண்ணோட்டம் இல்லாதவன் ஓரறிவும் இல்லாத இழிந்த மண்ணே யாவன்.

கண்ணோட்டம் இல்லாத கண் புண்; மண்; கல்; மரம் என இன்னவாறு எள்ளி இகழப் படுதலால் இரக்கம் அற்ற மனிதருடைய இழிவான பழிப் புலைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம்.

மண்ணோடு இயைந்த மரத்து அனையர்.

கண்ணோட்டம் இல்லாதவரது இழிந்த புலைநிலைகளை இன்னவாறு உவமை காட்டி உணர்த்தியுள்ளார்.

மண்ணோடு இயையாவழி கட்டை குற்றி தறி எனக் கூறப்படுமே அன்றி மரம் எனப்படாது. மரம் எனத் தனியே கூறினும் மண்ணோடு இயைந்ததென்றே அது தெளியப்படும்; ஆயினும் அலைகடல் நிலைமலை என்பன போல அடைமொழி அதன் இயற்கையான நிலையினை விளக்கி இனம் துலக்கி நின்றது.

மரம் தரையில் முளைத்துக் கிளர்ந்து வளர்ந்து கிளைகளோடு நிறைந்து நின்றாலும் பிற வுயிர்களின் துயர்களைக் கண்டு இரங்கும் இயல்பு அதற்கு இல்லை.

மனிதன் உலகில் பிறந்து வளர்ந்து வாழ்ந்தாலும் கண்ணோடி இரங்கும் நீர்மை இல்லையானால் அவன் மனிதன் ஆகான். அவனது கண்ணும் கண் ஆகாது. காட்சியும் காட்சி ஆகாது. உருவத்தால் மனிதனைப் போல் தோன்றினாலும் உண்மையில் அவன் ஒரு மரமே.

நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம். (மூதுரை)

அறிவில்லாதவனை மரம் என்று இது குறித்துளது; அருள் இல்லாதவனை மண்மரம் என இங்கு அறிகின்றோம்.

வரக்கண்டு நாணாதே வல்லையான் நெஞ்சே!
மரக்கண்ணோ மண்ணாள்வார் கண் என்று—இரக்கண்டாய்
வாளுழுவை வெல்கொடியான் வண்புனல்நீர் நாடற்கென்
தோளழுவம் தோன்றத் தொழுது. (முத்தொள்ளாயிரம்)

தன் நெஞ்சை நோக்கி ஒரு தலைவி இவ்வாறு உரைத்துள்ளாள். பிரிவாற்றாமல் மறுகி யுழலுகிற எனது அவல நிலையை ஒரு சிறிதும் கருதாமல் வன்கண்ணராய் மன்னர் வராமல் நிற்கின்றார்; மண்ணுலகை ஆளுபவர் கண் மரக்கண்ணோ? என்று அவரை இரந்து வேண்டி விரைந்து கொண்டு வா! என்று வேண்டியிருக்கிறாள்.

இரக்கம் இல்லையானால் அந்த மனிதனது கண் மரக்கண்ணே என இது பழித்திருக்கிறது. மரத்திலுள்ள கணுக்களைக் கண் என்பது மாந்தர் வழக்கு.

மண்ணால் இயைந்த பாவைக்கும், மரத்தால்செய்த பொம்மைக்கும் கண்கள் அமைந்திருக்கும். ஆயினும் உயிர்க்குணம் ஆன அருள் இரக்கம் அவற்றில் இரா; ஆகவே கண்ணோடு இயைந்து கண்ணோடாத கண்ணுக்கு அந்த மண் மரங்களின் உருவங்களில் மருவியுள்ள கண்ணை உவமை கூறலாகாதோ? எனின், ஆகாது. ஏன்? மண்மாண் புனை பாவை என முன்னம் குறித்தது போல் இங்கு விரித்திலர் என்க.

எல்லாம் காணுகின்ற கண் தனக்கு நல்லதைக் காணாமையால் பொல்லாத மரம் எனப் புலையடைய நேர்ந்தது. உரிய பயன் ஒழியவே பெரிய பழி ஆயது.

பிறவிகளுள் மனிதப் பிறப்பு உயர்ந்தது; உறுப்புக் களுள் கண் சிறந்தது. அரிய பிறவியும் பெரிய கருவி யும் மருவி யிருந்தும் உரிய பயனை அடையாமையால் கொடிய பழி அடைந்து நெடிது இழிந்தது.

பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்என்ன கண்ணே?
கண் இமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே?
(சிலப்பதிகாரம் 17)

தெய்வத் திருவுருவைக் கண்டு மகிழாத கண் கண்ணோ? என்று இளங்கோவடிகள் இங்ஙனம் உரைத் துள்ளார். உயிர்களிடம் அருள் புரிந்து வருகிற கண் தன்னையுடையவனைப் பரம் பொருளின் திருவருளைப் பெறும்படி செய்கிறது. கண்ணோட்டம் உடைய கண் எண்ணரிய மேன்மைகளை எளிதே விளைத்தருளுகிறது. உரிய தண்ணளியை ஒழியவிடின் பெரிய பழிகள் பெருகி விடுகின்றன.

தன்நெஞ்சம் நினைப்பொழியாது அறிவிலிநான்
ஞானம் எனும் தன்மை பேச
உன்நெஞ்சம் மகிழ்ந்தொருசொல் உரைத்தனையே
அதனை உன்னி உருகேன் ஐயா!
வன்னெஞ்சோ, இரங்காத மரநெஞ்சோ,
இருப்பு நெஞ்சோ, வைரமான
கல்நெஞ்சோ, அலது மண்ணும் கட்டிநெஞ்சோ,
எனது நெஞ்சம் கருதில் தானே. (தாயுமானவர்)

வெள்ளம்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளம்தாழ் உறுபுனலிற் கீழ்மேல் ஆகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளம்தாள் நின்றுச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா!
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண் இணையும் மரமாம்தீ வினையி னேற்கே.
(திருவாசகம்)

இரக்கமும் உருக்கமும் பெருக்கமா இல்லையே என்று தம் உள்ளங்களைக் குறித்துத் தாயுமானவரும் மாணிக்கவாசகரும் இவ்வாறு மறுகி உருகி உரையாடி யுள்ளனர். பரிவுரைகள் கருதி யுணர வுரியன.

மரம் இரும்பு கல் மண்ணாங்கட்டி என இகழ்ந்திருக் கின்றனர். நெஞ்சம் கல்; கண் இணையும் மரம்; என எண்ணி இணைந்துள்ளமை ஈண்டு எண்ணியுணரவுரியது.

கண்ணோட்டம் இல்லாதவர் மண் கல் மரம் என எங்கும் புன்கண் படிந்து புலையுறுகின்றனர்.

மண் கண்ணுக்கும், மரம் மனிதனுக்கும், மரத்தின் அறிவற்ற சடத் தன்மை, மனிதனின் அருளற்ற மடந் தன்மைக்கும் ஒப்பாம்,

கண்ணுக்கு உரிய அருள் நீர்மையை இழந்த பொழுதே மனிதன் மருளனாய் இழிந்து படுகிறான்.

> கண்ணோடு இருந்தாலும் கண்ணோட்டம் இல்லானேல்
> மண்ணோடு கல்மரமே மானுமவன்—கண்ணோடி
> அன்பு புரிவான் அமரர் தொழுதேத்த
> இன்பம் உறுவான் இவண். (தருமதீபிகை 523)

கண்ணோடி அன்பு புரிபவன் விண்ணோடு புகழோடு விண்ணவனாய் இன்பம் நுகர்வான்; கண் இரங்காதவன் மனித உருவமாய் மருவியிருந்தாலும் மரம் கல் மண் என இழிந்து எவ்வழியும் பழியாய் அழிந்து படுவான் என்பதை இதில் தெளிந்து கொள்கின்றோம்.

கண்ணோடி அருள்பவர் புண்ணியர் ஆகின்றார்.

இவ் வுண்மை அரதத்தர் பால் அறிய நின்றது.

சரிதம்.

இவர் சோழ நாட்டிலே கஞ்சனூரிலே பிறந்தவர். அந்தணர். தந்தை பெயர் வாசுதேவர், சிறந்த அறிவும் நிறைந்த அருளும் இவரிடம் இயல்பாக அமைந்திருந் தன. வடமொழியில் பெரும் புலமை யுடையவர், எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் மிகவுள்ளவர். பறவை

முதலிய சிறிய பிராணிகளுக்கு இரைகளை யூட்டி அவை உண்டு மகிழ்வதைக் கண்டு மகிழ்பவர். பிதிரர்களுக்குப் பூசை புரிகின்ற சிரார்த்த தினத்தில் வேதியர் சிலர்க்கு இவர் விருந்து புரிந்தார். அப்பொழுது அங்கே ஒரு பிச்சைக்காரன் வந்து "ஐயா! சோறு" என்றான். உடனே விரைந்து அவனுக்குச் சிறந்த அன்னத்தை உவந்து கொடுத்தார். மறையவர் யாவரும் இவரை இகழ்ந்து வைதார். "ஆசார ஒழுங்குகளும் குலமுறை நியமங்களும் யாதும் தெரியாத பேதை" என்று நிந்தித்துப் பேரிடர்கள் செய்தனர். சினந்து சீறி அல்லல்கள் புரிந்த அவரை நோக்கி இவர் அமைதியாய் நல்ல அறிவுரைகளை நயமாய்க் கூறினார். உள்ளம் தெளிந்து உணர்வு ஒளிபெற இவர் ஓதிய அருள்மொழிகள் பொருள் பொதிந்து வந்தன.

> மண்டி மேல்வந்த நஞ்சினை அஞ்சியே மருண்டு
> பண்டு நொந்துவந் தடைந்தவர் பரிவம் நீங்க
> உண்டு கொண்டதை அமுதவர்க் குதவிய நீல
> கண்டனார் அருள் கண்டும்ஏன் கண்ணளி இழந்தீர்!

தேவர்களுடைய துயரங்களைக் கண்டு இரங்கிக் கொடிய நஞ்சை உண்டு யாவரையும் ஆதரித்தருளிய தேவ தேவனுடைய கண்ணோட்டத்தையும் அருள் நீர்மையையும் உணர்ந்தாவது கண்ணிரக்கம் கொள்ளாமல் மருளராய் இழிந்திருப்பது பெரிய மதிகேடே என்று வேதியரை நோக்கி இவர் இவ்வாறு வேதனையடைந்திருக்கிறார். கண்ணோடு இயைந்தும் கண்ணோட்டம் இல்லாமல் இருப்பவர் மண்ணோடு மருவிய மரமே அனையர் என்பதை இங்கே அறிந்து கொள்கிறோம். அளிக்கு ஒரு நிலையம் என ஒளி பெற்றிருந்த அரதத்தர் சரிதம் **சதுர்வேத சாரம்** என்னும் நூலில் விரிவாய் வந்துள்ளது.

**கண்ணுக்கு ஒளிபோல் கருணை அஃதின்றேல்;**
**மண்ணுக்கு இளிவே அது.**

அருள் அற்ற கண் இருள்.

577 கண்டான் அமர்முகத்தைக் கண்ணோட்டம் ஏன்மிகவும்
கொண்டான் அசோகன் குமரேசா—உண்டாகும்
கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். (எ)

(இ—ள்)

குமரேசா! போர்க்களத்தைக் கண்டவுடனே அசோக மன்னன் ஏன் கண்ணோட்டம் கொண்டான்? எனின், கண்ணோட்டம் இல்லவர் கண் இலர்; கண் உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல் என்க.

கொடிய குருடு தெரிய வந்தது.

கண் இரக்கம் இல்லாதவர் கண் இல்லாத குருடரே; கண் உடையவர் கண் ஓடி இரங்காமல் இரார்.

மனிதன் முகத்தில் கண்கள் அழகாக ஒளி அமைந் திருந்தாலும் அளி அமையவில்லையானல் அவை பழி யுடையனவாய் இழிவே அடையும்.

பலவகையான இனிய நிறங்கள் கண்ணில் அமைந் துள்ளன. வெண்மை கருமை செம்மை ஒண்மை முத லிய தன்மைகளால் கண் உருவாகியுளது.

வெண்மை கருமை விரிசெம்மை நீண்மைவனப்பு
ஒண்மை இவற்றேன் ஞெழித்தேனும்—கண்மையிணை
வையாது மாந்தர் மயில்போல் எனத்தனது
கையால் இறைவகுத்தான் கண். (பாரதம்)

மயிலின் தோகையில் அமைந்துள்ள கண்களை இது நயமாக் குறித்துள்ளது. கண்ணோடித் தண்ணளிபுரிந்து வருவதே மனிதனின் உயிர்க்கண்; கண்ணோட்டம் இல்லை யேல் அது மயிலின் மயிர்க்கண்ணே என்பதை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்கின்றோம்.

அருள் ஒளி இழந்தபோதே கண் இருளாய் இளி வுறுகிறது. உயிர்க்கு உறுதியான உய்தி நலனைச் செய்து கொள்ளாமல் ஊனம் அடைந்துள்ளமையால் உயர்ந்தோரால் இவ்வாறு இகழ்ந்து பழிக்கப்பட்டது.

அழகான கண் முகத்தில் இருந்தாலும் அல்லல் அடைந்தவர்களைக் கண்டபோது இரங்கி ஆதரித்து அருளவில்லையானால் அது பொல்லாத புலைக் குருடே.

இரக்கம் மனிதனைத் தெய்வம் ஆக்குகிறது; இரக்கமின்மை அரக்கன் ஆக்கி அதோகதியில் ஆழ்த்துகிறது.

உண்மையான கண் உடையவர் யார்? கண்ணோட்டம் உடையவரே, கண் இருந்தும் கடையான குருடர் யார்? கண்ணோட்டம் இல்லாதவரே.

அருளைப் பேணிவரும் அளவே மனிதப் பிறப்பு பெருமை அடைந்து வருகிறது. எவனுடைய காட்சியில் இரக்கம் கனிந்து இதம் சுரந்து வருகிறதோ அவனிடம் அதிசய மாட்சிகள் நிறைந்து வருகின்றன.

ஏமாங்கத நாட்டிலே இராசமாபுரியிலே வழக்கப்படி வசந்தகால விழா நடந்தது. நகர் அயலே யிருந்த குளிர் பூம்பொழிலில் யாவரும் உல்லாசமாய் விருந்துகள் அருந்தினர். அதுபொழுது அங்கு ஒரு நாய் புகுந்தது. புகவே பார்ப்பனர் அதனைத் தடியால் அடித்து விரட்டினர். அடியால் அது சாக நேர்ந்தது. அந்நாய்க்கு உரியவன் வேதியரைத் துன்புறுத்தி வேதனை விளைத்தான். காளைப்பருவத்தனை சீவகன் அதனைக் கண்டு இரங்கினன்; விரைந்து புகுந்து இதம் புரிந்தான்; மரணம் அடைய நேர்ந்த நாய்க்கு அரணமாய் ஒரு மந்திரத்தை ஓதி உய்ந்து போகச் செய்தான். அக்குலமகனுடைய அருள் நீர்மையை நோக்கி யாவரும் வியந்து புகழ்ந்தார்.

நல்வினை ஒன்றும் இலாதவன் நான்மறை
வல்லவர் தம்மை வருத்தலின், வல்லே
செல்சுடர் வேல்வல சீவக சாமிசென்று
அல்லல் அகற்றி அருந்துயர் தீர்த்தான். (1)

மீண்டவர் ஏகுத லும்விடை அன்னவன்
ஈண்டிய தோழரொடு எய்தினன் ஆகி
மாண்ட எயிற்று எகினம் மறம் இல்லது
காண்டலும் கட்கினி யான்கலுழ்ந் திட்டான். (2)

நாயுடம்பு இட்டுவண் நந்திய பேரொளிக்
காய்கதிர் மண்டலம் போன்றொளி கால்வதோர்
சேயுடம்பு எய்துவை! செல்கதி மந்திரம்
நீயுடம் பட்டு நினைமதி என்றான். (3)

என்றலும் தன்செவி ஓர்த்திரு கண்களும்
சென்றுகு நீரொடு செம்மலை நோக்கி
ஒன்றுபு வால்குழைத்து உள்ளுவப்பு எய்தலும்
குன்றனை யான்பதம் கூற வலித்தான். (4)

(சீவக சிந்தாமணி)

நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளை இதில் ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். அல்லல் அகற்றி அருந்துயர் தீர்த்தான்; காண்டலும் கலுழ்ந்திட்டான் என்றதனால் இவனது கண்ணோட்டத்தை அறிந்து கொள்கிறோம். சாகநேர்ந்த நாயின் துயரை நோக்கி இக்கோமகன் அழுதிருக்கிறான். உள்ளத்தின் பரிவு கண்வழியே வெளி வந்துளது.

பிற உயிர்களுக்கு இரங்கியருள்பவர் பெரியவர்களாய் உயர்ந்து பேரின்ப நிலைகளை அடைகின்றனர். சீவகருணை தோய்ந்துவரும் அளவு அந்த உயிர் தேசுமிகுந்து சிவமயமாய் வாய்ந்து வருகிறது.

எவ்வுயிரும் தன்உயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தை வைப்பது எந்நாளோ?
(தாயுமானவர்)

அப்பா நான் வேண்டுதல்கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்.
(அருட்பா)

உயிர்களுக்கு இரங்கியருள்பவர் தபோதனர்கள் ஆகின்றனர்; அந்த அருள் ஒழுக்கத்தைப் பேணி ஒழுக வேண்டும் என்று ஆண்டவனை நோக்கி மகான்கள் வேண்டியுள்ளனர். அந்த உண்மையை ஈண்டு துண்மையா ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம்.

காணுகின்ற காட்சியால் மனிதன் மாட்சி அடைந்து வருகிறான். அந்தக் காட்சியில் கருணை கனிந்துவரின் அவன் உயர்ந்த மேலோன் ஆகிறான். கருணை இல்லையானல் கடையனாயிழிந்து கதி இழந்து ஒழிகின்றான்.

கண்ணில் கயவர் கருத்துணர்ந்து கைம்மிக
நண்ணி அவர்க்கு நலன்உடைய செய்பவேல்
எண்ணி இடர்வரும் என்னர்; புலிமுகத்து
உண்ணி பறித்து விடல். (பழமொழி, 74)

கண்ணோட்டம் இல்லாத கீழ்மக்களுக்கு ஏதேனும் இதம் செய்ய நேர்ந்தால் இடரே வரும்; கொடியவரான அவரை அணுகவே கூடாது; அணுகின் அவலமேயாம்; என்பதை இதில் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம்.

புலியின் முகத்தில் ஓர் உண்ணி நண்ணி உதிரத்தைப் பருகிக் கொண்டிருந்தது; அதனை ஒருவன் கண்டு உள்ளம் இரங்கினான்; அந்தப் பூச்சியை எடுத்து விடுத்தான்; விடவே புலி அவனைக் கடுத்துப் பாய்ந்து கடித்து உதிரத்தைக் குடித்தது; அவன் உயிர்போய் மாய்ந்தான். இரக்கம் அற்ற கொலை பாதகருக்கு இரங்கலாகாது; இரங்கி இதம்புரிய நேரின் இறந்துபட நேர்வன் என்பதை இங்கே அறிந்து கொள்கின்றோம்.

உண்ணி = இரத்தத்தை உண்டு களிக்கும் ஒரு வகைப் பூச்சி. காரணப்பேர் கருதி யுணர வந்தது.

கண்ணோட்டம் இல்லாத பொல்லாத புலை மக்களைக் கண் இல் கயவர் என்று இவ்வண்ணம் இகழ்ந்தது ஏன்? எனின், மடமை இருள் மண்டிக் கொடுமை நீண்டுள்ள அவரது நீச நிலைமையை நினைந்து தெளிய என்க.

கண் இரக்கம் அற்றவர் மனித உருவில் மருவியிருந்தாலும் கொடிய மிருகமே; அருள் இல்லாத அவர் யாண்டும் அல்லலே அடைகின்றார்.

கண் ஓடி இரங்கிய அளவுதான் புண்ணிய நீரனாய் ஒருவன் பொலிந்து புகழ் மிகுந்து விளங்குகின்றான்.

இந்த உண்மை அசோகன்பால் அறிய வந்தது.

## சரிதம்.

மகத தேசத்து மன்னனான அசோகன் அதிசய விவேகன். பிந்துசாரன் என்னும் பேரரசனுடைய அருமைத் திருமகன். தாய் பெயர் சுபத்திராங்கி. உஞ்சை

யம்பதியும் பாடலிபுரமும் இவனுடைய இராசதானி களாயிருந்தன. இவன் ஆட்சிக்கு வந்தபோது நாட்டில் அரிய மாட்சிகள் பல காட்சிக்கு வந்தன. பல அரசர் களையும் அடக்கி ஆண்டமையால் சக்கரவர்த்தி என மிக்க புகழ் பெற்றான். கலிங்கதேசத்து அரசன் ஆகிய அமரகன் இவனுக்கு அடங்காமல் நின்றமையால் அவனை வென்று கொள்ள இவன் வீறுடன் எழுந்தான். சிறந்த போர் வீரனான அவன் யாதும் அஞ்சாமல் படைகளைத் திரட்டி அடலுடன் பொருதான். இருதிறப் படைகளும் நீண்டகாலம் மூண்டு போராடின. பல்லாயிரம் பேர் மாண்டு மடிந்தனர். முடிவில் இம் மன்னன் வெற்றி பெற்றான். போரில் மாண்டவர்களையும் மூண்ட கொலை களையும் நினைந்துநினைந்து இவன் நெஞ்சம் இரங்கினான். "இனிமேல் யாரோடும் எந்த வகையிலும் மாறுபட்டுப் போராடுவதில்லை" என்று உறுதியாகச் சபதம் செய்து கொண்டான். புத்தருடைய அருளுபதேசங்களை நாடு எங்கும் பரவச் செய்தான். இலங்கை சீனம் முதலிய தேசங்களுக்கும் போதகர்களை அனுப்பி யாண்டும் சீவ காருணிய ஒழுக்கங்களைப் பரப்பியருளினான். எவ்வழி யும் எவ்வுயிரும் செவ்வையாய் இனிது வாழ வேண்டும் என்று எங்கும் தண்ணளியே புரிந்து வந்தமையால் கருணாகரன், புண்ணியமூர்த்தி என்று வையத்தார் இவனை வாழ்த்தி வந்தனர். போரில் நேர்ந்த துயரைக் கண்டபின்பே கண்ணோட்டம் படிந்து இம்மன்னன் கதி காண நேர்ந்தான். **கண் ஓட்டம் இல்லவர் கண் இலர்; கண் உடையார், கண்ணோட்டம் இன்மையும் இல்** என் பதை இவ்வேந்தன் வாழ்வு மாந்தர் அறிய விளக்கி நின்றது.

வென்றியே அடைந்த போதும் வெஞ்சமர் முகத்தில் வீழ்ந்த
குன்றியல் அளவி லாத கொலைகளைக் கண்டு நெஞ்சம்
ஒன்றிநின் றுருகி நின்றான்; உறுதியாய் இனிமேல் யாண்டும்
வன்றிறல் புரியேன் என்றுவரைந்துயிர்க்கிரங்கிவாழ்ந்தான்.

அசோகன் சோகம் அடைந்து விவேகம் உடைய னாய்க் கண்ணோடித் தண்ணளி சுரந்து வாழ்ந்து வந்துள்

ளமையை இதனல் ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம்.

**காணும் துயர்க்கிரங்கிக் கண்ணீர் சொரியினவன்**
**காணும் உயர்வாம் கதி.**

பேரன்பு பேரின்பம்.

---

உலகின் உரிமை

578 சென்று சிதையாமல் சீவகனேன் கண்ணோட்டம்
குன்றுமல் செய்தான் குமரேசா—நின்ற
கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு. (அ)

இ-ள்.

குமரேசா! காரியம் கெடாமல் கண்ஓடி அருளிய சீவகனை ஏன் உலகம் உவந்து போற்றியது? எனின், கருமம் சிதையாமல் கண் ஓட வல்லார்க்கு இவ் உலகு உரிமை உடைத்து என்க.

நீதிமுறை பழுதுபடாமல் கண் ஓடி அருளவல்ல அரசர்க்கு இவ்வுலகம் உரிமை யுடையது.

கருமமும் கருணையும் கருத வந்தன.

கருமம் = கிரமமாகச் செய்யும் காரியம்.

அரசுக்கு உரிய நீதி முறைமையை இங்கே அது குறித்து நின்றது. வேந்து வினை விழுமிய நிலையது.

தனி மனிதன் கருமம் அவன் குடும்ப அளவில் நின்று விடும், அரச கருமம் நாடு முழுவதுக்கும் உரிமையாம் ஆதலால் அது யாதும் சிதையாமல் பாதுகாக்க வேண்டியது அரசுக்குப் பெரிய கடமையாம்.

சிதைதல்=குலைதல்; கெடுதல்; அழிதல்.

வல்லார்க்கு என்று வரைந்து கூறியது ஏன்? எனின், எல்லார்க்கும் இஃது எளிதில் அமையாது; வித்தக விவேகமான இவ்வன்மை உய்த்துணர்வுடைய சிலர்க்கே அரிதின் அமையும் என இதன் அருமை தெரிய வந்தது.

வினையாண்மை, மதியூகம், அதிசய ஆற்றல், சாதுரிய சாகசம், முதலிய சதுரப்பாடுகள் உடைய வேந்தனை மாந்தர் யாவரும் மகிழ்ந்து போற்றுவர்; போற்றவே அவன் ஏற்றம் மிகவுடையனாய் உலகம் முழுவதையும் ஆளும் தலைமையை அடைகிறான். அரிய குண நலன்களால் உயர்ந்தபோது அந்த அரசனுக்கு நாடு தனி உரிமையாய் இனிது அமைகிறது.

கண்ணோட்டம் சிறந்த நீர்மையே ஆயினும் அரச நீதிக்குப் பங்கம் நேராதவாறே அதனைச் சீர்மையோடு பேணி வர வேண்டும்; குல தருமத்தைக் குறிக்கோளோடு பேணி வருபவனே உண்மையான கோமகனாய் உயர்ந்து ஒளிமிகுந்து திகழ்கின்றான்.

குற்றம் செய்தாரைத் தண்டிக்காமல் விடுதலும், உறவினர் நண்பர் முதலாயினோர் குடி சனங்களுக்கு இடர் புரிந்தால் உடனே அவரை ஒறுத்து அடக்காமல் பொறுத்தலும், அரச நீதிக்கு அவலமாம். அவ்வாறான கருமக் கேடு நேராமல் கண்ணோடியருளி வருவதே அரச தருமமாம்.

பகைவரோடு போராட மூண்டு தேர் ஏறி விசயன் போர்க்களம் புகுந்தான். எதிரே அடர்ந்து நின்றவர்களைக் கண்டான். உறவினர்கள் யாவரும் மாண்டு படுவரே! என்று உள்ளம் இரங்கினான். கையிலிருந்த வில்லைக் கீழே போட்டான். எதிரிகளைக் கொன்று வென்று அரசு ஆளுவதினும் துறவியாய்ப் போவதே நன்று என்று துணிந்தான்.

மின்னே அனைய செல்வத்தை வேண்டித்
தங்கள் மெய்யுயிரைக்
கொன்னே கழிக்க நின்றவரைக் கொல்லத்
துணிந்த கொடு வினையேன்
என்னே! கொடிய பெரும்பாவம் எய்த
நினைந்தேன்; யானும் இவர்
முன்னே படைவிட்டு அமர் துறந்து நின்றால்
இவர்கள் முனிவாரோ?

இன்னவாறு எண்ணிச் சாரதியாயிருந்த கண்ணனிடம் கூறினன். கூறவே அந்தக் கருமவீரன் புன்னகை புரிந்தான். நன்னயமாய் இடித்து உரைத்தான்.

ஆயா தவர்க்கும் அலிகட்கும் அடுப்பது;
அழியாப் பழியுனது
தேயா அறிவைத் தேய்ப்பது அறச் சிறுமை
களிலே சிறுமையது;
சாயா நரகத்திடை சாய்ப்பது உன்போல்
பவர்க்குத் தகுதியன்று ஈது
ஏயா நிலத்தே உனை ஐயா! எவ்வாறு
அடைந்தது? என அறியேன். (பகவற்கீதை)

மகாவீரனும் மதியூகியுமான நீ பேடியும் மூடனும் போல் பேச நேர்ந்தாய்! இது உனக்குக் கொடிய பழி; நெடிய இழிவு; இருமையும் பெரிய சிறுமையாம். அரச தருமத்தை இறக்கச் செய்கின்ற இந்த இரக்கம் சுத்த வீரனை உன்னிடம் எப்படி வந்தது? என்று இப்படிக் கடிந்து மொழிந்து உறுதி யுண்மைகளைத் தெளிய உணர்த்தினன். அந்த உணர்வு நலன்கள் நிறைந்ததே கீதை எனப் பேர் பெற்று வேதத்தோடு ஒத்து விளங்கி வருகின்றது. கருமம் சிதைகின்ற கண்ணோட்டத்தை அரசன் யாதும் செய்யலாகாது எனக் கண்ணன் இங்கே கண்ணோடிக் காட்டி யிருப்பது கருதி யுணர வுரியது.

எங்கும் தண்ணளி புரிய நேரின் அந்த மன்னன் ஏமாளியாய் இளிவுற நேர்கின்றான். இடம் அறியாமல் செய்யும் இரக்கம் மடமையாய் இறக்கச் செய்யும்.

எள்ளும் பகைவர் எதிர்ந்தால் அவர்தலையைக்
கிள்ளி எறிதலே கீர்த்தியாம்; — உள்ளிமுன்
கண்ணோட்டம் கொள்ளின் கருதார் கருதாமல்
புண்ணோட்டம் கொள்வர் புகுந்து.

கருமம் சிதையாமல் கண்ணோடி வருவதே அரச தருமமாம் என இது குறித்துளது. பொருள் நிலைகளையும் குறிப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ளவேண்டும்.

எல்லை ஒன் றின்றியே இன்னுசெய் தாரையும்
ஒல்லை வெகுளார் உலகாண்டும் என்பவர்;
சொல்லின் வளாஅய்த்தம் தாணிழல் கொள்பவே
கொல்லையுள் கூழ்மரமே போன்று. (பழமொழி, 272)

அல்லல் செய்தவரையும் ஒல்லை வெகுளார்; தம் சொல்லாலேயே வளைத்துத் தம் அடியில் அமருமாறு அமைதி செய்து கொள்வர் என நல்ல அரசரது நாகரிக சாதுரிய வகையை இது நன்கு விளக்கியுளது.

கருமம் கருதித் தருமம் தழுவித் தண்ணளி புரிபவன் இருமையும் பெருமை மிகப் பெறுகின்றுன்.

இந்த உண்மை சீவகன்பால் தெரிய வந்தது.

சரிதம்.

மன்னன் மகன் என்று தன்னை யாரும் அறியாத படி கந்துக்கடன் என்னும் வணிகன் மனையில் சீவகன் வளர்ந்து வந்தான். வருங்கால் அந் நாட்டுள் காட்டு வேடர்கள் ஆயுத பாணிகளாய்ப் புகுந்து அடலோடு பசுக்களைக் கவர்ந்து போயினர். அரசை வஞ்சமாய்க் கவர்ந்து கொண்டு பட்டியாய் ஆட்சி புரிந்து வந்த கட்டியங்காரன் படைகளை ஏவினுன். அந்தக் கொள்ளைக்காரர் களோடு போராட முடியாமல் யாவரும் உள்ளம் உடைந்து மீண்டனர். இந்தக் கோமகன் அறிந்தான். வில்லும் கையுமாய் விரைந்து சென்று வேடரை வளைத் தான். ஐம்பதினுயிரம் பேர்களுக்கு மேல் வம்பராய் வந் துள்ள அவ் வெய்ய வேடர்கள் ஒரு பையன் என்று முதலில் எள்ளி இகழ்ந்து துள்ளி முனைந்து போராடி னர். இக் குலமகன் வில்லில் நின்று அம்புகள் புறப்பட்டு யாண்டும் இராமபாணங்கள் போல் மூண்டு பாயந்தன். வீர மாகாளியைத் தியானம் செய்து கொண்டு மந்திர முறையோடு பகழிகளை ஏவவே வேடர் யாவரும் வெருவி ஓடினர். ஒருவரையாவது கொன்று வீழ்த்தா மல் எல்லாரும் நெஞ்சம் அஞ்சி நிலைகுலைந்து ஓடும்படி சில வேதத்தின் திறலால் வென்று நிரைகளை மீட்டியரு ளினுன். இவனது மீட்சித் திறம் அரிய காட்சியாயது.

மால்வரைத் தொடுத்து வீழ்ந்த மணிநிற மாரி தன்னைக்
கால்இரைத் தெழுந்து பாறக் கல்எனப் புடைத்த தேபோல்
மேல்நிரைத் தெழுந்த வேடர் வெந்நுனை அப்பு மாரி
கோல்நிரைத் துமிழும் வில்லால் கோமகன் விலக்கினானே.

கானவர் இரிய வில்வாய்க் கடுங்கணை தொடுத்த லோடும்
ஆனிரைபெயர்ந்த; ஆயர் ஆர்த்தனர்; அணிசெய் திண்டோள்
தான் ஒன்று முடங்கிற் றென்று நிமிர்ந்தது சரம்பெய் மாரி
போனின்ற என்ப மற்றப் பொருவரு சிலையி னார்க்கே. (2)

ஐந்நூறு நூறு தலையிட்ட ஆறாயிரவர்
மெய்ந்நூறு நூறு நுதிவெங்கணை தூவி வேடர்
கைந்நூறு வில்லும் கணையும் அறுத்தான் கணத்தின்
மைந்நூறு வேற்கண் மடவார் மனம்போல மாய்ந்தார். (3)

வாள்வாயும் இன்றி வடிவெங்கணை வாயும் இன்றிக்
கோள்வாய் மதியம் நெடியான் விடுத்தாங்கு மைந்தன்
தோள்வாய் சிலையின் ஒலியால் தொறுமீட்டு மீள்வான்
நாள்வாய் நிறைந்த நகைவெண் மதிசெல்வது ஒத்தான். (4)

(சீவக சிந்தாமணி)

பொல்லாத வேடர்களையும் கொல்லாமல் அச்சுறுத்தி ஓட்டி ஆக்களை மீட்டி வெற்றி வீறுடன் இக்கோமகன் வந்துள்ள அருந்திறலாண்மையையும் பெருந்தகவையும் பேரருளையும் அறிந்து வியந்து நாடும் நகரமும் புகழ்ந்து போற்றின. உலகம் ஆளும் தலைமையும் இக்குலமகனுக்கு உரிமையாய் வந்தது. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு இவ்வுலகம் உரிமை யுடையது என்பதை இந்த அருளாளன் நேரே விளக்கி நின்றான்.

பொல்லாத கள்ளரையும் போர்முனையில் நேர்வென்று
கொல்லாமல் மீட்டினான் கோநிரையை—மல்லாரும்
திண்டோள் உயர்வீரச் சீவகன் சீரருளைக்
கண்டார் வியந்தார் கனிந்து.

**நீதி நெகிழாமல் நின்றருள்செய் வேந்தன்சீர்**
**ஓதி மகிழும் உலகு.**

முறையோடு அருள் புரிக.

———

579. கருணைப் பண்பு.

மண்டிவைத கண்ணரையும் மாளனத்தான் கண்ணோடிக்
கொண்டேன் பொறுத்தான் குமரேசா—தண்டி
ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. (கூ)

இ-ள்.

குமரேசா! தன்னை வைத கண்ணனுரையும் மாவளத்தான் ஏன் கண்ணோடிப் பொறுத்தான்? எனின், ஒறுத்து ஆற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப் பொறுத்து ஆற்றும் பண்பே தலை என்க.

அருளும் பொறையும் அறிய வந்தன.

தம்மை வருத்திவரும் இயல்புடையார் இடத்தும் இரக்கமுற்றுப் பொறுத்துவரும் இயல்பு உயர்வாம்.

ஒறுத்தல்=வருத்துதல்; துன்புறுத்துதல்.

உடம்பை ஒற்றி ஊறுபாடு புரிவது தேகதண்டனை; உள்ளத்தை ஒற்றி ஊறுபாடு விளைப்பது உயிர்வேதனை. ஒறுத்துவரும் திறம் உய்த்து உணர வந்தது.

ஒறுத்து ஆற்றும் பண்பினார் = பிறர்க்குத் துயர் செய்து ஆறுதலடையும் இயல்பினர். பண்பு என்றது இங்கே கெட்ட தன்மையைச் சுட்டி நின்றது. துன்பம் செய்வதையே இயல்பாகவுடைய வம்பரிடமும் அன்பு செய்து வருவது அதிசய இரக்கமாம்.

கண்=இடம்; ஏழன் உருபு.

கண்ணும் என்றதில் உம்மை அவர்மேல் கண்ணோட்டம் செய்யமாட்டாமைக்குக் காரணத்தை நேரே காட்டி நின்றது. அல்லல் செய்வார்க்கும் நல்லது செய்பவர் அரிய நீர்மையர் ஆதலால் அவரது பெரிய சீர்மை ஈங்குத் தெரிய நேர்ந்தது.

குற்றம் செய்பவர் எவராயினும் அவரை ஒல்லையில் ஒறுத்து அடக்குக; அவர்பால் கண்ணோட்டம் காட்டலாகாது: தயவும் தாட்சண்ணியமும் அரசநீதியைப்

பழுது படுத்தும் என முன்னம் குறித்தார். இங்கே ஒறுத்து ஆற்றுபவரையும் பொறுத்து ஆற்றுக என்கின்றார்; இது விருத்தம் அன்றோ? எனின், தன் குடிகட்கும் நாட்டுக்கும் இடர் இழைப்பவரை எவ்வழியும் செவ்வையாய் நாடி யாதும் கண்ணோடாமல் யாண்டும் ஒறுத்து அடக்குக என்று அங்கே உரைத்தார்; இங்கே தனக்குத் துன்பம் செய்துழி அவர்மேல் இரக்கங் கொண்டு பொறுத்தருளுக என்கின்றார் என்க. இருவகை நிலைகளையும் முறையே சீர்தூக்கி நோக்குக. அரச தருமங்களும் கருமங்களும் அரிய பல மருமங்களை மருவியுள்ளன.

மலர் தலை உலகினுக்கு உயிர் என நேர்ந்த அரசர்க்குத் தம் உயிரினும் தம் குலநீதி தலைமையாயுளது. அந்த உண்மையை உயர்குல அரசர்களின் சரித வரலாறுகள் துறைகள்தோறும் விளக்கி வந்துள்ளன.

தம் கருமம் சிதைய நேரின் நிருபர் பொறார்; தம் மருமம் சிதைய நேரினும் கண்ணோடிப் பொறுப்பர்.

நேரே கண்டு பழகினவர்பால் மண்டி வருகிற தயவும், ஆருயிர்களின் துயர்களை நோக்கி எழுகிற பேரிரக்கமும் கண்ணோட்டம் ஆம். ஆகவே வேகமாய் அது விளைந்துவரும் நிலைகளை உணர்ந்து கொள்கின்றோம்.

பயின்றவர் தம்மால் கூறப் பட்டன மறுக்க மாட்டா
இயன்றநற் குணம்கண் ணோட்டம்; இத்தகு
கண்ணோட்டம் தான்
முயன்றுசெய் முறைக்குக் கேடு முன்னுநர் மாட்டுக் கூடா;
நயந்தப நினைக்குத் தீங்கு நாட்டினர் தம்பால் நாட்டல்.
(விநாயக புராணம்)

கண்ணோட்டத்தின் உருவையும், உரிமையாய் அது மருவி வருகிற இடங்களையும் இது துலக்கியுள்ளது.

நன்றாகப் பொறுத்துவருபவன் என்றும் பொன்றாப் புகழை விரித்து வருகிறான். எண்ணோட்டம் சுரந்த இறை போல் கண்ணோட்டமும் பொறையும் கனிந்து நிறைந்துள்ளன. வெறுத்த நோக்கோடு தம்மை ஒறுத்து ஆற்

றுபவரைப் பொறுத்து ஆற்றுவது எவர்க்கும் அரிதாம், அரிய அதனை அமைதியாய்ச் செய்பவர் பெரியவராகின்றார்.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்: பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். (குறள் 156)

ஒறுத்தலை ஆற்றாது அடங்கிப் பொறுத்தலைப் போற்றி வருபவர்க்கு உளதாகும் உயர்நிலையை இதனால் உணர்ந்து கொள்கிறோம்.

கண்ணோட்டத்தோடு கலந்து வருகிற பொறை சிறந்த தவமாய் உயர்ந்து வருதலால் எண்ணரிய மகிமைகள் அதனால் விளைந்து வருகின்றன.

கண்ணுக்கு அணியான கண்ணோட்டம் உள்ளவன்
விண்ணுக்கு அணியான வேந்தனாய்—எண்ணுக்குள்
ஆய்ந்த அறநலன்கள் யாவும் அமைந்துகதி
வாய்ந்து வருவன் வளர்ந்து.

இதனை ஈண்டு ஓர்ந்து உணர்ந்து கொள்ளவேண்டும். கறுத்துவைதாரையும் மேலோர் பொறுத்தருளுவர்.

இது மாவளத்தான்பால் தெரிய வந்தது.

## சரிதம்.

இந்த இளவல் வளவர்கோன் வழியினன். நலங்கிள்ளி என்னும் மன்னன் தம்பி. நல்ல மதிமான், பல நூல்களையும் நன்கு பயின்று தெளிந்தவன். அருந்திறலாண்மையும் பெருந்தன்மையும் நிறைந்தவன். அமைதியும் அடக்கமும் அன்பும் பண்பும் இவனிடம் இயல்பாகவே இசைந்திருந்தன. தாமப்பல் கண்ணனார் என்னும் புலவரோடு ஒருநாள் இவன் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தான். அதில் மிக்க தேர்ச்சியுடையவன் ஆதலால் பலமுறையும் இவன் வெற்றியடைந்தான். அவர் தோல்வியடைந்து சோர்ந்து வந்தார்; "தங்கள் பாடல் அழகு இந்த ஆடலில் காணோமே!" என்று நட்பு முறையில் இவன் நயமாக் கூறினான். தோல்வியால் உள்ளம் நொந்து வந்த அவர் இந்தச் சொல்லைக் கேட்ட

தும் சினந்தார். "நீ யாருக்குப் பிறந்தாயோ?" என்று சீறி இகழ்ந்தார். அரசகுலத் தோன்றலான தன்னை இன்னவாறு இன்னலுற அவர் இழிமொழி கூறினும் இவன் பொறுமையுடன் பொறுத்தருள வேண்டினன். இவனது கண்ணோட்டத்தையும் தண்ணிய அமைதியையும் எண்ணி வியந்து கண்ணீர் மல்கி அந்தக் கவிஞர் நயமாக ஒரு கவி பாடினர்: அந்த அருமைப் பாட்டை உரிமையுடன் இங்கே காண வருகின்றோம்.

நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
கால்உண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரும் அருளக் கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித்து ஒரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக!
நேரார்க் கடந்த முரண்மிகு திருவின்
தேர்வண் கிள்ளி தம்பி! வார்கோல்
கொடுமர மறவர் பெரும! கடுமான்
கைவண் தோன்றல்! ஐயம் உடையேன்;
ஆர்புனை தெரியல் நின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்; மற்றிது
நீர்த்தோ நினக்குஎன வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவாய் என்னினும்,
நீபிழைத் தாய்போல் நனிநா ணினையே!
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காணும் எனக்
காண்டகு மொய்ம்ப! காட்டினை ஆகலின்,
யானே பிழைத்தனென்; சிறக்கநின் ஆயுள்
மிக்குவரும் இன்னீர்க் காவிரி
எக்கர் இட்ட மணலினும் பலவே. (புறம் 43)

"ஒரு பறவைக்காகக் கண்ணோடி இரங்கித் தன் உடலைக் கொய்து கொடுத்த கருணை வள்ளலான சிபிச் சக்கரவர்த்தி மரபில் பிறந்த அரசர் பெரும! அரிய போர் வீரர்களின் பெரிய தலைவ! பொறுக்க முடியாத

பொல்லாத சொல்லை உள்ளம் திரிந்து மதிகெட்டு நான் சொல்லிவிட்டேன்; எனது பிழையைப் பொறுத்து என்னை மன்னித்தருளிய உனது மன அமைதியையும் பெருந்தகவையும் எண்ணுந்தோறும் என் உள்ளம் உருகி வருகிறது; நீ நீடூழி காலம் இந்நில வுலகில் தலைமையோடு சுகமே இனிது வாழவேண்டும்என்று ஆண்டவனை நோக்கி நாளும் நான் வேண்டி வருகிறேன் என்று புலவர் வியந்து புகழ்ந்து இவ்வாறு வாழ்த்தியிருக்கிறார். **தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல்!** என்றது இக் கோமகனது பொறுமையின் பெருமையை விளக்கி வந்துளது. ஒறுத்து ஆற்றும் பண்பினர் கண்ணும் கண்ணோடிப் பொறுத்து ஆற்றும் பண்பே தலை என்பதை உலகம் இக்குல மகனிடம் நேரே கண்டு வியந்துள்ளது.

**பொல்லாங்கு செய்தவர் பாலும் பொறைபூண்பர்**
**நல்லார் இரங்கி நயந்து.**

எவரையும் பொறுத்து அருள்.

---

அரிய பெரிய கண்ணோட்டம்.

580 அன்றுபெய்த நஞ்சை அரனும் அங்கதனும்
குன்றுதேன் உண்டார் குமரேசா—நின்று
பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். (ய)

இ—ள்.

குமரேசா! அரனும் அங்கதனும் ஏன் பெய்த நஞ்சை உண்டார்? எனின், நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் பெயக் கண்டும் நஞ்சு உண்டு அமைவர் என்க

நயனும் நாகரிகமும் அறிய வந்தன.

யாவரும் நயந்து வருகிற அருள் நீர்மையை விரும்புபவர் நேரே பழகினவர் நஞ்சு இடினும் உண்டு கொள்வர்.

நயத்தல்=விரும்பல்; உவத்தல்.

பெய்தல்=இடுதல்; சொரிதல். பெய்ய என்பது பெய என எதுகைக்கு இசைந்து நின்றது.

நஞ்சு பெயக் கண்டும் = விடம் இடப் பார்த்தும். உம்மை அக்காட்சியின் மாட்சியைக் காட்டி நின்றது.

சிறந்த பண்பாடுகள் நிறைந்த சீர்மையான நீர்மையே நாகரிகம் ஆம். ஈண்டு அது கண்ணோட்டத்தைக் குறித்துக் கருத்தோடு விளங்கி நின்றது.

உண்மையான கண்ணோட்டம் உடையவரைச் சரியாக அளந்து தெளிந்து கொள்ளவுரிய கருவி இங்கே தெரிய வந்தது. அரிய பரிசோதனையால் பெரிய நீர்மையை உரிமையோடு அறிந்து கொள்கின்றோம்.

உயர்ந்தோரால் நயக்கத் தகாத நாகரிகமும் உலக வழக்கில் உண்டு ஆதலால் அதனை விலக்குதற்கு **நயத்தக்க** என்று நயமாக விசேடித்து உரைத்தார்.

ஆடை அணிகளால் தம்மை அலங்கரித்துக்கொண்டு மேனி மினுக்குடன் வெளிப் பகட்டாய்த் திரிந்து வருவதையே நாகரிகம் என்று பலர் இக்காலத்தில் நயந்து வியந்து உவந்து புகழ்ந்து வருகின்றனர்.

பண்டு உயர்ந்த அருள் நிலையில் வழங்கி வந்த சொல் இன்று இழிந்த மருள் நிலையில் இறங்கியுளது. அன்று **நாகரிகம்** குறித்துள்ளதும், இன்று அது குனித்துள்ளதும் கூர்ந்து சிந்திக்க வுரியன.

நாகரிகம் என்னும் நயச்சொல் அருள்நலத்தின்
பாகமாய் நின்றது பண்டின்று—மோகமிகு
காரியங்கட் கெல்லாம் கருத்தாய் எடுத்ததனை
வாரி இறைக்கின்றார் வந்து. (தருமதீபிகை 521)

நாகரிகம் என்னும் மொழி பழங்காலத்தில் விளங்கியிருந்த மேன்மையையும் இக்காலத்தில் வழங்கிவரும் பான்மையையும் இதனால் அறிந்து கொள்கிறோம். மையல் மயக்கங்களே வையக இயக்கங்களாயுள்ளன.

நகர வாழ்விலிருந்து நாகரிகம் வந்துளது.

நாகர் வாழ்விலிருந்து நாகரிகம் பிறந்துளது.

இவ்வாறு இந்தப் பேருக்குக் காரணம் கூறுகின்றனர். நாகர்=தேவர். சிறந்த பண்பாடுகளோடு உயர்ந்து வாழும் வாழ்வே நாகரிக வாழ்வாம்.

சதுரர் காமுகர் நாகரிகர் ஆகும். (பிங்கலந்தை)

நாகரிகரைப் பிங்கலர் இங்ஙனம் குறித்திருக்கிறார்.

நாகரிகம்=கண்ணோட்டம்; சாதுரியம்; சீர்மை; நீர்மை; பிலுக்கு; புதுமை; விநோதம். இன்னவாறு இது இன்று பொருள் விரிந்துள்ளது. அன்று தண்ணளி தோய்ந்த கண்ணோட்டத்தையே குறித்து நின்றது.

செயக்கடவ அல்லனவும் செய்துமன் என்பார்
நயத்தகு நாகரிகம் என்னும்?—செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோம் என்று தலைதுமிப்பான் தண்ணளிபோல்
எஞ்சாது எடுத்துரைக்கற் பாற்று. (நீதிநெறி 71)

தம்மால் இயலாத காரியத்தைச் செய்துதருவதாக முகதாட்சணியத்துடன் உறுதி கூறுபவரது இழிநிலையை இஃது இகழ்ந்துள்ளது. முடியாது என்று மறுத்துச் சொன்னால் மனம் நோகுமே என்று தலையை வெட்டிக் கொலை புரிபவனுடைய புலையான கருணையோடு இந்தக் கண்ணோட்டத்தை ஒப்புச் சொல்லலாம் என ஆசிரியர் இப்படி உள்ளம் நொந்து உரைத்திருக்கிறார்.

**நயத்தக்க நாகரிகம்** என்று குறித்த நாயனார் வாய்மொழியை இடையே மடுத்துப் போலியான தண்ணளியைக் கேலி செய்திருக்கிறார். சபலமான வஞ்ச நெஞ்சரது அவலநிலையை ஈண்டு அறிந்து வருந்துகின்றோம்.

நகையே அமையுமிந்த நாகரிக நோக்கு
மிகையே அனங்கன் வினைகொளல்வீண் அன்றே?
தகையேர் மதுரேசன் தண்தமிழ்நாடு அன்னீர் !
பகையேது உமக்கும் நமக்கும் பகர்வீரே !

(மதுரைக் கலம்பகம் 41)

புன்சிரிப்பாலும் பார்வையாலும் காதலை விளைத்துத் தன் உள்ளத்தை வருத்தி நிற்கும் தலைவியை

நோக்கி ஒரு தலைவன் உரைத்தபடி இது. **நாகரிக நோக்கு** என்று குத்தலாக் குறித்திருக்கிறான். கண்ணோடி இரங்கி அருளுவதே **நாகரிகம்**; அதனை விரைந்து செய்யாமல் வெய்ய வேதனையைச் செய்யலாமா? எனக் காதலோடு நோதலுழந்து நொந்து மொழிந்துள்ளான்.

பெருங்கண் கோட்டி விரும்புவனள் நோக்கி
நாணொடு நிற்கும் நனிநா கரிகம்
காணலென் ஆயின் கலங்கும்என் உயிர்என
உரப்போர் வென்றி உதயன குமரன்
இரப்போன் போல இனியோர்க் குறைகொள.

(பெருங்கதை 3-10)

தனது தலைவியின் நிலைமை நீர்மைகளை நினைந்து உதயணகுமரன் இவ்வாறு உருகி மறுகியிருக்கிறான். நாணொடு நிற்கும் **நனி நாகரிகம்** காணேன் ஆயின் கலங்கும் என் உயிர் என்றதனால் அவளது எழில் நிலை தெளிவாய்த் துலங்கி நின்றது. இதில் நாகரிகம் குறித்து நிற்கும் பொருளை அறிக.

கருணை கனிந்த கண்ணோட்டம் உடையவரே **நாகரிகர்** என்றதனால் அவ்வாறு இரங்கிக் கண்ணோடாத கொடியவர் அநாகரிகர் என்பது பெறப்பட்டது.

ஆக்கரிய மூக்கு உங்கை அரியுண்டாள் என்றுரை
நாக்கரியும் தயமுகனார் நாகரிகர் அல்லாரே;
மூக்கரிந்து நும்குலத்தை முதல்அரிந்தீர்! இனி உமக்குப்
போக்கரிது இவ்அழகை எல்லாம் புல்லிடையே உகுத்திரே!

(இராமா: சூர்ப்ப 125)

மூக்கு அறுபட்ட சூர்ப்பநகை இராமனை நோக்கி இவ்வாறு கூறியிருக்கிறாள். "என் மூக்கை அறுத்து விட்டார் என்று யாரேனும் போய் என் அண்ணனிடம் சொன்னால் அவருடைய நாக்கை உடனே அறுத்து விடுவானே! அவ்வளவு கொடிய கோபி; அவனுடைய கோபத்துக்கு ஆளான நீங்கள் குலத்தோடு இனி அழிந்தே போவீர்கள்; எவ்வகையினும் தப்ப முடியாது; என்னை நீங்கள் சேர்த்துக் கொண்டால் தப்பிப் பிழைக்கலாம்"

என இப்படி அச்சுறுத்தி ஆசையோடு பேசியுள்ளாள். இராவணன் மிகவும் பொல்லாதவன்; தயை தாட்சண்ணியம் யாதும் இல்லாதவன் என்பாள் தயமுகனுர் நாகரிகர் அல்லர் என்ருள். நயத்தக்க நாகரிகம் உடையவர் எத்தகைய நயனும் பயனும் உடையராயிருப்பர்! என்பதை இங்கே வியனு நன்கு உணர்ந்து கொள்கிருேம்.

கண்ணேட்டம் என்பது கருணைப் பண்பு உடையது. பழகினவர்பால் கிழமை புரிவது. எதிரே இருந்து நண்பர் நஞ்சிடினும் அதனை நெஞ்சம் உவந்து உண்டு கொள்ளும் படியான உரிமை அமைந்தது. அருள் நீர்மை நிறைந்த பெருந் தகைமைக்குச் சிறந்த அடையாளம் எது? நண்பர் நஞ்சு இடினும் உண்பது.

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்,
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்;
அஞ்சில் ஓதிஎன் தோழி தோள்துயில்
நெஞ்சின் இன்புருய் ஆயினும், அதுநீ
என்கண் ஓடி அளிமதி
நின்கண் அல்லது பிறிதுயாதும் இலளே. (நற்றிணை 355)

தண்ணளி புரிந்து தலைவியைத் தழுவிக்கொள்ள வேண்டும் என்று தலைவனிடம் தோழி இவ்வாறு வேண்டியுள்ளாள். நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் என்னும் இது இங்கே சிந்திக்க வுரியது. தேவர் வாய்மொழிக்கும், இதற்கும் உள்ள உறவுரிமைகளை ஊன்றி உணர்ந்து கொள்ளவேண்டும்.

**நஞ்சு பெயக்கண்டும்** என்பதற்கு உரிய எழுவாய் இதில் தெளிவாய் வெளியாகியுளது. தண்ணளியாளர் எவ்வழியும் கண்ணோடி இரங்குவர் என்பதாம்.

பால்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற்று அடக்கிய சிவனே! அடைக்கலம்;
அடங்கலும் அடக்கிடும் கடுங்கொலைக் காலனைக்
கால்எடுத்து அடக்கிய கடவுள் நின் அடைக்கலம்.
(பட்டினத்தார்)

கடலில் இருந்து எழுந்த கொடிய நஞ்சை உண்டும் காலனை அடக்கியும் சீவர்களுக்கு இரங்கிச் சிவபெருமான் அருள் புரிந்துள்ள நீர்மையைப் பட்டினத்தார் இவ்வாறு பொருள் புனைந்து பாராட்டி யுள்ளார்.

இருவர் மொழியும் கேட்டிகழா
இருக்கு வேதம் ஆங்கு எய்திப்
பருவ முகில்போல் நிறத்தோயும்
பங்கே ருகமேல் உறைவோயும்
விரியும் புவனம் அனைத்தினுக்கும்
கடவுள் அல்லீர்; விரிகடலில்
கருகும் விடம் உண்டு உமை அளித்த
கருணைக் கடலே முதலாவான். (கூர்ம புராணம்)

திருமாலையும் பிரமாவையும் நோக்கி ஆதி வேதம் இவ்வாறு ஓதியுளது. கரிய கொடிய விடத்தை உண்டு தேவர் யாவரையும் சீவகோடிகளையும் காத்தருளிய கருணைக் கடலான பரமனே முழுமுதல் கடவுள் எனக் குறித்திருப்பது இங்கே கூர்ந்து சிந்திக்கவுரியது.

விடம்கண்டு அஞ்சி விண்ணவர் நடுங்கி
அல்லல் உழந்த அவல நிலையைக்
கண்ணுதற் கடவுள் கண்டு கண்ணோடிக்
கண்ணீர் மல்கிக் காத்த காட்சியைக்
கண்மணி மாட்சியாக் காட்டும் இன்றே.

பிற உயிர்கள் துயர் உறக் கண்டால் கண்ணோடி அருளுவது நல்ல புண்ணிய நீர்மையாளர் இயல்பு. கண்ணுதல் கடவுள் கண்ணோடி யருளிய பொழுது தோன்றிய கண்ணீர்த்துளிகளே உருத்திராட்சங்கள் என்று பெயர் பெற்றுள்ளன என்னும் இது ஈண்டு எண்ணியுணரத் தக்கது. அக்கம்=கண். கண்ணோட்டத்தால் அழுதபொழுது அதிலிருந்து எழுந்த துளிகள் அக்க மாமணி என மிக்க மகிமையுடன் அமைந்துள்ளன.

பஞ்ச பாதகர் ஆயினும், பாவமே
தஞ்சம் ஆகச் சரிப்பவர் ஆயினும்,
நஞ்சு அயின்றவன் நாமம் உரைப்பரேல்

அஞ்சும் அஞ்சும் என் நெஞ்சகம் அஞ்சுமால்.
(உபதேச காண்டம்)

கருணையால் நஞ்சை உண்ட பரமனது திருநாமத்தின் மகிமையை இங்ஙனம் இது விளக்கியுள்ளது.

அண்டருக்கா நஞ்சு அருந்தி அம்பலத்தில் ஆடுசிவன்
தொண்டருக்குத் தொண்டன் எனத் தொண்டு செய்வது
எக்காலம்? (பத்திரகிரியார்)

எண்ணாது அமரர் இரக்கப் பரவையுள் நஞ்சை உண்டாய்!
(திருநாவுக்கரசர்)

வன்திரி புராதிபர்செய் வாதைதனை நோக்கி
அன்றுவிடை மேல்அரனும் அம்பிகையும் வந்து
வன்திறல் முராரிஅயன் வானவரை நோக்க
மென்துளிகள் முக்கணினும் வீழ்ந்தஎமர் வாழ.
(விருத்தாசலப் புராணம்)

தாயிழந்துவெம் பசித்தழல் அகம்சுடத் தழன்று
காயும் ஆதபம் புறம்சுடக் கானிடைக் கிடந்து
தீயும் ஏனமென் குருளைகள் தெருமர இரங்கி
ஆயு மாமுலை அளித்துயிர் அளித்தனம் அதனால். (1)

அளவில் ஆற்றலும் திறனும்நல் லரும்பெறற் கல்வி
விளைவும் ஞானமும் கிடைத்தனர் மீனவற் கினிமேல்
வளைவி லாதகோல் அமைச்சராய் வளம்பல பெருக்கிக்
களைவில் பாசம்நீத்து எம்பெருங் கணத்தவர் ஆவார் (2)
(திருவிளையாடல்)

அசுரர்களால் அமரர்கள் அடைந்த துயரையும், தாய் இழந்த பன்றிக் குருளைகளின் அலமரல்களையும் கண்டு சிவபெருமான் கண்ணோடி இரங்கி அருள் புரிந்துள்ளார். அந்த உண்மைகளை இன்னவாறு பல நூல்களும் நன்னயமாய் உணர்த்தியுள்ளன.

அண்டருக்கும் முனிவருக்கும்
அழலான கொடுவிடத்தைக்
கண்டமட்டும் நுகர்ந்திடவும்
கண்டமட்டில் கடவாதே. (அருணைக்கலம்பகம்)

பரமன் நஞ்சு உண்டு சீவகோடிகளைப் பாதுகாத்துள்ள பான்மையை இது மேன்மையா விளக்கி உளது.

கண்ணோட்டம் உடையவர் தமக்கு இடர் நேர்ந்தாலும் பிறர்க்கு இரங்கி இதம் புரிந்தருளுவர். இவ்வுண்மை அரன்பாலும், அங்கதனிடமும் அறிய வந்தது.

சரிதம்.

பாற்கடலில் இருந்து மண்டி எழுந்த ஆலகாலம் என்னும் கொடிய நஞ்சைக் கண்டு தேவர் யாவரும் அஞ்சி ஓடினர். சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர். பெருமான் ஆதரவு புரிந்தார். எல்லாரையும் ஒல்லையில் அழித்து ஒழித்து விடுவதாக உருத்துக் கறுத்துவந்த அந்த விடத்தை நோக்கிக் கையை நீட்டினர். நீட்டவே நெடிய கடு குறுகியது. கரிய சிறிய வுருவாய் உள்ளங்கையில் மருவி நின்றது. அனைவரும் வியந்தனர். அயலே எறிந்தால் மீண்டும் விரைந்து வந்து அது கொன்றுவிடும்; அதனை உண்டுவிட வேண்டும் என்று திருமாலாதியர் பெருமானை வேண்டினர்; வேண்டவே ஆண்டவன் உடனே உண்டு கொண்டார். அது கழுத்தளவில் நின்றது. நீலகண்டன்; கறைமிடற்றண்ணல்; நஞ்சுண்ட நாதன் எனக் கருணைக்கு அறிகுறியான பேர்கள் தோன்றின. நயத்தக்க நாகரிகம் உடையவர் பெயக் கண்டும் நஞ்சு உண்டு அமைவர் என்பதைப் பரமபதி பாரறிய விளக்கி நின்றார்.

காளக உருவுகொண்ட கடுவினை உண்கோ ? அன்றேல்
நீளிடை யதனிற் செல்ல நெறிப்பட எறிகோ? என்னு
வாளுறு மதிதோய் சென்னி வானவன் அருள அன்னுன்
தாளுற வணங்கி நின்று சதுர்முகன் முதலோர் சொல்வார்:()

ஐயநீ அன்றி யாரிவ் அனல்விட மாற்று நீரார்?
செய்யகைக் கொண்ட வாற்றல் சிறிதெனக் காட்டிற்றன்றே
வெய்யதோர் இதனை இன்னே விட்டனை என்னில் பின்னை
உய்வரோ யாரும்? இன்னே ஒருங்குடன் முடிந்திடாரே?()

முடிவிலா உனக்கே யன்றே முன்னுறு பாகம் எல்லாம்
விடமதே எனினும் ஆக வேண்டுதும் இதனை வல்லே
அடியரேம் உய்யு மாற்றல் அருந்தினை அருண்மோ என்னக்
கடிகமழ் இதழி வேய்ந்தோன் கலங்கலீர் இனிநீர் என்றான்.()

என்றனன் விரைவில் தன்கை ஏந்திய விடம்உட் கொள்ள
சென்றது மிடற்றில் அன்ன திறத்தினை யாரும் நோக்கி
இன்று எமதுயிர்நீ காத்தற்கு இங்கிது சான்ருய் அங்கண்
நின்றிட அருடி என்றே நிமலனைப் போற்றல் உற்ருர். (4)

போற்றலு மிடற்றில் எங்கோன் பொலன்மணி அணியது
[என்ன
மாற்றருந் தகைமைத் தான வல்விடம் நிறுவி அன்ஞர்க்கு
ஏற்றநல் அருளைச் செய்ய யாவரும் இறந்தே இன்று
தோற்றினராகும் என்னச் சொல்லரு மகிழ்ச்சி கொண்டார்.()
(கந்த புராணம்: ததீசி)

மால்எங்கே வேதனுயர் வாழ்வெங்கே இந்திரன்செங்
கோல்எங்கே வானோர் குடிஎங்கே—கோலஞ்சேர்
அண்டம்எங்கே அவ்வவ் அரும்பொருள்எங் கேநினது
கண்டம் அங்கே நீலமுருக் கால். (அருட்பா)

கண்ணுதற் கடவுள் கண்ணேடி யிரங்கி, கடல் நஞ்சை
யுண்டு விண்ணவரைக் காத்தருளி யுள்ள உண்மையை
இது வார்த்துக் காட்டியுள்ளது. நேர்ந்துள்ள நிகழ்ச்சி
கள் யாவும் ஓர்ந்து உணர்ந்து கொள்ள வுரியன.

சரிதம் 2.

அங்கதன் என்பவன் மகத தேசத்திலே வாருணம்
என்னும் நகரில் இருந்தவன். இராயசிங்கன் என்னும்
குறுநில மன்னன் மகன். தந்தை காலமானபின் அர
சுரிமையை இவனுடைய தமையன் அடைந்தான். பதுமா
வதி என்னும் மனைவியை மணந்து சிறந்த செல்வங்க
ளோடு இவன் தனியே வாழ்ந்து வந்தான். திருமாலி
டம் பேரன்புடையவன் ஆதலால் பாகவதர்களை எவ்வழி
யும் செவ்வையா உபசரித்து ஆதரித்து வந்தான். இவ
னிடம் விலையுயர்ந்த அரிய வயிர மணிகள் இருந்தன.
சகந்நாதத்தில் எழுந்தருளி யிருக்கும் பெருமானுக்கே
அவை உபயமாக உரிமை செய்யக் கருதியிருந்தான்.
அந்த மணிகளைத் தனக்குத் தரும்படி அண்ணன் கேட்
டான். இவன் மறுத்தான். அவன் கடுங்கோபி ஆதலால்
இவனைக் கொன்று விடக் கன்றி நின்ருன். உணவில்

நஞ்சை ஊட்டி விடும்படி சமையல்காரியிடம் அவன் சதி புரிந்தான். அவள் அவ்வாறே செய்தாள். இவன் அதை உண்ண நேர்ந்தபோது அவள் உள்ளம் கலங்கி "ஐயோ! அது நஞ்சு; உண்ண வேண்டாம்!" என்று தன்னை மறந்து கதறினாள். அண்ணன் எண்ணத்துக்குப் பின்னம் வரலாகாது என்று அதனை இவன் உண்டான். கண்ணன் அருளால் யாதொரு கேடும் இன்றிச் சுகமேயிருந்தான். இவனது பெருந்தகைமையையும் தெய்வத் திருவருளையும் அறிந்து தமையன் உள்ளம் உருகினான்; தான் புரிந்த புன்மையைப் பொறுத்தருளும்படி போற்றி வேண்டினான். தண்ணளி மிக்க இவனும் அண்ணனை அன்போடு தொழுது ஆர்வ உரைகள் ஆடியருளினான். நயத்தக்க கண்ணோட்டம் உடையவர், பெயக் கண்டும் நஞ்சு உண்டு அமைவர் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து வியந்தது.

**ஆன்ம இரக்கம் அதிசய இன்பமாய்**
**மேன்மை புரியும் மிகுந்து.**

நாகரிகனை யிரு.

---

இந்த அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

1. கண்ணோட்டம் அரசுக்கு அழகு.
2. அதனால் உலகியல் உளது.
3. கண்ணும் காட்சி யுறுகிறது.
4. மாட்சி மிகப் பெறுகிறது.
5. எழில் ஒளி மிகுகிறது.
6. கண்ணோடாதவர் மண்ணா யிழிகிறார்.
7. விழிகண் குருடராய்க் கழிகிறார்.
8. கருமம் சிதையாமல் கண் ஓடுக.
9. பொறுத்தருளல் பெருத்த தருமமே.
10. நயத்தகு நாகரிகம் நல்லருள் புரிதலே.

**௫அ-வது கண்ணோட்டம் முற்றிற்று.**

---

# ஐம்பத்தொன்பதாவது அதிகாரம்

## ஒற்றாடல்.

அ∴தாவது ஒற்றரை அரசன் ஆளும் திறம். ஒற்றர் ஆவார் பகைவர் உறவினர் முதல் எவரிடமும் சென்று அவரறியாவகை நின்று ஆங்கு நிகழ்ந்தவற்றை அறிந்து வந்து அரசரிடம் சொல்வோர். ஒற்றி அறிபவர் ஆதலால் ஒற்றர் என நேர்ந்தார். சாரணர் எனவும், வேவுகாரர் எனவும், உளவறிவோர் எனவும் இவர் கூறப்படுவர். கொடுங்கோன்மை ஒழிந்து, வெருவந்த செயல் இன்றிக் கண்ணோட்டம் உடையராய்ச் செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தர் அங்கங்கே நிகழ்வனவற்றைக் கூர்ந்து ஓர்ந்து கொண்டு ஆவன செய்தற்கு ஒற்றர் உற்ற துணையா யுள்ளனர். ஆட்சி புரியும் அரசர்க்குக் காட்சி புரியும் கண்ணாய் ஒற்றர் நிற்றலால் கண்ணோட்டத்தின் பின் இது இனமா வைக்கப்பட்டது.

அரசும் ஒற்றும்

581. ஒற்றரைமுன் கண்ணா உவந்தேன் விசயதரன்
கொற்றமுறக் கொண்டான் குமரேசா-உற்றறியும்
ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். (க)

இ-ள்.

குமரேசா! ஒற்றரை ஏன் கண் ஆக விசயதரன் உவந்து கொண்டான்? எனின், ஒற்றும் உரை சான்ற நூலும் இவை இரண்டும் மன்னவன் கண் தெற்றுஎன்க.

அரசுக்கு உரிய அரிய கண் அறிய வந்தது.

ஒற்றரும் ஒளி நிறைந்த நூலும் ஆகிய இந்த இரண்டும் அரசன் கண்கள் ஆகத் தெளிந்து கொள்ள வேண்டும்.

ஒற்று என்னும் அ∴றிணைச்சொல் அரசு அமைச்சு வேந்து என்பனபோல் உயர்திணைப் பொருளில்வந்தது. பால் விகுதி மறைந்து வருவதில் நிறைந்த பொருள் சிறந்து வருகிறது. நிலைமையை நினைந்து தெளிக.

ஒற்றி நின்று உலக நிகழ்ச்சிகளை உணர்ந்து வருப வர் ஒற்றர் என வந்தார். செவியே கண் ஆக உடைய அரசனுக்கு இவருடைய வாயுரைகள் உணர்வொளிகளை யூட்டி உறுதி நிலைகளைக் காட்டியருளுகின்றன.

யாண்டும் வெளியே போகாமல் அரண்மனையில் அமைதியாயிருந்து கொண்டே தன் நாட்டில் நடந்து வருகிற செயல் நிலைகளை ஒற்றர் வாயுரையால் வேந் தன் உணர்ந்து கொள்கிருன்.

நேரே தன் கண்ணுல் காணும் காட்சிகளைப்போல் காணுதவைகளையும் தெளிவாக ஒற்றன்மூலம் கண்டு கொள்ளுதலால் மன்னவனுக்கு அவன் கண் என நேர்ந்தான்.

எதையும் தெளிவாக் காணும் கண்ணைப்போல் எவற்றையும் நேரே கூர்ந்து நோக்கி ஓர்ந்து வந்து உரிமையோடு வேந்தன்பால் நயமாச் சொல்ல வல்ல வனே நல்ல ஒற்றன் ஆகின்ருன்.

எள்ளப் படுமரபிற் ருகலும், உள்பொருளைக்
கேட்டு மறவாத கூர்மையும், முட்டின்றி
உள்பொருள் சொல்லும் உணர்ச்சியும், இம்மூன்றும்
ஒள்ளிய ஒற்ருட் குணம். (திரிகடுகம் 85)

பிறர் ஐயுருதபடி சென்று எதையும் கூர்மையாக் கேட்டு யாதும் மறவாமல் வந்து தன் அரசனிடம் தெள் ளிதின் உரைக்கும் திறம் உடையவனே ஒள்ளிய ஒற்ருள் என் நல்லாதனுர் இங்ஙனம் உரைத்துள்ளார்.

உரைசான்ற நூல் = ஒளி நிறைந்த நீதி நூல்.

உயர்ந்தோர் பலராலும் புகழ்ந்து போற்றப்பெற்ற பெருமை நிறைந்ததே உரைசான்றதாம். பலபேர் உரை சான்றது திருக்குறள். இத்தகைய வித்தகமான நீதி நூலே அரசுக்குக் கண்ணுய் நின்று எவ்வழியும் தெளிவாக நல்ல காட்சிகளைத் தருவதாம்.

நீதியும் ஒற்றும் நிகரிலாக் கண்ணு
நீணிலத்து அல்லவை ஒழித்தும்

வேதியர் தேவர் மெலிந்துளோர் வறிஞர்
　　மெலிவறக் குறைத்திறம் வினையும்,
ஓதரும் குடியும் உலப் பிலா நிதியும்
　　உயர்ந்திட அனுதினம் காத்தும்,
சூதினிற் பகைவர் திருவினைக் கவருஞ்
　　சூழ்ச்சியும் வினையமும் சூழ்ந்தும்.

(பிரமோத்தரகாண்டம்)

அரசன் கருதிச் செய்யவுரிய கடமைகளை இவ்வாறு இது குறித்துள்ளது. நீதியும் ஒற்றும் நிகரிலாக் கண்ணு என்றது இந்தக் குறளை எண்ணி வந்துள்ளது.

உளக்கண் நீதி நூலாக
　　ஒற்றே வெளிக்கண் எனவிடுத்து
விளக்கும் செயலால் மொழிதன்னுல்
　　வேண்டா சுற்றம் வினைஞரையும்
அளக்க மைந்த! ஒற்றுவது
　　ஐயுறுத உருவோடு
துளக்கம் இன்றி என்செயினும்
　　சோர்வி லாதது என அறிக. (விநாயக புராணம்)

அரசனுக்கு ஒற்றன் புறக்கண்; நீதிநூல் அகக்கண் என இது குறித்திருக்கிறது. ஒற்றர் ஆற்றவேண்டிய செயல் நிலைகளையெல்லாம் தெளிவாக இது விளக்கியுள்ளது. குறிப்புக்களைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

மன்னன் தனக்கு வலக்கண்ணே நீதிநூல்;
உன்னும் இடக்கண்ணே ஒற்றனே;— இன்ன
ஒளிவிழிக ளாலே உலகியல்கள் ஓர்ந்து
தெளிவது வேந்தன் திறம்.

அரச கருமங்களின் மருமங்களையும், அறிவாண்மைகளின் தருமங்களையும் காட்சி நிலைகளையும் ஆட்சி முறைகளையும் இதனுல் அறிந்து கொள்கிறோம்.

எல்லா உண்மைகளையும் அரசன் நேரே கண்டு கொள்ளுமாறு ஒற்றர் ஓர்ந்து கொண்டுவந்து சொல்லுவர் ஆதலால் அவனுக்கு அவர் கண் என நேர்ந்தனர்.

தங்கண்ணே அனைய ஒற்றர்
　　தனிமொழி வழிசார் சார்பால்
அங்கண்மா ஞாலம் காக்கும்
　　அரசர்க்குச் செவிகண் ஆமென்று

எங்கணும் பழமை யான
இயல்மொழி எழுந்த தன்றே;
இங்கவர் செயல்கள் சாரர்
இசைநெறி இயலும் எங்கும்.

உற்ற சாரர் காட்சியாக ஆட்சி நடந்து வருதலையும் அரசனது நிலைமைகளையும் இது காட்டியுள்ளது. சாரர்= ஒற்றர். சார்ந்து நின்று ஓர்ந்து வருபவர் என்பதாம்.

உடல் உறுப்புக்களுள் கண் எப்படி மனிதனுக்குச் சிறப்போ அப்படி அரசனுக்கு ஒற்றன் உரியவனுகிருன்.

தெற்று என்க=தெளிந்து கொள்ளுக. தேறுதல் என்பதன் அடியாக இது சேர்ந்து வந்துளது. ஒற்றரையும் நீதி நூலையும் உறுதித் துணையாக மருவி எவ்வழியும் செவ்வையாக ஓர்ந்து உணர்ந்து உரிமையோடு உலகைப் பேணி வர வேண்டும் என்று அரசுக்கு ஆணை கூறியுள்ளார்.

நீதி நூலை நன்கு ஓதி யுணர்ந்தும் ஒற்றரை உரிமையுடன் ஆதரித்தும் வருகிற அரசன் எங்கும் அதிசய மாட்சிகளை அடைந்து உயர்ந்து கொள்ளுகிருன்.

இவ்வுண்மை விசயதரன்பால் தெரியவந்தது.

சரிதம்.

இக்கோமகன் இராசராசன் என்னும் சோழமன்னன் பேரன். அம்மன்னன் மகளாகிய தருமவதியை இராசசிம்மன் என்னும் பாண்டியன் மணந்திருந்தான். அந்த வேந்தன் புதல்வனுய் இந்த ஏந்தல் பிறந்தான். மதுரையம்பதியில் வளர்ந்து வந்தான். வருங்கால் அவ்வளவனுக்கு ஆண்மகவின்மையால் இவ்வழுதி வேந்தனிடம் வந்து இக்குலமகனைத் தனது அரசுக்கு உரிமையாகத் தரவேண்டினுன். பாண்டியனும் பரிவுடன் தந்தான். ஈண்டிய உவகையுடன் இக்குமரனை அழைத்துக் கொண்டு அவ்வளவன் சென்றுன். உரிய பருவத்தில் இவன் அரசுரிமையை அடைந்தான். உபய குலோத்துங்கன் என்று உலகம் புகழ்ந்து வர அரச குல திலகமாய் இவன் ஒளி மிகுந்து விளங்கி வந்தான்.

அன்றிலங்கை பொருதழித்த அவனே அப்
பாரதப்போர் முடித்துப் பின்னை
வென்றிலங்கு கதிராழி விசயதரன்
என உதித்தான்; விளம்பக் கேண்மின்! (1)

தேவரெலாம் குறையிரப்பத் தேவகிதன்
திருவயிற்றில் வசுதேவற்கு
மூவுலகும் தொழநெடுமால் முன்னொருநாள்
அவதாரம் செய்த பின்னை. (2)

இருள்முழுதும் அகற்றும்விது குலத்தோன் தேவி
இகல்விளங்கு தபனகுலத்து இராச ராசன்
அருள்திருவின் திருவயிற்றில் வந்து தோன்றி
ஆலிலையின் அவதரித்தான் அவனே மீள. (3)

திங்களின் இளங்குழவி செம்மல் இவன் என்றும்
செய்யபரி திக்குழவி ஐயன் இவன் என்றும்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமும்
தனித்தனி உவப்பதோர்? தவப் பயனும் ஒத்தே.
(கலிங்கத்துப் பரணி)

இவனுடைய பிறப்பு இருப்பு சிறப்பு முதலிய நிலைகளை இதனால் ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். இவன் ஆட்சிக்கு வந்த பொழுது நாடு முழுதும் மகிழ்ச்சி அடைந்தது. **கருணாகரன்** என்னும் மதிமான் இவனுக்குத் தலைமை அமைச்சனாகவும் தளபதியாகவும் நிலவியிருந்தான். பராக்கிரமகேது, கலுளவேகன் என்பவர் ஒற்றர்களுள் தலைசிறந்து நின்றனர். எவ்வழியும் ஒற்றரை உய்த்துச் செவ்வையாக ஆய்ந்து வந்தமையால் இவனது ஆட்சி மாட்சியாய் நடந்து வந்தது. கலிங்கம் மராடம் முதலாகப் பலதேசத்து அரசரும் இவனுக்குத் திறை செலுத்தி வந்தனர். நீதிநூல் முறைவழியே ஒழுகி வந்தமையால் இவனது அரசு விழுமிய நிலையில் விளங்கி வந்தது. ஒற்றும் உறைசான்ற நூலும் மன்னவனுக்கு நன்னயமான கண்களாம் என்பதை உலகம் காண இவன் நன்கு உணர்த்தி நின்றான்.

**ஓர்ந்துவரும் ஒற்றும் உணர்வும் உயர்வேந்தின்**
**தேர்ந்தஇரு கண்ணும் தெளி.**

ஒற்றரை ஓம்புக.

அரசின் தொழில்

582 ஏனே உலகரியல் பெல்லாம் அறிந்துவந்தான்
கோனும்நன் மாறன் குமரேசா—ஆனமல்
எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில். (உ.)

இ-ள்.

குமரேசா ! எல்லாருடைய நிலைகளையும் நன்மாறன் ஏன் என்றும் அறிந்து வந்தான்? எனின், எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம் எஞ்ஞான்றும் வல் அறிதல் வேந்தன் தொழில் என்க.

எல்லா மக்களிடத்தும் நிகழ்கிற எல்லா நிலைகளையும் என்றும் விரைந்து அறிதல் அரசனது கடமை.

நிகழ்பவை = உளவாகும் செயல்கள்.

விரிந்த நிலமண்டலத்தை ஆளுகின்ற அரசன் அங்கங்கே நடக்கின்ற நிகழ்ச்சிகளை ஒல்லையில் அறிந்து உறுதி நலங்களை ஆற்றிவரும் அளவே ஆட்சிமுறை மாட்சியடைந்து வரும். ஆளுதல் என்பது ஆழமான பொருளை நீளமாக வுடையது.

ஒற்றர் அரசனுக்குக் கண்கள் என்று முன்னம் குறித்தார்; அந்த விழிகளைக் கொண்டு தெளிவாகக் காண வேண்டிய காட்சிகளை இதில் காட்டி யுள்ளார்.

வல் அறிதல் என்றது நாட்டு நடப்புகளை நாளும் வேந்தன் உறுதியாக விரைந்து அறிந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி நின்றது. வல் = விரைவு.

வல்லறி தீயே. புறம் 10
வல்லே கிளக்குவம். புறம் 126
வல்லே வருக. (பெருங்கதை 1-38).
வல்லே பண்ணுக. (சீவக சிந்தாமணி 265)

இவற்றுள் வல் குறித்து நிற்றலை அறிக.

அறிதல் வேந்தன் தொழில் என்றதனால் அவ்வாறு அறியாவிடின் அவனுக்கு அது பெரிய பழியாம் என்பது தெரிய வந்தது. சிங்காசனத்தில் எழிலோடு உல்லாச

மாய் வீற்றிருப்பது தொழில் அன்று; நாட்டில் எல்லா இடங்களிலும் நடக்கின்ற செயல்களைத் தினமும் நாடி அறிந்து குடிகளுக்கு எவ்வழியும் நன்மை புரிந்து வருவதே முடிவேந்தனுக்கு முதன்மையான தொழிலாம்.

பேரறிவுடைய சேர மன்னன் பருவம் எய்தி அரசுரிமையை அடைய நேர்ந்தபோது நெஞ்சம் அஞ்சினான்; பரந்த நில மண்டலத்தில் நிகழுகின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் சரியாக அறிந்து யாதும் பிழை நேராமல் அரசு புரிய வேண்டுமே! ஒற்றர்களால் மாத்திரம் உடனே உண்மைகளை முற்றும் அறிந்துகொள்ள முடியாதே! என்று பரிந்து இரங்கினான்; பரமபதியை நினைந்து உருகி மறுகினான்; "ஆண்டவா! எல்லாரும் எங்கும் உள்ளம் திறந்து உரையாடிவருகிற உண்மைகளை எல்லாம் நான் உணர்ந்து கொள்ளும்படியான அரிய வரத்தை எனக்கு நீ அருள வேண்டும். அத்தகைய தத்துவ நிலையைப் பெற்றபோது தான் குற்றம் நேராமல் நான் அரசு செய்ய முடியும்" என்று பரசிவேண்டினான். அவ்வாறே பரமனும் அருள்புரிந்தார். அதன் பின்னரே கழறிற்றறிவார் என்னும் பேரோடு அவன் அரசுபுரிய நேர்ந்தான்.

மேவும் உரிமை அரசளித்தே விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் ஈறில்லாத்
தாவில்விறலும் தண்டாத கொடையும்படை வாகனமுதலாம்
காவல் மன்னர்க்குரியனவும் எல்லாம் கைவந் துறப்பெற்றார்.
(பெரிய புராணம்)

இந்த மன்னன் இறைவனிடம் பெற்றுள்ள பேறுகளை இதில் உய்த்து உணர்ந்து கொள்கிறோம். யாவும் யாரும் கழிறினவும் அறியும் உணர்வை இவர் அடைந்து கொண்டது அதிசய பாக்கியமாய் விளங்கி நின்றது.

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவைகளை ஒல்லையில் அறிந்து கொள்ள வேண்டியது வேந்தன் தொழில் என்றும், அந்த அறிவை யுடையவனே நெறிமுறையே அரச நீதிகளை நேரே நடத்த வல்லவன் ஆவன் என்பதும் இங்கே தெளிவாய் நன்கு தெரிய வந்தன.

உயிரினங்கள் செய்கின்ற வினைகளின் அளவுகளை அறிந்து அவற்றிற்குத் தக்கவாறு உலக முதல்வனை இறைவன் பலன்களை அருளி வருகிறான். அதுபோல் நாட்டுக்குத் தலைவனை அரசன் மக்களுடைய செயல் இயல்களை அறிந்து தக்கவாறு முறை புரிய நேர்ந்துள்ளான்.

அரசனுக்கு இறை என்று பெயர் அமைந்திருத்தலால் தன் ஆட்சி முறைகளில் யாவும் குறைவறத் தெரிந்து எங்கும் நீதி நிலை கோடாமல் மாந்தரைப் பாதுகாத்து வரவேண்டியது வேந்தனது விழுமிய கடமையாம். அந்த உரிமையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவே **தொழில்** என்றார்.

தாய்அறி யாத சேய்இருந் தாலும்
தான்அறி யாதவர் இல்லை;
ஆயதன் மையினுல் அறவழி நிற்கும்
அறிஞரை அறிந்து அவர்க்குரிய
தேயஆ திக்கம் தந்துநன் னீதி
செலுத்திஎங் கணும்மருந் திணுக்கும்
தீயவர் இலர்என்று இசையுற அடக்கும்
திறலுளோன் பூதல வேந்தே. (நீதி நூல்)

வேந்தனுடைய நீர்மை சீர்மைகளை இது நன்கு விளக்கியுளது. தாய் அறியாத பிள்ளை இல்லை; அதுபோல் அரசன் அறியாதவர் நாட்டில் யாரும் இல்லை என்னும்படி எல்லாரையும் அவன் அறிந்திருக்க வேண்டும்; நாட்டு நடப்புகளை நாளும் நன்கு உசாவி அறிந்து எங்கும் செவ்வையாய் நீதி செலுத்துபவனே செங்கோல் வேந்தனுய்ச் சிறந்து திகழ்கின்றான்.

இவ்வுண்மை நன்மாறன்பால் தெரிய வந்தது.

### சரிதம்.

இந்த அரசன் பாண்டியர் குலக்குரிசில். சிறந்த மதிமான். பல கலைகளையும் தலைமையாகப் பயின்று தெளிந்தவன். நல்ல குண நீர்மைகள் இவனிடம் நன்கு அமைந்திருந்தன ஆதலால் **நன்மாறன்** என்னும் பெயர்

இவனுக்கு நயமாய் வந்தது. அறிவு ஆற்றல்களாலும் ஆட்சியின் மாட்சியாலும் இவன் காலத்திலிருந்த மன்னவர் எவரினும் இவன் முன்னவனாய் முதன்மை எய்தியிருந்தான். இவனுடைய பான்மை மேன்மைகளை வியந்து மருதன் இளநாகனார் என்னும் சங்கப் புலவர் உவந்து பாடியிருக்கிறார். அந்தப் பாட்டு அயலே வருகிறது.

ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற!
கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய
புகல்மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்;
அதனால், நமர்எனக் கோல் கோடாது
பிறர்எனக் குணம் கொல்லாது
ஞாயிற்று அன்ன வெந்திறல் ஆண்மையும்,
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்,
வானத்து அன்ன வண்மையும் மூன்றும்
உடையை ஆகி இல்லோர் கையற
நீநீடு வாழிய நெடுந்தகை! தாழ்நீர்
வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்
கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடுவாழ் எக்கர் மணலினும் பலவே. (புறம் 55)

மேரு மலையை வில்லாக் கொண்டு திரிபுரங்களை வென்று தேவர்களுக்கு அருள்புரிந்த நீலகண்டனது நெற்றிக் கண்போல் வேந்தருள்ளே மேலாய் விளங்கும் பூந்தார் மாற! புண்ணியத்தின் வழியே அரசின்மாட்சி கண்ணியமாய் வரும்; வெந்திறல் ஆண்மையும் தண்ணளியும் வண்மையும் உடைய நீ உன் ஆட்சியில்

ஏழைகள் யாரும் இல்லை என்னும்படி செய்து எல்லாரும் இன்பமாய் வாழுமாறு இதம் புரிந்து நீடூழி காலம் ஈண்டு நீ வாழவேண்டும் என்று புலவர் மன மகிழ்ந்து வாழ்த்தி யிருக்கிறார்.

இவ்வேந்தன் பலவகை நிலைகளிலும் தலைசிறந்து மாந்தர் யாவரும் மகிழ்ந்து வாழ்ந்து வர ஓர்ந்து இதம் புரிந்து இறைமாட்சியில் நிறைமாட்சி யுடையனாய் நிலவி யிருந்தான் ஆதலால் அறிஞர் பலரும் இவனை உவந்து புகழ்ந்துள்ளனர். புலவர் திலகர் ஆகிய நக்கீரர் இக் குலமகனைக் குறித்துப் பாடியுள்ள அழகிய பாடலை அயலே காண வருகிறோம்.

ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்,
கடல்வளர் புரிவளை புரையு மேனி
அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடி யோனும்,
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்,
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும், என
ஞாலம் காக்கும் கால முன்பின்
தோலா நல்லிசை நால்வர் உள்ளும்
கூற்றுஒத் தீயே மாற்றரும் சீற்றம்
வலிஒத் தீயே வாலி யோனைப்
புகழ்ஒத் தீயே இகழுநர் அடுநனை,
முருகுஒத் தீயே முன்னியது முடித்தலின்,
ஆங்காங்கு அவரவர் ஒத்தலின் யாங்கும்
அரியவும் உளவோ? நினக்கே; அதனால்
இரவலர்க்கு அருங்கலம் அருகாது ஈயா
யவனர், நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி ஓங்குவாள் மாற!
அங்கண் விசும்பின் ஆரிருள் அகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவும் குடதிசைத்

தண்கதிர் மதியம் போலவும்
நின்று நிலைஇயர் உலகமோ டுடனே. (புறம் 56)

ஞாலத்தைக் காப்பதில் தெய்வங்களைப் போலப் பலவகையிலும் சிறந்தவன்; கருதிய கருமங்களை முடிப்பதில் முருகக் கடவுளைப் போன்றவன்; இத்தகைய நீ சூரிய சந்திரர்களைப்போல் எங்கும் புகழ் ஒளி வீசி இவ்வுலகத்தில் நிலைத்து வாழ்வாயாக என்று இம்மன்னனை வாழ்த்தி யிருக்கிருர். பொருள் நிலைகளையும் குறிப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ளவேண்டும். நாட்டின் நிகழ்ச்சிகளை ஒற்றர் மூலம் நன்கு ஓர்ந்து நீதி முறையே ஆட்சி புரிந்திருக்கிருன். எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும் வல் அறிதல் வேந்தன் தொழில் என்பது இந்த ஏந்தலிடம் இனிது தெளிய வந்தது.

**மாந்தர் நிலைமைகளை மாருமல் ஓர்ந்துவரல்**
**வேந்தன் கடமை விதி.**

யாவும் ஆய்ந்து புரிக.

---

ஒற்றி உணர்க.

583 ஒற்றி அறியா உயர்கலிங்கன் பின்பேனே
கொற்றமின்றி நொந்தான் குமரேசா—சுற்றிவரும்
ஒற்றிஞன் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்த தில். (ங)

இ—ள்.

குமரேசா! ஒற்றரால் ஒற்றி உணராத கலிங்க மன்னன்பின்பு ஏன் கொற்றமிழந்து நொந்தான்? எனின், ஒற்றிஞன் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் கொற்றம் கொளக் கிடந்தது இல் என்க.

ஒற்றன் இல்லையேல் வெற்றி இல்லை என்கிறது.

ஒற்றராலே ஓர்ந்து உரிய பொருளை உறுதியாய் உணராத அரசன் வெற்றி கொண்டு விளங்கி நில்லான்.

பொருள் என்றது இங்கே நாட்டில் நிகழும் செயல் நிலைகளை. உலகச் செய்திகளை ஒற்றரால் முன்னதாக

உய்த்து உணர்ந்து கொள்பவன் ஆட்சிக்கு உரிய தன் காரியத்தை மாட்சிபெற முடித்துக் கொள்வன். கொள் ளவே எல்லா வகையிலும் காரிய சித்தியாளனாய் உயர்ந்து சீரிய நிலையில் அவன் சிறந்து திகழ்வன்.

கொற்றம்=வெற்றி.

பகைமையாய் மூண்டு எதிர்த்தவரைக் கொன்று பெறுவது கொற்றம்; கொல்லாமல் வென்று பெறுவது வெற்றி. கொல்லுதல் வெல்லுதல் என்பன பல்லுயிர் களையும் இனிது பாதுகாக்க நேர்ந்த அரசர்க்கு மரபு முறையாய் நெறியே வந்துள்ளன.

அரசனது காரிய சித்திக்குச் சீரிய ஒற்றன் உற்ற துணையாக அமைந்துள்ளான். அவனது உதவி மூண் டுற அமைந்த அளவே யாவும் நன்னயமா முடிந்துவரும்.

> ஒற்றினன் ஒற்றிப் பொருள் தெரிதல் முன்இனிதே;
> முற்றான் தெரிந்து முறைசெய்தல் முன்இனிதே;
> பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்
> வெற்றிவேல் வேந்தர்க்கு இனிது. (இனியவை 36)

இன்னமை நோமல் இனிமையாய் மன்னர் வாழ வேண்டுமானால் இன்னவாறு அரசை அவர் ஆளவேண் டும் எனப் **பூதம் சேந்தனார்** என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் நீதிமுறைகளைக் கூறியுள்ளார்.

ஒற்றினன் ஒற்றிப் பொருள் தெரிதல் என்றது நாயனார் வாக்கை முற்றும் ஒற்றி வந்துள்ளது. உண்மையை உய்த்து உணர்ந்து உற்றுள்ளதை ஓர்ந்து கொள்ள வேண்டும். கூரிய வெற்றிவேலைக் கையில் உடையனாயி னும் சீரிய ஒற்றன் இலனேல் அவ்வேந்தன் வீரிய விறலுடன் கொற்றம் கொள்ள இயலாது.

எதிரிகளுடைய அதிமருமமான இரகசியங்களை எல் லாம் ஒற்றன் மூலமாய் முழுதும் தெளிவாத் தெரிந்து கொள்ளுதலால் மன்னவன் வெற்றியாளனாய் விளங்கி நிற்கின்றான். ஒற்றாளன் நிலை இதனால் உணரலாகும்.

அருமறை காவாத நட்பும், பெருமையை
வேண்டாது விட்டொழிந்த பெண்பாலும், யாண்டானும்
செற்றம்கொண் டாடும் சிறுதொழும்பும், இம்மூவர்
ஒற்ருள் எனப்படு வார். (திரிகடுகம் 55)

மேலே குறித்த மூவகையாரும் இரகசியங்களை அயலாரிடம் இயல்பா வெளியிடுபவர். ஆகவே இவர் ஒற்ருள் எனப்படுவார் என இகழ்ச்சிக் குறிப்பில் இது குறித்துளது.

ஒற்றனுடைய இயல்பான செயலை இதில் அறிந்து கொள்கிருேம். மருவலரிடம் மருவியுள்ள மருமங்களை மருமமா அறிந்து வந்து அரச கருமங்களுக்குச் சாதகமாகப் போதனை செய்பவனே உண்மையான ஒற்றன் ஆகின்ருன். ஆகவே அவனது வினைவலி விளங்கி நின்றது.

இந்திரசித்து அதிரகசியமாய்ச் செய்த அரிய சதியை விபீடணன் ஒற்றி உணர்ந்து விரைந்து வந்து உரைத்த பின்பே இலக்குவன் வெற்றி மிகப் பெற்ருன்.

விபீடணன் ஒற்றன் ஆனது.

வண்டினதுருவம் கொண்டான் மானவன் மனத்திற்போனன்
தண்டலை இருக்கை தன்னைப் பொருக்கெனச் சார்ந்து தானே
கண்டனென் என்ப மன்னே கண்களால் கருத்தால் ஆவி
உண்டிலை என்னச் செய்த ஓவியம் ஒக்கின்ருளை.

ஒற்றி அறிந்தது.

வஞ்சனை என்ப துன்னி வானுயர் உவகை வைகும்
நெஞ்சினன் ஆகி உள்ளம் தள்ளுறல் ஒழிந்து நின்ருன்;
வெஞ்சிலை மைந்தன்போனன் நிகும்பலை வேள்வியானென்று
எஞ்சவில் அரக்கன் சேனை எழுந்தெழுந்து ஏகக் கண்டான்.

உற்றது உரைத்தது.

இருந்தனள் தேவி யானே எதிர்ந்தனென் என்கண் ஆர
அருந்ததிக் கற்பினுளுக்கு அழிவுண்டோ? அரக்கன் நம்மை
வருந்திட மாயம் செய்து நிகும்பலை மருங்கு புக்கான்
முருங்கழல் வேள்வி முற்றி முதலற முடிக்க மூண்டான்.

ஒற்றை வியந்தது

வீரனும் ஐயம் தீர்ந்தான் வீடணன் தன்னை மெய்யோடு
ஆர்வமும் உயிரும் ஒன்ற அழுந்துறத் தழுவி ஐய!
தீர்வது பொருளோ துன்பம்; நீயுண்டு தெய்வம் உண்டு
மாருதி யுண்டு நாம்செய் தவம்உண்டு மறையும் உண்டால்.

ஒற்றன் விரைந்தது.

என்றலும் இறைஞ்சி யாகம் முற்றுமேல் யாரும் வெல்லார்,
வென்றியும் அரக்கர் பாடே விடையருள் இளவ லோடும்
சென்றவன் ஆவி யுண்டு வேள்வியும் சிதைப்பன் என்றான்,
நன்றது புரிதிர் என்று நாயகன் நவில்வ தானான்.

(இராமா; மாயாசீதை)

ஒற்றின் திறம், ஒற்றி அறிதல், உற்றதை உரைத்தல், ஒற்றனை அரசன் வியத்தல், கொற்றம் கொள்ளுதல் முதலிய நிலைகளை இங்கே உய்த்து உணர்ந்து கொள்ளுகிறோம். கவிகளில் கனிந்துள்ள உணர்வு நலன்களை ஓர்ந்து நுகர்பவர் உள்ளம் வியந்து உறுதி உண்மைகளைத் தெளிந்து மகிழ்ந்து கொள்வர்.

ஒற்றன் அரசனுக்குக் கண்; உறுதியாய் உற்ற துணை; வெற்றி முதலிய விளைவுகளுக் கெல்லாம் அவன் மூலகாரணமாய்ச் சாலவும் சார்ந்துள்ளான்; அவனைச் சேர்ந்த வேந்தன் சிறந்து விளங்குவான் என்பதை ஈண்டு நேர்ந்துள்ள நிகழ்ச்சிகள் துலக்கி நிற்கின்றன.

கண்கண்ட காரியத்தைக் கைசெய்யும்; காவலற்குக்
கண்ணனை ஒற்றர்போய்க் கண்டுவந்து—திண்ணமுடன்
கூறுவதை ஓர்ந்து குறிக்கொண்டு செய்அரசே
வீறுடைய தாகும் விரிந்து.

இதனை ஈண்டு ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

உற்ற நிலைகளை ஒற்றரால் ஒற்றி அறியாமல் அயர்ந்திருக்கும் அரசன் கொற்றம் இழந்து குற்றம் உழந்து குறைகள் மிக அடைவான்.

இவ்வுண்மை அமரகன்பால் அறிய வந்தது.

### சரிதம்.

இவன் கலிங்க தேசத்து மன்னன், நல்ல கல்வியறிவுள்ளவன். அஞ்சாமையும் அருந்திறலாண்மையும் பெருந் தகைமையும் மானவீரங்களும் இவனிடம் இயல்பாய் மருவியிருந்தன. சேனைத் திரளாலும் செல்வச் செருக்காலும் மறுபுல மன்னர் எவரையும் இவன் மதியாதிருந்தான். மாறுபாடு மண்டி யாண்டும் வீறு கொண்டு மீறி யிருந்தமையால் **விசயதரன்** என்னும் சோழ மன்னன் இவன்மேல் பகைமை மண்டி நின்றான். வழிமுறையே செலுத்திவந்த திறையை நிறுத்தியிருந்தமையால் இவனை வென்று கொள்ள விரைந்து அவ்வளவன் உளவோர்ந்து வந்தான். காலம் இடம் கருதி வலி நிலைகளை அறிந்து போர்மேல் அவன் பொங்கி நிற்பதை யாதும் அறியாமல் இவன் அயர்ந்திருந்தான். பெரிய படைகளோடு **கருணாகரத் தொண்டைமான்** என்னும் சேனைத்தலைவன் வந்து இவன் நகர் அயலே பாசறை சமைத்துப் போருக்கு ஆயத்தமாய் நின்றான். படைகள் மூண்டு வந்துள்ள அந்த நிலைமையை ஊரார் ஓடி வந்து கூறினர். கூறவே இவன் கொதித்தெழுந்தான். தன்னுடைய சேனைகளை விரைந்து திரட்டும்படி தளபதிகளுக்கு உத்தரவிட்டான். உளம் மிக உளைந்து இவன் அப்பொழுது வீறோடு கூறிய வீரசபதம் இவனுடைய தீர தைரியங்களை நேரே தெளிவாக விளக்கி வந்தது.

அந்தரம் ஒன்று அறியாத வடகலிங்கர்
குலவேந்தர் அதிபன் வீரம்
வெந்தறு கண் வெகுளியினால் வெய்துயிர்த்துக்
கைபுடைத்து வியர்த்து நோக்கி. (1)

வண்டினுக்கும் திசையானை மதம் கொடுக்கும்
மலர்க்கவிகை அபயற்கு அன்றித்
தண்டினுக்கும் எளியேனோ எனவெகுண்டு
தடம்புயங்கள் குலுங்க நக்கான். (2)

கான் அரணும் மலைஅரணும் கடல் அரணும்
சூழ்கிடந்த கலிங்கர் பூமி

தான்அரணம் உடைத்தென்று கருதாது
வருவதும்அத் தணடு போலும்.

(கலிங்கத்துப்பரணி)

படைகள் போராட மூண்டு வந்துள்ளதை அறிந்த போது மானவீறுடன் இவ்வாறு சினந்து பேசியிருக்கிறான். வருவதை முன்னதாக ஒற்றி அறியாமல் இருந்தது மடமையாம் என யாரும் மறுக நேர்ந்தனர். அந்தரம் ஒன்று அறியாத கலிங்கர் குலவேந்தர் அதிபன் என்றதனால் நேர்ந்ததை ஒன்றும் ஓர்ந்து கொள்ளாமல் இவன் குன்றியிருந்திருப்பதைக் கூர்ந்து நாம் உணர்ந்து கொள்கிறோம். போர் மூண்டது; இருதிறத்திலும் பலர் மாண்டு மடிந்தனர். முடிவில் எதிரிவென்று கொண்டான்; இவன் தோல்வியடைந்து துயருழந்து நின்றான். ஒற்றினால் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் கொற்றம் கொள்ளாமல் குற்றமுற்று மறுகுவான் என்பதை உலகம் அறிய இவன் உணர்த்தி நின்றான்.

**உறுவ துணரான் உளவறியான் உற்றால்**
**பெறுவது பீழை பெரிது.**

உறுவதை ஓர்க.

---

ஒற்றின் திறம்

584 **ஓதியுயர் வீமனுய்த்த ஒற்றனேன் மற்றவரைக்**
**கோதறமுன் ஆய்ந்தான் குமரேசா—நீதி**
**வினைசெய்வார்சுற்றத்தார்வேண்டாதார்என்றாங்**
**கனைவரையும் ஆராய்வ தொற்று.** (சு)

இ-ள்.

குமரேசா! வீமனது ஒற்றனான சுவேதன் ஏன் பலரையும் பலவாறு ஆராய்ந்தான்? எனின், **வினை செய்வார் சுற்றத்தார் வேண்டாதார் என்று ஆங்கு அனைவரையும் ஆராய்வது ஒற்று** என்க.

ஒற்றன் ஆய்வை உணர்த்துகின்றது.

அரச காரியம் செய்வார் உறவினர் பகைவர் என்னும் இவர் யாவரையும் ஆராய்பவனே ஒற்றன் ஆவான.

வினை செய்வார் என்றது ஆட்சிக்கு உரிய கருமங்களைக் கருதிச் செய்பவர்களை. மந்திரிகள் தந்திரிகள் புரோகிதர்கள் தூதுவர்கள் முதலிய எல்லா வகையினரையும் ஒருங்கே இது குறித்து நின்றது. வினையாளர்கள் பலவகை நிலையினர் ஆதலால் அவரைத் தலைமையாக ஆராய வேண்டும் என்பது வைப்பு முறையால் தெரிய வந்தது. சுற்றத்தார் என்றது அரசனது உரிமையான உறவினரை.

பரம்பரையாய்ப் பக்கம் கிளைத்து ஒக்கல் எனச் சுற்றி யுள்ளவர் சுற்றத்தார் என நேர்ந்தார்.

**தம் சுற்றம்** எனவும் பாடம் உண்டு.

வேண்டாதார் என்றது பகைவரை.

வேண்டுபவர் நண்பர் ஆதலால் வேண்டாதவர் இவ்வாறு வேறுபட்டு நின்றனர். தாம் வேண்டாதார்; தம்மை வேண்டாதார் என இங்ஙனம் அவர் ஈண்டியுள்ளனர்.

ஒற்றர் இல்லையாயின் அரசனுக்கு வெற்றியில்லை என முன்னம் குறித்தார். இதில் அவருடைய ஆராய்வுகளையும் ஆதரவுகளையும் அறிய உணர்த்துகின்றார்.

ஆராய்வது ஒற்று என்றது அவனுடைய அறிவு ஆற்றல்களைச் சரியாக அறிய வந்தது. கூரிய நோக்கோடு ஆராய்ந்து காரிய சாதனைகளைச் செய்து வருபவனே சீரிய ஒற்றனாய்ச் சிறந்து வருகின்றான்.

நல்லதையும் கெட்டதையும் காட்சியால் கண்டு அறிவுக்கு உணர்த்தும் கண்ணைப்போல் எல்லாருடைய நிலைமைகளையும் தெளிவாக அறிந்து வந்து அரசனுக்கு இதமாக ஒற்றன் உணர்த்தி யருளுகின்றான்.

கண் எல்லா உறுப்புக்களுக்கும் தலைமையாய் நின்று எதையும் காண்பதுபோல் அரச அங்கத்தினருள்

ஒற்றன் மேலாய் நின்று அனைவரையும் விநயமா ஆராய்ந்து தெளிந்து கொள்கிறான்.

எதையும் கூர்ந்து ஓர்ந்து வேந்தனுக்கு உரிமையுடன் உண்மையை உரைப்பவனே நல்ல ஒற்றனாகிறான்.

இது சுவேதன்பால் தெரிய வந்தது.

## சரிதம்.

இவன் விதர்ப்ப தேசத்திலே சயபுரி என்னும் நகரில் இருந்தவன் வேதியர் மரபினன். வேதம் முதலிய கலைகளை ஓதியுணர்ந்தவன். மதியூகமும் சாதுரிய சாகசங்களும் உடையவன். அந்நாட்டு மன்னன் ஆன வீமன் இவனது மதிமாண்பை அறிந்து இவனை நண்புரிமையோடு பேணி வந்தான். வருங்கால் தனது அருமைத் திருமகளான தமயந்தியை நளன் பிரிந்து போனதை அறிந்து உளம் மிக வருந்தினான். அவளைத் தேடி வரும்படி ஒற்றர் பலரை உய்த்தான். யாண்டும் காணோம் என்று யாவரும் மீண்டனர். இந்த மறையவன் மாத்திரம் உறுதியோடு ஊக்கி முயன்றான். சேதி நாட்டு அரசனாகிய சுவாகுவின் அரண்மனையில் இருப்பதை யூகித்து அறிந்து அங்கு நேரே போனான். தமயந்தியைக் குறிப்பால் கண்டான்; அவளது பரிதாப நிலையைக் கண்டு பரிந்து அழுதான் அவளும் தெரிந்து தேம்பி அழுதாள். அவளது நிலைமை தலைமைகளை அரசிக்கு உணர்த்திச் சிவிகையில் ஏற்றித் தந்தையிடம் கொண்டு வந்து சேர்த்தான். ஒற்றர் யாவரும் செய்ய முடியாத அரிய செயலைச் செய்து முடித்த இவனை மன்னன் வியந்து மகிழ்ந்து புகழ்ந்து பரிசில்கள் பல தந்து வரிசைகள் மிகச் செய்தான்.

தரங்க வாரிதி சூழ்தரு தகைமைசால் உலகம்
ஒருங்கு தேடியும் காண்கிலர் உலப்பிலார் திரிய,
வரங்கொள் கேள்வியன் சுவேதன் என்றுரைக்கும் ஓர்மறையோன்
கருங்கட் பேதையைச் சேதிபன் மனைவயின் கண்டான். (1)

மாது கேட்டியிம் மடவரல் விதர்ப்பர்கோன் புதல்வி
காதல் நாயகன் நிடதர்கோன் காசினி முழுதும்
சூதினுல் இழந்து இவளையும் கானிடைத் துறந்தான்;
ஆதலால் இவள் தேடுளன விதர்ப்பகோன் அறைந்தான்.

தேண்டி எங்கணும் கண்டிலன் திருவைநின் மனையில்
காண்டல் செய்தனன் கன்னலிற் பழுத்தமென் மொழியாள்
மாண்ட பேரெழில் வாணுதல் வயங்கிய மறுவால்
ஈண்டுணர்ந்தனன் யான்என மறையவன் இசைத்தான். (3)

உரைசெய் மாற்றம் ஓர்ந்து உள்ளுயிர் உருகுறத் தழுவிக்
கரைசெய் வேலையில் கருந்தடங் கண்கள்நீர் உகுப்ப
எரிமணிப் பொலன் சிவிகையில் இருள்கனிந்து ஒழுகும்
விரைசெய்கோதையைவிதர்ப்பர்கோனகர்வயின்விடுத்தாள்.

கொள்ளை வண்டினம் கூட்டுணும் நறுமலர்க் கோதை
அள்ள லங்கருஞ் சேற்றிடை அரக்கிதழ் விரிந்த
வள்ள வாய்ச்செழுங் கமலமேல் மடவனம் துயில்கூர்
வெள்ள நீர்வயல் விதர்ப்பர்கோன் நகரமே யினளால். (5)

அழுத உண்கணும் அற்றமெல் ஆடையும் அலங்கல்
கழுமச் சூட்டுபு கைசெயாக் கருங்குழற் காடும்
விழியி னேக்கலும்விதர்ப்பர்கோன்வெய்துயிர்த்தயர்ந்தான்
தழுவி அன்னையர் உறுதுயர் சாற்றலாம் தகைத்தே? (6)

காட்டில் நள்ளிருட் காலையில் காவலன் நீத்த
தீட்டொணு எழில் தெரிவையைத் தேடினன் கொணர்ந்த
மூட்டு முத்தழல் முறைமையின் வளர்த்திடு சுவேதன்
வேட்ட யாவையும் கொள்கென அளித்தனன் வீமன். (7)

(நைடதம்)

நடந்துள்ள நிலைமைகளை இவை வரைந்து காட்டியுள்ளன. காட்சிகளைக் கருதிக் காண்பவர் இந்த ஒற்றனுடைய மாட்சிகளை யுணர்ந்து மகிழ்ந்து வியந்து கொள்வர். அனைவரையும் ஆராய்ந்து அரசுக்கு உதவி புரிபவனே உண்மையான ஒற்றன் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து நேரே தெளிந்து நின்றது.

**உற்ற அரசுக் குதவியாய் எவ்வழியும்**
**ஒற்றிவரல் ஒற்றுக் குரு.**

அரசுக்கு உதவுக.

ஒற்றன் உரம்.

585. உற்ற வுருவோ டுகாதேன் சுகசாரர்
கொற்றமுற்று நின்ருர் குமரேசா—முற்றும்
கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. (ரு)

(இ—ள்)

குமரேசா! சுகன் சாரன் என்னும் ஒற்றர் ஐயுருத உருவுடன் ஏன்? சென்ருர் எனின், கடாஅ உருவொடு கண் அஞ்சாது யாண்டும் உகாஅமை வல்லதே ஒற்று என்க.

ஒற்றர் இயல்புகள் உணர வந்தன.

யாரும் ஐயுருத உருவுடன் யாண்டும் அஞ்சாமல் யாதும் உரையாமல் நின்று அறிய வல்லவனே ஒற்றன்.

வல்லதே ஒற்று என்றதில் ஏகாரம் தேற்றமாய் வலியுறுத்தி நின்றது. இத்தகைய தன்மைகளும் வன்மைகளும் இல்லாதவன் ஒற்றன் ஆதற்கு உரியன் அல்லன்.

கடாஅ உருவு=சந்தேகம் உருத வடிவம்.

கடுத்தல் என்பதன் அடியாகப் பிறந்த எதிர்மறைப் பெயர் எச்சம் கடா என நின்றது. கடுத்தல் = ஐயப் படுதல்; சந்தேகித்தல்.

அனுமானமும் சங்கையும் சந்தேகம் ஆகும்
ஐயுறல் கடுத்தலும் அப்பெயர்க் குரித்தே. (பிங்கலந்தை)

கடுத்தல் ஒப்பு ஐயம் வேகம். (நிகண்டு)

கடுத்தலின் பொருள்களை இவை விளக்கியுள்ளன.

கடா எனவும், உகாமை எனவும் நின்ருல் வெண்பாத் தளை பிழையாம்; செய்யுள் ஓசையும் சிதையும் ஆதலால் அந்த வழுக்கள் நேராதபடி அளபெடைகள் இனமாய் அமைந்தன.

கடாஅ உருவொடு என்னும் இது பழங்காலத்து நடை; அடாஅ அடுப்பு, படாஅ பறை என்பன போலப் பெரும்பாலும் பயின்று வருவதில்லை.

கண்ணஞ்சா என்றது நேரசை மூன்று இணைந்து தேமாங்காய் என்னும் வாய்பாடு படிந்து வெண்சீராய் நின்றது. காய்முன் நேர் என்ற விதிப்படி நேரசையே வர வேண்டும்; அவ்வாறு வரவில்லை; தியாண்டும் என நிரை அசை நேர்ந்துள்ளது. இது வெண்பாத் தளை வகையில் பிழை அன்றோ? எனின், அன்று: என்னை? தி என்பது குற்றியலிகரம் ஆதலால் என்க.

ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம். (தொல்காப்பியம்)

தளைசீர் வண்ணம் தாம்கெட வரினே
குறுகிய இகரமும் குற்றியல் உகரமும்
அளபெடை ஆவியும் அலகியல் பிலவே.
(யாப்பருங்கலம்)

சீரும் தளையும் சிதையின் சிறியஇ உஅளபோடு
ஆரும் அறிவர் அலகு பெறுமை. (காரிகை)

இந்த இயல் விதிகள் இங்கே சிந்திக்க வுரியன.

உகாமை = உள்ளதை வெளியே சொல்லாமை.

உகுதல் = புறத்தே தள்ளுதல். இதன் அடியாகப் பிறந்து எதிர்மறையாய் இது வந்துள்ளது.

மறு புலங்களில் ஒற்று அறியச் சென்றபோது அங்கே பற்றிப் படுதுயர் செய்யினும் தான் உற்ற வகையை யாதும் உரையாமல் உறுதி பூண்டு உரமாய் நிற்பவனே தனக்கும் தன் அரசனுக்கும் மதிப்பையும் வெற்றியையும் மாண்புடன் விளைத்தவனாகின்றான்.

புறத்தே ஐயுறாத உருவோடு பொருந்தியிருப்பினும் அகத்தில் அச்சம் உடையனாயின் ஆதலால் பயன் இல்லை ஆதலால் அஞ்சாமையும், அஃது அமையினும் அடக்கம் இல்லாமல் பிதற்றுரையாடின் உற்ற பயன் முற்றும் இழந்து குற்றம் மிகும் ஆதலால் உகாமையும் ஒற்றனுக்கு உறுதியாக வேண்டும் என்பதை ஈண்டு உரிமையுடன் உரைத்துள்ளார்.

ஐயுறாத உருவு புறத்தே மெய்யை மருவியது.

அஞ்சாமை அகத்தே மனத்தைச் சார்ந்தது.

உகாமை வாக்கின் வழியது.

வாக்கும் மனமும் காயமும் ஒற்றனுக்கு எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பதை இங்கே நன்கு உய்த்து உணர்ந்து கொள்கின்றோம்.

அரிய மருமங்களை மருமமாய் அறிந்து வந்து உரிய அரசனிடம் உறுதியாய் உரைத்து வருபவர் ஒற்றர் ஆதலால்அவருடைய உரைகள் யாண்டும் உற்ற துணையாய் வெற்றிகளை விளைத்து வருகின்றன.

நாவலம் தண்பொழில் நண்ணார் ஒற்றுநம்
காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா;
அம்பணி யானை வேந்தர் ஒற்றே
தம்செவிப் படுக்கும் தகைமைய. (சிலப்பதிகாரம்: 25)

வேந்தர் செவியுள் விளங்க உரைத்து எவ்வழியும் வெற்றித் திறல்களைச் செவ்வையாக விளைத்து வருபவர் ஒற்றரே என இது விளக்கியுளது. ஒற்றரின் ஆற்றலும் உபகார நிலைகளும் ஈண்டு உய்த்து உணர உற்றன.

எவரும் ஐயுறாதபடி யாண்டும் புகுந்து எதையும் கூர்ந்து ஓர்ந்து தெளிந்து வருபவரே தேர்ந்த ஒற்றர்.

இது சுக சாரணர் பால் தெரிய வந்தது.

சரிதம்.

இந்த இருவரும் இலங்கை வேந்தனுடைய ஒற்றர்கள். அதிசய ஆற்றல்கள் உடையவர். கலங்கா நெஞ்சினர்; காம ரூபிகள். கருதிய இடத்தில் கருதியபடியே உருவங்களை மருவி மருமங்களை அறிய வல்லவர். இராமபிரான் படைகளோடு கடல்கடந்து வந்து இலங்காபுரியின் வடபால் பாசறை அமைத்திருந்தான். போர் மேல் மூண்டு வந்துள்ள அந்தச் சேனைகளின் நிலைமை தலைமைகளை அறிந்து வரும்படி இந்த ஒற்றர் இருவரையும் இராவணன் உய்த்தான். விரகுடன் இவர் விரைந்து சென்றார். குரங்குகள் போலவே வடிவம் கொண்டார்.

உள்ளே புகுந்தார். எல்லாவற்றையும் கூர்ந்து ஓர்ந்து ஆராய்ந்து வந்தார். வருங்கால் விபீடணன் இவரைத் தெரிந்து கொண்டான்: ஒற்றர்கள் என்று வானரத் தலைவரிடம் உற்றதை உரைத்தான். உரைக்கவே இவரைப் பற்றி எற்றி மாணைக் கொடியால் இறுகக்கட்டி இராமன் எதிரே கொண்டு போய் நிறுத்தினர். கள்ளம் யாதும் அறியாத அந்தக் கருணை வள்ளல் உள்ளம் இரங்கி "ஐயோ! இந்த வானரர் இருவரை ஏன் இவ்வாறு வருத்துகின்றீர்? இவர் என்ன பிழை செய்தனர்? ஒல்லையில் இவரை அவிழ்த்து விடுங்கள்" என்று பரிந்து கூறினர். கூறவே, "ஆண்டவா! இவர் வானரர் அல்லர்; அரக்கர்கள்; இராவணன ஏவிய ஒற்றர்கள்; இவன் பெயர் சுகன்; அவன் பெயர் சாரணன்" என்று வீடணன் விளக்கினன். விளக்கவே அவர் "அந்தோ! தரும மூர்த்தி! இவன் மிகவும் பொல்லாதவன்; இராவணனுடன் பிறந்த இத் தீயவன் நல்லவன்போல் நம்மிடையே வந்து நுழைந்து கொண்டான்; உட்பகைவனாய் உள்ளே இருந்து கொண்டே நமக்குக் கேடு செய்கிறான்; இவனை இப்பொழுதே கொன்று தொலைக்க வேண்டும்; இல்லையானால் வானரர்களாகிய எங்கள் எல்லாரையும்ஒழித்து முடிவில் உங்களையும் அழித்து விடுவான்; வீரமூர்த்தி! இரக்கம் பாராமல் இவனை விரட்டி விடுங்கள்!" என்று கண்ணீர் சொரிந்து கதறிப் புலம்பினர். புலம்பவே வீடணன் ஒரு விஞ்சை மந்திரத்தை உச்சரித்தான்: உச்சரிக்கவே ஒற்றர் இருவரும் அரக்கராய்ப் பழைய உருவம் மருவி நின்றனர். இராமபிரான் முதலாக அனைவரும் வியந்தனர். அதன்பின் அந்த வீரமூர்த்தி பரிவு கூர்ந்து இவர்க்கு அறிவு கூறி அனுப்பி யருளினர்.

கடாஅ உருவொடு கண் அஞ்சாது யாண்டும் உகாமை வல்லதே ஒற்று என்பதை இந்த வல்லவர்பால் உணர்ந்து எல்லாரும் வியந்து உவந்தனர்.

இற்றது காலம் ஆக இலங்கையர் வேந்தன் ஏவ
ஒற்றர்வந் துளவு நோக்கிக் குரக்கென உழல்கின்றாரைப்

பற்றினன் என்ப மன்னே பண்டுதான் பலநாட் செய்த
நற்றவப் பயன்தந் துய்ப்ப முந்துறப் போந்த நம்பி. (1)

பேர்வுறு கவியின் சேனைப் பெருங்கடல் வெள்ளம் தன்னுள்
ஓர்வுறு மனத்தன் ஆகி ஒற்றரை உணர்ந்து கொண்டான்;
சேர்வுறு பாலின் வேலைச் சிறுதுளி தெறித்த வேனும்
நீரினை வேறு செய்யும் அன்னத்தின் நீரன் ஆனன். (2)

கூட்டிய விரல்திண் கையால் குரங்குகள் இரங்கக் குத்தி
மீட்டொரு வினைசெய் யாமல் மாணையின் கொடியால் வீக்கி
பூட்டிய கையர் வாயால் குருதியே பொழிகின் றாரைக்
காட்டினன் கள்வர் என்னுக் கருணையங் கடலும் கண்டான்.

பாம்பிழைப் பள்ளி வள்ளல் பகைஞர்என்று உணரான் பல்
[லோர்
நோம்பிழை செயத கொல்லோ குரங்கென இரங்கி நோக்கித்
தாம்பிழை செய்தார் ஏனும் தஞ்சம்என் றடைந்தோர் தம்மை
நாம்பிழை செய்ய லாமோ? நலியலிர் விடுமின் என்றான்.

அகனுறப் பொலிந்த வள்ளல் கருணையால் அழுத கண்ணன்
நகனிறை கானில் வைகும் நம்மினத் தவரும் அல்லர்;
தகநிறை வில்லா உள்ளத்து இராவணன் தந்த ஒற்றர்
சுகன்இவன் அவனும் சாரன் என்பதும் தெரியச் சொன்னன்

கல்விக்கண் மிக்கோன் சொல்ல கருமன நிருதக் கள்வர்
வல்விற்கை வீர! மற்றிவ் வானரர் வலியை நோக்கி
வெல்விக்கை அரிதென்று எண்ணி வினையத்தால் எம்மை
[எல்லாம்
கொல்விக்க வந்தான் மெய்மை குரங்குநாம் கொள்க என்றார்

கள்ளரே காண்டி என்னு மந்திரம் கருத்துட் கொண்டான்:
தெள்ளிய தெரிக்கும் தெவ்வர் தீர்வினை சேர்த லோடும்
துள்ளியின் இரதம் தோய்ந்து தொல்நிறம் கரந்து வேறாய்
வெள்ளியோடு இருந்த செம்பும் ஆமென வேறுபட்டார். (7)

மின்குலாம் எயிற்றர் ஆகி வெருவந்து வெற்பின் நின்ற
வன்கணர் தம்மை நோக்கி மணிநகை முறுவல் தோன்றப்
புன்கணர் புன்மை நீக்கும் புரவலன் போந்த தன்மை
என்கொலாம்? தெரிய எல்லாம் இயம்புதிர்! அஞ்சல் என்றான்.
(இராமா: ஒற்றுக்கேள்வி)

சுகன் சாரணன் என்னும் பேருடைய ஒற்றர் இருவர் இலங்கை வேந்தனிடமிருந்து வானர சேனையுள் புகுந்து யாரும் ஐயுருதவாறு உளவுகள் அறிந்ததும், அவரது களவு நிலையை வீடணன் அறிந்து அவரைப் பற்றி எற்றியதும், இராமனும் அவரது மாய வஞ்சத்தை அறியாமல் மறுகி நின்றதும், பிறவும் இவற்ருல் அறிந்து கொள்கிறோம். கவிகளின் சுவைகளைக் கவனியுங்கள். ஒற்றர்கள் எத்தகைய திறலினர்! எத்துணை நிலையினர்! எவ்வளவு சாதுரிய சாகசங்களுடையவர்! என்பதை இங்கே உய்த்து உணர்ந்து கொள்ளலாம்.

**அறிய அரிய உருவோ டணுகி**
**உறுவ துணர்வதே ஒற்று.**

உளவறிவார் உளமறிவார்.

---

ஆயும் திறம்.

586. அன்றேன் பருணன் அனுமன் மறைந்தாய்ந்து
குன்ருமல் சென்ருர் குமரேசா—நின்று
துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினும் சோர்விலது ஒற்று. (சு)

இ-ள்.

குமரேசா! பருணுதன் அனுமான் எங்கும் கரந்து புகுந்து ஏன் ஆராய்ந்தார்? எனின், துறந்தார் படிவத்தார் ஆகி இறந்து ஆராய்ந்து என்செயினும் சோர் விலது ஒற்று என்க.

சாரர் தன்மை சோர்வின்மை என்கின்றது.

துறவிகள் தவசிகள் போல் வேடம் பூண்டு யாண்டும் புகுந்து ஆராய்ந்து யாது செய்யினும் அயராதவரே உயர்வான ஒற்றர்.

பிறர் ஐயுருத உருவோடு ஒற்றன் செல்ல வேண்டும் என்று முன்னம் உரைத்தார்; அந்த உருவ இனங்களுள் சில இங்கே தெரிய விளக்கினர்.

துறந்தார் என்றது உலக இச்சைகளை முற்றும் துறந்த மேலோரை. பற்று அற்றவர் ஆதலால் யாவரும் இவரை மதித்து மகிழ்ந்து துதித்து வருவர்.

படிவத்தர் = தவ ஒழுக்கம் உடையவர்.

உள்ளம் தூயராய் ஆன்ம அனுபவத்தில் படிபவர் அருந்தவராய் உயர்ந்து திகழ்வர் ஆதலால் படிமை யோர் படிவத்தர் என அவர் பாராட்ட நின்றூர்.

இறந்து = வரம்பு கடந்து.

எவரும் எளிதில் புகமுடியாத அரிய இடங்களி லெல்லாம் உறுதியுடன் புகுந்து அங்கு உள்ள நிலைகளை உற்று நோக்கி உய்த்து உணர்ந்து நேரே ஆராய்ந்து வருவது ஒற்றரின் கடமையாம். ஆகவே அவர்க்கு வேண்டிய வேட வடிவங்களும் வினைத்திறங்களும் இவ் வாறு உரிமையோடு தெரிய வந்தன.

தவ ஒழுக்கம் இல்லார் தவவேடத்தை மேற்கொள் ளல் அவமேயாகும்; அதனை ஒற்றர் உரிமையாக் கொள் வது குற்றம் ஆகாதோ? எனின், செங்கோல் மன்னர்க் குக் கண்போல் நின்று உண்மை காணும் கருத்துடன் ஆட்சிக்கு உறுதியுறச் சேறலின் அவர்க்கு அது குற்றம் ஆகாது; உற்ற ஒரு குணமே யாம் என்க.

துறவர் தவத்தர் போல் ஒற்றர் உருக்கொள்வது அவருடைய காரிய சித்திகளைக் கருதிக் கைகொண்ட வீரியமான கருமச் சூழ்ச்சிகளாய் விளைந்துள்ளது.

நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை விளைந்து வர அரசன் ஆட்சி புரிகிறுன்: அந்த ஆட்சிக்குக் காட்சியாய் நின்று மாட்சி புரிந்து வருவது ஒற்றரது உறுதியான உழைப்பே ஆதலால் அவருடைய தொழில் முறை களுக்கு வழிதுறைகள் இங்கே தெரிய வந்தன.

அரிய உருவை மருவி எதையும் ஒற்றர் துருவி அறிவர். அவர் செயல்கள் அதிசய மருமங்களுடையன.

இவ்வுண்மை பருணுதன்பாலும் அனுமனிடமும் தெளிவாக நேரே நன்கு தெரிய நின்றது.

சரிதம்.

பருணுதன் என்பவன் விதர்ப்ப தேசத்தினன். விசார சருமன் என்னும் வேதியன் புதல்வன். கூரிய நூலறிவும் காரிய விவேகமும் உடையவன். நாட்டில் அரசிழந்தும் காட்டில் மனைவியைப் பிரிந்தும் கலி வயத்தனாய் அயலிடங் கரந்து போன நள மன்னனைத் தேடி வரும்படி விதர்ப்ப தேசத்து வேந்தன் இவ் வேதியனை விடுத்தான். ஒற்றனை இவன் துறவி போலவும் தீர்த்த யாத்திரைவாசி போலவும் பல நாடுகளிலும் அவனை நாடி யலைந்தான். முடிவில் அயோத்தியை அடைந்தான். அங்குள்ள மன்னனை இருது பன்னனுடைய அரண் மனையுள் புகுந்து யாவும் ஆய்ந்து குதிரைச்சாலையில் சென்றான். வாகுகன் என்னும் பேரோடு உருமாறியிருந்தவனைக் கண்டான். யூகித்து நோக்கினான். அவனைப் பரிசோதிக்க விரும்பினான்:

"கானகத்தில் காதலியைக் கைவிட்டுப் போன ஒரு
மான மன்னன் இவ்வுலகில் வாழ்கின்றான்—கோனவனைக்
கண்டதுதான் உண்டோ? கருணையினால் நீர் எமக்கு
விண்டருள வேண்டும் விரைந்து."

இவ்வாறு இவன் விநயமாய் வேண்டவே அந்த ஆண்டகையின் கண்களிலிருந்து நீர் பெருகி வடிந்தது. அதைக் குறிப்பால் உணர்ந்து தெளிந்து மீண்டு வந்து மன்னனிடமும் தமயந்தியிடமும் கூறினான். பல ஒற்றர்கள் யாண்டும் அலைந்து பயனின்றி மீண்டனர்; இவன் மாத்திரம் மதியூகமாய்ச் சென்று உண்மையைத் தெரிந்து வந்தான்; ஆதலால் மிகவும் புகழ்ந்து அரசன் இவனுக்குப் பரிசில் பல வழங்கினான்.

ஓடரிக்கணாள் உரைத்தலும் ஒற்றரைக் கூவி
ஆடகப்பசும் பொலன்கழல் நளனை நீர் ஆய்ந்து
தேடி வம்மின்! என்று அரசர்கோன் திசைதொறும் செலுத்த
நாடினாரவர் நளிகடல் வரைப்பெலாம் நடந்தே. (1)

துருவும் ஒற்றரில் ஒருவன்மீண்டு அணங்கின்முன் தோன்றி
அரிவை மூதெயில் அயோத்திமா நகரினில் அடைந்தேன்
புரிக ருங்குழல் மனைவியைப் போக்கினன் புலம்பும்
ஒருவன் இவ்வுழி உண்டுகொல்? எனவினு வினுறல். (2)

ஓகை யோடெனக்கு ஒருவன் ஆங் குளங்கனிந்து உருகி
வாகை வெஞ்சிலை இருது பன்னற்குயர் மான்தேர்ப்
பாகன் கொய்யுளைப் பரியுளம் தேர்பவன் ஒருவன்
தோகையைப் பிரிந்து ஆரஞர் உழப்பவன் சோர்வான். (3)

அழலி லாதுண வமிர்தென அடுந்தொழில் புரிவோன்;
மழக ளிற்றினன் னடையினன்; வாகுவன் என்போன்;
எழுவு லாந்திணி தோளினன்; ஈங்குளன் என்ன
ஒழுகு பூங்கொடி மருங்குலாய்! உணர்ந்தனன் வந்தேன்.
(நைடதம்)

இந்த ஒற்றன் யாண்டும் மூண்டு புகுந்து முனைந்து ஆராய்ந்து காரிய சித்தியோடு மீண்டு வந்து உற்றதை உரைத்துள்ள வெற்றி நிலையை இவற்றால் அறிந்து கொள்கிறோம். ஒற்றன் ஒற்றியுள்ள நிகழ்ச்சிகளைக் கவிகள் சுவையாக் காட்டியுள்ளன. கருதிக் கண்டு கொள்க.

## சரிதம் 2.

இராமன் தம்பியுடன் மதங்கமலைச் சாரலில் நடந்து வந்ததைக் கண்டதும் சுக்கிரீவன் முதலிய வானரர்கள் அஞ்சி ஓடி ஒரு குகையுள் ஒளிந்து கொண்டனர். வாலியின் ஏவலால் அந்த வீரர் இருவரும் வில்லோடு வருகின்றனர் என்று கருதினமையால் அவ்வாறு மறுகி ஓடி அவர் மறைய நேர்ந்தனர். அனுமான் அவரை ஆற்றித் தேற்றினுன். தேற்றவே அவரது உண்மை நிலையை உணர்ந்து வரும்படி வானரவேந்தன் அனுமனை ஒற்றனுக அனுப்பினுன். அனுப்பவே இந்த மதியூகி சாலையின் அருகே சென்று ஒரு ஆலமரத்தின் மறைவில் நின்று பிராமணப் பிரமச்சாரி வடிவம் கொண்டு யாவும் கூர்ந்து நோக்கினுன். உறுப்புக்களைக் கண்டு குறிப்பினுல் அவரை இந்த மேதை ஓர்ந்து உணர்ந்து தேர்ந்து தெளிந்த திறங்கள் உணர்வின் ஒளிகளாய் நேர்ந்து வந்தன. சில அயலே காண வருகின்றன.

அஞ்சனைக்கு ஒருசிறுவன் அஞ்சனக் கிரியனைய
மஞ்சனைக் குறுகிஒரு மாணவப் படிவமொடு
வெஞ்சினத் தொழிலர்தவ மெய்யர்கைச் சிலையர்என
நெஞ்சயிர்த் தயல்மறைய நின்றுகற் பினில்நினையும். (1)

தேவருக்கு ஒருதலைவரா முதல் தேவர்எனின்
மூவர்மற் றிவர்இருவர்; மூரிவிற் கரர்இவரை
யாவர்ஒப் பவர்உலகின்? யாதிவர்க்கு அரியபொருள்?
கேவலத் திவர்நிலைமை தேர்வதெக் கிழமைகொடு? (2)

சிந்தையில் சிறிதுதுயர் சேர்வுறத் தெருமரலின்
நொந்தயர்த் தவரனையர் நோவுறச் சிறியர்அலர்
அந்தரத்து அமரரலர்; மானுடப் படிவர்மயர்
சிந்தனைக்கு உரியபொருள் தேடுதற்கு உறுநிலையர். (3)

தருமமும் தகவுமிவர் தனமெனும் தகையர்இவர்
கருமமும் பிறிதொர்பொருள் கருதியன்று; அதுகருதின்
அருமருந்து அனையதுஇடை அழிவுவந் துளதுஅதனை
இருமருங் கினும்நெடிது துருவுகின் றனர்இவர்கள். (4)

கதம்எனும் பொதுமையிலர்; கருணையின் கடலனையர்;
இதமெனும் பொருளலதுஓர் இயல்புணர்ந் திலர்இவர்கள்;
சதமன்அஞ் சுறுநிலையர்; தருமன்அஞ் சுறு சரிதர்;
மதனன்அஞ் சுறுவடிவர்; மறலிஅஞ் சுறுவிறலர். (5)

என்பன பலவும் எண்ணி இருவரை எய்த நோக்கி
அன்பினன் உருகு கின்ற உள்ளத்தன் ஆர்வத் தோரை
முன்பிரிந் தனையர் தம்மை முன்னினுன் என்ன நின்றுன்
தன்பெருங் குணத்தால் தன்னின் தானலது ஒப்பிலாதான்.

(இராமா: அனுமன் நட்பு)

அனுமான் ஒற்றன் நிலையில் உற்று நின்று இராம லக்குவரை ஊன்றி நோக்கி இவ்வாறு யூகித்து உணர்ந்துள்ளான். முதல் முதல் காண நேர்ந்த போது இத் தகைய காட்சிகள் தோன்றி யிருக்கின்றன. இந்த ஆறு கவிகளையும் பலமுறை படித்து நிலைமைகளை நேர்மையா யுணர்பவர் நெஞ்சம் கரைந்து நிற்பர். ஒரு மாணவப் படிவமொடு நின்று கற்பினின் நினையும்' என்றதனல் இவன் சென்று நின்று கண்டு தெளிந்துள்ள உண்மை களை நுண்மையா ஓர்ந்து கொள்கிறேம். துறந்தார் படி

வத்தராகி யாரையும் ஆராய்ந்து யாண்டும் சோர்வின்றி உணர்ந்து தெளிந்து வருபவனே மேலான ஒற்றன் என்பதை இவ் வீரன் விளக்கி நின்றான்.

**வேண்டுருவம் கொண்டு விரகுடன் ஒற்றிவரல்**
**ஆண்டகைமை யாகும் அது.**

*சாரர் சாதுரிய வீரர்.*

---

587. அறிந்து தெளிதல்

**வண்டுருவாய் வந்து மறைந்தறிந்தான் வீடணன்பின்**
**கொண்டான் தெளிவேன் குமரேசா—அண்டி**
**மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை**
**ஐயப்பா டில்லதே ஒற்று.** (எ)

இ-ள்.

குமரேசா! வீடணன் மறைந்து சென்று எதிரியின் வஞ்சத்தை அறிந்து ஏன் தெளிந்து வந்தான்? எனின், மறைந்தவை கேட்க வற்றாகி அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று என்க.

இரகசியங்களை மருமமாக் கேட்க வல்லவனாய் அறிந்த உண்மைகளைத் தெளிவா மொழிய வல்லவனே ஒற்றன்.

மறைந்தவை என்றது வெளியே தெரியாதபடி மருமமா வைத்துள்ள நிலைகளை. அரிய மருமங்களை முறையே அறிந்து வருவதே ஒற்றனது கருமமாம்.

அரசர்க்கு இயல்பாகவே பகைவர்கள் நேர்கின்றனர். எதிரிகள் புரிந்து வருகிற இரகசியங்களை எல்லாம் விரைந்து அறிந்து கொள்ள வேண்டியது வேந்தன் கடமையாம். அந்தக் கடமையை உரிமையோடு உறுதியாய்ச் செய்து வருபவர் ஒற்றர் ஆகின்றார்.

வற்று ஆகி=வல்லமை யுள்ளவனாய். ஒற்றனுக்கு வன்மை எது? பிறருடைய அரிய மறைகளை உற்றுக் கேட்டு உணர்ந்து வெற்றியுடன் மீண்டு வரும் ஆற்றல்.

பிறர் மறையின் கண் செவிடாய் இருத்தல் வேண்டும் என்பது அறநூல் விதி. மறைந்தவை கேட்க என்றது அதற்கு நேரே மாறும்.

மாற்றலர் மருமங்களை ஒற்றர் மூலம் உய்த்துணர்ந்து கொள்வது அரச தருமம் ஆதலால் அந்தப் பொது விதியை இங்கே பொருத்தலாகாது.

வேய் என்று ஒற்றருக்குப் பெயர். எங்கும் போய் எதையும் ஆய்பவர் என்பது அதன் பொருள்.

> தாய்தெரிந்து உலகம் காத்த
> தவத்தியைத் தன்னைக் கொல்லும்
> நோய்தெரிந் துணரான் தேடிக்
> கொண்டனன் நுவல யாங்கள்
> வாய்தெரிந்து உணரா வண்ணம்
> கழறுவார் வணங்கி மாய
> வேய்தெரிந்து உரைக்க வந்தேம்
> வினையினால் வீர! என்றார். (இராமாயணம்)

இராவணன் எவிய ஒற்றர்கள் பிடிபட்டு அடிபட்ட பொழுது இராமபிரானை நோக்கி இவ்வாறு கூறியிருக்கின்றனர். வேய் என்பது ஒற்றி உணரும் ஒற்றரைக் குறித்திருத்தலை இதில் அறிந்து கொள்கிறோம்.

வேயருடைய அறிவாற்றலும் பேசும் திறமும் வியனிலையில் மருவியுள்ளன. அதி மருமமான கருமங்களை நேரே போய்க் கண்டு வந்து அரசனுக்கு உரிமையுடன் உரைப்பவர் ஆதலால் ஆட்சிமுறைக்கும் நாட்டு நிலைக்கும் ஒற்றர்கள் கண்கள் போல் உற்ற துணைகளாய் உறுதி சூழ்ந்துள்ளனர்.

எதிரிகளின் மருமங்களை மறைந்து நின்று அறிந்து தெளிந்து வருபவன் சிறந்த ஒற்றன் ஆய்விளங்குவான்.

இது வீடணன்பால் தெரிய வந்தது.

### சரிதம்.

பலமுறையும் மூண்டு முனைந்து போராடிய இந்திரசித்து முடிவில் தீய மாய வேலை செய்தான். சீதையைப்

போல் ஒரு மாய வடிவம் அமைத்தான். அந்த மாயச் சீதையை அனுமான் கண் காண வெட்டி வீழ்த்திவிட்டுத் திருவயோத்திக்குப் போர்மேல் போவதாகத் தேர்மேல் ஏறிப் பாவனை காட்டி நிகும்பலையில் மாரண வேள்வி செய்யப் போனான். அதிமதிமானான அனுமானும் அதனை மெய்யே என்று நெஞ்சம் பதைத்து விரைந்து இராமனிடம் கூறினான். அந்த வீர வள்ளல் உள்ளம் கலங்கி உருகி மறுகினான். யாவரும் அழுது புலம்பினர். எதிரி அயோத்திக்குப் போயிருத்தலால் அங்கே விரைந்து போக வேண்டும் என்று இராமன் மூண்டெழுந்தான். அப்பொழுது வீடணன் விநயமாயுரைத்தான்: "அரசர் பெரும! இது ஒரு மாயச் சூது என்றே கருதுகிறேன்; கற்புத் தெய்வத்தை அவன் கொன்றிருந்தால் இதற்குள் உலகம் யாவும் நிலைகுலைந்து பாழாயழிந்து போயிருக்கும்; அந்தப் பாதகன் செய்துள்ள வஞ்சச் சூழ்ச்சி என்றே என் நெஞ்சம் கருதுகிறது; விரைந்து போய் அம்மையை நேரே கண்டு உண்மையை உணர்ந்து வருகிறேன்" என்று உறுதி கூறி நிறுத்திவிட்டு வண்டு உருவம் கொண்டு மறைந்து போய் யாவும் கண்டு கள்ளன் செய்துள்ள கபட நாடகங்களை எல்லாம் தெள்ளத் தெளிந்து மீண்டு வந்து வள்ளலிடம் கூறவே எல்லாரும் உள்ளம் உவந்து துள்ளி ஆர்த்தனர்.

வீடணன் உரைத்தது.

பத்தினி தன்னைத் தீண்டிப் பாதகன் படுத்த போது
மூத்திறத்து உலகும் வெந்து சாம்பாய் முடியு மன்றே?
அத்திறம் ஆனதேனும் அயோத்திமேல் போன தன்மை
சித்திரம் இதனைஎல்லாம் தெரிகலாம் சிறிது போழ்தின். (1)

விரைந்து சென்றது.

இமையிடை யாக யான்சென்று ஏந்திழை இருக்கை எய்தி
அமைவுற நோக்கி உற்றதுஅறிந்துவந்து அறைந்தபின்னர்ச்
சமைவது செய்வது என்று வீடணன் விளம்பத் தக்கது
அமைவதுஎன்று இராமன் சொன்னான் அந்தரத்து அவனும்
[சென்றான். (2)

மறைந்து கண்டது.

வேள்விக்கு வேண்டற் பால கலப்பையும் விறகும் நெய்யும்
வாழ்விக்கும் தாழ்வில் என்னும் வானவர் மறுக்கங்கண்டான்
சூழ்வித்த வண்ணம்ஈதோ! நன்றெனத்துணிவு கொண்டான்
தாழ்வித்த முடியான் வீரன் தாமரைச் சரணம் தாழ்ந்தான்.
(இராமா: மாயாசீதை)

நடந்துள்ள நிகழ்ச்சிகளை இவை வரைந்து காட்டியுள்ளன. காட்சிகளைக் கருதியுணர்பவர் விபீடணனுடைய மதி மாட்சிகளையும் ஒற்று அறியும் திறனையும் வியந்து மகிழ்ந்து கொள்வர். மறைந்து சென்று மருமங்களை அறிந்து ஐயம் அறத் தெளிந்து வந்து சொல்பவனே உண்மையான உயர்ந்த ஒற்றன் என்பதை யாவரும் இவனிடம் அறிந்து மகிழ்ந்தனர்.

**மாற்றார் மருமங்கள் மாருமல் தேறிவரும்**
**ஆற்றலே ஒற்றர்க் கணி.**

தேறிவந்து தேற்றியருள்.

---

ஒற்றினல் ஒற்றல்.

588. தாதியைஏன் ஒற்றுத் தமயந்தி மற்றுமுய்த்தாள்
கோதில் நளன்பால் குமரேசா—காதலால்
ஒற்றெற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினல் ஒற்றிக் கொளல். (அ)

இ—ள்.

குமரேசா! ஒற்றரால் ஒற்றி உணர்ந்த பின்பும் தமயந்தி மீண்டும் ஏன் ஓர் ஒற்றை உய்த்தாள்? எனின், ஒற்று ஒற்றித் தந்த பொருளையும் மற்றும் ஓர் ஒற்றினல் ஒற்றிக் கொளல் என்க.

ஒற்றன் உண்மையை முற்றும் தெளிக என்கிறது.

ஓர் ஒற்றன் அறிந்து வந்து அறிவித்த காரியத்தையும் பின்னும் ஓர் ஒற்றினல் ஒற்றித் தெளிந்து கொள்க.

பொருள் என்றது மருமமான கருமங்களை.

அரிய செய்திகளை அறிந்து கொள்வது அரசனுக்குப் பெரிய செல்வம் ஆதலால் அந்த உண்மையை நுண்மையா உணர்ந்து கொள்ளப் பொருள் என்றார். ஒற்றி உணர்ந்த பொருள் வேந்தனுக்கு வெற்றியை விளைத்து வருகிறது.

கொளல்=கொள்ளுக. அல் ஈற்று வியங்கோள் ஈங்கு உடன்பாட்டில் விதிமுறையில் வந்துளது.

உற்ற ஒற்றனது உண்மையையும் ஒற்றி அறிந்து கொள்ளும்படி அரசனுக்கு உறுதியா உணர்த்தி யிருக்கிறார்.

மாற்றாரோடு மருவியோ, வேறு வகையில் மனநிலை திரிந்தோ ஓர் ஒற்றன் தன் நிலை மாறவும் கூடும் ஆதலால் அவன் சொல்லை முற்றும் நம்பி அரசன் காரியத்தில் இறங்கக் கூடாது. பின்னரும் உண்மையான ஒரு வேவுகாரனை விடுத்து முன்னவன் சொன்னது சரியா? என்று தீர விசாரித்துத் தெளிந்து கொள்ள வேண்டும்.

ஒற்றரைத் தூண்டி அன்னோர் உறுவலி உணர்வர் ஏனும்
மற்றும்ஓர் ஒற்றின் அல்லால் அன்னது மனத்துட்கொள்ளார்
சுற்றுறும் அனிகம் அன்றி ஒருபுடை துவன்றிச் சூழும்
பெற்றியும் உளதோ என்ன வேய்ஒரீஇத் தேர்வர் பின்னும்.
(கந்த புராணம்)

எதிரிகளுடைய நிலைமைகளை ஒற்றரால் அரசர் ஆராய்ந்து தெளிந்து கொள்ளும் திறங்களை இது வரைந்து காட்டியுள்ளது.

ஒற்றை மற்றும் ஓர் ஒற்றால் ஒற்றித் தெளிக எனத் தேவர் குறித்துள்ளதை இது மேவி வந்துள்ளது.

அரசியல் துறைகளுக்கு அடிகள் முறை வகுத்துள்ளதைக் காவியக் கவிகள் யாவரும் ஆவலோடு எடுத்து மடுத்துத் தம் கவிகளை சுவைப்படுத்தி யிருக்கின்றனர்.

வானர சேனைகளை அணிவகுத்து நிறுத்தி இராமன் போருக்கு மூண்டு நிற்கும் நிலைகளை ஒற்றரால் இராவணன் முதலில் உசாவி அறிந்தான். பின்னரும் அதிசய

ஒற்றனை சார்த்தூலன் என்பவனை மருமமா ஏவினன்: அவன் போய் யாவும் தெரிந்து மீண்டு வந்து மூண்டுள்ள திறலை முடிய உரைத்தான்: அவனுடைய உரைகள் உற்றுள்ள நிலைகளை முற்றும் உணர்த்தி நின்றன.

ஒற்றன் உற்றது.

தாயினும் பழகி னர்க்குத் தன்னிலை தெரிக்க லாகா
மாயவல் உருவத் தான்முன் வருதலும் வாயில் காப்பான்
சேயவர் சேனை நண்ணிச் செய்திறம் தெரித்தி நீஎன்று
ஏயவன் எய்தினன் என்று அரசனை இறைஞ்சிச் சொன்னன்.

உண்மையை உரைத்தது.

அழைஎன எய்திப் பாதம் வணங்கிய அறிஞன் தன்னைப்
பிழையற அறிந்த எல்லாம் உரைத்தி! என்று அரக்கன் பேச:
முழையுறு சீயம் அன்னன் முகத்தினல் அகத்தை நோக்கிக்
குழையுறு மெய்யன் பைய வரன்முறை கூறல் உற்றன்: (2)

மாருதி நிலை.

வீரிய விதியின் எய்திப் பதினேழு வெள்ளத் தோடும்
மாருதி மேலை வாயில் உழிஞைமேல் வருவ தானன்;
ஆரியன் அமைந்த வெள்ளம் அத்தனை யோடும் வெற்றிச்
சூரியன் மைந்தன் தன்னைப் பிரியலன் நிற்கச் சொன்னன்.

அங்கதன் அமைந்தது.

அன்றியும்பதினேழ் வெள்ளத் தரியொடும்அரசன் மைந்தன்
தென்திசை வாயில் செய்யும் செருவெலாம் செய்வ தானன்;
ஒன்றுபத் தாறு வெள்ளத்து அரியொடும் துணைவ ரோடும்
நின்றனன் நீலன் என்பான் குணதிசை வாயில் நெற்றி. (4)

நம்பி தம்பியுடன் நின்றது.

இம்பரினியைந்த காயும் கனியும் கொண்டிரண்டுவெள்ளம்
வெம்புவெஞ் சேனைக்.கெல்லாம் உணவுதந்துழல விட்டான்;
உம்பியை வாயில் தோறு நிலைதெரிந்துணர்த்தச்சொன்னன்
தம்பியும் தானும் நிற்ப தாயினன் சமைவு ஈது என்றன்.
(இராமா: 6:12)

உற்றுள்ள நிலைமைகளை ஓர்ந்து வந்து தலைமையான ஒற்றன் இலங்கை வேந்தனிடம் உரைத்திருக்கும் உண்மைகளை ஈண்டு உணர்ந்து கொள்கிறோம். உரைகளில் மருவியுள்ள பொருள்களைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும். போர்க் காட்சிகளும் பொரு திறல்களும் வீர உணர்ச்சிகளும் மனித உள்ளங்களுக்கு வியப்புகளையும் உவப்புகளையும் ஊட்டி வருகின்றன.

ஒற்றர்கள் அரசர்க்கு எத்தகைய உறுதித் துணைகள்! எவ்வளவு ஆற்றல்கள் அமைந்துள்ளனர்! என்பதை ஈண்டு அறிந்து வியந்து கொள்கிறோம்.

பெற்ற தாய்க்கும் உற்றதை உரையாதவர்; அரசுக்கே எவ்வழியும் செவ்வையா உறுதி சூழ்ந்து உழைப்பவர் ஒற்றர் என்றதனால் அவரது பெற்றியும் பெருமையும் பேராண்மையும் தெரியலாகும்.

ஒற்றரால் ஒற்றி உறுதி நலன்களை
முற்றும் தெளிவா முதலறிந்து -உற்ற
கருமம் புரியும் கருத்தே அரசின்
தருமம் பெருமை தரும்.

ஒற்றரை உய்த்து உரியவர் உண்மை தெரிவர்.

இது தமயந்திபால் தெரிய வந்தது.

சரிதம்.

தனது அருமை நாயகனை நளமன்னன் தன்னைப் பிரிந்து போன பின்னர் தந்தையின் அரண்மனையை அடைந்து தமயந்தி பரிந்து வருந்தி யிருந்தாள். அயோத்தி மன்னனிடம் அக் கோமகன் தேர்ப் பாகனாய் அமர்ந்திருப்பதை ஒற்றர் மூலம் அறிந்தாள். அம் மன்னன் தன் நகர்க்கு வரும்படி ஒரு சூழ்ச்சி செய்தாள். தேர் ஏறி வந்தான்; தேர்ப்பாகன் தனியே வாசி நிலையத்தில் தங்கி யிருந்தான். முதலில் ஓர் ஒற்றனை விடுத்து ஆராய்ந்தாள். உருவ நிலை மாறி யிருந்தாலும் செயல் இயல்களால் கணவன் என்றே தெரிந்து கொண்டாள்; தெரிந்த பின்பும் தன் மக்கள் இருவரை ஒருதாதி

புடன் அனுப்பினாள். அந்த அருமைக் குழந்தைகளைக் கண்டவுடன் நளன் உளம் உருகி மறுகி அழுதான்.

மக்களைமுன் காணு மனம்நடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள்நீர்
என்மக்கள் போல்கின்றீர்: யார்மக்கள்? என்றுரைத்தான்
வன்மக் களியானை மன். (1)

மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்;
அன்னை தனைக் கான்விட்டு அவன்ஏக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம்: எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான் என்றார் அழுது. (2)

ஆங்கவர் சொன்ன உரைகேட்டு அழிவெய்தி
நீங்கா உயிரோடு நின்றிட்டான்—பூங்காவின்
வள்ளம்போல் கோங்கு மலரும் திருநாடன்
உள்ளம்போல் கண்ணீர் உகுத்து. (3)

(நளவெண்பா)

எவருடைய உள்ளங்களும் உருகி மறுகி அழும்படி வந்துள்ள இந்தப் பிள்ளைப் பாசங்களை மானச நோக்கால் கூர்ந்து பாருங்கள். உரியவனை ஓர்ந்து தெளிதற்கு இக் குலமகள் செய்துள்ள உபாயத்தைக் காவியக் கவியும் ஓவிய உருவமா வனைந்து வழங்கி யுள்ளார்.

அழலும் நீரும் இன்று அமிழ்தென அடுதொழில் கேட்டுக்
குழையும் நெஞ்சினள் இன்னுயிர்க்கொழுநன் என்றுஎண்ணி
விழைவி னோடுதன் மக்களை அவன்உழை விடுத்தாள்;
மழலை மென்மொழி மக்களும் மன்னன் மாட்டு அடைந்தார்.

அடைந்த மக்களைக் காண்டலும் அழலிடு மெழுகின்
உடைந்தது உள்ளம் நீர் ஊற்றிருந்து ஒழுகின நெடுங்கண்:
தொடர்ந்த மும்மலம் முருக்கிவெம் பவக்கடல் தொலையக்
கடந்து ளோர்களும் கடப்பரோ மக்கள்மேல் காதல்? (2)

மழலை மென்மொழி மக்களைக் காண்டலும் மன்னன்
அழுது துன்புறல் ஆய்வளைத் தோழி கண்டு ஏகித்
தொழுது சொற்றலும் கொழுநனும் என்பது துணிந்து
முழுவல் அன்புடைத் தாயொடு தந்தைபால்மொழிந்தாள் (3)

(நைடதம்)

நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை இவற்றால் தெளிந்து கொள்ளுகிறோம். ஒற்றர்களைக் கொண்டே பல வகைகளிலும் சோதித்து உண்மையை உணர்ந்திருக்கிறாள்; அதனால் நன்மைகளை அடைந்து கொண்டாள். ஒற்றன் ஒருவன் உரைத்த பொருளை மற்று ஒரு ஒற்றனால் சரி பார்த்துத் தெரிந்து கொள்வது அரசர் இயல்பாம்; அந்த உண்மை இந்த அரசியிடமும் அறிய வந்தது.

**உளவறி வாரை உளவறிவார் உள்ளக்**
**களவறி காத லவர்.**

ஒற்றை உற்று உணர்.

---

ஒற்றரை ஆளுதல்.

589. ஒற்றரை ஒற்றி உதயன் சுயோதனனேன்
குற்றமறத் தேர்ந்தார் குமரேசா—பற்றிய
ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும். (கூ)

இ—ள்.

குமரேசா! உதயணனும் சுயோதனனும் ஏன் ஒற்றர்களை ஒற்றித் தேர்ந்தார்? எனின், ஒற்று ஒற்று உணராமை ஆள்க; உடன் மூவர் சொல் தொக்க தேறப்படும் என்க.

இது, ஒற்றரை ஆளும் திறம் கூறுகிறது.

ஒரு ஒற்றனை மறு ஒற்றன் அறியாதபடி மருமமா ஆளுக; மூன்று ஒற்றர் சொல் ஒத்தனவாயின் அவற்றை உறுதியாக நம்பித் தெளிந்து கொள்க.

உண்மை நிலையை உறுதியாய்த் துணிந்து தெளி தற்கு உரிய வழி வகைகள் இங்கே தெரிய வந்தன.

அயல் இடங்களுக்குச் சென்று நிகழ்ச்சிகளை நேரே கண்டு உசாவி அறிந்து உரிமையுடன் வந்து அரசனிடம் உண்மையை உரைப்பது ஒற்றன் தொழில்.

அவ்வாறு உரைக்கின்ற உரை சரிதானா? என்று தெரிதற்கு வேறு ஒருவனை ஒற்றனாக யாருக்கும் தெரி

யாமல் விடுகிருன்; அவனும் வந்து தான் அறிந்ததைச் சொல்லுகிருன்; முன்சென்ற இருவருக்கும் தெரியாத படி மீண்டும் ஒரு வேவுகாரனை உய்த்து உசாவி உறுதியை ஓர்ந்து தேர்ந்து கொள்கிருன். மருமங்களை மருமமாய் அறிந்து கருமங்களைக் கருதிச் செய்வது வேந்தனது விழுமிய தருமமாம்.

ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்,
கற்ற மாந்தரைக் கண்எனக் கோடலும்,
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும் சூதரோ
கொற்றம் கொள்குறிக் கொற்றவற்கு என்பவே.
(சீவக சிந்தாமணி. 1921)

ஆட்சியை மாட்சியா நடத்தி யாண்டும் வெற்றியாளனாய் வாழ வுரிய அரசன் ஒற்றர் முதலானவர்களை ஆள வேண்டிய முறைகளை இது வரைந்து காட்டியுள்ளது. காட்சிகளையும் அரச மாட்சிகளையும்கருதிக்காணுக.

தொக்க=தொகுதியாய் ஒத்தன.

வேறு வேறு வகையில் வந்து ஒற்றர் மூவரும் கூறுகின்ற உரைகள் நேரே தொகையாய் ஒத்திருந்தால் அவை உறுதியாத் தேற உரியன.

வேய்ச்சொல் தொக்க வாய்ச்சொல் போல
விரிச்சியில் கொண்ட உரைத்திறம் நோக்கி
வினைமேல் செல்லுநர் பலரே; அனையர்க்கு
அவ்வினை முடிவதூஉம் காண்டும்.
(சிதம்பர மும்மணி: 23)

உய்ந்துஒழிவார் ஈங்கில்லை ஊழிக்கண் தீயேபோல்
முந்தமருள் ஏற்ருர் முரண்முருங்கத்—தந்தமரின்
ஒற்றினுன் ஆய்ந்தாய்ந்து உரவோர் குறும்பினைச்
சுற்றினுர் போகாமல் சூழ்ந்து. (புறப்பொருள்: 7)

ஒற்றர்களுடைய வாய்ச்சொல்லை உய்த்துணர்ந்து தேறி வினைமேல் சென்ற அரசர் வெற்றி பெற்று வருதலை இவை விளக்கி யுள்ளன. வேய்=ஒற்றர்.

ஒற்றினுன் ஆய்ந்து ஆய்ந்து என்றது மூன்று

ஒற்றர்கள் கூறிய உரைகளைக் குறித்து ஆராய்ந்து கூர்ந்து ஓர்ந்து உண்மை தெளிதலை.

ஒற்று மாக்களை ஒற்றரின் ஆயா
முற்றனக்கு உரைத்த மூவர் வாயவுள்
ஒத்தது நோக்கி மெய்த்தகத் தேறி.

(பெருங்கதை, 3–25)

ஒற்றர் மூவர்வாய் உரைகள் சரியாக நேரே ஒத்ததேல் தேறுக என இது கூறியுளது. தேவர் வாய்மொழியை இது தழுவி வந்துள்ளது. அவ் வுண்மையை உரைக் குறிப்புகளால் கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம்.

ஒருவர் ஒருவர் தமைஅறியாது
ஒருமை வினைக்கண் மூவர்தமை
மருவ விடுக்க; மூவர்களும்
வந்து மொழிவது ஒத்துவிடின்,
கருமம் அதனை மிகத்தெளிக;
கரும மறைப்ப வேண்டுதியேல்
பொருவி லவர்தம் பால்சிறப்புப்
புறம்தோன் றமல் செய்திடுக.

(விநாயக புராணம்)

ஒற்று ஒற்று உணராமை ஆள்க என்னும் இக்குறளுக்கு ஒரு விரிவுரையாய் இது மருவி வந்திருத்தலைக் கருதி யுணர்க.

என்றனன் புத்தி சேன் என்னு நான் மறையினுன்
நன்றதே பொருள்என நால்வரும் இருந்துழி
ஒன்றிமுன் விடுத்தவர் மூவர்ஒற் றுட்கள்வந்து
இன்றிதால் பட்டதுஎன்று இயம்புகின் றூர்களே.

(சீவக சிந்தாமணி)

ஒற்றர் மூவர் சொல்லை இதில் ஓர்ந்து கேட்டுள்ளனர்.

உளவறிந்து வருவாரைப் பல வகையிலும் ஆராய்ந்து உண்மை தெரிவதே மன்னர் முறைமையாம். இன்னவாறு செய்து வருபவர் சிறந்து சீர் எய்தி வருகின்றார்.

ஒற்றரை ஆய்ந்த திறம் உதயணன் பாலும் துரியோதனனிடமும் நன்கு தெரிய வந்தது.

### சரிதம் 1.

வத்தவ தேசத்து மன்னனான உதயணனோடு பாஞ்சால தேசத்து அரசன் கொடிய பகைமை பூண்டு பல சூழ்ச்சிகள் ஆற்றி நின்றான். தன்னைக் கொன்று தொலைக்கக் குறிக் கொண்டுள்ள அவனை வென்று தொலைக்கப் பலவகையிலும் இவன் வலிகளைப் பெருக்கி வந்தான். காளமயிடன் என்னும் ஒற்றனை உய்த்து உசாவி உற்றதை அவன் ஓர்ந்தான். தரன், விசயன் என்னும் ஒற்றர்களை ஏவி எதிரியினுடைய நிலைமைகளை எல்லாம் நாளும் நாடி இக் கோமகன் காலம் கருதி நின்றான். பகைவனுடைய இராசதானியில் மருமமாச் செய்து வருகிற ஆயத்தங்களை ஒற்றி அறிந்து வந்து ஒற்றர்கள் இவனிடம் உரைத்தனர்: அந்த உரைத் திறங்கள் வித்தக விவேகங்களாய் விளங்கி நின்றன.

### ஒற்றரின் யூகம்.

ஒளித்து அகத்து ஒடுங்கிய ஒற்றர் ஓடிச்
சிலைப்பொறித் தடக்கையிற் சேதியர் பெருமகற்கு
இசைத்தனர் புக்குநின்று ஏத்தினர் கூறுவர்:
தாழ்ச்சி யின்றித் தருசகன் தமரோடு
ஏழ்ச்சியும் எறிபடை அளவும்எம் பெருமான்
சூழ்ச்சியும் சூழ்பொருள் துணிவும் எல்லாம்
படிவ ஒற்றிற் பட்டாங்கு உணர்ந்து
கொடியணி வீதிக் கோநகர் வரைப்பில்
பற்றறத் துறந்த படிவத் தோரையும்
அற்றம் இன்றி ஆராய்ந்து அல்லது
அகம்புக விடாஅது இகந்துசேண் அகற்றி,
நாட்டுத் தலைவரை நகரத்து நிரீஇ,
நகர மாந்தரை நாட்டிடை நிரீஇ,
ஊரூர் தோறும் உளப்பட்டு ஓவா
ஆர்வ மாக்களை அருஞ்சிறைக் கொளீஇ
ஆணை கேட்ட அகலிடத்து எல்லாம்
ஓலை போக்கி ஒல்லைவந்து இயைகெனப்
பேணார்க் கடந்த பிரச்சோதனற்கு
மாணாச் செய்தொழில் மனமுணக் காட்டி

அவமதித்து ஒழுகி ஆணை எள்ளி
மிகைசெய் திருந்ததன் மேலு மீட்டினி
மகத மன்னனு மதுகை யாகப்
பகைசெய வலித்தனன் என்பது பயிற்றி
மந்திர ஓலை போக்கிய வண்ணமும்,
வெந்திறல் கலந்த விறல்வே சாலியொடு
சங்க மன்னர்க்குத் தம்படை கூட்டி
விரைந்தனர் வருகென நினைந்து விட்டதுவும்
மன்னடு நெடுவேல் மகத மன்னற்கு
இன்னது தருவேன் என்னொடும் புணர்கெனத்
தன்னொடு பழகிய தமர்களை விட்டதும்,
இன்னவை பிறவும் பன்னின பயிற்றிய
அறிந்தஒற் றாளர் செறிந்தனர் உரைப்ப.

(பெருங்கதை, 3-25)

ஒற்றர்கள் வந்து உதயணனிடம் பகைப் புலன்களின் நிலைமைகளை எல்லாம் இவ்வாறு கூறியிருக்கின்றனர். உரைக் குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்க. ஒற்றுரைதேர்ந்தே இம்மன்னன் வெற்றி மிகப்பெற்றான்.

சுயோதனன் ஒற்றி உணர்ந்தது.

பாண்டவர் வனவாசம் முடித்து முடிவில் அஞ்ஞாத வாசமாய் உருவம் கரந்து யாரும் அறியாதபடி மறைந்திருந்தனர். அவர் இருப்பை அறிந்து விட வேண்டும் என்று துரியோதனன் மூண்டு முனைந்தான். ஒற்றர்களை யாண்டும் அனுப்பினான். எங்கும் காணாமல் யாவரும் மீண்டு வந்தனர். இறுதியில் அரிய வேயர் இருவரை விரகுடன் ஏவினான். அவர் துருவி நோக்கினார். மச்ச நாட்டில் விராட நகரில் ஐவர் இருப்பதை யூகித்து ஒற்றியறிந்து விரைந்து வந்து அந்த ஒற்றர் உற்றதை உரைத்தனர். அதன்பின் இவன் ஆவதை ஆற்றினான்.

ஈராறும் ஒன்றும் சுரர்க்குள்ள நாள்சென்ற இனிநம்முடன்
பாராள வருமுன்னரடலைவ ருறைநாடு பார்மின்கள்என்று
ஓரா யிரம்கோடி ஒற்றாள் விடுத்தான்அவ் ஒற்றாள்களும்
வாராழி சூழ்எல்லை யுறஓடி விரைவின்கண் வந்தார்களே.

காடென்று மலைஎன்று நதிஎன்று கடல்என்று கடலாடைசூழ்
நாடென்றுநகர்என்றுநாடாத திசையில்லைநாள்தோறும்யாம்
தோடென்று தாதென்றுதெரியாது மதுமாரி சொரிமாலையாய்
நீடென்று வலமேவும் அவனிக்குள் அவரில்லை நின்பாதமே.

ஒற்றுளில்ஒருவன் பணிந்தென்றும் எவ்வாழ்வுமுண்டாகியே
விற்றுணை வெம்போர் விராடன்தன் வளநாடுமேம்பட்டதால்
மற்றும் புயக்கீசகன்தானும் ஒருவண்ண மகள் காரணத்து
இற்றான் எனுஞ்சொல்லும் உண்டென்று நிருபற்கு எடுத்து
[ஓதினன்.
(பாரதம்: நிரை மீட்சி)

பல ஒற்றர்களை உய்த்து இவன் உசாவி அறிந்துள்ள நிலையை இவற்றால் உணர்ந்து கொள்கின்றோம்.

ஒற்றர் உரைகள் உறுதி உளவாயின்
வெற்றி விளையும் விரைந்து.

ஒற்றரை ஓர்க.

---

**590.** ஒற்றரின் சிறப்பு.

ஓற்றிவந்த ஒற்றருக்கேன் ஓர்சிறப்பும் செய்யவில்லை
கொற்றநெடுஞ் சேரன் குமரேசா — உற்ற
சிறப்பறிய ஒற்றின்கட் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகு மறை. (ம)

இ-ள்.

குமரேசா! ஒற்றருக்கு வெளிப்படையாக ஏன் சேர மன்னன் நேரே சிறப்புச் செய்ய வில்லை? எனின், ஒற்றின்கண் சிறப்பு அறியச் செய்யற்க; செய்யின், மறை புறப்படுத்தான் ஆகும் என்க.

ஒற்றரிடத்துப் புரியும் மரியாதைகளைப் பலரும் அறிய அரசன் செய்யலாகாது; செய்தால் அரிய இரகசியங்களை எளிதே வெளிப்படுத்தினவன் ஆவான்.

சிறப்பு என்றது சிறந்த சீர் வரிசைகளை.

அரிய காரியங்களை ஆற்றி வந்தவர்க்கு உரிய பொருள், அணி, விருது முதலிய சன்மானங்களை யாரும் உவந்து செய்வர். ஊர் அறிய நாடு அறியச் செய்கின்ற இத்தகைய சிறப்புகளை ஒற்றர் இடத்து மறைவாகவே செய்ய வேண்டும். பிறர் அறியும்படி செய்ய நேரின் அவர் ஒற்றர் என்றும், அரசனுக்கு உரிமையாக உற்றவர் என்றும் யாவரும் தெரிய நேர்வர். அவ்வாறு தெரியின் மருமமாக உளவறிந்து வருகிற அவ் ஒற்றின் கருமம் உறுதி குலைந்து படும்.

மறை=இரகசியம்: மருமம்.

மறைக்கப் படுவது, மறைவாக வைத்திருக்க வுரியது மறை என வந்தது. மந்திரம் முதலியன இந்த வகையில் அமைந்தன. சில மருமங்கள் அரச தருமங்கள் ஆகின்றன. அவை இங்கே கருத வந்தன.

மறைவாகவே சென்று மருவலருடைய மறைகளைத் தெளிவாக அறிந்து வந்து உறவுடன் கூறும்ஒற்றனுக்கு மருமமாகவே மன்னன் சன்மானம் முதலிய மரியாதைகளை உரிமையோடு தனியே புரிய வேண்டும்.

அறியச்செய்யற்க என்றது, பிறர் அறியாத படி தரமாகச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி நின்றது. ஒற்றருக்குஉதவுதலை மற்றவர் அறியலாகாது.

மாற்றவன் ஒற்றர் ஒற்ற வகையினில் மறைய நம்பிக்கு
ஆற்றின தோழர்க்கு எல்லாம் அணிகலம் அடிசில் ஆடை
வேற்றுமை யின்றி வேண்டுட் டமைத்தனனருளி இப்பால்
ஏற்றுரி முரசம் நாண எறிதிரை முழக்கின் சொன்னான்.

(சீவகசிந்தாமணி- 2142)

சீவகனுக்கு உதவிபுரிந்த உரிமையாளர்க்கு அணிகலம் ஆடை முதலிய சிறப்புக்களை எதிரிவகையினர் எவரும் அறியாத படி **கோவிந்தன்** என்னும் மன்னன் மருமமாச்செய்துள்ளான். ஆந்தஉண்மையை இச்செய்யுளால் அறிந்து கொள்கிறோம். **மாற்றவன் ஒற்றர் ஒற்ற**

வகையினில் ஆற்றினவர்க்கு மறைய அமைத்தனன் என்றது இங்கே ஆய்ந்து சிந்திக்கவுரியது.

உளவறிந்து சொல்லும் ஒற்றருக்கு உலகறியச் சிறப்புச் செய்யலாகாது என்றதனால் அவருடைய தொழிலும் துறைகளும் மறைகளும் தெரிய வந்தன.

விரகறியும் ஒற்றரை விரகுடன் ஆள்பவர் வெற்றி வேந்தராய் விளங்கி எவ்வழியும் சிறந்து வருவர். இவ் வுண்மை சேரலாதன் பால் தெரிய வந்தது.

## சரிதம்.

இவன் சேரர் குலவேந்தன். சிறந்த நீதிமான். அரசியல் முறைகளைத் துறைகள் தோறும் நன்கு தெரிந்தவன். எதையும் கூர்ந்து ஓர்ந்து யாண்டும் செவ்வையாகச்செய்வதேஇவனதுசீர்மையாய்ச்சிறந்து வந்தது. பாதுகாப்பு முறையில் கோது யாதும் புகாமல் குறிக்கோளுடன் ஆற்றி வந்தான். கள்வர் முதலிய கொடியவர்களை அடக்கிப் பகைவரை ஒடுக்கி நாட்டை நன்கு பேணி வந்தமையால் இவன் புகழ் எங்கும் பரவி நின்றது. சதாயு,சமனகன் என்னும் ஒற்றர் இருவர் இவனுக்கு உற்ற துணைவராய் உதவி புரிந்து வந்தனர். கொடையும் வீரமும் சத்தியமும் கருமக் காட்சியும் இவனிடம் குடி கொண்டிருந்தன.

மண்ணுடை ஞாலம் புரவு எதிர்கொண்ட
தண்ணியல் எழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவது ஆயினும்
சேரலாதன் பொய்யலன் நசையே:
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபின் ஆரியர் வணக்கி
நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறல் மூதூர்த் தந்துபிறர்க்கு உதவி

அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்றாள்
இமைய வரம்பன் நெடுஞ்சேர லாதன். (பதிற்றுப்பத்து)

இவனுடைய ஆட்சிமுறை முதலிய மாட்சிகளைப் புலவர்கள் இவ்வாறு போற்றியுள்ளனர். உளவறிந்து வந்த ஒற்றர்களுக்கு வளமான நிலங்களை எவருக்கும் தெரியாதபடி இதமாய் இனிது அருளினன். ஒற்றின் கண் சிறப்பு அறியச் செய்யற்க! என்னும் சீரிய நெறி முறை இவனிடம் நேரே மருமமாய் மருவி யிருந்தது.

ஒற்றரும் அரசரும்.

அரிய மறைகளை ஆய்ந்துவரல் ஒற்றர்
உரிய முறையா யுளதால்—பிரியமுடன்
அன்னாரை மன்னர் அருமையுடன் ஆதரித்தல்
உன்னு மறையா யுறும்.

**மறையை மறைவாய் மதித்தறியும் ஒற்றர்க்கு**
**இறையும் மறைவா யிடல்.**

வேயரை விநயமாப் பேணி யருள்.

---

**இந்த அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.**

1 ஒற்றர் அரசுக்குக் கண்.
2 அவரால் யாவும் அறிக.
3 காரிய வெற்றி பெறுக.
4 ஒற்றரால் எவரையும் ஆராய்க.
5 அவர் அதிசய நிலையினர்.
6 எதையும் கூர்ந்து தெரிபவர்.
7 எல்லாம் தேர்ந்து தெளிபவர்.
8 ஒற்றரை ஒற்றரால் ஓர்க.
9 மூன்று ஒற்றர் சொல் ஆன்ற உறுதி.
10 அவரை அந்தரங்கமாகவே பேணுக.

ருகூ—வது ஒற்றாடல் முற்றிற்று.

---

# அறுபதாவது அதிகாரம்

## ஊக்கம் உடைமை.

அ∴தாவது உள்ளம் கிளர்ந்து தொழில் புரியும் உரனுடைமை. புறத்தே நாட்டில் நிகழுகிற நிகழ்ச்சிகளை ஒற்றர்களைக் கொண்டு ஓர்ந்து தேர்ந்த வேந்தன் அரசகாரியங்களைத் துணிந்து முனைந்து செய்தற்கு அகத்தே உறுதுணையாய் நிற்பது ஊக்கம் ஆதலால் ஒற்றாடலின்பின் இது வைக்கப்பட்டது. கண் கண்ட பின் கை வேலை செய்கிறது; ஒற்று ஓர்ந்து உரைத்தபின் அரசன் ஊக்கி வினை செய்கின்றான்; ஆக்கங்களை நேரே அடைகின்றான்.

591. ஊக்கமே ஆக்கம்

நன்றும் பொருளினுமேன் நார்முடியன் ஊக்கத்தைக்
குன்றுமல் கொண்டான் குமரேசா—என்றும்
உடையர் எனப்படுவ தூக்கம்அ∴ தில்லார்
உடைய துடையரோ மற்று. (க)

இ-ள்.

குமரேசா! நார்முடிச் சேரலன் பொருளினும் ஊக்கத்தை ஏன் உயர்வாக் கொண்டான்? எனின், உடையர் எனப்படுவது ஊக்கம்; அ∴து இல்லார் மற்று உடையது உடையரோ என்க.

உண்மையான உடைமை உணர வந்தது.

ஊக்கம் உடையவரே உண்மையான செல்வர்; அந்த உடைமை இல்லாதவர் பொருளுடைய ராகார்.

அ∴து என்றது ஊக்கம் உடைமையை.

உடையது என்றது பொருளை. தனது உடைமையாக் கருதி ஒருவன் உரிமையுடன் போற்றி வருவது ஆதலால் பொருள் இவ்வாறு பேர் பெற்று வந்தது. உடைமைகளை உரிமையாக வைத்திருப்பவர் உடையர் என நேர்ந்தார். அரிய திரு எது? ஊக்கமே.

மற்று = பிறிது; வேறு.

இல்லார் உடையரோ? என்ற சொல்லாடலில் உல்லாசமான எள்ளல் குறிப்பு இசைந்துள்ளது. ஓகார வினு உடையர் அல்லர் என உறுதியாய் வலியுறுத்திநின்றது.

பொருள்களை உடையவரையே உடையர் என உலகம் கருதி வருகிறது; அந்தக் கருத்தை மாற்றி ஒரு திருத்தத்தை இங்கே தெரிவித்திருக்கிருர். திருந்தி வந்துள்ளது தெளிந்து தேறி விழைந்து கொள நின்றது.

உடையர் என்று உயர்ந்தோரால் உண்மையாகச் சொல்லத் தக்கவர் ஊக்கம் உள்ளவரே. பொருளுடையாரை அவ்வாறு கூறுவது மருளுடைமையே. உபசார வழக்கில் அபசாரங்கள் புகுந்து விடுகின்றன.

புறத்தே செல்வங்கள் இலராயினும் அகத்தே ஊக்கம் ஒன்று உடையராயின் அவரே உடையார் என்னும் உயர் பெயர்க்கு உரியராவார். உள்ளே அஃது இல்லாதவர் வெளியே எவ்வளவு பொருள்களை எவ்வகையில் எய்தியிருந்தாலும் அவர் உடையர் ஆகார்.

உடைமைகள் என்று சொல்லப் படுகின்ற எல்லாப் பொருள்களையும் ஒருங்கே மனிதன் அடைதற்கு ஊக்கமே காரணமாயுள்ளது; ஆகவே அதனை உரிமையாக உடையவரே உடையர் எனும் பெருமைக்குத் தகுதியாகின்ருர்.

உடைமை எனப்படுவது ஊக்கம் என இவ்வாறு மணக்குடவர் வேறு பாடம் கொண்டுள்ளார்.

ஊக்கமும் பொருளும் இவற்றை முறையே உடையவரும் ஈங்கு நிறை தூக்கி நன்கு நோக்க நின்றனர்.

பொருள் கோழைகளிடமும், அறிவிலிகளிடமும், கூடி விடுகிறது: ஊக்கம் எவ்வழியும் வீரரிடமே விளங்கி யாண்டும் ஆக்கங்களை ஆக்கி வருகின்றது. இந்த வேறுபாடுகளை வியந்து விழைந்து நுழைந்துநோக்கவேண்டும்.

அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும்
திருவுடையர் ஆயின் திரிந்தும் வருமால்:
பெருவரை நாட! பிரிவின் றதனுல்
திருவினும் திட்பம் பெறும். (பழமொழி 136)

தகுதியில்லாதவரிடத்தும் பொருள் மிகுதியாய்ச் சேர்ந்து விடுகிறது; ஆகவே அதனை உடையவரை ஒரு பொருளாக மதிக்கலாகாது; மனத்திட்பமான ஊக்கம் உடையவரே உண்மையாக மதிக்கத் தக்கவர்; உறுதியாகப் போற்ற வுரியவர் என இது குறித்துள்ளது.

குறிப்புகளைக் கூர்மையாக் கருதி உணர்பவர் உண்மையான சிறப்புகளையும் ஊக்கத்தின் தலைமையான உறுதி நிலைகளையும் ஓர்ந்து தேர்ந்து கொள்வர்.

உள்ளத்தில் ஊக்கம் உடையவர் உலகத்தில் உயர்ந்த ஆக்கம் உடையராய்ச் சிறந்து திகழ்கின்றார்.

இவ் வுண்மை நார்முடிச் சேரலன் பால் அறிய வந்தது. இவனது வாழ்வு அதிசய நிலைகளை யுடையது.

சரிதம்.

இவன் சேரர் குல மன்னன். சிறந்த குண நலன்கள் உடையவன். பெருங் கொடையாளி. அஞ்சாமையும் நெஞ்சத் துணிவும் உறுதியும் ஊக்கமும் இவனிடம் இயல்பாகவே அமைந்திருந்தன. தன் குடிகள் எவ்வழியும் இன்பமாய் வாழ்ந்து வர அன்பு கூர்ந்து இவன் ஆட்சி புரிந்து வந்தான். அல்லல்கள் புரியும் குறும்பர்களை ஒல்லையில் அடக்கி எல்லா வளங்களும் பெருகி வர நாட்டை இனிது பேணி வந்தமையால் யாவரும் இவனைப் புகழ்ந்து போற்றி வந்தனர். திசைகள் தோறும் தன் இசைகள் பரவி வர அடலாண்மையோடு ஆட்சி ஆற்றி வந்த இவனது மாட்சிகளைப் புலவர்களும் உவந்து பாடினர். காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் சங்கப் புலவர் இவன் மீது உவந்து பாடியுள்ள நூலில் இருந்து ஒரு பாடலை அயலே காண வருகிறோம்.

உலகத் தோரே பலர்மற் செல்வர்
எல்லார் உள்ளும்நின் நல்இசை மிகுமே;
வாழ்க நின் வளனே;நின்னுடை வாழ்கை;
வாய்மொழி வாயர் நின்புகழ் எத்தப்
பகைவர் ஆரப் பழங்கண் அருளி,
நகைவர் ஆர நன்கலம் சிதறி,

ஆன்றுஅவிந்து அடங்கிய செயிர்தீர் செம்மால்!
வான்தோய் நல்லிசை உலகமொடு உயிர்ப்பத்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்
மாயிரும் புடையன் மாக்கழல் புனைந்து
மன்எயில் எறிந்து மறவர்த் தரீஇத்
தொன்னிலைச் சிறப்பின் நின்னிழல் வாழ்நர்க்குக்
கோடற வைத்த கோடாக் கொள்கையும்
நன்றுபெரி துடையையால் நீயே
வெந்திறல் வேந்தே இவ் உலகத் தோர்க்கே.
(பதிற்றுப்பத்து:37)

தன் ஊக்கம் உடைமையால் எல்லாரும் வியந்து புகழ்ந்து வர இவன் விளங்கி யிருக்கிறான். **வெந்திறல் வேந்தே! ஆன்று அவிந்து அடங்கிய செம்மால்! இவ்வுலகத்தோர்க்கு நீயே நன்று பெரிது உடையை! நீடுழி காலம் நீ வாழ்வாயாக** என்று புலவர் வாழ்த்தி யிருத்தலால் இவனுடைய நிலைமை தலைமை நீர்மை சீர்மைகளை உணர்ந்து கொள்கிறோம். ஊக்கம் உடையவரே உடையர் என உயர்ந்தோரால் உவந்து போற்றப் பெறுவார் என்பதை உலகம் அறிய இவன் உணர்த்தி நின்றான்.

**உள்ளத்தில் ஊக்கம் உடையான் உலகத்தில்**
**ஒள்ளியனாய் நிற்பன் உயர்ந்து.**

ஊக்கம் உடையன் ஆகுக.

---

உரிய உடைமை.

592. உள்ளம் உடைய உறுதியால் மங்கைமன்னன்
கொள்ளநின்றான் சீரேன் குமரேசா—தள்ளரிய
உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். (உ)

இ-ள்

குமரேசா! தம் உள்ளத்தின் உறுதியால் திருமங்கை மன்னன் எங்கும் மேன்மையாய் ஏன் உயர்ந்தார்? எனின், உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை நில்லாது நீங்கி விடும் என்க.

நிலையான நிதியின் நிலை தெரிய வந்தது.

ஊக்கம் உடைமையே உறுதியான செல்வம்; பொருள் உடைமைகள் நிலையின்றி ஒழிந்துபோம்.

உண்மையான உடைமை எது? போலியான உடைமை எது? இந்தக் கேள்விகளுக்கு உரிய விடைகளை இதில் தெளிவாக அறிய வந்துள்ளோம்.

உள்ளம் என்றது இங்கே ஊக்கத்தை. மனத்தின் பெயர் அதன் எழுச்சியைக் குறித்து நின்றமையால் இஃது இட ஆகுபெயர்.

உள்ளக் கிளர்ச்சியால் ஓங்கி வருகிற உறுதிப்பாடு ஊக்கம் என வந்தது. மனிதனுடைய உயர்ச்சிக்கு மன எழுச்சியே காரணமாயுள்ளது. அந்த மானச தத்துவம் ஈங்கு மருமமாய் உய்த்து உணர வுற்றது.

உடைமை என்றது பொருள்களை.

மனிதன் உடுத்தி யிருப்பது உடை என வந்தது; அது போல் மனித வாழ்வுக்கு உரிமையாய் உதவி புரிந்து வருவது உடைமை என நேர்ந்தது.

ஊக்கமும் செல்வமும் ஒருசேர நேரே ஈண்டு நோக்க வந்துள்ளன. தம்மை உரிமையாக உடையவரை ஊக்கமும், பொருளும் உலகில் உயர்த்தி மதிப்பு மிகச் செய்யும்: மாட்சி தருவதில் இரண்டும் இவ்வாறு ஆட்சி புரியினும், முன்னது உயிர்க்குணமாய் உள்ளே உரம் தோய்ந்து உறுதி கூர்ந்து நிலைத்து நிற்கும்; பின்னது வெளியே வேறுபட்டு நின்று மாறுபாடுகள் நேர்ந்த அளவில் நிலை குலைந்து நீங்கிப்போம்.

நில்லாது நீங்கி விடுகின்ற செல்வத்தினும் என்றும் நிலையாய் நின்று தலைமையோடு உறுதிபுரிந்து வருகிற ஊக்கமே அரசர்க்கு எவ்வழியும் மேலான ஆக்கமாம்.

ஊக்கம் முரண்மிகுதி ஒன்றிய நற்சூழ்ச்சி
ஆக்கம் அவன்கண் அகலாவால்—வீக்கம்
நகப்படா வென்றி நலமிகு தாரரற்கு
அகப்படா இல்லை அரண். (புறப்பொருள்: 6-6)

எங்கும் நிலையான வெற்றியுடன் உலகம் காக்க நேர்ந்த அரசனுக்கு ஆக்கம் முதலிய வேறு எவற்றினும் ஊக்கமே முதன்மையாக வேண்டும் என்பதை ஈண்டு இது விளக்கியுள்ளது. ஊக்கம் உடையவர் எல்லா ஆக்கங்களையும் எளிதே அடைந்து சிறந்து விளங்குவர்.

இது திருமங்கை மன்னன்பால் தெரிய வந்தது.

சரிதம்.

இவர் சோழநாட்டிலே திருவாலிக்கோட்டத்திலே குறையல் என்னும் ஊரில் பிறந்தவர். தந்தை பெயர் ஆலிமன். மறவருள் ஒரு பிரிவினரான கள்ளர் மரபினர். உள்ளத்திண்மையும் உறுதியும் ஊக்கமும் இளமையிலேயே இவர் இடம் வளமா விளங்கி நின்றன. இவரது கல்வியறிவையும் சொல்வன்மையையும் செயலாற்றல்களையும் அறிந்து அந்நாட்டு வேந்தன் இவரைத் தனது தானைக்குத் தலைவன் ஆக்கிக் கொண்டான். படைத்தலைவனாய்ச் சிறந்து நின்ற இவர் படைகளோடு பல போர் முனைகளுக்குச் சென்று பகைவர்களை அடக்கி வெற்றிகளை விளைத்து வந்தார். இவரது அருந்திறலாண்மைகளை வியந்து சோழமன்னன் ஒரு பெரிய நிலப் பகுதியை இவர்க்கு உரிமையாகத் தந்தான். அதனை அடைந்தபின் ஒரு குறுநில மன்னனாய் இவர் தலைமை எய்தி நின்றார். திருமங்களம் என்னும் நிலப்பகுதியை ஆண்டு வந்தமையால் திருமங்கைமன்னன் எனப் பின்பு பேர் பெற்றுச் சீரும் சிறப்பும் மிகுந்து இவர் விளங்கினார். பெற்றோர் இவருக்கு இட்ட பிள்ளைத் திருநாமம் நீலன் என்பதே. குமுதவதி என்னும் பேரழகியை மணந்து அவளோடு அமர்ந்து அரிய போகங்களை நுகர்ந்து இவர் ஆட்சி புரிந்து வந்தார். வருங்கால் உலக வாழ்வுகள் எவ்வளவு தலைமையுடையனவாய்ச் சிறந்திருந்தாலும் நிலையில்லாதன; புலையான துயரங்களையுடையன என்னும் மெய்யுணர்வு தெய்வாதீனமாய் இவருக்குத் தோன்றியது. தோன்றவே யாவும் துறந்து திருமாலையே நினைந்து உள்ளம் உருகி அல்லும் பகலும்

அவரைத் துதித்துத் தொழுது உழுவலன்போடு போற்றி வந்தார். மாலடிக்கே மனங்கரைந்து இவர் பாடிய பாடல்கள் பல: அவற்றுள் எல்லாம் இவருடைய வாழ்வின் வகைகளும் உணர்வின் சுவைகளும் ஒளி வீசி வந்துள்ளன. சில கவிகள் அயலே அறிய வருகின்றன.

வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள்
மாதரார் வனமுலைப் பயனே
பேணினேன்; அதனைப் பிழைஎனக் கருதிப்
பேதையேன் பிறவிநோய் அறுப்பான்
ஏணிலேன் இருந்தேன்; எண்ணினேன் எண்ணி
இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன்; வந்துன் திருவடி அடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்! (1)

சிலம்படி உருவிற் கருநெடுங் கண்ணார்
திறத்தனாய் அறத்தையே மறந்து
புலம்படிந் துண்ணும் போகமே பெருக்கிப்
போக்கினேன் பொழுதினை வாளா;
வலம்புரி தடக்கை ஆயனே! மாயா!
வானவர்க்கு அரசனே! வானோர்
நலம்புரிந் திறைஞ்சும் திருவடி அடைந்தேன்;
நைமிசா ரணியத்துள் எந்தாய்! (2)

சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து
சுரிகுழல் மடந்தையர் திறத்துக்
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த
கண்டனேன்; நமன்தமர் செய்யும்
வேதனைக்கு ஒடுங்கி நடுங்கினேன்; வேலை
வெண்திரை அலமரக் கடைந்த
நாதனே! வந்துன் திருவடி அடைந்தேன்;
நைமிசா ரணியத்துள் எந்தாய்! (3)

ஊனிடைச் சுவர்வைத்து என்புதூண் நாட்டி
உரோமம் வேய்ந்து ஒன்பது வாசல்
தானுடைக் குரம்பை பிரியும்போது உன்தன்
சரணமே சரணம்என் றிருந்தேன்

தேனுடைக் கமலத் திருவினுக்கு அரசே!
திரைகொள்மா நெடுங்கடல் கிடந்தாய்!
நானுடைத் தவத்தால் திருவடி அடைந்தேன்;
நைமிசா ரணியத்துள் எந்தாய்! (4)
(பெரிய திருமொழி)

பொருளுடைமை நில்லாது நீங்கி விடும் என்று பரமனுடைய அருளுடைமையை நாடிப் பத்திப் பரவசராய் இவ்வாறு பல நூறு பாடல்கள் பாடியிருக்கிறார். தன் உள்ளத்தின் ஊக்கத்தினாலேயே அரச செல்வங்களையும் அடைந்து முடிவில் முத்தித் திருவையும் பெற்றிருக்கின்றார். உள்ளம் உடைமையே உண்மையான உடைமை என்பதை உலகம் காண இவர் உணர்த்தி யருளினார்.

**ஊக்கம் உடைய உரவோன் உலகிலுயர்**
**ஆக்கம் அடைவன் அமர்ந்து.**

ஊக்கி உயர்.

---

593 ஊக்கத்தின் உறுதி.

ஆக்கம் இழந்துமேன் ஆரியன் சோர்வின்றிக்
கோக்குலச்சீர் கொண்டான் குமரேசா— நோக்கிநின்று
ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார் (௩)

இ—ள்.

குமரேசா! செல்வம் இழந்தாலும் உள்ளம் தளராமல் ஊக்கி நின்று ஆரியன் ஏன் அரசதிருவை அடைந்தான்? எனின், ஊக்கம் ஒருவந்தம் கைத்து உடையார் ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார் என்க.

ஊக்கம் உடையவர் ஆக்கம் அடைவர் என்கிறது.

ஊக்கத்தை உறுதியாக வுடையவர் செல்வம் இழந்தாலும் அல்லலுழவாமல் முயன்று ஆக்கம் பெறுவர்.

ஒருவந்தம்=உறுதி; நிச்சயம்.

ஒருவாமல் உறவாய் நின்று யாண்டும் உரிமையுடன் உதவி புரிந்து வருவது இவ்வாறு உணர வந்தது.

கைத்து=கைப்பொருளாக.

புறப் பொருள்கள் பேழை முதலிய வேறு இடங்களில் இருக்கும்; ஊக்கம் உள்ளத்துள்ளேயே என்றும் இதமாய் உறைந்திருக்கும் ஆதலால் இதன் உரிமையும் உறவும் உறுதியும் இங்ஙனம் உணர வந்தன.

அல்லாவார்=உள்ளம் கலங்கார்.

உயிர் வாழ்க்கைக்கு உறுதி யாயிருந்த செல்வம் இழந்து போனல் எவரும் அல்லல் உழந்து படுவர்; இது மனிதரிடம் மருவி யுள்ள இயல்பு. இந்த இயற்கையை வென்று ஊக்கம் உடையான் யாண்டும் தளராமல் அதிசய நிலையில் உயர்ச்சி யடைந்திருக்கிருன்.

அல்லல் உருர் என்னமல் **அல்லாவார்** என்றது நிலை குலைந்து நெஞ்சம் கலங்கார் என்னும் நிலைமை தெரிய. அல்லாத்தல், அலமருதல்களின் எதிர்மறையாய் இது ஈங்கு மருவி வந்துள்ளது.

அல்லாந்தான் போலப் பெயர்ந்தான். (கலி 111)

அல்லாந்து அவள் நடுங்க. (சிந்தாமணி 2963)

அல்லாத்தல் நிலையை இவற்ருல் அறிகின்ருேம்.

உடையார் அல்லாவார் என்றதனல் இந்த உடைமையின் தன்மையும் வன்மையும் நேரே தெரிய நின்றன.

அழியா உடைமையாகிய ஊக்கத்தை உடையவர் அழியும் பொருள்களின் அழிவுக்கு அலமரலடையார் என்க.

ஆக்கம் இழந்தாலும் ஊக்கம் உடையவர் உள்ளம் கலங்கார்; ஊக்கி முயன்று எங்கும் உயர்ந்து கொள்வர்.

இவ் வுண்மை ஆரியன்பால் அறிய வந்தது.

சரிதம்.

இவன் வீரபாண்டியன் என்னும் வேந்தன் மைந்தன். தாய் பெயர் இந்து காந்தை. அழகும் அறிவும் ஆண்மையும் ஆற்றலும் இவனிடம் ஏற்றமாயிசைந்திருந்தன. இவனுடைய தமையன் **இராசசூரன்** என்னும்

பேரினன், அரசுரிமையை அவன் அடைந்தான். இவனை மதியாமல் நின்றான். மானமும் வீரமும் உடைய இவன் தன் நாட்டை விட்டுத் தென் நாட்டை நோக்கித் தனியே நடந்தான். களா மரங்கள் அடர்ந்திருந்த ஒரு காட்டில் புகுந்தான். இரவில் தங்கினான். காலையில் எழுந்து அந்த வனத்தின் நிலவளங்களை நுனித்து நோக்கினான். அயலே காடுகளில் வாழ்ந்திருந்த வேடர்களை அழைத்து வந்து அந்த வனத்தைத் திருத்தி வளப்படுத்தி வளநகர் ஆக்கினான். நகரின் நடுவே ஒரு சிவன் கோவில் அமைத்து யாவும் சீர்பெறச் செய்தான். பின்பு அந்நாட்டுக்கு அரசன் ஆய் யாவர்க்கும் நலம் பல புரிந்து வந்தான். மாந்தர் யாவரும் வேந்தர் பெருமான் என இவனை வியந்து புகழ்ந்து வந்தனர். **கரிவலம்வந்தநல்லூர்** என்று இன்று விளங்கி வருகிற தலமே அன்று இவன் அரசு புரிந்திருந்த நகரமாய் உயர் புகழ் பெற்றிருந்தது. இவனுடைய மகன் பெயர் குல பூடண பாண்டியன். அவன் பருவம் அடைந்த பொழுது அரசுரிமையை அவனிடம் அருளி விட்டு மறுமை நோக்கோடு அரிய தவ நிலையில் இவன் மருவியிருந்தான். துட்டர்களை அடக்கிச் சிட்டர்களைப் பரிபாலனம் செய்து சிவ சிந்தனையுடன் உயர்வடைந்த இவனை உலகம் உவந்து புகழ்ந்து வந்தது.

ஆயுமறை யவர்கள்முனி வரர்முதலோர்க்கு
　　இடர்புரியும் அரக்கர் முன்னைத்
தீயவர்கள் தமையடக்கித் திசைவிசயம்
　　தான்புரிந்திந் திரனூர் சென்று
நேயமொடு தருதிறைபெற்று உளமகிழ்ந்து
　　வந்துமனு நீதி யாய்அத்
தூயகரி வலநகரில் இருந்தரசு
　　புரிந்தனன் சீர் துலங்க மன்னே! (1)

அற்றமில் ஆரியவேந்தன் அரசியற்றி
　　வாழ்ந்திடுநாள் அவனுக்கு ஆங்கே
உற்றகுல பூடணபாண் டியன்என்னும்
　　ஒருசுதன்வந்து உதித்தான் வேலை

சுற்றுபெரும் பூவுலகம் அனைத்தையுமத்
திருப்புதல்வன் தோள்மேல் வைத்து
சிற்றிடைஒப் பணைபாகன் திருவுருவத்
தொடுகலந்தான் தென்னர் கோமான்.

(ஆரிய வீரியம்)

ஆரிய மன்னன் சரிதம் சீரிய ஒளியாய் யாவர்க்கும் இவ்வாறு வழி காட்டி யுள்ளது. ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவாமல் ஊக்கம் உடையார் எவ்வழியும் அயராமல் உழைத்து உயர்வர் என்பதற்கு இவன் ஓர் உயர்ந்த சான்றாய்த் துலங்கி யுள்ளான்.

நீங்கா நிறைசெல்வம் நெஞ்சிலுறை ஊக்கமே
ஆங்கே விளையும் அரசு.

ஊக்கம் உயர் திரு.

---

594. ஊக்கத்தின் வரவு

சென்றசெல்வம் எல்லாம்பின் சேர்ந்த பனந்தன்பால்
குன்றுமல் என்னே குமரேசா— நன்றாகும்
ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை. (சு)

இ—ள்.

குமரேசா! நிறைந்த செல்வங்கள் எல்லாம் பனந்து னிடம் ஏன் விரைந்து வந்து சேர்ந்தன? எனின், அசைவு இலா ஊக்கம் உடையான் உழை ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் என்க.

அரிய நிதி வரும் வழி அறிய வந்தது.

தளராத ஊக்கம் உடையவன் இடத்து வளமான பாக்கியங்கள் வழிகேட்டு வலிய வந்து சேரும்.

அதர் = வழி. வினாய் = வினவி.

அதர் பல கடந்து. (புறம் 138)

அதர் மயங்கிய இளையர். (புறம் 150)

அதர் மறுகலின். (கலி 150)

அதர் பல கெழுவு. (பரிபாடல் 6)

அதர் இடைப் பிரிந்த. (ஐங்குறுநூறு 359)

இவற்றுள் அதர் குறித்து நிற்றல் அறிக.

அடுத்து அடுத்து அடிபடர்ந்து ஆதரித்துச் சென்ற நெறி அதர் என நேர்ந்தது. வழக்கமாய் வழங்கப்பட்டது வழி என வந்தது.

உழை=பக்கம்; இடம்.

சோம்பல் யாதும் இல்லாமல் உள்ளக் கிளர்ச்சியுடன் யாண்டும் ஊன்றி முயன்று வருபவனுக்கு எல்லாச் செல்வங்களும் தாமாகவே நேரே வந்து சேரும். அந்த வரவு நிலை இவ்வாறு ஈண்டு அறிய வந்தது.

முயற்சி திருவினை ஆக்கும்; அந்த முயற்சிக்கு உயிர் ஊக்கம். அதனை உரிமையாக உடையவனை நோக்கி ஆக்கம் அவாவி வருகிறது. காரண காரியங்கள் கருதி யுணர வந்தன.

தன்னை ஈன்ற தாய்ப்பசுவை நோக்கிக் கன்று ஓடி வருதல் போல் ஊக்கி முயன்றவனை நோக்கி ஆக்கம் தேடி வருகிறது.

ஒருமுழமும் சேறல் இலர்ஏனும் பொருள் ஊர்க்கே
வரும் வழி வினைய் உழந்து. (சீவக சிந்தாமணி 2556)

நல்வினையாளனை நோக்கிச் செல்வம் நயந்து வருவதை இது வரைந்து காட்டியுள்ளது. பொருள் வழி வினைய் ஊர்க்கே வரும் என்றது இங்கே சிந்திக்கவுரியது.

ஆக்கம் அதர்வினைய்ச் செல்லும் என்பதைக் கருத்தில் கொண்டு அதற்கு ஒரு விரிவுரைபோல் இது வெளிவந்துள்ளது. ஊக்கமும் ஆக்கமும் ஒருமையாய் நெருங்கிய உறவுரிமைகள் உடையன.

ஆக்கம் இங்கு ஒருவரால் அணுக வேண்டுமேல்,
ஊக்கம் உண் டாவரேல் உறுவர்; அன்னது
நீக்கமில் கொள்கையில் நிற்ப ரேஎனின்
மேக்குறு பெருந்திரு விரைவில் மேவுமால்.
(கந்தபுராணம்)

ஆக்கம் அணுக வேண்டுமானல் ஊக்கம் உண்டாவ ரேல் உறுவர் என்னும் இது இங்கு அறிய வுரியது. உறுதியான உள்ளம் உடைமையால் செல்வம் முதலிய எல்லா உடைமைகளும் நேரே சேர வருகின்றன.

உள்ளத்தில் ஊக்கம் உள்ளவன் எல்லாச் செல்வங் களையும் எளிதே அடைந்து உயர்ந்து கொள்கின்ருன்.

இது பனந்தன்பால் தெரிய வந்தது.

சரிதம்.

இவன் சூரிய குலத்தோன்றல். நபாகன் என்னும் மன்னனுடைய அருமைத் திருமகன். தாய் பெயர் சுப் பிரமை. இவன் மதி மாண்பும் மனத்திண்மையும் உடை யவன். பகைவரது படுசூழ்ச்சியால் தந்தை அரசிழந்து நொந்ததைத் தாயின் வாய்மொழியால் அறிந்து இந்த மைந்தன் இளமையில் உளம் மிக வருந்திஞன். மான வீரமாய் மறுகி யிருந்த இவன் பருவம் அடைந்ததும் நீபன் என்னும் முனிவரை அணுகிப் பணிவுடன் ஒழுகி அரிய பல கலைகளைக் கற்ருன். வில் வேல் வாள் முதலிய படைக்கலப் பயிற்சியிலும் உயர்ச்சியாய்த் தேர்ந்தான். இழந்து போன தனது அரசை எப்படியும் அடைந்து கொள்ள வேண்டும் என்று கிளர்ந்து முயன்ருன். துணை வலியோடு மனவலியும் உடையனுய் எதிரிகளுடைய வினைவலிகளை எல்லாம் உணர்ந்து தெளிந்து முடிவில் வென்று கொள்ள விழைந்து வீறுடன் எழுந்தான்.

"தூங்குசிறை வாவலுறை தொன்மரங்கள் என்ன
ஓங்குகுலம் நையஅதன் உட்பிறந்த வீரர்
தாங்கல்கடன் ஆகுந்தலை சாய்க்கவரு தீச்சொல்
நீங்கல்மட வார்கள்கடன் என்றெழுந்து போந்தான்"

அடலாண்மையோடு இவ்வாறு சென்றவன் பகை வரை அடங்க வென்ருன். தனது உரிமையான அரச பதவியை அடைந்தான். மணிமுடிபுனைந்து மாட்சியுடன் ஆட்சி புரிந்தான். பிரியவதி என்னும் அழகிய மனைவி யோடு அமர்ந்து இனிய போகங்களை நுகர்ந்து எவ்வழி

யும் குடிகள் இன்பமாய் வாழ்ந்து வர இவன் யாண்டும் அன்புடன் ஆண்டு வந்தான். தன் உள்ளத்தின் ஊக்கத் தாலேயே வெள்ளம் போன்ற அரச செல்வங்களை அடைந்து அதிசய வேந்தனுய் யாண்டும் துதிகொண்டு விளங்கினன். ஊக்கத்தால் உயர்ந்துள்ளதைக் கண்டு யாவரும் இவனை வியந்து புகழ்ந்து வந்தனர்.

அனந்தனே தாங்கும் அவனியில் முன்னோர்
ஆண்டதன் அரசினை மீண்டு
மனந்தளராமல் மதியுடன் முயன்று
மாண்புடன் கொண்டினிது ஆண்டான்;
இனந்தனில் உள்ளார் இன்புறச் செய்தான்;
எவரையும் நண்புற இசைத்தான்;
பனந்தன்என் றுலகோர் பரிந்துளம் வியந்தார்;
பதியுயர் நிலையினைப் புகழ்ந்தார்.

ஊக்கத்தால் உயர்ந்து சிறந்த ஆக்கங்களை அடைந்து சீர்மையுடன் இவன் வாழ்ந்து வந்துள்ள மாட்சிகளை வையத்தார் இங்ஙனம் வாழ்த்தி வந்துள்ளனர். அசைவிலா ஊக்கம் உடையான் உழை ஆக்கம் அதர்வினுய் வரும் என்பதை எவரும் அறிய இவன் இனிது விளக்கி நின்ருன். விரிவை மனு மரபில் காண்க.

**வெள்ளமெனச் செல்வம் விரைந்து பெருகிவரும்**
**உள்ளம் உறுதி யுறின்.**

உள்ளி உயர்க.

---

595. ஊக்கமே உயர்ச்சி.

**திண்டோள் உயர்ஆதன் தெய்வீகன் உள்ளத்தால்**
**கொண்டார் உயர்வேன் குமரேசா—மண்டிநின்ற**
**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனைய துயர்வு.** (ரு)

இ—ள்.

குமரேசா! ஆதனும் தெய்வீகனும் தம் உள்ளத்தின் ஊக்கத்தால் ஏன் உயர்ந்து சிறந்து விளங்கினர்? எனின், மலர் நீட்டம் வெள்ளத்து அனைய; மாந்தர் தம் உயர்வு உள்ளத்து அனையது என்க.

உரிய உயர்வு நிலை உணர வந்தது.

மலர்களின் நீளம் அவை மருவி யுள்ள நீர் நிலை அளவே; அதுபோல் மாந்தரது உயர்வு அவர்தம் உள்ளத்தின் நிலை அளவே யாம்.

நீரில் பூத்திருக்கும் பூக்கள் நிலத்தில் பூத்து வருகிற மக்களுக்கு இங்கே தக்க உவமையாய் வந்துள்ளது.

மலர் என்றது தாமரை அல்லி நெய்தல் முதலிய நீர்ப் பூக்களை. பொய்கை தடாகம் முதலிய நீர் நிலைகளில் மலர்கள் மலர்ந்திருக்கும். அந்த நீர் எவ்வளவு உயர்ந்துளதோ அவ்வளவு உயரம் நாளங்கள் நீண்டு மலர்கள் வெளியே மலர்ந்து தோன்றும்; தண்ணீர் உயரம் தாழ்ந்திருந்தால் மலர்களும் அந்த அளவே தாழ்ந்து நிற்கும். இந்த நிலைமை மனிதனது உயர்வுக்கு எடுத்துக் காட்டாக ஈண்டு இனிது இசைந்துள்ளது.

கல்வி செல்வம் அதிகாரம் முதலிய நிலைகளில் உயர்ந்து மனிதன் சிறந்து நிற்கின்றான். அந்த நிலைமைக்குத் தலைமையான மூலகாரணம் என்ன? அவனது உள்ளக் கிளர்ச்சியான நல்ல முயற்சியே யாம்,

உள்ளம் ஊக்கி எழாமல் மடிந்திருந்தால் அந்த மனிதன் ஆக்கம் இழந்தவனாய் இழிந்து நிற்பன்.

நீர், நீள நீள மலர் நீண்டு திகழும்; சலம் தாழத் தாழ மலரும் தாழ்ந்துபடும். நீர் நிலை மனிதனுக்கும், வெள்ளம் உள்ளத்திற்கும், மலரின் நீட்சி மனிதனது உயர்ச்சிக்கும் நேரே ஒப்பாம்.

நீர் அளவே ஆகுமாம் நீர்ஆம்பல்; தான்கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண்அறிவு.

ஒளவையாரும் இவ்வாறு கூறி யிருக்கிறார்.

உள்ளத்தின் அளவே மனிதன் உருவாகி வருகிறான். அது நல்லதாய் உயர்ந்துவரின் நலம் பல பெருகி வர அவன் உயர்ந்து சிறந்து ஒளி மிகுந்து திகழ்கிறான்.

பேரின்ப நிலையையும் அதனால் நேரே பெறுகிறான்.

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே. (திருமுருகு)

முருகக் கடவுளின் திருவடியை அடைய விரும்பிய மேலான உள்ளத்தோடு நீ செல்வையாயின் அந்தப் பேரின்ப நிலையை விரைந்து பெறுவாய் என இஃது உணர்த்தியுள்ளது. செம்மல் உள்ளமே இம்மையும் மறுமையும் இன்பம் தர வுரியது என்பதை இங்கே நன்கு தெரிந்து கொள்கிறோம். உள்ளம் பரமனை எண்ணி உருகினால் பேரின்பவெள்ளம் அங்கே பெருகி வருகிறது.

செய்வினை முடித்த செம்மல் உள்ளமோடு
இவளின் மேவலம் ஆகிக் குவளைக்
குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே.

(குறுந்தொகை 270)

அரிய வினை செய்து பெரிய பொருளை ஈட்டி வந்து இனிய மனைவியோடு இன்பம் நுகர்கின்ற ஒரு தலைமகன் தனது உயர்நிலைக்கு உரிய மூல காரணம் செம்மல் உள்ளமே என்று இதில் உவந்து மொழிந்துள்ளான். செம்மல்=சிறந்த. ஊக்கி உயர்ந்த மனம் ஆக்கமும் இன்பமும் அருளி வருதலால் இவ்வாறு புகழ வந்தது.

முயற்சி செய்து செய்து செல்வத்தை எய்தி உலக வாழ்வில் உயரவும், உண்மை தெளிந்து உயிர் துயர் நீங்கி உய்தி பெறவும் உள்ளமே மனிதனுக்கு உறுதித் துணையா யுள்ளது. அந்த உண்மை அறிய நின்றது.

ஒன்றாய ஊக்கஏர் பூட்டி
யாக்கைச் செறுஉழுது
நன்றாய நல்விரதச் செந்நெல்
வித்தி ஒழுக்கநீர்
குன்றாமல் தாம் கொடுத்துஐம்
பொறியின் வேலி காத்து ஓம்பின்

வென்றார்தம் வீட்டின்பம் விளைக்கும்
விண்ணோர் உலகு ஈன்றே.

(சீவக சிந்தாமணி 963)

சுவர்க்க போகத்தையும் பேரின்ப வீட்டையும் ஒருவன் பெறுதற்கு முதன்மையான காரணமாயிருப்பது உள்ளத்தின் ஊக்கமே எனச் சீவக மன்னன் இன்னவாறு கூறியிருக்கிறான். உருவக உரைகளை ஊன்றி உணர்ந்து பொருள் நயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உள்ளம் உள்கி உகந்து சிவன் என்று
மெள்ள உள்க வினைகெடும் மெய்ம்மையே;
புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே (தேவாரம்)

உள்ளம் ஊக்கிச் சிவபெருமானை உரிமையுடன் கருதின் அல்லல்கள் நீங்கி ஒழியும்; எல்லையில்லாத இன்பங்கள் எய்தும் என அப்பர் இப்படி அறிவுறுத்தியிருக்கிறார்.

தம் உள்ளம் உயர உயர உலக வாழ்வில் உயர்ந்து உண்மை நிலை தெளிந்து பின்பு பேரின்ப வெள்ளத்தை மாந்தர் பெறுவர். எல்லாப் பேறுகளையும் உள்ளம் அருள வல்லது; அதனை உயர்த்தி உய்க.

உள்ளம் ஊக்கி முயன்றவர் உலகத்தில் உயர்ந்த செல்வங்களை அடைந்து யாண்டும் சிறந்து விளங்குவர்.

இதனை ஆதனும், தெய்வீகனும் விளக்கி நின்றனர்.

### சரிதம்.

ஆதன் என்பவன் சேரமன்னன். சிறந்த நீதிமான். பெருங் கொடையாளன். பெரிய போர் வீரன். கருதியதைக் கருதியபடியே முடிக்கும் உறுதியுடையவன். தன் ஊக்கமே துணையாக எவ்வழியும் முயன்று அரிய பெரிய ஆக்கங்களை அடைந்து அதிசய நிலையில் ஆட்சி புரிந்தவன். இவனுடைய நீர்மை சீர்மைகளை வியந்து யாவரும் உவந்து வந்தனர். புலவர்களும் புகழ்ந்து பாடியுள்ளனர். பாடல் ஒன்று ஈண்டு அறிய வருகின்றது.

வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅது
இடம்சிறிது என்னும் ஊக்கம் துரப்ப
ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேரல் ஆதனை
யாங்கனம் ஒத்தியோ? வீங்குசெலல் மண்டிலம்;
பொழுதென வரைதி; புறக்கொடுத்து இறத்தி;
மாறி வருதி; மலைமறைந்து ஒளித்தி;
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியால் பல்கதிர் விரித்தே. (புறம்: 8)

உலக சோதி ஆகிய சூரியனினும் இக்குல வேந்தன் சீரிய சிறப்பினன் எனப் புலவர் திலகராகிய **கபிலர்** இவ்வாறு பாடியிருக்கிறார். "வான மண்டலத்தில்உலாவி வருகிற ஓ ஆதவனே! நீ பகலில் மாத்திரம் விளங்குகிறாய்; இரவில் இறந்து போகிறாய்! எங்கள் அரசனை ஆதன் பகலிலும் இரவிலும் விளங்கி எவ்வழியும் எவ்வுயிரையும் பாதுகாத்து வருகிறான்; யாண்டும் புகழ் ஒளி வீசி என்றும் நிலைத்து நிற்கிறான்; இத்தகைய உத்தம வேந்தனோடு எத்தகைய வகையிலும் நீ ஒத்தவன் என நேரே நிற்க முடியாது" என்று புலவர் பரவசமாய் இவனைப் புகழ்ந்து போற்றி யிருக்கிறார். **ஊக்கம் துரப்ப ஒடுங்கா உள்ளத்தால்** இவன் உயர்ந்திருக்கிறான்.

மல்லல் உள்ளமொடு மாசற விளங்கிய
செல்வக் கடுங்கோ வாழி யாதன். (பதிற்றுப்பத்து)

நல்ல உள்ளக்கிளர்ச்சியான ஊக்கத்தால் எல்லாச் செல்வங்களையும் எய்தி அரசர்க்கு அரசனாய் இவன் விளங்கியிருக்கிறான். அந்த உண்மையை இந்த உரைகளால் உணர்ந்து தெளிந்து கொள்கிறோம். மாந்தர் தம் உள்ளத்து அனையது உயர்வு என்பதை உலகம் அறிய இந்த வேந்தன் நன்கு உணர்த்தி நின்றான்.

தெய்வீகன்.

இம்மன்னன் திருக்கோவலூர் என்னும் நகரில் இருந்து அரசு புரிந்தவன். பல கலைகளையும் நன்கு பயின்று

தெளிந்தவன். எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணியன். மதி நலத்தோடு அதிசய ஆற்றல்கள் பல இவனிடம் மருவி யிருந்தமையால் யாவரும் இவனைப் புகழ்ந்து வந்தனர். சிற்றரசனாயினும் பேரரசரும் வியந்து புகழும்படி தன் உள்ளத்தின் ஊக்கத்தால் இவன் உயர்ந்து விளங்கினான். தவமுது மகளாகிய ஔவையார் இவன்பால் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்தார். இவனது கலியாண விருந்துக்குப் பெண்ணையாற்று நீரே பாலும் நெய்யும் ஆய்ச் சீரோடு பெருகி நேரே வர வேண்டும் என்று அந்த நதியை நோக்கித் துதி செய்து பாடினார்;

முத்தெறியும் பெண்ணை முதுநீர் அதுதவிர்ந்து
தத்திய நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத்தெய் வீகன் திருக்கோவ லூர்க்கு
வரும்அளவும் கொண்டோடி வா. (ஔவையார்)

அந்தத் தவ மூதாட்டி இவனிடம் கொண்டுள்ள தாய்மை அன்பை இதனால் ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். இந்தச் சரித நிகழ்ச்சியைப் பலரும் புகழ்ந்துள்ளனர். வரந்தருவாரும் வியந்து பாடியிருக்கிறார்.

அவ்வை பாடலுக்கு நறுநெய்பால் பெருகி
அருந்தமிழ் அறிவினால் சிறந்து
பௌவநீர் ஆடைத் தரணிமான் மார்பில்
பயிலும்உத் தரியமும் போன்று
மொய்வரால் கெண்டை வாளைசேல் மலங்கு
முதலிய சனம்எதிர் கொள்ளத்
தெய்வமா நதிநீர் பரக்குநாடு அந்தத்
திருமுனைப் பாடிநன் நாடு. (பாரதம்)

தமிழ்ப்பாட்டுக்கு உவந்து தெய்வீகனுக்கு நெய் பால் அருளியுள்ளமையால் பெண்ணையாறு தெய்வமா நதி எனச் சிறந்து வந்தது. இத்தகைய எல்லா மேன்மைகளையும் தன் நல்ல உள்ளத்தின் ஊக்கத்தாலேயே இவன் எய்தி யிருக்கிறான். மலர் நீட்டம் வெள்ளத்து அனையது; மாந்தர் உயர்வு உள்ளத்து அனையது என்பதை உலகத்தார் இவனிடம் உணர்ந்து உவந்தனர்.

**மனத்தின் மலர்ச்சி அளவே மனிதன்**
**இனத்துயர்ந் துள்ளான் எழுந்து.**

*மனம் உயர மனிதன் உயர்கிருன்.*

---

உயர்வே உள்ளுக.

596 தெள்ளு வசுமன் திரிசங் குயர்வுள்ளிக்
கொள்ள நின்ருர் என்னே குமரேசா—எள்ளாமல்
உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (சூ)

இ—ள்,

குமரேசா! வசுமனும் திரிசங்கு மன்னனும் ஏன் உயர் நிலையையே கருதி ஊக்கி முயன்ருர்? எனின், உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்; மற்று அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து என்க.

உள்ள உரியன உணர வந்தன.

எண்ணுவது யாவும் மேலான நிலைகளையே எய்த எண்ணுக; அவை எய்தா விடினும் எய்திய படியாம்.

நீர்த்து = நீர்மையுடையது. நீர்மை = இயல்பு; தன்மை. உயர்வையே அயராமல் யாண்டும் எண்ணுக.

உள்ளுவது என ஒருமையில் குறித்தது மனிதனது மனநிலை தெரிய வந்தது. ஒவ்வொன்ருகவே எதையும் விரும்பி எண்ணுவன்; அவ்வாறு எண்ணுவன பலவாம்; ஆகவே ஒருமையும் பன்மையும் இங்கே உடன் மருவி நின்றன. கருதிய அளவே காட்சி யுறுகிறது.

உயர்வு என்றது எவ்வகையிலும் தலைமையான உயர்ந்த நிலைமையை. உறுதியோடு மனிதன் எதை எண்ணி வருகிருனே அதனையே அவன் அடைய நேர்கிருன். நினைவின் நீர்மை அளவே மனிதனுடைய சீர்மைகள் வெளியே தெரிய வருகின்றன.

உள்ளல்= உரிமையுடன் கருதுக.

அல் விகுதி உடன்பாட்டு வியங்கோளில் வந்தது. எண்ணம் உயர உயர அந்த மனிதனும் உயர்கின்ருன். சீவ தத்துவம் தேவரகசியமா யுள்ளது. கருதி வருவது எதுவோ? அதுவே நேரே காண வருகிறது.

உள்ளத்தின் இயல்புகளைத் தெள்ளத் தெளிந்த ஓர் உளநூல் அறிஞர் ஒருநாள் ஒரு பள்ளிக்குள் சென்ருர்; அங்கே பயின்று கொண்டிருந்த மாணவர்களின் நிலைமைகளைத் தெரிய விழைந்தார்; ஆசிரியரும் துணை புரிந்தார். அவர் சோதனை செய்யத் துணிந்தார்; ஒரு பையனை நோக்கி எண்ணலளவையில் ஒரு தொகையைச் சொல் என்ருர்; அவன் பத்து என்ருன். அடுத்து நின்றவனைக் கேட்டார்; அவன் நூறு என்ருன்; மற்று ஒருவன் ஆயிரம் என்ருன்; பின் ஒருவன் கோடி என்ருன். அந்த இயல்புகளை எல்லாம் ஓர்ந்து உணர்ந்த அவர் அயலே நின்றவரிடம் "இவன் உள்ளம் உயர் வினை உள்ளி யுள்ளமையால் பெரியவனை போது தலைமையான உயர் நிலைமைகளை அடைவான்" என்று தனியே உரைத்துப் போனார். அவ்வாறே அவன் உயர்ந்து விளங்கினன். அவனது விளக்கம் மானச தத்துவமாய் அதிசய வியப்பினை விளைத்து வந்தது.

சின்ன எண்ணங்கள் செப்பினர்; சின்னவர்
என்ன நின்றனர்; எண்ணல் அளவையில்
முன்னம் ஓடிய கோடிஎன் ருன்முதல்
மன்னன் ஆகி மருவினன் வாழ்விலே.

(உளவியல்)

உள்ளம் நல்லதாய் உயர்ந்தபோது எல்லா உயர்வுகளும் அவனுக்கு இயல்பாய் அமைகின்றன. முன்னமே பழகி வந்துள்ள வாசனைகளின் படியே வாழ்வுகள் கிழமை தோய்ந்து வளமையாய் வாய்ந்து வருகின்றன.

தள்ளினும் = உள்ளியது உருமல் நழுவினும்.

அவ்வாறு தவறுதல் அரிது என்பதை உம்மை உணர்த்தி நின்றது. எவ்வழியும் எதையும் மேலாகவே எண்ணி வருக. மேன்மைகள் உன்னை நோக்கி வரும்.

கருதியபடி பலன் கைகூடாது போயினும் அந்தக் கருத்து மருமமாய் விருத்தி யடைந்து வியனுன பயனை நயமாய் நன்கு அடைந்து கொள்ளும் ஆதலால் தன்னினும் தள்ளாமை நீர்த்து என்றார்.

அரியதைக் கருதி ஆற்றுவதே பெரியர் இயல்பு.

இசையும் எனினும் இசையாது எனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்—விசையின்
நரிமா உளம்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல். (நாலடி: 152)

மேலோர்கள் எவ்வழியும் உயர்நிலைகளையே எண்ணுவர்; அவை கைகூடாது ஒழியினும் கவலையுறார்; நரியைக் குறி தவருமல் எய்து வெல்வதினும் சிங்கத்தை எய்து வெல்லாது போயினும் அது மேன்மையேயாம். இதில் குறித்துள்ள குறிப்புகள் கூர்ந்து சிந்திக்க வுரியன. நரி இழிவுக்கும், அரிஏறு உயர்வுக்கும் உரியவாம்.

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. (குறள் 772)

இதுவும் ஈண்டு இனமா எண்ணி யுணரவுரியது.

சிறியதை எண்ணித் தவருமல் பெறுவதினும் பெரியதை உள்ளிப் பெருமல் தவறி விடினும் அது பெருமையே. இந்தக் கருத்தை மேலே குறித்தன தெளிவாக வலியுறுத்தி யுள்ளன.

Dream manfully and nobly and thy dreams shall be prophets. (Bulwer)

"உயர்வையே உறுதியாய்க் கருதுக; அந்த உள்ளக் கருத்துக்கள் தீர்க்க தரிசனங்களாம்" என்னும் இந்த ஆங்கில வாசகம் ஈங்கு ஊன்றி உணர வுரியது.

In great attempts it is glorious even to fail.
(Longinus)

"பெரிய முயற்சிகளில் உரிய பலன் தவற நேரினும் அது மகிமையே யாம்" என இது குறித்துள்ளது.

உயர்ந்த குறிக்கோளையே உரிமையுடன் எண்ணி வருபவன் சிறந்த மனிதனாய் உயர்ந்து திகழ்கின்றான்.

மதிநலம் உடையனாய்த் துணிந்து முயல்பவனிடம் அதிசய ஆற்றல் மருவி வருகிறது; வரவே அவன் அரிய பெரிய பொருள்களை எளிதே அடைய நேர்கின்றான்.

ஊக்கம் முயற்சி உறுதி துணிவாற்றல்
ஆக்கும் அறிவுநலம் ஆறுமே—நோக்கமாய்
எங்கே இடம்பெற் றிருக்குமோ தெய்வமும்
அங்கே இருக்கும் அமர்ந்து.

உயர்ந்தோர் எவ்வழியும் உயர்வையே கருதி முயல்வர்.

இதனை வசுமனும் திரிசங்கும் உணர்த்தி நின்றனர்.

**சரிதம்.**

வசுமன் என்பவன் மனு மரபினன். அரியச்சுவன் என்னும் அரசனுடைய அருமைத் திருமகன். மதி நலமும் அரிய பல குண நலன்களும் இயல்பாக அமைந்தவன். இவனது மனைவி பெயர் வசுமதி. பேரழகுடைய அவளோடு அமர்ந்து இனிய போகங்களை நுகர்ந்து மாந்தர் யாவரும் மகிழ்ந்து வாழ்ந்து வர இவ்வேந்தன் அரசு புரிந்து வந்தான். எண்ணிய மேன்மைகள் யாவும் புண்ணியமே நல்கும் என்னும் உண்மையை உணர்ந்து எவ்வழியும் நன்மைகளே புரிந்து வந்தான். யாண்டும் உயர்வையே கருதி ஒழுகி வந்த இவன் இறுதியில் இந்திர பதவியை எய்த விரும்பினான். பல அசுவ மேதயாகங்கள் செய்தான். கருதியபடி அதனை அடைய முடியவில்லை. வானவர் கோன் பதமும் இடையே அழிவுடையது; என்றும் அழியாத பேரின்ப நிலையைப் பெறுவதே பெருமகிமையாம் எனத் தத்துவ ஞானிகள் இந்த வித்தக விவேகிக்கு உணர்த்தினர். அவ்வாறே உணர்ந்து அரசைத் துறந்து அருந்தவம் புரிந்து அதிசய ஆனந்த நிலையை அடைந்தான்.

அலங்கிலைவேல் வசுமனுப் புரவி வேள்வி
ஆற்றுழியின் முனிவரரை அன்பின் நோக்கிப்

புலன்கள் அடக் கியதவத்தில் வேள்வி தம்மில்
பொருவில் சந்நி யாசத்தில் பொலிந்தது என்னே?
துலங்கஉ ரைத் திடுதிர்எனப் பலன்வெஃ காது
நோற்றிடுதல் அருமறையின் துணிவாம் என்ன:
உலங்கெழுதோள் மைந்தனுக்கு மவுலி சூட்டி
உறுதவத்தின் தலை நின்றான் உரவுத் தோளான்.

ஆங்கவன்நல் தவம்நோக்கி மலரோன் எய்தி
ஆயுள்ஒரு நூறு அளித்தான்; அமலன் அன்னோன்
ஓங்குதவம் தனைநோக்கி வியந்து பின்னும்
ஆயுள்ஒரு நூறளித்தான்; ஒளிசெய் பூணோன்,
பூங்கமல முகையவிழ்க்கும் கடவுட் போற்றிப்
பொருவறுகா யத்திரியைப் புகன்று வெய்ய
தீங்கதிர்மண் டலத்திருக்கும் எண்தோள் முக்கண்
தேவின்மலர் அடிநீழல் சேர்ந்தா னன்றே. (2)

(கூர்ம புராணம்)

உயர்வையே உள்ளி இவன் உயர்ந்துள்ளதை இவற்றால் உணர்ந்து தெளிந்து கொள்ளுகிறோம். நேர்ந்துள்ள நிலைகளையும், நிலையான உயர்வுகளையும் இங்கே கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து கொள்ள வேண்டும். ஊக்கத்தோடு உள்ளம் உயர்ந்து வரின் அந்த மனிதன் ஆக்கத்தோடு சிறந்து திகழ்வன் என்பது தெரிய நின்றது.

திரிசங்கு.

சூரிய குலக் குரிசிலாகிய **திரிசங்கு** மன்னன் அதிசய மதிமான். தன் உள்ளத்தின் உறுதியால் எல்லா மேன்மைகளையும் எய்தி உயர்ந்தவன். மருவியுள்ள மானிட வடிவுடன் வானுலக வாழ்வை அடையக் கருதி அயராது முயன்று இறுதியில் வந்து கோசிகன் மூலம் தேசுடன் அந்த உயர் பதவியை அடைந்து ஒளி மிகுந்து நின்றான். இவனது அரிய உறுதி நிலையை அமரர் முதல் அனைவரும் வியந்து புகழ்ந்தனர்.

அந்நாளில் எனைத்**திரி சங்கு** அருகுற்று
அங்கத்தொடு விண்புகல் வேண்டும் எனச்
சொன்னான் முடியாதுஎன யான்மொழியத்
துறவோர் பிறரால் உறுவேன் எனலும்

இன்னாது உரை செய்தனை நீ புலையாகு
 எனவே புலையாய் எழில்கெட்டு அவமே
தன்னொடு அணுகித் தமர்சீ எனவே
 தள்ளத்தள மெள்ள நடந்தனனே: (1)

அன்றே எனைவிட்டு இவனைத் தரிசித்து
 அங்கத்தொடு விண்புகல் வேண்டும் எனக்கு
என்றேதன் உளத்தது சொல்ல அவன்
 என்னோடு தொடுத்த மறத்தொழிலால்
குன்றேயும் விமானம் அழைத்ததன் மேல்
 கோஏறென ஏறி நடந்திடவே
சென்றேஅம ராவதி சேருதலும்
 தேவாதிபர் கண்டு சினந்தனரே. (2)

புலையா! சுரர் நாடு புகேல் எனவே
 புறம் உந்தினர் வானவர் புட்பகமோடு
அலையா விழுவான் முனிகௌசிகனுக்கு
 அபயம் என வீழ்வது அறிந்து எதிர்போய்
நிலையான விமானம் விழாது நிறீஇ
 நெடுவெஞ் சினமாய் விழிநின்றகனல்
பலபாலும் எரிந்தன பல்லுயிரும்
 படாதீயினில் வெந்து பதைத்தனவால். (3)

இவ்வண்டம் அனைத்தும் எரித்துலகம்
 ஈரேழுடன் இந்திரனும் அயனும்
தெய்வங்களும் வேறு படைப்பன் எனாத்
 தேவாதிபன் மால்சிவனோடயன் வந்து
எவ்வண்ணம் விளைந்திடும் என்ன இரந்து
 எழுகின்ற சினம்தணி வித்துலகம்
உய்வண்ணம் உறத்திரி சங்குதனக்கு
 உடுவின்பதம் நல்க வுரைத்தனரே. (4)

(அரிச்சந்திரம்)

காசி மன்னனிடம் வசிட்ட முனிவர் இவ்வாறு உரைத்திருக்கிறார். நடந்துள்ள வரலாறுகளை இவை நன்கு வரைந்து காட்டியுள்ளன. யாவும் கருதியுணர உரியன. தன் உள்ளத்தின் ஊக்கத்தால் இம் மன்னன் உயர்ந்துள்ள நிலைமையைத் தலைமையாக இதில் ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிறோம். உள்ளுவது எல்லாம் உயர்வு

உள்ளல் மற்று அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து என்பதை வையகமும் வானகமும் அறிய இம்மான வீரன் நேரே உணர்த்தி நின்ருன்.

அரிய நிலையை அடைய முயல்க
உரியவுயர் வெல்லாம் உறும்.

உயர்வே கருதி உய்க.

---

597. உரவோர் ஒல்கார்.

வென்றியுயர் உக்கிரமன் விக்கிரமன் வெவ்விடரில்
குன்ருதேன் நின்ருர் குமரேசா—ஒன்றும்
சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு. (எ)

இ-ள்

குமரேசா! உக்கிரகுமாரனும் விக்கிரமனும் இடையூறுகளில் ஏன் தளராமல் ஊக்கி நின்ருர்? எனின், களிறு புதை அம்பில் பட்டுப் பாடு ஊன்றும்; உரவோர் சிதைவிடத்து ஒல்கார் என்க.

அயரா ஆண்மை அறிய வந்தது.

யானை தன்மேல் அம்புகள் பாய்ந்தாலும் அயராது செல்லும்: அதுபோல் மான வீரர் அல்லலுறினும் உள்ளம் கலங்காமல் ஊக்கி முயல்வர்.

சிதைவு=கேடு; அழிவு.
ஒல்கார்=குன்ருர்; தளரார்.
உரவோர்=மனவுறுதி யுடையவர்.
புதை=அம்புகளின் கட்டு.
பாடு=பெருமை; திண்மை.
ஊன்றும்=நிலைத்து நிற்கும்.

களிறு என்றது ஆண் யானையை.

களிறு ஊன்றும்; உரவோர் ஒல்கார் என்க.

எடுத்துக்காட்டு உவமையும் உவமேயமும் இவ்வாறு மடுத்து அடுத்து மாண்புற வந்துள்ளன.

பரியது; கூர்ங் கோட்டது ஆயினும் புலி பாய்ந்தால் யானை வெருவும் என இந்த அதிகாரத்தின் ஒன்பதாவது பாட்டில் குறித்துள்ளார். இங்கே அம்பு பாய்ந்தாலும் அது யாதும் அஞ்சாமல் செல்லும் என ஊக்கம் உடைமைக்கு உரிமையாகக் கூறியிருக்கிருர். முன்னும் பின்னும் நேரே முரணுகின்றன.

மாறுபாடுகளாய் இவை தோன்றுமாயினும் ஊன்றி ஓர்ந்து உண்மையைத் தேர்ந்து கொள்ள வேண்டும்.

மிக்க ஊக்கம் உள்ள புலியின் ஏற்றமான ஆற்றலை அங்கே அவ்வாறு விளக்கினர்; யானையின் இயற்கையான திண்மையை இங்கே இவ்வாறு கூறியருளினர். ஊக்கி உழைக்கும் திறம் ஈங்கு உரிமையாய் உணர வந்தது; போர் ஆற்றும் வீரம் ஆங்கு அறிய நின்றது.

யானை, ஊக்கம் உடையவனுக்கும்; புதை அம்பு, இடர்கள் அடர்தற்கும்; பாடு ஊன்றல். உள்ளம் தளராமல் உறுதியாய்ச் செல்லுதற்கும் ஒப்பாம்.

உள்ளத்தில் உரம் உள்ளவன் உலகத்தில் நேர்கிற இடையூறுகளுக்கு அஞ்சாமல் யாண்டும் துணிந்து கருதிய காரியங்களை வீரியமாய் முடித்துக் கொள்வான்.

உள்ளுவது எல்லாம் உயர் உள்ளி ஊக்கி முயலுக; அவ்வாறு முயன்று வருங்கால் இடையே மிடைகிற தடைகளைக் கண்டு தளர்ந்து படாதே; எவ்வழியும் கிளர்ந்து எண்ணியதை எண்ணி யாங்கே எய்துக.

மூண்டு வந்த இடையூறுகளுக்கெல்லாம் யாண்டும் ஒல்காமல்நீண்டு நின்று கருதிய தவத்தை உறுதிபெற முடித்துத் தேவர் யாவரும் வியந்து புகழ்ந்து வாழ்த்த விசுவாமித்திரர் உயர்ந்து விளங்கி நின்றுள்ளது எதனுல்? தம் உள்ளத்தின் ஊக்கத்தாலே யாம்.

தன் உள்ளம் உறுதியும் ஊக்கமும் உடையதாயின் அந்த மனிதன் அதிசய ஆற்றல்கள் உடையவனுய் உலகம் துதி செய்து வர எங்கும் துலங்கி நிற்கின்ருன்.

தன் நெஞ்சமே தஞ்சம், தன்கையே தனக்குத் துணை என்று கருதியுள்ள உரவோன் பிறர் எவரையும் எதிர்பாரான்; எதற்கும் அஞ்சான்; அஞ்சாத மேன்மையை எஞ்சாமல் அருளுவது இனிய மன வுறுதியே.

எமக்குத் துணையாவார் யாவர்என் றெண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாம்தெரிதல் வேண்டா;
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ?மற் றில்லை;
தமக்கு மருத்துவர் தாம். (பழமொழி 56)

பிறருடைய ஆதரவை நீ விரும்பாதே; எவரும் உனக்கு உண்மையாக உதவி செய்யார்; உன் உள்ளமே துணையாய் உறுதி கூர்ந்து முயன்று நீ உயர்ந்து கொள்ள வேண்டும் என இஃது உணர்த்தியுளது.

கல்லான் கடைசிதையும்; காமுகன் கண்காணான்;
புல்லான் பொருள்பெறவே பொச்சாக்கும்-நல்லான்
இடுக்கணும் இன்பமும் எய்தியக் கண்ணும்
நடுக்கமும் நன்மகிழ்வும் இல். (அறநெறி: 105)

கல்லாதவன், காமுகன், புல்லியன் என்னும் இவர் புலை நிலையினர்; நல்ல உள்ளம் உடையவன் இடுக்கணில் நடுங்கான்; இன்பம் உறினும் செருக்கிக் களியான் என முனைப்பாடியார் இப்படிக் குறித்திருக்கிறார். **சிதையும்** என்னும் பதம் இதிலும் வந்துளது.

அஞ்சாத ஆண்மையாளர் மேன்மையான மத யானை போல் யாண்டும் கம்பீரமாய்ச் சிறந்து எவ்வழியும் ஊக்கம் உடையராய் உயர்ந்து விளங்குவர்.

இவ்வுண்மையை உக்கிரகுமாரனும், விக்கிரமனும் நன்கு விளக்கி எங்கும் இசைபெற்று நின்றனர்.

### சரிதம்.

மதுரையம் பதியிலிருந்து நீதிமுறையுடன் அரசு புரிந்த உக்கிரகுமார பாண்டியன் மீது இந்திரன் பொறாமை கொண்டு பல இடையூறுகளை விளைத்து வந்தான். அவற்றிற்கெல்லாம் யாதும் அஞ்சாமல் நின்று இம்மன்னன் தொண்ணூற்றாறு பரிவேள்விகளைத்

தொடர்ந்து முடித்தான். முடிக்கவே தன் முடி இழந்தது போல் அவ் வானவர் கோன் கடிது கவன்று இம் மானவர் கோன் வளநகரை வாரி ஏவி அழித்து விடும்படி வருணனை வேண்டி மருமமாய் விடுத்தான்.

பொருங்கடல் வேந்தனைக் கூவிப் பொள்ளென
இருங்கடல் உடுத்தபார் ஏழும் ஊழிநாள்
ஒருங்கடும் வெள்ளம்ஒத்து உருத்துப் போய்வளைந்து
அருங்கடி மதுரையை அழித்தி யால்என்றான். (1)

விளைவது தெரிகிலன் வேலை வேந்தனும்
வளவயல் மதுரையை வளைந்திட் டிம்மெனக்
களைவது கருதினன்; பேயும் கண்படை
கொளவரு நனந்தலைக் குருட்டுக் கங்குல்வாய். (2)

நடு நிசியில் இவ்வாறு படு மோசமாய்க் கடல் கொதித்துப் பொங்கிப் புகுந்து நகரை அழிக்கத் தொடங்கவே இக் கோமகன் துயில் துறந்து விரைந்து எழுந்து வடிவேலை எடுத்துச் செவ்வேளைச் சிந்தித்துக் கடல் மேல் கடுத்து எறிந்தான். உடனே வெள்ளம் அடியோடு வற்றி அஞ்சி மீண்டு போய் அடங்கி ஒடுங்கி நின்றது.

எடுத்தவேல் வலம்திரித்து எறிந்தவேலை வேல்முனை
மடுத்தவேலை சுஃறென வறந்துமான வலிகெட
அடுத்து வேரி வாகையின்றி அடிவணங்கு தெவ்வரைக்
கடுத்தவேல் வலான்கணைக் காலின்மட்ட தானதே. (1)

சந்தவேத வேள்வியைத் தடுப்பதன்றி உலகெலாம்
சிந்தவேறு சூழ்ச்சிசெய்த தேவர்கோவின் ஏவலால்
வந்தவேலை வலியழிந்த; வஞ்சகர்க்கு நன்றி செய்து
இந்தவேலை வலியிழப்பது என்றும் உள்ள தேகொலாம்.
(திருவிளையாடல்: 13)

நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளை இவற்றால் ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். இம் மன்னனுடைய மன வலியையும் மான வீரத்தையும் வியந்து தேவராசனும் பயந்து நின்றான். உரவோர் சிதைவிடத்து ஒல்கார் என்பதை உலகம் அறிய இக் குலமகன் உணர்த்தி நின்றான்.

விக்கிரன்.

இவன் ஏயர் குல மன்னன். பல கலைகளையும் பயின்று தெளிந்தவன். வித்தக விவேகமும் தத்துவ ஞானமும் இவனிடம் தழைத்து நின்றன. உற்ற அல்லல்களை எல்லாம் தன் உள்ளத் துணிவால் நீக்கி வெற்றி வீரனாய் இவன் விளங்கி வந்தான். பெருங் கொடையாளன் ஆதலால் எதையும் எவர்க்கும் வாரி வழங்கினான். தன் தங்கை மகன் ஆன உதயணனுக்குத் தன் அரசுரிமையைக் கொடுத்து விட்டுத் துறவியாய் ஒதுங்கி உயர் தவம் புரிந்து உய்தி பெற்றான்.

வீயாச் செங்கோல் விக்கிரன் ஒருநாள்
எச்சம் இன்மையின் எவ்வம் கூராத்
துப்புர வெல்லாம் துறப்பேன் யான்எனத்
தற்பயந்து எடுத்தவன் தாள்நிழல் வந்தோன்;
மதலை ஆகுமிப் புதல்வன் யார்? எனச்
செருமிகு சீற்றத்துக் குருகுலத்து அரசன்
சாயாச் செங்கோல் சதானிகன் தேவி
அருமைசால் கற்பின் மிருகா பதிஎனும்
நுங்கை தன்னகர்க் கங்குற் கிடந்தோட்கு
இன்னது நிகழ இவ்வயின் தந்த
பொன்னணி பைம்பூண் புதல்வன் தான்இவன்
ஐயாண்டு நிறைந்தனன் ஆதலின் இவனைத்
தெய்வ ஞானம் திறம்படக் காட்டித்
தன்னகர்க்கு உய்ப்பேன் என்றலும்; அடிகள்
என்னுழைத் தம்மின் இறைஎன இயற்றித்
தாயம் எல்லாம் தனக்குரித் தாக
ஏயர் கொற்றம் இவன்வயிற் கொடுத்துப்
பெறலரும் பெருந்தவத்து உறுபயன் கொள்வல்என்று
ஆய்புகழ் முனிவனொடு தேவியை இரந்து
செருமிகு குரிசில்தன் மருமகற் றழீஇ
நீல யானை நின்றது பண்ணிக்
கோல எருத்தம் குலவ ஏற்றி
வளநகர் புக்குத்தன் உளமணைக் கெல்லாம்
உதயணன் இறைஎன அறிவரச் சாற்றி,
வேத்தவை நடுவண் வீற்றினிது இருத்தி,
ஏயர் குலமுதற்கு இறைவன் ஆகி (பெருங்கதை 2-11)

தன் அரச திருவைத் தங்கை மகனுக்குத் தந்து அவனைச் சிங்காசனத்தில் இருத்திச் சீரும் சிறப்பும் செய்துள்ள இவனுடைய சீர்மை நீர்மைகளை இதில் கூர்மையாய் ஓர்ந்து உணர்ந்து உவந்து கொள்கிறோம். உலக வாழ்வில் நேர்ந்த அல்லல்களுக்கெல்லாம் யாதும் உள்ளம் தளராமல் யாண்டும் ஊக்கி முயன்று உறுதியுடன் இவன் உயர்ந்திருக்கிறான்.

**உள்ளம் உயர்ந்த உரனுடையான் உற்றவிடர்**
**எள்ளல் அடையும் இழிந்து.**

ஒல்காமல் உயர்க.

---

வள்ளலின் வரவு

**598.** உள்ளமுயர் நந்திமான் ஓரிபோல் ஈதலின்பேண்
கொள்ளவில்லை மற்றோர் குமரேசா—தள்ளாத
உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. (அ)

இ—ள்.

குமரேசா! நந்தி மானும் ஓரியும் போல் மற்றவர் ஏன் வள்ளல் இன்பம் எய்த வில்லை? எனின், உலகத்து வள்ளியம் என்னும் செருக்கு உள்ளம் இல்லாதவர் எய்தார் என்க.

அரிய ஓர் இன்பம் அறிய வந்தது.

உலகத்தில் வள்ளல்கள் அடையும் உள்ளக்களிப்பை ஊக்கம் இல்லாதவர் அடையார்.

வள்ளியம் = வள்ளல் தன்மையை உடையேம்.

வண்மை என்னும் பண்படியாக இது பிறந்துளது.

உலக மக்களுள் சிலரே தலைமையான நிலைமைகளில் சிறந்து திகழ்கின்றனர். ஞானம் சீலம் கல்வி கொடை வீரங்களால்வியனுனமேன்மைகள் விளைந்துவருகின்றன. பிறருடைய துயர்களை நீக்கி உயிர்களுக்கு நேரே இதம் புரிந்து வருதலால் ஈகை உயர் நிலையில் ஓங்கி உள்ளது.

''ஈவார் மேல் நிற்கும் புகழ்; ஈவானே தெய்வம்'' என இவ்வாறு இசைபெற்றுவந்துள்ளமையால் வண்மையின் உண்மையான தலைமையை ஓர்ந்து கொள்கின்றோம்.

எல்லாரும் வள்ளல்க ளாக முடியாது; மேலான பிறவியில் அரிதாக மேவி வந்துள்ளவரே வள்ளல் என விளங்கு கின்றனர்.

நூற்றுவரில் தோன்றும் தறுகண்ணன்; ஆயிரவர்
ஆற்றுளித் தொக்க அவையகத்து மாற்றமொன்று
ஆற்றக் கொடுக்கும் மகன்தோன்றும்;தேற்றப்
பரப்புநீர் வையகம் தேரினும் இல்லை
இரப்பாரை எள்ளா மகன். (தகடூர்)

இரப்பவரை எள்ளாமல் ஈகின்ற மகனை இவ்வுலகில் காண்பது அரிது என இது காட்டியுளது. வள்ளல் என வருபவர் எவ்வளவு அரிய நிலையினர்!என்பதைஇதனால் தெரிய லாகும். மனித உருவில் மருவி யிருந்தாலும் வண்மையாளன் உண்மையான தெய்வ மாகவே ஒளி பெற்று உயர்ந்து வருகின்றான்.

அரிய மகிழ்ச்சியும் பெரிய உயர்ச்சியும் ஈகையில் உள்ளன. அதனை யுடையவர் உயர்ந்து திகழ்ந்தார்; இழந்தவர் இழிந்து கழிந்தார்.

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்? தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். (குறள்: 228)

ஈயாமல் பொருளை இறுகப் பொத்தி வைத்துப் பேயாயிழிந்து பிழையா ஒழிந்து போகிற உலோபிகள் ஈதலில் கனிந்துள்ள அரிய இன்பத்தை அறியாமல் அவமே அழி கின்றார்களே! என்று தேவர் பரிதாபமாய் இரங்கி யிருப்பதை இதில் அறிந்து கொள்கின்றோம்.

ஈதல் இன்பம் காதல்இன்பம் போல் தமக்குள்ளேயே உணர்ந்து கொள்வது ஆதலால் வள்ளியம் எனத் தன்மைப் பன்மையில் உரைத்தார்.

செருக்கு என்று இங்கே குறித்தது சிறந்த மேன்மையில் சுரந்து எழுகின்ற உயர்ந்த மன மகிழ்ச்சியை.

ஈந்தேன் உவந்தேன் இருந்தேன் உயிர்வாழ்ந்தேன் என்று தம் வாழ்வையே பிற உயிர்களுக்கு இதமாய் உதவி புரிய வழங்கி வருபவர் வள்ளல்களாய் உயர்ந்து எவ்வழியும் மகிமையுடன் உய்தி பெறுகின்றார்.

இனிமேல் எனக்குப் பிறவி வருமாறுல் இல்லை என்னுமல் ஈந்து இன்புறும் பிறப்பே எனக்கு அருள வேண்டும் என்று கண்ணனிடம் கன்னன் வேண்டி யிருக்கிருன். ஈகை எத்தகைய ஓகை!

வண்மையால் விளைகின்ற உண்மையான இத் தகைய உத்தம இன்பதை ஊக்கம் இல்லாதவர் அடையாமல் கடையா யிழிந்து கழிந்து போகின்றார்.

ஊக்கத்தால் முயற்சியும், முயற்சியால் பொரு ளும், பொருளால் வண்மையும் உளவாகின்றன. ஆகவே ஊக்கம் இல்லாதவன் முயற்சி இல்லா தவனுய் அயர்ச்சி யடைகிருன்; பொருள் அவனை அடையாமல் போகிறது; போகவே கொடை ஒழிகிறது; ஒழியவே வள்ளல் என்னும் மகிமை அழிகிறது; அழியவே உள்ளம் உவக்கும் நல்ல இன்பம் இல்லாமல் அல்லலுழந்து இழிந்து கழிந்து அவமே அவன் ஒழிந்து போகிருன்.

ஊக்கம் உடையார் கைப்பொருளை
　　ஒழிந்தார் ஏனும் ஒழிவில்லா
ஆக்கம் உடையா ரேயாவர்;
　　ஆக்கம் இருந்தும் அசைவில்லா
ஊக்கம் இலரேல் ஏதும்இலர்;
　　உஞற்று முயற்சி பொருள்கொடைகள்
தேக்கும் புகழ்நற் செருக்கிவைபின்
　　சேரா ஏம கண்டனே!

(விநாயகபுராணம்)

ஊக்கம் உடையாரது உயர்வையும் அஃது இல்லாதவரது இழிவையும்இதுதெளிவாவிளக்கியுளது.

செல்வம் இருந்தாலும் உள்ளம் இல்லாதவர் வள்ளியம் என்னும் செருக்கை எய்தார். இவ்வாறு பொருள் காணவும் இஃது ஈங்கு இசைந்துள்ளது.

உள்ளக்கிளர்ச்சி உணர்ச்சி உயர்ச்சி உற்சாகம் உறுதி என்பன எல்லாம் ஊக்கத்தின் உருவங்களே.

உற்சாகம் வலிமன மிகுதி ஊக்கம். (பிங்கலந்தை)

ஊக்கமே வலி உற்சாகம் உள்ளத்தின் மிகுதிக்கும் பேர். (நிகண்டு)

ஊக்கத்தின் உருவங்களை இவற்றுள் உணர்ந்து கொள்கிறோம். உறுதி இழந்தான் உயிர் இழந்தான்.

உள்ளம் உடைமை வள்ளல் உடைமை.

இந்த வுண்மை நந்திபாலும் ஓரியிடமும் நன்கு உணர வந்தது. இவரது சரிதம் உயர்நலம் உடையது.

## சரிதம்.

நந்திமான் என்பவன் ஒரு குறுநில மன்னன். தொண்ட மண்டலத்திலே ஆறை என்னும் நகரிலிருந்து அரசு புரிந்தவன். பல நூல்களையும் நன்கு பயின்று தெளிந்த சிறந்த மதிமான். ஆருயிர்கள்பால் பேரன்புடையவன். யார் வந்தாலும் உள்ளம் உவந்து எதையும் வாரி வழங்கி வந்த வள்ளல். இவன் உடன் பிறந்ததம்பி ஒருவன் இருந்தான். **சிந்துகன்** என்னும் பெயருடைய அவன் இவனுடைய அரச செல்வத்தை அடைய விழைந்தான். கபடமாகச் சதி புரிந்தான். வசை கவிகளால் ஒரு நூலை இவன் மீது செய்வித்தான். அதற்கு **நந்திக் கலம்பகம்** என்று பெயர். மாரண வேள்வி போல் இவனது மரணம் கருதிக் காரணத்தோடு செய்த அந்த நூலைப் பலரும் அறியும்படி அக் கொடியவன் குறிப்போடு வெளிப்படுத்தினன். தன்மேல் வசை நூல் வெளி வந்துள்ளதை இவன் அறிந்தான். தனது தம்பியின் நசையை உணர்ந்து இவன் நகைத்தான். அந்தப் பாடல்களைக் கேட்டுத் தான் மாண்டு போனல் தம்பி அரசை இனிதே ஆண்டு கொள்வான் என்று இந்த வள்ளல் உள்ளம் துணிந்தான். கேடான வழியில் கிளர்ந்துள்ள அப் பாடல்களைக் கேட்கக் கூடாது என்று மந்திரிகள் தடுத்தும் இவன் சிந்தை உவந்து கேட்டான். முடிவில்

முடிந்தான். இறந்ததை அறிந்ததும் பலரும் பரிந்து புலம்பினர். இவனுடைய அதிசய நீர்மைகளை வியந்து துதி செய்துள்ள கவி ஒன்று அயலே வருகிறது.

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்;
வையகம் அடைந்ததுன் கீர்த்தி;
கானுறு புலியை அடைந்ததுஉன் வீரம்;
கற்பகம் அடைந்ததுஉன் கரங்கள்;
தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்;
செந்தழல் புகுந்ததுஉன் மேனி;
யானும் என்கலியும் எவ்விடம் புகுவேம்
எந்தையே! நந்திநா யகனே! (நந்தியம்)

அழகு கொடை வீரம் செல்வம் கீர்த்தி முதலிய நிலைகளில் இவன் சிறந்து விளங்கியுள்ள உண்மைகளை இதனால் உணர்ந்து தெளிந்து கொள்கிறோம்.

பொள்ளா நுழைவழி போய்த்தலை நீட்டும் புலவன் முன்னாள்
கள்ளாரும் செஞ்சொற் கலம்பக மேகொண்டு காயம்விட்ட
தெள்ளாறை நந்தி எனுந்தொண்ட மான்கலி தீர்ப்பதற்கு
வள்வார் முரச மதிர்த்தாண் டதும்தொண்ட மண்டலமே.
(தொண்ட மண்டல சதகம்)

இவன் சரிதத்தை இதுவும் இவ்வாறு குறித்துள்ளது. தன் உள்ளத்தின் ஊக்கத்தால் உயர்ந்த வள்ளல் என்னும் புகழை இவன் எய்தி மகிழ்ந்திருக்கிறான், உள்ளம் உள்ளவரே வள்ளியம் என்னும் செருக்கை எய்துவர் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து வியந்தது.

## சரிதம் 2.

ஓரி என்பவன் சீரிய பண்பாடுகளுடன் கூரிய அறிவாற்றல்களும் உடையவன். கொல்லி மலைக்குத் தலைவன். சிற்றரசன் ஆயினும் பேரரசரும் வியந்து போற்றிய பெருங் கொடை வள்ளல். வில்லாடலில் வல்லவன். வண்மையிலும் மனத் திண்மையிலும் ஆட்சி முறையிலும் வில் வீரத்திலும் எல்லா வகையிலும் இவன் இசை பெற்று நின்றான். தன்னை நாடி வந்த புலவர்களுக்குச் சில ஊர்களைச் சீருடன் இவன் உவந்து கொடுத்தான்.

நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரி. (சிறுபாண்)

**நல்லூர் நத்தத்தனார்** என்னும் சங்கப் புலவர் இந்த வள்ளலுடைய ஈகை நிலையைக் குறித்து இங்ஙனம் ஓகையோடு பாடியிருக்கிறார். இவனது ஆட்சியின் மாட்சியையும்வீரத்தையும் பலரும் வியந்திருக்கின்றனர். **கொல்லி ஆண்ட வல்வில் ஓரி** என்று எல்லாரும் சொல்லி வருதலால் இவனது ஆட்சி முறையையும் வில் வலியையும் ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். தன் உள்ளத்தின் ஊக்கத்தினாலேயே வள்ளலாயுயர்ந்து எல்லா மேன்மைகளையும் இவன் எய்தியிருக்கிறான். வள்ளியம் என்னும் செருக்கை உள்ளம் உடையவரே எய்துவர் என்பதை எல்லாரும் அறிய இவன் இனிது விளக்கி நின்றான்.

ஊக்கமுள்ளான் ஆக்கமுள்ளான்; உள்ளஉயர்வெல்லாம்
நோக்கி அவன்பால் நுழையுமால்;--ஊக்கமகத்து
இல்லாதான் யாதுமே இல்லாதான்; எங்குமவன்
செல்லாத காசாம் சிதைந்து.

**உள்ளம் உயரின் உயர்வள்ளல்; இல்லையேல்**
**எள்ள லுறுவன் இழிந்து.**

உள்ளம் பேணி உயர்வு காணுக.

---

புலியும் யானையும்.

599. பத்துத் தலையானும் பாய்ந்தேன் சடாயுவந்து
கொத்தப் பயந்தான் குமரேசா—மெத்தப்
பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (கூ)

இ—ள்.

குமரேசா! சடாயு வந்து பாய்ந்து தாக்கிய போது அடலாற்றலுடைய இராவணனும் ஏன் பயந்து நிலை குலைந்தான்? எனின், யானை பரியது; கூர்ங்கோட்டது; ஆயினும் புலி தாக்குறின் வெரூஉம் என்க.

வீரம் இல்லையேல் வெருவல் உறும் என்கிறது.

யானை பெரிய உருவமும் கூரிய கொம்புகளும் உடையது; எனினும் புலி பாய்ந்தால் அஞ்சி நடுங்கும்.

பரியது=பருத்த உடம்பினை யுடையது.

பருமை என்னும் பண்புப் பெயரடியாய்ப் பிறந்து வந்துள்ளது. நிலத்தில் வாழும் பிராணிகளுள் யானை உருவத்தால் பெரியது. இயற்கையான அதன் தோற் றத்தின் ஏற்றம் தெரிய முதலில் குறித்தார்.

கூர்ங்கோட்டது=கூர்மையான கொம்புகளை உடையது.

வலிமையும் கூர்மையும் உடையனவாய்ப் பொலிவு தோன்ற நிற்றலால் யானைக்கு அவை கம்பீரமான காட்சிகளா யுள்ளன. கோட்டமாய்ப் பக்கம் கிளைத்துள் ளமையால் கோடு என நேர்ந்தது. கோட்டது என்றது குறிப்பு வினையால் அணையும் பெயர்.

ஆண் யானைக்கே கொம்புகள் உண்டு; அந்த மேன் மையான இனம் ஈண்டு இவ்வாறு தெரிய வந்தது.

ஆயினும்=ஆனாலும். உடல் உறுதியும் படை வலியும் உடையது என்றாலும் உள்ளே உரம் இன்மை யால் யானையும் பூனையாய் இழிந்து கீழ்மையுறும் என இது கிளர்ந்து காட்டி யுளது.

வெரூஉம்=அஞ்சும். வெருவும் என்பது இவ்வாறு அளபெடுத்துள்ளது. இது சொல்லிசை அளபெடை. பழைய மரபுகளை மொழிகள் கிழமையாக் கிளர்ந்து வரு கின்றன. வழிமுறையான அறிவு தெளிவை அருளி எவ்வழியும் உவகையை விளைத்து வருகிறது.

தாக்குதல்=பாய்ந்து மோதுதல், எதிரி தகர்ந்து பட விரைந்து அடிப்பது தாக்கு என வந்தது.

அரவச் செய்கையர் வெருவரத் தாக்க. (பெருங்கதை 1-55)

வெருவலும் தாக்கலும் இதில் விரவி வந்துள்ளன.

உறின் என்றது அவ்வாறு உறுவது அரிது என் பது தெரிய நின்றது. காட்டு மிருகங்களுள் யானையும்

புலியும் இங்கே காட்சிக்கு வந்துள்ளன. இயற்கை நியமங்கள் வியப்புகளை விளைத்து நிற்கின்றன. விலங்குகளின் போர் வலி ஈங்கு விளங்கி யுளது. ஊக்கம் உடையவனது உயர்வையும், அஃது இல்லாதவனது இழிவையும் தெளிவாக விளக்குதற்கு இந்த வனவிலங்குகள் இனமா யிசைந்து எதிரே தெரிய நேர்ந்தன.

யானையினும் புலி உருவத்தில் சிறியது; கூரிய கொம்புகள் இல்லாதது. தன்னினும் பெரியதும் உடல் வன்மை மிக்கதும் படை வலி வாய்ந்ததும் ஆகிய மத யானையை எளிதே புலி வென்று விடும். இதன் வெற்றிக்குக் காரணம் உள்ளத்தின் ஊக்கமே; அதன் தோல்விக்கு ஏது என்ன? நெஞ்சில் ஊக்கம் இல்லாமையே.

பருத்த தேகமும் வாள் வேல் முதலிய ஆயுதங்களும் உடையவனாயினும் ஊக்கம் இல்லையானால் அவன் கோழையாய் இழிந்து படுவன். பருவ உருவங்களில் சிறியவனாயினும் வேறு ஆயுதம் இலனாயினும் ஊக்கம் உடையவன் எவரையும் தாக்கி வென்று விடுவன்.

இந்த உண்மையை இதில் நுண்மையாக அறிந்து கொள்கிறோம். கூறிய உவமானம் கூறாததையும் குறிப்பாக உணர்த்தி நிற்றலால் பிறிது மொழிதல் என்னும் அலங்காரம் இதில் மருவி யுளது.

ஊக்கம் உடைமையின் நிலைமையைத் தலைமையாக உணர்தற்கு ஆட்டுக்கடா முன்னர் வந்தது. இதில் காட்டுப் புலி வந்துள்ளது.

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. (குறள் 486)

ஊக்கத்தின் உயர்ந்த மேலோர்
ஒதுங்கிப் பின் வாங்கும் தன்மை
தாக்கற்குத் தகர்பின் வாங்கும்
தகையெனக் குறிக்கொள் ளாமே
நூக்கித்தம் தமது கோட்பால்
நுனிக்கொம்புஏறினர் அன்னார்தம்

வீக்கத்தைத் திறல் விவேகன்
 வியன்படைத் தலைவர் கண்டார்.
 (மெய்ஞ்ஞான விளக்கம்)

பிறந்திடும் சிங்கக் குட்டி
 பிறக்குமுன் குதித்துத் துள்ளி
மறந்தலைக் கொண்டு நால்வாய்
 மண்டையைப் பிளக்கச் செல்லும்:
சிறந்திடும் செயப்பிர தாபச்
 சேவகர் சுபாவம் இவ்வாறு
இறந்திடும் ஆயுள் மூப்போடு
 இளமையும் குறித்தி டாரே. (பத்திரகிரி)

இவை யாவும் ஈண்டு எண்ணி உணர வுரியன.

புலி தாக்கினால் யானை வெருவும், இளம் சிங்கக் குட்டி முதிய மதயானையின் மண்டையைப் பிளக்கச் செல்லும் என்றமையால் ஊக்கம் உடைய உயிரினங்களின் உயர் நிலைகளை ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிறோம். விலங்கையும் ஊக்கம் வியன் ஆக்குகிறது.

வீரம் தீரம் தைரியம் என்பன எல்லாம் ஊக்கத்தின் கிளைகளாய் ஓங்கி யுள்ளன. அரிய பல ஆக்கங்களை ஊக்கம் எவ்வழியும் இனிது அருளி வருகிறது.

ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு. (ஔவையார்)

ஊக்கத்திற்கும் ஆக்கத்துக்கும் உள்ள உறவுரிமையை இதனால் உணர்ந்து கொள்கிறோம். உள்ளத்தின் ஊக்கமே மனிதனை உயர்ந்தவனா ஆக்கி வருகிறது.

வீரன் பாய்ந்தால் யாரும் அஞ்சி அயர்வர்.

இந்த உண்மை சடாயுபால் தெரிய வந்தது.

சரிதம்.

சடாயு என்பவன் சூரிய சாரதி ஆகிய அருணன் புதல்வன். பறவை உருவமும் தெய்வ அறிவும் மருவி யுள்ளவன். அருந்திறலும் பெருந்தகைமையும் ஒருங்கு

நிறைந்தவன். தசரத மன்னனுடைய உயிர்த்தோழன். இராமன் வனவாசம் செய்ய நேர்ந்து வந்தபோது பஞ்சவடி அருகே அவ்வீரனை இத்தீரன் கண்டான். தன்னை அறியாமலே அன்பு மீதூர்ந்து ஆர்வத்துடன் வினவினன். உண்மை தெரிந்தான்: உள்ளம் உருகினன்: பழமையைக் கிழமையுடன் கூறினன். கூறவே தன் தந்தையை நேரே கண்டது போல் நெஞ்சம் கரைந்து அக்கோமகன் நெடிது தொழுதான். அந்த மூவரையும் உழுவலன்புடன் அழைத்துப்போய் பஞ்சவடி அயலே ஓர் இனிய பொழிலில் இருக்கச்செய்து எவ்வழியும் பாதுகாத்து இதம் புரிந்து வந்தான். வருங்கால் மாய மானை ஏவி இராமனை வஞ்சித்துச் சீதையைக் கவர்ந்து கொண்டு இராவணன் தேர் மேல் ஏறி வான வீதியில் போவதை இடையே இவன் கண்டான். அதிவேகமாய்ப் பாய்ந்து எதிரே மறித்துத் தேரை நிறுத்தினன். அவன் திகைத்து நின்றான். அந்த நிலையில் இந்த மதிமான் அவனுக்கு அதி நயமா இடித்து அறிவுறுத்தினன்:

கெட்டாய் கிளையோடுநின் வாழ்வை எலாம்
சுட்டாய்! இது என்ன தொடங்கினை நீ?
பட்டாய் எனவே கொடு பத்தினியை
விட்டு ஏகுதியால் விளிகின்றிலையால்: (1)

பேதாய்! பிழைசெய்தனை! பேருலகின்
மாதா அனையாளை மனக்கொடுநீ
யாதாக நினைத்தனை? எண்ணமிலாய்!
ஆதாரம் நினக்கினி யார் உளரோ? (2)

கொடுவெங்கரி கொல்லிய வந்ததன்மேல்
விடும் உண்டை கடாவ விரும்பினையே!
அடும்என்பது உணர்ந்திலை ஆயினும்வன்
கடுவுண்டு உயிரின்நிலை காணுதியோ? (3)

இம்மைக்கு உறவோடும் இறந்தழியும்
வெம்மைத்தொழில் இங்கிதன் மேல்இலையால்;
அம்மைக்கு அருமா நரகம் தருமால்
எம்மைக்கு இதமாகஇது எண்ணினை நீ? (4)

வானுள்பவன் மைந்தன் வளைத்தவிலால்
தானேவரின் நின்று தடுப்பரிதால்
நானேஅவண் உய்ப்பென் இந் நன்னுதலைப்
போநீ கடிது என்று புகன்றிடலும். (5)

இராவணனை நோக்கிச் சடாயு இவ்வாறு ஊக்கி உரையாடி யிருக்கிறான். உரைகளில் மருவி யுள்ள பொருள் நயங்களையும் உணர்வு நலன்களையும் உறுதி நிலைகளையும் ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தப் புத்தி போதனைகளைக் கேட்டும் அந்தக் காமப் பித்தன் யாதும் தேருமல் வீறுடன் தேரை விரைந்து செலுத்தினான். இவன் ஒல்லையில் பாய்ந்து அவன் வில்லைப் பறித்துக் கொடியைக் கிழித்துத் தேரைச் சிதைத்து முடியை உடைத்து எறிந்தான். நெஞ்சம் பதைத்து நெடு வேதனைகள் அடைந்த அவன் மானவீரோடு கொடிய தண்டால் ஓங்கி அடித்தான்; அந்த அடியால் அயர்ந்து வீழ்ந்தாலும் மீண்டும் வீரா வேசமாய்ப் பாய்ந்து மூண்டு போராடினான்.

மண்மேல் விழுந்தான் விழலோடும் வயங்கு மாண்தேர்க்
கண்மேல் ஒளியும் தொடராவகை தான் கடாவி
விண்மேல் எழுந்தான்: எழமெல் லியலாளும் வெந்தீப்
புண்மேல் நுழையத் துடிக்கின்றனள் போல்புரண்டாள்: (1)

கொழுந்தேஅனையாள் குழைந்துஏங்கியகொள்கைகண்டான்
அழுந்தேல் அவலத்திடை அஞ்சலை அன்னை! என்னு
எழுந்தான்; உயிர்த்தான் அடஎங்கினிப் போவது? என்றே
விழுந்தான் அவன் தேர் மிசை விண்ணவர் பண்ணை ஆர்ப்ப.

பாய்ந்தான் அவன் பன்மணித் தண்டு பறித்து எறிந்தான்;
ஏய்ந்தார் கதித்தேர்ப் பரிஎட்டினொடு எட்டும் எஞ்சித்
தீய்ந்தாசற வீசிஅத் திண்டிறல் துண்ட வாளால்
காய்ந்தான்; கவர்ந்தான்உயிர் காலனும் கைவிதிர்த்தான். ()

திண்தேர் அழித்து ஆங்கவன் திண்புறம் சேர்ந்த தூணி
விண்டான் மறைப்பச் செறிகின்றன வில்இலாமை
மண்டார் அமர்தான் வழங்காமையின் வச்சைமாக்கள்
புண்டாரம் ஒக்கின்றன வள்ளுகிரால் பறித்தான். (4)

மாச்சிச்சிரம் பாய்ந்துஅவன் மார்பினும் தோள்கள் மேலும்
ஓச்சிச்சிறகால் புடைத்தான் கடித்தான் உலையா
மூச்சிற்ற இராவணனும் முடிசாய்ந்து இருந்தான்:
போச்சு இத்தனை போலும் நின்ஆற்றல்! எனப்புகன்றான்.
(இராமா : சடாயு.) (5)

மூண்டுள்ள போராட்டத்தின் காட்சிகளைக் கருதிக் காண்பவர் இந்த முதியவரின் அதிசய ஆற்றல்களை அறிந்து பரிந்து வியந்து புகழ்ந்து கொள்வர்.

வாள் வேல் சூலம் தண்டம் முதலிய கொடிய கொலைக் கருவிகளுடன் கூடிய பெரிய திறலுடைய வலிய இலங்கை வேந்தனும் கலங்கி மயங்கி அஞ்சி அலமந்து நிற்கும்படி ஓர் ஆயுதமும் இல்லாத சடாயு ஊக்கிப் போராடி உக்கிரவீரமாய்த் தாக்கி யிருக்கிறான். பரியது கூர்ங்கோட்டது ஆயினும் புலி தாக்குறின் யானை வெருவி நடுங்கும் என்பதை உலகம் அறிய இவன் உணர்த்தி நின்றான்.

சிங்கக் குருளை சிறிதெனினும் திண்டிறல் சேர்
வெங்கட் கரியும் வெருவுமால் — அங்கதுபோல்
வீர மரபோன் வெகுண்டால் பெரும்படையும்
போரில் உடைந்தொழிந்து போம். (தருமதீபிகை)

**அரியேறே ஊக்கம் அகத்துறின்; இன்றேல்**
**நரியே பதரே நரர்.**

ஊக்கம் உயர் வீரம்

---

உள்ளத் திரு

600 உள்ள உரத்தால் உதயணன் சாணக்கன்
கொள்ளநின்றார் சீரேன் குமரேசா — தள்ளா
உரமொருவற் குள்ள வெறுக்கைய∴ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. (ய)

இ-ள்.

குமரேசா! தம் உள்ளத்தின் உரத்தால் உதயணனும் சாணக்கியனும் ஏன் சிறந்து விளங்கினர்? எனின்,

ஒருவற்கு உள்ள வெறுக்கை உரம்; அ.்து இல்லார் மரம்; மக்கள் ஆதலே வேறு என்க.

மனிதருள் மரங்கள் உள என்கின்றது.

ஒருவனுக்கு நிலையுள்ள செல்வம் ஊக்கமே; அவ் வூக்கம் இல்லாதவர் மக்கள் உருவம் மருவிய மரங்களே.

உரம் என்றது இங்கு ஊக்கத்தை.

உரம் என்ப வலியே ஞானம்
ஊக்கமே மார்பு நாற்பேர். (நிகண்டு)

வலிமார்பு ஊக்கம் ஞானம் திடம் உரம். (பிங்கலம்)

உரம் என்னும் சொல் ஊக்கம் முதலிய பல பொருள்களை உணர்த்தி வரும் எனபதை இதனல் உணர்ந்து கொள்கிறோம். உரம் படிந்த அளவே மனிதன் திரம் படிந்து எவ்வழியும் சிறந்து உயர்ந்து வருகின்றான்.

வெறுக்கை = செல்வம்.

**உள்ள வெறுக்கை** என்றது புறத்தே பொருந்தியுள்ள வெறுக்கையினும் வேறுபாடு தெரிய வந்தது.

செல்வமும் பொன்னும் வெறுக்கை ஆகும். (பிங்கலந்தை)

வெறுக்கை வைத்த தன்றே. (புறம் 357)

வெறுக்கையொடு பெரும்பதி நல்கி. (பெருங்கதை 4-4)

வெறுக்கைக் கிழவன். (சிந்தாமணி 1871)

✓வெறுக்கை ஓங்கிய மேரு. (இராமா:முதல்போர் 15)

வெறுக்கைமேல் வெறுக்கை வைத்தேம்.
(திருவிளையாடல் 58)

இவற்றுள் வெறுக்கை குறித்து நிற்றல் அறிக.

விருப்பமான அருந்தல் பொருந்தல் முதலிய சுகங்களை எல்லாம் வெறுத்துவிட்டுத் தன்னையே ஆவலோடு மனிதர் விழைந்து கொள்ளும்படி செய்து வருதலால் செல்வத்துக்கு **வெறுக்கை** என்று ஒரு பெயர் விளைந்து வந்தது. வெறுமையை நீக்குவது வெறுக்கை ஆயது.

வையமையல்கள் நீங்கிப் பரம்பொருளையே உறுதிப் பொருளாகக் கருதித் தெளிந்த ஞானிகள் வெறுத்துவிட்டு விலகுதலால் உலகப்பொருள் **வெறுக்கை** என நேர்ந்தது. உற்றபெயர்க்கு உரிய காரணத்தை இவ்வாறு ஊகித்து உணர்ந்து கொள்கிறோம்.

பொருவறு பந்தம் எல்லாம் புணர்த்திடும், தெய்வசிந்தை
ஒருவமே விட்டு நிற்கும், உறக்கமும் இறக்கச் செய்யும்,
கருவினுட் புகுத்தும், இன்ன கரிசுகண் டதனல் அன்றோ
இருநிலத் திடைவெறுக்கை என்மனர் புலமை சான்றோர்.
(குசேலம்)

செல்வத்துக்கு **வெறுக்கை** என்று பெயர் வந்துள்ள காரணத்தைக் குசேலர் இவ்வாறு காட்டியுள்ளார். இக் காட்சி துறவு நிலைக்கு உறவாயுள்ளது.

உலக வாழ்வுக்குப் பொருள் எவ்வழியும் உறுதித் துணையாய் நிற்றலால் அஃது ஈண்டு உயர்வா எண்ண வந்தது.

உள்ளத்தில் வெள்ளமாய்ப் பெருகியுள்ள செல்வம் ஊக்கமே; இந்த உரமான திரு இல்லை ஆனல் அவன் எவ்வழியும் இழிந்து கழிந்து ஒழிந்தே போகின்றான்.

ஊக்கம் உடைமையின் பெருமையை உடன்பாட்டாலும் எதிர்மறையானும் உவமக் குறிப்பானும் பிற வகையானும் இதுவரை விளக்கி வந்த தேவர் அவ்வுடைமையின் இன்மையால் நேரும் இழிவினை இறுதியாக அறுதியிட்டு உறுதிபெற இதில் உணர்த்தியுள்ளார்.

உள்ளத்தில் ஊக்கம் இல்லையானல் அவன் வள்ளல் ஆகான்; வீரனய்விளங்கான்; மனிதன் எனமாண்புறான்; மரம் கல் மண் என இழிந்தே படுவான்

ஊக்கம் உடைமையே மக்கட்கு உயிருடைமை.

ஒருவனுக்கு என்றது அரிய மனிதப் பிறப்பைப் பெற்று வந்துள்ள அந்தப் பேறும் பெருமையும் கருதி உணர. ஒருவன் எனத் தோன்றினலும் உரம் இல்லாதவன் தோற்றம் மரத்தினும் இழிந்ததேயாம்.

மனித வடிவாலும், வருதல் போதல் பேசுதல் முதலிய தொழில்களாலும் மக்களைப்போலக் காணப்பட்டாலும் அகத்தில் ஊக்கம் இல்லையேல் அவர் உண்மையான மக்களாகார்; நடமாடுகின்ற ஒருவகை மரங்களேயாவார். வேறு என்றது நிலையான அந்த மரங்களுக்கு உரிய சீரும் சிறப்பும் இந்த மனித மரங்களுக்கு இல்லை என்பதை நேரே எண்ணி யுணரவந்தது.

கல்வி செல்வம் முதலிய மேலான ஆக்கங்கள் எல்லாம் ஊக்கத்தாலேயே உளவாகின்றன; அதனை உரிமையாக உடையவரே பெருமையான மனிதர்; இழந்தவர் இழிந்த மரங்களே.

உரம் இட்ட நிலம் வளமாய்ப் பணைத்து விளையும்; உரம் உள்ள மனிதன் நலமாய்ச் செழித்துத் தழைத்துச் சிறந்து விளங்குவன். புறத்தே தெரியும் சிறப்புக்களுக்கெல்லாம் அகத்தே உரம் மூல காரணமா யுள்ளது. உள்ளத்தில் ஊக்கம் உடையவரே உலகத்தில் அதிசய மனிதராய் யாண்டும் துதி கொண்டு திகழ்கின்றார்.

இந்த உண்மை உதயணன் பாலும், சாணக்கியனிடமும் நேரே நன்கு தெரிய வந்தது.

## சரிதம்.

வத்தவ தேசத்து மன்னன் ஆன உதயணன் இளமையி லிருந்தே பல இடையூறுகளை அடையநேர்ந்தான். அந்தச் சோதனைகளை எல்லாம் தனது மனவுறுதியினாலே கடந்து மதிமாண்புடன் உயர்ந்து வந்தான். ஒரு சமயம் கானகத்தில் தனியே செல்ல நேர்ந்தபோது பொல்லாத வேடர்கள் பலர் வில் வேல் வாள்களோடு திரண்டு வந்து இவனை வளைத்துக் கொண்டனர். அவரெல்லோரையும் ஒல்லையில் வென்று தொலைத்து வெற்றி வீறுடன் வெளியேறி வந்தான். இவனுடைய வீரத்திறல்களை அறிந்து யாவரும் வியந்து புகழ்ந்தனர். பல கலைகளிலும் இவன் தலைமையான புலமையுடையவன். வீணை வாசிப்பதில் இவன் அதிசய நிலையினன். இவ

னது வீணை கானத்தைக் கேட்டு நெடிய கொடிய மத யானைகளும் இதமா வணங்கி வசமாய் நின்றுள்ளன. இவனுடைய அழகு அறிவு கொடை நீதி வீரம் முதலிய நீர்மைகளை வியந்து யாவரும் உவந்துபோற்றியுள்ளனர்.

இருநிலக் கிழமை ஏயர் இறைவன்:
வென்றியும் விறலும் விழுத்தகு விஞ்சையும்,
ஒன்றிய நண்பும் ஊக்கமும் முயற்சியும்,
ஒழுக்கம் நுனித்த உயர்வும், இழுக்கா
அமைச்சின் அமைதியும் அளியும் அறனும்,
சிறப்புழிச் சிறத்தலும் சிறந்த ஆற்றலும்,
வெங்கோல் வெறுப்பும் செங்கோல் செல்வமும்:
வளமையும் வனப்பும் வண்மையும் திறலும்
இளமையும் விச்சையும் என்றிவை பிறவும்
இன்பக் கிழமையும் மன்பேர் உலகினுள்
யாவர்க் காயினும் அடையும்; அடையினும்,
வார்கவுள் யானை வணக்குதற்கு இயைந்த
வீணை விச்சையொடு விழுக்குடிப் பிறவரிது;
விழுக்குடிப் பிறந்திவ் வீறொடு விளங்கிய
வழுக்கா மரபின் வத்தவர் பெருமகன்
உதயன குமரன். (பெருங்கதை)

இக்குலமகனுடைய நிலைமை தலைமை நீர்மை சீர்மைகளை இதனால் அறிந்து கொள்கிறோம். ஊக்கமும் உயர்வும் என்றதனால் இவனுடைய உயர்ச்சிகளுக்கெல்லாம் மூலகாரணம் உணரவந்தது. ஒருவனுக்கு உள்ள வெறுக்கை உரமே; அதனை உடையவனே உயர்ந்தவன் என்பதை உலகம் அறிய இவன் உணர்த்தி நின்றான்.

சாணக்கியன்

இவன் மாவிரதன் என்னும் சோழிய வேதியன் மகன். மகத தேசத்திலே குசுமபுரி என்னும் ஊரிலிருந்தவன். பல நூல்களையும் நன்கு பயின்று தெளிந்தவன். மறையவனாயினும் மன்னரும் வியக்கத் தக்க மனவுறுதியுடையவன். தந்திர யுத்திகளில் மிகவும் வல்லவன். சகடாலன் என்னும் மந்திரி ஒரு நாள் இவனைக் கண்டான். இவனுடைய மதிநுட்பத்தையும் சாதுரிய சாகசங்

களையும் அறிந்தான். தனது அரசனை வஞ்சித்து அரசைக் கவர்ந்து கொண்டு பாடலிபுரத்திலிருந்து அரசு புரிந்து வருகிற நவநந்தனைத் தொலைத்தற்கு இவனே நல்ல துணை என்று உள்ளம் துணிந்து இவனை உடன் அழைத்துச் சென்றான். எதிரியின் நிலைமைகளை மதி தெளிய விளக்கினான். பழைய அரசனது கிழமை வளமைகளை உணர்த்தினான். காரியங்களைக் கூரிய நோக்குடன் ஆராய்ந்த இவன் பகைவனை அதிவிரைவில் தொலைத்தான். முன்னைய மன்னன் மகன் ஆகிய சந்திரகுப்தனுக்கு முடிசூட்டி ஆட்சியை மாட்சிபெற நடத்தினான். இவனைக் குருவாகவும் மந்திரியாகவும் கொண்டு அவ்வேந்தன் விழைந்து போற்றி வந்தான். அரசியல் முறைகளைக் குறித்து வடமொழியில் ஒரு பெரிய நூலை இவன் இயற்றியிருக்கிறான். சாணக்கிய நீதி என்று அந்நூல் இவன் பெயரால் விளங்கி வருகிறது. தன் உள்ளத்தின் ஊக்கமே துணையாக வேந்தர்களும் வியந்து போற்றும்படி மேலான மேன்மையை இவன் அடைந்திருக்கிறான். இளமையில் இவனோடு பழகியிருந்தவர் எல்லாரும் உரம் இல்லாமையால் ஒரு பேரும் இல்லாமல் ஒரு வகையும் தெரியாமல் மறைந்தே போயினர். இவன் உரத்தால் உயர்ந்து விளங்கினான். உரம் ஒருவனுக்கு உள்ள வெறுக்கை; அஃது இல்லார் மரங்களே என்பதை இவன் வரலாறு திரமாய் விளக்கி யுளது.

மந்திர மதியினில் பட்டி வல்லவன்;
சிந்தனைச் சூழ்ச்சியில் யூகி தேர்ந்தவன்;
தந்திர யுத்தியில் சாணக்கன் எனும்
வெந்திறல் வேதியன் வெற்றி கண்டனன்.

இராச தந்திரிகளுள் இந்தவாறு இசை பெற்றுத் திசை மெச்சிவர உரமாய் இவன் வாழ்ந்து வந்துள்ளான்.

**உள்ளத்துள் ஊக்கம் உயர்திரு; உற்றிலனேல்**
**எள்ளப் படுவன் இழிந்து.**

உள்ளி உயர்க.

எந்நாட்டும் எத்தலத்தும் மற்றவரும்
அவரவருக்கு இயன்றதே செய்து
அந்நாட்டில் வாழ்வாரும் அவரவரைப்
போல்வார் போன்று அடுத்து வைகி
முன்னாட்டும் சந்தனமா முதுமரங்கள்
பலகானில் முளைத்து வாய்த்துப்
பின்னாட்டம் மணம்பிறவும் பெறச்செயல்போல்
சிற்சிலரைப் பேதம் செய்தார். (1)

ஆயகா லையிலுலகில் அங்கங்கே
தவம்பொறைநல் அருள் ஆசாரம்
நேயமா விரதம் அன்பு தானதன்மம்
வாய்மைநெறி நியமம் யாவும்
தூயகான் மலைநதியின் துறைநெடும்புண்
ணியத்தலமித் தொடர்ச்சி தோறும்
ஏயசீர் இருட்டறையின் ஏற்றிய
தீபங்களைப்போல் இலங்கு மம்மா. (2)
(மெய்ஞ்ஞான விளக்கம்)

உரன் உடைய உறுதியாளர் உலக மக்களுக்கு ஊக்கமாய் நலம் புரிந்துள்ளதை இவை விளக்கியுள்ளன.

---

இந்த அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

1 ஊக்கம் உடையவரே யாவும் உடையவர்.
2 அந்த உடைமையே உண்மையான உடைமை.
3 அதனால் எல்லாம் பெறலாம்.
4 அதனை நாடி ஆக்கம் ஓடிவரும்.
5 அதன் வழியே உயர்வுகள் உளவாகின்றன.
6 கருதியதே காண வருகிறது.
7 உறுதி யாளன் உள்ளம் தளரான்.
8 வள்ளல் என வான்புகழ் பெறுவான்.
9 வீரன் என வெற்றி யுறுவான்.
10 உரம் உடையரே மக்கள்; இல்லார் மரங்களே.

சூயி–வது ஊக்கம் உடைமை முற்றிற்று.

---

# அறுபத்தோராவது அதிகாரம்

## மடியின்மை.

அ∴தாவது சோம்பல் இன்றித் தொழிலில் முயலும் சீர்மை. சோம்பல் என்பது மனிதனைக் கூம்பச் செய்து தேம்ப விடுக்கும் தீமை ஆதலால் அரசன் அதனை அணுகாமல் ஒழுக வேண்டும் என இதில் உணர்த்துகின்றார். ஊக்கத்துக்கு மடி நேரே மாறுனது: ஆகவே அதன்பின் இது வைக்கப்பட்டது. ஊக்கத்தை உவந்து கொள்ளுக; மடியை இகழ்ந்து தள்ளுக என்பார் உடைமை இன்மைகளால் முறையே உணர உரைத்தார். குறிப்பு மொழிகளுள் கூர்மையான நுட்பங்களும் சீர்மையான உணர்வொளிகளும் சிறப்பாகச் செறிந்துள்ளன.

### குடியும் மடியும்.

601 அன்று மடியூர்ந்த ஆத்திரேயன்குடிபின்
குன்றிநின்ற தென்னே குமரேசா—நன்றும்
குடிஎன்னும் குன்ற விளக்கம் மடிஎன்னும்
மாசூர மாய்ந்து கெடும். (க)

இ-ள்.

குமரேசா! மடி யூர்ந்த ஆத்திரேயன் குடி ஏன் பின் மாய்ந்து போயது? எனின், குடி என்னும் குன்ற விளக்கம் மடி என்னும் மாசு ஊர மாய்ந்து கெடும் என்க.

மடியின் அழிவு மதி தெளிய வந்தது.

குடும்பம் என்கிற நிலையான ஒளி விளக்கு சோம்பல் என்கிற கசடால் அழிந்து ஒழிந்து போம்.

குடி என்னும் சொல் மனித இனத்தின் உறவாய் உருவாயது. உரிமையான இனம் ஒருமையாய்க் குழுமி வாழும் நிலையம் இங்ஙனம் குறிப்புப் பெயர் பெற்றது.

கணவன் மனைவி மக்கள் என உறவாய்க் கூடி வாழ்ந்து வருகிற குடும்பம் குடி என வந்தது.

**குன்ரு விளக்கம்** என்றது ஏன்? எனின், அதன் நிலைமை தலைமைகளை நினைந்து தெளிய என்க. பூட்டன் பாட்டன் தந்தை மைந்தன் என வழி வழியாய்த் தொடர்ந்து பேரும் சீரும் பெற்று விளங்கி வருதலால் குடியை **விளக்கம்** என விளக்கி யருளினர்.

குன்ரு என்றது குன்று என்னும் வினையடியாகப் பிறந்த எதிர்மறைப் பெயர் எச்சம்.

குன்றுதல் = குறைதல்; தேய்தல்.

என்றும் குன்ருத விளக்காய் விளங்கி வருகிற குடி என்றதனல் அதன் தொன்மையும் தன்மையும் நன்மையும் நன்கு தெரிய வந்தன.

நந்தா விளக்கனைய நாயகனே!

தசரத மன்னனை இன்னவாறு கூறியுள்ளனர்.

உருவிற்கு ஒத்த திருவினை யாகிக்
குடிவிளக் குறூஉம் கொடியே! (பெருங்கதை 1–37)

ஒரு குடி விளக்கமாய் விளங்கி வருவது அதில் பிறந்துள்ள மக்களின் மனமாட்சியாலே யாம் என்பதை இதில் தகவாய் அறிந்து கொள்கின்ருேம்.

**உபய குல தீபன்** என **விசயதரன்** இசை மிகுந்து எங்கும் உயர்ந்து விளங்கி வந்துள்ளான்.

ஊக்கி முயல்பவன் ஆக்கம் முதலியன அடைந்து உயர்ந்து வருகிருன்; அவன் பிறந்த குடி பலவகையிலும் சிறந்து செழித்து விளங்கி வருகிறது.

முயலாமல் சோம்பி யிருப்பவன் இழிந்து படுகிருன்; படவே அவன் குடியும் அழிந்து பட நேர்கிறது.

மடி ஊரக் குடி மாய்ந்து கெடும் என்றது இடி வீழ அவன் எரிந்து இறந்தான் என்பது போல் காரண காரியங்கள் கருத வந்தன. உருவக உரைகள் உண்மைகளைத் துருவி அறிந்து கொள்ளும்படி நேர்ந்தன. அலங்கார வாக்கியங்களில் அறிவு நலன்கள் பெருகி வருகின்றன. குடியும், விளக்கும், மடியும், மாசும் இங்கே இனமாய் ஓர்ந்து உணர்ந்து தேர்ந்து தெளிய வந்துள்ளன.

தகழியில் நெய் பெய்து திரியிட்டுத் தீ ஏற்றின் சுடர் ஒளி ஓங்கி விளங்கும்; அவ்வாறு விளங்கி வருங் கால் அத் திரியின் நுனியில் கருள் என்னும் மாசு திரண்டு மல்கி மருவினல் அவ் விளக்கம் ஒளி குன்றி முடிவில் முடிவாய் அவிந்து போம்:

அதுபோல் இல்லமே தகழியாய், இல்லுள் பிறந்த மகனே திரியாய், ஊக்கமே நெய்யாய், முயற்சியே உயர்ச்சியான ஒளியாய், ஒரு குடி விளங்கி வருங்கால் அந்த மகன்பால் மடி மண்டி நின்ருல் அக்குடி ஒளி இழந்து பின்பு அடியோடு அழிந்து போம். வீடுகள் தோறும் நாளும் பழக்கமாய் வருகிற விளக்கை இங்ஙனம் உருவகித்து விளக்கி நயமா உரைத்துள்ளார்.

இந்த உருவகம் யூகித்து உய்த்து உணர வுற்றது.

பையணைப் பஃறலைப் பாந்தள் ஏந்திய
மொய்ந்நிலத் தகளியில் முழங்கு நீர்நெயில்
வெய்யவன் விளக்கம் ஆ மேருப் பொன்திரி
மைஎடுத்து ஒத்தது மழைத்த வானமே.

(இராமா:கார் காலம்:2)

கார் காலத்தில் மழை பொழிய நேர்ந்த கரிய மேகத்தை இவ்வாறு தெரிய விளக்கி யிருக்கிருர்.

மழைத்த வானம் = மழையை யுடைய மேகம்.

பூமி அகல்; கடல் நீர் நெய்; மேரு மலை திரி; சூரியன் சீரிய ஒளி விளக்கு; மேகம் அந்தத் திரியின் நுனியில் நேர்ந்த கரிய மை என இது காட்டியுள்ளது. காட்சிகளைக் கருதி ஓர்ந்து கொள்க. பாந்தள் = ஆதிசேடன். அவன் ஏந்திய நிலம் நீண்ட விளக்குத் தண்டுக்கு நேரான உவமையாய் நேர்ந்து நின்றது.

கார்மேகம் வானத்தில் தோன்றிய பொழுது சூரிய ஒளி வெளியே தெளிவாய்த் தோன்ருது; உலகம் இருள் மருவியிருக்கும். அந்த இருப்பு இங்கே குறிப்பா அறிய வுரியது. எரியும் விளக்கின் திரி நுனியில் கருள் மருவி ஞல் ஒளி மழுங்கும்; மழுங்கவே இருள் கவிந்து வரும் என்பதை இதனல் உணர்ந்து கொள்கின்ருேம்.

வையம் தகளியா வார்கடலே நெய்ஆக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று. (இயற்பா: 1)

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா— நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான். (இயற்பா: 2)

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளி ஆக
மடம்படும் உணர்நெய் அட்டி உயிர்எனும் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே.
(தேவாரம்)

பொய்கை ஆழ்வாரும், பூதத்து ஆழ்வாரும், திருநாவுக்கரசரும் இவ்வாறு சுடர் விளக்கு ஏற்றி இறைவனைக் கண்டு மகிழ்ந்துள்ளனர். உருவகங்களின் பொருள் நயங்களை ஓர்ந்து உணர்பவர் உண்மை நிலைகளைத் தேர்ந்து தெளிந்து கொள்வர். மெய்யுணர்வுடைய மேதைகளின் விழுமிய மொழிகள் தெய்வ ஒளிகளாய்ச் சிறந்து தேசு வீசித் திகழ்கின்றன.

மடியால் மனிதன் கெடுவான் என்னமல், குடி கெடும் என்றது ஏன்? எனின், அதன் கொடிய நெடிய அழிவுகள் தெளிவாய்த் தெரிய என்க. மடி நுழையவே கேடு தானுகவே விளையும்; குடி அழிய நேரும் என்பது வினையால் விளங்கியுளது, மடி=சோம்பல்.

மனிதன் உள்ளத்தை மடித்துக் கெடுப்பது என்னும் காரணக் குறி யுடையது.

ஊர=ஊர்ந்து சேர. மடி மந்தகதி யுடையது ஆதலால் அதன் விளைவு இந்தவாறு அறியவந்தது. பொல்லாத புலைத் தீமைகளை யுடைய அது மெல்லப் புகவே எல்லா நலன்களும் ஒல்லையில் ஒழிய நேர்கின்றன. மடியை மாசு என்றது அதன் கொடிய நீசம் தெரிய.

மாசு=அழுக்கு; கசடு; குற்றம்.

மாசின் பேர் கறை களங்கம் -
மலினம் ஆம் கசடும் அப்பேர். (நிகண்டு)

கசடும் மலினமும் கறையும் அழுக்கும்
மலமும் களங்கமும் மாசு ஆகும்மே. (பிங்கலந்தை)

மாசுக்கு உரிய பரியாயப் பெயர்களை இவை குறித்துள்ளன. காரணக் குறிப்புகள் கருதி உணர வுரியன.

மடி என்னும் புலையான மாசு படியாமல் தம் உள்ளத்தைப் பேணி ஊக்கி வருபவரே ஆக்கம் மிகப் பெற்றுக் குடியை விளக்கி நெடிய புகழோடு என்றும் நலமாய் நின்று விளங்குவர்.

மாசு என்பதற்கு இருள் என்று பொருள் கொண்டு இந்தக் குறளுக்கு உரை குறித்துள்ளாரும் உளர்.

விளக்குப் புக இருள் மாயுமே அன்றி இருள் ஆனது விளக்கை மாய்த்தல் யாண்டும் இல்லை; அவ்வாறு உரைத்தல் இயற்கை நியதிக்கு மாறும்; ஒளியை மாய்க்க வல்ல ஓர் இருள் என்று புதுமையாகப் படைத்துக் கூறின் உலகம் மலைவாம்; உண்மை குலைவாம்; ஆகவே அங்ஙனம் குறிப்பது சிறப்பாகாது. ஆவதை ஆய்ந்து அமைதியைத் தெளிவது அறிவுடையார் கடனே.

உள்ளக் கிளர்ச்சி யின்றி எவன் சோம்பித் திரிகின்றானோ அவன் தேம்பி அழிவான்; அவன் பிறந்த குடியும் இருந்த இடம் தடந்தெரியாமல் அழிந்து ஒழிந்து போம். அவ்வாறு போகாதபடி மாந்தர் ஓர்ந்து முயன்று யாண்டும் உயர்ந்து கொள்ள வேண்டும் என்பது குறிப்பு.

மடி தோய்ந்தவன் குடி அடியோடு மாய்ந்து கெடும்.

இந்த வுண்மை ஆத்திரேயன்பால் அறிய வந்தது.

### சரிதம்.

இவன் சோழநாட்டிலே வேதி மங்கலம் என்னும் ஊரில் இருந்தவன். வேதியர் மரபினன். தந்தை பெயர் அத்திரிநாதன். ஒரே புத்திரன் ஆதலால் பெற்றோர் இவனை மிக்க பிரியமாய்ப் பேணி வளர்த்தனர். இளமை

யில் சிறிது கற்ருன்; பருவம் எய்திஞன். ஒருவகை யிலும் முயலாமல் ஊனமா யிழிந்து திரிந்தான். உருவ அழகு மருவியிருந்தும் அறிவு நலம் யாதும் இல்லாமல் சிறியாரினத்தஞய்ச் சிறுமையுடன் அலைந்தான். காமக் களிப்பில் அழுந்தி எவ்வழியும் இழிந்து உழந்தான். இவ னது இழிநிலையை நினைந்து அழிதுயர் உழந்து தந்தை தாயரும் சிந்தை நொந்து நின்ருர்.

அருங்கலை பயிலும் காலை
அறம்பொருள் இன்பம் வீடாம்
இருங்கலை நான்கின் முன்னை
இரண்டும் பின் ஒன்றும் ஓரான்;
ஒருங்குசேர் இன்பத் தேனும்
ஒழிபெருந் திணையே அன்றி
விரும்பும் ஐந் திணையும் தேரான்;
விதிவழி மதிபோம் அன்ருே? (1)

பேய்மொழி கேட்கும் யாமம்
பிறன்கடை திரிவான்; ஈன்ற
தாய்மொழி கேளான்; மற்றும்
தந்தைதன் மொழியும் கேளான்;
ஏயுமேற் குலத்தே வந்தும்,
இழிகுல விடர்பால் கூடி
ஆயகூ கரத்தைச் சேர்ந்த
ஆனிளங் கன்று போன்ருன். (2)

கிளர்பொருள் கல்வி செல்வம்
கிளைகளும் படைத்து நீங்கா
இளமையும் பெற்ருன்: வாழ்வார்க்கு
இவைகளில் ஒன்றே போதும்;
விளைபொருள் ஐந்தும் காம
விடரிடை வீழ்ப்ப தாஞன்;
வளர்குடிப் பிறந்தார் ஏனும்
வாழ்வுண்டோ மதியற் ருர்க்கே? (3)

(திருக்குற்ருல புராணம்)

சிறந்த குடியில் பிறந்தும் மதிகேடஞய் இவன் இழிந்து கழிந்து உழந்துள்ளதை இவற்ருல் உணர்ந்து

கொள்கிறோம். மடமையும் மடியும் மண்டி வீணே அலைந்து திரிந்த இவன் வெய்ய பழிகளையும் துயரங்களையும் அடைந்து இறந்து ஒழிந்தான். உள்ளக் கவலையால் பெற்றோரும் பேதுற்று அழிந்தார். இவன் பிறந்த குடியும் அடியோடு அழிந்து போயது. குடி என்னும் குன்று விளக்கம் மடி என்னும் மாசு ஊற மாய்ந்து கெடும் என்பதை யாவரும் இவன்பால் அறிந்து வருந்தித் தேவரின் வாய்மொழியைத் தெளிந்து நின்றனர்.

எல்லா உயர்வும் இழிந்து கழியுமே
பொல்லாத சோம்பல் புகின்.

சோம்பி யிராதே.

---

குடியை உயர்வு ஆக்குக.

602. ஏனோ தருமன்சேய் என்றும் மடியின்றிக்
கோனா யுயர்ந்தான் குமரேசா—ஈன
மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். (உ)

இ—ள்.

குமரேசா! சோம்பல் இன்றி முயன்று ஏன் தருமபுத்திரன் உயர்ந்தான்? எனின், குடியைக் குடி ஆக வேண்டுபவர் மடியை மடியா ஒழுகல் என்க.

மடி மடியின் குடி உயரும் என்கிறது.

தாம் பிறந்த குடியை உயர்ந்த குடியாக்க விரும்புபவர் சோம்பலை ஒழித்து ஊக்கி ஒழுக வேண்டும்.

மடிதோயக் குடி மாயும் என்றார் முன்னம்; இதில், அதனை மாய்த்து மதியுடன் ஒழுகுக என்கிறார்.

தன் குடியைக் கெடுக்க வந்த கொடிய கேட்டை அடியோடு ஒழித்து ஒழுகுபவனே ஆண் மகன் ஆகின்றான்.

மடியா=மடித்து; மாய்த்து. செய்யா என்னும் வாய்பாட்டு வினை எச்சம் இவ்வாறு வந்துளது.

உன்னை மடித்து உன் குடியை மாய்த்துக் கெடுக்க வல்ல மடியை நீ மாய்த்து ஊக்கி ஒழுகியுயர்க. அயராத ஆண்மையே உயர்வான மேன்மையாம்.

மடி ஆ=சோம்பலாகவே கருதி.

மடி கொடியது; குடிகேடு செய்வது; தன்னைத் தழு வினரை இழிதுயர்களில் ஆழ்த்திப் பழிகளை விளைப்பது; பொல்லாத புலை நிலையது என்று மடியைத் தெளிவாக உணர்ந்து விரைந்து விலகி முயன்று வருக.

இவ்வாறு இருவகையிலும் பொருள் காண இஃது இசைந்துள்ளது. தீயைத் தீயாக, பாம்பைப் பாம்பாக, நஞ்சை நஞ்சாக அஞ்சி அணுகாது ஒழுகுவது போல் மடியை மடி ஆக எண்ணிக் கடிது விலகி முயற்சியை நண்ணி எவ்வழியும் உயர்ச்சியுற ஊக்கி வாழுக.

ஒருவனிடம் மடி புகின் முயற்சி செய்யான்; மிடி புகும்; குடி கெடும். தான் பிறந்த குடி செல்வ வளம் பெற்றுச் சிறந்து விளங்க வேண்டுமானால் அவன் மறந்தும் மடியை மருவலாகாது. சோம்பேறி தொட்ட வேலை யும் கெட்டே போம். அந்த மந்தன் எந்த வகைக்கும் யாதும் உதவான்.

மடியை வியங்கொள்ளின் மற்றக் கருமம்
முடியாத வாறே முயலும் —கொடிஅன்னாய்!
பாரித் தவனை நலிந்து தொழில்கோடல்
மூரி எருத்தான் உழவு. (பழமொழி: 389)

சோம்பேறியும் மந்தனும் ஒரு தொழிலுக்கும் ஆகார்; அவரை வேலையில் ஏவுதல் வீண்;யாதும் அணு காமல் ஒழிப்பதே நலம் என இஃது உணர்த்தி யுளது.

மடியை=சோம்பனை.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.

சோம்பல் உடையவர் வறியராய் வருந்தியுழலுவர் என்று ஔவையார் இவ்வாறு கூறி யிருக்கிறார்.

வறுமை முதலிய சிறுமைகளை விளைத்து மடி ஒருவனை இருமையும் கெடுத்து விடும்; கேடே புரிகிற இதனை

எள்ளித்தள்ளி உள்ளம் துணிந்து ஊக்கி முயல்பவர் ஆக்கம் மிகப் பெறுவர். செல்வம் கல்வி முதலிய பாக்கியங்களைப் பெற்றுத் தம் குடும்பத்தை மேன்மையாக்கும் பான்மையுள்ள குல மக்கள் மடியை ஒருபோதும் மருவார். யாண்டும் ஊக்கி முயன்று உயர்ந்து திகழ்வார்.

தெளிவுற நூல்பல தினமும் ஓதியே
மிளிருடல் வருந்தியும் வெறுக்கை ஈட்டிநற்
கிளிமொழி மனைவியைக் கிளைஞரைப் பல.
எளியரைத் தாங்குவோர்க்கு இல்லை மந்தமே. (நீதிநூல்)

மடி யில்லாதவருடைய மாண்புகளை இதனால் அறிந்து கொள்கிறோம். சோம்பல் இன்றி முயல்பவரே உலகில் எவ்வழியும் உயர்ந்து சிறந்து திகழ் கின்றார்.

மடி படியாதவரது குடி உயர்ந்து விளங்கும்.

இவ்வுண்மை தருமபுத்திரன்பால் அறிய வந்தது.

## சரிதம்.

இவன் ஓர் அரசன். அரிய பல குணநலன்களுடையவன். அறிவும் ஆற்றலும் நெறி நியமங்களும் இவனிடம் இயல்பாய் அமைந்திருந்தன. தந்தை காலத்தில் சிற்றரசனாயிருந்த குடி இவன் காலத்தில் பேரரசனாய்ப் பெருகிச் சீரும் சிறப்பும் நிறைந்து விளங்கியது. தரும வருமன் என்னும் தந்தைக்கு மைந்தனாய் வந்தமையால் தரும புத்திரன் என்று இவன் பெருமை மிகப் பெற்றான். தன் உள்ளத்தின் ஊக்கத்தாலேயே எல்லா ஆக்கங்களையும் இவன் எய்தி விளங்கினான். தரும நீர்மைகள் சீர்மையாய் மருவி யிருந்தமையால் பெரியோர்கள் பலரும் இவனை உவந்து புகழ்ந்து வந்தனர். கோதமனார் என்னும் சங்கப் புலவர் இக்கோமகனை நோக்கிப் பாடிய பாடல் ஒன்று அயலே வருகிறது.

"விழுக்கடிப்பு அறைந்த முழுக்குரல் முரசம்
ஒழுக்குடை மருங்கின் ஒருமொழித் தாக
அரவெறி உருமின் உரறுபு சிலைப்ப
ஒருதாம் ஆகிய பெருமை யோரும்

தம்புகழ் நிறீஇச் சென்று மாய்ந்தனரே;
அதனால், அறவோன்மகனே! மறவோர் செம்மால்!
நின்ஊற்றம் பிறர் அறியாது
பிறர்கூறிய மொழி தெரியா
ஞாயிற்று எல்லை ஆள்வினைக்கு உதவி
இரவின் எல்லை வருவது நாடி" (புறம்: 366)

இந்த மன்னன் வாழ்ந்து வந்துள்ள நிலைமைகளை இதில் ஓர்ந்து கொள்ளுகிறோம். "அறவோன் மகனே! மறவோர் செம்மால்! உலகத்தின் தலைவர்களாய் நிலையுயர்ந்து நின்ற அரசர்கள் புகழ் புண்ணியங்களை அடைந்து போயுள்ளனர்; நீயும் அவ்வாறே செவ்வையாய் வாழ்ந்து வருகிறாய்! இரவில் எண்ணி ஆராய்ந்து பகலில் ஊக்கி முயன்று உயிர்களுக்கு இரங்கி அருளி இருமையும் பெருமையா இன்பம் பெறுக!" என்று புலவர் அன்பு மீதூர்ந்து இந்த நண்பனை வாழ்த்தியிருக்கிறார். மடிபடியாமல் ஒழுகிவரின் அவன் குடி பெருவளம் உடையதாய் உயர்ந்து ஒளி மிகுந்து வரும் என்பதை எவரும் இவன்பால் உணர்ந்து கொண்டனர்.

**மடியை மறந்தும் மருவான்; பிறந்த**
**குடியுயரக் கூர்ந்துநிற்கும் கோன்.**

**மடி நீங்கின் குடி ஓங்கும்.**

---

603. மடி படியின் குடிகெடும்.

கன்றுமடி கொண்ட கவுற்சனனேன் தன்குடிமுன்
குன்ற மடிந்தான் குமரேசா—என்றும்
மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினு முந்து. (ங)

இ-ள்.

குமரேசா! மடியுடைய கவுற்சனன் ஏன் அவன் குடி மடியு முன்னரே மடிந்தான்? எனின், மடி மடிக்கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி தன்னினும் முந்து மடியும் என்க. முந்து=முன்னதாக.

இது, மடியன் மடையனாய் மடிவன் என்கிறது.

சோம்பலைத் தன்னுள்ளே தழுவியிருக்கும் மூடன் பிறந்த குடி அவன் இறந்து படுமுன் அழிந்துபோம்.

மடி என்னும் சொல் இங்கே மூன்று வகையாய் வந்துள்ளது. சொல்லணியாய்த் தொடர்ந்து தோன்றினும் பொருள் வேறுபாடு புதுமையாய் ஊன்றியுளது.

மடி=சோம்பல். மடிந்து சாய்ந்து கூம்பிக்கிடப்பது சோம்பு என வந்தது. மடியாமல் நிற்பது நெடிது ஓங்கி நீண்டு கிளர்ந்து வளர்ந்து ஊக்கமாய் உயர்ந்துள்ளது.

மடிக்கொண்டு=மடியில் பொதிந்து வைத்து.

பிரியமான பொருளை உடுத்திய உடையுள் மடித்து வைத்துக்கொள்வர். அடிவயிற்றோடு இறுக்கி வைத்திருப்பதை அடி மடியுள் வைத்துள்ளான் என்பர்.

மடியும்=மாய்ந்து ஒழியும்.

தன்னை இழிமகனாக்கித் தான் பிறந்த குடியை அழிதுயருள் ஆழ்த்தி விரைந்து அழித்து ஒழிக்கின்ற தீமையை விழைந்து தழுவிக்கொள்பவன் முழு மூடன் ஆகின்றான். ஆகவே அவன் **பேதை** என நேர்ந்தான்.

உயர்திணைக்கு உரிய பால் ஒன்றும் தோன்றாமல் குறித்தது, அவனது கழி பேரிழி நிலை தெளிவாய்த் தெரிய. பேதை என இகழ்ந்து கூறியிருப்பினும் அதனுள்ளே பரிவும் இரக்கமும் பதிந்துள்ளன. அந்த உண்மையை உள்ளச் செவியால் நுண்மையாய் ஓர்ந்து உணர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்ளுக.

ஆதலை யாதும் அறியாமல் நோதலைக் காதலித்தலும், ஏதம்கொண்டு ஊதியம் போக விடுதலும், பேதையின் தொழில் ஆதலால் அந்தக் கருமக் காட்சியிங்கே மருமமாய்க் காண வந்தது.

எல்லா ஆக்கங்களையும் இனிது நல்க வல்ல நல்ல ஊக்கத்தைக் கைவிட்டு எவ்வழியும் பொல்லாத கேடு

களேயே தரவுரிய புலேயான சோம்பலே ஒருவன் மருவிக் கொள்வது பழிதுயரமான இழி மடமையாம்.

தான் பிறந்த குடியை ஊக்கி முயன்று சிறந்த நிலேயில் விளங்க வைப்பவன் உயர்ந்த மேதையாய்த் துலங்கி நிற்கின்ருன். அவ்வாறு முயலாமல் மயலாய் மருண்டு சோம்பி மயங்கி இருப்பவன் இழிந்த பேதையாய்க் கழிந்து ஒழிந்து போகின்ருன்.

மடியை மடித்து ஒழுகுபவன் தன் குடியை உயர்த்துகிருன் என்பதை முன்னம் அறிந்தோம்; மடியை மடிக் கொண்டவன் தன் குடியைக் கெடுத்துத் தானும் இழிமகளுய் அழிகிருன் என்பதை இதில் அறிந்து கொள்கிரும். மடிமடி என்பதை விணேத்தொகையாக் கொண்டால் தன்னேயும் தன் குடியையும் கெடுத்து அழிக்கின்ற சோம்பல் என்று கொள்க. கேடாளு மடியைக் கூடிக் களிப்பது மூடக் களிப்பாய்ப் பீடையுற்று நின்றது.

பொய்யும் நோயும் புடைவையும் சோம்பும்
புலம்பும் கேடும் அடக்கமும் தாழையும்
வயிறும் மடங்கலும் மடிஎனல் ஆகும்.

(பிங்கலந்தை)

மடி என்னும் ஒரு சொல்லுக்கு இவ்வாறு பல பொருள்கள் வந்துள்ளன. காரணக் குறிப்புகள் இவற்றுள் கலந்திருக்கின்றன. கருதி உணர்ந்து கொள்க.

சோம்பலுடையவன் யாதொரு தொழிலும் செய்யான்; ஆகவே பொருள் வருவாய் இல்லே. இல்லாமையே இல்லுள் ஒல்லேயில் புகுந்து கொள்ளும்; கொள்ளவே அந்தக் குடி அல்லல் பல அடைந்து அலமந்து அழிந்து போம். அவ்வாறு தன் குடி அழியினும் அந்த மடி கொண்ட மடையன் விதி முடியும் அளவும் சாகாமல் செத்த சவமாய்த் திரிவன் ஆதலால் அவனினும் முந்தி அக் குடி மடியும் என்ருர்.

மடியன் மாய்ந்து படுமுன் அவன் குடி மிடி வாய்ப்பட்டுத் தேய்ந்து அழிந்து போம். தான் பிறந்த குடி இருந்த இடமும் தடந்தெரியாமல் ஒழிந்து போயினும்

சோம்பேறி யாதும் நாணுமல் ஏதும் கவலாமல் ஈனமாய் இழிந்து திரிவன் என்பது தெரிய வந்தது.

சிற்றெறும்பு ஆதியாச் சிவ கோடிகள்
முற்றும்மெய் உழைத்துயிர் முறையில் காக்குமால்;
சற்றும்மெய் அசைவிலாச் சழக்கர் ஆருயிர்
அற்றஓர் சவங்கொல்? மற்று அசர மேகொலோ?
(நீதி நூல்)

சிறிய எறும்பும் கூட உழைத்துத் தன் வாழ்வை வளம்படுத்திக் கொள்கிறது; உயர்ந்த மனிதன் எனப் பிறந்தும் சிறந்த முயற்சியைச் செய்யாமல் இழிந்து சோம்பேறியாய்க் கழிந்து திரிபவன் நடைப்பிணமே யாவன் என இது பழித்துளது.

சோம்பி இராதே; அது கொடிய புலை: நெடிய பழி; அதனைக் கடிது நீக்கி ஊக்கி முயற்சி செய்து உயர்க,

மடியை மருவினவன் குடி கெடும்.

இது கவுற்சனன் பால் தெரிய வந்தது.

**சரிதம்.**

இவன் தொண்டை மண்டலத்திலே காஞ்சிநகர் அருகே யிருந்த வாஞ்சி என்னும் ஊரில் இருந்தவன். மறையவர் மரபினன், குற்சன் என்னும் வேதியன் புதல்வன். நீதி நெறியுடைய அத் தந்தைக்குத் தீது வழி படிந்த இந்த மைந்தன் தோன்றியது விந்தையாய் நின்றது. நல்ல குலத்தில் பிறந்திருந்தும் பொல்லாத புலைகளில் பழகி எல்லாரும் எள்ளி இகழ இவன் இழிந்து திரிந்தான். யாதொரு தொழிலும் கருதாமல் வீணே சோம்பி வெய்ய நிலைகளில் அலைந்து விருதாவாய் உழந்து நின்ற இவனை வையம் இகழ்ந்து வைது வந்தது.

மரபுசேர் குற்சன் என்னும்
மறையவன் தனக்குப் பாபர்
இருவரும் உச்சம் ஏறச்
சுபர்எலாம் நீசம் எய்த
உரகரும் காரி சேயும்
உதித்திட உதித்தான் மன்னே!

காவுடன் கவுற்சன் என்பான்
கரும்பினில் அரும்பு போல்வான். (1)

மடம்எலாம் ஒன்ருய்ப் பாலன்
வடிவெடுத் தெனவே தோன்றிப்
புடவியில் ஒழுக்கம் ஆதி
புண்ணிய நெறிகள் யாவும்
கிடைபடக் கிடந்து, பாவம்
கிளர்வுறத் தவழ்ந்து, பொல்லா
நடலையும் கொலையும் சூதும்
நடைபெற நடைபெற் ருனே. (2)

அழுதொறும் சீவ கோடி
அழுதிட அழுவான்; அஞ்சொல்
மொழிதொறும் படிறும் கோளும்
குறளையும் மொழியாக் கற்ருன்;
பழிபுரிந்து உயிர்கள் வீட்டும்
பயிற்சியே பயின்ருன்; மாரி
மழைவளர் விழல்போல் காமம்
வளர்ந்திட வளர்ந்தான் மன்னே! (3)

(திருக்குற்ருலத் தல புராணம்)

இவனுடைய பிறப்பு இருப்பு வளர்ப்பு வாழ்வுகளை இவை சுவையாய் வரைந்து காட்டியுள்ளன. **மடம் எலாம் ஒன்ருய்ப் பாலன் வடிவு எடுத்தது** என்றதனல் இவன் மடையனு யிழிந்து கடையனுய்த் திரிந்து உழந்தமை தெரிய வந்தது. இவன் பிறந்த பொழுது வளமாய்ச் செழித்திருந்த குடி சோம்பேறியாய்க் களித்து இவன் வளர்நது வரவே அது நிலை குலைந்து இழிந்து கழிந்தது. குடி கேடாய் அழிந்துபட இவன் பழியோடு அலைந்து திரிந்தான். **மடி மடிக்கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி மடியும் தன்னினும் முந்து** என்பதை இந்த வையம் இவனிடம் ஐயமறத்தெளிந்து மெய்யைவியந்துநின்றது.

பிறந்த தன்குடி பிழைபடிந் திழிவுறப் பீடை
புறந்தழைந்திடப் புலையுறு மடிபடிந் துழல்வான்
இறந்து போகுமுன் அவன்குடி இறந்துபோம்; என்ருல்
மறந்தும் சோம்பலில் மடிவரோ மனிதராய்ப் பிறந்தோர்?

இதனைச் சிந்தனை செய்து தெளிந்து சீருடன் வாழுக.

**மடிபுகுந்த போதே மனிதன் இழிவன்;**
**குடியும் அழியும் குலைந்து.**

மடி படியாமல் வாழ்.

---

மடியை மடி.

604 அன்று புகழ்ச்சத்தி யாதனனும் ஏன்மடிந்து
குன்றி யிழிந்தான் குமரேசா—நின்ற
குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு. (ச)

இ-ள்.

குமரேசா! மடி மிகுந்திருந்த சத்தியாதனன் ஏன் குடி மடிந்து பழி படிந்து இழிந்து அழிந்தான்? எனின், மடி மடிந்து மாண்ட உஞற்று இலவர்க்கு குடி மடிந்து குற்றம் பெருகும் எனக.

மடியால் விளையும் குடிகேடுகள் அறிய வந்தன.

சோம்பலுள் அழுந்தி மாண்புள்ள முயற்சி இல்லாதவர்க்குக் குடியும் அழியும்; குற்றமும் விளையும்.

மடியுடையான் குடி அவன் சாகு முன்னரே சாம் என முன்பு அறிந்தோம்; இதில் அவன் இழி பழியாளனாய் அழிந்து ஒழிவான் என அறிகின்றோம்.

குடி மடிந்து=குடும்பம் அழிந்து.

மடி மடிந்து=சோம்பலில் ஆழ்ந்து.

வேட்டம் செல்லாது மடிந்து. (பட்டினப்பாலை 93)

**மடிந்து இதில் குறித்திருத்தல் அறிக.**

உஞற்று=முயற்சி; ஊக்கம்.

முயற்சி எவரையும் உயர்ச்சியுறச் செய்வது ஆதலால் அஃது உஞற்று என உற்றது. உள்ளம் துணிந்து எவ்வழியும் தளராமல் ஊக்கி முயல்வது என்னும் குறிப்பு உஞற்றுதலில் உறைந்துள்ளது.

எல்லாச் செல்வங்களையும் எல்லா மாட்சிகளையும் காட்சியாத் தருவது முயற்சி ஆதலின் மாண்ட என்னும் அடையை மருவி வந்தது.

மாண்ட உஞற்றி லவர். (குறள், 607)

தாழாது உஞற்று பவர். (குறள், 620)

தாழாது உஞற்று பவர்க்கு. (குறள், 1024)

நின்று உஞற்றி வாழ்தி. (நாலடி 32)

ஊதை உஞற்றும். (பதிற்றுப் பத்து 51)

உஞற்றுகை. (கலித்தொகை)

✓உறுதவம் உஞற்றும் காலை. (இராமா: 1; 10-119)

இவற்றுள் உஞற்றுதல் உணர்த்தி நிற்றல் அறிக.

மடி படிதல் குடி கெடுதற்கும், உஞற்றின்மை குற்றம் பெருகுதற்கும் காரணமாம். குடிகேடும், குற்றமும் விளையும் கொடிய தீய புலை நிலையம் மடி என்பதை ஈண்டு அறிந்து கொள்கின்றோம்.

மடியின்றி மனிதன் ஊக்கி முயன்றுவரின் அவன் பிறந்த குடி செல்வம் முதலியவற்றால் சிறந்து விளங்கி வரும்; அவனும் உயர்ந்த குண நலன்களுடையனாய் ஒளி மிகுந்து விளங்கி வருவன்.

மடி படிந்து நிற்பவன் குடி மிடி படிந்து கெடும்; அவனும் பழி பல படிந்து இழிந்து கெடுவான்.

மடிமை கெடுவார்கண் நிற்கும்; கொடுமைதான்
பேணுமை செய்வார்கண் நிற்குமாம்; பேணிய
நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர்; நட்டமைந்த
தூணின்கண் நிற்கும் களிறு. (நான்மணி: 90)

கெட்டு அழிய நேர்ந்தவரிடமே மடிமை குடிகொண்டு நிற்கும் என விளம்பி நாகனார் இவ்வாறு விளம்பியுள்ளார். மடியை முதலில் குறித்தது அதன் கொடுமை கருதி.

மடமையினும் மடிமை கொடியது; முயலாது மடலாய் ஒருவன் மடிந்திருப்பின் அவன் உயிரோடு மடிந்த

வனாய் இழிந்து படுகிறான்; குடிகேடனை அவன் மிடி படிந்து படி இகழ்ந்து வரப் பாழாய்க் கழிந்து அழிந்து அவமே ஒழிகின்றான்.

உடையுணவு நீக்கும்; உளம்அறிவு தேய்க்கும்;
நடைகளிப்பு மாய்க்கும்; நலிவெல்லாம் தோய்க்கும்;
திடன்மதிப்புக் கல்விகுணம் சீர்சாய்க்கும் சார்ந்தே
மடிதான் முயற்றில் வழி. (இன்னிசை)

மடிபடிந்த மனிதன் எவ்வளவு இழிவுகளை அடைந்து அழிகின்றான் என்பதை இதனால் அறிந்து கொள்கிறோம்.

மடிசேரும் அவர்க்கொரு நாளும் மறல்
விடியாதவர் நெஞ்சிடை வெந்துயரே
குடியாகும் மறந்தொடர் குற்றம்எலாம்
நெடிதாக வளர்ந்திடும் நிச்சயமே. (நீதி நூல்)

மடியால் விளையும் பழிகேடுகளை இது விளக்கியுளது.

மடியில் படியாமல் முயன்று வருபவனே தன் குடியை உயர்த்திப் படியில் உயர்ந்து வருகின்றான்.

முயற்சியும் மதி யூகத்தோடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்துவரின் எவ்வழியும் வருவாய் பெருகி வரும்; செல்வம் செழித்து வரவே எல்லா மதிப்புகளும் கலித்து வரும்.

**மாண்ட உஞற்று** என்று ஈண்டு உணர்த்தியது நீண்ட பொருளுடையது. அறிவு நலம் தோயவில்லை யானால் அந்த உழைப்பு வறிய பிழைப்பாய் வரும்.

வாழ்வோ உழைப்பால் வளர்ந்துவரும்; அவ்வுழைப்பு
சூழ்வோடு தோயின் சுகமாகும் — சூழ்வின்றேல்
மாடு படுகிற பாடாகும்; மாண்பின்றாம்;
நாடி முயலுக நன்கு.

உயிர் வாழ்வு உடல் உழைப்பால் நடந்துவருகிறது; அந்த உழைப்பு உணர்வு தோய்ந்து பழி இழிவுகள் படியாமல் நல்ல வழியில் படிந்து வர வேண்டும்; அறிவு படியவில்லையானால் அது மாட்டுப்பாடாய் வருவாய் குறைந்து நிற்கும் என இது குறித்துள்ளது.

Life without industry is guilt, and industry without art is brutality. (Ruskin)

"முயற்சி யில்லாத வாழ்வு குற்றம்; அறிவில்லாத முயற்சி மிருகத்தனமாம்" என்னும் இது இங்கு அறிய வுரியது.

அறிவோடு கலந்த முயற்சியே உயர்ச்சியுடையதாய் நல்ல ஊதியங்களை அருளி வருகின்றது. அறிவும் ஆள்வினையும் அமைந்த அளவே அந்த மனிதன் எந்த வகையிலும் உயர்ந்து வருகிருன்.

அறிவு கழியின் மடையன் ஆகிருன்; ஆள்வினை ஒழியின் மடியனு யிழிகிருன். உழைப்பே உயிர்ப்பு; உழையாதவன் பிழையாதவனுய் அழிகிருன். மடிபுகுந்த அன்றே அவன் மடிந்தவன் ஆகின்ருன்.

மடமை இருள்; மடிமை மருள்.

இந்த இரண்டும் தன்னை அணுகாமல் பேணி வருபவன் பெரிய கல்விமானுய் அரிய செல்வனுய்ப் பெருகி உயர்கிருன்.

Go to the ant, thou sluggard; consider her ways, and be wise. (B. P. 6. 6)

"சோம்பேறியே! எறும்பினிடம் போய் அதன் முயற்சிகளைப் பார்; உணர்ச்சியாய் வாழ்!" என இது உணர்த்தியுளது.

உழைத்துவரும் அளவே மனிதனது ஆற்றல் ஏற்றமாய் ஒளி பெற்று வருகிறது; ஆள்வினை ஒழியின் உறுதியும் ஊக்கமும் உடனே மறைய நேர்கின்றன்.

Power ceases in the instant of repose. (Self-reliance)

"முயற்சி ஒழிந்தபோதே ஆற்றல் ஒளிந்து போகிறது" என்னும் இது ஈண்டு உணர்ந்து கொள்ளவுரியது.

உரிய கருமங்களைக் கருதிச் செய்து வருபவன் உரம் உடையனுய்ப் பெருமை பெற்று வருகிருன்.

செயல் இழந்து சோம்பி இருப்பவன் மயலுழந்து தேம்பி உழல்கின்ருன்.

ஒருவனிடம் மடி படிந்தால் அவன் பிறந்த குடி மடிந்துபடும்; அவனும் பழி படிந்து இழிந்து படுவான்.

இது சத்தியாதனன்பால் தெரிய வந்தது.

## சரிதம்.

இவன் விதர்ப்ப தேசத்து வேந்தன். சிறந்த அழகன். நிறைந்த செல்வ வளங்கள் வாய்ந்த அரசை இவன் உரிமையோடு பேணி வந்தான். இவன் மணந்து கொண்ட மனைவி பெயர் **சதி**. அவள் பேரழகுடையவள். எழில் மிகுந்த அவளது இன்ப போகங்களில் ஆழ்ந்து தாழ்ந்திருந்தமையால் ஆட்சி முறைகளை நேரே நன்கு கவனிக்கவில்லை. இவன் அயர்ந்திருப்பதை அறிந்ததும் நெடுங்காலம் கடும்பகையாய்க் கடுத்திருந்த சாலுவ தேசத்து அரசன் பெரும் படைகளோடு வந்து நகரை வளைந்து இவனைப் பொருது தொலைத்து அரசைக் கவர்ந்து கொண்டான். பதி இறந்து படவே **சதி** பரிதாபமாய்ப் புலம்பி யழுதாள். அப்பொழுது பூரண கருப்பமாய் இருந்தாள் ஆதலால் இரவே எழுந்து தனியே நடந்து அயலே மறைந்து போனள். அவளது அவலநிலை பெரிய பரிதாபமாய்ப் பொங்கி நின்றது.

### இருளில் எழுந்தது.

கங்குல் வந்து புகும் அளவில்
கருதார் சேனை பதிபுகுத
மங்கு போர்ச்சத் தியாதனன்தன்
மனைவி சதியாம் மடநல்லாள்
அங்கைகொண்டு வயிறு எற்றி
அந்தோ வினையேன் எனஅரற்றிப்
பொங்கும் இருளில் தமியளாய்க்
கரந்து குடபால் போயினள்: (1)

### தனியே சென்றது.

துன்பத் துணையே அன்றி மற்றோர்
துணை ஒன்று அயலில் காணுதாள்:

அன்பின் சேவல் துணையிழந்த
அன்றில் பெடைபோல் அழுதுஇரங்கி,
வன்பிற் செலவும் கருமுதிர்ந்த
வருத்தம் உறலால் நடைமாய்ந்து
முன்புற்று அறியா நெடுங்கான
வாவிக் கரையை முடுகினாள். (2)
(பிரமோத்தர காண்டம்: 6)

உரிய கணவனையும், பெரிய அரச திருவையும் இழந்து அரசி பரிசு குலைந்து போயுள்ள பரிபவ நிலைமையை அறிந்து வருந்துகிறோம். எதிர்வதை எண்ணியுணராமல் மன்னன் மடிபடிந்திருந்தமையால் மாண்புடைய அரசை இழந்தான்; குடியும் அழிந்தது; பழியும் படிந்து பரிந்து இறந்தான் என்று நாடும் நகரமும் இரங்கி நின்றன. மனிதனிடம் மடிபடிந்தால் அவன் குடி மடிந்து போம்; அவனும் குற்றமா யழிந்து போவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து தெளிந்தது.

**குற்றம் படிந்து குடிமடிந்து போகுமே**
**உற்ற மடியால் உணர்.**

மடியில் மடியாதே.

---

கெடுவார் நிலை.

605 கேடுற்றான் முன்னம் கிரீவன் மடிமறவி
கூடியதால் என்னே குமரேசா—கோடும்
நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (ரு)

இ—ள்.

குமரேசா! மடியும் மறவியும் மருவிய அயக்கிரீவன் ஏன் கெட்டு அழிந்தான்? எனின், நெடுநீர் மறவி மடி துயில் நான்கும் கெடுநீரார் காமக் கலன் என்க.

கேட்டுக்கு உரிய அறிகுறிகள் தெரிய வந்தன.

தாமதமும் மறப்பும் சோம்பலும் தூக்கமும் ஆகிய இந்த நான்கும் அழியும் இயல்பினர் விழையும் கலம்.

நீரார் கலன் என்றதிலுள்ள இன நிலையையும் நேர்ந்துள்ள உரிமையையும் நினைந்து தெளிக.

நெடுநீர்=நெடிய இயல்பு: நீண்ட தாமதம்.

கருதிய கருமத்தை இன்று செய்வோம், நாளைச் செய்வோம், என்று காலம் கடத்தி வீணே அயர்ந்து நிற்கும் நெடிய கழிதாமதம் **நெடுநீர்** என நேர்ந்தது.

மறவி=செய்ய வுரியதை மறந்து விடுதல்.

துயில்=கடுந் தூக்கம்.

சோம்பலோடு உடன் பிறந்த துணைகள் ஆதலால் இவ்வாறு உறவாய் இணைந்துள்ளன. மடிக்கு மூத்தவர் இருவர் முன்னே நின்றனர். இளையவன் பின்னே நின்றான். வைப்பு முறையால் அவர் தம் வகைமையும் தகைமையும் வன்கண்மையும் தெரியலாம்.

காரியக் கேடுகளான இந்தக் கடும்புலைகளை இயன்ற அளவு கடிந்து வருபவரே சீரிய முயற்சியாளராய்ச் சிறந்து யாண்டும் உயர்ந்து திகழ்கின்றார்.

இவை தாமச குணத்தின் தீமைகள் ஆதலால் அடுத்த எவரையும் கெடுத்து விடும்; இவற்றால் கெட்டவர் பலர். அரியபெரிய சிலரை அயலே அறியவருகிறோம்.

சீராமர் தருப்பையில் ஏழ்தினம் சேர்ந்திருந்தும்
சாராமை யினால் அவர் ஏவு அழல் சாயகம்தன்
நேராம் அளவும் வருணன் **நெடுநீர்மை** எய்தி
வாராமல் இருந்து இடர்யார் கொல் வரச்செய்தாரே? (1)

இளமைத் தமயந்தியைக் கங்குலின் எய்து கானில்
நளனைப் பிரிவித் தனள்; இவ்வகை நானிலத்தில்
தளர்வுற்றிட என்மகள் நித்திரைத் தையலால் தம்
வளமற்றிடு மாந்தர் தமக்குஓர் வரம்பும் உண்டோ? (2)

தீம்பாலும் தெள்ளமுதும் பசுந்தேனும் மையல்
ஆம்பாவையர் போகமும் மற்றும் அடுத்த போதும்
வேம்பாக வெறுத்து என்மகட்கு விருப்புறுதார்
தாம்பா ருலகத்து எவரே? எனச் சாற்றினனே. (3)

(மெய்ஞ்ஞான விளக்கம்)

சேனைகளோடு இலங்கை செல்ல நேர்ந்த இராமன் கடல் இடையே வழி அடையவேண்டி வருணனை நினைந்து ஏழுநாள் தருப்பையில் அமர்ந்து தவம் புரிந்தான். அவன் விரைந்து வராமல் மறந்து தாமதித்து நின்றமையால் இவ்வீரன் வெகுண்டு அம்பு தொடுத்தான். **அம்புராசி** அலமந்து குலைந்தது; குலையவே அவன் கடிது ஓடி வந்து காகுத்தனைப் பணிந்து செய்த பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டினன். வீரனும் ஈரமாய்ப் பொறுத்தருளினன்.

நெடு நீர்மை எய்தி நின்றமையால் வருணனுக்கு இந்த இடர் நேர்ந்தது என்று தாமதன் இவ்வாறு தனது அடலாண்மையை வியந்து கூறி யிருக்கிறான்.

அயர்ந்த துயில் தோய்ந்திருந்தமையால் தமயந்தியை நளன் பிரிய நேர்ந்தான். "என் மகள் நித்திரையால் எத்தனை பேர் கெட்டிருக்கிறார்கள்!" என்று தாமதன் வித்தாரமாய் விளம்பியிருக்கிறான். இதனால் இந்த ஈனங்களின் இனங்களைத் தெரிந்து கொள்கின்றோம்.

குறியும் நீலம்; மயக்கமும் கோதிலா
நெறிகள் தம்மை இகழ்தலும், நித்திரை
செறிதல் ஆனதும் மற்றிவற் றால்திண் என்று
அறிவை மாய்க்கும் அது தமம் ஆவதே.
(பரமார்த்த தரிசனம் : 14:10)

தமோகுணத்தின் உருவம் செயல்களை இஃது உணர்த்தியுளது. நிறம் கரியது; மயக்கமும் சோம்பலும் நித்திரையும் இயல்பாக உடையது; அறிவை மாய்த்து எவ்வழியும் அவகேடுகள் செய்வது எனத் தாமசத்தின் தீமைகள் இவ்வாறு நேரே தெரிய வந்துள்ளன.

தமஸ்த்வஞ்ஞானஜம் வித்தி
மோஹநம் ஸர்வ தேஹிநாம்
ப்ரமாதாலஸ்ய நித்ராபிஸ்
தந்நிபத் நாதி பாரத. (பகவத் கீதை: 14-8)

தமோகுணம் அஞ்ஞானத்திலிருந்து பிறந்தது மோகம் மயக்கம் மடி தூக்கம் முதலிய மயல்களால்

எல்லா உயிர்களையும் சிறைப்படுத்திச் சீரழிப்பது; இதன் தீமையை அறிந்து தெளிந்து விலகவேண்டும் எனக் கண்ணன் இன்னவாறு உலக மக்களுக்கு நன்மையாக உண்மையை உணர்த்தி யிருக்கிறார்.

தம்மிடம் கூறிய உறுதிமொழியை மறந்து சுக்கிரீவன் நெடு நேரமாய்க் காலம் தாழ்த்தியிருந்தான்; இலக்குவன் வெகுண்டு கிட்கிந்தைக்குள் புகுந்தான்; அனுமான் எதிரே வந்து வணங்கி நின்றான்; காலம் தாழ்த்தி நின்றமையைப் பொறுத்தருள வேண்டினன். அப்பொழுது அந்த மதிமானை நோக்கி இந்த வீரக்குரிசில் வீறுடன் விளம்பியது விவேக ஒளிகளை வெளிவீசி வந்தது.

இலக்குவன் உரைத்தது.

தாழ்வித்தீர் அல்லீர்! பன்னாள் தருக்கிய அரக்கர் தம்மை
வாழ்வித்தீர்! இமையோர்க்கின்னல்வருவித்தீர்! மரபில்தீராக்
கேள்வித்தீ யாளர் துன்பம் கிளர்வித்தீர்! பாவம் தன்னை
மூள்வித்தீர்! முனியா தானை முனிவித்தீர்! முடிதிர் என்றான்.
(இராமா: 4; 10, 74)

இவ் வுரைகளில் உறைந்துள்ள உணர்ச்சி வேகங்களையும், உண்மை நிலைகளையும், மானச மருமங்களையும் உய்த்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

நெடு நேரமாய்க் கவி அரசன் காலம் கடத்தியதால் விளைந்த கேடுகளை விளக்கி யிருக்கும் திறம் வியப்பை விளைத்துள்ளது. சோம்பலின் தொடர்பான விளைவு எவ்வழியும் தீம்பாய் விரிந்து தீமை புரிகிறது.

மடிஒன்று உளதேல் வல்விரைந்து
வகுக்கும் தொழிலை நீட்டிக்கும்;
கடியு மறவி துயில் விளைக்கும்;
கலதிதனைச் சேர்த்திடும்; பகைவர்க்கு
அடிமை புகுத்தும்; குடிகெடுக்கும்;
அதனை விடுப்பின், ஆண்மையினும்
குடிமை யிடத்தும் வேறுளவாம்
குற்றம் பலவும் ஒழிக்குமே. (விநாயக புராணம்)

மடியால் விளையும் குடிகேடுகளையும், அதனை ஒழித்தவர்க்கு உளவாம் நன்மைகளையும் இது விளக்கியுளது.

கலதி = மூதேவி; கேடு.

துயிலை இறுதியில் வைத்தது அதன் இயல்பை எண்ணி அறிய. உழைப்பால் நேர்ந்த களைப்பை நீக்கி ஊக்கம் தருகிற தூக்கம் ஆக்கம் உடையதாம். மனிதருக்கு இதமான இனிய அந்தத் துயில் அளவுடன் அமைந்தது. அதனினும் அயலாய் மயலோடு வருகிற நெடுந்துயில் கடுங்கேடு புரிவதாம்.

வான்உலாம் அருணன் என்னும்
மக்கள் ஆயுளின் கணக்கன்
தான்எழும் முன்எழாரைச்
சகத்திரக் கரத்தால் தட்டும்;
ஏன்என எழார்வாழ் நாளை
எண்குறைத்து எழுதிக் கொள்வான்;
ஆனது கண்டு காலன்
அவரிடம் அணுகு வானே. (நீதி நூல்)

மனிதரது வாழ்நாளை அளவு செய்து வருபவன் அருணன்; அவன் எழுமுன் எழுபவரே ஆயுள் நீண்டிருப்பர்: அவ்வாறு எழாமல் மடி மண்டித் துயில் கொண்டு கிடப்பவர் அகால மரணம் அடைவர் என இது குறித்துளது. குறிப்பு கூர்ந்து சிந்திக்க வுரியது.

நெடுநீர், நெடுமறவி, நெடுமடி, நெடுந்துயில் என்னும் இவை கடுங்கேடுகள் உடையன. இவற்றைக் காதலித்துத் தழுவுபவர் நோதலுழந்து சாதலை அடைவர்.

கலன் = மரக்கலம்; கப்பல்.

காமக் கலன் என்றது இனியது என்று விரும்பி ஏறுபவரைச் சிறிது தூரம் ஏந்திச் சென்று நடுக்கடலில் வீழ்த்தி நாசம் புரியும் நீசம்தெரிய.

ஏமப் புணை. (குறள், 306) என்றது போல் இனிய சேமக்கலனும் உண்டு ஆதலால் அதனினும் வேறுபாடு தெரிய இது காமக்கலன் என வந்தது.

கலன் என்பதை ஆபரணம் என்று கொண்டால் விரும்பிப் பூணும் அணி என்று கொள்க. அழிவுக்கு வழி என்று குறித்தலால் முன்னதே தெளிய வுரியது.

"As idle as a painted ship
Upon a painted ocean." (S. T. Coleridge)

"சித்திரத்தில் எழுதிய கடலில் வர்ணம் பூசிய கப்பல் சோம்பேறியைப் போல் அசையாமல் இருக்கிறது" என மடியைக் குறித்து ஆங்கிலக் கவிஞர் இவ்வாறு வரைந்திருக்கிறார். மடி காமக்கலன் என்று தேவர் குறித்துள்ளார். ஈண்டு இணைத்து எண்ணுக.

"He slept beneath the moon,
He basked beneath the sun:
He lived a life of going-to-do,
And died with nothing done." (J. Albery)

"சோம்பேறி இரவில் உறங்குகிறான்; பகலில் அயர்ந்து கிடக்கிறான்; செயல் இழந்து வாழுகிறான்; யாதும் செய்யாமல் சாகிறான்." என்று குறித்துள்ள இதனை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும்.

நெடிய மடியும் கடிய துயிலும் கொடிய கேடாம்.

இது, அயக்கிரீவன் பால் அறிய வந்தது.

சரிதம்.

இவன் அரிய வரபலங்களையுடைய பெரிய அரசன். கலைகள் பலவும் தெளிவாக் கற்றவன். தானவர் குல வேந்தனை இவன் வானவரும் வணங்கி வர யாண்டும் ஆணை செலுத்தி நீண்ட திறலோடு வாழ்ந்து வந்தான். இவனுடைய அருமை மனைவி பெயர் மதனசுந்தரி. எழில் நலங் கனிந்த அவளோடு அமர்ந்து இனிய போகங்களை நுகர்ந்து இன்பக் களிப்பில் மூழ்கி யிருந்தான். பலவகையான வலிமைகளிலும் தலை சிறந்திருந்தமையால் எவரையும் மதியாமல் இறுமாந்து நின்று எங்கும் இடர் புரிய நேர்ந்தான். இவனுடைய கொடுமைகளுக்கு அஞ்சி நடுங்கி ஒடுங்கி யிருந்த அமரர்கள் மூடி

வில் திருமாலிடம் முறையிட்டனர், அந்த மாயவன் காலம் கருதி இந்தத் தீயவனைப் பொருது தொலைக்க உறுதி பூண்டு வந்தான். மூண்டுள்ள நிலைமைகளை மந்திரிகள் வந்து இவன் சிந்தை தெளிய உரைத்தனர். அந்த அறிவுரைகளைச் சிறிதும் கருதாமல் மடி மண்டி மதங் கொண்டிருந்தான். எதிர்ந்துள்ள கேடுகளை யாதும் எண்ணி யுணராது திண்ணியனாய்ச் செருக்கி நின்ற இவனைத் திருமால் வந்து நேரே பொருது தொலைத்தார். இவன் பொன்றி ஒழியவே வென்றி விழா வை விண்ணுலகில் தேவர்கள் விழைந்து கொண்டாடி னார். இவனை அழித்து ஒழித்தமையால் அயக்கிரீவன் எனத் திருமாலுக்கு ஒரு பெயர் வியனாய விளைந்து வந்தது. தேவி பாகவதத்தில் இவன் சரிதம் மேவி வந் துள்ளது. மடியும் மறவியும் நெடுநீர்மையும் துயிலும் எவரையும் தாழ்த்திக் குடியைக் கெடுத்து விடும் என்ப தை உலகம் இவன் முடிவால் உணர்ந்து கொண்டது.

**பொல்லாத சோம்பல் புலையாய் எவரையுமே**
**ஒல்லை ஒழித்து விடும்.**

*மயலாய் அயராதே.*

---

*மடியர் மிடியர்.*

606. தண்டார் அசமஞ்சன் சத்திரபந் தேன்மடியால்
கொண்டார் மிடியைக் குமரேசா—கண்ட
**படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்**
**மாண்பயன் எய்தல் அரிது.** (சா)

இ-ள்.

குமரேசா! அரசு ஆதரவு இருந்தும் அசமஞ்சனும் சத்திர பந்தும் ஏன் மடியால் மிடி படிந்தார்? எனின், படி யுடையார் பற்று அமைந்தக் கண்ணும் மடி யுடை யார் மாண் பயன் எய்தல் அரிது என்க.

சோம்பர் எவ்வகையிலும் சுகமுறார் என்கிறது.

உலகம் ஆளும் அரச செல்வம் அமையினும் சோம்பலுடையவர் உயர் பயன் யாதும் அடையார்.

படி யுடையார் என்றது அரசரை.

படி=பூமி. உயிரினங்கள் முதல் பல வகையான பொருள்களும் படிந்திருத்தலால் நில மண்டலத்துக்குப் படி என்று ஒரு பெயர் படிந்து வந்துள்ளது.

படியுடை மன்னவன். (திருமந்திரம் 2165)
படி நிலை தளர. (பரிபாடல்)
படியை மடியகத்து இட்டான். (நான்மணி 2)
படி புல்கும் அடியிணை. (பெரிய திருமொழி, 8, 7)
படியின் மேல். (இராமா: 1: 7: 6)
படி அடங்கலும். (இராமா: 2: 4: 205)
படி ஏழும். (இராமா: 5: 5: 9)
படிமேல் எழுந்து. (இராமா: 6: 18: 249)
படியிலாது அமர். (கந்த புராணம்)

இவற்றுள் படி குறித்திருக்கும் பொருளை அறிக.

அவனியும் அங்க வடியும் சோபானமும்
பகையும் குணமும் நாழியும் படியே. (பிங்கலந்தை)

படி என்னும் சொல்லுக்கு உரிய ஆறு பொருள்களுள் பூமி இதில் முதலில் வந்துள்ளது.

பற்று=செல்வம். மனிதர் எங்கும் பிரியமாய்ப் பற்றி வருதலால் பொருளுக்கு இவ்வாறு ஒரு பெயர் உற்றது. பற்று அற்றவன் துறவி ஆகிறான்.

மடி உள்ளத்தை மழுக்கி ஊக்கத்தைக் கெடுத்து விடுகிறது. விடவே யாதொரு செயலும் செய்ய இயலாதவனாய் மடியன் மயலுழந்து இழிந்து ஒழிகிறான்.

ஒளி இழந்த கண் எதையும் பாராமல் குருடுபட்டிருத்தல் போல் உறுதி இழந்த மடியன் யாதும் புரியாமல் மருள் படிந்திருக்கிறான். பெரிய அரச செல்வங்கள்

இயல்பாக அமைந்திருந்தாலும் சோம்பேறி அவற்ருல் நல்ல பலன்களை அடைந்து கொள்ள மாட்டான்.

மடி புகுந்த போதே மனிதன் மடிந்தவன் ஆகின்ருன்; ஆகவே அவன் உயிரோடு இருந்தாலும் இறந்தவனுய் இழிந்து ஒழிந்தே போகின்ருன்.

**மாண்பயன்** என்றது மாட்சிமையான நல்ல பலன்களை.

இனிய சுக போகங்களையும் அரிய புகழ் புண்ணியங்களையும் பொருளால் அடையலாம் ஆயினும் மடியன் மடையனு யிழிதலால் அவற்றை அடைய இயலா.

உலகம் முழுவதும் தனி உரிமையாக உடைய அரசரது ஆதரவு அமையினும் சோம்பலுடையவர் அதனுல் ஆய உயர் பயன் யாதும் அடையார் எனவும் இக் குறளுக்குப் பொருள் கொள்ளலாம்.

இதில், பற்று = ஆதரவு; துணை.

பெரிய அரச செல்வங்களைப் பெற்றிருந்தாலும், அரிய வேந்தர்களுடைய ஆதரவை உற்றிருந்தாலும் சோம்பேறிகள் மேம்பாடான பலன்களைப் பெருர். எவ்வகையானும் எவராலும் மடியர் பலன் அடையார்.

அமைந்தக் கண்ணும் என்றது, அவ்வாறு அமைவதன் அருமை தெரிய நின்றது.

மடி இழிவு மிக வுடையது; அதனைத் தழுவ நேர்ந்த போதே அழிவு நேர்ந்தது.

**எய்தல் இலர்** என்று மடியர் மேல் வைத்துக் கூருமல், **அரிது** என்று பயன் மேல் வைத்து அயலே கூறியது ஏன்? எனின், செயல் இழந்து செத்த நிலையில் உள்ள அவரது இயல்பினை உய்த்து உணர என்க.

ஆங்குள அலைசல் ஆஞ்சி
அழுங்கலே மடியே ஞொள்கல்
தூங்கலே அசைவே மந்தம்
சோகம் ஆலசியம் சோம்பாம். (நிகண்டு

இவை சோம்பலைக் குறித்து வந்துள்ளன. இந்தப் பத்துப் பெயர்களும் காரணக் குறிகள் பூரணமாப் பொதிந்துள்ளன. ஓர்ந்து உணர்ந்து கொள்க

மாய்ந்து மடிந்தவர் எனவே மடியர் வாய்ந்திருத்தலால் அவர் உயிருடன் இருந்தாலும் துயருடைய சவமே.

விடக்குறு சடம்பல வேலை செய்தற்கா
நடக்கவும் ஓடவும் நனி உறுப்புகள்
மடக்கவும் நீட்டவும் வாய்ந்த தால்சும்மா
கிடக்குமெய்ச் சோம்புளோர் கேடுளார்களே.

(நீதி நூல்)

மனிதனுடைய உடலில் அமைந்துள்ள கை கால் முதலிய அவயவங்கள் தொழில் செய்தற்காகவே தோன்றியுள்ளன. அவ்வாறு செய்யாமல் சோம்பரிடம் அவை தேம்பி இருத்தலால் உயிர் அற்றனவாய்த் துயருற்றே கிடக்கின்றன.

பெருந்திரு அடையினும் மடியர் பயன் அடையார்.

இது, அசமஞ்சன் இடமும், சத்திரபந்து பாலும் அறிய நின்றது. இவர் சரிதங்கள் பரிதாபங்களாம்.

### சரிதம்.

அசமஞ்சன் என்பவன் சூரிய குலத்து அரசர் மரபில் பிறந்தவன். சகர சக்கரவர்த்தியினுடைய புதல்வன். தாய் பெயர் சுகேசினி. இவன் பருவம் எய்தியும் ஒரு தொழிலும் செய்யாமல் வறிதே சோம்பி யிருந்தான். பெற்றோர் இவனுக்கு இட்டபெயர் போசணன் என்பதே. மடி மண்டி அசமந்தமா யிருந்தமையால் அசமஞ்சன் என நேர்ந்தான். தலை மகனை இவனது நிலைமையை நினைந்து அரசன் மிகவும் வருந்தினன். அறிஞர்களும் அமைச்சர்களும், பெரியோர்களும் எவ்வளவோ புத்தி மதிகளைப் போதித்தும் இவன் யாதும் கேளாமல் மந்தமாயிருந்தான். சோம்பேறியா யிருந்ததோடு அமையாமல் பலவகையான தீம்புகளையும் செய்ய நேர்ந்தான். வேந்தன் வெறுத்தான்; நாட்டில் யாண்டும் இருக்கக் கூடாது என்று கடிந்து கடுத்துக் காட்டுக்கு ஓட்டினன்.

மடிபடிந்த அசமஞ்சன் மன்னர்தம்
குடிபடிந்தும் கொடும்பழி கொண்டனன்;
இடிபடிந்தெங்கும் எள்ளி இகழ்ந்திடச்
செடிபடிந்தவெங் கானிடைச் சென்றனன்.

சோம்பலால் இவன் இழிந்து ஒழிந்த நிலைமை வையம் இவ்வாறு வைது வருந்தியது. தாய் விதர்ப்ப தேசத்து அரசனுடைய அருமைத் திருமகள். தந்தை பெரிய சக்கரவர்த்தி. அரிய பெரிய செல்வங்கள் நிறைந்திருந்தும் மடி புகுந்தமையால் இவன் மாண் பிழந்து ஒழிந்தான். படியுடையார் பற்று அமைந்தக் கண்ணும் மடியுடையார் மாண்பயன் எய்தார் என்பதை உலகம் காண இவன் நிலையாய் உணர்த்தி நின்றான்.

## சத்திர பந்து.

இவன் விசுவரதன் என்னும் வேந்தன் புதல்வன். அரசர் குடியில் பிறந்திருந்தும் அரசுக்கு உரிய முறை சிறிதும் அறியாமல் அவல நிலைகளில் இழிந்து திரிந் தான். வேறு முயற்சிகள் யாதும் கருதாமல் அயிற் சுவைகளிலும் துயிற் சுவைகளிலும் தோய்ந்து கிடந் தான். குடிகேட்டிற்கு ஏதுவான மடியினையே மேற் கொண்டு மதியிழந்து உழந்த இவனுக்கு அறிஞர் சிலர் மதிநலன்களை அதிநயமாக மொழிந்தனர். மொழிந்தும் யாதும் கேளாமல் தீதே புரிந்து வந்தான். வாள் வேல் முதலிய கொலைக் கருவிகளுக்குச் சத்திரம் என்று பெயர். அவற்றைக் கைக்கொண்டு குடிகளுக்கு அல்லல் புரிந்து வந்தமையால் பெயர்க்கு உரிய காரணத்தை விளக்கி நின்றான் எனப் பலர் இவனைப் பழித்து வந்தனர். இவன் வாழ்வு பழியா யிழிந்து வந்தது.

சத்திரம் பந்தெனச் சார்ந்து மாந்தரை
எத்திர நிலையிலும் இடர்கள் செய்ததால்
சத்திர பந்தெனச் சமைந்த பேருக்கு
மித்திர னாயிவன் விளங்கி நின்றனன்.

இன்னவாறு இன்னல்களே இழைத்து வந்த இவனை மக்கள் யாவரும் வெறுத்து விலக்கினர். அரச பதவியை

இழந்து படு துயரங்கள் அடைந்தான். வளர் குடிப் பிறந்தார் எனும் வாழ்வுண்டோ மடிகொண்டார்க்கே என்று கண்டவர் இகழ்ந்து இரங்க இவன் இழிந்து ஒழிந்தான். படியுடையார் பற்று அமையினும் மடியுடையார் மாண்பயன் அடையார் என்பதை யாவரும் இவனுடைய வாழ்வால் அறிந்து கொண்டனர்.

**ஒளியில் விழியா யுளமடியர் யாதும்**
**தெளிவடைய நேரார் தெரிந்து**

மடியராய் மடியாதே.

---

607 மடிபுகின் இடிபுகும்.

**எள்ளி இடித்துரைத்தார் ஏவலரும் கும்பகன்னன்**
**கொள்ளுமடி கண்டேன் குமரேசா—உள்ளே**
**இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து**
**மாண்ட உஞற்றி லவர்.** (எ)

இ—ள்.

குமரேசா! மடிகொண்ட கும்பகன்னன் பின்பு ஏன் இடிகொண்டு எள்ளப் பட்டான்? எனின், மடி புரிந்து மாண்ட உஞற்றிலவர் இடி புரிந்து எள்ளும் சொல் கேட்பர் என்க.

மடி படிபவர் இடி படுவர் என்கிறது.

சோம்பலை விரும்பி உயர்ந்த முயற்சியை இழந்தவர் இழிந்த இகழ்ச்சி மொழிகளைக் கேட்க நேர்வர்.

ஊக்கமும் முயற்சியும் மனிதனை மேன் மகனை உயர்த்தியருளும்; சோம்பலும் அயர்ச்சியும் அவனைக் கீழ் மகனைத் தாழ்த்திக் கேடுகளை விளைத்து விடும்.

தன்னை இழிமகனுக்கிப் பழி நிலையில் ஆழ்த்துகிற மடியை ஒருவன் விழைந்து தழுவிக் கொள்வது எவ்வளவு ஈனம்! எத்துணை மடமை! மூட மயக்கமே பீடைகளுக்கெல்லாம் நேரே காரணம் ஆகின்றது.

புரிந்து இரண்டனுள் முன்னது செய்தல்; பின்னது விரும்பல். மடி புரிதல், இடி புரிதற்கும்; உஞற்று இன்

மை, எள்ளி இகழுதற்கும் ஏதுவாகும். கையால் கடுத்து அடிப்பது அடி; வாயால் பழித்து இடிப்பது இடி. அடி உடல் மேல் விழும்; இடி உள்ளத்தில் பாயும்.

நெடு மாடு போல் வளர்ந்தும் ஒரு தொழிலேயும் கருதாமல் மடி மண்டியிருக்கிறுயே! குடிகேடனை நீ இருப்பதால் யாது பயன்? சோற்றுக்குக் கூற்றுய்ப் பூமிக்குப் பாரமாய்க் குடிக்குப் பழியாயிருப்பதினும் இறந்து ஒழிந்து போவது நல்லது என்று இவ்வாறு உற்றவர் இடித்து இகழுவர்; ஊராரும் கடுத்துப் பழிப்பர். இவ்வகையான இழிமொழிகள் எவ்வழியும் எழுந்து வந்து சோம்பேறியைத் தாக்கும் ஆதலால் **இடி புரிந்து எள்ளும் சொல் கேட்பர்** என மடியர் செவியில் படிகிற மானக் கேடுகளை விளக்கியருளினர். என்ன சொன்னுலும் சோம்பேறிகள் உள்ளம் திருந்தி உறுதி நலம் காணுர் என்பது கருதி யுணர வந்தது.

கண்கூடாப் பட்டது கேடுஎனினும் கீழ்மக்கட்கு
உண்டோ உணர்ச்சிமற் றில்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணம் கண்துயில்வ
பேரா பெருமூச்சு எறிந்து. (நீதிநெறி 34)

மடிபடிந்த இழி மக்களின் அழி துயரமான பழி நிலையை ஓர் உவமையால் இது தெளிவாக்கியுளது.

மடியால் மிடி நேரும்; குடி கெடும்; பழியிழிவுகள் சேரும் என மடியின் கேடுகளை எடுத்துக் கூறி இடித்து அறிவுறுத்தினும் மடியர் தெளியார்; மடிந்தே கிடப்பர்.

நெருப்பை நேரே மூட்டினுலும் மலைப்பாம்பு இடம் பெயராது கிடக்கும்; நெருப்பு அனைய சுடு சொல்லைச் சுடச் சுடச் சொல்லிக் கடுத்து இடித்தாலும் சோம்பர் சோம்பியே கிடப்பர்.

மடியர் நெடிய மலைப்பாம்பு எனவே
அடிபெயரா தாழ்ந்து கிடப்பர்—கொடிய
மடிபடிய நேர்ந்தார் மடிந்தார்: அதன்பின்
விடிவடைய நேரார் வினை.

சோம்பல் படிந்தால் மனிதனை அது சாம்பினை மாக்கி விடும்; மடி படியாதபடி முயல்பவரே மதி படிந்து மாண்பு படிந்து மகிமையான வாழ்வுகளை யாண்டும் மேன்மையா அடைய நேர்கின்றார்.

மடி மிகப் பெற்றவர் இடி மிகப் பெற்று இகழப் படுவர். இழிந்து கழிந்து ஒழிந்து போவர்.

இது கும்பகன்னன்பால் தெரிய வந்தது.

சரிதம்.

இவன் இலங்கை வேந்தன் உடன் பிறந்தவன். கலங்கா நெஞ்சினன். உடல் வலிமையும் அடலாண்மை யும் அதிசய ஆற்றலும் அறிவின் ஏற்றமும் இவனிடம் குடிகொண்டிருந்தன. இருந்தும் மடிபுரிந்து வந்தமையால் அவை யாவும் மாண்படையாமல் மங்கி யிருந்தன. நெடிய துயிலையே இனிய சுகமாகத் தழுவி யிருந்தமை யால் அரச காரியங்கள் எதையும் காணமல் கண்ணை யர்ந்து கிடந்தான். இராமன் படைகளோடு வந்து இலங்கையை வளைந்து பொருத பொழுதும் விழி திற வாமல் அழி துயிலில் ஆழ்ந்திருந்தான் இராவணன் முதல் நாள் போரில் தோல்வியடைந்து மீண்டு வந்தபின் இவனைப் போருக்கு அனுப்ப மூண்டான. "தம்பியை அழைத்து வருக" என்று ஏவலர் நால்வரை விடுத்தான். அவர் வந்தார்; இவன் உறங்கி யிருந்தான். அவர் அலைத்து எழுப்பினர்; இவன் எழவில்லை; நாட்டுக்கு மூண்டுள்ள கேட்டு நிலைகளை நினைந்து இயல்பாகவே அவர் உள்ளம் வருந்தி யிருந்தார் ஆதலால் உருத்துக் கடுத்து இவனை எள்ளி இகழ்ந்து இடித்து உரைத்தனர்.

உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்குகின்றது இன்றுகாண்! எழுந்திராய்! எழுந்திராய்!
கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே
உறங்குவாய்! உறங்குவாய்! இனிக் கிடந்து உறங்குவாய்!

என்றும் ஊறி லாஅரக்கர் இன்ப மாய வாழ்வெலாம்
சென்று தீய நும்முனேன் தெரிந்து தீமை தேடினன்;

இன்று இறத்தல் திண்ணம் ஆக இன்னும் உன்உறக்கமே
அன்றலைத்த செங்கையா லலைத்து அலைத்து உணர்த்தினர்.
(இராமா: 6: 15: 45, 46)

இந்த உரைகளில் உறைந்துள்ள உணர்வு நிலைகளை யும் உள்ளக் கொதிப்புகளையும் ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும். அரக்கர் குலம் அடியோடு மாண்டு ஒழியும்படி பகை மூண்டுள்ளது. அப்படி நெடிய பகைமையை உன் அண்ணன் வளர்த்துக் கொண்டான். நீ இப்படி மடியனாய் உறங்குகின்றாய்! இங்கே ஏன் மடிந்து கிடக்கின்றாய்? சிறந்த வில்லாளிகளாய் வீர விறலோடு மூண்டு வந்துள்ள இராம இலக்குவர் என்கின்ற அந்தக் கால தூதர் கையிலே போய் உறங்கு! அதுவே உனக்குப் பேருறக்கமாய் ஒரு முடிவை முடிவாக அருளும் என்று கிங்கரர்கள் இங்ஙனம் கூறியுள்ளனர். இவ்வாறு எள்ளி இகழ்ந்து இடித்து எழுப்பியும் அவன் துயில் நீங்கி எழவில்லை. மீண்டும் கடிந்து கடுத்து எழுப்பினர். மடி புரிந்துள்ளவர் இடி புரிந்து எள்ளும் சொற் கேட்பர் என்பதை உலகம் இவனிடம் கண்டு வியந்தது.

**உள்ளம் மடியின் உலகில் அவன்மேலே**
**எள்ளலிழி வெல்லாம் எழும்.**

மடி யுறாது மாண்புறுக.

---

608. மடியன் அடியன்.

**வென்றி அதிகனும் வெம்மடிகொண் டொன்றால்**
**குன்றினன் என்னே குமரேசா—கன்றும்**
**மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னர்க்**
**கடிமை புகுத்தி விடும். (அ)**

இ—ள்.

குமரேசா! மடிமை கொண்ட அதிகன் ஏன் பகைவர்க்கு அடிமை ஆயினன்? எனின், மடிமை குடிமைக் கண் தங்கின் ஒன்னர்க்கு அடிமை புகுத்தி விடும் என்க.

மடிமை யுடையவன் அடிமை ஆவான் என்கிறது.

சோம்பல் ஒருவன் குடியுள் புகின் அவனை அது பகைவர்க்கு அடிமையாக்கி விடும்.

மடிமை=மடியினது தன்மை. அஃதாவது சோம்பி யிருக்கும் புன்மை. மை விகுதி இயல்பான தன்மையை உணர்த்தி அதன் மயலை விளக்கி நின்றது.

குடிமை=குடியின் இயல்பான உயர் நீர்மை.

சிறந்த குணநலன்கள் நிறைந்த மேலோர்கள் வழி வழியே பிறந்து வருகிற விழுமிய குடும்பமே குடிமை எனப் பண்புப் பெயரால் இங்கே அறிய வந்தது.

உயர்ந்த குடிப் பிறந்தார்; நல்ல குலமக்கள் என்று இவ்வாறு கூறி வருவன எல்லாம் தோன்றி நின்ற சான்றோரின் ஆன்ற குண நீர்மைகளை நோக்கியே வந்துள்ளன. நீர்மை வழியே சீர்மை விளைகிறது.

சீலம் தோய்ந்து வரும் அளவு மேலான குடியாக ஞாலம் அதனை உவந்து புகழ்ந்து வருகிறது. உற்ற மனிதர் ஒழுக்கம் குன்றினல் அக் குடியும் குற்றமுடையதாய் இழுக்கம் அடைந்து இழிந்து படுகிறது.

ஒழுக்கம் உடைமை குடிமை. (குறள் 133)

குடிமை என்றால் என்ன? எப்படி இருந்தால் அதற்கு அப் பெயர் அமையும் என்பதைத் தேவர் இவ்வாறு முன்னமே செம்மையாய் விளக்கி யிருக்கிறார். குடி, குலம் என்பன அங்கே பிறந்த மக்களுடைய சிறந்த ஒழுக்கங்களாலேயே உயர்ந்த பெயர்களைப் பெற்று எவ்வழியும் ஒளி பெற்றுள்ளன.

குலம் சுடும் கொள்கை பிழைப்பின். (குறள், 1019)

மனிதன் பிழை புரிய நேரின் அவன் பிறந்த குடியும் குலமும் இழிவுற நேரும் என்பதை இங்கே தெளிவாத் தெரிந்து கொள்கிறோம்.

குடிமைக்கண் பெரியது ஓர்
குற்றமாய்க் கிடவாதோ? (நெய்தல்கலி: 18)

சொன்ன சொல்லைத் தவறி நீ பொய்யாய் நடந்தால்

உன் குடிமைக்கு அது பெரிய ஒரு குற்றமேயாம் என ஒரு தலைவனைத் தோழி இவ்வாறு இடித்துக் காட்டியிருக்கிறாள்.

உடலுள் நோய் புகுந்தால் உயிரைத் துயர் உறுத்தும்; குடியுள் மடி புகுந்தால் அதன் தலைவனைப் புலைப்படுத்தி நிலைமையை நிலைகுலைத்து விடும்.

ஒன்னார் = பகைவர். ஒன்றி இதம் புரியாதவர்; என்றும் இடர் புரிவர் என அவர் படர் நிலை தெரிய நின்றது.

தன் என்றது குடியின் தலைவனை.

எவ்வளவு மிடியராயிருந்தாலும் பிறர்க்கு அடியராயிருக்க யாரும் இசையார். வசையான அந்தக் கொடிய இழி நிலையில் பெரிய குடித் தலைவனையும் மடி வலிந்து நலிந்து தள்ளி விடும்.

புகுத்தும் என்றது. தான் புக விரும்பாத அந்தப் புலை நிலையில் அவனை அது பிடர் பிடித்து எற்றி வீழ்த்தும் என்பது தெரிய நின்றது.

எள்ளலான அந்த இழி நிலையில் அவனைத் தள்ளி விட்டு மடி கடிது நீங்கிப் போம் என்பார் **விடும்** என்றார். அடிமையாயிருக்க மடிமையும் இசையாது.

ஒன்னாரிடம் புகுந்த பின் அந்த அடிமையை அவர் சும்மா அமர்ந்திருக்க ஒட்டார்; ஓயாமல் அவன் உழைத்து வர எவ்வழியும் அவர் இழைத்து வருவர்.

மடியர் இடிபுரிந்து எள்ளப்படுவர் என்பதை முன்பு அறிந்தோம்; பிறர்க்கு அடியராய் இழிந்து அவர் அல்லலுறுவர் என்று இதில் அறிந்து கொள்கின்றோம்.

மடிமை ஒருவனிடம் குடி புகுந்தால் அவன் யாதொரு தொழிலும் செய்யான்; சோம்பேறியான அவன் அரசு முறைகளைக் கவனியான்; ஆகவே காலம் கருதி மெலிவு நோக்கி நிற்கும் பகைவர் விரைந்து புகுந்து அரசைக் கவர்ந்து கொள்வர்; கொள்ளவே மடியனாயிருந்த அவன் மிடியனாகவும் அடியனாகவும் மாறி இழிந்து உழலுவான்.